(நிப்ருதஃப்ரணதஃப்ரஹ்வஃ) என்னுமாபோலே. [பணியீர்] - இத்தலையில் நின்றும் சென்ருரை அவன்சொல்லும்படியேயாகிலும் சொல்லவேணுமே. தன்னை யொழிந்தாரடங்கலும் தன்னைச் சொல்லும்படியை, இத்தலையில் நின்றும் சென்ருரைச்சொல்லாநிற்குமவன். ஸ்வரூபத்தால் சொல்லுமவை யிவையானல், ப்ரணயித்வத்தால் வருமதுசொல்லவேண்டாவிறே. [அடியேனிடர் - பணியீர்] - அவனறியாதவை சொல்லிக்கொடுக்கவேணுமே. அறிந்தானுகில், ஆள்விடப்பார்த்திருக்குமோ. [அடியேனிடர்] - இரண்டுதலைக்கும் கலவியொத்திருக்க, இத்தலைக்குவந்த இடரை யறிவியுங்கோள்.

நான்காம் பாட்டு.

இடரில்போகம்முழ்கி இணைந்தாடும்மடவன்னங்காள் !
விடலில்வேதவோலிமுழங்கும் தண்திருவண்வண்டுர்
*கடலின்மேனிப்பிரான் கண்ணனைநெடுமாலைக்கண்டு
உடலம்நைந்தோருத்தி உருகுமென்றுணர்த்துமினே.

ஆ.—(இடரில்) ஸௌந்தர்ய ஸௌலப்ய வாத்ஸல்ய கல்யாணகுணமணிநியியான அவனைக்கண்டு, ஐயோ! ஒருத்திபடும்பாடே இதுவென்று சொல்லுங்கோளென்று சிலவன்னங்களைக்குறித்துச் சொல்லுகிருள்.

ஓ.—நாலாம்பாட்டில், திருவண்வண்டுரிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானைக்கண்டு ஶரீரம் கட்டழிந்து ஒருத்திபடும்பாடே! என்று சொல்லுங்கோளென்று சிலவன்னங்களைக் குறித்தருளிச் செய்கிருள்.

[இடரிலென்றுதொடங்கி] - விஶ்லேஷஜந்யம் இல்லாத ஸம்ஶ்லேஷஸு஖த்திலே முழுகிப்பிரியமாட்டாதே ஒன்றுக்கொன்று ஸஹ்யமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கிற அன்னங்காள்! நிரந்தரமாக வேதகோஷம்மிக்கிருந்துள்ள திருவண்வண்டுரிலே தன் வடிவழகைக்காட்டி என்னை யநு஭விப்பித்து ஸுல஭னுய் இப்போதெட்டாதிருக்கிறவனைக்கண்டு.

தான், திர்யக்குக்களை -'பணியீர்'' என்னலாமோவென்ன - இத்தலையில்நின்றும் இத்யாதி. அவன் சொல்லுகிற தேதென்ன - தன்னையொழிந்தார் இத்யாதி. ஸ்வவ்யதிரிக்தர் தன்னைச் சொல்லும் வார்த்தையை, தூதுவந்தவர்களுக்கு ஸர்வாயிகனுனவன் சொல்லக்கடமோவென்ன - ஸ்வரூபத்தால் இத்யாதி. அதாவது - ஶேஷித்வஷயத்தில் பயத்தாலே ஶேஷ஭ூதன் சொல்லுமவை இவையானல், ஶேஷ ஭ூதனிடத்தில் ஸ்நேஹத்தாலே சொல்லுமது பூஜ்யோக்தி யாகவேணுமென்னுமது கிம்புநர்க்யாயலித்தமென்றபடி. "பணியீர்" என்று சொல்லுகிறதென், அவனறியானேவென்ன - அவனறியாதவை இத்யாதி. ஸர்வஜ்ஞனுக்கு அஜ்ஞாதமுண்டோவென்ன - அறிந்தானுகில் இத்யாதி. "அடியேனிடர்" என்றதுக்கு ஹாவம் - இரண்டுதலைக்கும் இத்யாதி. †"வ்ருக்ஷஶிலைநிராநநாராக்ஷஸீஹிஸுரவ்ருதாம் । நிஹ்ருதஃ ப்ரணதஃ ப்ரஹ்வஸ்ஸாஹிமத்யாஹிவாஹ்ருத" இதி ராவணவயாநந்தரம் ஹநுமதஸ்ஸீதாபிவந்தநம். க்ரமேணுந்வய.

---

† யுத்தகாண்டே, [116] ஶ்லோ—ரு. * 'கடல்மேனி' என்றும்பாடம்.

acharya.org

ப—அநந்தரம், அஶிரூபனுய் ஆஶ்ரிதலவ்யனுனவனைக்குறித்துச் சில வன்னங்களைப் போகவிடுகிருள்.

இடர் - விஶ்லேஷப்ரஸங்கம், இல்-இல்லாதபடியான, போகம்-ஹோகத்திலே, மூழ்கி-அவகாஹித்து, இணைந்து - பிரியாதே, ஆடும் - நடையாடுவதாய், மடம் - பரஸ்பரலவ்யங்களான, அன்னங்காள் - அன்னங்காள்! விடல்-விச்சேதம், இல் - இல்லாத, வேதவொலி - வேதகோஷமானது, முழங்கும் - முழங்கும்படியாய், தண் - ஶ்ரமஹரமான, திருவண்வண்டூர் - திருவண்வண்டூரிலே வர்த்திப்பானுய், கடல் - கடல்போலே ஈர்ஶயேமான, மேனி - வடிவை, பிரான் - எனக்குபகரிப்பானுய், கண்ணனை-நானிட்ட வழக்காம்படி எனக்குலவ்யனுய், நெடு - அந்தலவ்யதைக்கெல்லை காணவொண்ணுதபடி, மாலை - மிகவும்பெரியனுனவனை, கண்டு - கண்டு, ஒருத்தி - ஒருத்தி, உடலம் - தன்ஶரீரம், நைந்து - ஶிதிலமாய், உருகும் - உருகாநின்ருள், என்று-என்று, உணர்த்துமின்- அறிவியுங்கோள். இத்தால் - வடகருடைய, "தஶ்ஶுஶிவாஶிஶ" என்கிற பரஸ்பரலகவயநுலவ ஸௌக்யமும், அந்யோந்யலவ்யதையு முத்தேஶ்யமென்று கருத்து.

இ.—நாலாம்பாட்டில், சிலவன்னங்களைக் குறித்து, ஶரீரம் கட்டழிந்து ஶியிலையாகாநின்ருளென்று சொல்லுங்கோளென்கிருள்.

[இடரில்போகம்மூழ்கி] - விஶ்லேஷ ஹந்யமில்லாத ஸம்ஶ்லேஷரஸத்திலே யவகாஹித்து ஹோகத்துக்கு ஏகாந்தமான வனத்திலேபோந்து ஸம்ஹோகம் செல்லாநிற்க, ராவணன்வந்து தோற்றினுற்போலேயிருக்கை யன்றிக்கே, ஸம்ஹோகத்துக்கெல்லையிலே செல்லப்பெற்றபடி. [இணைந்தாடும்] - ஒருதலை நோவுபட்டுத் தூதுவிடவிராதே, இரண்டு தலையுமொக்கக்களிக்கப்பெறுவதே. ஒன்றுக்கொன்று லவ்யமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கை, பேடைக்குமார்ஷவம் ஜந்மஸித்தம், சேவலுக்குக் கலவியாலே அதின்படியுண்டாயிற்று. [விடலில்வேதவொலி] - நிரந்தரமாக வேதகோஷம் கடல் கிளர்ந்தாற்போலேயிருக்கும் ஶ்ரமஹரமானவூர். "கூஷ்ணைவஹிஸம்ஹிஶிரோஷ்ரிதாஜநகா ஏயஃ" என்னக்கடவவிவள் படைவீடிறேவேதகோஷம் மாறிக்கிடக்கிறது. [கடல் மேனி] - கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன். [பிரான்]-"ஹகூ நாழ" என்று அவ்வடிவை யாஶ்ரிதர்க்கு உபகரிக்குமவன். [கண்ணனை]-அவர்க்குக்கையாளாயாயிற்றதுஹவிப்பிப்பது. [நெடுமாலை] - வ்யாமுக்யனுனவனை. அன்றிக்கே, ஶ்ரமஹரமான வடிவையெனக்குபகரித்து லவ்யனுய், இன்றெட்டாதேயிருக்கிறவனைக் கண்டு. இது லட்டர்நிர்வாஹம். [உடலம்நைந்து] - உடம்புகட்டழிந்து ஶியிலையாய் அகவாய் ஶியிலமாய் இங்கிதங்கொண்டறிய வேண்டாதே உடம்பிலே வெளியிட்டபடி. மானஸமாய் மறைந்து போருமளவன்றிக்கேயிருக்கை. [ஒருத்தி] - "காட்டிலேயொருமான் அம்புவிட்டுத் துடியாநின்றது" என்ருல், எய்தவனறியுமிறே. [உருகுமென்று] - நீராகாநின்ருளென்று. [உணர்த்துமினே] - உருகப்பண்ணி மறைந்திருக்கிறவர்க்கு அறிவியுங்கோள்.

ஈடு.—நாலாம்பாட்டு. சில அன்னங்களைக்குறித்து, ஶரீரம் கட்டழிந்து ஶியிலையாகாநின்ருளென்று சொல்லுங்கோளென்கிருள்.

நாலாம்பாட்டு, - இடரில் இத்யாதி. "அன்னங்காள், உடலம்நைந்தொருத்தி" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலவன்னங்களை இத்யாதி. ஸப்தார்த்தம் - விஶ்லேஷஹந்யம் இத்யாதி.

acharya.org

[இடரில்போகம்மூழ்கி]-விஶ்லேஷ மந்யமில்லாத ஸம்ஶ்லேஷரஸத்திலே யவ ஗ாஹித்து. நான்செய்தபடிசெய்ய, இப்படியே யிருப்பாரையும் காணப்பெற்றேமிறே லோகத்திலே. ஸோமோபக்ரமத்திலே விஶ்லேஷம்பிறந்ததிறே தனக்கு. வீட்டில் ஆய்ச் சிக்குமைய்யருக்கும் பரதந்த்ரராகவேணும், நாடுகேட்கவேணுமென்கிற அந்யபரதையெல் லாம் தீரும்படி ஏகாந்தஸ்த்தலம் தேடிலுஜிக்கப்போக, அங்கேராவணன்வந்து தோற்றினு னிறே தனக்கு; அதில்லையேயிவற்றுக்கு. [இடரில்போகம்மூழ்கி] - ஸம்ஶ்லேஷத்துக்குப் பாரித்துக்கொண்டிருந்து விஶ்லேஷத்தோடே தலைக்கட்டும் என்னைப்போலே யாகாதொழி யப் பெறுவதே. [மூழ்கி] - தறைகாண்கிறனவில்லை இன்னம். [இணைந்தாடும் மடவன் னங்காள்] - ஒருதலைகளிக்க, ஒருதலைதுடிக்க வேண்டாதபடியாயிருக்கை. ஒன்றின்நினை வுக்கொன்று காலெடுக்கவமைந்திருக்கை. [மடவன்னங்காள்] - ஒன்றுக்குச்சொல்லுகிற ஸ்வஹாவமிரண்டுக்கு முண்டாயிருக்கை. மடப்பமுள்ளது பேடைக்கேயாயிருக்க, இரண் டுக்குமோக்கச் சொல்லுகிறது ஸம்ஶ்லேஷத்தால்வந்த துவட்சியிரண்டுக்கு மோத்திருக்கை. [விடலில்வேதவொலிமுழங்கும்] - அத்யயநம் மறுத்திறே யிவ்வூர்கிடக்கிறது. ஜநககுல மிறே ஓதுவாரின்றிக்கே கிடக்கிறது. "கூ2ுணெவஹி" என்கிறதிறே. [முழங்கும்]- மற்றோரடையாளஞ் சொல்லவேணுமோ, புறப்பட்டவாறே வேதகோஷம் வழிகாட்டுகிற திறே. வேதமார்க்காநுஸாரிகளன்றோ நீங்கள். [கடல்மேனிப்பிரான்] - கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவனாய், அவ்வடிவைத் தாழநின்றுஇத்தலைக்கு முற்றாட்டாக

ப்ர:—(இடரிலித்யாதி)—(விடலில்வேதவொலிமுழங்கும்)—மீதாஹ [கூ] "கூ2ுணெவஹிஸம்ஸிஶிரோஹ்ஶ்ரி தாஜநகாடியஃ । லொகஸம்ரு ஹஸெவோவி ஸம்ப ஶ்ரூநு கசு-ுஶஹுஹிாஉறு॥"

இதுக்கு ஹார்த்தஹாவம் - நான் செய்தபடி இத்யாதி. அதாவது - விஶ்லேஷித்திருக்கிற உங்களைக்கூட் டிப் பின்னை யென்கார்யம் பார்க்கவேண்டியிராதே, ஏற்கவே கூடியிருக்கப்பெற்றதேயென்றபடி. தான் அப்படியிருக்கவில்லையோ வென்ன - ஸோமோபக்ரமத்திலே இத்யாதி.ஸோமோபக்ரமத்திலே எங்குவிஶ்லேஷம்பிறந்ததென்ன-வீட்டில் இத்யாதி. நாடுகேட்கவேணும்-காட்டில் வ்ருத்தாந்தம் கேட்க வேணும். "நான்செய்தபடி" இத்யாதிவாக்யவிவரணம் - ஸம்ஶ்லேஷத்துக்கு இத்யாதி. வர்த்தமா நார்த்தம் - தறை இத்யாதி "இணைந்தாடும்" என்றதுக்கு - காயிகஸம்ஶ்லேஷமாகவர்த்தம் - ஒருதலை இத்யாதி.பிரியாதேகூடி வர்த்திக்கிறவென்று ஸப்தார்த்தம். இருவரும் ஏகஹ்ருதயராய், ஒன்றுக்கொன்று முற்கோலி நினைவறிந்து பரிமாறுகிற என்றார்த்தாந்தரம் - ஒன்றின்நினைவுக்கு இத்யாதி. அன்றிக்கே, கீழ்வாக்யவிவரணமாதல். காலெடுக்கை - அநுமதிபண்ணுகை. துவட்சிபேடைக்கொழியச் சேவலுக் குண்டோவென்ன மடப்பமுள்ளது இத்யாதி. அதாவது-ஸ்திரீக்கே துவட்சிஸ்வஹாவமாயிருக்கச்செய் தேயும், ஸம்ஶ்லேஷத்தாலே புருஷனுக்குமுண்டாயிருக்கிறதென்றபடி. "அங்குவிடாதே வேதவொலி முழங்கும்" என்கையாலே - இங்குவீச்சிங்கமாயிருக்கிறதென்று ஸித்தவத்கரித்தருளிச்செய்கிறார் - அத்யயநம்மறுத்து இத்யாதி. இவ்வூர்- தானிருக்கிறவூர். மறுத்திறே இவ்வூர்கிடக்கிறதென்கையாலே - இதுதான் ஸதாத்யயந ஶீலமாயிருக்குமென்னுமத்தை ஸ்ருதீகரித்துக்கொண்டு, இப்படியிருக்கிற விது கம்மார்த்திகண்டு பொறுக்கமாட்டாமலிறே யத்யயநமின்றிக்கே இருக்கிறதென்று ஈடுபடுகிறான் - ஜநக குலம் இத்யாதி. ஜநககுலத்துக்குஏற்றமேதென்ன கூ2ுணெவஹிஇத்யாதி."கூ2ுணெவஹி ஸம்ஸிஶிரோஹ்ஶ்ரி தாஜநகாடியஃ" இதிலுகவத்தோயாம் காங்கள்போகிறவூருக்கடையாளமேதென்ன- மற்றோர் இத்யாதி.விவரணம்-வேதமார்க்க இத்யாதி. அதாவது-வேதத்துக்காகமதுகைபர்களைத்தேடித்

acharya.org

ஸுஜிப்பித்து, பின்னையும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்னும் வ்யாமோஹத்தை யுடையவன். அன்றிக்கே, குளிர்ந்தவடிவை ஸவ்யரைப்போலேநின்று ஸுஜிப்பித்து, இப்போதேட்டாதபடி யிருக்கிறவன். அன்றுதானும் தனக்கு வேண்டுவேதாய்ச் செய்தானல்லன், இத்தலையையழிக்கைக்காகச் செய்தானித்தனை; அன்றுவேண்டியிருந்தானாகில் இன்றும்வேண்டியிராணோ. [உடலம்நைந்து] - "நெஞ்சிலே சிறிதுநோவுபிறந்த வளவேயாகில், ஶரீரத்தேயொருவாட்டம் வருவதற்குமுன்னேசென்று கைக்கொள்ளுகிறோம்" என்றிருக்க வேண்டா. [உடலம்நைந்து] - தனித்தனியே சைதந்யம்பெற்றழியவல்லவுடம்பிறே. அவ்வுடம்போடே யணைந்துபிரிந்த இவ்வுடம்புகொண்டு பிழைக்கவொண்ணாது என்னுமிடம் தாமேயறிவரிறே. [ஒருத்தி] - "இன்னகாட்டிலே மான்பேடைகிடந் துழற்றாநின்றது" என்றால், எய்தவன் கை யுணருமிறே. [ஒருத்தியுருகும்] - எதிர்த்தலைக்குஇதில்லையென்னுமிடம் அறிவியுங்கோள். [உணர்த்துமினே] - தாமித்தலையைமறந்தமையை ஸ்மரிப்பியுங்கோள். உணர்த்தி அற்றாரை யுணர்த்தவேணுமே. அறியாதாரை யறிவிக்கை அன்னத்துக்கே பணியிறே; பண்டும் * பிறங்கிருணிறங்கெட அன்னமாயிறே அருமறைபயந்தது. [ஒருத்தியுருகுமென்றுணர்த்துமினே] - ஒருத்திபடும்பாடே என்று சொல்லுங்கோள்.

ஐந்தாம் பாட்டு.

உணர்த்தலாடலுணர்ந்து உடன்மேயும்மடவன்னங்காள் !
திணர்த்தவண்டல்கள்மேல் சங்குசேருந்திருவண்வண்டூர்
புணர்த்தபூந்தண்துழாய்முடி நம்பெருமானைக்கண்டு
புணர்த்தகையினராய் அடியேனுக்கும்போற்றுமினே.

ஆ.—(உணர்த்தல்) நாங்களும் உன்திறமாகச் சொல்லும் வார்த்தையை யவன் கேட்டருளா தொழியிற் செய்வதென் என்னில்; உங்களுடைய சேவல்களுங்க

திரிகிறஹம்ஸரூபியானவனோடு ஸஜாதீயன்றோ என்றபடி. நிர்வாஹத்வயாநுகுணமாக அர்த்தத்வயம்- கடல்போலே இத்யாதிவாக்யத்வயத்தாலே. "கடல்மேனி - கண்ணபிரான்-நெடுமால்" என்றந்வயம். லட்டர்நிர்வாஹமான இரண்டாவதுக்கு,நெடுமாலென்றது - பெரியோனென்றபடி.இப்போதெட்டாத படியிருக்கிறவனன்று கலக்கக்கூடுமோவென்ன - அன்றுதானும் இத்யாதி. அசேதநமான ஶரீரம் கையக்கூடுமோவென்ன; * முடியானேயிற்காணங்களாகையாலே கூடுமென்கிறார் - தனித்தனியே இத்யாதி. உடலம்நைகிறதென்,யரித்திருந்தாலோவென்ன - அவ்வுடம்போடே இத்யாதி. அவ்வுடம்பென்றது - "கடல்மேனி" என்றதைப்பற்ற. இன்னாரென்னமல், "ஒருத்தி" என்றால் தெரியுமோவென்ன - இன்னகாட்டிலே இத்யாதி. உழற்றாநின்றது-க்லேஶியாநின்றது "ஒருத்தி"என்றதுக்கர்த்தாந்தரம் - எதிர்த்தலைக்கு இத்யாதி. ஸர்வஜ்ஞனுக்குணர்த்தவேணுமோவென்ன - தாமிந்தலையை இத்யாதி. விவரணம் - உணர்த்தி இத்யாதி. எங்களுக்கிதுவேயோ ப்ரயோஜநமென்ன-அறியாதாரை இத்யாதி. அன்னமப்படி யறிவித்ததோ வென்ன; அறிவித்ததுக்குப்ரமாணம் - பிறங்கிருள் இத்யாதி. "பிறங்கிருணிறங்கெடவொருநா ளன்னமாயன்றங் கருமறைபயந்தான்" மிக்கதமஸ்ஸு நிறங்கெடும்படி யொருநாள் ஹம்ஸமாய், அன்று பெறுதற்கரிய வேதங்களையுண்டாக்கினனென்றபடி. திருமொழி அஞ்சாம்பத்து ஏழாந்திருமொழி மூன்றாம்பாட்டு. "ஒருத்தி" என்றதுக்கு த்ருதீயதாத்பர்யம் - ஒருத்தி படும்பாடே இத்யாதி. ஊஹேதையானபடியை சொல்லுங்கோளென்றபடி. க்ரமேணாந்வயம்

ளோடுள்ள ஊடலாலே தொழுதுங்களை யூடல்தீர்த்தாற்போலே, நீங்களும் எனக்காக அவனைத்தொழுது என்னோடுள்ள ஊடல் தீர்த்துப் பின்னை என்கிறம்சொல்லுவது. உங்களுக்குத்தா னித்தனைவருத்தம் வேண்டுவதில்லை, அவன்தான் இத்தனைபோ திங்கெழுந்தருளுகைக்காக வொப்பித்தருளாநிற்கும், சொல்லும் இத்தனையேவேண்டுவதென்கிறாள்.

ஒ —அஞ்சாம்பாட்டில், சில அன்னங்களைக்குறித்து; அவ்விடம் புக்காரையெல்லாம் மறப்பிக்கும் விஷயமாயிருக்கும், நீங்கள் அங்குப்புக்காலென்னையும்நினையுங்கோளென்கிறாள்.

[உணர்த்தலென்று தொடங்கி] - கிலாய்க்கையையும் கிலாய்திருத்துகைக்குப்படும் ஊஃவத்தையும் அநுஸந்தித்து இனியூட ஸம்ஹாவனையில்லாதபடி பிரியாதேமேய்வதும்செய்து பரஸ்பரம்ஸுவ்யமான அன்னங்காள்! கொழுத்தவண்டல்கள் மேலே சங்குகள் உறங்காநின்றிருந்துள்ள திருவண்வண்டூரில் நம்மை விஶ்லேஷித்தமையும் மறந்து தானெப்பித்துப் போதுபோக்கி நமக்கு அஸுவ்யனுயிருக்கிறவனைக் கண்டு. [புணர்த்தவென்று தொடங்கி] - புக்கவாறே அங்குத்தை ஐஶ்வர்யங்கள் உங்களை மறக்கப்பண்ணும், அங்ஙனே செய்யாதே கைகளும் நீங்களுமாய் எனக்காகவும் ஒருவார்த்தை விண்ணப்பம்செய்யவேணும்.

ப.—அநந்தரம், ஸ்லோக்யத்வ ஶோஷித்வபூர்ணனான ஸர்வாஸ்ரயனைக்குறித்துப் பின்னும் சிலவன்னங்களைப் போகவிடுகிறாள்.

உணர்த்தல் - உணர்த்தலிலருமையையும், ஊடல் - ஊடலில் க்லேஶத்தையும், உணர்ந்து - உணர்ந்து, உடன் - பிரியாதேகூட, மேயும் - மேய்வனவாய், மடம் - ஒன்றுக்கொன்று துவட்சியை யுடையவாயிருக்கிற, அன்னங்காள் - அன்னங்காள்! திணர்த்த - கதிப்பையுடைத்தான, வண்டல்கள்மேல் - வண்டல் மணல்களின்மேலே, சங்கு - சங்குகளானவை, சேரும் - சேருகிற, திருவண்வண்டூர் - திருவண்வண்டூரிலே, புணர்த்த-தொடுக்கப்பட்ட, பூ-அழகிய, தண்துழாய்-செவ்வித்திருத்துழாயையுடைய, முடி - திருமுடியையுடையனான, நம் - நம்முடைய, பெருமானை - ஸ்வாமியை, கண்டு - கண்டு, புணர்த்த - அஞ்சலிவுந்தம்பண்ணின, கையினராய் - கையை யுடையீராய், அடியேனுக்கும் - உங்களுக்கு ஶோஷஹேதையான வெனக்காகவும், போற்றுமின் - ஸ்தோத்ரரூபமாம்படி கௌரவித்து வார்த்தை சொல்லவேணும். இத்தால் - வடகருடைய பரஸ்பரவிஶ்லேஷஸ்ரீருத்வமும் உத்தேஶ்யமென்று கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், வேறே சில அன்னங்களைக்குறித்து; அத்தேஶம் புக்காரை மறப்பிக்கும், நீங்கள்புக்கா லென்னையும் நினையுங்கோளென்கிறாள்.

[உணர்த்தலூடலுணர்ந்து] - ஊடுகையுங்கிலாக்கிருத்துகையுமாய்ப்படும் ஊஃவத்தையநுஸந்யித்து, அஸிமதை ஊடுகைபாவதென்னென்னில்; "என்னைப்பாராநிற்கப் பூவைப்பார்த்தாய்காண்" என்னுதல், ஸ்நாதநாநா என்னுதல், உணர்த்துகையாவது - "அதுதா னுனக்காகக்காண்" என்று தெளிவிக்கை. [உடன்மேயும்] - "பிரியிலிறே சூழ்த்துக்கொடுக்க வேண்டுவது என்று உடனே திரியாநின்றது. இப்படி தூரதர்ஶியாயிருப்பார்க்கன்றோ விச்சேதியாமல் அநுஹவிக்கலாவது. [மேயும்] - "ஊஃஂஶெ)ஶிஃஂ ஷாஃ" என்னுநின்றன. "ஊடல், உணர்தல், புணர்தல்" என்றிம்மூன்றிலும், இவற்றுக்குப்புணர்தலேயாய்ச் செல்லுகிறபடி, "ஊடலுணர்தல் புணர்தலிவைமூன்றும்

acharya.org

காமத்தால் பெற்றபயன்'' என்று - மூன்றையும் ப்ரயோஜநமாகச் சொன்னார்கள் தமிழர். [மடவன்னங்காள்] - மடப்பம் - துவட்சி. ஸம்ஶ்லேஷமடங்க வடிவிலே தொடைகொள்ளும்படி யிருக்கை. துவட்சி பேடைக்கு ப்ரக்ருதி, சேவலுக்குக் கலவியாலேயுண்டாயிருக்கிறபடி. பரஸ்பரம் லவ்யதையாகவுமாம். [திணர்த்தவித்யாதி] - திணுங்கினவண்டல்களிலே சங்குகள்வந்துறங்காநிற்கும், சேற்றுக்கிறுய்க்கும் சங்குகள் நீருறுத்தினவாறே கொழுத்தவண்டல்களிலே சேராநிற்கும். [புணர்த்த] - தொடுக்கப்பட்டு ஏர்ஶயேமாய் ஶ்ரமஹரமான திருத்துழாயைத் திருமுடியிலேயுடையனாய், அத்தாலேயென்னை யகப்யார்ஹையாக்கினவனைக் கண்டு. நம்பாடுவருகைக்குறுப்பாக வொப்பியாநிற்கும், நீங்களறிவிக்குமத்தனையே குறை. அன்றிக்கே, பிரிவையொன்றாக நினையாதே வளையம்வைத்தொப்பித்து நமக்கு லவ்யமாயிருக்கிறவரையென்றுமாம். [புணர்த்தகையினராய்] - இப்போது முதலிகளா யிருப்பர், வழியே பிடித்துத்தொழுதகொடு செல்லுங்கோள். [புணர்த்தகை] - கூட்டினகை. [அடியேனுக்கும் போற்றுமினே] - அவ்வூர் உங்களையும் விஸ்மரிப்பிக்கும், உங்கள் பரிகரமான வென்னையும் நினையுங்கோள். அவனை மறக்கும்படிபண்ணின தேஶமன்றோ. போற்றுகையாவது - மளரவித்துச்சொல்லுகை. தொழுதகைகளும் நீங்களுமாய் எனக்காகவு மொருவார்த்தை சொல்லவேணும். ''கைகள் கூப்பிச்சொல்லீர்'' ''பாதம்கைதொழுது பணியீர்'' என்று பிராட்டியான ஊரையிலுமிவர்க்கு ஸ்வரூபம்மாறாதே செல்லுகிறபடி.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திரியவும் சில அன்னங்களைக் குறித்து; அத்தேசம் புக்காரைமறப்பிக்கும், நீங்கள்புக்கா லென்னையும் நினையுங்கோ ளென்கிறாள்.

[உணர்த்தலித்யாதி]-உணர்த்தலையு மூடலையு முணர்ந்து உடனே திரிகிற அன்னங்காள். பிரிந்தால் பின்புவரும் துஃங்களெல்லா மநுசந்யித்துக் கூடத் திரியாநின்றன. இனித்தான் ஶோகப்ரகாரந்தான் மூன்று வகைப்பட்டாயிற்றிருப்பது. அவைகளாவன: ''ஊடலுணர்தல் புணர்தலிவைமூன்றும் - காமத்தாற் பெற்றபயன்'' என்று மூன்றையும் ப்ரயோஜநமாகச் சொன்னார்கள் தமிழர். இதிலே ஊடலாவது - எதிர்த்தலையோடே கூடினால் அஹேதுகமாக விளைவதொன்று. அதுதான் - ''என்னை யோழியக்குளித்தாய், என்னையொழியப் பூவைப்பார்த்தாய், உன்னுடம்பு பூநாறிற்று'' என்றாற்போலே வருமவை. உணர்த்தலாவது - ''உனக்கென்று குளித்தேன்'' என்கையும், ''உனக்காம்' என்றுபார்த்தேன்'' என்கையும், ''உன்வரவுக்கோப்பித்தேன்'' என்றாற்போலே சொல்லுமிவை. இவை

அஞ்சாம்பாட்டு,—உணர்த்தல் இத்யாதி. ''அன்னங்காள், அடியேனுக்கும்போற்றுமினே'' என்றதத்தைக்கடாகஷித்தவதாரிகை - திரியவும்சில இத்யாதி.

ஶப்தார்த்தம் - உணர்த்தலையும் இத்யாதி. ஊடலையும் - உணர்த்தலையும் - உணர்ந்து என்றந்வயிப்பது. ''உணர்ந்துடன்மேயும்'' என்றதுக்குஹாவம் - பிரிந்தால் இத்யாதி. ஊடலுக்கு முணர்த்தலுக்கும் அர்த்தமருளிச்செய்வாராக அடிகொண்டெழுந்திருக்கிறார் - இனித்தானீ ஶோக ப்ரகார இத்யாதி. புணர்தலே ஶோகப்ரகாரமாயிருக்க, மூன்றும் ஶோகப்ரகாரமென்கிற தென்கொண்டென்ன - அவையாவன இத்யாதி. இத்தால் - புணர்தலோபாதி, அவையும் ஸம்ஶ்லேஷவர்யகமாகையாலே ஶோகப்ரகாரமாயிருக்குமென்றபடி. அந்தமூன்றுசப்தத்துக்கும் பிரித்தர்த்த மருளிச்செய்கிறார் - இதிலே இத்யாதி. காமத்தால் பெற்றபயனென்றது - காமத்தால்வந்தப்ரயோஜநமென்றபடி. ஊடல் - ப்ரணயரோஷம். உணர்த்தல் - அறிவித்தல். புணர்தல் - ஸம்ஶ்லேஷம். அன்னங்களைக்குறித்து இவற்றை ப்ரஸங்கிக்கையாலே, இவளுடையநாயகனுக்கும் இவைகளுண்டென்கிறார் -

acharya.org

யிரண்டின் அநந்தரத்தே வருவது கலவி. இவையெல்லாமுண்டிறே இவளுடையவனுக்கும். [உணர்த்தலூட லுணர்ந்துடன்மேயும்] - பிரியவல்லாரார், பின்பு நோவுபடவல்லாரார், பின்பு நெய்யிலே கையிடவல்லாரரேன்று கூடத்திரியாநிற்கும். "குற்றவாளராகிலிறே பின்பு பொறுப்பித்துக்கொள்ளவேண்டுவது" என்றுகாணு மிவற்றினுடைய ஸித்தாந்தம். [உடன்மேயும்] * "ஊடலுணர்தலிலுமுண்டு" (இதம்மேத்யமிதம்ஸவாது) என்னுநின்றன. ஊடல், உணர்தல், புணர்தலென்கிற மூன்றிலும்; இவற்றுக்குப் புணர்தலேயாய்ச்செல்லுகிறபடி. ஒருகலத்திலே யோக்கவுண்டு திரிவாரைப்போலே. ஒன்றை யொன்றகன்று இரண்டுங்கூடப் பட்டினிகிடக்கையன்றிக்கே யிருக்கை. விழுக்காட்டி லுணரப்பெறுமை கேட்டோமென்கிறாள். அதாவது - "ஸம்ஶ்லேஷவர்யகங் காண் இவ்விஶ்லேஷம்" என்றால், "அவ்வளவு மாறியிருக்கவல்லார்க்கிறே பின்பு ஸோஶ ஸம்ருத்திவேண்டுவது" என்னப்பெற்றிலேன். விவேகமில்லாதவிவை விவேகபலம் பெற்றன, அதுடைய நான் பெற்றிலேன். [மடவன்னங்காள்] - ஸோஶத்தால் வந்த துவட்சியடங்கலும் வடிவிலே தோற்றவிருக்கை. [உணர்த்தலித்யாதி] - வருவதறிந்து பரிஹரித்திருப்பார், விழுக்காடறியாதே அகப்பட்டார் காரியம் செய்து தலைக்கட்டவேண்டாவோ. இங்கிர்த்தேசத்தாலும்-இத்திருவாய்மொழியடங்கலும் ஊடல் ஶலிழுக்கிறமை தோற்றுகிறது. [திணர்த்தவித்யாதி] - வாராதொழிந்தவிடம் அவன் குற்றமன்று கிடிகோள். செருமின வண்டல்கள்மேலே. அழுக்குக்கிருய்க்கக்கடவ சங்குகளானவை நீருறுத்தினவாறே கொழு

இவையெல்லாம் இத்யாதி. இவையெல்லாமுண்டிறேயென்றது - அன்னங்களுக்குப்போலே புணர்தல் மாத்ரமின்றிக்கே,இவளுடையவனுக்கு, தாம் ஸமமாகச்சொன்ன மூன்றுமுண்டென்றபடி. "பிரிந்தால்பின்புவரும்" இத்யாதிவாக்யவிவரணம் - பிரியவல்லார் இத்யாதி. பின்பு நோவுபடவல்லாரென்றது - பேடையானது விஶ்லேஷத்தாலே யூடப்பின்பு நோவுபடவல்லாரென்றபடி. கூடத்திரிந்தாலூடல்வாராதோ என்ன - குற்றவாளர் இத்யாதி. கீழே - கலந்துவர்த்திக்கையாக அருளிச்செய்து, புஜிக்கிற என்றர்த்தாந்தரம் - ஊடலுணர்தலி இத்யாதி. "நிஷஸாஹ மிஶிஷ்ரெஷ்ஷீ தாம்ரோ ஸெநஸஹ்ஹ்ய । ஊடலுணர்தலிலுமுண்டு நிஷ்வ்ஷிஹ்ஹ்ஹ । வாவரோஷ்ஸெஹ்ஹ்ய ஸீ தயாஸஹ்ரராவவ:" இத்யயோத்யாகரண்டே ஷண்ணவதிதமே. முந்தினவர்த்தத்திலே, "மேயும்" என்கிற வர்த்தமாநத்துக்கர்த்தம் - ஊடல் இத்யாதி. கீழ்ச்சொன்ன வர்த்தத்வயத்தையும் அடைவே விவரிக்கிறார் - ஒருகலத்திலே இத்யாதி வாக்யத்வயத்தாலே. இரண்டுங்கூடப்பட்டினிகிடக்கை யன்றிக்கேயென்றது - "நரோஸஸ்ரராவ'வொஹ்ஹெ" என்றும், "உவவாஸகூ ஶாஂஷீ நாழ்" என்றும் இருக்கையன்றிக்கேயென்றபடி. "உணர்த்தலூடல்" இத்யாதிக்குஹார்த்தஹாவம் - விழுக்காட்டில் இத்யாதி. விழுக்காடு - மேல்வரும்கார்யம். அங்குசேவல் ப்ரணயரோஷம் வாராமல் பரிஹரிக்கிறதாகையாலே பிரியாமல் வர்த்திக்கிறதென்னலாம், இங்குராயகியிறே யதுவாராமல் பரிஹரிக்கிறாள்; அவன்பிரியாநிற்க, இவள் அதுவாராமல் பரிஹரிக்கும்ப்ரகாரமேதென்ன - அதாவது இத்யாதி. "அன்னங்காள்" என்று - திர்யக்குக்களைச்சொன்னதுக்குஹாவம் - விவேகம் இத்யாதி. "மடம்" என்றதுக்குஹாவம் - ஸோஶத்தால் இத்யாதி. "அன்னங்காள்" என்னுமளவுக்கும் ஹாவம் - வருவதறிந்து இத்யாதி. இங்கிர்த்தேசத்தாலுமென்றது - "உணர்த்தலூடலுணர்ந்து" என்கிறகிர்த்தேசத்தாலுமென்றபடி. அதாவது - "கைகள்கூப்பி," "பாதம்கைதொழுது" என்கிறவிடத்திலே - ப்ரணயரோஷம் தோற்றுகிறவோபாதி, "உணர்த்தலூடலுணர்ந்து" என்கிற பதப்ரயோகத்தாலும் - ப்ரணயரோஷம் தோற்றுகிற தென்றபடி. ச ஶப்தம் - "கைகள்கூப்பி," "பாதம்கைதொழுது" என்றதைத சமுச்சயிக்கிறது. ஶப்தார்த்தம் - செருமின இத்யாதி. செருமின - நிபிடமான. அழுக்குக்கிருய்க்கக்கடவ சங்குகள் வண்டல்கள்மேல் சேருகைக்குஹேது - நீருறுத்தினவாறே

acharya.org

த்தவண்டல்களிலே சேராநிற்கும். [சங்குசேரும்] - அசேதநங்களுங்கூடக் கால்வாங்க மாட்டாத தேசங்கிடிகோள். [சேரும்] - வேறுபோக்கிடமின்றிக்கேயிருக்கை. "**நவ வாநராவதுதெ**" (நசபுநராவர்த்ததே) என்னும்படியே மீட்சியின்றிக்கேயிருக்கை. மார்த்தவத்தாலும் குளிர்த்தியாலும் வேறொன்றை நினைக்கவோட்டாதிருக்கை. [சங்கு சேரும்] - ப்ரமாணபரதந்த்ரரல்லாதாரையும்மீளவோட்டாத தேசங்கிடிகோள். வெள்ளை களையுங்கூடக் காற்கட்டுகிறதிறே மண்பாடு. [புணர்த்தவித்யாதி] - தொடுக்கப்பட்டு சீர்ஸுகீயமாய் ஸ்ரமஹரமான திருத்துழாயைத்திருமுடியிலே யுடையவனுய், அத்தாலே என்னை யநந்யார்ஹை யாக்கினவனைக்கண்டு. நீங்கள் சென்றறிவிக்கு மித்தனையே வேண்டுவது, இங்குத்தைக்குவருகைக் கோப்பித்தபடியே யிருக்கிறவன். அன்றியே, இத் தலையைத்தோற்பித்த வேண்டப்பாடு தோற்றும்படி வளையம் வைத்து முதன்மைகொண்டா டியிருக்கிறவன். புணர்த்த - சேர்த்த. [பூந்தண்துழாய்முடி நம்பெருமானைக் கண்டு]- தம்மோப்பனையையும் முதன்மையையும் நம்மோடேகாட்டியிருக்கிறவனைக் கண்டு. [புணர்த்தகையினராய்]-அங்கேசென்றால் தொழப்பார்த்திராதே, கையோத்துச் செல்லுங் கோள் கிடிகோள். வழியேபிடித்துத் தொழுதுகொடுபோங்கோள்; இல்லையாகில் "**ஸவராஃ ப்ரதிவெதிரே**" (அவராஃ ப்ரதிபேதிரே) என்கிற கண்ணழிவிலே சில வெழுதுவர்கிடிகோள். [அடியேனுக்கும் போற்றுமினே]- †(உங்கள்பரிகரமான வென்னை யும் நினையுங்கோள். போற்றுகை யாவது - கௌரவித்துச் சொல்லுகை. தொழுதகைக ளும் நீங்களுமாய் எனக்காகவுமொரு வார்த்தைசொல்லவேணும்.) நீங்களுமவனைப்போலே செய்யாதே கிடிகோள், அங்கேபுக்காலென்னையும் நினைக்கவேணும். அதாவது - புக்காரை

ப்ர:—(உணர்த்தலித்யாதி)—(சேரும்)—ஹாஹொஹெ[கரு]"ஸவவெவம் வதுயநாவடாயாஷம் ஸுஹயொகஹிஸம்வஹுதெ நவ வாநராவதுதெந வ வாநராவதுதெ"

என்று. கொழுத்த - ஸ்ம்ருத்தமான. வர்த்தமாநார்த்தம் - வேறுபோக்கிடம் இத்யாதி. இத்தால்ஹலி தம் - நவவாநஃ இத்யாதி. மீட்சியில்லாமைக்கு ஹேதுவேதென்ன - மார்த்தவத்தாலும் இத் யாதி. "அசேதநங்களுங்கூட" இத்யாதிவாக்யவிவரணம் - ப்ரமாணபரதந்த்ரர் இத்யாதி. "அழுக்குக் கிறுப்க்கக்கடவ" இத்யாதிவாக்யவிவரணம் - வெள்ளைகளையும் இத்யாதி. வெள்ளையென்ற விரத்த னுக்கும், சங்குக்கும்பேர். "புணர்த்த" என்றதுக்கு பூர்வர்கள் நிர்வாஹத்திலேஹாவம் - நீங்கள் இத் யாதி. ஹட்டர் நிர்வாஹம்-அன்றியேயித்தலையை இத்யாதி. ஹட்டர் நிர்வாஹத்திலேஹாவம் - அங்கே சென்றால் இத்யாதி. கையொத்து - அஞ்சலிபண்ணிக்கொண்டு. "கையொத்துச்செல்லுங்கோள்" என்றதின்விவரணம் - வழியேபிடித்து இத்யாதி. அங்கேசென்றபின்பு தொழுதால்வரும் ஹாநியே தென்ன - இல்லையாகில் இத்யாதி. இல்லையாகிலென்றது - வழியேபிடித்துத்தொழாதே, அங்கே போனபின்பு தொழுதிகோளாகிலென்றபடி. ஸவராஃ ப்ரதிவெதிரே என்கிறகண்ணழிவிலே, சிலவெழுதுகையாவது - நம்மழகுதொழுவிக்கத் தொழுதிகோளித்தனை. "நநவேயெழு"என்கிறதே உங்களுக்கு ஸங்கல்பமென்கை. "அடியேனுக்கும்" என்கிற சப்தத்தாலே - உங்கள்ஹோகத்தைப் பார்த்து நீங்களும் ஈஸ்வரனைப்போலே யங்கேகால்தாழாதே, என்கார்யத்தையும் அறிவிக்கவேணு மென்று தோற்றுகிறதிறே; அத்தை யருளிச்செய்கிறார் - நீங்களும் இத்யாதி வாக்யத்வயத்தாலே. உன்கார்யத்துக்குப்போகிற நாங்களுன்னை நினையாதிருப்புதோமோ; "என்னையும் நினைக்கவேணும்" என்கிறதென்கொண்டென்ன - அதாவது - புக்காரை இத்யாதி. அங்கேபோனால் நினையாததுக்கு

---

† குண்டலிதம் க்வாசித்கம்.

acharya.org

யெல்லாம் தந்தாம் ப்ரயோஜநத்தே முளப்பண்ணவல்ல தேசமாகையாலே, இத்தலையை நினைக்க விறகில்லையிறே. "நொவஜநம்ஸ்மரநு" (நோபஜநம்ஸ்மரந்) என்னும்படி யிறேயிருப்பது. [அடியேனுக்கும் போற்றுமினே] - அடியேனிடையாட்டத்தையும் அத்தலைக்கறிவிக்கவேணும்.

ஆறும் பாட்டு.

போற்றியானிரந்தேன் புன்னைமேலுறைபூங்குயில்காள் !
சேற்றில்வாளைதுள்ளும் திருவண்வண்டுறையும்
ஆற்றலாழியங்கை யமரர்பெருமானைக்கண்டு
மாற்றங்கொண்டருளீர் மையல்தீர்வதொருவண்ணமே.

ஆ.— (போற்றியான்) ஆஸ்ரிதர்க்காத்மஸுகம்பண்ணினாலு மொன்றும் செய்யாதானாயிருக்கும் ஸ்வபாவனாய், ஆஸ்ரிதவிரோயிநிரஸநார்த்தமாக அநவரதமுத்யதாயுயனாய், ஆஸ்ரிதஸம்ஶ்லேஷைக ஭োகனாயிருந்த எம்பெருமானைக்கண்டு, மாற்றங் கொண்டருளீர் மையல்தீர்வதொருவண்ணமென்கிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், சில குயில்களைக் குறித்து ; திருவண்வண்டுரிலே சென்று எம்பெருமானைக்கண்டுஉள்ள ஶுபாயையறிவித்துஅத்தலையில்நின்றுமொரு மாற்றங்கொண்டுவந்து என்மையல் தீருவதொருவண்ணம் அருளிச்செய்யவேணுமென்கிறாள்.

[போற்றியென்று தொடங்கி]- மனுஷ்யமாத்ரம்தட்டாதே புன்னைமேலேஉறைவதும்செய்து அந்யோந்ய ஸம்ஶ்லேஷத்தாலே மனோஹரமான வடிவையுமுடைய குயில்காள் ! உங்களை ஏத்திஇரந்தேன், நீரிற்காட்டிலும் ஸுலபமாயிருக்கையாலே சேற்றிலே வாளைகள் உகளித்துத்துள்ளா நின்றிருந்துள்ள திருவண்வண்டுரிலே நான் நோவுபடா நிற்கத் தான்தேறி தனக்கு நல்லாரான அயர்வறுமமரர்களுக்குக் கையுந்திருவாழியுமான வழுகைக்காட்டி அவர்களும்தானும் போதுபோக்கி யிருக்கிறவனைக்கண்டு. ஆற்றலாழி - வலியுடைய திருவாழி யென்னவுமாம்.

ப.—அநந்தரம், ஶோக்யதாப்ரகர்ஷத்தாலே ஸுரிசேவ்யனானவனைக் குறித்துச் சில குயில்களைப் போகவிடுகிறாள்.

புன்னைமேல் - பசுத்தநிறத்தையும் பரபாகமாய் நாநாவர்ணமான புஷ்பத்தையுமுடைய புன்னையின்மேலே, உறை - சுபாஶ்ரயமான விஷயத்தைப்பற்றி யிருப்பாரைப் போலே நிரந்தராஶ்ரயணம்பண்ணி, பூ-அத்தாலே யுஜ்ஜ்வலவேஷங்களான, குயில்காள்- குயில்காள், போற்றி - (உங்கள் * நிவாஸவ்ருக்ஷாஶ்ரயணத்துக்கும் ஈர்ஷணீயதைக்கும்)

த்ருஷ்டாந்தம் - நொவஜநடு இத்யாதி. ஸப்தார்த்தம் - அடியேனிடையாட்டத்தைஇத்யாதி. இடையாட்டம் - கார்யம். போற்றுதல் சொல்லுதல். அடியேனுக்குமென்றது - அடியேனிடையாட்டத்தையுமென்றபடி. "அடியேனுக்காகவும் சொல்லவேணும்" என்றுரை. "ஏவுஷாகுணம்தயா யாஸுவுகவதஶிவளஜவா । யயாஹஜுங்கெஶவெவுகிஜவஶாஃ வுகிவெஷிரெ" இதிஹாரதே. (ரு)

acharya.org

மங்களாசாஸநம்பண்ணி, யான் - உங்கள்வாயது வாணாளாயிருக்கிற நான், இரக்தேன் - அநந்யமதியானார்பண்ணும் ப்ரார்த்தநையைப் பண்ணினேன்;சேற்றில் - தன்னிலத்திலே வர்த்திக்கையாலே களித்து,வாளை - வாளை, துள்ளும்-துள்ளாநிற்கிற, திருவண்வண்டூர் - திருவண்வண்டூரிலே, உறையும்-வர்த்திப்பானாய், ஆற்றல் - பெருமிடுக்கனான, ஆழி-திருவாழியாலே, அம்-அலங்க்ருதமான, கை-திருக்கையையுடையனாய், (அவ்வழகாலே), அமரர்-நித்யஸூரிகளை நிர்வஹிக்கிற, பெருமானை - ஸர்வாயிகனை, கண்டு - கண்டு, மையல் - என்னுடைய ப்ரமம், தீர்வது - தீரும்படியானது, ஒருவண்ணம் - ஒருப்ரகாரத்தாலே, மாற்றம் - மறுமாற்றம், கொண்டு - கொண்டுவந்து, அருளீர்-எனக்கு உபகரிக்கவேணும். ஆற்றல் - அமைதியாய், மதிப்பையுடையவனென்றுமாம். இத்தால் - வடகருடைய வுக்திமாதுர்யமும் அர்த்தநியதியுந் தோற்றுகிறது.

இ.—ஆறும்பாட்டில், சில குயில்களைக்குறித்து அவனுக்கென் உறவையை யறிவித்து அங்குநின்றுமொரு மறுமாற்றங்கொண்டருளிச் செய்யவேணு மென்கிறாள்.

[போற்றி]-புன்னையின் கீழேநின்று குயில்களுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறாள். ஏகாந்தமாகவதுஸவிக்கிற ஸேர்த்தி நித்யமாகவேணும். தன்னார்த்திகண்டிரங்குகைக்குப் பாசுரமிது வென்றிருக்கிறாள். [யானிரந்தேன்] - "ஸீதாஸீவாஹ" என்கிறபடியே புருஷகாரத்வாரா எல்லாராலுமிரக்கப்படும் நானிரந்தேன். நியமிக்கிறேனல்லேன், இரக்கிறேன். "இரப்பார்கார்யம் செய்துதரவேணும்" என்னும் நினைவாலே. [புன்னைமேல்] - வைமாநிகரைப்போலே மனுஷ்யமர்யம் தட்டாதபடி உயரவர்த்திக்கை. இசையிறேயுயர்த்தியைக் காட்டுகிறது. நெய்தல் நிலத்திற்புன்னை படர்ந்தன்றோ விருப்பதென்னில்; பணைத்தோங்கியிருக்குமென்கிறது; "வானார்வண்கமுகு" என்றும் "சேண் சினையோங்குமரம்" என்றும் சொல்லுகையாலே. நெருப்பிலே ஸஞ்சரிப்பாரைப்போலே புன்னைப்பூவிலே வர்த்தியாநின்றன. அக்நிஸ்தம்பநமுடையார்க்கு வர்த்திக்கலாமிறே. [உறை] - பூவின்மேலே நித்யவாஸம் பண்ணுநின்றன. "நெஷாவஶ்ரீராக்ஷவ்யாநெஶாந்ஷஹஷ்ஶோந" என்று ராக்ஷஸீர்ஸநத்தோபாதி நினைத்திருக்கும் தன்னைப்போலன்றே. [பூங்குயில்காள்] - கலவியாலுள்ள 'வளஷ்ஷ்ஶ' வடிவிலே தொடைகொள்ளலாம்படி யிருக்கை. [சேற்றில்வாளை துள்ளும்] - நீருறத்தினால் சேற்றிலேயாயிற்று வாளைகள் களித்துவர்த்திப்பது. அவ்வூரில் பதார்த்தங்கள்பிரிந்து துடிக்கையன்றிக்கே களித்துவர்த்தியாநிற்கும். [ஆற்றல் இத்யாதி] - கையுந்திருவாழியுமான வழகை நித்யஸூரிகளை அனுஸவிப்பித்துக்கொண்டு போதுபோக்காயிருக்கிறவனைக் கண்டு.ஆற்றலென்று-வலியாய், ஆர்த்தரக்ஷணத்துக்கு வலியையுடைய திருவாழியென்னுதல்; ஆற்றலையுடையனாய்ப் பிரிவுக்குச் சிளையாதவனென்னுதல். ஒரு நீர்ச்சாவியான நான்கிடக்க, நிரபேக்ஷரானவர்களுக்குக்காட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறவனை. [ஆற்றல்] - ஆஸ்ரிதவிஷயத்திலெல்லாம் செய்தாலுமொன்றும் செய்யாதவனா யிருக்குமென்றுமாம். "ஆற்றல்மிக்காளுமம்மானை" என்னக்கடவதிறே. [மாற்றங்கொண்டருளீர்] - மறுமாற்றங்கொண்டுவந்தருளிச் செய்யவேணும். எப்படிப்பட்ட மறுமாற்றமென்னில்; [மையல்தீர்வதொருவண்ணமே] - என்னுடைய க்லேஶமும் மோஹமும் தீருவதொரு ப்ரகாரம். "தயா கூரஶயாஶ்ரயி" என்கிறபடியே என்பக்கல் உறவையைப்பண்ணியருளவேணும்.

acharya.org

ஈடு - ஆறும்பாட்டு. சிலகுயில்களைக் குறித்து அவனுக்கேன்உறவையை யறிவித்து அங்குநின்றுமொரு மறுமாற்றங் கொண்டுவந்தருளிச்செய்யவேணு மென்கிறாள்.

[போற்றியானிரந்தேன்]-ஸம்ஸாரவேக்காயம் தட்டாதபடி, வைமாநிகர் விமாநங்களிலே யுயரவிருக்குமாபோலே புன்னையிலே யுயரவிருந்தன சில குயில்கள்; அவற்றின் சேவியிலே தன்னார்த்த த்வநி படும்படி யுயர 'போற்றி' என்கிறாள். முகம்பார்க்கைக்குச் சொல்லும் பாசுரமிதுபோலேகாணும். இஷ்டம் சேவிப்பட்டால் கார்யம் செய்தல்லது நிற்கவொண்ணாதேன் நிருக்கிறாள் காணும். [யான்] - அவன்றான் இரக்கவிருக்கக் கடவ வேண்டப்பாடுடைய நான்: ஆள்விடுவானும் இரப்பானு மெல்லாம் தானேயிறே. [யானிரந்தேன்] - "ஸீதாமுவாச" (ஸீதாமுவாச) என்கிறபடியே - புருஷகாரத்வாரா எல்லாராலு மிரக்கப்படும் நானிரந்தேன். நியமிக்கிறேனல்லேன், இரக்கிறேன். இரப்பார் கார்யம் செய்தறவேணுமென்னும் நினைவாலே. [இரந்தேன்] - அவற்றின் நெஞ்சிலே புண்படுத்துகிறாள். [புன்னைமேலுறைபூங்குயில்காள்] - வைமாநிகரைப்போலே மநுஷ்ய ஸஞ்சாரம் நடையாடாதபடியுயரவர்த்திக்கிற, ஸம்ஶ்லேஷத்தாலே யுஜ்ஜ்வலங்களான குயில்காள். †(நெய்தல் நிலத்தில் புன்னை பணைத்தோங்கியிருக்கும்; *வாஞாவண்கமுகும், *சேண்சினை யோங்குமரமும்போலே.) உங்களைப்போகவிடுகை, யர்மஹாநியாயிருந்ததீ! ஆகிலும் என் செல்லாமையாலே செய்கிறே னென்கிறாள். [போற்றி] - பெருமாளும் பிராட்டியுமாகக் காட்டிலேயேகாந்தலோகத்துக்குப் போகாநிற்கச்செய்தே நடுவே ராவணன்வந்தாற்போலே, உங்கள் லோகத்துக்கு நான் விச்சேதம்பண்ணத் தோற்றினேன்போலேயிருந்தது; இத்தாலொரு வ்யஸநமின்றிக்கே யொழிந்திடுக உங்கள் லோகத்துக்கு. [புன்னைமேல்]-பிள்ளையழகனார், திருவிருந்தவரைமார்வனை "இப்பதத்துக்கு பட்டாருளிச் செய்ததேன்" என்று

ஆறும்பாட்டு.—போற்றி இத்யாதி. "பூங்குயில்காள் மாற்றங்கொண்டருளீர்" இத்யாதிகளைக் கடாக்ஷித் தவதாரிகை - சில குயில்களை இத்யாதி.

"போற்றி" என்ற உச்சைஸ்ஸ்வரத்துக்கு ஹேதுவான ஹாவம் - ஸம்ஸாரா இத்யாதி. இத்தால் - புன்னைமேலே நீங்கள் உங்கள் பேடையோடேகூட ஏகாந்தமாக வநுபவிக்கிற சேர்த்தி நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாஶாஸநம் பண்ணுகிறா ளென்றபடி. மங்களாஶாஸநம்பண்ணி நானிரந்தேனென்று ஸப்தார்த்தம். மங்களாஶாஸநம்பண்ணுகிறது எதுக்காகவென்ன - முகம் பார்க்கைக்கு இத்யாதி. முகம்பார்த்து கார்யம் செய்கைக்கென்று கூட்டுவது. இத்தால் - தன்முகம் பார்த்துக் காரியம் செய்கைக்காக மங்களாஶாஸநம் பண்ணுகிறா ளென்றபடி. மங்களாஶாஸநம் பண்ணினால் கார்யம் செய்யவேண்டி யிருக்குமோ வென்ன - இஷ்டப்தம் இத்யாதி. இத்தால் - ஸ்வப்ரக்ருதியை யிட்டு நினைக்கிறா ளென்றபடி. அவனப்படியிரக்குமோவென்ன-ஆள்விடுவானும் இத்யாதி. "யான்" என்றதுக்கர்த்தாந்தரம் ஸீதாதி இத்யாதி. "ஹ்ரதஶ்ரணளமாஶம்நிவீஶ்ரவுஶநஃ । ஸீதாமுவாவாதியஶாஃஶாவவளுஹாவ தி" இத் யயோத்யாகாண்டே லக்ஷ்மணன் (நியமிக்கிறேனல்லேன்) "ஈஸ்வெஶாநா," "வாம்ப்ரயாநெஶ்வரெஶ்வரீ" இத்யாதிகளாலே நியமிக்க ப்ராப்தியுண்டாயிருக்கவும், நியமிக்கிறேனல்லேனென்றபடி. "உறை" என்றதுக்கு ஹாவம்-உங்களைப்போக இத்யாதி. மங்களாஶாஸநம்பண்ணும்போது மங்களத்துக்கு ப்ரஸக்தியுண்டாக வேணுமே யென்ன - பெருமாளும் இத்யாதி. கீழேலோகவிச்சேதப்ரஸங்க மில்லாவிட்டாலும் முகம் பார்க்கைக்குச் சொன்ன பாசுரமென்று; இங்கே-விச்சேதப்ரஸங்க முண்டென்கையாலே. இது ஹாவக்தாரமென்று கண்டுகொள்வது. "உயரப்போற்றியென்கிறாள்" என்று கீழ் தாமருளிச் செய்ததுக்கு ஸம்வாதம் - பிள்ளையழகனார் இத்யாதி. இத்தால் - "போற்றி" என்று உச்சைஸ்ஸ்வரமாகையாலே,

---

† குண்டலிக்ரந்தம் க்வாசித்கம்.

acharya.org

கேட்க, "'தன்னார்த்தி யவற்றின்செவியிலே படும்படி யுயரச்சொல்லுகிறாள், என்றருளிச் செய்தார்" என்ன, "நெய்தல்நிலத்தில் புன்னைபடர்ந்தன்றோ கிடப்பது, "இங்ஙனே சொல்லக் கூடுமோ" என்ன, அவன் பட்டர்பாடேவந்து, "இங்ஙனே பணித்தார்" என்ன, "இவ் வர்த்தத்துக்கு நிர்ணயகம் - இசையாயிற்று; அது, போற்றியென்று - உயரச் சொல்லியிருக்குமோ! தாழச் சொல்லியிருக்குமோ!" என்றருளிச் செய்தார். [சேற்றில் வாளை துள்ளும்] - ப்ரளயத்திலே கொண்டுபோய்விட்டாலும் ஆனைக்கன்றுபோலே சேருக்கிச் சேறுக்குமாயிற்று வாளைகள். "அலைகடல்நீர் குழம்ப வகடாடவோடி யகல்வானுருஞ் சமுதுகில் மலைகளைமீதுகொண்டு வருமீனை" என்னுமாபோலே. சேதநாசேதந விலாக்ஷணமறக் களித்துவர்த்திக்கும் தேசமாயிற்று. அவ்வூரில் பதார்த்தங்கள் சேருக்கி வர்த்தியாநிற்கச் செய்தேகிடீர் நான் பிரிந்திருந்து தூதுவிடுகிறது. [ஆற்றலாழியங்கை யமரர்பெருமானைக் கண்டு] - ஆஶ்ரிதவிஷயத்திலெல்லாம் செய்தாலும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்று நோவுபட்டிருப்பா னொருவனுமாய், அவர்கள் ரக்ஷணத்துக்குப் பரிகரமான திருவாழியைக் கையிலே யுடையனாய், நான் காணவாசைப்பட்ட கையுந் திருவாழியுமான வழகை நிரபேக்ஷர்க்குக் காட்சிகொடுத்திருக்கிறவனை. †(ஆற்றல் - வலியாதல் - பிரிவுக்குச் சிகையா திருக்கையாதல், நோவுபாடாதல்.) ஆற்றலாழியென்று - திருவாழிக்கு விசேஷணமாய், ஆஶ்ரித ரக்ஷணத்தில் அவன் தன்னிற் காட்டிலும் க்ருபையையுடைய திருவாழியைக் கையிலே யுடையவனை. அன்றியே, அவன் தனக்கே விஶேஷணமாய், பிரிவுக்குச் சிகையாதே ஆறியிருப்பானாய்க் கையுந் திருவாழியுமான ஸர்வேஶ்வரனை யென்றுமாம். [மாற்றங்கொண்டருளீர்] - ஒரு வார்த்தைகொண்டு வந்தருளவேணும். எங்ஙனேகொண்டுவர என்றால்; என் ஊமையிருந்தபடி கண்டிகோளே, இதுதீருவதொருவழி நீங்களே தேடிக்கொண்டு வந்து சொல்லுங்கோள். "ஏஷ்டாஸீதா" (த்ருஷ்டாஸீதா) என்றாற்போலே. [மையல்

ப்ர.—(மாற்றங்கொண்டருளீர்)—ஸஜ்ஜெவெ, "ஸொஹிமஶ்ஶஹாதநம் கூஷுவாராஶம்ஷுடிக்ஷிண(ம் । நுவெஷயடஶெயாதாஷ்டாஸீதெதிதகுகதாஎஅ॥"

"வானார்வண்கமுகு.," 'சேண்நினையோங்குமரச் செழுங்கானல்" என்றபடியே அங்குள்ள புன்னைமுதலான வ்ருக்ஷங்களும் உன்னதமாயிருக்குமென்று கருத்து. "தேறுநீர்ப்பம்பை" என்று - ஜலலம்ருத்தியுண்டானதாகச் சொல்லியிருக்க, "சேற்றில் வாளை துள்ளும்" என்கிறதென் என்ன - ப்ளயத்திலே இத்யாதி. "ப்ரளயஜலத்தையும் சேருக்கும்" என்னுமதுக்கு ப்ரமாணம் - அலைகடல் இத்யாதி. அலைமோதிக்கொண்டுவருகிற கடலின் நீர், மத்ஸ்ய ஸஞ்சாரத்தாலே குழம்பித் தன் கீழ்வயிற்றிலே போடிவந்து சேரும்படியாகவும், பெரிய வாகாசத்திலேசென்று சேரும்படியாகத் தன்முதுகிலே மலைகளை, அமிழ்ந்துபோகாதபடி மேலே கொண்டுவருகிற மீனையென்று ஸப்தார்த்தம். அகடு - கீழ் வயிறு. திருமொழி பதினாறாம்பத்து நாலாந்திருமொழி முதற்பாட்டு, "நிலைமிடம்" இத்யாதி. "வாளைதுள்ளும்" என்றதுக்கு ஹாவம் - சேதநாசேதந இத்யாதி. கீழ் வாக்யத்தால் பலித்த ஹார்த்த ஹாவம் - அவ்வூரில் இத்யாதி. பூர்வர்கள் நிர்வாஹத்திலே ஹாவம் - ஆஶ்ரிதவிஷயத்தில் இத்யாதி. இந்தபக்ஷத்தில், "ஆற்றல்" என்று - தயை. இது - ஈஶ்வரவிஶேஷணமாதல், திருவாழிக்கு விஶேஷணமாதல். ஹட்டர் நிர்வாஹம் - அன்றியே இத்யாதி. இந்தபக்ஷத்தில், "ஆற்றல்" என்று - பொறை. எங்ஙனேகொண்டுவரவென்றா லென்றது - எப்படிப்பட்டவார்த்தை கொண்டுவரவென்றா லென்றபடி. இதுவென்றது - மையலென்றபடி. இது தீருவதொருவழி தேடிக்கொண்டுவந்து சொல்லுகையாவதென்னென்ன - ஏஷ்டாஸீதா இத்யாதி. "ஸொஹிமஶ்ஶஹாதநம் கூ

---

† குண்டலிக்ராந்தம் க்வாசித்கம்.

acharya.org

தீர்வதோருவண்ணம் மாற்றங் கோண்டருளீர்] - என்க்லேஶம் தீருவதோருப்ரகாரம் வார்த்தைகோண்டு வந்தருளிச் செய்யவேணும். தூதுவிடுகிற தான் ஜநகராஜன் திருமகளாகவுமாம், விடுகிறது தீர்யக்குக்களையாகவுமாம், ஶுகவத்விஷயத்தில்வடகரா யிருப்பாரை இங்ஙனல்லது சோல்லவொண்ணாதுகாணும். (மையல் - ப்ரமமும், க்லேஶமும், மோஹமும்.)

ஏழாம் பாட்டு.

ஒருவண்ணஞ்சென்றுபுக்கு எனக்கோன்றுரையோண்கிளியே !
சேருவோண்பூம்பொழில்சூழ் சேக்கர்வேலைத்திருவண்வண்டூர்
கருவண்ணஞ்செய்யவாய் செய்யகண்செய்யகைசெய்யகால்
சேருவோண்சக்கரஞ்சங்கு அடையாளந்திருந்தக்கண்டே.

ஆ.—(ஒருவண்ணம்) திருவண்வண்டூரில் சோலைகளுடையவும், தாமரைத் தடாகங்களினுடையவும் அதிமநோஹரமான வழகுகளிலே அகப்படாதே யொருவண்ணம் சென்றுபுக்கு, என்னோடுள்ள கலவியாலே புதுக்கணித்த திருநிறத்தையும் திருப்பவளத்தையும் திருக்கண்களையும் திருக்கைகளையும் திருவடிகளையும் திருவாழியையும் திருச்சங்கையும் தனக்கு திவ்யசிஹ்நமாகவுடையனா யிருந்தவனைத் திருந்தக்கண்டு எனக்கோன்றுரை யொண்கிளியே! என்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், "நாங்களவனை யறியும்படியெங்ஙனே" என்றுகேட்ட கிளிகளைக்குறித்து அவனுடைய அடையாளங்களைச்சொல்லி, இவ்வடையாளப்படியே அவனை அழகிதாகக்கண்டு எனக்காக அவனுக்கொரு வார்த்தை யறிவியுங்கோளென்கிறாள்.

[ஒருவண்ணம் சென்றுபுக்கு] - ஐஶ்வர்யதரங்கங்களாலே புகுகையரிது, ஆகிலும்வருந்தி ஒருபடிசென்றுபுக்கு அவ்வூரில் மோக்யதையாலே அவ்வளவும்சென்று புகுகையரிது, ஆகிலுமொருபடிசென்று புக்கென்றுமாம். [எனக்கோன்றுரையொண் கிளியே]-உன்னுடைய ஸஹசரத்தோடே கலக்கையாலே அழகுபெற்றிருக்கிற கிளியே! எனக்காக அவனுக்கு ஒருவார்த்தை அறிவிக்கவேணும். [சேருவென்று தொடங்கி] - இசலிபூக்கும் பொழிலையுடைத்தாய் அப்பொழிலிலுதிர்ந்த தாதுகளாலே சிவந்த பர்யங்கங்களையுடைய, திருவண்வண்டூரிலே. [கருவண்ணமென்றுமேலுக்கு] - என்னை விஶ்லேஷித்ததுக்காக வாட்டமில்லாத திவ்யாவயவங்களையுடையனாய் யுத்தத்தில் உஜ்ஜ்வலமான திருவாழியையும் ஶ்ரீபாஞ்சஜந்யத்தையும் தனக்கு திவ்யசிஹ்நமாகவுடையனா யிருந்தவனை வ்யக்தமாகக் கண்டு.

ஸுராராஶ்வுஷக்ஷிணடு । ந்ருவெடியஷயொதாஷ்ஷாஸீதெதிதத்தஃ" இதி ஸங்கேபே. சொல்லீரென்னுதே, "அருளீர்" என்றதுக்கு ஹாவம் - தூதுவிடுகிற இத்யாதி. புன்னை மேலுறை பூங்குயில்காள், போற்றியானித்யாரப்ய, கண்டு - மையல்தீர்வதொருவண்ணம் - மாற்றங் கொண்டருளீ ரித்யந்வயஃ. மையல் - வ்யாமோஹமும், க்லேஶமும், ப்ரமமும். மாற்றம் - மறுமாற்றம், ப்ரத்யுத்தரம்.

(சு)

acharya.org

ப.—அநந்தரம், அஸாதாரண ஹ்ர்ஸநீய லக்ஷணனானவனைக்குறித்து ஒரு கிளியைப் போகவிடுகிறாள்.

ஒண்-வடிவழகாலே யவனையொப்புச் சொல்லலாம்படியான வைலக்ஷண்யத்தை யுடைய, கிளியே - கிளியே, செரு - பரஸ்பர ஸ்பர்ஶாளுக்களைப்போலே யிசலிபிசலி, ஒண்-அழகிய, பூ-பூக்களையுண்டாக்கும், பொழில் - பொழில், சூழ்-சூழ்ந்து, அந்தப் புஷ்பபராகத்தாலே, செக்கர்-செக்கர், வேலை-காலத்தையுடைத்தான, திருவண்வண்டூர்-திருவண்வண்டூரிலே, (பொழிலின் ஶோக்யதையிலகப்படாதே), ஒருவண்ணம் - ஒருபடி, சென்று - சென்று, புக்கு-புக்கு, (அந்த அமரர்பெருமானுடைய), கரு-ஶ்யாமளமான, வண்ணம் - வடிவும், செய்ய - சிவந்த, வாய் - வாயும், செய்ய-செய்ய, கண்-கண்ணும், செய்ய-செய்ய, கை-கையும், செய்ய-செய்ய, கால்-காலும், செரு-இவ்வழகுக்கு ஶோக்தாக்களானாருடைய விரோயிநிரஸநத்திலே யுத்யுக்தமாய், ஒண்-ஶோக்யமானவேஷத்தை யுடைத்தான, சக்கரம் - திருவாழியும், சங்கு-ஸ்ரீபாஞ்சஜந்யமுமாகிற, அடையாளம் - அடையாளங்களை, திருந்த - அபரோக்ஷித்து, கண்டு - கண்டு, எனக்கு - அப்படிகாண வாசைப்பட்டிருக்கிறவெனக்கு, (இனிதாக), ஒன்று-ஒருவார்த்தை, உரை-சொல்லவேணும். கண்டபடிவந்தெனக்கொருவார்த்தை சொல்லவேணுமென்றுமாம். இத்தால் - வடகருடைய பகவத்ஸமாநாகாரதை தோற்றுகிறது.

இ.—ஏழாம்பாட்டில், சிலகிளிகளைக்குறித்து, அவனுடைய அடையாளங்களைச்சொல்லி, இவ்வடையாளப்படியே கண்டேனக்காக வொருவார்த்தைசொல்லுங்கோளென்கிறாள்.

[ஒருவண்ணம் சென்றுபுக்கு] - வழியிலே நெஞ்சையபஹரிக்கும் ஶோக்யதையையுடைத்து, அதில் கால்தாழாதேயொருபடி சென்றுபுக்கு; "ஸ்ரத்ஷ்ஸு வாரா ஆரூஹஸ்ஸீதி" என்னுமாபோலே, ஐஶ்வர்யதரங்கங்களாலே புகுகையரிது, வருந்தி புக்கென்னவுமாம். இப்போது முதலிகள், பிரப்புவந்துவிழும், அதுக்காகப் பிற்காலியாதே மேல்விழுங்கோளென்கை. [எனக்கு] - "நிவெஷயதரோ" என்கிறபடியே வடிவைக் காட்டுகிறாள். அங்குத்தை வார்த்தை கேட்டாலல்லது யரிக்கமாட்டாதவெனக்கு. [ஒன்றுரை] - ஒரு நல்வார்த்தை சொல்லு [ஒண்கிளியே] - ஸஹசரத்தோடே கூடியிருக்கையாலே யழகுபெற்றிருக்கிறகிளியே! மௌக்த்யமும் பேச்சும் வாயிற்பழுப்பும் வடிவிற்பசுமையும் அவனோடு போலியாயிருக்கையாலே, உன்னைக்கண்டு கொண்டிருக்க வமைந்ததென்றுமாம். [செருவொண்பூம்பொழில்] - செருவை விளைப்பதாய் ஹ்ர்ஸநீயமான பூம்பொழில், "என்னைப்பாராதே பூவைப்பார்த்தாய், உன்னுடம்பு பூநாறிற்று, வேற்றுடம்பு" என்று மிதுநங்களைச் சீறுபாறென்னப்பண்ணுமென்னுதல்; "சலங்கொண்டு மலர்சொரியும்" என்று இசலியிசலிப்பூக்களைச் சொரியாநிற்குமென்னுதல். [செக்கர்வேலை] - பொழிலிலுதிர்ந்த தாதுக்களாலே சிவந்த பர்யந்தங்களையுடைத்தென்னுதல். கடற்கரையாகையாலே சிவந்த மணலீட்டையுடைத்தென்னுதல். [கருவண்ணமித்யாதி] - உனக்கு வழியில் விடாயெல்லாங்கெடும்படி வர்ஷுக வலாஹகம் போலே யிருக்கிற திருநிறத்தையும் அதுக்கு பரஸாமாய்த் தாமரைத்தடாகம் பரப்புமாறப் பூத்தாப்போலேயிருக்கிற அவயவங்களையும் காணவிறே புகுகிறது. கலவியோடு பிரிவோடு வாசியற ஒருபடிப்பட்டிருக்கிறவரை. [கருவண்ணம்] - கண்டார்க்குவிடாய் கெடும்வடிவு. [செய்யவாய்] - அவ்வடிவிலே யிழிந்தவர்கள் துவக்குண்ணும்முறவல்.

acharya.org

[செய்யகண்] - அநந்யார்ஹமாக்குங்கண். [செய்யகை] - அநந்யார்ஹமானுரை யணைக் குங்கை. [செய்யகால்] - ஸபர்ஶத்துக்குத்தோற்று விழுந்திருவடிகள். [செருவொண் சக்கரம் சங்கு] - அஸ்யாநேஹ்ய ஶங்கைபண்ணி யுஜ்ஜோன்முவுமான திவ்யாயுதங்கள். "இன்னுரென்றறியேன்." என்று கிட்டினுரைமதிகெடுக்கும் திவ்யாயுதங்கள். [அடை யாளம்] - திவ்யாவயவத்தோபாதி திவ்யாயுதங்களும் அஸாதாரண சிஹ்நமாகை. "யாநிராஷ்ரவிஹாநி லக்ஷணஸ்ரயாநிவெ". [திருந்தக்கண்டே] - என்னைப் போலே மாநஸமாகவன்றிக்கே, வ்யக்தமாகக்கண்டு.

ஈடு.—ஏழாம்பாட்டு. சிலகிளிகளைக்குறித்து, அவனடையாளங்களைச்சொல்லி, இவ்வடையாளப்படியேகண்டு எனக்காக வொருவார்த்தை சொல்லுங்கோளென்கிருள்.

[ஒருவண்ணம்சென்றுபுக்கு] - இதுக்கிரண்டுபடியாக வருளிச்செய்வர். இத் தலையில் தனிமைநினையாதேபோய் நிற்கையாலே, போரமுதலிகளாயிருப்பர்; மேன்மேல னப்பிரம்புகள்விழும், அத்தைப்பொறுத்துப்போய்ப் புகுங்கோள். அன்றியே, வழியிலே நெஞ்சையபஹரிக்கும் ஹோக்யதையையுடைத்து; அதில் கால்தாழாதே வருந்தி யொருபடி சென்றுபுக்கு. "ஸதத்ஸுபுரவாரம் ஸமதீத்ய" (ஸததந்தபுரத்வாரம்ஸமதீத்ய) "பொன்னியலுமாடக்கவாடங்கடந்துபுக்கு" என்னுமாபோலே. "ஸராம்ஸிவஸுலாஹுலாநி நதீஶ்சவிமலோதகா: | நிரீக்ஷமாணா" (ஸராம்ஸிசஸுபுல்லாநி நதீஶ்சவிமலோதகா: | நிரீக்ஷமாணு) இத்யாதி. வழியைப்பாராதே போனுர்களென்கை. "காயபுவஶாஜ்ஜகாம:" (கார்யவஶாத் - ஜக்மு:) கார்யவஶராய்க்கொண்டு போனுர் கள். அப்படியே ஹோக்யதை யளவிறந்திருக்கையினுலே, இவற்றில் கால்தாழாதே போய்ப் புகுகை சாலப்பணியாயிருக்கும். [எனக்கு]-பரிஹவத்துக்கு உங்களுக்கிருய்க்கலாம்படியோ! நானிருக்கிறது. "வஹிவஶ்யஶரீராணி" (ஏஹிபஶ்யஶரீராணி) 'நிவெடிய தரடி'

ஏழாம்பாட்டு.—ஒருவண்ணம் இத்யாதி. "ஓண்கிளியே, கருவண்ணம் செய்ய வாய் தொடங்கி. திருந்தக்கண்டு - எனக்கொன்றுரை" என்கிறவற்றைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலகிளி களை இத்யாதி.

பட்டர்நிர்வாஹம் - இந்தலையில் இத்யாதி. பூர்வர்கள் நிர்வாஹம் - அன்றியே இத்யாதி. ஹோக்யதையாலேகடந்துபோகவொண்ணுமைக்கு ப்ரமாணத்ரயம்-ஸதத்ஸுபுரவாரம் இத்யாதி. (அதீ த்ய) என்னுதே, (ஸமதீத்ய) என்கையாலும். (கடந்து) என்கையாலும் - ஹோக்யதையாலே, கடந் போகையிலுள்ள வருமைதோற்றுகிறது. "ஸதத்ஸுபுரவாரம்ஸமதீத்ய ஜநாகுலே | ஹுவிவிதாநாம் ததந்தபுரம் ஸ்ரீராஜமாவாரணவிஶ" இத்யயோத்யாகாண்டே ராமாஹ்வாகார்த்தம் ததந்தபுரம் கச்சந்ஸுமந்த்ர:. தத்ரைவ, ம்ருதேதஶரதேபாதாஹ்வாகார்த்தம் கச்சந்தோ தூதா:. "ஸராம ஸிஹுலாஹுலாநி நதீஶ்சலாவலாவலுதகா: நிரீக்ஷமாணா ஜகாமவெஷ்டு தாரகாயபு வஶாஷ்டு" "நிரீக்ஷமாணா:" என்னுநிற்க, (பாராதேபோனுர்கள்) என்கிறதென்கொண் டென்ன; மேலே, "காயபுவஶாஷ்டு" என்றிருக்கையாலே, பார்த்துவைத்தும் அதிலல்வய மில்லாமல் - வழியில் ஹோக்யதையிலே ஈடுபடாதேபோனுர்களென்கிருர் - காயபுவஶாத் இத்யாதி. 'பொன்னியலுமாடக்கவாடங்கடந்துபுக்கு' பொன்னுலே பண்ணப்பட்டமாடங்களில் வாசற்கதவுகளைக் கடந்துள்ளேபுக்கென்றபடி. பெரியதிருமடல். சாலப்பணியாயிருக்கும் - மிகவும் ப்ரயாஸமாயிருக்கும். பிரம்புகள் விழாநிற்கப்போகப்போமோவென்ன; பட்டர்நிர்வாஹத்திலே யருளிச்செய்கிருர் - பரி பவந்துக்த இத்யாதி. அதாவது - என்னுர்த்தியைக் கண்டால், அவன்பண்ணுகிற பரிபவங்கண்டு

acharya.org

(நிவேதயதமாம்) என்கிறபடியே வடிவைக்காட்டுகிறாள். என்னைக்கண்ட வுங்களுக்கு, ஹோக்யதையிலே நெஞ்சுசெல்லுதல், பரிஹவங்கண்டிரூய்த்தல் செய்யலாம்படியோ விருக்கிறது. பிறர்காரியம் செய்வார்க்கவை பார்க்கவோண்ணுமோ. [ஒன்றுரை] - ஒருவார்த்தை சொல்லு. அன்றியே, என்னுற்றுமையாலே சொல்லுகிறேனத்தனை, இருகால்மட்டேச் சொல்லுகை மிகையாம்படிகிடிகோளவனிருப்பதென்றுமாம். ஹோக்யதையாலே கால் கட்டுப்பட்டு நின்றுனித்தனை. ஆர்த்தவிஷய மொருதலையானல், ஹோக்யதையிலே நெஞ்சுசெல்லுதல், மறத்துச்சொல்லப் பொறுத்தல்செய்யவல்ல விஷயமன்றுகிடிகோள். [எனக்கொன்றுரை] - என்னிடையாட்டமொன்றுசொல்லுங்கோள். [ஒண்கிளியே] - மௌக்த்யமும் பேச்சும் வாயில் பழுப்பும் வடிவில் பசுமையுமவனோடு போலியா யிருக்கையாலே உன்னைக் கண்டுகொண்டிருக்க வமைந்திருக்க, கைப்புகுந்த வுங்களையுமிழக்கப் புகுகிறேனித்தனையிறே. [செருவோண்பூர்பொழில்சூழ்] - செருவை விளைப்பிப்பதாய் அழகிதான பூம்பொழிலாலே சூழப்பட்டிருக்கை. அங்குமிதுநமாய் வர்த்திப்பார்க்கேல்லாம் நித்யவிப்ரதிபத்தியாய்ச் செல்லாநிற்குமத்தனை. அதாவது - "என்னைப்பாராதே பூவை யமைந்திருக்கப்பார்த்தாய்; †(அமைந்திருக்கப்பார்க்கையாவது - நாயகனைப்பாராதே "நமக்குப்பூவேயமையும்" என்றுபார்க்கை.) நான் பறிக்க நினைத்த பூவைப்பறித்தாய், அணைப்பதற்குமுன்னே யுன்னுடம்பு பூ நாறிற்று" என்றிப்படி சீறுபாறேன்று செல்லாநிற்குமத்தனை. "சலங்கொண்டு மலர் சொரியும்" என்கிறபடியே இசலிப்பூக்குமென்றுமாம். [செக்கர்வேலைத்திருவண்வண்டூர்] - இளமணலைக்கல்களிலே விழுந்த பூக்களின் தாதுக்களாலும் சுண்ணங்களாலும் சிவந்த

உங்களுக்குப் பிற்காலிக்கலாயிருக்கிறதோ? என்றபடி. "எனக்கு" என்கிறவித்தால் - ஆர்த்திதோற்றுமோவென்ன; "ரூவுவவோவெஷ்ரு தநஹிரோநம்வுரூவஷ்ரு" என்கிறபடியே வேஷங்கண்டபோதே யார்த்தியுந் தெரியுமென்னுமத்தை ப்ரமாணகதாமுகேந ஊர்ஜிப்பிக்கிறார் - வஹிவஶு இத்யாதி. "வஹிவஶுஶரீராணிஃ நீநாம்ஹாவிதாதநாழ் ஊகாநாம்ராக்ஷவெஸ்ரோரெவுஹுஹுநாம்வுஹுயாவநெ" இத்யாரண்யகாண்டே ராமம்ப்ரதிருஷயஃ. "ஸவுலொகஶரணுயாயராவவாயஃஹாதநெ । நிவெஷ்யதரோக்ஷிஷ்ரம்விஹீஷணஃவஸ்ரிதழ்" இதியுத்தகாண்டேவிபீஷணஃ. பட்டருடையவும் பூர்வர்களுடையவும் நிர்வாஹத்வய விவரணம் - என்னைக்கண்ட இத்யாதி. பரிபவாதிகள் பாராமல் காரியம் செய்யவேண்டுகிறதென்னென்ன - பிறர்காரியம் இத்யாதி. பிறர்காரியம்செய்வார்க்கு - பரோபகாரசீலர்க்கு. "ஒன்றுரை" என்றதுக்குமுந்தினவர்த்தம் - "வாஹாயஃபுவோவுஹி" என்னுமாபோலே யொருவார்த்தை மாத்ரம் சொல் என்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, ஒருகால்சொல்ல வமையுமென்றபடி. இப்படிஸுலபனனல், இத்தனைநாளாக உன்னையுபேக்ஷித்து வாராமலிருப்பானென் என்ன - போக்யதையாலே இத்யாதி. "எனக்கு" என்றதுக்கு - பாட்டினவதாரிகையிலே 'எனச்காக' என்றருளிச்செய்து, இங்கே யர்த்தாந்தரம் - என்னிடையாட்டம் இத்யாதி. இடையாட்டமாவது - வைவர்ண்யம், கார்ஶ்யம் தொடக்கமானவை. இடையாட்டம் - வ்யாபாரம். * ஒண்மைக்குயர்த்தமருளிச்செய்துகொண்டு, அதில் இவளுக்கு விவக்ஷிதமான ஹார்த்தபாவத்தை யருளிச்செய்கிறார் - மௌக்த்யமும் இத்யாதி. செரு - யுத்தம். ஆர்க்குச்செருவைவிளைப்பிக்குமென்ன - அங்குமிதுநம் இத்யாதி. "செரு" என்றதுக்கு - ஸ்பர்த்தையாகவர்த்தாந்தரம் - சலங்கொண்டு இத்யாதி. இஶலியஶலிமலரைச்சொரிகிறவித் யர்த்தஃ. திருமொழி மூன்றும்பத்து ஒன்பதாந்திருமொழி முதற்பாட்டு,—சலங்கொண்டவிரணியன் இத்யாதி. சலம் - ஜலம். "செக்கர்வேலை" - (சிவந்தபர்யந்தம்) வேலைசிவந்திருக்கைக்கடியே தென்ன - இளமணல் இத்யாதி. தாது - உள்ளிதழ். சுண்ணம் - ரஜஸ்ஸு. அப்படி அகவாயிலுள்ள

acharya.org

பர்யந்தங்களை யுடைத்தாயிருக்கை. கடற்கரையாகையாலே சிவந்தமணலீட்டை யுடைத்தென்னுதல். இவையெல்லாவற்றாலும் - லோகயோக்யமான தேசமென்றபடி. [கருவண்ணம்] - இத்தலையை யநந்யார்ஹமாக வெழுதிக்கொண்ட வடிவிருக்கிறபடி. [செய்யவாய்] - அதுதான் மிகையாம்படி, "நானுனக்கு" என்றாற்போலே சொல்லப்புக்கு விக்கின திருப்பவளம். [செய்யகண்] - "அது உக்திமாத்ரமன்று, அகவாயிலுமுண்டு" என்றுதோற்றுகிற திருக்கண்கள். அகவாயிலுள்ளதுக்கெல்லா மானைத்தாளிறே திருக்கண்கள். அத்தை க்ரியாபர்யந்தமாக அநுஷ்டிக்கிறதிருக்கைகள். அவையத்தனைக்கும் தோற்றுவிழும் துறை, திருவடிகள். [செருவோண்சக்கரம்சங்கு] - இவ்வடிவழகையெல்லாம் காத்தூட்டவற்றுமாய், அஸ்யாநேஹயுத்தங்கைபண்ணி யுலோர்முகமாய்,கைகழியப்போய்நின்றுரக்ஷிப்பதும், கைவிடாதே வாய்க்கரையிலேநின்று ரக்ஷிப்பதுமான திவ்யாயுதங்கள். கிட்டினாரை "இன்னாரென்றறியேன்" என்று மதிமயங்கப்பண்ணுவிக்கும் திவ்யாயுதங்கள். [அடையாளம்] - திவ்யாவயவத்தோபாதி திவ்யாயுதங்களும் அஸாதாரண சிஹ்நமாகை. "யாநிராமஸ்யவிஹ்நாநிருக்ஷணஸ்யவயாநிவை" (யாநிராமஸ்யசிஹ்நாநிலக்ஷ்மணஸ்யசயாநிவை) [திருந்தக்கண்டே] என்னைப்போலேமாநஸமாகவன்றிக்கே வ்யக்தமாகக்கண்டு. இவ்விஷயத்தில் காட்சியிறேப்ரயோஜநம், அது உங்களுக்கு முற்படப்பெற்றதே. பிராட்டிகார்யம் செய்தால், அவளுக்குமுன்னே இவனுக்குப்பேறு முற்பட்டிருக்குமிறே. *வரிஷ்ஜ்ஜோஹநலக்ஷிதம் இறே. [திருந்தக்கண்டே] இத்தலையில்வைவர்ண்யங்கண்ட நெஞ்சாறலெல்

ப்ர:—(திருந்தக்கண்டே)—யாலகாணை [க] "வாஷஸவபுஷஹுத ஹுஇத்யாதி॥கந॥ உதபுக்ஷாவீதிஹ்ருஷ்டாஜ்ஜோராஷ்ஸம்வரிஷஸஜே। ஹநஹு ஜ்ஜஹாதாநம் கூதகாயபுஹுவாமதி॥கசா॥"

துக்கு ப்ரகாஶகமாயிருக்குமோவென்ன - அகவாயில் இத்யாதி. ஆனைத்தாள் - த்வாரம். அத்தை - அகவாயிலுண்டான ஸ்நேஹத்தை. க்ரியாபர்யந்தமாகவென்றது - "ஸொவெ்நயஜவஜ்ராவ" இத்யாதிப்படியேயெடுத்தணைக்கை. "செரு" என்றதுக்கர்த்தம் - இவ்வடிவழகை இத்யாதி. காத்தூட்டுகைக்காகவும் அஸ்யாநேபயுத்தங்கையாலும் யுத்தோர்முகமாயென்றபடி. காத்தூட்டுகையாவது - அநுபவிதாக்களுக்கு விரோதியைப்போக்கி யநுபவிப்பிக்கை. வாய்க்கரை - மேலெழவென்றும், வாயருகென்றுமர்த்தத்தயம். * ஒண்மைக்கர்த்தம் - கிட்டினாரை இத்யாதி. திவ்யாவயவங்களோடே திவ்யாயுதங்களை ஸஹபடித்ததெதுக்கென்ன - திவ்யாவயவத்தோபாதி இத்யாதி. திவ்யாவயவங்களை சிஹ்நமாகச்சொன்னவிடமுண்டோவென்ன - யாநிராஸ்ய இத்யாதி. "யாநிராஸ்ய விஹ்நாநி ருக்ஷணஸ்ய வயாநாரா। தாநிஹுயஸ்ரோவக்ஷநரோம ஸொக்ஸ்ரோவிஸெஜ" இதிஸீதயோக்தே; "யாநிராஸ்ய விஹ்நாநிருக்ஷணஸ்ய வயாநிவை। ஸுகிதாநிவிஸாலாக்ஷி வஷதஸ்ரணாதாநிஸெ" இதிஹநூமாந் ஸுந்தரகாண்டே "ராஜீகஸலவ தூராக்ஷீ" என்று ப்ரதிவசநமிருக்கையாலே, இங்கு, விஹ்நாநியென்றது-அவயவங்களை. 'திருந்தக்கண்டு' என்றதுக்கர்த்தத்வயம். முந்தினது ப்ரத்யக்ஷமாகக்கண்டென்று; அத்தையருளிச்செய்கிறார் - என்னைப்போலே இத்யாதி. வ்யக்தமாகக்கண்டென்றது - ப்ரத்யக்ஷமாகக்கண்டென்றபடி. அநுபவித்தென்னாதே, "கண்டு" என்றதுக்குபாவம் - இவ்விஷயத்தில் இத்யாதி. முற்பட்டதெங்கேயென்ன - வரிஷ்ஜ்ஜ இத்யாதி. "திருந்தக்கண்டு" என்றதுக்கர்த்தாந்தரம் - இந்தலையில் இத்யாதி. அதாவது - ப்ரத்யக்ஷத்திலுமென்னைக்கண்ட விழவெல்லாம் தீரும்படி, விஶ்லேஷவ்யஸந ரஹிதனாயிருக்கிறவனை நன்றாகக் கண்டென்றபடி. விவரணம்-ஸஜெகஇத்யாதி "ஸஜெகராவராவாயவிஷவெஸ்வரஜிஷ்

லாம் தீரும்படி, கலவியிலும் பிரிவிலு மொருபடியாயிருக்கும் வடிவைக்காண்கிறிகோளிறே. "ஸதைகரூபாய" (ஸதைகரூபாய) என்று உக்திமாத்ரமாய்ப்போகையன்றிக்கே, அத்தை யநுஷ்டாநபர்யந்தமாக்கிக்கொண்டிருக்கிற வடிவைக்காணுங்கோள்.

எட்டாம் பாட்டு

திருந்தக்கண்டெனக்கோன்றுரையாய் ஒண்சிறுபூவாய் !
செருந்திஞாழல்மகிழ் புன்னைசூழ்தண்திருவண்வண்டூர்
பெருந்தண்தாமரைக்கண் பெருநீண்முடிநாற்றடந்தோள்
கருந்திண்மாமுகில்போற் றிருமேனியடிகளையே.

ஆ.—(திருந்த) ஸ்வஸம்ஶ்லேஷ ஜநிதமான வழகு தானிருக்கும்படியைச் சொல்லுகிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், நானவனுடைய வழகுகளைக் கேட்டால் மறுத்தெனக்குச்சொல்லலாம்படி திருந்தக்கண்டு எனக்காக வொரு வார்த்தை சொல்லவேணுமென்று பூவையை நோக்கிச் சொல்லுகிறாள்.

[ஒண்சிறுபூவாய்]-அங்குப்போக விடுகைக்கீடான வடிவழகையும் வடிவில் லாவவத்தையு முடையையானபூவாய். [பெருந்தண்தாமரையென்று தொடங்கி] - பெருத்து குளிர்ந்திருந்துள்ள தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களையும் அவ்வூருக்கு ராஜாவாகைக்குத் தகுதியான திருவபிஷேகத்தையும், பெருத்தநாலு திருத்தோள்களையும், கறுத்து திண்ணிதான மஹாமேகம்போலேயிருக்கிற திருமேனியையுமுடையனாய் இவ்வடிவழகேயாயுள்ளே யொருநீர்மையின்றிக்கே முதலியாயிருக்கிறவனை.

ப.—அநந்தரம், ஆதிக்யஸூசகலக்ஷணங்களை யுடையவனைக் குறித்து ஒரு பூவையைப் போகவிடுகிறாள்.

ஒண்-உர்ஶநீயமாய், சிறு - "புலன்கொள்மான்" என்றவடிவுபோலே சிறும்பித் தநுபவிக்கலாம்படி சிறுகினவடிவையுடைய, பூவாய் - பூவாய்! செருந்திஞாழல் மகிழ் புன்னை - செருந்தி தொடக்கமான நாநாவித புஷ்ப வ்ருக்ஷங்களாலே, சூழ்-சூழப்பட்டு, தண்-ஶ்ரமஹரமான, திருவண்வண்டூர் - திருவண்வண்டூரில், பெரு - அதிவிசாலமாய், தண்-குளிர்ந்த, தாமரை-தாமரைபோலேயிருக்கிற, கண்-திருக்கண்களையும், (விஶ்வாயி ராஜ்ய ஸூசகமாய்,) பெரு-பெரிய, நீள்-வளர்த்தியையுடைய, முடி - திருவபிஷேகத்தையும், தடம்-சுற்றுடைத்தாய்ப்பணைத்த, நால் - நாலு, தோள்-திருத்தோள்களையும், கரு-ஶ்யாமளமான நிறத்தை யுடைத்தாய், திண்-காலாந்தரத்தே வேற்று நிறமாகை யன்றியே ஸ்த்திரமான, மாமுகில்போல் - மஹா மேகம்போலே யிருக்கும், திருமேனி -

---

வெ" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே. ஒண்கிளியே, செருவொண்பூம்பொழிலென்றுதொடங்கி, திருவண்வண்டூர் - ஒருவண்ணம்சென்றபுக்கு, கருவண்ணமித்யாரய்ய, திருந்தக்கண்டு - எனக்காக வொன்றுரையென்னுதல்; என்னிடையாட்டத்தைச் சொல்லுங்கோளென்னுதல். திருவண்வண்டூர் - திருவண்வண்டூரிலே. ஒருவண்ணம் - ஒருபடி. (எ)

acharya.org

திருமேனியையுமுடைய, அடிகளை - ஸர்வஸ்வாமியானவரை, (அவருடையநினைவை), திருந்த -திருந்த, கண்டு - கண்டு, எனக்கு - அவரஹிப்ராயம் அறியவாசைப்பட்டிருக்கிற வெனக்கு, ஒன்று - ஒருவார்த்தை, உரையாய் - சொல்லவேணும். ஞாழல் - பச்சைநிற மாயிருப்பதொரு லதாவிசேஷம். இத்தால் - வடகருடைய வடிவில்ஸுக்ரஹத்வமும், யயாதருஷ்டார்த்தவாதித்வமும் உத்தேஸ்யமென்று கருத்து.

இ.—எட்டாம்பாட்டில், ஒருபூவைநோக்கி, அந்தரங்கையான வெனக்கு வந்து சொல்லலாம்படிகண்டு ஒரு மறுமாற்றங்கேட்டுவந்து சொல்லாயென்கிறாள்.

[திருந்தக்கண்டு]-பிறர்க்குச் சொல்லலாம்படி விஶதமாகக் கண்டு. [எனக்கு]- நீவந்து சொல்லும் வார்த்தைகேட்டால் ப்ரிக்கவிருக்கிறவெனக்கு. ஒரு வார்த்தைகேட்டு வந்து சொல்லாய். [ஒண்சிறுபூவாய்] - அழகுக்குக்கிளியோடொத்து, வால்யமும் அத் தால்வந்த லாவவமுமிதுக்கேற்றம். போகவிடுகை மிகையென்னும்படி கண்டு கொண் டிருக்குமழகை யுடைத்தாய், தூதுபோகைக்கு கார்யகாலத்திலே வடிவைச்சிறுக்க வேண் டாதபடி. ஏற்கவே ஶ்ரமம்செய்திருக்கிற லாவவத்தையுமுடைத்தாகை. [செருந்தியித் யாதி] - அவனுடைய லோக்யதையேயன்றிக்கே ஶோகஸ்த்தாநமே யமைந்திருக்கை. ஶோக்தாக்களளவன்றிக்கே பெருத்து, ஶ்ரமஹரமாய்; விகாஸம், செவ்வி, குளிர்த்தி, இவற்றையுமுடைத்தான திருக்கண்கள். [பெருநீண்முடி] - நித்யஸித்தமான உஜ்ஜ்வலஶ்ரீ திக்கும் கவித்தமுடி. "திருவண்வண்டூர்க்கு நிர்வாஹகன்" என்றுசூடின முடியென்று மாம். "யஸ்ஸுஸ்ஸாஜநகாத்மஜா ஸுபுஜயோ ஹி தத்தேஜஶ" என்கிறபடியே பிராட்டி தன் னைத் தோற்பித்துச்சூடின முடியென்னுதல் [நாற்றடந்தோள்] - கல்பகதரு பணைத் தாற்போலே நாலாய் சுற்றுடைத்தான தோள். ஶ்ரமஹரமான நிறத்தையுடைத்தாய் ஸ்தி ரமாய் அபரிச்சின்னமான மேகம்போலே யிருக்கும் வடிவு. நிறமேயாய், அகவாய்திண்ணிய தாயிருக்கிறபடி யென்றுமாம். [அடிகளையே] - அவ்வடிவைக்கண்டால் "ஸர்வநிர்வாஹ கன்" என்று தோற்றி யிருக்கை. அகவாயில் நீர்மையின்றிக்கே முதலிகளாயிருக்கிற வரையென்றுமாம்.

ஈடு.—எட்டாம்பாட்டு. சில பூவைகளைக்குறித்து; மீண்டுவந்தெனக்குச் சொல் லலாம்படி வ்யக்தமாகக்கண்டு, ஒருமறுமாற்றம் கேட்டுவந்து சொல்லவேணுமென்கிறாள். காணவொண்ணாமைக்கு வேண்டும் ஹேதுக்களைச் சொல்லிவைத்துத் திரியவும், திருந்தக் காணுங்கோ ளென்கிறாளிறே.

[திருந்தக்கண்டு] - நான் சொன்ன வடையாளத்திலொன்றும் குறையாமற்காணுங் கோள், உங்களுக்கென்றுகாணாதே, பிறர்க்குச் சொல்லலாம்படிகாணுங்கோள். [எனக்கு]-

---

எட்டாம்பாட்டு.—திருந்த இத்யாதி. "திருந்தக்கண்டெனக்கொன்றுரையாயொண்சிறு பூவாய்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலபூவைகளை இத்யாதி. மறுமாற்றம் - ப்ரத்யுத்தரம். "திருந்தக்கண்டு" என்றதுக்குக் கீழிற்பாட்டிற்சொன்ன விரண்டுபொருளிங்கும்ஆகவொண்ணாதோ, அத்தைவிட்டு, (மீண்டுவந்தெனக்குச்சொல்லலாம்படி வ்யக்தமாகக்கண்டு) என்றுயோஜிக்கிறதுக்கு ஹேதுவேதென்ன - காணவொண்ணாமைக்கு இத்யாதி. காணவொண்ணாமைக்கு ஹேதுக்களாவன - "பெருந்தண்டாமரைக்கண்" இத்யாதிகள். 'காணவொண்ணாமைக்குவேண்டும் ஹேதுக்களை - திரிய வும் - சொல்லிவைத்து' என்றந்வயிப்பது. "பெருந்தண்டாமரைக்கண்" என்றுதொடங்கி, 'திருமேனி யடிகளை - திருந்தக்கண்டு' - என்றந்வயமாகையாலே 'திரியவும் - சொல்லிவைத்து' என்கிறார். காண் கிறதிலே திருத்தமேதென்ன - நான்சொன்ன இத்யாதி. ஒன்றும் குறையாமல் காண்கிறவிதுக்கு

acharya.org

இட்டீடுகோள்ளுகையிறே இவன்தனக்கு தாரகம். [முன்பு] - நீ செய்யுமவை யெல்லாம் மறைக்கப் போகாதுகாண். நீ அங்குச்செய்தவை எல்லாம் கண்டாயே நாங்கள் அறிந்தபடி; இப்படியே, நீ இங்குச் செய்யுமவையெல்லாம் அவர்கள் அறிவர்கள் காண். அவர்களுக்கு உன்னைப்போலே வேறு அந்யபரதை இல்லைகாண். உன்னைப் போலே நினையாதே கோள்ளாய் அவர்களை. உன்னைக் கலந்து பிரிந்தார் உன்னை ஸாக்ஷாத் கரித்தபடியே இருப்பர்கள்காண்; "பிரிந்தோன்றநோக்காது தம்முடைய பின்னே திரிந்துழலும் சிந்தனையார்" என்றிறே இருப்பது. அவர்களுக்கு வேறுவிஷயமில்லாமையாலே ஸர்வ காலத்துக்கும் ஸ்ம்ருதிவிஷயம் நீயேகாண். ஆனாலென்? உங்களுக்கு என்னோடொரு ஸம்பந்தமில்லைஆனபின்புஅத்தால்வருவதொன்றில்லையே?என்றான்: [நானதஞ்சுவன்]-உன்னைப் போல் அல்லோம்காண் நாங்கள். நீ இங்கே சிறிதுபோது கால்தாழ்த்துப் போனால், அவர்களுன்னை அரைக்ஷணம் முகம்மாறினால், நீ பொறுக்கமாட்டாமல் கிடந்து துடிக்கும்துடிப்பு நான் காணமாட்டேன்: கலந்துபிரியவல்லாயும் துடிப்பக்காணவல்லாயும் நீயேகாண்; பராநர்த்தங் கண்டால் பொறுக்கமாட்டோங்காண் நாங்கள். உன்னோடு உறவு இல்லையேயாகிலும் நீ படும் அலமாப்புக்கண்டால் பொறுக்கமாட்டோம்;சிலர் கிணற்றிலே விழுந்தால் ஒரு குரல் கூப்பிடும்போது உறவுவேணுமோ? அவர்கள் பக்கல் முகம்பெறாதே நிற்கும் தடுமாற்றத்தை 'ஆற்றேன்'என்கிறாள். அரைக்ஷணம் இத்தலையையோழிய ஜீவிக்கமாட்டாதே செல்லாமையையுடைய என்னைப்போய்யனுக்கிப் புறம்பாக்கி வார்த்தைசொல்லுவதே! என்றான்.

நீ செய்யுமவை இத்யாதி. "எங்களையவர்களாகநினை" என்ற வாக்யவிவரணம் - நீஅங்கு இத்யாதி வாக்யத்வயம். அவர்களுக்கு வேறுபாரக்கில்லையோ? என்ன - அவர்களுக்கு இத்யாதி. அந்யபரதை இல்லாமைக்கு ஹேது உன் வைலக்ஷண்யம் என்கிறார் - உன்னைக்கலந்து இத்யாதி. பகவதேக பரதைக்கு ப்ரமாணம் - பிரிந்தோன்று இத்யாதி. வேறொன்றைப்பாராதே தம்முடையபின்னே இடைவிடாமல் திரிந்து தடுமாறுகிற மநஸ்ஸை உடையவர்களென்றபடி. பெரியதிருவந்தாதி ஐம்பதாம் பாட்டு. நம்மைக்கலந்துபிரிந்தார் நம்மை ஸாக்ஷாத்கரித்தபடியே இருக்கிறதுஎத்தாலே? என்ன - அவர்களுக்கு வேறுவிஷயம் இத்யாதி. கீழில் பதத்தையும் அநுசரித்து, "நானதஞ்சுவன்" என்றதுக்கு அவதாரிகை - ஆனால் இத்யாதி. ஆனாலென்றது - அவர்களறிந்தாலென்றபடி. அத்தால் வருவது ஒன்றில்லையே என்றது - அவர்கள் முகம்பாராமையால் வரும் வ்யஸநம் உங்களுக்கில்லையே என்றபடி. இதுக்கு உத்தரமாக - நீ இங்கேசிறிதுபோது இத்யாதிவாக்யத்தைச்சொல்லிக் கொண்டு, அநந்தரம் உன்னைப்போலல்லோங்காண்நாங்கள் என்கிறவாக்யம் அநுஸந்திப்பது. துடிப்புக்காணமாட்டாமைக்குஅடி ஏதென்ன, - எங்கள் ப்ரக்ருதிஸ்வபாவம் என்கிறார்கள். உன்னைப்போலல்லோம் காண்நாங்கள் என்ற இத்தைவிவரிக்கிறாள் - கலந்து பிரியவல்லாயும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. துடிப்பென்றது - "அது" என்றத்தைப்பற்ற. கலந்து பிரியவல்லாயும் இத்யாதிவாக்யம் - "நானதஞ்சுவன்" என்றதுக்கு ப்ரதிகோடித்வேந ஹாவமாயிருக்கிறது. "ஆனாலென்? உங்களுக்கு என்னோடு ஒரு ஸம்பந்தமில்லையானபின்பு" என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம்ஏதாயிற்று என்ன - உன்னோடு உறவில்லையே இத்யாதி. இந்தவாக்யம், நீயிங்கேசிறிதுபோது இத்யாதிவாக்யத்துக்கு விவரணமாயிருக்கிறது. உறவில்லாத இடத்திலே தயை உதிக்குமோ? என்ன - சிலர்கிணற்றிலே இத்யாதி. "மின்னிடை" இத்யாதிக்கு - மின்போலே நுடங்குமிடையையும் ஆத்மகுணங்களையும் உடையராய், உன்னருளை ஸ்ரவணாவஹிக்கும்அவர்கள் ஸந்நிதியில் நீ பண்ணின வ்யாபாரம் அறிந்திருக்கிற நான், நீ இங்குப்பண்ணும் அதிக்ரமங்களை அவர்கள் அறிந்து நீ ஸஹிக்கலாம்படி உனக்கு முகங்கொடாதே வெறுப்பர் என்கிறத்தைப் பற்ற 'அஞ்சாநின்றேன்' என்று ஶப்தார்த்தம். "மன்னுடையிலங்கை" இத்யாதிக்குஅவதாரிகை - அரைக்ஷணம் இத்தலையை இத்யாதி. "மின்னிடைமடவார்" என்று - எங்களையவர்களாக ப்ரமித்தாய் என்கையாலே, பொய்யனுக்கி என்றது. "நின்னருள்சூடுவார்" என்கை

acharya.org

[மன்னுடையிலங்கையரண்காய்ந்தமாயவனே]-"என்தான்? நீ பொய்யனல்லையோ?" என்றாள். "நான் என்னோடு பரிமாறினால் இதுக்குமுன்பு ஆர்க்குப் பொய்செய்தேன்?" என்றான்; "நீதான் ஆர்க்கு மெய் செய்தாய்" என்றாள்; "என்தான், "உண்ணுதுறங்கா தோலிகடலையூடறுத்து" என்று, ஏக தாரவ்ரதனாய்க்கொண்டு நான் பட்டதெல்லாம் பொய்யோ?" என்றான். "அதுதான் நீ வேண்டிச்செய்தாயோ? ஒருதுறையிலே ஒருமெய் பரிமாறாவிடில், நமக்கு மேல் உள்ளதெல்லாம் ஒருதொகையில் அகப்படாதென்று செய்தாயத்தனையன்றோ? அபலைகளை அகப்படுத்திக்கொள்ள இட்டவழியன்றோ?" [மன்னுடையிலங்கையரண்காய்ந்த] - நிலமிதிதா னெதிரிகள் மண்ணுண்ணும்படியாய், அதுக்கு மேலே "ஞாஂராவணவாலிதாழி" (லங்காம்ராவணபாலிதாம்) என்றுகொண்டு, ஸிம்ஹங்கிடந்த முழஞ்சுபோலே பையலுணர்ந்து நோக்குகிற ஊரையழியச்செய்த. [மன்னுடை] - மன்னனையுடைய. [மாயவன்]-க்ருத்ரிம வ்யாபாரத்தைஉடையவன். "அழகிது: ஒருமெய்யுமுண்டாகச்சொன்னாயே; அத்தைஇங்கே செய்தேனானாலோ? மேலுள்ளதும் எல்லாமாகைக்காக" என்றான். [உன்னுடைய சுண்டாயம் நானறிவன்]-அது உனக்குச் செய்யலாவது செவ்வேபரிமாறும் அவர்களோடுகாண்; நீசெய்கிறவையெல்லாம் பண்டே எனக்கு ஜ்ஞாதங்காண்; நீ செய்கிறவையெல்லாம் "மெய்" என்றிருப்பாள் ஸ்ரீஜநகராஜன் திருமகள்காண்; உன்னுடைய க்ருத்ரிமலீலைகளெல்லாம் நானறிவன். சுண்டாயம்-ஸ்வார்த்தபரத்வம். "அறிந்தேன், அறியாவிடிலேன்? ப்ரவ்ருத்தமாயிற்றே" என்றான்: [இனியதுகொண்டுசெய்வதென்]-"ஸாத்யமாயிற்றுஅதிறே" என்றான்: "சாத்யாம்ஶத்துக்குஒருப்ரயோஜநம் கண்டிலோமீ" என்றாள். † (அதாவது - நானறிந்த பின்பு உன்க்ருத்ரிமத்தை முன்னிட்டு என்பக்கல் ப்ரயோஜநமில்லையென்கை. அவனும் ஒன்றைநினைத்து, "ஆகில் எனக்கு ஸாத்யாம்ஶம்தான் இல்லையோ?" என்றான்; †(என்றவநந்தரத்தே கைப்பட்ட பந்தையும் கழலையும்கொண்டுபோகப்புக்கான்) [என்னுடையபந்துங்கழலும்]-கைப்பட்ட பந்தையும் கழலையும் போரவிரும்பப் புக்கான். "பாவியேன், நீ எங்கே செய்யக்கடவத்தை எங்கேசெய்கிறாய்? அவை நீ நினைக்கிறவர்களதன்று காண்: அவைஎன்னது காண்" என்றாள். "அதுதான், மெய்யே" என்றான்: இவன் விருப்பத்துக்கு அதுதானேயிறே

யாலே, புறம்பாக்கி என்றது. "மாயவன்" என்றது - சரம உத்ப்யபிப்ராயத்தாலே யாகையாலே, தத்பூர்வபாவியான உக்திகளை அருளிச்செய்கிறார் - "என்தான்? நீ பொய்யன்" இத்யாதி. அபலைகளை இத்யாதி வாக்யம் - சரம உத்ப்யபிப்ராயமான "மாயவன்" என்கிறதுக்குத் தாத்பர்யம். தொகை - ஸங்க்யை. ஶப்தார்த்தம் - நிலமிதி இத்யாதி. நிலமிதி - நிலத்தின் ஸ்வபாவம். வீரக்ஷேத்ரம் என்றபடி. முழஞ்சு - புதர். "உன்னுடையசுண்டாயம்" என்றதுக்கு அவதாரிகை - அழகிது இத்யாதி. ஆனால், நீ எப்படிக்கொத்தவன் என்ன - நீ செய்கிறவை இத்யாதி. செவ்வே பரிமாறும் அவர்கள் ஆர்? என்ன - நீசெய்கிறவை இத்யாதி. ஶப்தார்த்தம் - உன்னுடைய இத்யாதி. ப்ரவ்ருத்தமாயிற்றே என்றது - ஆலோகாலாபாதிகள் ப்ரவ்ருத்தமாயிற்றே என்றபடி. ஏதத்விவரணம் - ஸாத்யமாயிற்று அதிறே என்றான் என்றது. இதுக்கு அநந்தரம், இனி அதுகொண்டுசெய்வதென்? என்றது அநுஸந்தேயம். ஒருப்ரயோஜநங்கண்டிலோமீ என்றது - ஸம்பாஷணாதிகளாற் பெற்ற ப்ரயோஜநம் ஒன்றுங் கண்டிலோமீ என்றபடி. அதாவது - ஸம்ஶ்லேஷம்வாராதென்றபடி. ஒன்றை நினைத்தென்றது - கைப்பட்ட பந்தையும் கழலையும் நினைத்தென்றபடி. கைப்பட்டபந்தையும் இத்யாதி வாக்யாநந்தரே - என்னுடையபந்துங்கழலும் என்றது அநுஸந்தேயம். மெய்யேயென்றது - மெய்யோவென்றபடி. மெய்யானாலென்? என்ன - இவன்விருப்பத்துக்கு இத்யாதி. அதெப்

---

† குண்டலிக்ரந்தத்வயம் க்வாசித்கம்.

acharya.org

வேண்டுவது; "யஸ்யைதே தஸ்யதத்தநம்" (யஸ்யைதே தஸ்யதத்தநம்) என்று மற்றையது அநந்தரத்தே வருமிறே.†(அதாவது-ஸ்வரூபஜ்ஞாநமுடைய உன்னுடைய மமகாரவிஷயம் அடங்கலும் என்னதன்றோ என்று போகத்தோடங்கினான்.)இனிப்ரவேசத்திலே,"முடியப்பார்க்கிறாள்"என்று சொல்லிற்று ஒன்றுண்டே: அது - இப்பதத்திலே தோற்றுகிறது. அவன் ஸந்நிதியிலே"என்னது"என்று சொல்லுகைக்கு மேற்பட்ட முடிவில்லை இறே;*"உபக்ஷரஸ்ஸுஹவெந்நாத்ரீ"(த்வ்யக்ஷரஸ்துபவேந்மருத்யு:)இறே."சாகோ:வாணவாரஸ்வ" (மாமகாபாண்டவாஶ்சைவ)- என்கிறவிடத்துக்குச் சிறியாத்தான் சொல்லும்படி-"என்னுடையவர்களென்றும் பாண்டவர்களென்றும் பிரித்தான், அது இறே விநாசபர்யந்தம் ஆக்கிவிட்டது" என்று. இதுதான் தத்த்வகதையேஅன்று,ப்ரணயகோஷ்டியிலும்; கலவியிலேவந்தால் "உன்னது, என்னது" என்கையிறே உறவறுகையாவது. [என்னுடைய பந்துங்கழலும்] - "ஆத்மைதைவதுருஹீயாத்" (ஆத்மேத்யேவதுக்ருஹ்ணீயாத்) என்கிறபடியே ஒன்றையொன்று உபாசியாநிற்கச்செய்தே, தன்னை உபாசித்ததென்று சொல்லலாம்படியிறே இரண்டுவஸ்துவுக்கும் ப்ரத்யாஸத்தி இருந்தபடி. ஸ்வரூபம் விசதமானால்,"நான்"என்னவுமாய்"அடியேன்"என்னவுமாய்க்காணும் இருப்பது. [தந்துபோகு நம்பீ] - நீ இங்கே கால்தாழாநின்றாய்:இதுக்கொரு தாத்பர்யம் அறியாதே உன்னையுபேக்ஷிக்கத் தொடங்குவர்கள்:அதுக்குமுன்னே போ. [நம்பீ]-முகப்பழக்கமும் இன்றிக்கேஇருந்தது; முதலியாருமாயிரா நின்றீர்: கடகப்போகப் பாரும். "கண்டகாட்சி புல்லெழுந்துபோனபடி

படி என்ன.- யஸ்யைதே இத்யாதி. "ஆயஸவாய நாராஜநுஹாரூரூஹாஸ்ஸயாஸுதா: । யதேஹஸ்யிமஹுஹி யஸ்யைதே தஸ்ய தஸ்ய நம்" இத் யுத்யோகபர்வணி த்ருதராஷ்ட்ரம் ப்ரதிவிதுரா:. யஸ்யைதே இத்யாதிவாக்யத்துக்கு - இவர்கள் அவனுடையவர்கள், ஆனால் இவர்களது அவனுடையதாமிறே என்று கருத்து. மற்றையது என்றது - ஸேஷபூதனுடைமை ஸேஷியதாகை என்றபடி. அதுதான்மெய்யே இத்யாதி வாக்யத்ரயமும் - "தந்துபோகு" என்றதுக்கு அவதாரிகை. இப்பதத்திலே என்றது - "என்னுடைய" என்றபதத்திலே என்றபடி. அதெப்படி என்ன - அவன் ஸந்நிதி இத்யாதி. "என்னது" என்றால், முடிவாம்படி எங்ஙனே? என்ன; அஹங்கார மமகாரங்கள் விநாசகரமென்று ஶாஸ்த்ரஞ்சொல்லுகையாலே என்கிறார் - உபக்ஷரஸ்ஸு இத்யாதி "உபக்ஷரஸ்ஸுஹவெந்நாத்ரீ ஹ்ருதக்ஷரம் வ்ரஹணஃவஷ்டி । ஶேகிஉபக்ஷரொஷ்ரீ நாஶேகிஉஶாஸ்வதி" இதி பகவச்சாஸ்த்ரே. அஹங்கார மமகாரங்கள் விநாசகரமென்னுமதுக்கு ஸம்வாதம் - சாகோ இத்யாதி. "யஶுக்ஷெத்ரு கூரூக்ஷெத்ரு ஸஶவெகாயாயாதவ: । சாகோ: வாணவாரஸ்வ கிகூவுத வஸ்ஜய" இதி பகவத்கீதாஸு ப்ரதமே. இதுதான் ஸ்வாபதேஶத்தில் அன்றிக்கே அந்யாபதேஶத்திலும் விநாசகரமென்கிறார் - இதுதான் தத்த்வ இத்யாதி. தத்த்வகதையிலே "என்னது" என்கை-உறவறுகையானால், உறவறுதற்காரணம் எதென்ன?—ஆத்மைதைவ இத்யாதி. அதாவது - சேதநன் ஈசுவரனை உபாசியாநிற்கச்செய்தே தன்னையே உபாசித்தது என்னலாம்படியன்றோ ஶரீரஶரீரி஭ாவத்தால் வந்த ப்ரத்யாஸத்தி இருக்கிறபடி; இப்படிஶரீரபூதனாய் அவன் அபிமாநத்திலே அந்தர்ப்பூதனாயிருக்கை உறவறுமையாவது என்றபடி. ஆத்மைதைவ தருஹீயாத்வபுஷ்ட தனிஷ்டதெ:" இதி வாக்யகாரவசநம். ஆனாலும், அவன் அபிமாநத்திலே அந்தர்ப்பூதனாயிருக்கும் ஆகாரம்தோற்றவது - அடியேன் என்றாலன்றோ? என்ன- ஸ்வரூபம் இத்யாதி. "போகு" என்றத்துக்கு ஭ாவம் - நீ இங்கே இத்யாதி. "நம்பீ" என்றத்தால் பலிதமான தாத்பர்யம் - முகப்பழக்கம் இத்யாதி. முன்பு முகப்பழக்கமில்லையோ? என்ன - கண்டகாட்சி இத்யாதி. பெரியமுதலியார் - ஆள

acharya.org

யிறே இவள் இங்ஙன் சொல்லுகிறது '' என்று பெரியமுதலியார்வார்த்தை. என்னுடைய பந்துங்கழலும் என்றவிடம் - அவன்போகடுகைக்குச் சொன்னவார்த்தை. தந்துபோகு என்ற விடம் - அவன்விரும்பினவையொழியத் தனக்குச்செல்லாது என்னுமிடந் தோற்றுகிறது. [நம்பீ] - "ஷொடஶஸ்ரீஸஹஸ்ராணி" (ஷோடஶஸ்ரீஸஹஸ்ராணி) என்று உமக்குப் போனவிடம்எங்கும் கொண்டாட்டத்தால் குறையில்லை, எங்களுக்கு உம்மைக் கிடையாது; இனி உம்முடைய கரஸ்பர்ஶம் உண்டாய்ப் போகட்டவை கொண்டாகிலும் எங்களுக்கு ஜீவித்துக் கிடக்கவேணும்; ஆனபின்பு அவற்றை எங்களுக்குத் தந்துபோம். "உயிரைவைத்துப்போம்" என்பாரைப் போலே. இவன் இவை கைவிட்டுப் போகமாட்டான் என்று அறிந்து, மர்மஜ்ஞை ஆகையாலே 'தந்துபோ' என்கிறாள்.

இரண்டாம் பாட்டு.

போகு†நம்பீ! உன்தாமரைபுரைகண்ணினையும் சேவ்வாய்முறுவலும்
ஆகுலங்கள்செய்ய அழிதற்கேநோற்றோமேயாம்?
தோகைமாமயிலார்கள் நின்னருள்சூடுவார் சேவியோசைவைத்தெழ
ஆகள்போகவிட்டுக் குழலூதுபோயிருந்தே.

ஆ.—(போகுநம்பீ) - இப்படி எம்பெருமானை உத்திஶ்ய தான் சொன்ன வார்த்தைகளாகிற அம்ருதவர்ஷத்தாலே அவன் உஜ்ஜீவித்து கிரதிஶயப்ரீதியுக்தனுமாய், புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவளத்தையும் உடையனுமாயிருந்த விடத்தில், இதுவெல்லாம் அவர்களாகக் கருதி இவனுக்கு வந்ததாகக்கொண்டு, 'இவ்வழகை ஆசைப்பட்டுப்பெறாதே அவஸந்நைகளாய் மாயப்பிறந்தவர்கள்காண் நாங்கள்; இவ்வழகைக்கண்டு வாழப்பிறந்தவர்கள் அல்லோம்; தோகை மாமயிலார்கள் நின்னருள் சூடுவார்; நீயும் அங்கேபோய் அவர்களோடேகலந்து பரிமாறு' என்று இவள்சொல்ல,

---

ப்ர.—ஶ்ரீ விஷ்ணுராணெ வஜுஹேஂஶெ வகுதிஂஶெஜ்யாயெ, "வகுகஷ்ரிஜுவமொவிஜுஃ கூரெதாஸாஂஶஹாஶுநெ। ஜகுராஹவியிவ்வாணீநு வ்யுஶ்ரெஹெஷுயஶுகஃ ॥ கஎ ॥ ஷொடஶஸ்ரீஸஹஸ்ராணி ஶதஶேகம் ததொயிகுழ। தாவகிவக்ரெஶுவாணி ஹமவாஜுவகீஷுதஃ ॥ கஅ ॥

வந்தார். "என்னுடைய பந்தும் கழலும் தந்துபோகு" என்கிறவளுடைய ஹார்த்தஹாவம்— என்னுடைய பந்தும் இத்யாதி. விவரணம் - ஷொடஶ இத்யாதி. "ஷொடஶஸ்ரீஸஹஸ்ராணி ஶதஶேகம்ததொயிகுழ। தாவகிவக்ரெஶுவாணி ஹமவாநு ஜெவகீஷுதஃ" இதி பஞ்சமேஶே. "தந்துபோகு" என்றதுக்கு - ஸ்வ ஸத்தை தரிக்கைக்காகத் தந்துபோ என்கிறாளென்று கீழ் அருளிச்செய்து, அவன் போகாமைக்காகச் சொல்லுகிறாள் என்று ஹாவார்த்தம் - உயிரைவைத்து இத்யாதி. மன்னுடையிலங்கை - ராஜாவையுடைய லங்கை. மன் - ராஜா. சண்டாயம் - க்ருத்ரிமமும், லீலையும், ஸ்வார்த்தப்ரவ்ருத்தியும். கழல் - கழற்கோடி. (க)

---

† 'நம்பி' என்றும் பாடமுண்டு.

acharya.org

பின்னையும் அவனெழுந்தருளாதே நின்றவாறே, 'போனால், அவர்களைச் சந்திக்கைக்கு உபாயம் அறியாமே நிற்கிறாயோ? ஆகில், நல்லதோர் உபாயமுண்டு; அது என்னென்னில்? பசுக்களைக் கழியப்போகவிட்டு அவற்றை அழைக்கிறாயாய்* ஆய்ச்சியர்க்கேஊதும் அத்தீங்குழலைப் போயிருந்து ஊது' என்றுசொல்லுகிறாள்.

ஓ.—[போகுநம்பீ] - இப்பிராட்டி "போகுநம்பீ" என்று முதல் சொன்ன வார்த்தையைக்கேட்டு, அவனும் "போவோம்" என்று சிறிது கிட்டவர, "உறவு உடையாரைப்போலே எங்களைத்தீண்டாதே கடக்கநில்லும்" என்ன, தன்னைக்கிட்டவேண்டா என்றுஇவள்நிஷேதித்த நிஷேயவசனத்தைக்கேட்டு,கமர்பிளந்தவிடத்திலேஒருபாட்டம் மழைவிழுந்தாற்போலே இவனுக்குத் திருக்கண்களிலும் திருப்பவளத்திலும் பிறந்த புதுக்கணிப்பைக்கண்டு அவர்கள் ஈடுபட, அத்தைக்கண்டு"ஈடுபடா நின்றுவைத்து, என்னோடு உறவில்லை என்கிறபடி எங்ஙனே?" என்றுஅவன் அருளிச்செய்ய, "நாங்கள் உன் அழகைக்கண்டால்ஈடுபட்டுஸம்ஶ்லேஷிக்கும்உறவைஉடையவர்களல்லோம்;உன்னழகைக் கண்டு ஈடுபட்டு ஶிதிலைகளாய்ப்போகப் பிறந்தோமித்தனை" என்று பராங்முகிகளாய் நிற்க, எம்பெருமானும் "நீங்கள்ஆரானாலாகிறீர்; இதொரு மயிர்முடியிருந்தபடியென்?" என்ன, "போலியைக்கண்டு ப்ரமிக்கும்படி உன்னை இப்படிப் பிச்சேற்றும் மயிர்முடியை உடையராய் உனக்கு ஸத்ருசைகளாயிருக்கும் அவர்களோடேபோய் ஸம்ஶ்லேஷி"என்ன, "அவர்களைச் சந்திக்கவல்ல விரகுபெறுந்தனையும் இங்ஙனே யிருக்கிறோம்" என்ன, "நீ உனக்கு அஸிமதைகளாயிருக்கிறவர்களை விஶ்லேஷித்து நோவுபட்டிராதே அவர்களோடே ஸம்ஶ்லேஷிக்கைக்கு உபாயஞ்சொல்லக்கேளாய்; 'அதென்?' என்னில், குழலை ஊதி அக்குழலோசைவழியே அவர்களையடைய மெய்க்காட்டுக்கொண்டு அவர்களோடே ஸம்ஶ்லேஷி" என்ன, அவனும், "பெண்களையொழிக்கைக்குக் குழலூதுகிறான்' என்பர்;அது ஈடன்று" என்ன, "நீ மேய்க்கிற பசுக்களைக்கடக்கவிட்டு அவற்றை அழைக்கிறாயாகப் பெண்களெல்லாம்வந்துதிரளுகைக்குநீர்வாய்ப்பான நிலங்களிலேபோய் இருந்து குழலூதி அவ்வழியாலே அவர்களையழைத்து அவர்களோடே ஸம்ஶ்லேஷி" என்கிறாள்.

ப.—அநந்தரம், இவள், போகச்சொன்னவிடத்திலும் போகாதே இவளைப் பார்த்து மந்தஸ்மிதம் பண்ணினஅதிலே ஶிதிலசித்தையாய்; எங்களைநலியாதே, உன்னஸிமதைகள் இருந்த பரிஸரத்திலேபோய் அவர்கள்வருகைக்கு ஈடாக இருந்து குழலை ஊதென்கிறாள்.

நம்பீ - (எங்களையொழியக் குறைவாளன் அன்றியே) பூர்ணனான நீ, போகு - ("போ" என்றுசொல்லப்போகாதிருக்கிறதென்? எங்கள் அருகினின்றும்)போ: உன்- இங்கேநின்று எங்களைப் பார்ப்பது முறுவலிப்பது ஆகிற உன்னுடைய, தாமரைபுரை - தாமரைபோலே ஔஜ்ஜ்வலியமான, கண்ணிணையும் - கண்களும், செம் - சிவந்த, வாய்- வாயிலே பரக்கிற, முறுவலும் - முறுவலும்(கண்டு உகக்கும்படி பாக்யம்பண்ணினவர்கள் அன்றியே), யாம் - நாங்கள் (நின்றநிலையைக்குலைத்து), ஆகுலங்கள் - அலமாப்புக்களை, செய்ய - பண்ண, அழிதற்கு - அழிந்துவிடுகைக்கு, நோற்றோமே - நோற்றே வைத்தவர்கள் அல்லோமோ, (உங்களை அழிக்கைக்கோ? நான்வந்தது, உங்கள் மயிர்முடிகண்டு உகந்தேன்அத்தனையன்றோவென்னில்;-அவர்கள் நாங்கள்அல்லோங்காண்), தோகை-தோகைவிரித்த,மா-நல்ல,மயிலார்கள் - மயில்போலேஅலைந்த குழலைஉடையவர்கள், நின்-உன்னுடைய, அருள்-அருளை, சூடுவார் - சூடுமவர்களல்லவோ, (அவர்கள் அஸந்நிஹிதைக

acharya.org

ளன்றோ? என்னில்; - அவர்கள்), ஓசை - த்வநி, செவிவைத்து - கேட்டு, எழ-எழுந்திருந்துவரும்படியாக, (" அவர்களைக்குறித்துஊதுகிறான்" என்று நாட்டுக்குத்தெரியாதபடி), ஆகள்-பசுக்களை, போகவிட்டு-தூரத்திலேபோகவிட்டு, (அழைப்பாரைப்போலே), போய்-அங்கேபோய், இருந்து - இருந்து, குழல்-குழலை, ஊது-ஊது. "அதுவுமிங்கேயாகாதோ" என்றிராதேகொள்ளென்று கருத்து.

இ.—இரண்டாம்பாட்டில், "தந்துபோகு நம்பீ!" என்றாள்; அவனும் 'போவோம்'என்று கிட்டவரநின்றான்;ப்ரணயபாரையில் வ்யவஹாரமும் ப்ரதிபத்தியும் வ்யுத்பத்திவேளையிற்போலன்றிறே இயலறியும் அவனுகையாலே, "'வார்த்தை சொல்லோம்' என்றிருந்தவள் வார்த்தைசொல்லக்கடவளாய் 'போ' என்றாளாகில், இனிச்செய்வதென்?" என்று வர நின்றான். [போகுநம்பீ] - என்கிறாள். நீர் பரபரப்பாய் முதலிகளாயிருப்புதிர்; உறவு உடையாரைப்போலே தீண்டாதேபோம், எத்தனைபேரைத் தீண்டினீரென்று அறியோம்: எங்கள்மேல் புடைவைபடாமே போம்; முற்பட "போகுநம்பீ" என்றவாறே வரநின்றான்; பின்பு "போகுநம்பீ" என்றவாறே தொட்டான். [உன் தாமரைபுரை கண்ணிணையும் செவ்வாய்முறுவலும்] - இவளுடைய அம்ருதோபமமான நிஷேதவசனம் கேட்டவாறே, ஒரு நீர்ச்சாவியிலே ஒருபாட்டம் மழைவிழுந்தாற்போலே அவயவங்கள் விக்ருதமாயிற்றின. "ஸஹோ தாவஸுஷுஹு" என்றுகிட்ட உபேக்ஷிக்கக்கிடையாத ஸம்ஸாரத்திலே இவ்வளவு அவகாஹித்து ப்ரணயரோஷத்தாலே "போ" என்பாரைப்பெற்றால் விக்ருதனுகச் சொல்லவேணுமோ? [தாமரைபுரை கண்ணிணையும்] - விகாஸம், செவ்வி, குளிர்த்தி, பரிமளம் இவற்றை உடைத்தாகை. [செவ்வாய்முறுவலும்] - ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு அயரத்தில் பழுப்பெறித்துத் தோற்ற ஸ்மிதம்பண்ணி நின்றநிலை. [ஆகுலங்கள்செய்ய வழிதற்கே நோற்றோமேயாம்]- இவளுடையநிஷேதவசனத்தாலேஅவனுக்குப்பிறந்தவிகாரம்இவர்களுக்கு ஈடுபடுகைக்கு உறுப்பாயிற்று. அவனுக்கு ஒன்றிரண்டு அவயவமாயிற்று விக்ருதமாயிற்று: இவர்களுக்கு ஸர்வாவயவங்களும் ஶிதிலமாயிற்று; அணு அழிக்குமாபோலன்றிறே விஷ அழிக்குமது. "போகுநம்பீ" என்று உறவற்ற வார்த்தைக்கும், "அழிதற்கே நோற்றோமேயாம்" என்கிறவிதுக்கும் ஒருசேர்த்தி இல்லையே! என்ன, [நோற்றோமேயாம்] - "உன்னழகைக்கண்டு ஈடுபட்டு ஸம்ஶ்லேஷிக்கும்உறவுஉடையவர்கள் அல்லோம் நாங்கள்: இங்கனே அழிந்து போம்படி பாபத்தைப்பண்ணினார் சிலர்காண்!பிரிவு கலவிக்குஉறுப்பாமவர்களன்று: ஆற்றாமையோடே முடிந்துபோவார் சிலர்காண்! "ஈதோவவிஶ்வாதெந ஈவிவ-ஶ்வெஷாஸுஹ்ருதா" என்னுமவர்களல்லோம்; "ஷ்வகுதம்ஹ்ரு-வஹ-ஜ்ருதெ" என்று முடிந்து போமவர்கள்" என்று தாங்களழிந்தபடி நேராக அவனறியாதபடி முகத்தைத் திரியவைத்து நின்றார்கள். அதுதான் அவன் பாக்யமலமாயிற்று; பெருக்காற்றை எதிர்செறிப்பாரைப்போலே கண்ணுங்கண்ணீரும் பேணாதவடிவும் கண்டால் இவன் ஆற்றமாட்டானே; "கியேபூ-தவதெ தூஹ்யாழி" என்று-கண்டார்க்கு ஆற்றவொண்ணாதவிருப்பை இவன்தானே கண்டால் பாடாற்றவல்லனோ? [தோகைமாமயிலார்கள்] - "இதொருமயிர்முடி இருக்கும்படியே!" என்றான்; நீ போலி கண்டு ப்ரமிக்கும்படி மயிர்முடி உடையார்ஆரோ? "அங்கனே சிலருண்டோ?" என்ன, [நின்னருள்சூடுவார்] - உன்னோடே ஸம்ஶ்லேஷித்துப் பிரிவிலே இப்படி பிச்சேறும்படி பண்ணினவர்கள். "அவர்களைப் பிரிந்து நோவுபடாதே அவர்களோடே ஸம்ஶ்லேஷி"

acharya.org

என்ன, "அவர்களைக்கிட்டுமளவும் இங்ஙனே இருக்கிறேன்" என்று திகைத்திருந்தான்; "அவர்களோடேகிட்டும் விரகென்?" என்றிருக்கிறாயாகில், அவர்களைக்கிட்டும் விரகு சொல்லுகிறேன், கேள்" என்ன, "அதெது?" என்ன-[செவியோசை வைத்தெழுகுழலூது] - "எங்களுக்கே ஒருநாள்வந்து ஊத உன்குழல் இன்னிசை போதராதே' என்று குழல்ஊதுகை என்ன, "பெண்களோட்டைக் கலவி என்ன - பர்யாயம், அது ஈடன்று" என்ன, அதுக்கு உபாயம் சொல்லுகிறோம்:- [ஆகள்போகவிட்டுக்குழல்ஊது]- பசுக்களைக் கைகழியவிட்டுக் குழல் ஊது. கண்டார்க்குப்பசுமறிக்கக் குழல்ஊதுகிறாயாய், அதுக்கு ஸ்வாபதேஶம் - பெண்களை அழைக்கையாக ஊது. "செவியோசை வைத்தெழுகை ஫லமாய், குழல்ஊதுகை உபாயமாயிருந்தது; அதுதான் அஸிமதவிஷயத்தைப்பற்றவன்றோ செய்வது; இங்கே இருந்து ஊதுகிறேன்" என்று குழலைவாங்கி ஊதினான். [போயிருந்தே - குழலூது] - ஒன்றைச்சொல்ல ஒன்றைச்செய்கிறதென்? உனக்கு அஸிமதைகள் திரளுகைக்கு நீர்வாய்ப்பான நிலங்களிலேபோயிருந்து ஊதாய்.

ஈடு ...இரண்டாம்பாட்டு. நோக்குப் பெறுதவன் முகம் பார்க்கப் பெற்றான்; வார்த்தை கேட்கப் பெறுதவன் 'போ' என்னவும் பெற்றான்; இனி இதுக்கு மேற்படக்ருதார்த்தனாகை இல்லையிறே. "போ என்றால் அவ்வார்த்தையே யன்றிறே இவன் புத்தி பணணுவது; அதில் அகவாயில் ஓடுகிறதும் அறியும் அவனிறே". "இன்னம் என் கையகத்தீங்கு ஒருநாள் வருதியேல் என்சினம் தீர்வனனே" என்று இதுதை உய்ந்தபிள்ளை பாடாநிற்கச்செய்தே, காலாலே உதைப்பது கையாலே தள்ளுவதாய் அபிநயித்துக்காட்டினார்; இத்தை எம்பார் கேட்டருளி, "அங்ஙனன்று: அதுபின்னைப் பெற்றானாகில் அவன் நெடுநாள் ப்ரார்த்தித்துக் கிடந்ததன்றோ; ஆனபின்பு, அதன்று பொருள்" என்று முகத்தைத் திரியவைத்துக் காட்டினார். "நீயகலநின்று பண்ணினவை எல்லாம் உன்ஸந்நிதியிலே உன்னைப் பண்ணுவேன் என்கிறாள்" என்று அருளிச் செய்தார். எம்பார் தாம் பாஹ்யவிஷயங்களில் ருசி இல்லாமையாலே பதார்த்தஜ்ஞாநம் இன்றிக்கே இருப்பர்: இப்படி இருக்கையாலே "ஸ்த்ரீகளுக்குஅஸாதாரணமான சிஹ்நங்களெங்ஙனேயிருக்கும்படி?' என்றுசிங்கப்பிரானைக்

இரண்டாம்பாட்டு - போகுநம்பீ இத்யாதி. இவர்களாலே திரஸ்க்ருதனாயிருக்க, "தாமரை புரைகண்ணினையும் செவ்வாய்முறுவலும்" என்று ப்ரீதியால்வந்த நேத்ரவிகாஸமும் மந்தஸ்மிதமும் உண்டாகக் கூடுமோ? என்ன - நோக்குப்பெறுதவன் இத்யாத. ஆனாலும் "போகு" என்று தள்ளாநிற்க, க்ருதார்த்தனாகக்கூடுமோ? என்ன - போஎன்றால் இத்யாதி - திரஸ்காரமே க்ருதார்த்தனாகைக்கு ஹேது என்னுமதுக்கு ஸம்வாதம் - இன்னமென்கையகத்து இத்யாதி. அன்றிக்கே, நோக்குப் பெறுவிடில் அக்ருதார்த்தனாய் இருக்குமென்னுமதுக்கு ஸம்வாதமாதல். இன்னமென்கையகத்து இத்யாதிக்கு - நீ நியத ஸ்வாமியல்லாமையாலே என்கையிலேயும் ஒருநாளகப்படக் கூடுமிறே. ஆனபின்பு இன்னமென்கையிலே இங்கொருநாள் வந்தகப்பட்டாயாகில் என் கோபம் தீருவன் நான் என்று ஸப்தார்த்தம். பெருமாள்திருமொழி, ஆறாந்திருமொழி, எட்டாம்பாட்டு, "என்னைவருக" இத்யாதி. 'அதுபின்னைப்பெற்றானாகில்' என்றவிடத்திலே - "ஸாலுகூகெநநவவலுவகொரெவெந வாரெநநூவ-ஈரவதாஷுரலுஸெந! யஸ்ராயுதெஷுயிதயா வுணயாவராயா தொஷீகூ ஸ்ரூதொஹமவதாகூரயுஜெந" என்கிற ஸ்லோகம் அநுஸந்தேயம். கீழ்வாக்யத்துக்கு ஹாவம் - நீஅகலநின்று இத்யாதி. எம்பார்க்கு இவ்வர்த்தம் அறியக்கூடாதென்கைக்காக அவருடைய இதர விஷயவைராக்யத்தை அருளிச்செய்கிறார் - எம்பார்தாம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. இப்படி விரக்தராயிருக்கிறவர், ஸ்ருங்காரவிதக்தரிலுங்காட்டில் இத்திருவாய்மொழியில் ப்ரௌடராய் அரு

acharya.org

கேட்டருளினர்'' என்று ப்ரஸித்தமாயிருக்கும்; இப்படி இருக்கிறவர்தாம் * மின்னிடை மடவார் அருளிச்செய்யப்புக்கால், ''இந்த ஸந்யாஸி பிரட்டுப்பாடத்தோடங்கினர்'' என்ப ராம்பிள்ளையுறங்காவில்லிதாசர். இவருடைய பகவத்விஷயத்தில்அவகாஹநம்இருக்கும்படி! ஒரு க்ஷுத்ரவிஷயத்திலேநாலுநாள் வாசனை பண்ணினர்கள் போரவிதத்தராய் இராநின்றர் கள், அவ்வளவு அல்லவிறே ஸமஸ்தகல்யாணகுணத்மகனேடே நெடுநாள் வாசனை பண் ணினர்க்கு இருக்கும்படி. எம்பார் ''(ஈஶ்வரன் முன்னேவந்துநின்றாலும்) 'வா' என்பாரை யும் கிடையாத ஸம்ஸாரத்திலே, (அவனல்பம்தாழ்த்தானேன்ன) 'போ' என்பாரைப்பேறுவ தே!'' என்பர்.

[போகுநம்பீ] - '' 'போகுநம்பீ '' என்று முன்பே சொல்லச்செய்தே, திரியவும் சொல்லும்போது ஒன்று இரண்டடி வரவிட்டுக் கிட்ட நின்றனகவேணுமிறே. வா ரீர்! எத்தனைபேரைத் தீண்டிவந்தீரென்று தெரியாது; புடைவைபடாமே கடக்கநில்லும் என் றள். ''போ'' என்ன வரநிற்கக்கடவன், ''தீண்டாதேகொள்ளும்'' என்றால் என்படுமோ? [நம்பீ] - எளியார் செய்வதை நீர் செய்யக்கடவீரோ? நீர் நிரபேக்ஷரன்றோ? [நம்பீ] - எங் கள்பக்கலில் இப்படி கால்தாழ்க்க நீரேதேனும் குறைவாளரோ ? நாங்கள் வேண்டியிருந்த தோ உமக்கு?. ''உயிரினற் குறைவிலம்'' என்று ஏறாளுமிறையோனிலே, தம்மை அழிக் கப்பார்த்தார்; அது அவனுண்டாகையாலே அழிந்ததில்லை; * மாசறுசோதியிலே - அதுக் கடியான அவன்தன்னை அழிக்கப்பார்த்தார்; இங்கு - அவன்வரக்கொள்ள, ''போ'' என்ன நின்றர்; இதுக்கடி என்னென்று அறிகிறிலோம். இவர்கள் இப்படி [நம்பீ] என்று சொல்லி இருக்கையாவது - இக்கோஷ்டிக்கு அநர்ஹனகையிறே தாழ்ச்சியே மேன்மையாம் இடத் தில் முதன்மை கொண்டாடுகை போராதே. [உன்தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய் முறுவலும்] - காணப்பெறாதே விடாய்த்து உறாவின கண்களும், கண்டு செவ்விபெற்றுக் குளிர்ந்தன; அகவாயில் ஹர்ஷத்துக்குப் போக்காக ஸ்மிதம் பண்ணவும் பெற்றன். இவர்

ளிச்செய்யும் வார்த்தைகளுக்கு ஹேது அருளிச்செய்கைக்கு உபோத்காதம் - இப்படியிருக்கிறவர் தாம் இத்யாதி. இதுக்கு ஹேதுவருளிச்செய்கிறர் - இவருடைய இத்யாதி. அவகாஹித்தால் தெரி யுமோ ? என்ன - ஒருக்ஷுத்ர இத்யாதி. ஆழ்வார் ப்ரணயரோஷத்தாலே ஊடி ''போகு'' என் கிற இத்தை அநுஸந்தித்த எம்பாருடைய ஈடுபாடு - எம்பார் வாவென்பாரையும் இத்யாதி.

முதல் ''போகுநம்பீ'' என்றவாறே வந்தான்: அவனைமீளவும் ''போகுநம்பீ'' என்றுசொல்லு கிறதுக்கு ஹாவம் - வாரீர் இத்யாதி. என்படுமோவென்றது - தீண்டிவிடுமென்றபடி. '' நம்பீ '' என்றதுக்கு - பூர்ணரென்றர்த்தம் அருளிச்செய்கிறர் - எளியார் இத்யாதிவாக்யத்வயத்தாலே ; எளி யார் - சப்பரர். * மின்னிடைமடவாரால் பூர்ணரென்றர்த்தாந்தரமாதல், கீழ்வாக்யவிவரணமாதல் - எங்கள்பக்கலில் இத்யாதி. இவர் ப்ராவண்யாதிஶயம் என்னென்று வ்யாக்யாதாவின் ஈடுபாடு - உயிரினல் இத்யாதி. இதுக்கடி என்னென்றறிகிறிலோம் என்றது - நெடுநாள்பட விஶ்லேஷிக்கை யாலே ப்ரணயரோஷம் தலைமண்டையிட்டுச் சொல்லுகிற வார்த்தையன்றோ? என்றபடி. ''கடியன் கொடியன்'' என்றாற்போலே சொல்லாதே, ''நம்பீ'' என்கிற இது - கொண்டாட்டமாயிருக்க, உற வறச்சொல்லுகிற வார்த்தையோ? என்ன - இவர்கள்இப்படி இத்யாதி. இதுக்கு உபபத்தி - தாழ்ச் சியே இத்யாதி. விஶ்லேஷவேளையிலே இவன் கண் விகஸிதமாகைக்கு ஹேத்வந்தரம் - காணப் பெறாதே இத்யாதி. முந்தினஹேது - அவர்களுடைய நோக்குப் பெறாமையாலே உறாவிக்கிடந்தவன் அவர்கள் தன் முகம்பார்க்கப் பெறுகையாலே ஸந்தோஷித்தான் என்று; இத்தை அருளிச்செய்தார் - அவதாரிகையிலே. இவர்கள் ப்ரஸந்நராகாதேயிருக்க, ஹர்ஷம் பிறக்கும்படி என் ? என்ன - இவர்

acharya.org

கள் நிஷேதவசனமாகிற அம்ருதபாநத்தாலே அவனுக்குப்பிறந்த வேறுபாடு இருக்கிறபடி. "வா" என்பாரையும்கூடக் கிடையாத ஸம்ஸாரத்திலே "போ" என்பாரைக்கிடையாதிறே. ஒருப்ரயோஜநத்துக்காகவும் தன்னைவேண்டுவோர் இன்றிக்கே இருக்கிறவிடத்தே, தன்னையே ப்ரயோஜநமாகப்பற்றி இப்படிப் படுவாரைக் கிடையாதிறே. [ஆகுலங்கள்செய்ய] - ஆகுலம்-பூசலும், வருத்தமும், துக்கமும். ஹேது இரண்டாயிருக்கச்செய்தே, ஸர்வகரணங்களும் அழியாநின்றது. அவனுக்கு ஒன்றிரண்டாயிற்று விக்ருதமாயிற்று; இவர்களுக்கு ஸர்வாவயவங்களும்விக்ருதமாயிற்று. அணுஅழிக்குமாபோலன்றிறேவிலுமஅழிப்பது. "வாரிகோள்! உங்களுக்கென்னோடு ஒன்றில்லை என்னாநின்றிகோள்: ஹாவவந்யம் உடையாரைப்போலே வார்த்தை சொல்லாநின்றிகோள்: வ்யாஹதமாயிருந்ததீ! 'போகுநம்பீ' என்னாநின்றிகோள்: 'ஆகுலங்கள்செய்ய' என்னாநின்றிகோள்: இதுக்கடியேன்?" என்றான். "வாராய்!நாங்கள்தாம் ஹாவபந்தமுண்டாய்ச் செய்கிறோம் என்றிருக்கிறாயோ?சந்த்ரஷர்ஶநத்தில் சந்த்ரகாந்தம்உருகுகிறதுஎன்னஹாவபந்தமுண்டாய்? "ஸவஶ்யஸ்ஸநுஹொகுவ்ரம்" (அவஶ்யமநுபோக்தவ்யம்) என்கிற விதியைத்தப்பவொண்ணுமோ?" [அழிதற்கேநோற்றோமேயாம்]-எங்களுக்கிது ப்ரக்ருதிகாண். இளைய பெருமாள் காடேறப் போகாத அன்றன்றோ எங்களால் அழியா திருக்கலாவது? "ஸ்ரஷ்டுஸ்வம் வநவாஸாய" * (ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய) இறே. நோன்பாகிறது - பூர்வஜந்மத்தில் உள்ளதிறே. இவர்கள் இப்படி சொன்னவாறே, "அவ்வழிவு ஸம்ஶ்லேஷார்த்தமிறே" என்று பார்த்து, அவன், "நம் ஶர்ஶநத்திலே இத்தனை வேறுபாடு உண்டான பின்பு மேலுள்ளதெல்லாம் செய்துகொள்ளிகோளோ!" என்றான்; அதுவோ உன்நினைவு! நாங்கள் அவர்களல்லோம் காண்! நாங்கள் இங்ஙனே அழிந்தேபோக நோற்றோம் காண்!

ப்ர.—கயொஷ்யாகாணோ[சம்] "ஸ்ரஷ்டுஸ்வம் வநவாஸாயஸ்ஸ நுஹ்ரகுஹ்ஹ ஹ்ரஜெந । ராமேவ்ரோஷம்ரோகாஷீஸ்வ ஸ்ரூ ஹ்ரதரிஹ்ஹ்ரகி॥"

கள்நிஷேத இத்யாதி. வேறுபாடு - விக்ருதி. ஸிம்ஹாவலோகந்யாயேந "போகுநம்பீ" என்றதைக்கடாக்ஷித்து ஹாவம் - வாவென்பாரையும் இத்யாதி. அதவா, நிஷேதவசநத்தாலே விகாரம் வரக்கூடுமோ? என்ன - வாவென்பாரையும் இத்யாதி என்னுதல். விவரணம் - ஒருப்பயோஜநத்துக்கு இத்யாதி. "ஆகுலங்கள்" என்கிற பஹுவசநநிர்த்தேசம் - ஹேதுவிரண்டாய்இத்யாதி. ஹேது இரண்டு என்றது - எண்ணும் செவ்வாயும். ஆகுலம் - விகாரம். விவரணம் - அவனுக்கு இத்யாதி. இதுக்குஹேதுவேதென்ன - அணு இத்யாதி. மேலெல்லாம்கடாக்ஷித்து மேலுக்கு ஸங்கதி - வாரிகோள் இத்யாதி. கீழுத்தத்தை விசதீகரிக்கிறார் - போகுநம்பீ இத்யாதி. "அழிதற்கே" என்றதிலே நோக்காக ப்ரத்யுத்தரம் - வாராய் இத்யாதி. பாவபந்தமின்றிக்கே ஒழிய உருகக் கூடுமோ வென்ன, கூடுமென்னுமதுக்கு த்ருஷ்டாந்தம் - சந்த்ரகாந்தத்தில் இத்யாதி. ஆனால் இது வருவானென்? என்ன - அவஶ்யம் இத்யாதி. "ஸவஶ்யஸ்ஸநுஹொகுவ்ரம் ஸ்ரூகம்கஸ்ரூ ஹாஶுஹ்ரு । நாஹுகுஹ்ஹ்ரகீயதெகுஸ்ரூ கொஷிஶெதெரவி" "அழிதற்கேநோற்றோமே" என்கிற அவதாரணத்துக்கு அர்த்தம் - எங்களுக்கிது ப்ரக்ருதிகாண் என்று. இதுக்கு த்ருஷ்டாந்தம் - இளையபெருமாள் இத்யாதி. அவர் காடேறப்போனதுக்கு ப்ரமாணம் - ஸ்ரஷ்டஸ்த்வம் இத்யாதி. "ஸவஶ்யஸ்ஸநுஹொகுவ்ரம்" என்கிறவாக்யவிவரணம் - நோன்பாகிறது இத்யாதி. "அழிதற்கே" என்கிற அவதாரணத்திலே நோக்காக சங்கித்து பரிஹரிக்கிறார் - இவர்கள்இப்படி இத்யாதி. மேலுள்ளதெல்லாம் இத்யாதிக்கு ஸமாதாநம் - கரண ஸாதிக்ய ஜநக கர்மந் தானே

acharya.org

[யாம்] - உன்னைப்பிரிந்தால் கலக்கைக்கு நோற்றார் வேறேசிலர் காணேன்கிறாள். நெடும் போது இவர்கள்பேச்சுக்கேட்கையால் உண்டான ஹர்ஷந்தோற்றப் பார்த்துக்கொடு நின்றான்: "நம் ஊர்ஸநம் இவனுக்குஆஶ்வாஸஹேதுவாய் இருந்தது" என்று, முகத்தைமாறிப் பின்னோக்கி இருந்தாள்; அவ்வளவில் அவன் நெஞ்சிலே மயிர்பாடு உண்டாயிற்று. [தோகைமாமயிலார்கள்]- "நம்வைவர்ண்யமும் கண்ணீரும் இவன் காண்பானல்லன்: தைவயோகத்தால் காணுமவற்றை நம்மால் செய்யலாவதில்லை யிறே" என்னுத் திரிய இருந்தாள்; அதுதானே இவனுக்குக் கார்யமாயிற்று. † (பெருக்காற்றை எதிர்செறிப்பாரைப் போலே, கண்ணுங்கண்ணீரும், பேணுதவடிவுங்கண்டால் அவன் ஆற்றமாட்டானே.) முறவலுக்கும் கண்ணுக்கும் இலக்காய் அழிந்து போகாதே, திரியவிருந்ததும் நின்றுஅநுபவிக்கைக்குஉடலாயிற்று. " நங்கார்யம் தலையாகப்போயிற்று " என்று இருக்கிறானிறே அவன். "ஊரூஹ்யாஶுரம்ஹாஶ்வாஹுஹ்யாங்வயொயாள" (ஊருப்யாமுதரம்சாத்யபாஹுப்யாஞ்சயோதரேள) என்றுகொண்டு 'அவனுடைமை ஆசுரப்ரக்ருதிகள் காணவொண்ணாது' என்று மறைக்கக் கடவ அவள், "இவன்தான்காணவொண்ணாது" என்று மறைக்கும்படி காணும், ப்ரணயகோபம் தலைமண்டை இட்டபடி. [தோகைமாமயிலார்கள்] - "நீலநாமாலயாவெண்ணா" (நீலநாகாபயாவேண்யா) என்று, பேணுத குழலிருக்கிற

ப்ர.—[தோகைமாமயிலார்கள்]—ஸுஹ்ருகாணோ[கசு]"தகொஹ்ருவ்வெ வவெவெஹீராவணம் ராக்ஷஸாயிவழ் ஹ்ரவெவ தவராரொஹாவ்வாதெகுடிஸீ யயா॥உ॥ ஊரூஹ்யாஶுரம்ஹாஶ்வாஹுஹ்யாஹவயொயாளஉவவிஷ்டா விஶாலாக்ஷீராஜீவராவணிபுநீ ॥ ங ॥ ஶ்ரீவத்ஸவெவெஹீம் ரக்ஷிதாம் ராக்ஷஸீமவெணோ। ஶுஶுபீநாம் ஶுவாதபூம் நாவம்ஸஹாதிவாணபுவெ ॥ ச ॥

ஸம்ஶ்லேஷத்தை உண்டாக்காதோ? என்ற. "யாம்" என்றதுக்கு வ்யாவர்த்யம் - உன்னைப்பிரிந்தால் இத்யாதி. முகம்மாற வைத்ததுக்கு இரண்டு ஹேது - "தாமரைபுரைகண்ணினையும் செவ்வாய்முறவலும்" என்றத்தைக்கடாக்ஷித்து முந்தினது - நம்தர்ஶநம் இத்யாதி. மயிர்பாடு - மயிரின் வைலக்ஷண்யம். "ஆகுலங்கள்செய்யவழிதற்கே நோற்றோமேயாம்" என்றத்தைக் கடாக்ஷித்து, பின்னோக்கியிருந்ததுக்கு த்விதீயஹேது - நம் வைவர்ண்யமும் இத்யாதி. பின்னோக்கியிருந்தாலும் ஹோக்யமான மயிர்முடி காண்பனே என்ன - தைவயோகத்தால் இத்யாதி. திரியவிருந்தான் - திரும்பி யிருந்தாள். கார்யமானபடியைக் காட்டுகிறார் - முறவலுக்கும் இத்யாதி. அதாவது - இவனுடைய முறவலுக்கும் கண்ணுக்கும் இலக்காய் இவன் அழியாதே தரித்துநின்ற மயிர்முடியை அநுபவிக்கைக்கு உடலாயிற்று என்னுதல். "ஆகுலங்கள் "என்ற விக்ருதியிலே இவர்களுக்கும் கண்ணநீரும் முறவலும் உண்டென்று வித்தம். ரஸோக்தி - நங்கார்யம் இத்யாதி. இவர்கள் அவனுக்கு ஹோக்யமான அவயவங்களை மறைக்கலாமோ? என்ன - ஊரூஹ்யாழ் இத்யாதி. அன்றிக்கே, வ்யாக்யாதாவின் ஈடுபாடாதல். ஊரூஹ்யாஶுரஹ்ருஹ்யாஶ்வாஹுஹ்யாஹ்வயொயாள । உவவிஷ்டாவிஶாலாக்ஷீராஜீவராவணிபுநீ" இதி ஸுந்தரகாண்டே. "நீலநாமாலயாவெண்ணா ஜவநம்மதயெகயா। நீலயாநீரஷாவாயெவநராஜ்யா ஶஹீவ" இதி ஸுந்தரகாண்டே. 'ஆனார் ஆகிடுக'என்றது - ஸ்நேஹிகளாகவுமாம், தத் ரஹிதராகவுமாமென்னுதல்; முன்னோக்கியிருந்தாலுமாம், பின்னோக்கியிருந்தாலுமாம், நமக்கு அதுகொண்டு

acharya.org

படியைக் கண்டான்; "நீங்கள்முன்னமானாராகிடுக: இதோருமயிர்முடி இருந்தபடி என்தான்!" என்றான். இவள்தான் ஓதிநல்லளாயிருக்குமே; இவன் கூழை ஆகையாலே கொண்டாடுமே.* குழல் கூழை ஓதி இறே.†(குழலென்றும் கூழையென்றும்,ஓதியென்றும் மயிர்முடி இறே.) எங்கள் மயிர்முடியைக்கண்டு தந்தாம் மயிர்முடிஎன்று ப்ரமிக்கும்படிபண்ணுவதே அவர்கள் சிலர்! அபிமதவிஷயத்தைப் பிரிந்தால் கண்டதெல்லாம் அதுவாய்த்தோற்றுமிறே என்றார்கள். தோகைவிரித்த நல்லமயில்போலே அலைந்தகுழலை உடையவர்கள். "அங்ஙனே சிலருண்டோ?" என்றான். [நின்னருள்சூடுவார்] - உன்னோடு ஸம்ஶ்லேஷித்துப் பிரிவிலே இப்படிப் பிச்சேறும்படிப் பண்ணினவர்கள். அவர்களைப்பிரிந்து நோவுபடாதே அவர்களோடே ஸம்ஶ்லேஷி. "ஆனாலதுக்கென்? அவர்களைப்பெறுகைக்கு ஒருவிரகு பெறுந்தனையும் நான் இங்ஙனே சற்றுப்போது இருந்துபோகிறேன்" என்றான்; உனக்கு இங்ஙன் விரகற்றுப் போகவேண்டுமோ? நீ கைகண்டத்தை ப்ரயோகி;"அதேது?" என்ன [சேவியோசைவைத் தெழக் குழலூது] - "எங்களுக்கே ஒருநாள் வந்துஊத உன்குழலின்னிசைபோதராதே" என்று இருக்குமவர்கள்; நீகுழலூதினால் அதுசென்று சேவிப்படும்: அந்தரத்தே வருவர்கள் காண். ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் வந்துவிழுமாபோலே, நீ குழலூதவே பெண்களடங்கலும் உன்காற்கீழேவந்துவிழுங்காண்! "குழலோசைகேட்பதுஎப்போது?" என்று சேவிகோடுத்துக்காண்அவர்களிருப்பது; உன்னைப்பிரிந்தார் ஸர்வகரணங்களும் உன்மேலே வைத்திருப்பார்கள்காண். "தூவலம்புரியுடையதிருமால் தூயவாயில் குழலோசைவழியே கோவலர்சிறுமியர் இளங்கொங்கை குதுகுலிப்ப உடலுள்அவிழ்ந்தெங்கும் காவலும்கடந்து

கார்யமில்லை என்றுதல். அவனிப்படி கொண்டாடுகைக்கு அடி - இவள் குழலில் வைலக்ஷண்யம் என்னுமர்த்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - இவள்தான் இத்யாதி. ஓதிஎன்று - குழலும், அத்யடகமும். இப்படி விலக்ஷணையான இவளுடைய வைலக்ஷண்யத்தை நன்றாக அறியும் அவனுகையாலே கொண்டாடினான் என்னுமர்த்தை ரஸோக்தியாகக் காட்டுகிறார் - இவள்கூழை இத்யாதி. கூழைஎன்று - மயிரில் வைலக்ஷண்யம் அறிந்தவனும், சபலனும். இஶ்ஶப்தத்வயமும் - கேஶவாசி என்கிறதுக்கு நிகண்டு - 'குழல்கூழையோதியிறே' என்று. அவர்கள் வைலக்ஷண்யத்தால் அன்றிக்கே, இவன் ப்ராவண்யத்தாலும் ப்ரமிக்கிறான் என்று ஹேத்வந்தரம் - அபிமத இத்யாதி. தோகையுடைத்தாய் ஸ்லாக்யமான மயில்போலேஇருக்கிற அலகபாரத்தை உடையவர்களென்று ஸப்தார்த்தம். தோகை - பிஞ்சம். கீழ்வாக்யத்துக்கு பலிதம் - அவர்களைப்பிரிந்து இத்யாதி. கைகண்டது - அநுபூதமானது. கையிலேயிருந்த குழலென்று சாடு. நான்குழலூதினால், அந்யபரைகளானவர்களுக்கு இது செவிப்படுமோ? என்ன - எங்களுக்கே இத்யாதி. இதுக்கர்த்தம் - நீ ஸர்வஸாதாரணனான பின்பு உன்குழலும் ஸர்வஸாதாரணமாயிருக்க. எங்களுக்கே ஒரோவிடங்களிலே ஒருநாள் நாங்கள் கேட்க வந்துதவேணுமென்றால் நீ பூதிலும் இசை புறப்படாதபடி ஆயிற்று குழலின் ஸ்வபாவம் என்று. விவரணம் - ஸர்ப்பயாகத்தில் இத்யாதி. ஸர்ப்பயாகம்பண்ணினவன் - ஜநமேஜயன். "எங்களுக்கேயொருநாள்" இத்யாதிவாக்ய விவரணம். குழலோசைகேட்பது இத்யாதி. அதுக்கடி - அவர்களுக்கு உன்விஷயத்தில் உண்டான ப்ராவண்யம் என்கிறார்கள் - உன்னைப்பிரிந்தார் இத்யாதி. குழலோசையிலே ஈடுபட்டு அவர்கள் வருவர் என்றதுக்கு ப்ரமாணம் - தூவலம்புரி இத்யாதி. 'தூவலம்புரிஉடைய திருமால்'-நினைவறிந்து கார்யம்செய்யவல்ல சுத்தியையுடைத்தான வலம்புரியையுடைய ஸர்வஸ்வாமியானவனுடைய. 'தூயவாயில்குழலோசைவழியே' - தன் உக்தி விசேஷங்களாலே அநுகூலரை வாழப்பண்ணும் சுத்தியையுடைய திருப்பவளத்திலே வைத்தூதுகிற திருக்குழலோசை வழியே. 'கோவலர்சிறுமியர்'-கோ ரக்ஷணத்தில் ஸமர்த்தரானவர்களுடைய சிறுப்பெண்கள். 'இளங்கொங்கை குதுகுலிப்ப'-பரிணதமான முலைகளானவை தங்களைப் பிற்பாடராக்கி "நாங்கள் முன்னே போகிறோம்" என்று கௌதூஹலம்பண்ண. 'உடலுள்ளவிழ்ந்து'-ஸரீரமும் மநஸ்ஸும் கட்டுக்குலைந்து.

acharya.org

கயிறுமாலையாகிவந்து கவிழ்ந்துநின்றனர்'' என்று நீ குழலூதப்புக்கால் நிற்பாருண்டோ? உன் காற்கீழேவந்து விழுவர்காண்! அத்தைச்செய் என்றாள். ''அதேனக்கொரு விரகன்று; 'கோங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழல்இனிதூதிவந்தாய்' என்று ஒத்த தரத்தில் பெண்களுந்தானும் கலக்கைக்காக அவர்களை அழைத்துக் குழலூதாநின்றான் என்பர்கள்; நான் குழலூதுகை பெண்களையழைக்கையென்று ப்ரசித்தம்; அதேனக்கீடன்று'' என்றான்; ஆகில் உனக்கொரு நல்விரகுசொல்லக்கேள்: [ஆகள்போகவிட்டு] - பசுக்களைக்கைகழிய விடுவது, அநந்தரத்தே குழலையூதுவதா? ''அறியாதார் பசுக்களை மறிக்கவூதினானென்றிருப்பர்கள்; அதறிந்துபோரும் பெண்கள் உன்பக்கலிலே வந்துகிட்டுவர்கள். இதுதான் உனக்கு ஜாத்யுசிதவ்ருத்தியுமிறே. * தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததுமிறே. ஆனபின்பு அத்தைச்செய்'' என்றாள். ''அநுஷ்ட்டேயமான உபாயஸ்வரூபம் இருக்கும்படி அறிந்தோம்: அநுஷ்ட்டாநப்ரகாரத்துக்குஈடான உபதேசம்பெற்றோம்; இனி உபேயாம்ஶத்தில் கைப்படாதது இல்லை; இனி நமக்கொருகுறையில்லை'' என்றுபார்த்து, அவ்விடந்தன்னிலே இருந்து ஊதப்புக்கான். இனித்தான் வித்யதிக்ரமம் பண்ணும்அவனன்றே; ''தோகைமாமயிலார்கள் - செவியோசைவைத்தெழ'' என்றிறே இவர்கள்சொல்லிற்று; ''இன்ன விடத்தே'' என்றுசொல்லிற்றிலர்களே! இங்கே இருந்துஊதத்தொடங்கினான். ''அதுவோ பார்த்தபடி; நீ துடியாமைக்குஒருவிரகுசொன்னோமாகில் அத்தை இங்கே கொள்ளப் பார்த்தாயோ?''[குழலூதுபோயிருந்தே] - உனக்குப் பெண்கள் படும் வாய்ப்புள்ள இடங்களிலேபோயிருந்துஊதப் பாராய்! [தோகைமாமயிலார்கள்]-இவன் ஓதி யுணர்ந்தவனுகையாலே கொண்டாடத் தொடங்கினான்; ''இவன் ஓதியுணராமலிறே நங்குழலை இப்படிக் கொண்டாடுகிறது'' என்று, ''இது ப்ராமகவாக்யம்'' என்று அவர்கள் அந்யதாகரிக்கிறார்கள். தலையானபேச்சையிறே இவர்கள் அந்யதாகரிக்கிறது. [செவியோசைவைத்தெழ] - குழலோசையைச் செவியிலே வைத்துக்கொண்டுவர. [ஆகள் போகவிட்டுக் குழலூது] -

---

எங்கும்காவலும்கடந்து-எங்குமுண்டான காவல்களை யெல்லாம் கடந்து. கயிறுமாலையாகி வந்து - கயிற்றிலே ஒழுங்குபடச் சேர்த்த மாலைகள்போலே நிரைநிரையாகவந்து. கவிழ்ந்துநின்றனர் - இவனைக் கண்டவாறே லஜ்ஜித்துக் கவிழ்ந்தலையிட்டுநின்றார்களென்கை. பெரியாழ்வார்திருமொழி, மூன்றும் பத்து, ஆறாந்திருமொழி, முதற்பாட்டு, ''காவலம்'' இத்யாதி. ப்ரக்ருதோப ஸம்ஹாரம்-நீ குழலூத இத்யாதி. ''ஆகள்போகவிட்டு'' என்றதுக்கு அவதாரிகை - அதேனக்கு இத்யாதி. ''குழல் இனிதூதி - கொங்குநறுங்குழலார்களோடு குழைந்து - வந்தாய்'' என்றந்வயம். இனிதாகக்குழலூதி, பரிமளத்தையும் அழகையுமுடைய குழலையுடையவர்களோடே ஒருநீராகக் கலந்துவந்தாய் இத்யர்த்தம். கொங்கு - பரிமளம். நறு - அழகு. பெருமாள்திருமொழி, ஆறாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு, ''மங்கலகல்'' இத்யாதி. இதுக்குஹாவம் - ஒத்ததாந்தில் இத்யாதி. இதுக்காகப் பசுக்களை மேய்த்துக் கொண்டு திரியவோ? என்ன - இதுதானுனக்கு இத்யாதி. ஜாத்யுசிதவ்ருத்தியென்னுமதுக்குப் ரமாணம் - தீங்குழல் இத்யாதி. 'அநுஷ்ட்டேயமான'என்றுதொடங்கி, 'இங்கே கொள்ளப் பார்த்தாயோ' என்னுமளவும் - ''போயிருந்து'' என்றதுக்கு அவதாரிகை. உபாயஸ்வரூபம் - குழலூதுகை. அநுஷ்ட்டானப்ரகாரம் - ஆகள்போகவிடுகை. அநுஷ்ட்டாநம் - உபாயத்தைச்செய்கை. இவர்கள்சொன்ன மாத்ரத்திலே ஊதவேணுமோ என்ன - இனித்தான் வித்யதிக்ரமம் இத்யாதி. வாய்ப்பு - வித்தி. புகுஸ்ச, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எழுந்தருள அவருக்காகவாதல், ரஸோக்திக்காகவாதல் பதோபாதாநம் - தோகைமாமயிலார்கள் இத்யாதி. ஓதியுணர்ந்தவன் - மயிரில்வைலக்ஷண்யம் அறிந்தவன், அயீர்ய ஜ்ஞாநவான் என்றும்; ஓதியுணராமல் - எங்கள்குழலென்று அறியாமலென்றும், அத்யயநம்பண்ணி அறியாமலென்றும் அர்த்தத்வயம். ப்ராமகவாக்யம் என்றது - ப்ராந்தவாக்யம் என்றபடி. தலையான என்றது - சாடு; ஸ்லாக்யமான என்றும், தலைவிஷயமான என்றும். குழலூதினால், பசுக்கள் மேய்கை

acharya.org

பசுக்களைப்போகவிட்டுக்குழலூது. ஊதவே, உன்நினைவும் முடிந்து பசுக்களின் வயிறும் நிறையும். "சேவியோசை வைத்தெழுகை ஸுலமாய், குழலூதுகை உபாயமா யிருந்தது; அதுதான் அஹிமதவிஷயத்தைப்பற்றியன்றோ செய்வது; இங்கே இருந்துஊதுகிறேன்" என்று குழலைவாங்கி ஊதினான். [போயிருந்தே - குழலூது] - ஒன்றைச் சொல்ல, ஒன்றைச்செய்யாதே; உனக்கஹிமதைகள் திரளுகைக்கு நீர்வாய்ப்புள்ள நிலங்களிலே போயிருந்துஊதாய். (உ)

மூன்றும் பாட்டு.

போயிருந்துநின்புள்ளுவம் அறியாதவர்க்குஉரைநம்பீ! நின்செய்ய
வாயிருங்கனியுங்கண்களும் விபரீதம்இந்நாள்
வேயிருந்தடந்தோளினர் இத்திருவருள்பெறுவார்யவர்கோல்?
மாயிருங்கடலைக்கடைந்த பெருமானுலே.

ஆ.—(போயிருந்து.)—இப்படிஇவன், மேன்மேலன இவளுடைய அம்ருதோபமமான வார்த்தைகளைக் கேட்டதினாலே வந்த நிரவயிகப்ரீதியாலே அத்யத்புத நிரவயிக ஸௌந்தர்யமயமான திருப்பவளத்தையும் திருக்கண்களையுமுடையனாய்க் கொண்டு விநீதனாய் அருளிச்செய்ய;

இவற்றையெல்லாம் உன்னுடைய க்ருத்ரிமம் அறியாதார்க்குப் போயிருந்து சொல்லென்று அவனை உபாலம்பித்துவைத்து; உன்னுடைய திருக்கண்களினுடையவும் திருப்பவளத்தினுடையவும் அழகுஇருந்தபடியென்? கண்டுங்கேட்டும் அறியாததொருபடியான இவ்வழகு, திருப்பாற்கடலிலே அம்ருத மயந ஸமயத்திலே அவதீர்ணையாய் அம்ருத ஶீகராலங்க்ருதையாய் ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமிதோதார குணபரிபூர்ணையாய் ஸர்வ திவ்யபூஷண பூஷிதையாய் ஸர்வேஶ்வரேஶ்வரியான பெரியபிராட்டியோடு அன்றுகலந்த கலவியாலும் பிறந்ததில்லை; இப்படி பெரிய பிராட்டியிற்காட்டிலும் உனக்கபிமதைகளாய் உன்னை புஜிக்கப்பிறந்தவர்க ளாரோ? என்கிறாள்.

ஒ.—[போயிருந்து] - "'குழலூது போய்' என்று என்னைச் சொல்லுவானென்? நான் ஜாத்யுசிதமான வ்ருத்தியாகையாலே குழல் ஊதுகிறேனித்தனைபோக்கி, வேறு சிலரை அழைக்கைக்காகவோ குழல் ஊதுவது? நான் உன்னையல்லது அறிவனோ?" என்று அருளிச்செய்ய; "உன்னுடையபொய் அறியும் எங்கள்பக்கல் விலை செல்லாது. உன்பொய்யில் புதியதுஉண்டறியாத அபூர்வைகள் கோஷ்டியிலேபோய் இருந்து சொல்லு" என்று பிராட்டி உபாலம்பிக்க, தன்னைக்குறித்து இவள் மேன்மேலனசொல்லுகிற அம்ருதோபமமான வார்த்தைகளைக் கேட்டதினாலே பிறந்த நிரவயிக

தவிர்ந்து வருமிறே; வந்தால் அவற்றுக்குப் பட்டினி யாகாதோ என்ன-ஊதவே உன் நினைவும் இத்யாதி. உன்னினைவு முடிந்தென்றது - உன்னினைவுதலைக்கட்டி என்றபடி. நினைவுதலைக்கட்டுகை யாவது - அஹிமதைகளான பெண்களும்வருகை. "அநுஷ்ட்டேயமான" இத்யாதி வாக்யவிவரணம். சேவியோசை வைத்தெழுகை இத்யாதி. (உ)

acharya.org

ஹர்ஷப்ரகர்ஷத்தாலே அத்யாஶ்சர்யமாம்படி திருக்கண்களிலும் திருப்பவளத்திலும் பிறந்த அழகைக்கண்டு, "எங்களை யாராகக் கருதி இப்படி ஹருஷ்டனாகிறாய்?" என்ன, "நீங்கள் ஆரானால் ஆகிறீர்; இது ஒருதோளழகு இருந்தபடி என்?" என்ன, அல்பஸாத்ருஶ்யத்தைக்கண்டு இவன் இப்படி ப்ரமிக்கும்படியான தோளழகு உடையராய் அம்ருதமயாந ஸமயத்தில் பெரிய பிராட்டியாரோடு ஸம்ஶ்லேஷித்தபோதும் பிறவாத பௌஷ்கல்யத்தை இவனுக்குப் பிறப்பித்து இப்படி இவனுக்கு ஸ்ப்ருஹணீயதமைகளாய் இருக்கிறவர்கள் ஆரோ? என்கிறாள். அம்ருத மயநத்தில் தன்கையில் கடல்பட்டத்தை இவன்தன்னைப் படுத்தினவர்கள் ஆரோ? என்றுமாம்.

ப.—அநந்தரம், "போயிருந்து - குழலாது" என்றவாறே புகுரவிருந்து சில உபச்சந்தநவாக்யங்களைச் சொல்லி, போகச்சொல்லுகிறபோதை ஹஸ்தசேஷ்டையைக்கொண்டாட; அஶேஷாப்பமான கடலையும் க்ஷுபிதமாம்படி பண்ணின உன்னை இப்படி ப்ரமிக்கும்படி தங்கள்தோள்களாலே கலக்கினார்ஆரோ? என்கிறாள்.

(வேறேசிலரும் உண்டாய் அங்கேபோயிருக்கவும் சொல்லுகிறதென்? உங்களை பொழிய ஆருண்டு எனக்கு? இருப்பிடமும் உங்கள் ஸந்நிதியல்லவோ? என்ன; ஆஸந்நமாகப் புகுந்திருக்கிற இவ்விருப்பைத் தவிர்ந்து), நம்பீ - ("கள்வம்பொதியறை" என்னும்படி களவால்) பூர்ணனான நீ, போய் - (எங்கள் பரிஸரத்தில் நின்றும்) போய், இருந்து- (உன்னபிமதைகள் பரிஸரத்திலே) இருந்து, நின்-உன்னுடைய, புள்ளுவம் - களவு, அறியாதவர்க்கு - அறியாதார்க்கு, உரை- (இந்தக் கள்ளவார்த்தைகளைச்) சொல்லு; (எங்களளவில்) நின் - உன்னுடைய, செய்ய-சிவந்த, வாய் - அபரமாகிற, இரு - ஶ்லாக்யமான, கனியும் - கனியும், கண்களும் - (பிறரைபழிக்கையே ஸ்வபாவமாயிருக்கும்) கண்களும், (முன்புபோலே ஹருத்யமாயிருக்கையன்றியே), இந்நாள் - இப்போது, விபரீதம் - பாதகமாயிராநின்றன. (இவ்வளவில் உன்னுடைய நிஷேபார்த்தமான எங்களுடைய ஹஸ்தசேஷ்டையைக் கொண்டாடாதே; நீ கொண்டாடும் தோளழகை உடையவர்களல்லோம் நாங்கள்); மா-அகாதமாய், இரு - விஸ்தீர்ணமான, கடலை - கடலை, கடைந்த - கடைந்த, பெருமானாலே - அதிஶயிதசக்தியான இவன்தன்னாலே, இத் திருவருள் - நெஞ்சு கலங்கி வாய்விட்டுக்கொண்டாடும்படியான அருளை, பெறுவார் - பெற்றிருப்பாராய், (அதுக்கடியான), வேய் - வேய்போலே, இரு - சுற்றுடைத்தாய், தட - நெடிதான, தோளினார்-தோளையுடையவர்கள், யவர்கொல்-ஆர்?— அவர்களைக்கண்டேனாகில், உன்னோபாதி நானும் கொண்டாடலாயிற்றேயென்று ப்ரணயரோஷத்தாலே வினவினாள் என்று கருத்து.

இ.—மூன்றாம்பாட்டில், "'குழலாது போயிருந்து' என்று என்னைச் சொல்லுகிறது என்? சிலரை அழைக்கைக்காகவோ குழல் ஊதுவது? ப்ராஹ்மணர்க்கு ஸந்த்யாவந்தநம்போலே ஜாத்யுசிதவ்ருத்தியன்றோ?" என்ன, "இவ்வஸங்கத ஹேதுக்களை இங்கே இருந்து சொல்லாதே, போ" என்கிறாள்:—[போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்குஉரை] - உன்பொய்யிலே பழகின எங்கள்பக்கல் உன்பொய் விலை செல்லாது; இங்கு நின்றும்போய், உன்பொய் அறியாதவர்கள் கோஷ்டியிலே இருந்து சொல்லு. நினைவுஒன்றும் சொலவு ஒன்றுமான உன்னைஅறியாதே ப்ரமிக்கைக்கு பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களுண்டே! [நம்பீ] - "நமக்கு அங்ஙனே சிலருண்டோ? நான்

acharya.org

உன்னை ஒழிய அறிவேனோ?'' என்ன, ''உமக்கு அநேகர் அன்றோ? பூர்ணர் அல்லீரோ?'' என்ன; தன்னைக்குறித்து இவள்சொல்லுகிற அம்ருதோபமமான வார்த்தையைக்கேட்டு விக்ருதனானான். [நின்செய்யவாயிருங்கனியுங் கண்களும் விபரீதமிந்நாள்] - பக்வ஫லம் போலே ஸோக்யமாய்ச் சிவந்த அயரத்தையும், ப்ரேமத்தாலே குதறிச்சிவந்த திருக்கண்களையும் கொண்டு, என்னை யாராகப்ரமித்து ஹ்ருஷ்டனாகிறாய்? ''உன்புள்ளுவம் அறியாதவர்க்குஉரை'' என்ற ப்ரஸங்கத்திலே, நீ இப்படிபடும்படி யிருப்பதே சிலர்! [விபரீதமிந்நாள்] - ''நாங்கள் முன்பு ஒருநாளும் இச்செவ்வி கண்டறியோமீ!'' என்ன;

''அவைகிடக்க, இதொருதோளழகு இருந்தபடிஎன்!'' என்றான். [வேயிருந்தடந்தோளினார்] - ''பசுமைக்கும் செவ்வைக்கும் மூங்கில்போலேபாய் நீண்டு சுற்றுடைத்தாய் உன்னை இப்படி ப்ரமிக்கும்படிபண்ணின தோளழகை உடையார் ஆரோ?'' என்ன, ''எனக்கு அப்படி இருப்பார்ஆர்?'' என்ன; [இத்திருவருள் பெறுவார்] - ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான உனக்கு அந்யபாஜ்ஞாநம் பிறக்கும்படி பண்ணினவர்கள். செய்யவாயிருங்கனியுமென்கிறவிடம் - அவன்பக்கல் இவர்களுக்குண்டான ஸாவவந்யம் சொல்லுகிறது. வேயிருந்தடந்தோளினார் என்கிறவிடம் அவனுக்குஇவர்கள்பக்கலுண்டான ஸாவவந்தம்சொல்லுகிறது. [யவர்கொல்]-உனக்கு இப்படி ஸ்ப்ருஹணீயதமைகளாயிருக்குமவர்கள் ஆரோ? இவன்பக்கல் ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிறார்கள்; தன்னைப் போக்கி இவனோடு கலந்தவர்களைத் தனக்கு உத்தேஶ்யர் என்றிறே இவர் இருப்பது. [மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே] - கடலைக்கடைந்து பிராட்டியை லஹித்த போதும் கண்டிலோமீ இச்செவ்வி! அகாதமாய்ப் பரந்த கடல் உன்கையிலே பட்ட பாட்டைத் தங்கள்கையிலே படும்படிபண்ணினார் ஆரோ? என்னவுமாம். * மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையவன்னை மறுகப்பண்ணின தோளழகையுடையார் ஆரோ? என்னவுமாம்.

ஈடு.—மூன்றும்பாட்டு. '' 'குழலூது போயிருந்து' என்றிறே என்னைச் சொல்லுகிறது; உத்தமானது தன்னை அநுஷ்டிக்கும் அத்தனையிறே. இனித்தான் 'உனக்குப் பெண்கள்படும் நீர்வாய்ப்புள்ள இடங்களிலே போயிருந்து ஊது' என்றிறே நீங்கள் சொல்லிற்று; அழகிது, இத்தனையிறே. நீர்வாய்ப்புள்ளவிடந்தான் எது? அத்தைச்சொல்லலாகாதோ?''

மூன்றும்பாட்டு—போயிருந்து இத்யாதி. கீழிற்பாட்டிலே, ''குழலூதுபோயிருந்து'' என்றவநந்தரம், ''போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்குரை'' என்றதுக்குஸங்கதி. குழலூதுகையைவிட்டு வார்த்தைசொல்லப்புக்கான் என்றது, இதுஸாப்தமான ப்ரமேயம். அப்படி சொன்ன வார்த்தைதான் இரண்டு. அதாவது - ''நீர்வாய்ப்புள்ளவிடமேது'' என்றொருவார்த்தை; இத்தை அருளிச்செய்கிறார் - 'குழலூது போயிருந்து என்றிறே' என்றுதொடங்கி, 'இனியபேச்சிலே கைவைத்தான்' என்னுமளவும். ''நான்சிலரை யழைக்கைக்காகவோ குழலூதுவது? எனக்கது ஜாத்யுசிதவ்ருத்தியன்றோ?'' என்ற இரண்டாம்வார்த்தை; இத்தை அருளிச்செய்கிறார் - நான்செய்தபடி செய்கிறேனே இத்யாதி. ஆக, ''நீர்வாய்ப்புள்ளவிடமேது'' என்றும், ''நான்குழலூதுகை ஜாத்யுசிதவ்ருத்தியாகையாலே பெண்களை அழைக்கைக்கு ஸாதநமாகமாட்டாது'' என்றும்வார்த்தைசொல்லப்புக்கான்; ''போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்கு உரை கம்பீ'' என்கிறார்கள் என்றுஸங்கதி. 'குழலூது போயிருந்து என்றிறே' என்றது 'போயிருந்து - குழலூது என்றிறே' என்றபடி. 'உத்தமானதுதன்னை அநுஷ்டிக்கும் அத்தனையிறே என்றது - நீங்கள்சொன்னத்தை நான்செய்யும் அத்தனையிறே என்றபடி. இவர்கள்சொன்னதேதென்ன? அத்தை விஶதீகரிக்கிறார் - இனித்தான் இத்யாதி. பெண்கள்படும்-பெண்களைப்படும். நீர்வாய்ப்புள்ளவிடங்களிலே- வலிக்குமிடங்களிலே. பேச்சு குழலில் இனி

acharya.org

என்று இரண்டடி உட்புகுரவிட்டு நற்றரிக்க இருந்து, குழலில் இனியபேச்சிலே கைவைத்தான். குழலோசைபோலன்றிறே பேச்சில் இனிமை இருக்கும்படி! "நான் செய்தபடி செய்கிறேன், 'செவியோசை வைத்தேழ-குழலாது போயிருந்து' என்றுநீங்கள் சொன்னஇதுக்குக் கருத்து எனக்குப் போச்சுதில்லை; இதேனக்கு ஜாத்யுசிதவ்ருத்தி அன்றோ?" என்றான்.

[போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்குஉரை நம்பீ]-உன்போய்யிலேபழகின எங்கள்பக்கல் உன்போய் விலைசெல்லாது; இங்குநின்றும் போய் உன் போய் அறியாதவர்கள் கோஷ்ட்டியிலே இருந்துசொல்லு. நினைவோன்றும் சொலவோன்றுமான உன்னை அறியாதாரையும் கிடைக்குமிறே; பஞ்சலக்ஷங்குடியில் பெண்களுண்டாகையாலே. உன்போய்யை "மெய்" என்றிருக்கும் அவர்களுக்கன்றோ இதெல்லாம் சொல்லுவது? "போய்கேட்டிருந்தேன்" என்று இருப்பாரையும் கிடைக்குமே. [நம்பீ] - பூர்ணர் அல்லீரோ! உமக்கு எங்களைப் பெறாமல் இருந்தீரோ? தன்னைக்குறித்து இவர்கள்சொல்லுகிற அம்ருதோபமமான நிஷேதவசநங் கேட்டவாறே அவன்முகத்திலே ஓருல்லாஸம் பிறந்தது. [நின்செய்யவாயிருங் கனியும் கண்களும் விபரீதமிந்நாள்] † (உன்னுடைய சிவந்த அதரமாகிற ஶ்லாக்யமான கனியும், பிறரையழிக்கையே ஸ்வபாவமாயிருக்கும் கண்களும் முன்புபோலே ஹ்ருத்யமாயிருக்கை அன்றிக்கே,இப்போது பாதகமாயிராநின்றது.)நாங்கள் இதுக்குமுன்பு ஒருநாளும் இச்செவ்வியும் வேறுபாடுங் கண்டறியோம்: இவையிருந்தபடி என்? என்றார்கள். "கழுத்துக்குமேலே ஒன்றைச்சொல்லுகிறிகோளித்தனையன்றோ! அது கிடக்கிடுங்கோள்; இதோரு தோளழகுஇருந்தபடியேன்?" என்றான். [வேயிருந்தடந்தோளினார் இத்திருவருள் பெறுவார் யவர்கோல்?] - ஆரேனும் தோளழகைக்கண்டு, தந்தாம் தோளழகென்று ப்ரமிக்கும்படிக்கு ஈடான தோளழகுஉடையாராரோ? † (பசுமைக்கும் செவ்வைக்கும் மூங்கில்போலேயாய் நீண்டு சுற்றுடைத்தான தோளையுடையவர்கள்.) [இத்திருவருள்பெறுவார் யவர்கோல்] - நீ கிடந்து இப்படி துடிக்கும்படி பண்ணவல்லராவதே அவர்கள் சிலவர்! செய்யவாயிருங்கனியும் கண்களும்என்ற விடம் - அவன்பக்கல் இவர்களுக்கு உண்டான ஶாவ

தாயிருக்குமோ என்ன - குழலோசைபோல் இத்யாதி. போச்சுதில்லை - தெரியவந்ததில்லை. 'செய்தபடிசெய்கிறேன்' என்றது - சொன்னபடி செய்கிறேன் என்றபடி.

"நின் புள்ளுவம் அறியாதவர்க்கு" என்றதுக்கு வ்யாவர்த்தியம்-உன்போய்யிலே இத்யாதி. என் புள்ளுவம் அறியாதபேருண்டோஎன்ன - நினைவோன்றும் இத்யாதி. பலிதம் - உன்போய்யை இத்யாதி. பொய்யை 'மெய்' என்றிருப்பாருண்டோ? என்ன-போய்கேட்டு இத்யாதி. புல்லாணி எம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே-புல்லாணிஎம்பெருமானுடைய பொய்யைக்கேட்டு தரித்திருந்தேன் இத்யர்த்தம். திருமொழி ஒன்பதாம்பத்து நாலாந்திருமொழி அஞ்சாம்பாட்டு, "வில்லாலிலங்கை" இத்யாதி. "நமக்கு அங்கனேசிலருண்டோ,நானுன்னையொழிய அறிவனோ?" என்கிறவனுடைய உக்தியை உட்கொண்டு சொல்லுகிறார்கள் - பூர்ணர் இத்யாதி. 'எங்களைப்பெறாமல்' குறைவாய் 'இருந்தீரோ' என்றகூட்டுவது. புள்ளுவம் - பொய். "நின்செய்யவாய்" இத்யாதிக்கு அவதாரிகை - தன்னைக்குறித்து இத்யாதி. வாயாகிற இருங்கனி - பக்வபலம். "இக்கள்" என்றுவிசேஷித்ததுக்குஶாவம் - நாங்கள்இதுக்கு முன்பு இத்யாதி. இச்செவ்வியும், வேறுபாடும் என்றிரண்டாகச்சொல்லிற்று - "இருங்கனியும், விபரீதம்" என்றத்தைப்பற்ற. "விபரீதமிந்நாள்" என்றது - முன்புபோலே ஹ்ருத்யமாயிருக்கை யன்றிக்கே, இப்போது பாதகமாயிராநின்றன என்றபடி. கழுத்துக்குமேலே என்றது - "வாய், கண்கள்" என்றத்தைப் பற்ற; அஹ்ருதயமென்ற சாடு. தோளழகு கழுத்துக்குக் கீழேயாகையாலே - ஸஹ்ருதயமென்றுத்வநி. வேயிருந் தடந்தோளினார் - மூங்கில்போலேநீண்டு சுற்றுடைத்தான தோள்களையுடையவர்கள் இத்யர்த்தம். தங்களுக்கு அயோக்யமுண்டான ஶாவ வந்தத்தை இருவரும்

---

† குண்டலிதம் க்வாசித்கம்.

acharya.org

ஹந்தம் சொல்லுகிறது ; வேயிருந்தடந்தோளினர் என்றவிடம்—இவனுக்கு அவர்கள் பக்கலுள்ள ஹாவஹந்தம் சொல்லுகிறது. இவர்களுக்குத் தன்பக்கல் ஹாவஹந்தம் தன்முகேநஅறிந்தான்அவன்: தங்கள்பக்கல் இவனுக்குண்டானஹாவஹந்தம்கைமேலே கண்டுவிட்டார் அவர்கள். [யவர்கோல்] - உனக்கு இப்படி ஸ்ப்ருஹணீயதமைகளாய் இருக்குமவர்களாரோ ? இவன்பக்கல் ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிறாளத்தனை போக்கி, இவனோடு கலந்தாரைத் தனக்கு உத்தேச்யரென்றிறே இவளிருப்பது. [மாயிருங் கடலைக்கடைந்தபெருமானுலே - இத்திருவருள்பெறுவார்யவர்கோல்] - "மந்தரம்நாட்டி அன்று மதுரக்கோழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோளுடையான்" என்றுசொல்லுகிற தோளழகுடையவன் விரும்பும்படியான தோளழகு படைப்பதே! தன் தோளழகு கண்டு பெண்பிறந்தார் அடங்கலும் படும்பாட்டையடங்கலும் இவன்தன்னைப் படுத்தும்படியான தோளழகுடையார் உண்டாவதே!பேரியவன் கையிலே பேரியதுபட்ட பாடுஅடங்கலும் தங்கள் கையிலே இவன்படும்படி பண்ணவல்லராவதே ! வெகுணுதொஹ ஹுஜிதஉநர உலுஉ†வாதடு" என்று கொண்டு அது ஊமைக்கூறனுகப் பட்டதெல்லாம் படுகையிறே. அன்றிக்கே, மந்தரத்தைநட்டுக் கடலைநெருக்கிக் கடைந்து பெரியபிராட்டியாரை லலித்தவன்றும் இவ்வேறுபாடு கண்டிலோமி! பழையாரைப் பெற்றுற்போலன்றிறே புதியாரைப் பெற்றால் இருக்கும்படி.

(ரு)

நான்காம் பாட்டு.

ஆலினிளிலையேழுலகுமுண்டு அன்று நீகிடந்தாய் உன்மாயங்கள்
மேலைவானவரும்அறியார்இனிஎம்பரமே?
வேலினேர்தடங்கண்ணினர் விளையாடுசூழலைச் சூழவேநின்று
காலிமேய்க்கவல்லாய்! எம்மைநீகழறேலே.

அறிந்தபடி எங்ஙனே? என்ன இவர்களுக்கு இத்யாதி. தன்முகேந என்றது - தன்னுடையமுகத்தாலே என்றபடி. அதாவது - தன்னுடைய முகத்தைக் கொண்டாடுகையாலே அறிந்தானென்றபடி; அவர்கள்வார்த்தையைக் கொண்டறிந்தான் என்றும். கைமேலே என்றது - சாடு; ப்ரத்யக்ஷமாக என்றும், தோளழகைக் கொண்டாடுகையாலே என்றும். இது - "வேயிருந்தடந்தோளினர்" என்றதைப் பற்ற. "மாயிருங்கடலை" இத்யாதிக்கு மூன்றுஹாவம். முந்தினது - மந்தரம்நாட்டி இத்யாதி. தூர்வாஸஸ்ஸாபோபஹதரான அன்று மந்தரபர்வதத்தைக் கடலிலேநட்டு அம்ருதமாகிற செவ்விய ஸாராம்ஸத்தைக்கொண்ட அழகியதோளுடையவன் இத்யர்த்தம். நாய்ச்சியார் திருமொழி. "சுந்தரத்தோளுடையான்" என்றதுக்குஹாவம் - தன்தோளழகு இத்யாதி. இது - கீழ்வாக்யவிவரணம். "பெருமான், மாயிருங்கடல்" என்றதைக்கடாக்ஷித்து த்விதியதாத்பர்யம் - பேரியவன் இத்யாதி. 'கையிலே இவன்படும்படி என்றது - தோளழகிலே இவன் ஈடுபடும்படி என்றபடி. விவரணம் - வைதுண்ட இத்யாதி. ஊமைக்கூறன் - அநக்ஷரமாகச்சொல்லுகை. த்ருதீயதாத்பர்யம் - அன்றிக்கே இத்யாதி. முந்தினவிரண்டுபாவமும் - "வேயிருந்தடந்தோளினர்" என்றதைக்கடாக்ஷித்து. மூன்றும்பாவம் - "நின்செய்யவாயிரு" இத்யாதியைக் கடாக்ஷித்து. பெரிய பிராட்டியாரைப் பெற்றத்தைப் பற்ற இவர்களைப் பெற்றதுக்கு ஏற்றமேது என்ன - பழையாரை இத்யாதி. மாயிருங்கடலை - அகாதமாய் விஸ்தீர்ணமானகடலை இத்யர்த்தம்.

(ரு)

† சிலகோஸங்களிலே 'வாதடு' என்று காண்கிறது.

acharya.org

ஆ.—(ஆலினீளிலை) "நம்முடையவிளம்பமிறே இவளுடைய இவ்லதிஶங்கைக்குக் காரணம்" என்று பார்த்து, "நான் பரதந்த்ரன் அல்லேனோ? எனக்குப் பசுமேய்க்கப் போகவேண்டாவோ? நீ நினைத்தபோதே வரலாயிருக்குமோ? ஆகையாலே விளம்பித்தேன்; மற்றொன்றால் விளம்பித்தேன் அல்லேன்" என்று இவனருளிச் செய்ய; ஸர்வலோகங்களையும் அமுதுசெய்து ஓராலிலையிலே கண்வளர்ந்தருளின இம்மஹாஶ்சர்யத்தையுடைய உனக்கு "பசுமேய்க்கப் போனேன்" என்றொரு பொய்யை, கேட்டார்க்கு "மெய்" என்றிருக்கும்படி சொல்லுகை ஆஶ்சர்யமோ? "பசுமேய்க்கப்போனமை பொய்யோ?" என்னில்,—வேலினேர் தடங்கண்ணினர் விளையாடும் மணற்குன்றுகளிலே நின்றோ காலி மேய்ப்பது! இந்தப்பொய்கள் எங்களுக்குச் சொல்லவேண்டா என்கிறாள்.

ஒ.—[ஆலினீளிலை] - "நாம் தாழ்கையிறே இவள்இப்படிநினைக்கைக்கு ஹேது" என்று பார்த்து, "நான் எனக்கு உரியேனோ? பசுக்களின்பின்னே போகவேண்டாவோ? நினைத்தபடி வரலாயிருக்குமோ? பசுக்களுடைய ரக்ஷணார்த்தமாகப் போக வேண்டுகையாலே தாழ்த்தேனத்தனை; மற்று விளம்பஹேதுவில்லை" என்று அவன் அருளிச்செய்ய; எல்லா லோகங்களையும் திருவயிற்றிலேவைத்து வடஆலத்திலே கண்வளர்ந்தருளுகையாகிற ஆஶ்சர்யசேஷ்டிதத்தை யுடைய உனக்கு "'பசுமேய்க்கப் போனேன்' என்ற அஸத்யத்தை, கேட்டார்க்கு "ஸத்யம்" என்று தோற்றும்படி சொல்லுகை விஸ்மயமோ?" என்று இவள் அருளிச்செய்ய, "நான் பசுக்களைமேய்க்கப் போனமை அஸத்யமோ?" என்று அருளிச்செய்ய, "பெண்களுடைய நோக்கிலே அகப்பட்டு அவர்களைவிட்டுப் போகமாட்டாதே அவர்கள் விளையாடுகிற மணற்குன்றுகளிலே நின்றோ பசுமேய்ப்பது? இப்பொய்களை எங்களையொழியப் புறம்பேசொல்" என்கிறாள். பசுக்கள் மேய்க்கைக்கு ஸம்ஸ்ரவணையில்லாத வேலினேர்தடங் கண்ணினர்விளையாடுகிற மணற்குன்றுகளிலே நின்று பசுக்களை வயிறு நிரம்பும்படி பண்ணவல்லன் என்று வடஆலசயநம்போலே இருப்பதோர் ஆஶ்சர்யோதாஹரணம் சொல்லிற்றாகவுமாம்.

ப.—அநந்தரம், "ஜாத்யுசிதமாகப் பசுக்களை மேய்க்கப்போகச் சிறிதுவிளம்பித்தவளவிலே இப்படி அந்யபரனாகச் சொல்லலாமோ?" என்று அடர்த்து வார்த்தை சொல்ல, "கூடாதது கூடும்படி செய்யவல்ல உனக்கு எது சொல்லவொண்ணாது?" என்கிறாள்.

ஏழுலகும் - ஸமஸ்தலோகங்களையும், உண்டு -(சிறுவயிற்றிலே அடங்கும்படி) அமுதுசெய்து, ஆலின்-("இன்னவிடத்திலே முளைத்தது" என்று தெரியாததோர்) ஆலினுடைய, நீள்-(முகிழ்விரிந்து) நீளுமளவான, இலை-இலையிலே, அன்று-(ஸர்வலோகமும் ப்ரளயங்கொண்ட)அன்று, நீ-("ப்ரளயத்திலேவிழுவோம்"என்றறியாத மௌக்த்யத்தையுடைய)நீ, கிடந்தாய் - நிஶ்ஶங்கமாகக் கிடந்தவன் அல்லையோ! (ஏவம்விதமான), உன்-உன்னுடைய, மாயங்கள் - க்ருத்ரிம சேஷ்டிதங்களை, மேலை-அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான, வானவரும் - நித்யஸூரிகளும், அறியார் - (* ஓர் மாயையினால் ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போத விட்டிருந்தவர்களாகையாலே) அறியார்கள்; இனி - இனி, எம்-(இதுக்கு) நாங்கள் பாசுரமிட்டுச் சொல்லுகை, பரமே - பரமோ? (அதுகிடக்கிடீர்), வேலின்நேர் - வேல்போலே ஆளழிக்கும்படியான, தடம் - பெரிய, கண்ணினர் - கண்களை யுடையவர்கள் (கண்வட்டம் விடமாட்டாமையாலே), விளையாடு-அவர்கள்விளையாடு

acharya.org

கிற, சூழலை - மணற்குன்றை, சூழ-சூழ, நின்றே-நின்றே, காலி-காலிகளை, மேய்க்கவல்லாய் - வயிறுநிறையமேய்க்கவல்ல அவடிதவடநாஸமர்த்த னன்றோ? (ஆகையாலே), எம்மை - இக்ருத்ரிமம் அறிந்த எங்களை, நீ-நீ, கழறேல் - (காலிமேய்க்கப் போன என்னைக் களவுசொன்னேன் என்று சொல்லுகையாவதென்?'' என்று) மேலிட்டு வார்த்தை சொல்லாதேகொள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஸர்வோபாயங்களையும் அநுஷ்ட்டித்து ஸ்ரீபரதாழ்வான் தன்பக்கல் பட்டதெல்லாம் தான் இவர்கள் பக்கலிலே பட்டான். "விநிவதுயிதாம் வயாஸ" (விநிவர்த்தயிதும்பலாத்) என்று மீட்கையிலே போர வருந்தினனிறே. "ஶெஷ்யேவாரஸாஹாயாயாவநெநவ்ரஸீதி" (ஶேஷ்யேபுரஸ்தாச்சாலாயாயாவந்மேநப்ரஸீததி)-தாமேயிரங்கி மீளும்படிபண்ணுகிறேன்; அதுதான் கேட்டார்வாய் கேட்கவேணுமோ? 'வாரஸாஹாஸ' என்றானிறே. அப்படியே இவனும்ஸர்வோபாயங்களையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும் அணுகவொண்ணாதபடி கடுமைதோற்ற இருந்தார்கள்; "இனிச் செய்யலாவதென்?" என்றுபார்த்தான்; "பலத்தாலே கார்யங்கொள்ளுவோம்" என்றுநிஶ்சயித்து, இவர்கள்பாவையை எடுப்பானுகக் கணிசித்தான்; "ஶெக்ஷிதஜ்ஜாவ்ஸுகொ

ஏழாம்பாட்டு.—கன்மம் இத்யாதி. "கன்மமன்றெங்கள்கையில் பாவைபறிப்பது" என்ற திலேநோக்காக அவதாரிகை - ஸர்வ இத்யாதி. 'ஸர்வோபாயங்களையும்' என்றது - தாய்மாரையிட்டும், வஸிஷ்ட்டாதிகளையிட்டும், சொல்லிவைக்கை தொடக்கமானவற்றை. 'ஸ்ரீபரதாழ்வான் பட்டதெல்லாம்' என்றதுக்குப்ரமாணம் - விநிவதுயிதாம் இத்யாதி. ப்ரமாணந்தரம் - ஶெஷ்யே இத்யாதி. "ஸவெதுவாயஞ்வதிதுஷ்யேவிநிவதுயிதாம்வயாஸ । ஸகேஷாரோயுஜி ஸ்ரணாரம்வாயாஞ்நாம்ஹுணவதிதுநாழி" "கூநாஹாஸோநிராவொகொயநஹீநொ யயாவிஜ்ஞ்ஶெஷ்யேவாரஸாஹாயாயாவநெநவ்ரஸீதி" இத்யாதி. இதுக்குபாவம் - தாமேயிரங்கி இத்யாதி. கணிசிக்கை - உபக்ரமிக்கை. அவன்கணிசித்தபடியை இவர்களறிந்தபடியெங்ஙனே? என்ன - ஶெக்ஷிதஜ்ஜா இத்யாதி. "ஊஜ்ஜிதஜ்ஜாவ்ஸுமயா:

---

† ஸஸம்-ஸஸுழ

acharya.org

ஸஹ: '' (ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்துகோலலா:) என்று நினைவறியுமவர்களாகையாலே, எல்லாருங்கூடவைத்த பாவையைச் சென்றெடுத்துக்கொண்டார்கள்; அதுதான் ''நங்கார்யம்'' என்றே இருந்தான். ''ப்ருதக்ப்ரயத்நாபேக்ஷிதமின்றிக்கே ஒழியப்பெற்றோம்'' என்று பார்த்தான். திருக்குரவைபோலே ஆளுக்காளாய்நின்று கைப்பிடிக்க வேண்டாவாயிருந்தது; ''நல்வாய்ப்பு'' என்று இவர்கள் பாவையைச் சென்றுபற்றினான்.

[கன்மமன்று] - வாராய்! உனக்கிதுகார்யமன்று கிடாய் என்கிறார்கள். ''ஏன் தான் இதுகார்யமன்றிக்கே ஒழிவானேன்?'' என்றான். [எங்கள்கையிற்பாவைபறிப்பது] - ''இதுதான்ஆரதென்றிருக்கிறாய்?நீ நினைக்கிறவர்களதன்றுகாண்! இதேங்களதுகாண்!!''என்றார்கள். ''அதுதான் மெய்யே!''என்றான்; ॥ யவெஃதெதஸ்ய தலம் இறே. † (இவர்கள் ஸ்வரூபஜ்ஞராகையாலே இவனுடையவர்களிறே). இவர்கள் ''எங்களது'' என்கையிறே அவன்விருப்பத்துக்கடி. ''இவர்களது'' என்னுமிடம் அறுதியிட்டுக்கொள்ளுகையிலேயிறே அவனுக்குத் தாத்பர்யம்; நீ நினைக்கிறவர்களதன்று என்கையிறே இவர்களுக்குத் தாத்பர்யம். [எங்கள்கையில் பாவைபறிப்பது]-இவர்கள்கையிலே பாதிகொடுத்துப்போலே காணும்பறிப்பது! அவர்கள்விட்டுக் கடக்கநிற்கும் அதிலொருப்ரயோஜநமில்லையே; அத்தையவர்கள் ஒருதலைபற்றத் தானு மொருதலை பற்றுமன்றிறே ஒருகலத்திலே உண்பாரைப்போலே ஹோமாயிருப்பது. [கையில்பாவைபறிப்பது] - கிடக்கிறதெல்லாங் கிடக்க, எங்கள்கையிற் பாவைபறிப்பது கன்மமன்று. செய்யக் கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்; உனக்கு இத்தாலொரு ப்ரயோஜநமில்லைகாண் என்றார்கள். ஆக, இத்தால் ஸலித்ததேன்? என்னில்;—ஒருவைஷ்ணவன் ''என்னது'' என்றஹிமாநித்துக் கைப்பிடித்தால் ''அவன் விரும்புவது'' என்றபடி. '' 'செய்யக்கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்' என்று நீங்கள் சொல்லுவானேன்? செய்யக்கடவதுக்கும் செய்யக்கடவதல்லாததுக்கும் வரம்புகட்டினேன் நானன்றோ!'' என்றான். [கடல்ஞாலமுண்டிட்ட] - ப்ரளயாத்யாபத்திலே இவற்றை

வ்ரேக்ஷிதஜ்ஞாஸ்துகோலலா: । கயெபூகாகாகாரா வாஹாலாஸ்ஸவெபூகாகாடிகூஷிணாரவயா:''. ''எங்கள்'' என்று - பஹுவசகமாய், ''பாவை'' என்று - ஏக வசகமா யிருக்கையாலே, எல்லாருங்கூடவைத்தபாவையை இத்யாதி. கார்யமானபடியெங்ஙனே? என்ன - ப்ருதக்ப்ரயத்ந இத்யாதி. அபேக்ஷிதமென்றது - அபேக்ஷையென்றபடி. விவரணம் - திருக்குரவை இத்யாதி.

மெய்யானால் தனக்குப்ரயோஜநமேதென்ன-யவெஃதெ இத்யாதி. ஆகையாலே, 'இவர்களதென்னுமிடம்' என்று கூட்டிக்கொள்வது. இவர்கள் ''எங்களது'' என்றதுக்குஹாவமேதென்ன - நீநினைக்கிற இத்யாதி. ''எங்கள்'' என்றபஹுவசகத்துக்கும், '' பாவை '' என்ற ஏக வசகத்துக்கும், ''பறிப்பது'' என்கிற வர்த்தமானத்துக்கும் ஸலிதார்த்தம் - இவர்கள்கையிலே இத்யாதி. இவன் ஸக்தனன்றோ? பாதி கொடுக்கிறதென்? என்ன - அவர்கள்விட்டு இத்யாதி. விவரணம் - அத்தையவர்கள் இத்யாதி. ''கையில'' என்றதுக்குபாவம் - கிடக்கிறதெல்லாம் இத்யாதி. ''வாராயுனக்கு'' இத்யாதிவாக்யத்திலே, 'கன்மம்'' என்று - கார்யமாக விவக்ஷித்தருளிச்செய்து, கர்மபலத்தை விவக்ஷித்தருளிச்செய்கிறார் - செய்யக்கடவதல்லாதத்தை இத்யாதி. 'ஆகஇத்தால்' என்றது - ''எங்களது'' என்றதேஹேதுவாக அவன் மேல்விழுந்து வந்துபறிக்கிறஇத்தால் என்றபடி. 'பலித்ததென்னென்னில்' என்றது - ஸ்வாபதேசத்தில்எந்தஅர்த்தம் சொல்லிற்றாயிற்றென்னில்என்றபடி. ''கன்மமன்று'' என்றதின் முந்தினவர்த்தத்துக்குச்சேர மேலிற்பதத்துக்குஅவதாரிகை-செய்யக்கடவதல்லாதத்தை இத்யாதி. வரம்புகட்டுகையாவது - கடலாலேசூழப்பண்ணுகை. வரம்புகட்டினபடியைக் காட்டுகிறார் - ப்ரளயாத்யாபத்திலே இத்யாதி. நாயகியின் ஹார்த்தபாவத்தை வ்யாக்யாதாஅருளிச்

† குண்டலிக்ராந்தம் ச்வாசித்கம்.

acharya.org

யெல்லாமெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கிற்றிலேனோ? இவர்களளவும் அப்படியேயாகாதே தான். இவன்சென்று பறித்திலனாகில் அழியுமளவாகாதே அவர்களது. அது அவஸ்த்தாந் தரத்தை பஜித்தாகிலும் கிடக்குமிறே; இவர்களுக்கிவனையொழிந்தவன்று ஸத்தாநாஶமிறே யுள்ளது! "ஆபத்ரக்ஷகனன்றோநான்! ஆனபின்பு, நான் செய்யுமவையெல்லாம் ப்ரயோஜந நிரபேக்ஷமாயன்றோ இருப்பது; ஆகையினால் எனக்கிதுதானேயிறே ப்ரயோஜநம்! ப்ர யோஜநத்துக்கு ப்ரயோஜநம் வருமன்று அநவஸ்த்தையாமிறே; இத்தை ஸாதநமாக நினைத் திருக்கிலிறே நான் வேறேயொன்றை ப்ரயோஜநமாக ஸாதித்துக்கொள்வது!" என்றான்; நீ இங்ஙன்சொல்லுமது வார்த்தையன்றுகாண்; எங்களிசைவின்றிக்கேயிருக்க, நீ பலத்தாலே பறிக்கிறஇதுக்கு "ஆபத்ரக்ஷகன்" என்றசொல்லுகிறஇது, நிர்ஶநமாகமாட்டாதுகாண்; ஆன பின்பு, உனக்கு குணஹாநியேகாண்மேற்படுவது" என்றார்கள். [நின்மலாநெடியாய்!] "வஹு குணனானஎனக்கு ஒருதோஷம் கிடக்குங்காட்டில் அது தெரியாநின்றதோ?" என்றான். [நின்மலா! நெடியாய்!] - நிர்மலனான சந்த்ரனுக்குமன்றோ மறு கிடக்கிறது! ஆன பின்பு, குணம்ப்ரகாசிக்குமிடமெங்கும் குணஹாநியும் ப்ரகாசிக்குங்காண்!! ஹேயப்ரத்ய நீகனாய் அபரிச்சேத்ய மஹாகுணனானவனே! [உனக்கேலும்பிழைபிழையே] - அபரிச்சேத்ய மான குணங்களையுடையையா யிருந்தாயேயாகிலும், குணஹாநி குணஹாநியாயே கிடக் குங்காண். இவர்கள் இப்படி சொன்னவாறே, இதுக்கொரு மறுமாற்றம் காணாமையாலே, பிறர்க்குப் பாசுரமிட்டுச் சொல்லவோண்ணாதபடி இவர்கள் செவியிலே சிலவற்றைச் சொல்லப்புக்கான்: "வன்மமேசொல்லி" என்கிறார்கள். தங்கள்நெஞ்சும் அவன்நெஞ்சும் அறியுமத்தனை; வாசாவ்யவஹரிக்கவோண்ணாது † (ப்ரணயவேளையில்பணிமொழிகள்). [எம்மை நீவிளையாடுதி] - நீ மர்மம்சொல்லும்போது, சொல்லுகிறஉன்னையும் கேட்கிற எங் களையும் அறிந்தன்றோசொல்லுவது. ("இவன்சொன்னமர்மம்எது" என்று எம்பாரைச்சிலர் கேட்க, *"மயர்வறமதிநலமருளப்பெற்றவர் பாசுரமிடமாட்டாமல் 'வன்மம்' என்னாநின் றார்; என்னைப்பாசுரமிடச்சொல்லுகிறிகோளோர்" என்றருளிச்செய்தார்.) [விளையாடுதி] - அவன்தன்னையழியமாறி ஒருமர்மம்சொன்னானானான்; இவர்கள் அத்தையெல்லாம் விளை யாட்டாக்குகிறார்கள்; நெஞ்சிலில்லாதவை சொல்லுகிறவத்தால் உனககென்ன ப்ரயோஜநம்

செய்கிறார் - இவர்களளவும் இத்யாதி. வ்வாணம் - இவன்சென்று இத்யாதி. இவர்களளவுமப் படியே ஆகாதேதானென்றது - இவர்கள்தசையும் ஜகத்தின்படியன்றோவென்றபடி. பூமியோடு ஸாம்யமன்றிக்கே ஆதிக்யமருளிச்செய்கிறார் - அதுஅவஸ்த்தாந்தாந்தை இத்யாதி. "கன்மம்" என்ற தின் த்விதீயார்த்தத்துக்குச்சேர, "கடல்ஞாலமுண்டிட்ட" என்றதுக்கு இரண்டாம்அவதாரிகை-ஆபத் ரக்ஷகனன்றே இத்யாதி. இந்தவவதாரிகாத்வயத்துக்கும்சேர, "கடல்ஞாலமுண்டிட்ட" என்றதுக்கு ஹாவம் - எங்களிசைவின்றிக்கே இத்யாதி. அதாவது, இசைவின்றிக்கே இருக்கப்பறிக்கையாலே உனக்கொருப்ரயோஜநமில்லையென்ற த்விதியஸங்கதிக்குபரிஹாரம்; பலத்தாலே பறிக்கிறஇதுஉனக்குக் கார்யமன்றென்று மூந்தினஸங்கதிக்கு பரிஹாரம். "பிழைபிழையே" என்றத்தை - "கடல்ஞாலமுண் டிட்ட, நின்மலா, நெடியாய்" என்றபதத்ரயத்திலும் அந்வயிப்பது. நின்மலா - ஹேயப்ரத்யநீகனா னவனே. நெடியாய் - பெரியோனே; ஸமஸ்தகல்யாணகுணாத்மகனே. உனக்கேலும் பிழைபிழையே - இப்படிப்பட்டஉனக்கும் அபலைகளைத் தீண்டிப்பறிக்கிற இநதத்தப்பு அவத்யமாயேவிடுமென்ற ஶப் தார்த்தம். சிலவற்றையென்றது - ப்ரணயவேளையிற் பணிமொழிகளை. வன்மம் - மர்மம். அந்தவன் மமேதென்ன - தங்கள்நெஞ்சும் இத்யாதி. சுவடிஸ்ரீ என்றபடி. 'சொல்லுகிறவன்னையும்' இத்யா திக்குக்கருத்து-உனக்குமெங்களுக்கும் உறவுஉண்டானாலன்றோ ஹாஸ்யம்பண்ணலாவது. உறவில்லாத விடத்திலே ஹாஸ்யம்பண்ணலாமோவென்று. விளையாட்டாக்குகைக்குஹேதுவேதென்ன - நெஞ்சி

† குண்டலி க்ரந்தத்வயம் ப்ரகடிப்பதம்.

acharya.org

உண்டென்கிறார்கள். திரியவும் சிலவற்றைச்சொல்லப்புக்கான்: [அதுகேட்கிலேன்னைமார்] - சொல்லுகிறவையெல்லாம் எங்கள்பந்துக்கள் கேட்பர்களாகில் சாலத் தப்பாய்விடுங்கிடாய். என்னைமார் - ஆணுடன்பிறந்தார். [தன்மபாவமென்னார்] - உன்பக்கலேங்களுக்கு ஹாவ வுந்தமில்லை என்னுமிடம் அறியார்கள். நீ மேல்விழுகிறத்தைக் கண்டு, "இதுசெய்யலாம், இதுசெய்யவொண்ணாது" என்றுபாராதே நலிவர்கள்கிடாய். "ஆனாலென்? அவர்கள் அது அறியாநின்றார்களோ? அவர்களிங்கில்லையே!" என்றான். [ஒருநான்று] - அதுவோ! முத லிலே தவிரில் அறியாதொழியுமத்தனைபோக்கி எல்லாம் செய்தாலு முண்டானாலொரு நாள்வரையிலே அறிவர்கள்காண். "அழகிது; அறிந்தால்தான் வருவதென்?" என்றான். [தடிபிணக்கே] - பின்னைக்குத்தும் பூசலுமாயன்றோ தலைக்கட்டுவது. ராமாவதாரத்தில் ஸர்வவ்யாபாரங்களும் விற்கொண்டே வ்யாபரிக்குமாபோலே, க்ருஷ்ணாவதாரத்திலே தடி கொண்டே கார்யங்கொள்ளுமத்தனை. (எ)

எட்டாம் பாட்டு.

பிணக்கியாவையும்யாவரும் பிழையாமல்பேதித்தும்பேதியாததுஓர்
கணக்கில்கீர்த்திவேள்ளக் கதிர்ஞானமூர்த்தியினாய்! [தோமை
இணக்கிஎம்மைஎம்தோழிமார் விளையாடப்போதுமினேன்னப்போந்
உணக்கிநீவளைத்தால் என்சொல்லாருகவாதவரே!

ஆ.—(பிணக்கி.)-"இப்படி இவன் க்ருத்ரிமம்செய்து நம்மை இங்கிருந்து விளையாடவொட்டானாகில், நாமிங்குநின்றும் போவோம்" என்று பார்த்துத் தன் தோழிமாரோடேகூடப் போகப்புக, "நான்போகவொட்டேன்" என்றுஇவன் தங்களை வளைத்தருள, "அறியாதே விளையாடப்போந்த எங்களை உன்னுடைய நிரவதிக ஸௌந் தர்யத்தாலே இழுவித்துக்கொண்டு, ஸர்வேஶ்வரனான நீ வளைத்தால், உன்னை உகவாத வர்உனக்கென்ன பழிசொல்லார்? உனக்கெங்களோடே ஸம்ஶ்லேஷம் வ்ருத்தமென்றும் சொல்லுவரிறே! ஆனபின்பு இதுஈடல்ல"என்று அவனை உபாலம்பிக்கிறாள்.

ஒ.—[பிணக்கியாவையும்.]-"நாமிருக்கிலிறே இங்கு இவனுக்கு நம்மை நலிய லாவது; நாம் போவோம்" என்று தோழிமாரும்தானும்போக உபக்ரமிக்க, எம்பெரு மானும் அவர்கள் போகிற வழியைக்கொண்டு அவர்களைப் போகவொட்டாதே வளைக்க, அவர்களும் சேதநாசேதநங்களை தேவதிர்யங்மனுஷ்யாதி விஶேஷங்களை ஒழிந்து ஒன்றும் படிகலசி, "அழித்தது ஸ்ருஷ்டித்தது" என்று தெரியாதபடி, ஸம்ஹாரகாலத்துக்கு முன்பு இருந்தபடிகளில் ஒருவாசிபடாதபடி ஸ்ருஷ்டித்து இதில் ஓராயாஸப்படாதபடி

லில்லாதவை இத்யாதி. திரியவும் சிலவற்றையென்றது-பஞ்சலக்ஷங்குடியிற்பெண்களும் எனக்குஉற வன்றோ? என்கை. என்னைமாரென்றது - வந்துக்களுக்குமுபலக்ஷணம். "தன்மபாவமென்னார்" என்ற துக்குபாவம் - உன்பக்கல் இத்யாதி. பாவபர்தமென்றது - ஸம்ஶ்லேஷமென்றபடி. ஸம்ஶ்லேஷ முண்டென்று நிரூபித்துச்செய்கை - தர்மம், நிரூபியாமல்செய்கை - பாபம். இரண்டும்பாராதே யடிப் பர்களென்றபடி. தடியென்? ஆயுதமில்லையோவென்ன - ராமாவதாரத்தில் இத்யாதி. என்னைமார் - ஆணுடன்பிறந்தார். தமையன்மாரென்றபடி. தடிபிணக்கு-தடிச்சண்டை. (எ)

acharya.org

மஹாப்ரஹாவமான விலக்ஷணஸங்கல்ப ரூபஜ்ஞாநத்தையுடைய ஸர்வேஶ்வரனான நீ, 'தோழிமார் தங்களோடே கூடிக்கொண்டு விளையாடப் போருங்கோள்' என்ன அறியாதே போந்த எங்களை உன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே நெருக்கி எங்களைப் போக வொட்டாதொழிந்தால் இத்தை ஸஹியாத உன்னுடைய மின்னிடைமடவார் இம்மாத்ரத்தையே கொண்டு, யோக்யதையாலே, "ஸம்ஶ்லேஷம் வ்ருத்தம்" என்று சொல்லி உன்னை உபேக்ஷிப்பார் என்கிறாள்.

ப —அநந்தரம், "இவன் ஸந்நிதியிலிருக்கிலன்றோ மர்மம் சொல்லுவது?" என்றுபோகத்தேட, இவர்கள் போகிறவழியைக் கட்டித்தகைந்த அவனைநோக்கி; "எல்லாம் அறிவீர் ஈதேயறியீர்" என்று ஸர்வஜ்ஞனான நீ யெங்களைத் தகைந்தால்உகவாதார் என் சொல்லாரென்கிறாள்.

யாவரும் யாவையும் - ஸகல சேதநாசேதநங்களையும், பிணக்கி-(ஸம்ஹ்ருத்ய வஸ்த்தையிலே நாமரூபவி஭ாகரஹிதமாம்படி) கலசி, (ஸ்ருஷ்டியில்வந்தவாறே), பிழையாமல் - (அவ்வோ சேதநருடைய கர்மங்களுக்கு ஸாங்கர்யம்) பிறவாதபடி, பேதித்தும்- தேவதிர்யகாதிபேதத்தைப் பண்ணினவிடத்தும், பேதியாதது - (தத்ஹததோஷத்தால்) ஸ்வரூபத்துக்கு பேதம்வாராதபடி,ஓர் - அத்விதீயமாய், கணக்குஇல் - அபரிச்சிந்நமான, கீர்த்திவெள்ளம் - கீர்த்திஸமுத்ரத்தையுடைத்தாயிருக்கிற, கதிர் - ப்ரபாரூபமான, ஞாநம் - ஸங்கல்ப ரூப ஜ்ஞாநத்தை, மூர்த்தியினாய் - வடிவாகவுடையவனே! எம் - ஸஜாதீயைகளாய் ஸமாநதுஃகைகளான, தோழிமார் - தோழிமார், எம்மைஇணக்கி - நாங்கள் இசையும்படி வார்த்தைசொல்லி, 'விளையாட- விளையாட, போதுமின்-போங்கோள்' என்ன - என்றுஸீலையை வ்யாஜமாகச் சொன்னபடியாலே,போந்தோமை - (நீ இங்கு நிற்பதறியாதே ஸீலாபரைகளாய்) வந்த எங்களை, உணக்கி - உண்ணவுமொட்டாதே உணங்கும்படிபண்ணி, நீ-நீ, வளைத்தால் - தகைந்தால், (இச்செய்திகண்டு),உகவாதவர்-உகக்கமாட்டாத நாட்டார், என் - என்ன, சொல்லார் - சொல்லார்? உகவாதவர் - உன்னுடைய மின்னிடை மடவாரென்றுமாம். இங்கு, இணக்கி எம்தோழிமாரென்றது ஜாஜாத்யத்தாலே கலந்து ஸீலாரஸ வ்யபதேஶத்தாலே பகவத்விஷயத்திலே மூட்டும் பாகவதவிஷயத்தை ஸூசிப்பிக்கிறது.

இ.—எட்டாம்பாட்டில், "நாம் இங்கிருக்கிலிறே இவனுக்கு மர்மங்களைச் சொல்லி நலியலாவது; நாம் போவோம்" என்று, எல்லாரும்கூடப் போகப்புக்கார்கள்; இவர்கள் போகிறவழி ஓரடிப்பரப்பாய் ஒழுகப்போகவேண்டுகையாலே, வழியைக்கட்டியிருவிலங்காகக்கிடந்தான்; அவனைப்பார்த்து வார்த்தை சொல்லுகிறார்கள்:—[பிணக்கி இத்யாதி]. [யாவையும்யாவரும் - பிணக்கி] - சேதநாசேதநங்களை ஜீவாதிவி஭ாகமற்று "தத்ஸ்ஸ்ரஷ்டா" என்று தன்னோடே அவிபக்தமாம்படி கலசி. [பிழையாமல் பேதித்தும்] - ஸ்ருஷ்டிகாலத்திலே ஒருத்தன் கர்மம் வேறொருவன் அநுபவியாதபடி, பேதித்தும் - ஸ்ருஷ்டித்து மென்றபடி. [பேதியாததோர் கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்] - ஸம்ஹாரகாலத்தில், அசித்ஹதமான ஸூக்ஷ்மபரிணாமம், சேதநஹதமான அஜ்ஞாநம்: ஸ்ருஷ்டிகாலத்தில், அசித்ஹதமான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநஹதமான ஸ்வபாவாந்யதாபாவம்: ஆக, இப்பேதங்கள் ஒன்றுமின்றிக்கே ஏகரூபமாய் அத்விதீயமாய் அநவயியான ஏகரூபத்வமாகிற கீர்த்தி ஸமுத்ரத்தை யுடையையாய்,

acharya.org

ப்ரஹாரூபமான ஸங்கல்பஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமானவனே! இத்தால் - விஶ்லேஷதசையில் கலக்கமும், ஸம்ஶ்லேஷதசையில் ஹோஶூபவிக்ருதியு மின்றிக்கே ஏகரூபனென்கை. [இணக்கி இத்யாதி] - "உன்னோட்டை கலவி அபாயம்" என்று அறியாத எங்களை உன்னோடே சேர்த்து. இவ்வளவாக விளைத்தவர்களைச் சொல்லாதே உன்னைச் சொல்லுகிறதென்? ஹ ஹவத்விஷயத்தில் வைமுக்யம் பிறந்தால் உபகாரகரைக் கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "நிதாயதீயவாணளஶாணாஶீயழ்"; [எந்தோழிமார்] - ஸஜாதீயராயிறே சேர்ப்பது. [விளையாடப்போதுமி னென்னப் போந்தோமை] - "க்ருஷ்ணனுண்டு" என்றறிந்தோமாகில்,வாரோம்; இவ்வகப்பாட்டை அறிந்திருந்தோமாகில் வாராதொழியலாயிற்று. "அத்தால் வந்ததென்?" என்ன, [உணக்கி நீ வளைத்தால்] - உணக்குகையாவது - ஶரிக்கமாட்டாதே துவளும்படிபண்ணுகை. உன்முகம் பார்த்து அநு஭விக்கப்பெறாமையாலே ஶரிக்கமாட்டுகிறிலோம்; நீ வளைக்கையாலே போகமாட்டுகிறிலோம். [என்சொல்லாருகவாதவரே] - நீயும் நாங்களுமாக இருக்கக்கண்டால் உகவாதவர் என்சொல்லார்? "உங்கள் ஸந்நிஶ்மாத்ரமேயன்றோ உள்ளது: இதுக்குச் சொல்லுவதெத்தை?" என்ன, யோக்யதையாலே 'ஸம்ஶ்லேஷம் வ்ருத்தம்' என்று உன்னுடைய மின்னிடைமடவார்கள் உபேக்ஷிப்பர்கள்; பிரிவாற்றாமையாலே கண்ணஞ்சுழலை இடுகிறவர்கள் எத்தைச் சொல்லார்? உன்மேன்மையையும் குணவத்தாப்ரதையையும் இழக்கக்கிடாய்புகுகிறாய். ஆப்பான், "இவனை இவர்கள் கடந்துபோனார்களாகிற் செய்வதென்?" என்ன, ஜீயர், "அது ஆர்க்கு அழகு?" என்று அருளிச்செய்தார். நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்து போனார்களாகில் ஸம்ஶ்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.

ஈடு.—எட்டாம்பாட்டு. கிட்டிநின்று இவர்களைச் சிலமிறுக்குக்களைப் பண்ணப் புக்கான்;' 'இங்கே யிருக்கிலன்றோ இதெல்லாம் வேண்டுவது" என்றுபார்த்து, ஒருவரோருவராகப் போகப்புக்கார்கள்; "இதுவோ பார்த்தபடி!" என்று வழியைப்பற்றி இருவிலங்காகக்கிடந்தான். உத்யாநமாகையாலே வழி ஓரடிப்பாடாயிருக்குமிறே. இப்பாட்டை ஜீயர் அருளிச்செய்யாநிற்கச்செய்தே ஆப்பானிருந்தவர் "இவர்களிவனைக் கடந்துபோனார்களாகிற்செய்வதென்?" என்றுகேட்க, "அது ஆர்காரியம்? பின்னை இரண்டத்தோன்று ஸித்திக்கும் என்றன்றோ அவன்தான்கிடந்தது!" என்றருளிச்செய்தார். † (நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்துபோனார்களாகில் ஸம்ஶ்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.)

நீ வழியைப்பற்றிக் கிடவாநின்றாய்; நீசெய்கிறவையெல்லாம் உறவுஉண்டாய்ச் செய்கிறாயென்றிருப்பர்கள்கிடாய்; நீஸர்வவிஷயமாகப்பண்ணும் லீலைக்கோரளவுஉண்டோ?

எட்டாம்பாட்டு.—பிணக்கி இத்யாதி. "உணக்கிநீவளைத்தால்" என்றிருக்கையாலே - இவன் அவளைவளைத்துக்கிடக்கும்போது, இவன்மிறக்கடியாக இவர்கள்போகப்புக்கார்களாகவேணுமென்கிறார் - கிட்டிநின்று இவர்களை இத்யாதிவாக்யத்வயத்தாலே. மிறக்குக்களை - நிஷ்டுரோக்திகளை. இருவிலங்கு - பெருவிலங்காதல், இரட்டைவிலங்காதல். வேறுவழியில்லையோ? என்ன - உத்யாநம் இத்யாதி. இரண்டத்தொன்றுஎன்றது - தகைவுபட்டு நிற்கையாதல், கடந்துபோம்போது ஸ்பர்ஶமாதல்; ஸ்பர்ஶித்தல்லது போகக்கூடாதிறே.

"பிணக்கி" என்றுதொடங்கி, "பேதியாதது" என்னுமளவுக்கும் அவதாரிகை - நீவழியைப் பற்றி இத்யாதி. "பேதித்தும் பேதியாதது" என்றதுக்கு ஹார்த்தபாவம் - அப்படியே இத்யாதி.

---

† குண்டலிதக்ரந்தம் ப்ரகாஶிப்தம்.

acharya.org

உன்னையொழிந்த வஸ்துக்களெல்லாவற்றுக்கும் கோடிவிகாரத்தைப்பண்ணி, அவிக்ருதனா யிருப்பானொருவனிறே; அப்படியே எங்களை விக்ருதராகப்பண்ணி நீ அவிக்ருதனாயிராநின்றாய்! [யாவையும்யாவரும் - பிணக்கி] - தன்பக்கல்போருந்துகைக்கு நினைவில்லாதவற்றையும், நினைவாலே போருந்தாதவற்றையுங்கூட்டி, "தமேவைகதேவமனகீலவதி" (தமேவைகதேவ ஏகீபவதி) என்று தன்னோடு அவிபக்தமாம்படி கலசி. [பிழையாமல் பேதித்தும்] - தப்பாமல் பிரித்தும். வயிற்றிலே வைத்துப்புறப்படவிடுதல், ஸம்ஹரித்துப்புறப்படவிடுதல். ஓரோக்ஷோபங்களிலே யமர்ந்தநிலங்களிலே குடிவாங்கிப் பின்புதெளிந்தவாறே ஸ்வஸ்த்தாநங்களிலேபுகுந்து, விட்டகார்யங்களிலே அதிகரிப்பாரைப்போலே. ஒருத்தன் பண்ணினகர்மம் வேறொருத்தன்சென்று புஜியாதபடி தன்பக்கலினின்றும் பிரித்தும். [பேதியாததோர்கணக்கில் கீர்த்திவெள்ளக்கதிர்ஞானமூர்த்தியினாய்] - கார்யாவஸ்த்தமானதுவே காரணவஸ்த்தமானாலும், அசித்ஶதமான ஸூக்ஷ்மபரிணாமம், சேதநஶதமான அஜ்ஞாநம், ஸ்ருஷ்டிகாலத்தில் அசித்ஶதமான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநஶதமான ஸ்வபாவாந்யதாபாவம், ஆக இப்பேதங்கள் ஒன்றும் இன்றிக்கே. ஏகரூபமாய், அத்விதீயமாய், அநவதியான கீர்த்தி ஸமுத்ரத்தை யுடைத்தாய், ப்ரபாரூபமான ஸங்கல்பரூபஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமானவனே! *எல்லாப்பொருள்களுக்கும் வித்தாய் முதலிற்சிதையாத மனஞ்செய் ஞானமிறே. இத்தால் - விஶ்லேஷஶையில் கலக்கமும், ஸம்ஶ்லேஷஶையில் ஹோஶரூபவிக்ருதியுமின்றிக்கே ஏகரூபனேன்கை. [கணக்கில் கீர்த்திவெள்ளம்] - "இப்படிப்பட்ட குணங்களை அளவிடுவோம்" என்றுபார்த்தாருண்டாகில் இளைத்துக் கால்வாங்கும்படி இருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்] - இப்படி கூட்டவேனகூட்டிப் பிரிப்பன பிரித்தாலும், ஜ்ஞாநத்துக்கோரு குறைவற்றிருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்] - கார்யங்கொண்ட தென்னமழுங்காதிருக்கை: கார்யங் கொள்ளக்கொள்ளப் புகர்த்துவருகை. [கதிர்ஞானமூர்த்தி

நீ அவிக்ருதனாயிராநின்றாயென்றது - விஶ்லேஷத்தால் வந்தகலக்கமும், ஸம்ஶ்லேஷத்தால்வந்த போகரூபவிக்ருதியும் இன்றிக்கேயிராநின்றாயென்றபடி. அசேதநக்களை முந்தறச்சொல்லி சேதநரை அநந்தரம்சொன்னதுக்குபாவம் - தன்பக்கல் இத்யாதி. அதாவது - இரண்டுவஸ்துக்களுக்கும் பொருந்தாமை ஸமாநமாகையாலே அசேதநங்களோடே சேதநரையுங்கூட்டி அருளிச்செய்கிறாரென்றபடி. நினைவாலேயென்றது - நினைவு உண்டாயிருக்கச்செய்தேயென்றபடி. கூட்டியென்றதே, "பிணக்கி" என்றதுக்குபாவம் - தமேவை இத்யாதி. பிணக்கி - கலசி. மஹாப்ரளயபக்ஷத்திலே, பிணக்குகை - கலக்கை; அவாந்தர ப்ரளயபக்ஷத்திலே, பிணக்குகை - வயிற்றிலேவைக்கையென்ற கண்டுகொள்வது. இதுக்குச்சேர அர்த்தத்வயம் - வயிற்றிலே இத்யாதிவாக்யத்வயம். 'வயிற்றிலேவைத்துப்புறப்படவிடுதல்' என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - ஓரோக்ஷோபங்களிலே இத்யாதி. ஸம்ஹரித்துப்புறப்பட விடுதலென்றபக்ஷத்தில், "பிழையாமல்" என்றதுக்கர்த்தம் - ஒருத்தனை இத்யாதி. பிரிக்கை - ஸ்ருஷ்டிக்கை. "பேதியாதது" என்றதுக்கர்த்தம் - 'கார்யாவஸ்த்தம்' என்றுதொடங்கி, 'ஆக இப்பேதங்களொன்றுமின்றிக்கே' யென்னுமளவும். கார்யாவஸ்த்தமானதுவேயென்றது - கார்யாவஸ்த்த ப்ரஹ்ம ஸ்வரூபமென்றபடி. காரணவஸ்த்தையில் 'அசித்கதமான ஸூக்ஷ்மபரிணாமம்' என்றுகூட்டுவது. ஏகரூபனுமாய் அத்விதியனுமாய், கீர்த்திஸமுத்ரத்தையுடையனுமாயென்று திருத்துவது. ஸ்வரூபாந்யதாபாவமாகிறது - ஸ்தூலபரிணாமம். இது - ஸூக்ஷ்மபரிணாமம் என்றதுக்கு ப்ரதிகோடி. ஸ்வபாவாந்யதாபாவமாகிறது - ஜ்ஞாநவிகாஸம்; இது - 'சேதநகதமானவஜ்ஞாநம்' என்றதுக்குப்ரதிகோடி. "பேதியாதது" என்றதால் ஹவிதம் - 'ஏகரூபமாய்என்று. "ஓர்" என்றுதொடங்கி உண்டானபதங்களுக்கெல்லாம் ஸப்தார்த்தம் - அத்விதீயமாய் இத்யாதி. "பேதித்தும் பேதியாதது"என்றதுக்குப்ரமாணம்- எல்லப்பொருள்களுக்கும் இத்யாதி. "கணக்கில்" என்றதுக்குபாவம் - இப்படிப்பட்ட இத்யாதி. "கதிர்" என்றுவிஶேஷித்ததுக்குபாவம் - 'இப்படி கூட்டவேன' இத்யாதிவாக்யத்ரயத்தாலே. "இப்படி

acharya.org

யினுய்] - ஜ்ஞாநஸ்வரூபனுயுள்ளவனே! [இணக்கியித்யாதி] - நீ செய்கிறவற்ருல் ப்ரயோஜந முள்ளது நீ யிருந்தவிடத்தே நினைத்துத் தேடிவந்தாருண்டாகிலன்ருே! [இணக்கி] - இசையும்படி வார்த்தைசொல்லி. "அவ்விடம் கிருஷ்ணன் வாராத விடம்" என்றுகிடீர் சொல்லிக்கொண்டுபோந்தது. [எம்மை] - உன்னேட்டைக்கலவி அபாயம் என்றறியாத எங்களை. [எந்தோழிமார்] - உன்னைவெறுக்கிறதென்? உன்பக்கல் குற்றமுண்டோ? சேர்த்தாராலேவந்ததுகிடீர்! பகவத்விஷயத்தில் வைலக்ஷண்யம் நேஞ் சிலேபட்டால் உபகாரகரைக்கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "நித்ய யதீயசரணளரணம்மதீயம்" (நித்யம்யதீயசரணௌரணம்மதீயம்) என்று இங் கோடு அங்கோடு வாசியற அவர்களாலே வருமதிறே. [எந்தோழிமார்]-ஸஜாதீயராயிறேசேர்ப் பது. [விளையாடப்போதுமி னென்னப்போந்தோமை] - அவர்கள் உனக்குப் பெருநிலை நிற்ப தறியப் பெற்றிலோம். சோலவுக்குமேல்அகவாய் ஆராயப்பெற்றிலோம். "நீயுண்டு" என்றறிந் தோமாகில் இவ்விடமென்று நினையோம்; "அவர்களுனக்குப்பார்வை" என்னுமிடம் அறி யப்பெற்றிலோம். "போகடுங்கோள்; ஆனுலேன்? அவர்கள்சொல்லப்போந்திகோளாகில் உங்களுக்கு வந்த அநர்த்தமென்?" என்ருன்: [உணக்கிநீவளைத்தால்]-உணக்குகையாவது - யரிக்கமாட்டாதே துவளும்படி பண்ணுகை. எங்களுக்கு இதுக்குமேல் வருவதென்? கால் வாங்கிப்போகப் பெறுகிறிலோம்; கிட்டிநின்று முகம்பார்த்து அநுபவிக்கப்பெறுகிறிலோம். இதுகாணவேண்டாதவர்கள் என்சொல்லுவர்கள்? "எத்தைச் சொல்லுவது: என்னை 'ஈஶ்வரன்' என்றிகோளாகில், உங்களை 'இடைச்சிறுபெண்கள்' என்றிகோளாகில், இனி எத்தைச்சொல்லுவது?" என்ருன். "நீ ஸர்வேஶ்வரனுனஇதுவும், நாங்கள்இடைப்பெண்க

கூட்டுவன" இத்யாதிவாக்யவிவரணம் - 'கார்யங்கொண்டது 'இத்யாதிவாக்யத்வயம். ஞானமூர்த்தியி னுய்" என்றதுக்கு - ஸங்கல்ப ரூபஜ்ஞாநத்துக்குஆஶ்ரயமானவனென்று கீழ்அருளிச்செய்து, ஸ்வரூப பரமாகவர்த்தமாந்தரம் - 'ஜ்ஞாநஸ்வரூபனுயுள்ளவனே' என்று; ஏததர்த்தநகதநார்த்தம் பதோபாதாநம் - கதிர்ஞானமூர்த்தியினுய் என்று. "பேதியாததோர் கணக்கில்கீர்த்திவெள்ளம்" என்றபதங்கள் - யோஜ நாத்வயத்திலும், ஸ்வரூபவிசேஷணங்கள். "இணக்கி" என்றதுக்கு ஹார்த்தபாவம் - நீ செய்கிற இத்யாதி. விவரணம் - அவ்விடம் இத்யாதி. இணக்கி - இசையும்படிவார்த்தைசொல்லி. 'கலவி அபாயமென்றறியாத' என்றது - கலவியாகிறஅபாயம் வருமென்றறியாத என்றபடி. "எம்" என்ற துக்குபாவம் - உன்னை இத்யாதி. ஸ்வாபதேஶம் - பகவத்விஷயத்தில் இத்யாதி. ஆஶ்ரயணதசை யிலொழிய போகதசையிலும் ஆசார்யன்வேணுமோ என்ன - நித்ய்யதீய இத்யாதி. "சூதுவர சூவாவி" என்றதுக்கர்த்தம் - இங்கோடு இத்யாதி. தோழிமாராகவேணுமோ சேர்க்கைக்கென்ன - ஸஜாதீயராய் இத்யாதி. "விளையாடப்போதுமினென்னப்போந்தோமை"என்றதுக்கு ஹார்த்தபாவம்- அவர்கள்உனக்கு இத்யாதி. பெருநிலை-ஸஹாயம். "விளையாடவாருங்கோள்"என்னுநிற்க, இவனுக்குப் பெருநிலையென்ற சொல்லுகிறபடி எங்ஙனேயென்ன - சோலவுக்கு இத்யாதி. அகவாயாராய்ந்தால் நீங்கள் செய்வதென்? என்ன - நீயுண்டென்று இத்யாதி. "உனக்குப்பெருநிலைநிற்பது" என்றத்தை விவரிக்கிருர்-அவர்கள்உனக்கு இத்யாதி.பார்வை-பக்ஷிக்ரஹணஸாதநமான பக்ஷிமுதலானது .உணக்கி- துவளப்பண்ணி. "உணக்கி" என்றதுக்குபாவம் - எங்களுக்கு இத்யாதி. "பிணக்கியாவையும் யாவ ரும், விளையாடப்போதுமின்" என்றபதத்வயத்தையுங்கடாக்ஷித்து யோக்யதையில்லையென்கிருர் - என்னை ஈஶ்வரன் இத்யாதி. அதாவது - ஸர்வாதிகனுன எனக்கு அதிக்ஷுத்ரைகளான உங்களோடு ஸம்ஶ்லேஷயோக்யதையில்லாமையாலே அபவாதவசநமில்லை என்றகருத்து. அவன்சொன்னதுக்கு உத்தரம் - நீ ஸர்வேஶ்வரனுனஇதுவும் இத்யாதி. இதுசிலபாவம் - ஸர்வேஶ்வரனுய்வைத்தும் நப்பின்னைப்பிராட்டியைக் கைப்பிடிக்கையாலே, இடைப்பெண்களானதுவே ஹேது என்றபடி. வலி

acharya.org

ளான இதுவுமேயிறே சொல்லுகைக்கு ஹேதுவும்.'' ஈஶ்வரனோடொக்கப் பழிசொல்லுகைக்கு இவர்கள்தாம் ஒரு நப்பின்னைப்பிராட்டிபோல்வார்ஆகாதேதான். ''அது என்தான்? என்னோடு உங்களுக்கு ஸாவஷ்யந்தமில்லை என்னுநின்றிகோளாகில் இத்தால் வருவதென்?'' என்றான்: [என்சொல்லாருகவாதவரே] - '' உன்பக்கல் எங்களுக்கு ஸாவஷ்யந்தமில்லை '' என்று அறிவார்களோ உகவாதார்? நீ அல்பம்கால்தாழ்த்த இதுவே ஹேதுவாக ''ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்று'' என்னுர்களோ ? வளைக்கிற உன்னையும், வளைப்புண்கிற எங்களையும் அறிந்தோ அவர்கள் வார்த்தைசொல்லுவது ? [என்சொல்லாருகவாதவரே] - உன்னுடைய மின்னிடைமடவார் உன்னை நெகிழ வார்த்தை சொல்லுவர்கள். பிரிவாற்றுமல் கண்ணுஞ்சுழலையிடுகிறவர்கள் எத்தைச் சொல்லார்? (அ)

ஒன்பதாம் பாட்டு.

உகவையால்நெஞ்சமுள்ளுருகிஉன்தாமரைத்தடங்கண்விழிகளின்
அகவலைப்படுப்பான் அழித்தாயுன்திருவடியால்
தகவுசெய்திலைஎங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறுங்கண்டு நின்
முகவோளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே.

ஆ.—(உகவையால்.)-தன்னை எம்பெருமான்இப்படி வளைக்கச் செய்தேயும் அவனைக் கடாக்ஷியாதே யிருந்து தன் தோழிமாரோடேகூடச் சிற்றிலிழைத்துச் சிறுசோறிட்டு விளையாடாநிற்க, இவளுடைய கடாக்ஷமல்லது தனக்குஆத்மதாரணம் இல்லாமையாலே, ''ஏதேனுமொருபடியால் இவள் நம்மைக் கடாக்ஷிக்கஅமையும் '' என்று பார்த்து, இவள் தன்னைப்பார்த்தருளும்படியாக இவளுடைய சிற்றிலைத் தன்னுடைய திருவடிகளாலேயழித்தருள, இவளும் அவனுடைய திருமுகத்தைப்பார்த்து அவனுடைய திருக்கண்களினழகாலே வஶீக்ருதையாய், ''உன்பக்கலுள்ள ப்ரீத்யதிஶயத்தாலே நெஞ்சுருகிக்கொண்டு உன்தாமரைத்தடங்கண் விழிகளாகிற வலையிலே நாங்கள் அகப்படுகைக்காக, எங்கள் சிற்றிலும் யாமடுசிறுசோறும் உன்திருவடியா லழித்தருளினுய் ; நாங்கள் விளையாடுகிறபடியைக் கண்டு உகந்துகொண்டு நிற்கமாட்டிற்றில்லை; ஒன்றும் க்ருபையில்லையாகாதே?'' என்றுகொண்டு, தன்னுடைய அத்யவஸாயத்தை, எம்பெருமான் தன்னழகாலே அழித்ததாக அவனையின்னுதாகிருள்.

ஒ.—[உகவையால் நெஞ்சமுள்ளுருகி] - எம்பெருமான் தன்னைப் போகவொட்டாதொழிய, அவனைக் கடைக்கணியாதிருந்து, தானும் தோழிமாரும் சிற்றிலிழைக்கை தொடக்கமான லீலாவிநோதவ்யாஜத்தாலே அந்பபரைகளைப்போலே யிருக்க,

---

தம் - ஈஶ்வரனோடொக்க இத்யாதி. த்விதியாவதாரிகையாகப் பழிசொல்லாமைக்கு ஹேத்வந்தரம் - அது என்தான் இத்யாதி. விவரணம் - நீ அல்பம் இத்யாதிவாக்யத்வயமும். கீழ், உகவாதாரென்ற - லௌகிகராகவருளிச்செய்து, அர்த்தாந்தரம் - உன்னுடையமின்னிடை இத்யாதி. இந்தப்பக்ஷத்தில் பழிக்குவிஷயம் - ஈஶ்வரன், வளைக்கிறஇவனையும் வளைப்புண்கிற இவர்களையும் அறிந்தால் ''பாவபந்தமில்லை'' என்ற நிஶ்சயிக்கலாயிருக்க, அதுசெய்யாதே ''பாவபந்தமுண்டு'' என்றுசொல்லுகிறபடி எங்ஙனே ? என்ன - பிரிவாற்றுமல் இத்யாதி. (அ

acharya.org

இவளுடைய வீக்ஷிதாதிகளையொழியத் தான் யரிக்கக்ஷமனல்லனாகையாலே, இவள்கடாக்ஷிக்கைக்காக இவளுடைய சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே சிதற, சிற்றிலழித்த சீற்றத்தாலே தன்னுடைய ஸங்கல்பத்தைமறந்து, அவன்முகத்தைப் பார்த்து அவன் கண்ணழகிலே ஈடுபட்ட பிராட்டி,"நாங்கள் ப்ரீத்யதிசயத்தாலே நெஞ்சு உருகி தாமரைத்தடாகம்போலே மனோஹரமான உன்னுடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படும்படி பண்ணுகைக்காக எங்கள் சிற்றிலையும், நாங்கள் அடுகிற சிறுசோற்றையும் உன் திருவடிகளாலே அழித்தருளினாய்; எங்களுடைய லீலாவிநோதங்களைக்கண்டு ப்ரீதனாய் உன்னுடைய முகவொளிதிகழ முறுவல்செய்து நின்றிலை; இங்ஙனே செய்தவிடம் தக்கோர்மைசெய்தா யல்லை"என்றுசொல்லி, "எம்பெருமானோடு ஸம்ஶ்லேஷியேன்" என்று தான்பண்ணின ஸங்கல்பத்தையும் அவன் தன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே ஶிதிலமாக்கினபடியைச்சொல்லி அவனை இன்னாதாகிறாள்.

ப.—அநந்தரம், இவன் தகைந்தவாறே கடக்கப்போய்ச் சிற்றிலிழைக்க, "நம்மை அநுவர்த்தித்துப்போகாதேஅநாதரித்தார்கள்" என்கிற சீற்றத்தாலே சிற்றிலையழிக்க, நாங்கள் உன்முகஶோபையைப் பார்த்திருந்து சிற்றிலிழையாதபடி இத்தையழித்தாயே! என்றின்னாதாகிறாள்.

உகவையால் - அகவாயிலுகப்பாலே, நெஞ்சம் - நெஞ்சானது, உள்ளுருகி - உள்ளுருகி, உன் - உன், தாமரை - தாமரைபோலேயிருக்கிற, தட - பெரிய, கண் - கண்ணினுடைய, விழிகள் - பார்வைகளாகிற, வலை - வலைக்குள்ளே, அகப்படுப்பான் - அகப்படுத்துகைக்காக, எங்கள் - எங்கள், சிற்றிலும் - சிற்றிலையும், யாம் - நாங்கள், அடு-அடுகிற, சிறுசோறும் - சிறுசோற்றையும், கண்டு - கண்டு, நின் - உன்னுடைய, முகம் - திருமுகத்தில், ஒளிதிகழ - ஒளிதிகழும்படி, முறுவல் - முறுவல், செய்து - செய்து, நின்றிலை - பார்த்துக்கொண்டுநில்லாதே, உன் - உன், திருவடியால் - திருவடிகளாலே, அழித்தாய் - அழித்தாய்; தகவுசெய்திலை - இதிலோர் இரக்கமறச்செய்தாய். இத்தால் - ஆஶ்ரிதருடைய லீலாவிபூதியிற் பாரிப்பை அழிக்குமென்னுமிடம் தோற்றுகிறது.

இ.—ஒன்பதாம்பாட்டில், "'போகவொட்டேன்' என்றால், நினைத்தபரிமாற்றம் பெற்றாலன்றோ இவனுக்கு ப்ரயோஜநமுள்ளது; ஒருதேச விசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே, அந்யபரதை பண்ணுவோம்" என்று சிற்றிலிழைக்கத் தொடங்கினார்கள்; இவர்களுடைய வீக்ஷிதாதிகளைபொழியத் தனக்குச் செல்லாமையாலே, இவர்கள் கடாக்ஷிக்கைக்காகச் சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே அழித்தான்; அத்தாலே இவர்களுக்குச் சீற்றம்பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து அவன்முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்: [உகவையால் நெஞ்சமுள்ளுருகி] - பிரிந்து நெஞ்சைப் புண்படுத்துகையால்வந்த உருகுதல் ஒழிய, எங்களுகவையால் நெஞ்சமுள்ளுருகி. [உன் தாமரைத்தடங்கண்விழிகளின் அகவலைப்படுப்பான்] - தாமரைத்தடாகம்போலே மனோஹரமான உன்னுடைய கண்ணில் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. த்ருஷ்டிவஶ்யத்தாலேயிறே அநந்யார்ஹமாக்குவது. [அழித்தாயுன் திருவடியால்] - உன்சிற்றிலழிக்கவேண்டும் பரிகரம் அமையாதோ இதுக்கு? ஜநதுபலம்ஹாரம் பண்ணுவது ஸங்கல்பத்தாலேயிறே. ஸங்கல்பத்தாலே

acharya.org

யாதல், கையாலேயாதலழிக்கலாகாதோ? [தகவுசெய்திலை] - நிர்஘யர்செய்வதைச் செய்தாய். பிரிந்தபோதே ப்ரணயித்வம் போயிற்றிறே. நீர்மையுடையார் செய்வதும் செய்திலை. "நான்செய்த குறையென்?" என்ன:—[எங்கள் சிற்றிலுமித்யாதி] - எங்கள் லீலைகளைக்கண்டு ப்ரீதனுய், நின்முகவொளிதிகழ முறுவல்செய்து நிற்க, நாங்கள் சிற்றிலைத் தொட்டுக்கொண்டிருந்து கடைக்கண்ணுலே உன்னைப் பார்த்துக்கொண்டிருக்க வைத்திலையே. முழுக்கப்பார்க்கில் எல்லாரோபாதியுமாமே. ப்ரணயியைப்பார்ப்பது கடைக்கண்ணுலேயிறே. உன்னுடைய லீலைபோலே என்றிருந்தாயோ எங்களுடைய லீலையை? கர்மநிவந்யநமாகையாலே த்யாஜ்யமிறே இது. "உன்னேடு ஸம்ஸ்லேஷியேன்" என்று நான்பண்ணின ஸங்கல்பத்தை அழகாலே அழித்தாய்; லீலைகளைத்திருவடிகளாலே அழித்தாய் என்று இன்னுதாகிருள்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. "இவன் 'போகவோட்டேன்' என்று வளைத்துக் கிடந்ததுக்கு ப்ரயோஜநமுள்ளது இவனுக்கு நினைத்தபடி பரிமாறப் பெற்ருலன்றே? ஒரு தேசவிசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே இவன்முகம் பாராதேயிருக்கிறேம்" என்றத்யவஸித்துப் பேசாதே யிருந்தவாறே, "தன்னை நினைத்துக்கொண்டிருந்தோம் என்றிருக்கும்இவன்" என்று "அந்யபரதைதோற்றச் சிற்றிலிழைப்போம்" என்று இழைக்கப்புக, "என்னைப்பாராதே இருப்பதுமன்றிக்கே சிறிது அந்யபரதை பண்ணுவதே!" என்று சிற்றிலையும் சிறுசோற்றையும் தன்திருவடிகளாலே அழிக்க, அத்தாலே அவர்களுக்குச் சீற்றம்பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து அவன்முகத்தைப் பார்த்துச் சொல்லுகிருர்கள். அவனுடைய அபிமதசித்திக்கும் ஸாதநம் திருவடிகள்காணும். அடியுடையார்க்கெல்லாம் சாதித்துக்கொள்ளலாமே.

[உகவையால் நெஞ்சமுள்ளுருகி) - வாராய்! உன்ப்ரவ்ருத்தி வ்யர்த்த ப்ரவ்ருத்திகாண்; பிரிந்து நெஞ்சைப் புண்படுத்துகையாலே வந்த உருகுதலொழிய, எங்களுக்கு உகவையால் நெஞ்சமுள்ளுருகிப் பண்ணவிறே நீ பார்த்தது; அதுசெய்யப்போகாது. [உன்தாமரையித்யாதி] - பகற்கண்டகுழியிலே விழவிட்டகப்படுத்துவான்; த்ருஷ்டிபந்தத்தாலேயிறே அநுங்யார்ஹமாக்குவது. தாமரைபோலே பரிமளத்தையும் குளிர்த்தியையும் சிவப்பையு முடைத்தாய், போக்தாக்களாலுண்டறுக்கவொண்ணுத போக்யதா ப்ரகர்ஷத்தையுடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. [அகவலை] - வலைக்குள்ளே. அகவலை - அகவியவலை என்றுமாம். *கண்ணேன்னும் நெடுங்கயி

ஒன்பதாம்பாட்டு - உகவை இத்யாதி. "அழித்தாயுன் திருவடியால்" என்றத்தைக்கடாக்ஷித்து, தத்தநுகுணமாகஅவதாரிகை - இவன்போகவோட்டேன் இத்யாதி. சிற்றில் - சிறியக்ருஹம். ரஸோக்தி - அவனுடைய இத்யாதிவாக்யத்வயமும். அடியுடையார்க்கு - ஐஸ்வர்யமுடையார்க்கென்றும், திருவடிகளையுடையார்க்கென்றும் அர்த்தத்வயம்.

இவனுடைய ஸங்கல்பவாக்யத்தைச் சொல்லுமவர்களுடைய உட்கருத்தை இவர்கள் வார்த்தையாலே அருளிச்செய்கிருர் - வாராய் இத்யாதி. இவனுடைய ப்ரவ்ருத்திதன்னையும், அதுவ்யர்த்தமானபடியையும் அடைவே சொல்லுகிருர்கள் - பிரிந்து இத்யாதிவாக்யத்வயத்தாலே. உகவை-உகப்பு. "உன்தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய் முறுவலுமாகுலங்கள்செய்ய" என்றத்தைப் பற்ற - 'பகற்கண்டகுழியிலே' என்றது. கண்ணுலே அகப்படுத்துமோ? என்ன - த்ருஷ்டிபந்தத்தாலே இத்யாதி "தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்" என்னக்கடவதிறே.விழி - நோக்கு. "வலை - அகப்படுப்பான்" என்னுதல் - "அகவிய - வலைப்படுப்பான்" என்றுதல். படுப்பான் - படுத்துகைக்காக இத்யர்த்தம். அகவியவலை - நெடியவலை அப்படிநெடியவலையாயிருக்குமோ? என்ன - கண்

acharya.org

றிறே கண்ணிலே யகப்பட்டால், ஜ்வரஸந்நிபதிதரைப்போலப் பிதற்று மித்தனையிறே ; ‘ தாமரைக்கண்ணனை விண்ணோர்பரவுந்தலைமகனை ’’ என்கிறபடியே. [அழித்தாயுன் திருவடியால்] - ஸங்கல்பத்தாலழிக்கலாவது தன்சிற்றிலிறே; இவர்களுடைய சிற்றில் ஸ்பர்ஶித்தழிக்கவேணுமே: உன்சிற்றிலழிக்கும் பரிகரமமையாதோ இதுக்கு? ஜகதுபஸம்ஹாரம் பண்ணுவது ஸங்கல்பத்தாலேயிறே. ஶேஷபூதனுக்குத் திருவடிகள் உத்தேஶ்யமானவோபாதி, ப்ரணயிநிகளுக்கும் திருவடிகளுத்தேஶ்யமாயிறேயிருப்பது. [அழித்தாய்] - வேறுஞ் சிற்றிலையன்றுகாண் நீ யழித்தது ; எங்களகவாயையும் அழித்தாய்காண் ; * சிற்றிலோடெங்கள் சிந்தையும் சிதைத்தாய்காண். காலாலே சிற்றிலையழித்து, கண்ணாலே யெங்களபிஸந்தியையும் அழித்தாய்காண் என்கிறார்கள். [தகவுசெய்திலை] -க்ருபையுடையார் செய்வதைச்செய்திலை. பிரிந்தபோதே ப்ரணயித்வம்போயிற்றிறே ; இனிக்கண்ணுடையார் செய்வதும் செய்திலை. கண்படைத்ததுக்கு ப்ரயோஜநம் நல்லதுகண்டுகொண்டிருக்கவன்றோ ? * உன்முகத்தனகண்களல்லவே ! ‘‘நான் செய்ததுறையென்?’’ என்ன,- [எங்கள்சிற்றிலித்யாதி] - உன் ஸ்ருஷ்டிபோலே அநுபாதேயமோ எங்கள்ஸ்ருஷ்டி? உபாதேயமன்றோ ? ‘‘என்னுடைய ஸ்ருஷ்டி அநுபாதேயமானபடியென் ? உங்கள்ஸ்ருஷ்டி உபாதேயமானபடியென் ?’’ என்னுமே அவன் ; உன்னைப்போலே நெருப்பும் காற்றும் அன்னலுந் துன்னலுமாகவிட்டு கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டித்ததோ இது ? * வண்டல் நுண்மணல் தெள்ளி யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டதன்றோ இது! [யாமடுசிறுசோறுங் கண்டு]- நீ யடுசிறுசோறு நிர்மால்யத்தோபாதி புறம்பு ஒருத்தர்க்கு புஜிக்கலாகாது; நீயே புஜிக்கு மத்தனை ; † (அத்தாபரமாத்மாவிறே). நாங்களடுசிறுசோறு *மூடநெய்பெய்து முழங்கை வழி

ணென்னும் இத்யாதி. கண்களாகிற நெடியகயிறென்றபடி. நாச்சியார்திருமொழி, ‘‘கார்த்தண்’’ இத்யாதி. அப்படி கண்ணழகிலே ஈடுபடுவர்களோவென்ன - கண்ணிலே இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் - தாமரைக்கண்ணனை இத்யாதி. ஸங்கல்பத்தாலே அழிக்கவொண்ணுதோ ? என்ன - ஸங்கல்பத்தால் இத்யாதி. ‘‘திருவடியால் - அழித்தாய்’’ என்றவர்களுடையஹார்த்தபாவம் - உன் சிற்றில் இத்யாதி. அவன்சிற்றில் - ஜகத்தென்னுமத்தையும், அழிக்கும் பரிகரம் - ஸங்கல்பமென்னுமத்தையும் வ்யக்தமாக அருளிச்செய்கிறார் - ஜகதுபஸம்ஹாரம் இத்யாதி. ப்ரணயிநியானவள் காலாலென்னாதே, ‘‘திருவடியால்’’ என்று பூஜ்யமாகச்சொல்லுவானென் ? என்ன - ஶேஷபூதனுக்கு இத்யாதி. ஹார்த்தபாவம் - வேறுஞ்சிற்றிலை இத்யாதி. விவரணம் - சிற்றிலோடு இத்யாதி. நாச்சியார்திருமொழி. சிதைத்தாய் - அழித்தாய் இத்யாத்ஹ. அழித்தப்ரகார மேதென்ன - காலாலே இத்யாதி. ப்ரணயிநி க்ருபைசெய்திலை யென்னலாமோ ? என்ன - பிரிந்த இத்யாதி. தகவு - க்ருபை. ‘‘தகவு’’ என்றதுக்கு அர்த்தாந்தரம் - இனிக்கண்ணுடையார் இத்யாதி. தகவு - ந்யாயம்: ஏகார்த்தமாதல். கண்ணுடையாரென்றது - ஶ்லேஷம்; கண்ணுக்கும், தயைக்கும்பேர். விவரணம் - கண்படைத்ததுக்கு இத்யாதி. இரண்டாமர்த்தத்துக்கு, கண்படைத்தார்க்கு யோக்யமானது செய்திலையென்று ஸப்தார்த்தம். நல்லதுகாணாதபோது கண்படைத்ததுக்கு ப்ரயோஜநமில்லையோ ? என்ன - ‘உன்முகத்தனகண்களல்லவே’ என்று. உன்முகத்திலிருக்கிறவை கண்களல்லவோ இத்யர்த்தஹ. நாச்சியார்திருமொழி. ‘‘எங்கள்சிற்றில்’’ என்றதுக்கு வாஸனை - உன்ஸ்ருஷ்டிபோலே இத்யாதி. அன்னல் - வெய்யில். துன்னல் - சிறுதிவலை. ‘வண்டலித்யாதி’ - நாச்சியார்திருமொழி; ‘‘குண்டுநீர்’’ இத்யாதி. பாசுரத்துக்கர்த்தம் - வண்டலிலுள்ளநுண்ணியமணலைத்தெள்ளி துர்ப்பலைகளான நாங்கள் வளையையுடைய கைகளாலே க்லேஶப்பட்டிட்டதன்றோவென்று. ‘‘யாமடு’’ என்றதுக்கு ஹாவம் - நீ யடு இத்யாதி. நீயேபுஜிக்குமத்தனையென்றது- ‘யவ ரூ ஷ ஹுஷக்ரு ஷ ஹுஷ உஹுஷ தஷ்டு நஷ்’ என்றத்தைப்பற்ற. ‘மூடநெய்பெய்து’ இத்யாதிக்கு-பால்சோறு மூடநெய்யைவிட்டுக் கலந்து முழங்கை வழியிலே நெய்பெருகும்படி கூடியிருந்தென்றார்த்தம். ஸ்வாபதேஶத்தில், அவன்சிற்றிலாவது - லீலா

acharya.org

வாரக் கூடியிருந்து புஜிக்குமதன்றோ? [கண்டு நின்முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே] - எங்களுடைய லீலாவிநோதங்கண்டு ப்ரீதனாய், உன்னுடைய முகவொளிதிகழ மந்தஸ்மிதம்பண்ணி நிற்கமாட்டிற்றிலையே; இங்ஙன்செய்தவிடம் தக்கோர்மை செய்தாயல்லையே என்று இன்னுதாசிறார்கள். [தகவுசெய்திலை] - நாங்கள் சிற்றிலிழைக்கிறோமாகப் பாவித்துக் கடைக்கண்ணாலே உன்முகவொளியையும் முறுவலையுங் கண்டுகொண்டிருக்கவோட்டிற்றிலையே. முழுக்கப்பார்க்கில் எல்லாரோபாதியுமாமே: ப்ரணயியைப் பார்ப்பது கடைக்கண்ணாலேயிறே? எங்ஙனே பாராதேயிருந்து சிற்றிலிழைத்தார்கள்தான்!

பத்தாம் பாட்டு.

நின்றிலங்குமுடியினாய்! இருபத்தோர்கால் அரசுகளைகட்ட
வென்றிநீள்மழுவா!வியன்ஞாலம் முன்படைத்தாய்! [கூடர்!
இன்றிவ்வாயர்குலத்தை வீடுய்யத்தோன்றியகருமாணிக்கச்
நின்தன்னால்நலிவேபடுவோம் என்றும் ஆய்ச்சியோமே.

ஆ.—(நின்றிலங்கு.) இப்படி - எம்பெருமானுடைய அழகாலும் ஸ்வவிஶ்லேஷஜநித நிரவதிகாவஸாதத்தாலுமாகத் தன்னுடைய ஊடலெல்லாந்தீர்ந்து, தன்னையகப்படுத்தின அவனுடைய அழகையும் ஔதார்யகாருண்ய வாத்ஸல்யாதிகுணங்களையும் பேசி, இப்படியே குணவானாயிருந்துவைத்து, விஶ்லேஷபரம்பரைகளாலே எங்களையென்றும் இங்ஙனே நலிவேசெய்துபோனாய்; ஆய்ச்சியோமாய்ப்பிறந்து நாங்கள் உன்னாற்பட்டது உன்னைப்பிரிந்தார்படும் வ்யஸநம் அறியாத நீ யறியாய்காண் என்கிறாள்

ஒ.—[நின்றிலங்கு முடியினாய்] - அந்யபரைகளாய் நேராகப்பாராதேயிருந்த இப்பிராட்டியும் தோழிமாரும் நேரப்பார்க்கைக்காக, இழைக்கிறசிற்றிலைத் திருவடிகளாலே அழித்தருள, அவ்வந்யாயப்பாடறிவிப்பாரைப்போலே, அவனைத் திருவடிகளே தொடங்கித்திருமுடியளவும் நோக்குகையாலே அவனுக்குப்பிறந்த வழகையும், மேன்மையையும், தாங்கள் இவனோடேஸம்ஶ்லேஷிப்போமல்லோமென்றுஅஸிஸந்யிபண்ணியிருக்க அத்தை அழித்த ப்ரஸங்கத்தாலே இருபத்தொருபடிகால் க்ஷத்ரியகுலத்தையெல்லாம் கோலியறுத்த ஆண்பிள்ளைத்தனத்தையும், பண்டு ப்ரளயகாலத்தில் அஸத்கல்பமான ஜகத்தை உண்டாக்கினாற்போலே இடைச்சாதியடையத்தலையெடுக்கும்படிவந்து திருவவதாரம் பண்ணியருளின உபகாரத்தையும் பேசாநின்றுகொண்டு ஊடல்தீர்ந்து, அவனோடு ஸம்ஶ்லேஷித்து, ஏவம்விதனான உன்னால் இடைப்பெண்களான நாங்கள் நலிவேபடப் பிறந்தோமென்று தங்களுடைய ஆர்த்தியெல்லாம்தீரத் தாங்கள்பட்டநோவை அறிவிக்கிறாள்.

விபூதி. "எங்கள்சிற்றில்" என்றுதொடங்கி, "நின்றிலை - தகவுசெய்திலை" என்றந்வயித்துஹாவம் - எங்களுடைய இத்யாதிவாக்யத்வயம். திருமுகை - ப்ரகாசிக்கை. தக்கோர்மை - க்ருபை, ந்யாயமும். இன்னுதாகை - வெறுக்கை. கீழ்வாக்யவிவரணம் - நாங்கள்சிற்றில் இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபோடு - எங்ஙனே இத்யாதி.

(சு)

acharya.org

ப.—அநந்தரம், "முகவொளிதிகழமுறுவல்செய்து நின்றிலையே" என்று முகம்பார்த்து வார்த்தைசொன்னவளவிலே தங்களகவாயில் மறந்தீர்ந்து, தங்களை பஹு முகப்ரவ்ருத்தியாலே அவனுபிமுக்யம் பண்ணுவித்தபடியை நினைத்து, ஸர்வப்ரகார ரக்ஷகனுன உன்னுலே நாங்கள்இப்படிநலிவுபடுவதே! என்று ஸமாஹிதையாய் வார்த்தை சொல்லுகிருள்.

(ஸமஸ்த ஜகத்ரக்ஷணத்துக்கும் ஒருநாளும் தாழ்வில்லாமையாலே), நின்று - நிலைநிற்க, இலங்கு - விளங்குகிற, முடியினுய் - திருவபிஷேகத்தையுடையையாய், இரு பத்தோர்கால் - இருபத்தொருபடிகால், அரசு - ராஜாக்களை, களைகட்ட - உன்மூலகம் பண்ணின, வென்றி - வென்றியையுடைத்தான, நீள் - பெரிய, மழுவா - மழுவையுடை யையாய்! வியல் - விஸ்தீர்ணமான, ஞாலம் - ஜகத்தை, முன் - ஸ்ருஷ்டிகாலத்திலே, படைத்தாய் - உற்பாதித்தவனுப், இன்று - இக்காலத்திலும், இ - இந்த, ஆயர்குலம் - இடைக்குலமானது, வீடு - தங்கள்குடியோடே, உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாக, தோன் றிய - அவதீர்ணனுன, கருமாணிக்கச்சுடர் - நீலரத்ந ப்ரபோஜ்ஜ்வலமான வடிவையுடை யவனே! நின்தன்னுல் - (இப்படி ஸர்வப்ரகாரரக்ஷக னுகையினுலே எங்களுக்கு நாய கனுமாய் எங்கள்மறத்தையும் அழித்து அழிந்தஸத்தையுமுண்டாக்கி எங்களோடுறவும் உடையையாய் அநுபாவ்யமான வடிவையுமுடைய) உன்னுலே, ஆய்ச்சியோம் - அறி வில்லாத இடைக்குலத்திலே பிறந்த நாங்கள், என்றும் - என்றும், நலிவு - நலிவு, படு வோமே - படும்படியாவதேயென்று ஸமாஹிதையானபின்பு முன்புபட்ட நலிவை நினைத் துச் சொன்னுளாகிறது

"நானதஞ்சுவன்" என்று முதற்பாட்டிலேவந்த ஒருமைக்குப்பின்பு வந்த பன்மையெல்லாம் - ஆத்மநிபஹுவசந மாதல், தோழிமார்களையுங்கூட்டி அவர்களுக் காகச் சமைந்துசொன்னதாதல்.

இ.—பத்தாம் பாட்டில், ஸீலையைத் திருவடிகளாலேஅழித்த சீற்றத்தாலே முன்புத்தையவற்றை மறந்து, அவ்வந்யாயப்பாட்டைஅறிவிப்பாரைப்போலே, "இவனை முகம்பாரோம்" என்ற ஸங்கல்பமழிந்து முகத்தைப் பார்த்தார்கள்; நெஞ்சில் மறமெல் லாம்போய் அந்தத்திருவடிகளே தொடங்கித் திருமுடியளவும்பார்க்க, அத்தாலே அவ னுக்குப்பிறந்த விஶ்லேஷத்தைச்சொல்லுகிருள்: [நின்றிலங்கு முடியினுய்] - என்னைத் தோற்பிக்கையாலே நிலைநின்று விளங்காநின்ற திருவஹிஷேகத்தை உடையவனே! அஹி ஷிக்தக்ஷத்ரியர் விஜயாஹிஷேகம் பண்ணினுற்போலே, எங்களைத் தோற்பித்த பின்பு முடியும் நற்றரித்து விளங்குவதுஞ்செய்த தென்கை. இத்தலையில் ஸத்தை உண்டாம் அத்தாலே ரக்ஷகத்வம் நிலைநின்றபடி. [இருபத்தோர்கால் இத்யாதி] - "உங்களஹிஸங் யியைக்குலைத்து முகம்பார்க்கப் பண்ணினேமிறே" என்ன, உன்னேடு எதிரிட்டாரில் உன்னைவென்றுருண்டோ? இருபத்தோர்படிகால் க்ஷத்ரியகுலத்தைக் கோலியறுத்த ஆண்பிள்ளையல்லையோ? எதிரிகளை மழுவாலே அழித்தாற்போலே, அநுகூலரை அழ காலே அழிப்புகி. "வாம்ஸாஂஷ்ரஷிவிதாவஹாரிணி" என்று ஆண்களை அழிக்கக்கடவரீ, அவலைகளை அழிக்கச்சொல்லவேணுமோ? [வியன்ஞாலமுன்படைத் தாய்] - ப்ரளயத்திலே உருமாய்ந்து கிடந்த ஊமியை உண்டாக்கினுற்போலேயிறே ப்ரணயரோஷத்தாலே அழிந்த எங்களை உண்டாக்கினபடி. வியன் - விஸ்மயம். ப்ரள யங்கொண்ட ஊமியை எடுத்தாற்போலேயிறே விரஹப்ரளயங்கொண்ட எங்களை எடுத்த

acharya.org

படி. அங்கு விலக்குவாரில்லாமையாலே செய்யலாம்; நிஷேயிக்கச்செய்தேயன்றோ உண்டாக்கிற்று. [இன்று இத்யாதி] - இன்று இவ்விடைச்சாதி ஸபரிகரமாக உஜ்ஜீவிக்கும்படி தோன்றினவன். வீடுய்ய - ஸபரிகரமாக உய்ய. [கருமாணிக்கச்சுடர்] - ப்ரணயரோஷத்தாலேஇறுத்திருக்கிற எங்களை மேல்விழுந்து உன்னழகை அநு஭விப்பித்தவனே! [நின்தன்னால் நலிவே படுவோமென்றும்]-இவ்வநு஭வம் ஸ்வப்நகல்பமாய், ஆற்றுமையிறே யெங்களுக்கு நிலைநின்று போருவதென்று தாங்கள் பட்டதோவை அறிவிக்கிறார்களென்னுதல்; "ஜிதஜெ" என்றும், "தோற்றோம்மடநெஞ்சம்" என்றும் தாங்கள் தேற்றபடியை அவன்தனக்குச் சொல்லுகிறார்களாகவுமாம். [ஆய்ச்சியோமே] - இடக்கையும் வலக்கையும் அறியாத நாங்கள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. "நின்முகவொளிதிகழமுறுவல்செயதுநின்றிலையே" என்று விழுக்காடறியாதே வாய்தப்பச் சொல்லிக்கொண்டு நின்றார்கள்; காலால் அழித்தது சிற்றிலையன்றே: இவர்கள்நெஞ்சில் மறத்தையேயிறே; அந்த மறம் போனவாறே மேல் நோக்கி பாதாதிகேசாந்தமாகப் பார்த்தார்கள்; தங்களை ஜயிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலேதோற்றும்படி நின்றான்; அவ்வடிவில் பிறந்தவேறுபாட்டைச் சொல்லுகிறார்கள்.

[நின்றிலங்குமுடியினாய்] - இவர்களை ஜயிப்பதற்குமுன்பு தலைச்சுமையாய்க் காணும் கிடந்தது; இப்போதாயிற்று நற்றரித்து ஒளிவிடத் தொடங்கிற்று. சில ராஜாக்கள் தந்தாமெதிரிகளை யழித்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணி நிற்குமாபோலே, முன்பே முடிசூடியிருக்கச்செய்தேயும் இவர்களைத் தோற்பிப்பதற்குமுன்பு அஸத்ஸமமாய்க் காணும் இருந்தது. ராவணாதிகளை ஜயித்ததுக்குச் சூடினமுடிபோலல்லவிறே ப்ரணயிநிகளை ஜயித்ததுக்குச்சூடின முடியிருப்பது; இவர்கள் அபிஸந்ந்யைக் குலைத்துப் பொருந்தவிட்டுக் கொண்டபின்பு காணும் மேன்மையையுடையனாய் உஜ்ஜ்வலனுமாய் முடியும்நற்றரித்தது. ஸுவிஷிவ்வுவறுஜாயாம்ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்க்ருதக்ருத்ய:" (அபிஷிச்யஸலங்காயாம்ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்ய:)- "ஸ்ரீபரதாழ்வானைப்போலே 'நான் முடிசூடேன் நீர்முடிசூடும்' என்று முடிக்குஇறுக்கிற் செய்வதென்?" என்று உடம்புவெளுத்

பத்தாம்பாட்டு.—நின்றிலங்கு இத்யாதி. "நின்றிலங்குமுடியினாய்" இத்யாதியைக்கடாகஷித்து அவதாரிகை - நின்முகம் இத்யாதி. 'விழுக்காடறியாதே'யென்றது - மேல் ஸம்ஸ்லேஷிக்குமதறியாதேயென்றபடி. வாய்தப்பச்சொல்லுகைக்கு ஹேதுவேதென்ன - காலாலழித்தது இத்யாதி. இந்தப்பாட்டுக்கவதாரிகை - அந்தமறம் இத்யாதி.

ஸுஸ்த்திரமாய் ப்ரகாசியாநிற்கிற முடியையுடையவனே என்று ஸப்தார்த்தம். இப்போது ஸுஸ்த்திரமாய் ப்ரகாசியாநிற்கிறதென்கையாலே-இதுக்குமுன்பு அதில்லையென்று தோற்றிற்றிறே; அத்தையருளிச்செய்யாநின்றகொண்டு, "நின்றிலங்கு" என்கிறத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் - இவர்களை இத்யாதி வாக்யத்வயத்தாலே. "நின்று, இலங்கு" என்கிறபதத்வயத்துக்குமர்த்தம்- 'நற்றரித்து ஒளிவிடத்தொடங்கிற்று' என்று. உக்தத்துக்குத்ருஷ்டாந்தம் - சிலராஜாக்கள் இத்யாதி. வீராபிஷேகம் - அபிமந்யுவுக்கும், விஜயாபிஷேகம் - அர்ஜுநனுக்குமாக விஹாரங்கண்டுகொள்வது. அபலைகளைஜயித்து முடிசூடினனென்றது அதிசயமோ? என்ன - ராவணாதிகளை இத்யாதி. "நின்று, இலங்கு, முடியினாய்" என்றபதத்ரயார்த்தத்தையும் அவரோஹணக்ரமத்தாலே விவரிக்கிறார் - இவர்கள்அபிஸந்ந்தியை இத்யாதி. இவர்களைப்பொருந்தவிட்டுக்கொண்டு அத்தாலே க்ருதார்த்தனாயிருந்ததுக்கு த்ருஷ்டாந்தம் - ஸுவிஷிவ்வு இத்யாதி. "ஸுவிஷிவ்வுக்ருதக்ருத்ய:" என்கிறதென்? அபிஷேகம்பண்ணுகிற தருந்தலோவென்ன - ஸ்ரீபாதாழ்வானை இத்யாதி. உடம்புவெளுத்திருந்த பெரு

acharya.org

துக்காணும் இவரிருந்தது; "ஒருபடி அத்தலைச்சுமையைக் கழித்துப்போந்தோம்; இதுவும் தலைச்சுமையாகிற் செய்வதென்?" என்று. இக்ஷ்வாகுவம்ஶயர்க்குப் பணியிறே முடிக்கு இறுய்க்கை. அடிக்கு இறுயாதிருக்கையும் முடிக்குஇறுய்க்கையுமிறே ஸ்வருபம். "அதுகிடக்க; உங்கள் அவிஸந்ஶியைக்குலைத்து உங்களைவென்றேமிறே" என்றுன். [இருபத்தோர்காலித்யாதி] - மிடுக்கரான ராஜாக்களை இருபத்தொருபடிகால்வென்ற உனக்கு அவலைகளான எங்களை வெல்லுகை பெரியபணியோ? "எனக்கு" என்றிருப்பாரையும் உனக்காக்கிக்கொள்ளவல்ல உனக்கு உனக்கேயா யிருப்பாரை வெல்லுகை பெரியஏற்றமோ? ஆசுரப்ரக்ருதிகளாய் நாட்டைப் பட அடித்துத்திரிகிற க்ஷத்ரியகுலத்தைக் கிழங்கெடுத்த மிடுக்கனே! களைகட்டுகையாவது - எடுத்துப் போகடுகை. ராஜாக்களை வென்றவுனக்கு இடைச்சிகளை வென்றுயென்பது ஓரேற்றமோ? † (ராஜாக்களை யுந்மூலமாம்படிபண்ணின வெற்றியையுடைத்தான பெரியமழவையுடையவனே!) [வியன்ஞாலமுன்படைத்தாய்]-ப்ரளயத்திலே உருமாய்ந்துகிடந்த பூமியையுண்டாக்கினுற்போலேயிறே ப்ரணயரோஷத்தாலேயழிந்த எங்களையுண்டாக்கினபடி. வியன் - விஸ்மயம். ப்ரளயங்கொண்ட பூமியையெடுத்தாற்போலே, விரஹப்ரளயங்கொண்ட எங்களை யெடுத்தபடி. அங்கு விலக்குவார்இல்லாமையாலே செய்யலாம்; "கழகமேறேல்" என்று நிஷேதிக்கச்செய்தேயன்றே உண்டாக்கிற்று? [இன்றித்யாதி] - "வஹுஸ்யாழி" (பஹுஸ்யாம்) என்று போதுவானஸ்ருஷ்டி தேடிப்போகவேணுமோ? இவ்விடைக்குலத்தேவந்து பிறந்து, இன்று இவ்விடைச்சாதியை ஸபரிகரமாக வடிவைக் காட்டி ரக்ஷித்தவனன்றே? ஆஶ்ரிதவிஷயத்திற்பண்ணின ஓரம் தன் பேறு என்னுமிடம் வடிவிலேதோன்றும்படிகாணும்இருக்கிறது. [வீடேய்ய]-"ஸவாதுவளதுஹமண?"

மாளுடைய வுட்கருத்தை யருளிச்செய்கிறார் - ஒருபடிஅத்தலை இத்யாதி. 'உடம்புவெளுத்துக்காணும் இவரிருந்தது' என்றவாக்யத்தை - மேலில்வாக்யத்திலும் கூட்டிக்கொள்வது. ஸ்ரீபரதாழ்வான் முடிக்கிறுய்த்தால்இவர்க்கு முடிக்கிறுய்க்கவேணுமோ? என்ன - இக்ஷ்வாகு இத்யாதி. ஸ்ரீவிபீஷணாழ்வானை இக்ஷ்வாகுவம்ஶஜ ரென்றது - "ஸுவ்ரூஹி ஸ்ரீ தத்ரநராக்ஷஸாநாம்ஸுவாஸுவ" என்றத்தைப்பற்ற. அவர்கள்தான் முடிக்கிறுய்க்கைக்கு அடி யேதென்ன, ஸ்வருபஜ்ஞாநம்பிறந்த வுரப்பெண்கிறார் - அடிக்கிறயாது இத்யாதி. அதுகிடக்கவென்றது - "நின்றிலங்குமுடியினுய்" என்றெண்ணைக்கொண்டாடுகிறது கிடக்க என்றபடி. "உங்களைவென்றேம்" என்ற சொன்னவனுக்கு மூன்றுவகையாகவுத்தரம் சொல்லுகிறார்கள் - மிடுக்கரான இத்யாதியாலும், எனக்கேன்றிருப்பாரை இத்யாதியாலும், ராஜாக்களை இத்யாதியாலும். அதாவது - காயிகமும்மாநஸமும் ஜாதிப்ரயுக்தமுமான தோல்விகளென்றபடி. ஸப்தார்த்தம் - ஆசுரப்பக்ருதிகளாய் இத்யாதி. இருபத்தொருதலைமுறை ராஜாக்களை யுந்மூலநம்பண்ணினவெற்றியையுடைத்தான பெரியமழவை யுடையையாய் இத்யர்த்தம். தங்கள் ப்ரணயரோஷத்தைப்போக்கிச் சேர்த்துக்கொண்டபடி சொல்லுகிறவிடத்திலே ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறதுக்குபாவம் - ப்ரளயத்திலே இத்யாதி. தங்களுக்கு ப்ரளயமுண்டோவென்ன - ப்ரளயங்கொண்ட இத்யாதி. முன்படைத்தாய் - மஹாப்ரளயாந்தத்திலே படைத்தாயென்றபடி. வியன்ஞாலம் - விஸ்மயநீயமான பூமியென்னுதல், விஸ்தீர்ணமான பூமியென்னுதல். ஜகத்ஸ்ருஷ்டியத்தனை அருமையுண்டோவென்ன, அதிலும் இது அதிகமென்கிறார் - அங்குவிலக்குவார் இத்யாதி வாக்யத்வயத்தாலே. "கருமாணிக்கச்சுடர்" என்றதுக்கு மூன்றுபாவம். தன்வடிவழகாலே இடைக்குலத்தை வசீகரித்தவனென்ற பூர்வபாவியாக ஒருபாவம்; இத்தையருளிச்செய்கிறார் - ஸபரிகாமாக இத்யாதியாலே. இத்தை உஜ்ஜீவிப்பித்தபின்பு அவன்வடிவு புகர்பெற்றதென்ற அபரபாவியாக இரண்டாம் பாவம்; இத்தையருளிச்செய்கிறார் - ஆஶ்ரிதவிஷயத்தில் இத்யாதி. இடைக்குலத்தை உஜ்ஜீவிப்

acharya.org

(ஸபுத்ரபௌத்ரஸ்ஸகணஃ) என்கிறபடியே ஸபரிகரமாகவுய்ய. [தோன்றிய] - ஆவிர்ப்பவித்த. ப்ரணயரோஷத்தாலே "சேரோம்" என்றிருக்கிற தங்களைச் சேர்த்தபடியாலே 'கருமாணிக்கச்சுடர்' என்கிறார்கள். [நின்தன்னாலித்யாதி] - சத்ருக்களாய் முடிந்துபோகப் பெறாதே, ஸம்ஸாரிகளாய் அந்யபரராய்ப்போகப் பெறாதே,நீ நலியவும் நாங்கள்நோவுபடவுமாம்படி சமைந்துவிட்டதிறே! 'இரண்டுதலையுங்கூடி மேல்விழுந்தணைத்துக்கொண்டு நின்று சொல்லுகிற வார்த்தையிறே. இவ்வளவும் தங்கள் வெற்றியேயிறே சொல்லிப்போந்தது; இப்போதிறே தங்கள்தோல்விக்குஇசைந்தது. †(இவ்வநுபவம் ஸ்வப்நகல்பமாய்ஆற்றாமையிறே எங்களுக்கு நிலைநின்று போருவதென்று, தாங்கள் பட்டநோவை யறிவிக்கிறார்களென்னுதல்; அன்றிக்கே, "ஜிதகெ' (ஜிதந்தே) என்றும், "தோற்றோம்மடநெஞ்சம்" என்றும் தாங்கள் தோற்றபடியை அவன்றனக்குச் சொல்லுகிறார்களாகவுமாம்.) [நலிவேபடுவோம்] - இதுதான் எங்களுக்கு மெய்யாகப்புகாநின்றதோ? எங்களுடையதேயிறே எங்களுக்கு ஸித்தித்துவிடுவது. இவர்களுடையதாவது - "கூடிலும் நீங்கிலும் யாம்மெலிதும்" என்று மெலிவேயாயிருக்கை. [ஆய்ச்சியோமே] - இடக்கையும் வலக்கையும் அறியாத நாங்கள். (கo)

பித்தவனும், எங்கள் ப்ரணயரோஷந்தீர்க்கையாலே யுஜ்ஜ்வலனானவனே என்று மூன்றும்ஹாவம்; இத்தையருளிச்செய்கிறார் - ப்ரணயரோஷத்தாலே இத்யாதி. பூர்வபாவியான அர்த்தவிவரணமாதல். "கருமாணிக்கச்சுடர்" என்று - ஸம்புத்தி. "நின்தன்னால் நலிவேபடுவோம்" என்றவர்களுடைய ஹார்த்தஹாவமாதல், "நலிவே" என்ற அவதாரணத்துக்குஹாவமாதல் - சத்ருக்களாய் இத்யாதி. "அரசு களைகட்ட வியன்ஞாலம்" என்றபதங்களைப்பற்ற - சத்ருக்களாய் என்றும், ஸம்ஸாரிகளாய் என்றும் அருளிச்செய்தது. இத்தால் - ராஜாக்களையும் ஸம்ஸாரிகளையும் வ்யாவர்த்திக்கிறதென்று கருத்து; "நலிவேபடுவோம்" என்றது - ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிற வார்த்தையோ? என்ன - இரண்டுதலையும் இத்யாதி. இதுக்குநியாமகமேதென்ன - இவ்வளவும் இத்யாதி. ஸம்ஸ்லேஷம் சித்தித்திருக்க, "என்றும் - நலிவேபடுவோம்" என்பானென்? என்ன - இதுதான் இத்யாதி. என்றும் - ஸர்வகாலமும். "நலிவேபடுவோம்" என்று - தங்கள்துக்கம்சொல்லுகிறார்களாதல், தோல்வி சொல்லுகிறார்களாதல்; முந்தினது - 'சத்ருக்களாய்' இத்யாதிவாக்யத்திலேகண்டுகொள்வது. அதாவது - ஸம்ஸ்லேஷமல்பமாய், தாங்கள் பட்டநோவே அதிகமென்றறிவிக்கிறார்களென்றபடி. தோல்வி சொல்லுகிறது - 'இவ்வளவும் தங்கள்வெற்றியேயிறே' இத்யாதிவாக்யத்திலே கண்டுகொள்வது. 'கூடிலும்நீங்கிலும்யாமெலிதும்' - திருவிருத்தம்பதினாறும்பாட்டு, "பலபலவூழிகளாய்" இத்யாதி. 'கூடிலும்நீங்கிலும்யாமெலிதும்' என்றதுக்கர்த்தம் - கூடில் "மேல்பிரிவுவருகிறதோ?" என்னும்பயத்தாலும், நீங்கில் விஸ்லேஷவ்யஸநத்தாலும் மெலிவுதோமென்றபடி. ஆய்ச்சியோம் - அறிவில்லாத இடைச்குலத்திற்பிறந்தநாங்கள், என்றும் - நலிவேபடுவோம் இத்யங்வயம். "கானதஞ்சுவன்" என்ற ஏகவசநத்துக்குப் பின்புசொன்ன பன்மையெல்லாம் - ஆத்மநி பஹுவசநமாதல், தோழிமாரையுங்கூட்டிக்கொண்டாதல். (கo)

---

acharya.org

பதினோராம் பாட்டு.

ஆய்ச்சியாகிய அன்னையால் அன்றுவெண்ணெய்வார்த்தையுள்சீற்றமுண்
கூத்தஅப்பன்தன்னைக் குருகூர்ச்சடகோபன் [டழு
ஏத்தியதமிழ்மாலை ஆயிரத்துள்இவையுமோர்பத்து இசையோடும்
நாத்தன்னால்நவிலஉரைப்பார்க்கு இல்லைநல்குரவே.

ஆ—(ஆய்ச்சியாகிய.) - அதிஸ்நேஹநியான யசோதைப்பிராட்டி, "வெண்ணெய்களவுகண்டாய்" என்று பொடிந்தபோதுபோலே, ஆழ்வார் தாம் ப்ரணயகோபத்தாலே "எம்பெருமானோடு கலப்பேனல்லேன்" என்றுஅகல, அது பொறுக்கமாட்டாமே தளர்ந்த தளர்த்தியை அநுஸந்தித்து இனியராய் அவ்வெம்பெருமானை ஏத்தின இத்திருவாய்மொழியை, இப்பாவவ்ருத்தியின்றிக்கே சொன்னார்க்கும், எம்பெருமான் ஸந்நிஹிதனாயிருக்கச்செய்தே †பிறங்கித் தாம்பட்ட துக்கம் படவேண்டா வென்கிறார்.

ஓ.— [ஆய்ச்சியாகிய அன்னையால்] - அதிஸ்நேஹநியான யசோதைப் பிராட்டி 'வெண்ணெய் களவுகண்டாய்'என்று பொடிந்தபோதுபோலே ஆழ்வார் தாம் ப்ரணயகோபத்தாலே "எம்பெருமானோடே கலப்பேனல்லேன்" என்றகல, அதுபொறுக்கமாட்டாமை தளர்ந்த தளர்த்தியை அநுஸந்தித்து இனியராய், எம்பெருமானை ஏத்தின இத்திருவாய்மொழியை இப்பாவவ்ருத்தியின்றிக்கே வாங்மாத்ரத்தாலே சொன்னார்க்கும் எம்பெருமான் ஸந்நிஹிதனாய் இருக்கச்செய்தே † பிறங்கி ஆழ்வார் தாம்பட்ட துக்கம் படவேண்டாவென்கிறார்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியைச்சொல்லுமவர்களுக்கு பகவதலாபரூபமான தாரித்ர்யமில்லையென்று஫லத்தை யருளிச்செய்கிறார்.

ஆய்ச்சியாகிய - இடைக்குலத்திலேபிறந்த, அன்னையால் - யசோதையாகிற தாயாராலே, அன்று—, வெண்ணெய்வார்த்தையுள் - வெண்ணெய்க்களவு வார்த்தை பிறந்தவளவிலே, சீற்றமுண்டு-சிறப்பட்டு,அழு - அழுதுதோப்புக்கண்டமிட்ட,கூத்தன்-கூத்தையுடையவனான, அப்பன்தன்னை - லோகோபகாரகனை, குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார், ஏத்திய - ஸ்தோத்ரரூபமாகவருளிச்செய்த, தமிழ்மாலை - த்ராவிட ஸந்தர்ப்பரூபமான, ஆயிரத்துள்ளும் - ஆயிரத்துள்ளும், இவை - (விமுகரை அபிமுகராக்கிக் கொண்ட அத்விதியமான) இவை, ஓர்பத்தும்-பத்தையும், இசையோடும் - இசையோடே கூட, நாத்தன்னால் - நாவுக்கு ப்ரயோஜநமாக, நவில - செறிய, உரைப்பார்க்கு - உரைப்பார்க்கு, நல்குரவு - பகவதலாபமாகிற தாரித்ர்யம், இல்லை - இல்லை. இது - ஆசிரியத்துறை.

இ.—நிமமத்தில், இப்பத்தை ஸாதரமாகக்கற்குமவர்கள், நான் பட்ட க்லேஶம் படார் என்கிறார்.

[ஆய்ச்சியாகிய அன்னையால்] - அன்னையென்று பொதுவிலே சொன்னால் தேவகிப்பிராட்டிபக்கலிலும் ஏறு மென்று; 'ஆய்ச்சியாகிய' என்று விசேஷிக்கிறார். முலையுண்டு வளர்ந்த விடத்திலேயிறே அச்சமுள்ளது! [அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டு] - வெண்ணெய் களவுபோயிற்றென்கிற வார்த்தையிலே "இவனே

† பிறங்கல்-செறிதல். ஸ்ஹரித்தல்

acharya.org

செய்தான்'' என்று தாயார் பொடியப் பொடியுண்டு கண்ணும் கண்ணீருமாய் நின்றாற் போலேயாயிற்று, இன்று இவர்கள் ''திரளிற்புகுரவேண்டா'' என்றபோது நின்றநிலை. [அழுகூத்தவப்பன்] - அழுகிறதசையில் கால்மாறியிட்டபோது வல்லாராடினாற்போலே யிருந்தபடி. [அப்பன்தன்னை] - அந்நிலையைக்காட்டிச் சேர்த்துக்கொண்டு தம்மையுண் டாக்கினபடி. [குருகூர்ச்சடகோப னேத்திய தமிழ்மாலை] - ப்ரணயரோஷம் போன வாறே, ''போகுநம்பீ'' என்றும், ''புள்ளுவம்பேசாதே'' என்றும் சொன்னவை ஏத் திற்றாய்விட்டது. [இவையுமோர் பத்து] - அத்விதீயமானபத்து; ஆஸ்ரிதரோடுண் டான ஸாவஸ்யத்தை வெளியிட்ட பத்து. [இசையெடும்] - வாங்மாத்ரத்தாலே. [நவில உரைப்பார்க்கு] - ஸாதரமாகச் சொல்லுவார்க்கு. [இல்லை நல்குரவே] - தூதுவிட்டு, அவன் வரக்கொண்டு, ''புகுரவொட்டோம்'' என்று பட்ட க்லேசம் படவேண்டா. சோறும் புடைவையும் கிடைக்குமென்கிறதன்று; ஸு஖வத்தாரித்ர்ய மில்லை யென்கிறது. ''சென்றொன்றி நின்ற திரு'' என்கிறபடியே அவன் தானேவந்து மேல்விழ, நித்யா நு஭வம் பண்ணப்பெறுவர்கள்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை ஸாதரமாகச் சொல்ல வல்லார்க்கு பகவத்தாரித்ர்ய மில்லை யென்கிறார்.

[ஆய்ச்சியாகியஅன்னையால்]-க்ஷத்ரியஸ்திரீ யொருதாயும் இடைச்சி யொருதாயு மாகையாலே, பொதுவறுத்து இடைச்சியாகிய தாயாலேயென்கிறார். தேவகிப்பிராட்டியா ரடிக்கில் இத்தனை நோவாதுகாணும். ''தாயெடுத்தசிறுகோலுக்குளைந்தோடி'' என்கிற படியே ''இவர் நம்மை யதட்டுவதே !'' என்றுஉளைந்திறே கிடப்பது. தைவமறியத் தாயா னதே யிறே தேவகியார்பக்கலுள்ளது ; முலைச்சுவடறிந்ததும் முகம்பழகிற்றும் வளர்ந்தது மெல்லாம்இங்கேயிறே. [அன்றுவெண்ணெய்வார்த்தையுள்]-ஊரிலே ''வெண்ணெய்களவு போயிற்று'' என்றார்கள்; அவ்வளவிலே ''நாமிறே இதுக்குஇலக்கு'' என்று அழப்புக்கான். ''மடம் மெழுகுவாரார்'' என்ன,''அம்ஸோரோரியன்'' என்றார்கள்; ''இப்பரப்பெல்லாம் என் னாலே மெழுகப்போமோ ?'' என்றான், அதுபோலே. ஆரேனுமேதேனும் செய்யிலும் இவ னைச் சொல்லும்படியிறே இவன்தீம்புதான்; ''பல்லாயிரவர் இவ்வூரில்பிள்ளைகள்தீமைகள் செய்வாரெல்லாம் உன்மேலன்றிப்போகாது'' என்னும்படியிறே யிருப்பது. [சீற்றமுண்டழு

நிகமம் - ஆய்ச்சி இத்யாதி. ''நவிலவுரைப்பார்க்கில்லைகல்குரவு'' என்றதைக் கடாக்ஷித் தவதாரிகை - இத்திருவாய்மொழியை இத்யாதி. 'பகவத்' அநுபவ 'தாரித்ர்யம்' என்றுகூட்டுவது.

அன்னையாலென்னாதே, ''ஆய்ச்சியாகியவன்னை'' என்று விசேஷித்ததுக்குபாவம் - க்ஷத்ரி யஸ்த்ரீ இத்யாதி. ''இடைச்சியாகிறதாய்'' என்றதுக்குக் கருத்தேதென்ன - தேவகிப்பிராட்டியார் இத்யாதி. யசோதைப்பிராட்டியடித்தால் நோமோ? என்ன - தாயெடுத்த இத்யாதி: திருமொழி எட்டாம்பத்து மூன்றாந்திருமொழி அஞ்சாம்பாட்டு, ''வாயெடுத்த'' இத்யாதி. உளைந்து - ஈடுபட்டு, பயப்பட்டென்றபடி. சிறுகோல் - வைக்கோலென்றபடி. மாதாருத்வம் உபயஸாதாரணமாயிருக்க, அவளடித்தால் பொறுக்கப்போகாதென்கைக்குஹேதுவேதென்ன - தைவமறிய இத்யாதிவாக்யத் வயம். வெண்ணெயுண்டழுவென்னாதே ''வார்த்தையுள் அழு'' என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - ஊரிலே இத்யாதிவாக்யத்வயத்தாலே. தன்னை யென்னாதிருக்க, ப்ரஸங்கமாத்ரத்தாலே தன்மேலே யாரோபித்துக்கொள்ளுகிறதுக்கு த்ருஷ்டாந்தம் - மடம்மெழுகுவார் இத்யாதி. தன்னையென்னாதிருக் கத் தன்பேரிலே ஏறிட்டுக்கொண்டுஅவன் அழுகைக்கு ஹேதுஏது? என்ன - ஆரேனும் இத்யாதி. உக் தார்த்தத்துக்கு ப்ரமாணம் - பல்லாயிரவர் இத்யாதி. பஞ்சலக்ஷங்குடியான இவ்வூரில் தீமைசெய்யு மவர்களான பிள்ளைகள் அநேகமாயிரம்பேர்களிறே. 'எல்லாமுன்மேலன்றிப்போகாது' - தாம்தாம்செய்த

acharya.org

மும் போறுக்கமாட்டாத நித்யஸூரிகள், திருவிண்ணகர்பூமியிலேயாகையாலே இங்கே வந்து பொருந்திவர்த்தியாநிற்பர்கள். அப்படிப்பட்ட திருவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன். [பாவியேன்மனத்தே] - *மின்னிடைமடவாரில் அவன்மேல் விழத் தாம்இறுய்த்தபடியைநினைத்து, 'பாவியேன்' என்கிறார். நித்யஸூரிகள் தன்பக்கலிலேவந்து மேல்விழ, அத்தைத் தள்ளித் தான் என்பக்கலிலேவந்து மேல்விழாநிற்கக் கிடீர் நான் ''அல்லேன்'' என்றது. [மனத்தேயுறைகின்ற] - இப்போது நித்யஸூரிகளும் அந்த இருப்புங் கிடக்கக் கிடீர் என்னெஞ்சிலேபுகுந்து நித்யவாஸம்பண்ணிநின்றான். [பரஞ்சுடரே] - தனக்குப்புறம்புண்டான வாஸஸ்த்தாநங்கள் கிடக்க, என்னெஞ்சிலே புகுந்துநின்றது எனக்குக் கார்யஞ்செய்தானாயிருக்கையன்றிக்கே, ''தன்பேறு'' என்று தோற்றும்படி உஜ்ஜ்வலனானான். *மின்னிடைமடவாரில் - ''இவரையிழக்கிறோமோ?'' என்று வந்தஉருவுதல்தீர, இவரைப் பெற்றபின்பு அத்தாலே ''நின்றிலங்குமுடியினாய்!'' என்கிறபடியே வடிவிலேபிறந்த வேறுபாடு இருக்கிறபடி. (சு)

ஏழாம் பாட்டு.

பரஞ்சுடர்உடம்பாய் அழுக்குப்பதித்தஉடம்பாய்
கரந்தும் தோன்றியும் நின்றும் கைதவங்கள் செய்தும்விண்ணோர்
சிரங்களால் வணங்கும் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்
வரங்கொள்பாதமல்லால்இல்லை யாவர்க்கும்வன்சரணே.

ஆ.—(பரஞ்சுடர்.) - நிரவயிக தேஜோமய திவ்யரூபனாய், ஸமஸ்தஹேயாஸ்பத ஸர்வஜகச்சரீரனாய், ஸமஸ்தஹேயரஹிதனாய், துர்விஜ்ஞேயனாய் ஆஸ்ரிதார்த்தமாகப் பிறந்தருளியும் அவர்களோடு ஸம்ஶ்லேஷித்தும் ப்ரதிகூலர்க்குக் கைதவம்செய்தும், விண்ணோர் சிரங்களால் வணங்கும் திருவிண்ணகர்சேர்ந்த பிரானுடைய திருவடிகளல்லது ஒருவர்க்கும் ஆத்மரக்ஷகமில்லையென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில்,எத்தனையேனுமளவுடையார்க்கும் வலிய புகல் அவனல்லதில்லையென்கிறார். [பரஞ்சுடருடம்பாய்] - அப்ராக்ருதமான திருவுடம்பை யுடையனாய். [அழுக்குப்பதித்த வுடம்பாய்] - ஜமச்சரீரனாய். [கரந்துந்தோன்றியும் நின்றும் கைதவங்கள்செய்தும்] - அதீந்திரியனாயும் கண்காணவந்து திருவவதாரம்பண்ணியும் ஆஸ்ரிதர்க்காக அத்திருவுடம்போடே நெடுநாள் வர்த்தித்தருளியும் இப்படி ஸுலபனாய் வைத்து, தன்னை உகவாதார்திறத்து வஞ்சநங்கள் பண்ணியும்.

என்றதுக்கும்அடைவே யர்த்தாந்வயம் - அல்லாத இத்யாதி வாக்யத்வயத்தாலே. ''தண்டமும்,தண்மையும்'' என்றதோடு புநருக்தமாகையாலே, அநுக்ரஹநிக்ரஹங்களாயென்றது - அவற்றின்கார்யமான ப்ரீத்யப்ரீதிகளைச் சொல்லுகிறது. ''மேவித்தொழும்'' என்றதுக்குபாவம் - இந்த்ராதிகள் இத்யாதி. பூமியிலேயாகையாலே யென்றது - பூமியிலேயிருக்கையாலே பூமியுத்தேஶ்யமென்றபடி. ''பாவியேனென்றது - *மின்னிடைமடவாரிலே இறுய்த்தபடியைநினைத்து'' என்பானென்? என்ன - நித்யஸூரிகள் இத்யாதி. ''உறைகின்ற'' என்ற வர்த்தமாநார்த்தம் - இப்போது நித்யஸூரிகள் இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - மின்னிடை இத்யாதி. (க)

acharya.org

ப.—அநந்தரம், ஆஸ்ரிதஅநாஸ்ரிதவிஷயமான ஆகாரபேதத்தையுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளே ஸர்வர்க்கும் ப்ரவலாஶ்ரயமென்கிறார்.

பரஞ்சுடருடம்புஆய் - ஆஸ்ரிதாநுஹாவ்யமான அப்ராக்ருதவிக்ரஹத்தையும், (அநாஸ்ரிதர்க்கு அநுஹாவ்யமான), அழுக்கு - ஹேயதையால், பதித்த - பூர்ணமான, உடம்புஆய் - ஜகதாகாரத்தையும் உடையனாய், கரந்தும் - (அநாஸ்ரிதவிஷயத்தில்) ப்ரகாசியாதேயும், தோன்றியும் - (ஆஸ்ரிதவிஷயத்தில்) ப்ரகாசித்தும், நின்றும் - (ப்ரகாசிக்கும் விஷயத்தில்) ஸ்த்திரனாயும், கைதவங்கள் செய்தும் - (இதரவிஷயத்தில்) அஸ்த்திரனாயும், ஆய் - இருப்பானாய், விண்ணோர் - ப்ரஹ்மருத்ராதிகள்,(ஸ்வாபிமத ஸித்த்யர்த்தமாக), சிரங்களால் - தந்தாந்தலைகளாலே, வணங்கும் - வணங்கும்படி, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - சேர்ந்த, பிரான் - ஸர்வேஶ்வரனுடைய, வரம் - ஸமாப்யயிக ஔரித்ரமான ஶ்ரைஷ்ட்யத்தை, கொள் - உடைய, பாதம் - திருவடிகள், அல்லால்- ஒழிய, யாவர்க்கும் - ஸர்வசேதநர்க்கும், வன் - அலயஸ்த்தலமாம்படி ப்ரவலமான, சரண் - புகலிடம், இல்லை - வேறில்லை.

இ.—ஏழாம்பாட்டில், எத்தனையேனும் அளவுடையார்க்கும் வலியபுகல் அவனல்லதில்லை யென்கிறார்.

[பரஞ்சுடரும்பாய்] - நிரவயிக தேஜோரூபனாய்: அப்ராக்ருதமான திருமேனியையுடையனாய். "தெஜஸாம்ராஶிஸ்ஜிதி" [அழுக்குப்பதித்த வுடம்பாய்] - ஜகச்சரீரனாய். [கரந்தும்] - "யஶோதாநவெஷ" என்று அவற்றுக்கு அத்ருஷ்டனாய்க்கொண்டு அந்தராத்மாவாய் நின்றும். [தோன்றியும்] - "ஸுவிஹுதுகம்ஸஹாதநா" என்று ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியும். [நின்றும்] - அவ்வோ விடங்களிலே பதினாராயிரமாண்டு நூறாண்டு நின்றும். [கைதவங்கள்செய்தும்] - தன்படிகள் ஶிஶுபாலாதிகளுக்குத் தோற்றாதபடிபண்ணியும், ஆஸ்ரிதர்க்குத் தோற்றும்படி பண்ணியும். கைதவம் - வஞ்சநம். [விண்ணோர் இத்யாதி] - ப்ரஹ்மாதிகள் தலையாலே வணங்கும்படி திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரகன். [வரங்கொள் இத்யாதி] - வரையாதே எல்லார்க்கும் ஆஶ்ரயிக்கலாம்படியான ஶ்ரேஷ்டமான திருவடிகள். [யாவர்க்கும் வன்சரணே] - சிறியார்பெரியார் என்று அன்றிக்கே எல்லார்க்கும் தஞ்சமானபுகல் வேறில்லை. அல்லாதவை ஒட்டைஒடத்தோடே ஒழுகலோடமாய்க் கழுத்துக்கட்டியாயிறே யிருப்பது.

ஈடு.—ஏழாம்பாட்டு. எத்தனையேனும் அளவுடையார்க்கும் வலியபுகல்அவனல்லதில்லை யென்கிறார்.

[பரஞ்சுடருடம்பாய்] - சுத்தஸத்த்வமயமான அஸாதாரண திவ்யவிக்ரஹத்தையுடையனாய். "தெஜஸாம்ராஶிஸ்ஜிதி" (தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்). [அழுக்குப்

ஏழாம்பாட்டு—பரஞ்சுடர் இத்யாதி. "வரங்கொள்பாதமல்லாலில்லை" இத்யாதியைப்பற்ற அவதாரிகை - எத்தனையேனும் இத்யாதி. மேலே "அழுக்குப்பதித்தவுடம்பாய்" என்ற - ஹேயமாய் ரஜஸ்தமோ மிஶ்ரமான உடம்பைச் சொல்லுகையாலே, ஸத்ப்ரதிகோடித்வேந விவக்ஷித் தருளிச்செய்கிறார் - சுத்தஸத்த்வ இத்யாதி. நிரவதிக தேஜோரூபமான திருமேனியை யுடையவனென்ற ஸப்தார்த்தம். இதுக்குப்ரமாணம் - தெஜஸாம் இத்யாதி. தோன்றாதபடிநிற்கிறவன் தோன்றுகிறதெதுக்

acharya.org

பதித்தவுடம்பாய்] - குணத்ரயவஶ்யமான ஜகச்சரீரனாய். [கரந்தும்] - இவற்றுக்கு அந்தராத்மாவாய்ப் புக்கு நிற்கச் செய்தே, "யமாத்மா ந வேதி" (யமாத்மா ந வேத) என்று இவற்றுக்குத் தோன்றாதபடி நின்று, இவற்றின் ஸத்தையை நோக்கியும். [தோன்றியும்]-*காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்திருப்பார்க்குக் காணலாம்படி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியும். [நின்றும்]-நூறாண்டு பதினாராயிரமாண்டு நின்றும். அவ்விடங்களிலே, [ஸகதவங்கள் செய்தும்] - க்ருத்ரிமங்களைப்பண்ணியும். அதாவது - அவதரித்துநிற்கச்செய்தே தன்படிகள் சிசுபாலாதிகளுக்குத் தோற்றாதபடி பண்ணியும், ஆஸ்ரிதர்க்குத் தோற்றும்படிபண்ணியும். [விண்ணோரித்யாதி] - ப்ரஹ்மாதிகள் 'தலைபடைத்தப்ரயோஜநம் பெற்றோம்' என்று வணங்கும்படி திருவிண்ணகரிலே நிற்கிற உபகாரகன். [வரங்கொள்பாதமல்லாலில்லை] - எத்தனையேனும் தண்ணியாரும் கிட்டலாம்படி ஶ்ரேஷ்ட்டமான திருவடிகளல்லது. [யாவர்க்குமித்யாதி] - எத்தனையேனும் கிழார் கிழார்க்கும் அதுவல்லது வலியபுகலில்லை. அவனை யொழிந்த ஶரண்யரடங்கலும் இவனைக் கொண்டு முழுகும்பேர்; இவனைக் கொண்டு கரையேற்றவல்ல வலியபுகல் அவன்திருவடிகளல்லதில்லை. அடியே பிடித்து ஜீவிக்கில் ஜீவிக்குமத்தனை. (எ)

எட்டாம் பாட்டு.

வன்சரண்சுரர்க்காய் அசுரர்க்குவெங்கூற்றமுமாய்
தன்சரண் நிழற்கீழ் உலகம் வைத்தும் வையாதும்
தென்சரண் திசைக்குத் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்
என்சரணென்கண்ணன் என்னையாளுடை என்னப்பனே!

ஆ.—(வன்சரண்.) - தன் திருவடிகளை ப்ராபிக்கைக்கு விரோதியான ஸமஸ்த பாபங்களையும் போக்கி ஆஸ்ரிதரைத் தன் திருவடிகளின் நிழலிலே வைத்தருளும் ஸ்வபாவனாய், ஆஸ்ரிதவிரோதிகளைத் தன் திருவடிகளிற் சேராதே அவர்களுக்கு அதிபயங்கர ம்ருத்யுபூதனாயிருந்த எம்பெருமான், தென்திசைக்குப் புகலிடமாகத் திருவிண்ணகரிலே புகுந்தருளியிருந்து எனக்கு ப்ராப்யமாய், எனக்கு த்ருஷ்டியாய் என்னைக் கொண்டு ஸர்வஶேஷவ்ருத்தியுங் கொண்டருளி எனக்கு ஸ்வாமியானான் என்கிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், எனக்கு ஶரணமான மாத்ரமேயல்ல; மற்றுமெல்லாம் திருவிண்ணகர் சேர்ந்தபிரான் என்கிறார். [தன்சரணிழற்கீழ்உலகம்வைத்தும்

ப்ர.—[பரஞ்சுடருடம்பாய்]—வ்யூஹஶரணரு கெ, "யவ்யாத்ரஶரீரம்யஸ்ய நஜ்ஞதொரோயஶ்யதி - யமாத்மா நவேதி."

காக? என்ன - காணவாராய் இத்யாதி. அவ்விடங்களிலே - ராமக்ருஷ்ணாத்யவதாரங்களிலே. ஆஸ்ரிதர்க்கு - அர்ஜுநாதிகளுக்கு வணங்குகிறது தலையாலேயாயிருக்க, "சிரங்களால்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - ப்ரஹ்மாதிகள் இத்யாதி. வரங்கொள் - வரமான. திருவடிகளுக்கு ஶ்ரேஷ்ட்டதையேதென்ன - எத்தனையேனும் இத்யாதி. கிழார்கிழார்க்கும் - பெரியவர்க்கும் பெரியரானவனுக்கும். கிழார் - பெரியவர். "வன்சரண்" என்றதுக்குஹாவம் - அவனையொழிந்த இத்யாதி. ரஸோக்தி - அடியே இத்யாதி. திருவடிகளையேபிடித்தென்றும், முதலிலே பிடித்தென்றும். (எ)

acharya.org

வையாதும்] - அநந்யப்ரயோஜநரை பரிக்ரஹித்தும் அல்லாதாரை வஹிஷ்கரித்தும். [தென்சரண் திசைக்கு] - தெற்குத்திக்குக்கு சரணாக. [என்கண்ணன்] - எனக்குஸுலபன். [என்னையாளுடை யென்னப்பனே] - என்னை அடிமைகொண்டு உபகரித்தவன்.

ப.—அநந்தரம், அநுகூல ப்ரதிகூல விஷயங்களான ஸ்வபாவங்களையுடைய ஸர்வேஶ்வரனும் ஆஸ்ரிதவத்ஸலனான க்ருஷ்ணன் எனக்கு அஸாதாரணமான புகலிடமென்கிறார்.

சுரர்க்கு - அநுகூலமான தேவர்களுக்கு, வன் - அப்ரதிஹதமான, சரண் - புகலிடம், ஆய் - ஆய், அசுரர்க்கு - ப்ரதிகூலரான அசுரர்களுக்கு, வெம் - க்ரூரமான, கூற்றமும் - ம்ருத்யுவும், ஆய் - ஆய், உலகம் - தாத்ருஶ விஹாரத்தையுடைய லௌகிகரை, தன் - தன், சரண்நிழல்கீழ் - பாதச்சாயையிலே, வைத்தும் - ஒதுக்கியும், வையாதும் - ஒதுக்காதும், ஆய் - இருப்பானாய், தென்திசைக்கு - தெற்குத் திக்குக்கு, சரண் - புகலிடமான, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - சேர்ந்த, பிரான் - ஸர்வேஶ்வரனாய், என் - என்னை யங்கீகரிக்கைக்காக, கண்ணன் - க்ருஷ்ணனாய், என்னை ஆளுடை - என்னை யடிமைகொண்ட, என்னப்பன் - ஸ்வாமியானவன், (ஸர்வப்ரகாரத்தாலும்), என் - எனக்கு, சரண் - ஸாதாரணமான புகலிடம்.

இ.—எட்டாம்பாட்டில், எல்லார்க்கும் புகலென்றமாத்ரமன்றிக்கே, எனக்கு விஶேஷித்துப் புகல்என்கிறார்; எனக்குப் புகலான மாத்ரமன்றியிலே மற்றுமெல்லாம் திருவிண்ணகர் சேர்ந்தபிரான் என்கிறார். [வன்சரணித்யாதி] - தேவஜாதிக்குத் தன்னை யழியமாறி ரக்ஷிக்கும்புகலாய், தத்ப்ரதிகூலர்க்கு வெங்கூற்றம் - "அந்தகன் தண்ணீர்" என்னும்படியான கூற்றமாய், தன்பாதச்சாயையிலே அநந்யப்ரயோஜநரை வைத்தும் அல்லாதாரை வஹிஷ்கரித்தும். [தென்சரண்திசைக்கு] - "உக்ஷிணாஶிகூ தாயெந ஶரணாவணுகூடுணா" என்கிறபடியே தெற்குத்திக்குக்கு ஶரணமான. [என்சரண்] - எனக்குப் புகலானவன். [என் கண்ணன்] - எனக்குஸுலவ்யனானவன். [என்னையாளுடையென்னப்பனே] - என்னை அடிமைகொண்டு போகிறவன், எனக்கு உபகாரகன்.

ஈடு.—எட்டாம்பாட்டு. எனக்குப் புகலான மாத்ர மன்றிக்கே மற்றுமெல்லாம் திருவிண்ணகர்சேர்ந்தபிரா னென்கிறார். † (எல்லார்க்கும் புகலென்றமாத்ரமன்றிக்கே, எனக்கு விசேஷித்துப்புகலென்கிறாராகவுமாம்.)

[வன்சரண்சுரர்க்காய்] - தேவர்களுக்காகத் தன்னை அம்புக்கு இலக்காக்கி அவர்களைநோக்கும் வலியரக்ஷகனாய். [அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்] - ஆஸுரப்ரக்ருதிகளுக்கு "அந்தகன்தண்ணீர்" என்னும்படி வெவ்வியகூற்றமுமாய். [தன்சரணித்யாதி] -

---

எட்டாம்பாட்டு.—வன்சரண் இத்யாதி. "என்சரணென்கண்ணன்" இத்யாதியைக்கடாக்ஷித்து அவதாரிகை-எனக்குப்புகலான இத்யாதி. கீழிற்பாட்டில்-எல்லார்க்குப்புகலென்றார்; இதில் - எனக்குப் புகலானமாத்ரமன்றிக்கே ஸர்வவிதபந்துவுமென்கிறாரென்றபடி. தேவர்களுக்கு ஶரணப்ரகாரத்தைக் காட்டாநின்றுகொண்டு ஸப்தார்த்தம் - தேவர்களுக்காக இத்யாதி. "வெங்கூற்றம்" என்றதுக்குஹாவம் - ஆஸுரப்ரக்ருதிகளுக்கு இத்யாதி. அந்தகன் தண்ணீரென்னும்படியென்றது -

† குண்டலிதக்ரந்தம் ப்ரகஷிப்தம்.

acharya.org

தன்னுடைய பாதச்சாயையுள்ளே, அநுகூலரான அர்ஜுநாதிகளையிட்டுக்கொண்டும், ஸம்பந்தமொத்திருக்கச்செய்தே, ப்ரதிகூலரான துர்யோதநாதிகளைப் புறம்பிட்டும். [தென்சரண் திசைக்கு] - "தக்ஷிணாதிக்ரூதாயெந ஶரணாவுணாகூடுணா" (தக்ஷிணாதிக்ருதாயேநஶரண்யாபுண்யகர்மணா) என்கிறபடியே, "தென் - திசைக்கு - சரண்"-தேற்குத்திக்குக்குப் புகலிடமான திருவிண்ணகரிலே கிட்டின உபகாரகன். [என்சரண்] - எனக்குப் புகலிடம். [என்கண்ணன்]-எனக்கு ஹவ்யனானவன். [என்னை யாளுடை] - என்னை யடிமைகொள்ள உரியவன். [என்னப்பன்] - எனக்கு உபகாரகன். உலகமேன்பது - உயர்ந்தோர்மாட்டு. (அ)

ஒன்பதாம் பாட்டு.

என்னப்பன்எனக்காயிகுளாய் என்னைப்பெற்றவளாய்
பொன்னப்பன்மணியப்பன் முத்தப்பன்என்னப்பனுமாய்
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தஅப்பன்
தன்னைப்பாரில்லப்பன் தந்தனன்தனதாள்நிழலே.

ஆ.— (என்னப்பன்.)-*சுட்டுரைத்த நன்பொன்னொளியையும் அத்யுஜ்ஜ்வலமான ரத்நத்தினொளியையு முடைத்தான திருவுடம்பை யுடையனாய், அழகியனாய்த் தன்னைப்பாரின்றியே யிருந்த திருவிண்ணகர் சேர்ந்தஅப்பன், தன்னழகாலே எனக்கு ஸ்வாமியாய், தன்னுடைய ஸௌஶீல்யத்தாலே பெற்றதாயும் வளர்த்ததாயும் பண்ணக்கடவ ஸ்நேஹத்தை என்பக்கலிலே பண்ணி, ஸ்வவிஶ்லேஷஜநிதமான என்னுடைய நிரவயிக ஸந்தாபமெல்லாம் போம்படி அதிஶீதளமாய் ம்ருதஸஞ்ஜீவநமான தன் திருவடிகளின் நிழலை எனக்குத் தந்தருளினனென்கிறார்.

ப்ர.—[வன்சரண் இத்யாதி]—[தென்சரண் திசைக்கு]— ஶரணாகாணை- [கஷ] "நிஹதாஹ்ரதாஸாஷ்ரூ ஶோகாநாம் ஹிதகாரியா । தக்ஷிணாதிக்ரூதா யெந ஶரணாவுணாகூடுணா ॥ தவைஷ்ரதாஶ்ரவேஷம் ப்ரஹாவாதிவ்ஸ்ரராக்ஷவெஷ் । திமியம் தக்ஷிணாஶாஸா ஷ்ரூஶ்ரதெநாவஹுஜ்ரதெ॥ அஉ॥"

ம்ருத்யுவானவன் குளிர்ந்தவனென்னும்படியென்கை. "தென் - திசைக்கு - சரண்" என்றந்வயம். ஸப்ரமாணமாக இதுக்கர்த்தம் - தக்ஷிணா இத்யாதி. "தக்ஷிணாதிக்ரூதாயெந ஶரணாவுணாகூடுணா । தவைஷ்ரதாஶ்ரவேஷம் ப்ரஹாவாதிவ்ஸ்ரராக்ஷவெஷ்" இத்யாரண்யகாண்டே. என்னையாளுடை - என்னையாளுடையவனித்யர்த்தம். "உலகம்" என்றது - அநுகூலரான அர்ஜுநாதி வாசகமாமோ? என்ன - உலகமென்பது இத்யாதி. உயர்ந்தோர்மாட்டு - பெரியோரிடத்திலே வாசகமாய்க்கொண்டு வர்த்திக்கு மென்றபடி. (அ)

acharya.org

ஒ.—ஒன்பதாம்பாட்டில், என்னுடைய ஶ்ரமமெல்லாந்தீரும்படி தன்னுடைய பாதச்சாயையை எனக்கு, "நானல்லேன்" என்ன, வலியத்தந்தானென்கிறார்.

[என்னப்பனெனக்காய்] - எனக்கு உறுதியான என்பிதாவாய்.

[இகுளாய்] - தோழியாய். [பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய்] - பொன்னும்மணியும் முத்தும்போலேயும் ஹோக்யனாய், எனக்கு அவ்வளவன்றிக்கே மிகவும் உபகாரகனாய். [திருவிண்ணகர் சேர்ந்தவப்பன்] - என்போல்வார்க்குஎளியனும்படி திருவிண்ணகரிலே வருகையாகிற உபகாரத்தைப்பண்ணினவன். [தன்னொப்பாரில்லப்பன்] - உபகாரகனுமிடத்தில் தனக்கு ஒப்பில்லாதவன்.

ப.—அகந்தாம், பரஸ்பரவிருத்தாகாரமான வஸ்துவர்க்கமும் ஸப்ருஹணீய வஸ்துக்களும் தனக்கு ப்ரகாரமாக வுடையனான தன்னுடைய உபகாரகத்வத்துக்கு ஒப்பில்லாத ஸர்வேஶ்வரன், தன்னுடைய பாதச்சாயையை எனக்குத் தந்தருளினானென்கிறார்.

எனக்கு - எனக்குஅஸாதாரணனாய்,என் - ஸத்தாஹேதுவாயிருந்துள்ள, அப்பன் - பிதா, ஆய் - ஆய், இகுள் - அந்தபுரம்ஸ்த்வத்துக்கு விருத்தமான ஸ்த்ரீத்வத்தையுடைய செவிலித்தாயானவள், ஆய் - ஆய், என்னைப் பெற்றவள் ஆய் - அவளைப்போலே வளர்த்து விடுகையன்றிக்கே பெற்றவளான வேறுபாட்டையுடைய நற்றாயாய், பொன் அப்பன் - பொன்போலே தன்னுடையஸ்ப்ருஹணீயதையை ப்ரகாசிப்பித்தும், மணி அப்பன்-(அதிற்காட்டில் ஔஜ்ஜ்வல்யத்தாலும் மஹார்ஹதையாலும் வேறுபட்ட) ரத்நம் போலே தன்னுடைய தேஜஸ்விதையை ப்ரகாசிப்பித்தும், முத்து அப்பன்-(அதிற்காட்டில் நீர்மையாலும் குளிர்த்தியாலும் வ்யாவ்ருத்தமான) முத்துப்போலே தன் சீதளமான நீர்மையை ப்ரகாசிப்பித்தும், என்அப்பன் உம் - (இப்படி பஹுமுகமாக) எனக்குபகாரகனும், ஆய் - ஆய், மின்ன - ஒளிவிடும்படி, பொன் - பொன்னான, மதிள் - மதிளாலே, சூழ் - சூழப்பட்ட, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - வர்த்திக்கிற, அப்பன் - ஸர்வஸ்வாமியாய், (இப்படி ஸர்வப்ரகாரோபகாரகத்வத்துக்கு), தன் - தனக்கு, ஒப்பாரில் - ஒப்பில்லாத, அப்பன் - மஹோபகாரகனானவன், தன் - தன், தாள் - திருவடிகளின், நிழல் - நிழலை, தந்தனன் - எனக்குத் தந்தருளினான்.

இ.—ஒன்பதாம்பாட்டில், எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன்பாதச்சாயையை, "அல்லேன்" என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார்.

[என்னப்பனெனக்காய்]-"ஊதாநாம்யொZவுயுவிதா" என்கிறபொதுவன்றிக்கே, எனக்கேஆன பிதாவாய். [இகுளாய்] - தோழியாய். இது தமிழர் நிர்வாஹம். நம்முடையவர்கள் "செவிலித்தாய்" என்று நிர்வஹிப்பர்கள். தாய்க்குத்தோழியாயிருக்குமிறே செவிலித்தாய்: அத்தைச்சொல்லுகிறது. [என்னைப் பெற்றவளாய்] - உடம்பு நொந்து பெற்றவளாய். [பொன்னப்பன் இத்யாதி] - பொன்னும்மணியும் முத்தும்போலே எனக்குஉபகாரகன். [மின்னப்பொன் இத்யாதி] - மின்னுகின்ற பொன்மதிள்சூழ்ந்த திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகையாகிற உபகாரத்தைப் பண்ணினவன். [தன்னொப்பாரில்லப்பன்] - உபகாரகரில் தன்னோடொப்பாரில்லாத உபகாரகன். ப்ரணயரோஷத்தாலே நான் அகலப்புக, தாழநின்று பொருந்தவிட்டுக்கொண்டவன். [தந்த

acharya.org

னன் தனதாள்நிழலே] - தன்தாள்நிழல் தந்தான்; தன் பாதச்சாயையைத்தந்தான். "அழித்தா யுன்திருவடியால்" என்கிறபடியே என்மமோரமத்தைத் திருவடிகளாலே அழித்துத் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்டான்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. எனக்குஶரணமான மாத்ரமல்ல, மற்றுமெல்லாம் அவனேயென்கிறார். எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன் பாதச்சாயையை, "அல்லேன்" என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார்.

[என்னப்பனெனக்காய்]-எனக்கு அஸாதாரணனாய் ஸத்தாஹேதுவாயுள்ளபிதா வாய். க்ஷாமகாலத்திலே ப்ரஜையை விற்றுண்ணும் தமப்பனைப்போலன்றியே, தன்னை யழியமாறியும் என்னைநோக்கக்கடவ பிதாவாய். [இகுளாய்] - இகுளையென்று தோழிக் குப்பேராய், அத்தைக்குறைத்து, இகுளேன்றுகிடக்கிறது. இத்தால் சொல்லிற்றாயிற்று - எனக்கு வ்ருத்தகீர்த்தநம்பண்ணுகைக்குத் தோழியுமாய். [என்னைப்பெற்றவளாய்]-வளர்த் துக்கொள்ளியான தாயைப்போலன்றியே, பத்துமாஸம் வயிற்றிலேவைத்து நோக்கிப்பெற்ற தாயாய். [பொன்னப்பனித்யாதி] - வேறே ஹோக்யமாய்க்கொண்டு உபகாரகமாவன சில வஸ்துக்களுள; எனக்குஅவ்வோமுகங்களேல்லாம்தானாய்நின்றுஉபகரித்தவன்.†(பொன்னும் மணியும் முத்தும்போலே எனக்குபகாரகன்.) [மின்னப்பொன்னித்யாதி] - மின்னாநின் றுள்ள பொன்மதிளாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலேநின்ற உபகாரகன். [தன்னெப்பா ரில்லப்பன்] - சிலர்க்கு ஒன்றை உபகரிக்குமிடத்தில், தன்னோடொக்க உபகரிக்கவல்லார் இல்லாதபடியான மஹோபகாரகன். இதுக்குச் சீயாருளிச்செய்யும்படி; - "மின்னிடை மடவாரிலே அவன்வந்துமேல்விழ, 'நீ எனக்குவேண்டா' என்று நான் தள்ளத்தள்ள; நீஉனக்கு ஹிதமறிந்தாயோ? நான்உனக்குவேணுங்காண் என்றுதன்னையெனக்குத்தந்தவன்" என்று. [தந்தனன் தனதாள்நிழலே] - "உன்னையொழிந்தவெய்யிலே யெனக்கமையும்" என்று நான் அகலப்புக, "அழித்தாயுன்திருவடியால்" என்று தன்னுடைய திருவடிகளாலே என்மமதையைப்போக்கி, பாதச்சாயையை எனக்குத்தந்தான். அடிபட்டவாறே, "எனக்கு" என்று வைத்தவற்றையும் போகடுவர்களே. (கூ)

ஒன்பதாம்பாட்டு.—என்னப்பன் இத்யாதி. "என்னப்பனெனக்காயிகுளாய்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - எனக்கு ஶரணம் இத்யாதி. "தந்தனன் தனதாள்நிழல்" என்றத்தைப்பற்ற அவதாரிகாந்தரம் - எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் இத்யாதி.

என்னப்பனெக்ஞதே, "எனக்கு"என்று விசேஷித்ததுக்குஹேது - க்ஷாமகாலத்திலே இத்யாதி. எனக்கேயான வென்னப்பனாயென்று ஸம்தார்த்தம். "இகுளாய்" - இகுளையாயென்றபடி. "பெற்றவன்" என்றதுக்குவாஸனை - வளர்த்துக்கொள்ளி இத்யாதி. 'ஹோக்யமாய்க்கொண்டு'- சுகத் தைக்கொடுத்து. 'உபகாரகமாவன' என்று கூட்டுவது. "தன்னெப்பாரில்லப்பன்" என்கைக்கு - அல் லாதாரிற்காட்டில் இவன்பண்ணின உபகாரமேதென்ன-இதுக்குச் சீயர் இத்யாதி. "தந்தனன்" என் கையாலே - வலியவே தந்தா னென்கிறார். நிழலுக்கு ப்ரதிகோடித்வேக 'வெய்யில்' என்றது. "திரு வடிகளாலே மமதையைப்போக்கினான்" என்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - அடிபட்ட வாறே இத்யாதி. அடியென்று - திருவடிகளுக்கும், ப்ரஹாரத்துக்கும் பேர். (கூ)

---

† குண்டலிக்ரந்தம்க்வாசித்கம்.

acharya.org

பத்தாம் பாட்டு.

நிழல்வெய்யில்சிறுமைபெருமைகுறுமைநெடுமையுமாய்
சுழல்வனநிற்பனமற்றுமாய் அவையல்லனுமாய்
மழலைவாய்வண்டுவாழ்திருவிண்ணகர்மன்னுபிரான்
கழல்கள் அன்றிமற்றோர்களகணிலங்காண்மின்களே.

ஆ.—(நிழல்.)-ஹாயாதபஅல்பமஹத் தீர்க்கஹ்ரஸ்வ சராசரங்களை ப்ரகாரமாகவுடையனாய், மதுரமாகப்பாடுகிற வண்டுகள்வாழுகிற திருவிண்ணகர் என்னோடு ஸம்ஶ்லேஷிக்கப்பெற்ற தேச மாகையாலே "இனி ஆத்மாந்தமாக இவ்விடத்தை விடேன்" என்றுஎழுந்தருளியிருந்த எம்பெருமானுடைய திருவடிகளல்லது நமக்கு மற்றொரு கதியில்லை. அவனுடைய கடாக்ஷம் பெறுவதற்குமுன்பு என்னுடைய ஸத்தையில்லாமையாலும், அவன் கடாக்ஷித்தருளினவாறே நானுளனாகையாலும் நமக்கு அவனல்லது கதியில்லை என்னுமிடம் எல்லார்க்கும் ப்ரத்யக்ஷிக்கலா மென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், அவனுடைய திருவடிகளல்லது மற்றொருரக்ஷகமில்லை என்னுமிடத்தை புத்திபண்ணுங்கோ ளென்கிறார். [சிறுமை பெருமை] - அணுத்வ மஹத்த்வங்கள். [குறுமைநெடுமை]-நடுவுள்ள ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன]-ஸ்யாவரஜங்கமங்கள். [அவையல்லனுமாய்] - இவற்றில்இவனுக்கு வ்யாப்திகர்மநிவந்தநமல்லாமையாலே தன்பக்கல் அவற்றின்தோஷம் தட்டாதொழிகை. [மழலைவாய் வண்டு] - இனியமிடற்றோசையையுடைய வண்டு.

ப.—அநந்தரம், இப்படி பரஸ்பரவிருத்தாகாரமான ஸகலசராசரங்களையும் விபூதியாகவுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளல்லது வேறுரக்ஷகமுடையோ மல்லோம்; இத்தை நிரூபித்துக்கொள்ளுங்கோ ளென்று உபதேசித்து முடிக்கிறார்.

நிழல் - தாபஶாந்திகரமானசாயையும், வெய்யில் - தாபகரமான ஆதபமும், சிறுமை - சிறுமைக்கெல்லையான அணுத்வமும், பெருமை - பெருமைக்கெல்லையான மஹத்த்வமும், (மத்யமபரிமாணங்களிலுண்டான), குறுமை - ஹ்ரஸ்வத்வமும், நெடுமையும் - தீர்க்கத்வமும், ஆய் -, சுழல்வனநிற்பன - சராசராத்மகமான, மற்றும் - மற்றுமுள்ள பதார்த்தங்களும், ஆய்—,(இப்படி ஸர்வஶரீரியாகநிற்கச்செய்தே), அவை - அவற்றினுடைய ஸ்வபாவத்தை, அல்லனும் - உடையவனல்லாதவனும், ஆய்-—, மழலை - முக்யமான, வாய் - வாக்ய்யவஹாரத்தையுடைய, வண்டு - வண்டுகள், வாழ் - ஸ்வஹோர்த்யலாபத்தாலே வாழும்படியான, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, மன்னு- நித்யவாஸம்பண்ணுகிற, பிரான் - ஸர்வேஶ்வரனுடைய, கழல்கள் - திருவடிகளை, அன்றி - ஒழிய, மற்று - வேறு, ஓர் - ஒரு, களைகண் - ரக்ஷகவஸ்துவை, இலம் - உடையோமல்லோம்; காண்மின்கள் - (இது) நிரூபித்துக்கொள்ளுங்கோள்.

இ—பத்தாம்பாட்டில், அவனுடைய திருவடிகளல்லது வேறு ரக்ஷகமில்லையென்று புத்திபண்ணுங்கோள் என்கிறார். [நிழல் வெய்யில்] - சீதஹேதுவான நிழலும், உஷ்ணஹேதுவான வெய்யிலும். [சிறுமை பெருமை]-அணுத்வமஹத்த்வங்கள். [குறுமை

acharya.org

நெடுமை]-மத்யமபரிமாணவஸ்துக்களிலுண்டானஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன]-ஸ்யாவரஜங்கமங்கள். [மற்றுமாய்] - அநுக்தமான ஸர்வமுமாய். [அவையல்லனுமாய்] - கஜ்ஜதஷொவெஷொஸஹ்ஷ்ஷனுயிருக்கை. [மழலைவாய் வண்டுவாழ் திருவிண்ணகர்] - மழலைப்பேச்சையுடைய வண்டுகள் தந்தாம்அநிமதங்கள்பெற்று வாழ்கிற ஊர். [மன்னுபிரான்இத்யாதி]-நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன் திருவடிகளல்லது வேறுபுகல்இல்லை. "ஶரணம் வ்ரஜ" என்கிறவனன்றிக்கே, திருவடிகள்தானே தஞ்சமென்கை. [காண்மின்களே] - இத்தை எல்லாரும் புத்திபண்ணுங்கோள்.

ஈடு —பத்தாம்பாட்டு. அவன்திருவடிகளல்லது மற்று ரக்ஷகமில்லை யென்னுமிடத்தை புத்திபண்ணுங்கோ ளென்கிறார்.

[நிழல் வெய்யில்] - சீதஹேதுவான நிழலும், உஷ்ணஹேதுவானவெய்யிலும். [சிறுமைபெருமை] - அணுத்வமஹத்த்வங்கள். [குறுமைநெடுமை] - மத்யமபரிமாணத்திலுண்டான ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன] - ஜங்கமஸ்த்தாவரங்கள். [மற்றுமாய்] - அநுக்தஸமுச்சயம்; சொல்லப்படாததெல்லாமாய். [அவையல்லனுமாய்] - அவற்றுக்குஅந்தர்யாமியாய் நிற்கச்செய்தே அவற்றின்தோஷம் தட்டாதபடிநிற்குமென்று கீழே சொல்லிற்றிறே; இனியிங்குஎன்? என்னில்,—அவற்றுக்கு வரும் அவஸ்த்தைகளையு முடையனல்லனாய்என்றபடி. அவையாவன - சேதநாசேதநமாயுள்ள ஸு஖ித்வ துஃ஖ித்வாதிகளும், அசேதநாசேதநமான பரிணாமாதிகளும். [மழலைவாய்வண்டுவாழ்] - பருவத்தில் இளமையாலே இனியபேச்சுக்களை யுடைத்தான வண்டுகள் வர்த்தியாநின்றுள்ள திருவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன்திருவடிகளையொழிய வேறுரக்ஷகரையுடையோமல்லோம். [கழல்களன்றிமற்றோர்களைகணிலம்]-"ஶரணம் வ்ரஜ" (மாமேகம் ஶரணம்வ்ரஜ) என்னுமவனன்றிக்கே, திருவடிகள்தானே தஞ்சமென்கை. [காண்மின்களே] - இது அர்த்தவாதஞ் சொல்லுகிறேனன்று; நீங்களும் பாருங்கோள்.

பதினோராம் பாட்டு.

காண்மின்கள்உலகீர்! என்று கண்முகப்பேநிமிர்ந்த
தாளிணையன் தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார்
கோணையின்றிவிண்ணோர்க்கு என்றுமாவர்குரவர்களே.

பத்தாம்பாட்டு.—நிழல் இத்யாதி. "கழல்களன்றிமற்றோர்களைகணிலம்" இத்யாதியைப் பற்ற அவதாரிகை - அவன் திருவடிகளல்லது இத்யாதி.

"சிறுமைபெருமை" என்றுசொல்லி, "குறுமைநெடுமை" என்கையாலே மத்யமபரிமாணம் என்கிறது. கீழும் "அல்லனாய்" என்றது, இங்கும் "அல்லன் - ஆய்" என்றது; இரண்டுக்கும் பேதமென்னென்னிலென்றபடி. கீழ் - அகர்மவஶ்யதைசொல்லிற்று, இங்கு - தத்கார்ய ஸுகதுஃகராஹித்யஞ் சொல்லுகிறதென்றபடி. மன்னுபிரானன்றியென்னாதே, "கழல்களன்றி" என்றதுக்குஸுலாவம் - ஶரணம் இத்யாதி. அதாவது— திருவடிகளாலே தநியரைச்சொல்லி, ஈஶ்வரனன்றிக்கே தநியாபிமாநமே உத்தாரகமென்கை. 'பாருங்கோள்' மாஸ்வி லென்றபடி. (கo)

acharya.org

ஆ.—(காண்மின்கள்.)-ஆஸ்ரிதஅநாஸ்ரிதவிபாகமின்றியே ஸர்வாத்மாக்களுங் கண்டு வாழுங்கோளென்று அவர்கள் கண்முகப்பே நிமிர்ந்த தாளிணையன் தன்னைக் குருகூர்ச்சடகோபன் சொன்ன ஆயிரத்துள் எம்பெருமானுடைய ஸர்வநியந்த்ருத்வத்தைச் சொன்ன இத்திருவாய்மொழியை வல்லார் * அயர்வறுமமரர்களுக்கு நிஸ்ஸம்ஶயமாக ப்ரதமபூஜ்யராவரென்கிறார்.

ஒ.— நிகமத்தில் இத்திருவாய்மொழிவல்லார் அயர்வறுமமரர்களுக்குலோக்யராவர் என்கிறார். [காண்மின்களுலகீரென்று கண்முகப்பே நிமிர்ந்ததாளிணையன் தன்னை]- லோகத்திலுள்ள எல்லீரும் கண்டு க்ருதார்த்தராகுங்கோள் என்று அவர்கள் கண்ணெதிரே வளர்ந்த திருவடியையுடையவனை. [ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும் வல்லார்] - ஆயிரம் திருவாய்மொழியிலும் அவனுடைய ஜகந்நிர்வாஹகத்வத்தைச் சொன்ன இத்திருவாய்மொழிவல்லார். [கோணையின்றி] - மிறுக்கு இன்றிக்கே. [குரவர்கள்] - கௌரவ்யர்.

ப —அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸூரிகளுக்கு நித்யகௌரவ்யராவர்களென்று ஫லத்தை யருளிச்செய்கிறார்.

உலகீர்-லோகத்தீர்! காண்மின்கள் - இத்தைக்காணுங்கோள், என்று-என்று, கண்முகப்பே - பரஸ்பர விருத்தரானவர்கள் கண்ணெதிரே, நிமிர்ந்த - வளர்ந்த, தாளிணையன் தன்னை - திருவடிகளை யுடைய த்ரிவிக்ரமாவதாரத்திற்போலே பரஸ்பரவிருத்த பதார்த்தங்களிலே பலவகையும் பரந்த ஸர்வேஶ்வரனை, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், ஆணை - ஶாஸ்த்ரஸ்வரூபமாயிருக்கிற, ஆயிரத்து - ஆயிரத்தில், திருவிண்ணகர் - திருவிண்ணகர் விஷயமான, பத்தும் - பத்தையும், வல்லார் - வல்லவர்கள், கோணை - ஒருமிறுக்கு, இன்றி - அற, விண்ணோர்க்கு - நித்யஸூரிகளுக்கு, என்றும் - என்றும், குரவர்கள் - கௌரவ்யர், ஆவர் - ஆவர்கள். இது - கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் நித்யஸூரிகளுக்கு கௌரவ்யரென்கிறார்.

[காண்மின்கள் இத்யாதி] - நோக்குவித்யை காட்டுவாரைப்போலே; இதோ ராஸ்சர்யம் பாருங்கோளென்று லௌகிகர் எல்லாருடையவும் கண்ணெதிரே வளர்ந்த திருவடிகளையுடையவனை. "உங்கள் தலையிலே திருவடிகளை வைக்க வாருங்கோள்" என்றுவிசை வாரில்லையே. [குருகூர்ச்சடகோபன்சொன்ன]- இந்த ஸௌலப்யத்தை அநுஸந்஧ித்தவர் சொன்ன வார்த்தையாகையாலே ஆப்தமென்கை. [ஆணையாயிரத்து] - "ஶீஷாஸ்ரா ஆதஃவவதெ" என்கிறபடியே ஆயிரத்திலும், ஜகந்நியமனத்தைச்சொன்ன, திருவிண்ணகரை விஷயமாக உடைய பத்து. இத்தை அப்யஸிக்கவல்லார். [கோணையின்றி] - மிறுக்கின்றிக்கே, நித்யஸூரிகளுக்கு என்றுமொக்க கௌரவ்யராவர்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழிவல்லார் நித்யஸூரிகளுக்கு நாள்தோறும் கௌரவ்யராவரென்கிறார்.

நிஹதம் — காண்மின்கள் இத்யாதி. "பத்தும்வல்லார் - விண்ணோர்க்கென்றுமவர்குரவர்கள்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

acharya.org

[காண்மின்களுலகீரென்று கண்முகப்பேநிமிர்ந்த தாளிணையன்தன்னை] - "உங்கள்தலையிலே நான்காலைவைக்கக்கொடுவாருங்கோள்" என்றால் இசையாரென்று பார்த்து, நான் காட்டப்புகுகிறதொரு விஸ்மயம் பாருங்கோள் என்பாரைப்போலே இவர்கள் கண்முகப்பே நிமிர்ந்த திருவடித்தாமரைகளையுடையவனை. [காண்மின்கள்] - இதொருவிஸ்மயம் என்ன வேண்டிற்றுக் காணும் "தலையிலேயடிபடப்புக்கவாறே இறுய்ப்பர்கள்" என்று. [குருகூர்ச்சடகோபன்சொன்ன] - இந்தஸௌலப்யத்தை யநுஸந்தித்தவர்சொன்ன வார்த்தையாகையாலே ஆப்தமென்கை. [ஆணையாயிரத்து] - ஈஶ்வரனுடைய ஜகதநுஶாஸநத்தைச்சொன்ன இத்திருவாய்மொழிவல்லார். விண்ணோருண்டு - நித்யஸூரிகள், அவர்களுக்கு காலதத்த்வமுள்ளதனையும், குருக்களாவர் - கௌரவ்யராவர். இதில், கோணையில்லை - ஒருமிறுக்கில்லை. ஆவதென்? அஸ்ப்ருஷ்டதோஷ கந்தரான நித்ய ஸூரிகளுக்கு, நித்யஸம்ஸாரியானவன் இத்தைக் கற்குங் காட்டில் கௌரவ்யனும்படி யெங்ஙனே? என்னில்,—அங்கேயிருந்துவைத்தே ததீயத்வாகாரத்தாலே லீலாவிபூத்யநுஸந்தாநம்பண்ணி ஹ்ருஷ்டராம் நிலையுள்ளது முத்தர்க்காகையாலே, இங்கேயிருந்தேயவர்கள் அநுஸந்தாநத்தைப் பண்ணுகிற இவனை, "ஸம்ஸாரத்தே யிருந்துவைத்தே நம்படி யொருவனுக்குஉண்டாவதே!" என்று கொண்டாடியிருப்பர்கள். (கக)

கண்முகப்பேநிமிர்ந்தவென்னாதே, "காண்மின்களுலகீர்" என்று விசேஷித்ததுக்குஹேது - உங்கள்தலையிலே இத்யாதி. சாடுவாக உக்தார்த்தவிவரணம் - இதொரு இத்யாதி. துரபிமாநிகளாகையாலே - 'இறுய்ப்பர்கள்' என்றபடி. அடி - திருவடிகளும், ப்ரஹாரமும். இந்த ஸௌலப்யத்தை - திருவுலகளந்தருளின ஸௌலப்யத்தை. ஆணை - ஜகந்நியமம் "ஆயிரத்து - ஆணை - திருவிண்ணகர்ப்பத்து" என்றந்வயிப்பது : ஜகந்நியமநத்தை ப்ரதிபாதிக்கிற பத்தென்றபடி. விவரணம் - 'கௌரவ்யராவர்' என்று. மிறுக்கு - அநுபபத்தி. ப்ரஸக்தஸ்யஹிப்ரதிஷேதः அன்றோ! அநுபபத்திக்கு ப்ரஸக்தி யேது? என்ன,—ப்ரஸக்தியை ஸங்கித்துப் பரிஹரிக்கிறார் - அஸ்ப்ருஷ்ட இத்யாதி. குரவர்கள் - குருக்கள். (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— "கோவம் ஶீவ்ரணயஜம் வ்ருஶயு
க்ருஷ்ணாஷ்வாயிநதாதிநாதெதி ஸவிஷ்யயஷ்ஃ। ஸ்வியாம்விராஜமஹாக்ருதிதாஸு
தெநஸுஶிருதாநாவஹுவநிஷ்ருதியெ॥"

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— ஸ்ரீஹாரிஹ்ருஹாவா
ஹஸுவஸுவக்ருதெः வதநஸ்ரீஹோவா தணுவாவணுராஹிஹாவாதவடிஜிஜ
தயாஸவுலொகாஹிஹாவாகः। திவுராஹிவுராஹுவதாதுஸுஹிதிஜிமணஸிஹுஶுதுக்வ
கீரு ஹாயாஹுயாஹிஹாவாஹவுதிதவடிநம்ப்ரஹக்ருஷ்ணஶாரிः.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

நல்லவலத்தால்நம்மைச் சேர்த்தோன்முன்நண்ணரை
வெல்லும்விருத்தவிபூதியனென்று—எல்லையறத்
தானிருந்துவாழ்த்துந்தமிழ்மாறன்சொல்வல்லார்
வானவர்க்குவாய்த்தகுரவர்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், சீயர் திருவடிகளே ஶரணம்.

---

acharya.org

ஆ.—(குரவை.) இப்படி திருவின்னகரில் எம்பெருமானைக்கண்டு, அவனுடைய ஸர்வநியந்த்ருத்வ ஸௌஶீல்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணங்களை அநுஸந்தித்து நிரதிஶய ப்ரீதியுக்தராய் ஸம்ஶ்ரார்த்தரான ஆழ்வாரைக்கண்டு எம்பெருமான் ப்ரீதனாய் * பிறந்தவாற்றில் இவருடைய இழவெல்லாந் தீரும்படி, தன்னுடைய திவ்யாவதாரந் தொடங்கித் திருநாட்டில் எழுந்தருளுகை பர்யந்தமாக நடுவுள்ள ஸர்வதிவ்யசேஷ்டிதங்களையுங் காட்டியருளக் கண்டநுஸந்தித்து, தத்நுஸந்தித நிரவயிக நிர்வ்ருதியாலே, பரிபூர்ண மநோரதனானே னென்கிறார்.

ஒ.—நாலாந் திருவாய்மொழியில், ராமவ்ருத்தாந்தத்தில் திருவடியைப் போலே க்ருஷ்ணவ்ருத்தாந்தத்திலே ஸக்தரான ஆழ்வார், தாம் ப்ரணயகோபத்தாலே * மின்னிடைமடவாரில் "எம்பெருமானோடு ஸம்ஶ்லேஷிப்பேனல்லேன்" என்று பிறங்கின தம்மை "ஆவேன்" என்னப் பண்ணியருளின உபகாரத்தை * நல்குரவிலே அநுஸந்தித்து, * மாசறுசோதியில் "சேணுயர்வானத்திருக்கும்" என்கையாலே - தூரஸ்தனென்று இன்னதான ஆழ்வார், அணியவா யெண்ணிமுடிக்கவொண்ணாதனவாயுள்ள க்ருஷ்ண வ்ருத்தாந்தங்களைக் காட்டியருளக்கண்டு, "தொல்லருணல்வினையால் சொலக் கூடுங்கொல்" என்று மனோரதித்தபடியே இனிதாகப்பேசி அநு஭விக்கிறார். * பிறந்தவாற்றில் - வலஹாநியாலே பேசமாட்டிற்றிலர்; * குரவையாய்ச்சியரில் - ப்ரீதியாலே எல்லா சேஷ்டிதங்களையும் தரித்துப்பேசுகிறார்.

ப.—நாலாந் திருவாய்மொழியில், கீழ் - விருஷவிபூதியோகத்தாலே தன் அவதிதவடநாசக்தியைக்காட்டி "மலப்ரதாநஸமர்த்தன்" என்கிற ப்ரதிபத்தியைப்பிறப்பித்த ஸர்வஸமாத்பரனுடைய ஸுமத்வஸுசநார்த்தமாக அவனுடைய அநந்தஶாயித்வத்தையும், ஆஶ்சர்ய ஆகாரவத்தையையும், அதிஶயித ஔஜ்ஜ்வல்யத்தையும், அப்ராக்ருதவிக்ரஹவத்தையையும், அர்த்திகளுக்கபேக்ஷிதகாத்வத்தையும், அந்யாஹிமாந நிவர்த்தகத்வத்தையும், அதிஶயிதலோகயாகாரத்தையும், அர்த்தியாயும் அபேக்ஷிதந் தலைக்கட்டிக் கொள்ளும்படியையும், அஸாதாரணசிஹ்நயோமத்தையும், பரஞ்ஜ்யோதிஸ்ஸ்வரூபவத்தையையும் அநுஸந்தித்து, 'ஏவம்ப்ரகாரனான க்ருஷ்ணனுடைய மநோஹாரியான அகிலசேஷ்டிதங்களையும் இங்கேயிருந்து அநவரதாநு஭வம் பண்ணப்பெற்ற எனக்கு ஆர் இனி நிகராவர்?' என்று ஹ்ருஷ்டராய்க்கொண்டு, அவனுடைய ஸுபஸுத்வத்தை ப்ரதிபாதித்தருளுகிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், * பிறந்தவாற்றிலே - ஶுணங்களையரித்து நின்று அநு஭விக்கவல்லனாம்படி பண்ணியருளவேணுமென்று ஶரணம்புக்கார்; திருவண்வண்டூரிலே தூதுவிட்டார்; அவன் வரக்கொண்டு * மின்னிடைமடவாரிலே ப்ரணய ரோஷத்தாலே அகலப்புக்க தம்மைச் சேரவிட்ட உபகாரத்தை அநுஸந்தித்தார், "ஸர்வநியந்தாவான மேன்மையையுடையவன் என்னைத் தாழநின்று பொருந்தவிட்டுக்கொள்வதே!" என்று உபகாரஸ்மிருதியாலே ஏத்தினார்; இதில் - க்ருஷ்ணாவதாரசேஷ்டிதங்களை அநுஸந்தித்து ப்ரீதராகிறார். 'ஹவொநாந்ருஶுஹ்ஹி" என்று - திருவடி ராமாவதாரத்திலே ப்ரவணனாயிருக்குமாபோலே இவரும் க்ருஷ்ணாவதாரத்திலே ப்ரவண

acharya.org

ராயாயிற்றிருப்பது. * மாசறுசோதியிலே, "சேணுயர்வானத்திருக்கும்" என்று-தூரஸ்யமென்று இன்னுதான இழவுதீர இந்த லோகத்திலே ஸ்ரீப்ருந்தாவநத்திலே பெண்களோடே பரிமாறின பரிமாற்றத்தைக் காட்டிக்கொடுக்க அநுஸந்யித்து ப்ரீதராகிறார். * மானேய்நோக்கிலே, "தொல்லரு ணல்வினையால் சொலக்கூடுங்கொல்" என்று - நாக்கு நீர்வந்து திருநாமம்சொல்லுவது என்றோ வென்று ஆசைப்பட்ட இழவுதீர க்ருஷ்ண ருணங்களை அநுபவித்துப் பேசி ப்ரீதராகிறார். * சன்மம்பலபலவிலேயும் "ஓர் குறைவிலன்" என்றார்; 'இதிலும் "என்ன குறைவு எனக்கு" என்றார். அதுக்கும் இதுக்கும் வாசிஎன்? என்னில் ,- அங்கு ஸம்ஸாரிகளிற்காட்டில் வ்யாவ்ருத்தனுகப்பெற்றேன் என்றார்; இதில் குணாநுபவப்ரீதிப்ரகர்ஷத்தாலே, எனக்கு ஒருகுறைவுஇல்லை யென்கிறார்.

ஈடு:—இத்திருவாய்மொழியில் ஆழ்வார் ஸ்ரீவால்மீகிபகவானோடொப்பர். அவனும் ராமாவதாரமல்லது போக்கியறியான்; அவனுடையப்ரபந்தமும் அப்படியே; இவரும் க்ருஷ்ணவதாரமல்லதறியார்; இத் திருவாய்மொழி - க்ருஷ்ண வ்ருத்தாந்தமொழிய வேறொன்றைச் சொல்லாது. "ஹாவொநாநுகூமஹதி" (பாவோநாந்யத்ரகச்சதி) என்றுகொண்டு 'பரதஶையுங் கூட வேண்டேன்' என்ற திருவடியைப் போலேயாயிற்று இவரும் க்ருஷ்ணவதாரமொழிய வேறொன்று அறியாதபடி.

"சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்" என்கிறபடியே-கிட்டிநின்று அநுபவிக்கப் பெற்றிலோமென்கிற இழவுதீர, பூமியிலேயாகப்பெற்றது; "தொல்லருணல்வினையால் சொலக்கூடுங்கொல்?" என்றிறே இவர் ஆசைப்பட்டது; அதாவது - நா நீர்வந்து திருநாமம்சொல்லுகையாகிறது ஸுக்ருத஫லமிறே. *பிறந்தவாற்றில் இவர்க்கு உண்டான இழவெல்லாம் தீரும்படி ஸ்ரீப்ருந்தாவநவ்ருத்தாந்தத்தைக் காட்டிக் கோடுக்கக் கண்டு, அது பூதகாலமாய்த் தோற்றுகையன்றிக்கே ஸமகாலம்போலே கிட்டிநின்றநுபவிக்கிறார். * மின்னிடைமடவாரிலே - "அல்லோம்" என்று அகன்று முடிந்து போகப்புக்க தம்மை "ஆவோம்" என்னப்பண்ணிச் சேரவிட்டுக்கொண்டபடியை யநுஸந்யித்து,இப்படி வல்லார் இவனல்லதில்லைகிடீரென்று தலைக்கட்டுகிறாரா யிருக்கிறது. * சன்மம்பலபலவிலும் இப்படியிருப்பதொரு ஹர்ஷமுண்டே; அதில்இதுக்கு வாசியென்? என்னில் - அங்கு - இதர வ்யா

குரவையாய்ச்சியர்ப்ரவேஶம்; இத்திருவாய்மொழியிலே, க்ருஷ்ணகுணங்களிலே ஈடுபட்டுப் பேசுகிற இவர்க்கும், க்ருஷ்ணகுணைக ப்ரதிபாதகமான இத்திருவாய்மொழிக்கும் த்ருஷ்டாந்தமாக, ஸ்ரீவால்மீகிபகவானையும் ஸ்ரீராமாயணத்தையும் அருளிச்செய்கிறார் - 'இத்திருவாய்மொழியென்று தொடங்கி, வேறொன்றைச்சொல்லாதென்னுமளவும்'. விவரணம் - அவனும் இத்யாதி. த்ருஷ்டாந்தாந்தாம் - ஹாவொநாநுகூ இத்யாதி." ஷைஹொஷேவரசோராஜநு கூயிநிதுஂவு திஷ்டி தः । ஹகிஶநிய தாவீரஹாவொநாநுகூமஹதி" இத்யுத்தரஸ்ரீராமாயணே.

இத்திருவாய்மொழியில் * மாசறுசோதிதொடங்கி, * மின்னிடைமடவார் அளவுமுண்டான வ்யஸகங்களெல்லாக்தீர அநுபவிக்கிறாரென்கிறார் - சேணுயர் இத்யாதி வாக்யத்ரயத்தாலே. பூமியிலேயாகப்பெற்றதென்றது-அவதரிக்கப்பெற்றதென்றபடி. 'ஸுக்ருதபலமிறே' ஆகையாலே ஆசைப்பட்டபடியே திருநாமங்கள் சொல்லப்பெற்றதென்றபடி. பிறந்தவாற்றில் இவர்க்குண்டான இழவெல்லாம் என்றது - யரித்துநின்றநுபவிக்கமாட்டாத இழவெல்லாமென்றபடி. * மின்னிடைமடவாரோடு இதுக்கு ஸங்கதியேதென்ன - மின்னிடைமடவாரிலே இத்யாதி. 'தலைக்கட்டுகிறாராயிருக்கிறது' - * நல்குரவிலே தலைக்கட்டுகிறாராயிருக்கிறதென்றபடி. * மின்னிடைமடவார்க்கும் இதுக்கும் நேரே

acharya.org

ருத்தி மாத்ரத்தால் உண்டான ஜ்ஞாநலாபத்தால் வந்த ஹர்ஷம்; இங்கு - அவன் தன் குணங்களை நேரே இவரை நெருங்கியநு஭விப்பிக்க, ஸ்வவஶரல்லாதபடி அநு஭வித்து ஹ்ருஷ்டராய் வாய்விடுகிறார்.

முதற் பாட்டு.

குரவையாய்ச்சியரோடுகோத்ததும் குன்றமொன்றேந்தியதும்
உரவுநீர்ப்பொய்கை நாகங்காய்ந்ததும் உள்பட மற்றும்பல
அரவில் பள்ளிப்பிரான்தன் மாயவினைகளையேயலற்றி
இரவும்நன்பகலுந் தவிர்கிலம்என்னதுறைவுஎனக்கே

ஆ—நாகபர்யங்கஶாயியான பரமபுருஷன் ஸ்ரீவஸுதேவர் திருமகனாய் வந்து பிறந்தருளி, ப்ரணயிஜநஸம்ஶ்லேஷைக஭ோகனாகையாலே திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகளோடே திருக்குரவைகோத்து ஸம்ஶ்லேஷித்தருளினபடியையும், ப்ரணயிஜந பரித்ராணார்த்தமாகையாலே தத்ஸம்ஶ்லேஷத்திற்காட்டிலும் தனக்கு ஭োக்யமான கோவர்த்தநமஹாகிரி ஸமுத்தரணமும், விஷாநலஜ்வாலாநுலிஹவநீய மஹாஹ்ரத நிவாஸி காளிய நிரஸநப்ரப்ருத்யாஶ்சர்ய ஸ்வதிவ்ய சேஷ்டிதங்களையும் அநு஭வித்து, அவ்வநு஭வஜநிதப்ரீதியாலே அப்ரக்ருதிங்கதனாய் அவற்றையேயலற்றி இரவுநன்பகலும் நான்தவிர்கிலன்; எனக்கு இனி என்னகுறை யுண்டு என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், 'ப்ரீதிபூர்வகமாக இரவும்பகலும் க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுபவிக்கப்பெற்றேன்: எனக்கு இனி என்னகுறை யுண்டு?' என்கிறார்.

உரவுநீராவது - விஷஜலம், வலியநீர் என்றுமாம். [அரவில்பள்ளிப்பிரான்] - திருவவதாரம்பண்ணுகைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவன். * நாகணை மிசை நம்பிரான் ப்ரத்யஹிஜ்ஞைபண்ணுகிறது. [மாயவினைகள்] - ஆஶ்சர்யமான சேஷ்டிதங்கள். [இரவுநன்பகலும்] - எம்பெருமானைப்பெற்று அநுபவிக்கிற காலமாகையாலே நன்றான இரவும் பகலும்.

ப.—முதற்பாட்டில், 'அவதாரகந்தமான அநந்தஶாயித்வத்தை யுடையனான க்ருஷ்ணனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களை ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு சொல்லி அவிச்சிந்நமாக நடக்கப்பெற்றோம்; நமக்கென்னகுறை உண்டு?' என்கிறார்.

ஆய்ச்சியரோடு - ஆய்ச்சியரோடேகூட, குரவை - திருக்குரவையிலே, கோத்ததும் - (எல்லாப்பெண்களும் தன்கைகோத்தாராம்படி வகைமாலைபோலே இடையிடையே தன்னைக்கலந்து) கோத்ததும், (இந்தப்பெண்களோட்டை ரஸத்துக்கு விலக்காக வந்த மழையைத் தடுக்கைக்காக), ஒன்று - ஒரு, குன்றம் - மலையை, ஏந்தியதும் - எடுத்தேமுநாள் அநாயாஸேந ஧ரித்துக்கொண்டு நின்றதும், உரவு - முதிர்ந்த, நீர் -

---

ஸங்கதி; நல்குரவு ப்ராஸங்கிகம். கீழேயும் இப்படிப்பட்ட ஹர்ஷமுண்டே; இதுக்கு வாசி யேதென்கிற ஶங்கையையநுவதித்துப் பரிஹரிக்கிறார் - சன்மம்பல இத்யாதி. இதரவ்யாவ்ருத்தியாவது - * சொன்னால்விரோதத்தில் திருந்தாத ஸம்ஸாரிகளில் தமக்கு உண்டான வ்யாவ்ருத்தி.

acharya.org

ஜலத்தையுடைத்தான, பொய்கை - பொய்கையில், நாகம் - காளியனை, காய்ந்ததும் - முனிந்து நியமித்தப்ரகாரமும், உள்பட - முதலாக, மற்றும் - மற்றும், பல - பலவாய், ("நாமவாரூஷீஸ்ஜ") என்கிறபடியே அவதாரார்த்தமாக), அரவில்பள்ளி - கண் வளர்ந்தருளின நாகபர்யங்கத்தை, பிரான்தன் - விட்டுவந்த உபகாரகனை க்ருஷ்ண னுடைய, மாயம் - ஆஶ்சர்யங்களான, வினைகளையே - சேஷ்டிதங்களையே, அலற்றி - ப்ரீதிபரவசனாய்க்கொண்டு சொல்லி, நன் - குணகதநத்துக்கு உறுப்பான நன்மையை யுடைய, இரவும் - இரவும், பகலும் - பகலும், தவிர்கிலம் - ஒய்கிறிலோம்; நமக்கு - நமக்கு, என்ன - என்ன, குறை - குறைவு, உண்டு - உண்டு? அநுஷாவ்யஸங்கோஷத் தால் வரும் குறையுண்டோ? அநுபவவிச்சேதத்தால் வரும் குறையுண்டோ என்று கருத்து. "தவிர்கிலனென்னகுறைவெனக்கு" என்றும் பாடஞ்சொல்லுவர்.

இ.—முதற்பாட்டில், அஹோராத்ரம் க்ருஷ்ணசேஷ்டிதங்களை ப்ரீதிபூர்வக மாக அநுபவிக்கப்பெற்ற எனக்கு என்னகுறை உண்டு என்கிறார்.

[குரவையாய்ச்சியரோடு கோத்ததும்] - * மின்னிடைமடவாரிலே அகலப் புகத் தாழநின்று பொருந்தினபடி, இடைப்பெண்களோடே பொருந்தினாற்போலே இருக் கிறதாயிற்று. தன்னோடே அவர்களைக்கோக்கையன்றியே, அவர்களோடே தன்னைக் கோத்தபடி. பஞ்சலக்ஷங்குடியில் பெண்களோடே கலந்த ப்ரீதிஉண்டாயிற்று இவ ரோடேகலந்த ப்ரீதி. கோக்கை - தொடுக்கை, கைகோத்துக்கொண்டு ஆடுங்கூத்திறே- குரவைக்கூத்தாவது. [குன்றமொன்று இத்யாதி] - அவர்களை அநுஷவிக்கையன்றிக்கே, அவர்களுக்குவந்த ஆபத்தைப் போக்கினபடி. இந்த்ரன் பசிக்ராஹத்தாலே அழியவர்ஷிக் கத்தொடங்கினவாறே, முன்னேநின்றதொருமலையை எடுத்து ரக்ஷித்தபடி. [ஏந்திய தும்] - ஏழுவயஸ்ஸிலே ஏழுநாள் ஒருபடிப்பட மலையை எடுத்துக்கொடு நிற்கச்செய்தே யும், ஆஸ்ரிதார்த்த ப்ரவ்ருத்தியாகையாலே வருத்தமற்றிருந்தபடி. [உரவுநீர்]-வலியை உடைத்தான நீர். விஷத்தாலே வாயுகமான வலியாதல், முதுநீர்ஆகையாலே வலிய நீர் என்னுதல். உரவு - விஷமென்னுதல், வலியென்னுதல். [நாகங்காய்ந்ததும்] - "பெண்களோட்டை ஜலக்ரீடைக்குவிரோயி" என்று காளியனை ஓட்டினதுவும். [உள் பட மற்றும்பல] - இவைமுதலான சேஷ்டிதங்களுக்குத் தொகையில்லை. * பிறந்தவாற் றில் - வலஹாநியாலே சொல்லமாட்டிற்றிலர்: இங்கு - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே யரித் துச்சொல்லமாட்டாதொழிகிறார். [அரவிற்பள்ளிப்பிரான்] - அவதரிக்கைக்காகத் திருப் பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவன். ஆஸ்ரிதவிரோயியான ஸர்ப்பத்தைப் போக்கி னான், அஜ்ஜாதியிலே ஒருவனுக்கு உடம்பு கொடுத்தான்: ஜாதிப்ரயுக்தமன்று நிரஸநம், ஆஸ்ரிதவிரோயி யென்று. * பிறந்தவாற்றில் * நாகணைமிசைநம்பிரானை ப்ரத்ய ஜிஜ்ஞாஸிப்பண்ணுகிறார். [மாயவினைகளையேயலற்றி] - ஆஶ்சர்யசேஷ்டிதங்களை ப்ரீதி யாலே அடைவுகெடச்சொல்லி. [இரவுநன்பகலும்] - நல்ல இரவும் நல்லபகலும்: "சுடர் கொளிராப்பகல்" என்று - விரஹத்தில் அக்நிகல்பமான அஹோராத்ரம்போலன் றிறே. [தவிர்கிலம்] - விடுகிறிலேன். [என்னகுறை வெனக்கே] - காலஹேஷுமுள்ள தேசத்திலேயிருந்து ஏகரூபமாக அநுஷவிக்கப்பெற்ற எனக்கு "ஒருதேசத்திலே போக வேணும்" என்னுங் குறையுண்டோ?

acharya.org

ஈடு.—முதற்பாட்டு. அஹோராத்ரம் க்ருஷ்ண குணங்களை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒருகுறையில்லை என்கிறார்.

[குரவையாய்ச்சியரோடுகோத்ததும்] - * பிறந்தவாறும் என்றாற்போலேதொடங்கி ஓரவதாம்முன்னாக இழியாதே, இதிலேஇழிவானேன்? என்னில்,—*மின்னிடைமடவாரி லுண்டான தம்முடைய ப்ரணயரோஷத்தைப்போக்கித் தம்மைச் சேரவிட்டுக்கொண்டபடி, திருக்குரவையிற் பெண்களோடேகலந்து அவர்களை அநுபவிப்பித்தாற்போலே யிருக்கையாலே, அதுமுன்னாகப் பேசுகிறார். தாம் அநுஸந்திக்கிலிறே ஓரடைவாகஇழிவது! அவனநுபவிப்பித்தபடியே பேசுகிறாராகையாலே; திருக்குரவையிற் பெண்களோடுண்டான கலவியையாயிற்று இவர்க்குமுதலிலே காட்டிக்கொடுத்தது. பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களெல்லாரோடுங்கலந்த ப்ரீதியுண்டாயிற்று, இவரொருவரோடே கலந்த ப்ரீதி. தன்சேல்லாமையாலே இடைப்பெண்களுடைய மாலையிலே தன்னை அப்ரதாநனாக்கிக்கொண்டு கோத்ததும். "குரவைபிணைந்தகழகும்" என்றுஆசைப்பட்டபடியே அநுபவிக்கிறார். பெண்களுடைய மாலையிலே இடையீடாகத் தன்னைக்கோக்கிறபோது, "விஜாதீயனொருவன்கலந்தான்" என்று தோற்றாதபடி அவர்களோடே யொரு நீராகக் கலந்தபடி. பெண்களும் பெண்களுமிறே கைகோத்துவிளையாடுவார். திருக்குரவையில் இவனையொழியப் பெண்களுக்குச் செல்லாதாப்போலே காணும் * மின்னிடைமடவாரில் ஆழ்வாரையொழிய இவனுக்குச் செல்லாமைவிளைந்தபடி. கோக்கை - தொடுக்கை. கைகோத்துக்கொண்டாடும் கூத்திறே - குரவைக்கூத்தாகிறது. [குன்றமொன்றேந்தியதும்] - ஸ்வர்க்கம் என்றுகொண்டு ஒரு லோகபூமியாய், அங்கே அப்ஸரஸ்ஸுக்களோடே கழகமிருந்து புண்யபலாநுபவங்கள்பண்ணி ஸுகப்ரதாநனாயிருப்பான் இந்த்ரனென்றொருவன் உண்டிறே; அவ்வநுபவத்தைப் பூமியிலே ஒருபருவத்திற்பெண்களோடேகூட ஸ்வைரமாக அநுபவித்திருக்கிற இருப்பைக் கண்டு, அது பொறுக்கமாட்டாமை அஸூயைவர்த்தித்து, "நமக்சிட்ட சோற்றை யுண்டான்" என்று ஒரு வ்யாஜமாகக் கல்வர்ஷத்தை வர்ஷிப்பித்தான்; அப்போது கைக்கு எட்டிற் றொருமலையையெடுத்துத் தரித்துக்கொண்டு நின்றபடி. ஒருவன் இங்கே ஒருநாள் மூக்குப் புதைக்குங் காட்டில், "நம்முடைய ஹோமம் பகுந்துபோகப்புகாநின்றது" என்றுஅஞ்சி அவரை உவரை வரவிட்டுக் கலக்குமவனிறே. "இப்படி யநுபவிக்கிறான் ஸர்

முதற்பாட்டு.—குரவை இத்யாதி. "அரவிற் பள்ளிப்பிரான் தன் மாயவினைகளையேயலற்றி" இத்யாதிகளைக்கடாக்ஷித்தவதாரிகை - அஹோராத்ரம் இத்யாதி.

இதிலே - திருக்குரவையின் வ்ருத்தாந்தத்திலே. கீழ்ஸங்கைக்குப்பரிஹாராந்தரம் - தாம் அநுஸந்திக்கிலிறே இத்யாதி. அவன்தான் இத்தைமுந்தறஅநுபவிப்பானென்? என்ன - பஞ்சலக்ஷம் இத்யாதி. "ஆய்ச்சியரோடு" என்றஅப்ரதாநேத்ருதியைக்கு 'ஹாவம் - தன்சேல்லாமையாலே இத்யாதி. ஆய்ச்சியர்க்கு உண்டான அப்ராதாந்யம் தனக்கு உண்டாய்படி கோத்தானென்று கருத்து. * பிறந்தவாற்றில் இழவும் இதிலேதீருகிறதென்கிறார் - தூவைபிணைந்த இத்யாதி. "கோத்ததும்" என்றதுக்குஹாவம் - பெண்களுடைய இத்யாதி. விவரணம் - பெண்களும் இத்யாதி. "குரவையாய்ச்சியரோடு கோத்ததும் என்ற பதப்ரயோகத்துக்கு ப்ரயோஜநம்" - திருக்குரவையில் இத்யாதி. கீழிற் பதத்தையுங்கூட்டி "குன்றமொன்றேந்தியதும்" என்றதுக்குஹாவம் - ஸ்வர்க்கமென்று இத்யாதி. "ஏன்ற" என்றதுக்குஹாவம் - கைக்கெட்டிற்று இத்யாதி. இந்த்ரன் அப்படி அஸூயாளுவோ? என்ன - ஒருவன் இங்கே இத்யாதி. மூக்குப்புதைக்க - ப்ராணயாமம்பண்ணுகை. அவரை உவரையென்றது - அப்ஸரஸ்ஸுக்களையென்றபடி. ஸஜாதீயரிடத்திலொழிய ஸர்வேஸ்வரனிடத்திலே அஸூயையிறக்குமோ? என்ன - இப்படி அநுபவிக்கிறான் இத்யாதி. அறியமாட்டாமைக்குஹேது

acharya.org

வேஶ்வரன்'' என்று அறியானிறே; இவன் தன்னை மநுஷ்யஸஜாதீயனுக்கிவைத்துக் கொண்டிருக்கையாலே. அன்றைக் கல்வர்ஷத்தில் பசுக்களுக்கும் இடையர்க்கும் வந்த ஆபத்தைத் தீர்த்தாற்போலேயாகாதே, இவர்க்கும் *மின்னிடைமடவாரில் வந்த ஆபத்துத் தீர்த்தபடியும். [ஏந்தியதும்] - பரார்த்தமாகையாலே கைக்குஓராஹரணம்போலேயாயிற்று. அது தான் வருத்தமற்றிருந்தபடி. பூ ஏந்தினாற்போலே யிருந்தது. ஏழுவயஸ்ஸிலே ஏழுநாள் ஒருபடிப்பட தரித்துக்கொண்டிறே நின்றது! [குன்றமொன்றேந்தியதும்] - ''இப்படி ஏழுவயஸ்ஸிலே ஏழுநாள் ஶரித்ததுக்கு என்செய்வோம் நாம்'' என்று ஒருவர் நெஞ்சாரல்படாதபடி ஸகோத்ரியாய் நின்றிறே இவன் இவற்றை ரக்ஷித்தது. [உரவுநீர்] - தறைகாணவொண்ணாமையாலுண்டான ஆழத்தையுடைத்தான மிடுக்கையுடைய நீரென்னுதல்; அன்றியே, காளியன்விஷத்தாலே ஒருவர்க்கும் கிட்டவொண்ணாத வலியென்னுதல்; முதுநீராகையாலே வலியநீர்என்னுதல்; † (விஷத்தாலே பாதகமான வலியென்னுதல்.) உரவு - விஷமென்னுதல். [நாகங்காய்ந்ததும்] - நாகத்தையோட்டியதும். பாம்படித்து மேலிட்டுக் காணும் பெண்களோடே ஜலக்ரீடை பண்ணிற்று. [உள்படமற்றும்பல] - இவைமுதலான சேஷ்டிதங்களுக்கு ஓர்எண்ணில்லை. * பிறந்தவாற்றில் - பலஹாநியாலே சொல்லமாட்டிற்றிலர்; இங்கு உகப்புத் தலைமண்டையிட்டுச் சொல்லமாட்டுகிறிலர். மற்றும்இப்படி பெண்களோட்டைக் கலவிக்கு விரோதிகளான தண்ணீர்த்துரும்பறுத்தவை அநேகங்கள். [அரவில்பள்ளிப்பிரான்]-நாட்டார்உறக்கம் தமோகுணபூயிஷ்டமாய் ஸ்வார்த்தமாயிருக்கும்; இவன் உறக்கம் பிறருடைய ரக்ஷணார்த்தமாயிருக்கும். * உறங்குவான்போல் யோகுசெய்தபெருமான்இறே. உறங்கினானாகில் பரரக்ஷணத்துக்கு உடலாயிருக்கும்; உணர்ந்திருந்தானாகிலும் அப்படியே; இதென்ன உபகாரந்தான்! [அரவிற்பள்ளிப்பிரான்] - கீழ் ஒருபாம்போடுண்டான சேராமை சொல்லிற்று; இங்கு ஒருபாம்போடுண்டான சேர்த்தி சொல்லுகிறது. அங்கு - ஹோமத்தைக் காற்கடைக்கொண்டமை சொல்லிற்று; இங்கு ஹோமப்ராவண்யம்

வேதென்ன - இவன்தன்னை இத்யாதி. இந்தபதப்ரயோகத்துக்கு ஹார்த்தஹாவம் - அன்றைக்கல்வர்ஷத்தில் இத்யாதி. ஶரித்தென்னாதே, ''ஏந்தியதும்'' என்றதுக்குஹாவம் - பரார்த்தம் இத்யாதி. ''கைக்குஓராபரணம்''என்றத்தை விவரிக்கிறார் - பூ இத்யாதி. வருத்தத்துக்கு ப்ரஸக்தியேதென்ன - ஏழுவயஸ்ஸிலே இத்யாதி. பரார்த்தமாக ஶரித்ததினெல்லையை சாடுவாக அருளிச்செய்கிறார் - இப்படிஏழு இத்யாதி. ஸகோத்ரியாய் - ஸகோத்ரனாயென்றும், ஸஜ்ஞாதிவர்க்கனென்றும். கோத்ரம் - குலமும், பர்வதமும். ''உரவு'' என்று - மிடுக்காய், அத்தை மூன்றுவகையாக அருளிச்செய்கிறார் - தறைகாண இத்யாதிவாக்யத்ரயத்தாலே. முதுநீர் - பழையநீர். அத்தால் - லகுவாயிராதே பலத்தையுடைத்தாயிருக்குமென்றபடி. அர்த்தாந்தரம் - 'விஷமென்னுதல்' என்று. உரவுநீர் - விஷமிஶ்ரஜலமென்று த்விதீயார்த்தம். ''குரவையாய்ச்சியரோடு'' என்றத்தோடேகூட்டி ரஸோக்தியாகஹாவம் - பாம்படித்து இத்யாதி. காளியனைமேலிட்டடித்துக்காணு மென்றபடி. * பிறந்தவாற்றிற்போலே இங்குவலஹாநியில்லையே; சேரச்சொல்லாதே, ''மற்றும்பல'' என்கிறதென்? என்ன - பிறந்தவாற்றில் இத்யாதி. மற்றுமிப்படி என்றது - கோவர்த்தநோத்தாரணம் காளியமர்த்தநம்போலே பின்னையுமிப்படி என்றபடி. விரோதிகளான தண்ணீர்த்துரும்பறுத்தவையென்றது - தண்ணீர்த்துரும்பு போலே விரோதிகளானவற்றைப்போக்கின வ்யாபாரங்களென்றபடி. உணர்ந்தஸமயத்திலொழிய, நித்ராஸமயத்திற்செய்கிற உபகாரமேதென்ன - நாட்டாருறக்கம் இத்யாதி வாக்யத்வயம். இவனுறக்கம் பரரக்ஷணார்த்தமாயிருக்கு மென்னுமதுக்கு ப்ரமாணம் - உறங்குவான் இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபோடு - உறங்கினானாகில் இத்யாதிவாக்யத்ரயமும். ''நாகங்காய்ந்ததும், அரவில்பள்ளிப்பிரான்'' என்ற பதத்வயத்தையுங்கூட்டிஹாவம் - கீழ்ஒருபாம்போடு இத்யாதி வாக்யத்வயத்தாலே. ரஸோக்தியாக பூர்வவாக்யத்வயவிவரணம் - அங்கு இத்யாதி வாக்யத்வயம். போமம் - ஸர்ப்பத்தினுடலும், அது

acharya.org

சொல்லுகிறது ப்ரதிகூலனான காளியனைப் பறக்கவோட்டினான்; அநுகூலனானவனைப் படுக்கையாகக்கொண்டான். இவன்தான் அநந்தமுகமாக அநுகூலிக்கும்; அவனும் அநந்த முகமாக அடிமைகொள்ளும். * ஆயிரம் பைந்தலைய அனந்தனிறே. [அரவிற்பள்ளிப் பிரான்] - அவதாரங்களுக்கு அடி திருப்பாற்கடலாகையாலே அத்தைச்சொல்லுதல்; அன்றியே, "நாகணைமிசைநம்பிரான்சரணேசரண்" என்றத்தை ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகிறாராதல். [தன்மாயவினைகளேபேயலற்றி] - அவனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே வாய்விட்டு ஸ்தோத்ரம்பண்ணி. [இரவுநன்பகலும் தவிர்கிலம்] - பகவதநுபவத்துக்கு உறுப்பாகாதஅன்றிறே * சுடர்கொள் இராப்பகலாயிருப்பது; அநுபவயோக்யமான காலமாகையாலே - நல்ல இரவும் நல்லபகலுமென்கிறார். விஶ்லேஷித்தபோதிறே நெருப்பையுருக்கி எறட்டினாற்போலேயிருப்பது. [என்னகுறைவு எனக்கே] - "நகாலுஸ்தத்ரவைப்ரபு:" (நகாலஸ்தத்ரவைப்ரபு:) என்றுகொண்டு பகலும் இரவும் நடையாடாததொரு தேஶவிசேஷந்தேடி அநுபவிக்கைக்குப் பட்டைப்பொதிசோறு கட்டவேண்டும்படி குறைவாளனாயிருந்தேனோ? ஏகாகாரமான அநுபவமிறே அங்குள்ளது; "விஜஹாரபவ ஹுரூதரூ" (விஜஹாரபஹுரூந்ருதூ) என்கிறபடியே, அவ்வோகாலங்கள்தோறு முண்டான அநுபவவிஶேஷங்களை புஜிக்கப்பெற்ற எனக்குஒருகுறையுண்டோ? பரத்வாநுபவமிறே யங்குள்ளது: ஶீலகுணாநுபவமுள்ளது இங்கேயிறே. (க)

பவமும், இரண்டும் பாம்பாயிருக்க, இப்படிசெய்கைக்கு ஹேதுவேதென்ன - ப்ரதிகூலனான இத்யாதிவாக்யத்வயம். இவன்அநுகூலிக்கும் ப்ரகாரமேதென்ன இவன்தான் இத்யாதி. இவன்இப்படி யநுகூலிக்கையாலே அவனும் பஹுமுகமாகவடிமைகொள்ளுமென்கிறார் - அவனும் இத்யாதி. அநந்தமுகமுண்டோவென்ன-ஆயிரம்பைந்தலைய இத்யாதி. விஸ்தீர்ணமான ஆயிரந்தலைகளையுடைய அனந்தனென்றபடி. பெரியாழ்வார்திருமொழி, நாலாம்பத்து மூன்றாந்திருமொழி பத்தாம்பாட்டு - "ஆயிரந்தோள்பரப்பி" இத்யாதி. க்ருஷ்ணாவதாரமல்லது பேசாதிருக்கிற இவர் க்ஷீராப்திநாதனைச்சொல்லுவானென்? என்ன - அவதாரங்களுக்கு இத்யாதி. ப்ரத்யபிஜ்ஞைபண்ணுகிறாராதலென்றது - †அங்கலாபத்தோடே அநுஸந்தித்த இழவுதீர, இங்கேதரித்துநின்றநுபவிக்கிறாரென்றபடி. அஹோராத்ரங்களுக்கு நன்மையேதென்ன; - பகவதநுபவத்துக்குஉறுப்பாகையால் வந்த நன்மையென்னுமத்தை அந்வயவ்யதிரேகங்களாலே தர்ஶிப்பிக்கிறார்-பகவத்இத்யாதிவாக்யத்வயத்தாலே. "சுடர்கொள்இராப்பகல்" என்றதுக்குஅர்த்தம் - விஶ்லேஷித்த இத்யாதி. சுடரென்று - அக்நியாய், "அக்நியை எறட்டினாற்போலேயிருக்கிற இராப்பகல்" என்றஇங்கே இப்படி யருளிச்செய்கையாலே இதுவும்ஓரர்த்தமாகக் கண்டுகொள்வது. பட்டைப்பொதிசோறு-பாக்குப்பட்டையிற்கட்டுகிறசோறு. அதுக்கடியேதென்ன-ஏகாகாரமான இத்யாதி. காலக்ருதபரிணாமமில்லாமையாலே ஏகாகாரமானவென்றபடி. இரண்டாம் பாவம் - பரத்வாநுபவம் இத்யாதி. "காலஂஸவபவதி ததா நகாலஸ்தத்ரவைப்ரபு:" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே. தவிர்கிலம் - ஒழிகிறிலோமென்றபடி. (க)

---

† பிறந்தவாற்றிலே, நாகணைமிசைநம்பிரான் என்று திருவனந்தாழ்வானைப் புருஷகாரமாகக் கொண்டு குணாநுபவம்பண்ணவேணுமென்று ப்ரார்த்தித்த அத்திருவனந்தாழ்வானுடைய அங்கத்தின் லாஹம்.

acharya.org

இரண்டாம் பாட்டு.

கேயத்தீங்குழலூதிற்றும்நிரைமேய்த்ததும் கெண்டையொண்கண்
வாசப்பூங்குழல்பின்னைதோள்கள்மணந்ததும் மற்றும்பல
மாயக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்துமனங்குழைந்து
நேயத்தோடுகழிந்தபோதுஎனக்குஎவ்வுலகம்நிகரே ?

ஆ.—(கேயத்தீங்குழல்.)—சேதநாசேதநஸமஸ்தவஸ்துக்களும் நீராயுருகும்படி குழலூதிக்கொண்டு, * திவத்திலும் பசுநிரைமேய்ப்பு உகந்து நிரைமேய்த்தருளின படியையும், பசுமேய்க்க எழுந்தருளின ஆயாஸத்தால் வந்த ஶ்ரமமும் நப்பின்னைப் பிராட்டியைப் பிரிகையால்வந்த ஸந்தாபமும் தீருகைக்கு ஶிஶிரோபசாரமாக அவளுடைய நிரதிஶய ப்ரேமகர்ப்பாதி ஶீதளதிவ்யாவலோகநாம்ருத வர்ஷாபிஷிக்தனுய் தஶீய புண்யகந்தவாஸிதாநந்ததிகந்தராள கலாபரிமளாநுலேபநிரதனுய்க்கொண்டு அவளுடைய நிரதிஶய ஸுகஸ்பர்ஶமான திருத்தோள்களோடே புணர்ந்ததும் உள்பட மற்றுமுள்ள ஸர்வதிவ்யசேஷ்டிதங்களையும் நினைந்து மனங்குழைந்து இப்படி ஸ்நேஹத்தோடே காலத்தைப்போக்கப்பெற்ற எனக்குத் திருநாட்டிலேதான் ஸத்ருஶருளரோ? என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், "தொல்லருணல்வினையால் சொலக்கூடுங்கொல்" என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையால், திருநாட்டில்தான் என்னோடு ஒப்பாருண்டோ வென்கிறார். [கேயத்தீங்குழலூதிற்றும்] - மாநத்தோடே இனியகுழலை ஊதிற்றும். [நிரைமேய்த்ததும் கெண்டையொண்கண்வாசப்பூங்குழல் பின்னைதோள்கள் மணந்ததும்] - பசுமேய்த்துவந்த இளைப்புத்தீரும்படி அவனைத் தன்னுடைய முக்யமான அழகிய கண்களாலே அம்ருதத்தை வர்ஷித்தாற்போலே குளிரநோக்கித் திருக்குழலில் பரிமளம் அவன் திருமேனியெல்லாம் வெள்ளமிடும்படிதழுவின நப்பின்னைப்பிராட்டியுடைய தோள்களிலே கலந்ததுவும். [மாயக்கோலப்பிரான்] - நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே அத்யாஶ்சர்யமான அழகையுமுடையனுய் அநுக்ரஹஶீலனுயிருக்கை. [நேயத்தோடு கழிந்தபோது] - இனிமையோடே போன காலம்.

ப.—அநந்தரம், ஆஶ்சர்யமான ஆகாரத்தையுடையனுன க்ருஷ்ணனுடைய, நினைத்தார்நெஞ்சை நெகிழப்பண்ணும் சேஷ்டிதங்களை ஸஸ்நேஹாநுஸந்தாநம்பண்ணிக் காலமெல்லாம்போகாநின்றது; நித்யாநுலேவம்பண்ணுகிற விலக்ஷணதேஶம் எனக்குஸத்ருஶமோ ? என்கிறார்.

(பெண்கள்நெஞ்சு வஶீக்ருதமாகைக்காக), கேயம்-(தாழ்ச்சிதோற்றின)கேயங்களைவைத்து, தீம்-இனிதாம்படி, குழல் - குழல், ஊதிற்றும் - ஊதினதும், (அக்குழல் வழியே பெண்கள்வருமோபாதி பசுக்களும்வரும்படி யக்குழலையூதி), நிரை-நிரை, மேய்த்ததும் - மேய்த்ததும், கெண்டை - கெண்டைபோலே, ஒண் - முக்யமான, குழல்-திருக்குழல்களையுடைய, பின்னைதோள்கள் - நப்பின்னைப்பிராட்டி திருததோளோடே, மணந்ததும் - ஸம்ஶ்லேஷித்த இதுவும், மற்றும் - பின்னையும், பல - ஹ்ருத்யமாய்க்கொண்டு பலவாயிருப்பனவான, மாயம்கோலம் - ஆஶ்சர்யரூபத்தையுடையவனுன, பிரான்தன் - க்ருஷ்ணனுடைய, செய்கை - நித்யாநுலாவ்யசேஷ்டிதங்களை, நினைந்து - நினைத்து,

acharya.org

மனம் - நெஞ்சு, குழைந்து - நெகிழ்ந்து, நேயத்தோடு - ஸ்நேஹத்தோடே, போது - போதுகள், கழிந்த - போகாநின்றன; எனக்கு - எனக்கு, எ-எந்த, உலகம் - லோகந் தான், நிகர் - ஒப்பு ஆவது? பரமபதந்தான்ஒப்போ? என்று கருத்து.

இ.—இரண்டாம் பாட்டில், "தொல்லருணல் வினையால் சொலக்கூடுங்கொல்" என்று ப்ரார்தித்தபடியே பெறுகையாலே, திருநாட்டிலேதான்என்னோடுஒப்பாருண்டோ? என்கிறார். [கேயத்தீங்குழல் ஊதிற்றும்]-கேயமென்று நாமம்: தீங்குழல்-இனியகுழல். "பரதந்த்ரனுய்ப்பசுமேய்க்கப்போகையாலே வரவுதாழ்த்தேன்இத்தனை" என்றாற்போலே சிலபாசுரங்களை நெஞ்சைவருத்தும் இசையோடேகூட்டிப்பெண்கள் நெஞ்சில்மறம்மாறும் படி குழல்ஊதிற்றும். [நிரைமேய்த்ததும்]-அக்குழலோசையே யாரகமாக வளருமவை யாயிற்று பசுக்கள்; பெண்களும் அக்குழலோசைவழியேசேருமவர்கள்; ஒன்றைக்கொண்டு எல்லாக்காரியமும் செய்யவல்லவனிறே. [கெண்டை இத்யாதி] - பசுமேய்த்தவிடாய்தீருவது நப்பின்னைப்பிராட்டிதோளேடே அணைந்தாயிற்று. நப்பின்னைப்பிராட்டி முக்யமான அழகியகண்ணாலே குளிரநோக்கி, அழகிய திருக்குழலில் பரிமளத்தாலே திருமேனியை வாஸிதமாக்கி, பசுமேய்த்துவந்த ஶ்ரமந்தீர. "ஹ்ருதாரம்வரிஷ்வஜே" என்கிறபடியே அணைக்க, அவள்தோளோடே கலந்ததும். [மற்றும்பல] - மற்றுமுண்டான பிராட்டிமாரோடே கலந்தபடி. [மாயக்கோலப்பிரான்] - நப்பின்னைப்பிராட்டியோட்டைக் கலவியால்வந்த ஒற்றுமஞ்சளும் மாலிகைச்சாந்துமான அத்யாஶ்சர்யமான ஒப்பனையையுடையனாய் உபகாரசீலனானவனுடைய. [தன்செய்கை யித்யாதி] - க்ருஷ்ண சேஷ்டிதங்களை நினைத்து அத்தாலே நெஞ்சுநெகிழ்ந்து. [நேயத்தோடு கழிந்தபோது]- இனிமையோடே கழிந்த காலம். [எனக்கெவ்வுலகம் நிகரே] - ஒருதேஶவிசேஷத்திலே தான் எனக்குஎதிருண்டோ? ஸ்மர்த்தவ்யவிஷயஸாரஸ்யத்தாலே அநு஭வவேளையிற் போலே ஸ்மருதிவேளையிலும் இனிமையோடே செல்லக்கடவதானால் எனக்குஎங்கே எதிர்?

ஈடு—இரண்டாம்பாட்டு. "தொல்லருணல்வினையால் சொலக்கூடுங்கொல்" என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையாலே திருநாட்டிலேதான் என்னோடொப்பாருண்டோ? என்கிறார்.

[கேயத்தீங்குழலூதிற்றும்]-கேயமென்று பாட்டு: தீமென்று இனிமை; இனிமையையுடைய பாட்டென்றபடி. தான்நினைத்த பெண்களுடையபேரைவைத்துப்புணர்த்துச்சுவைப் பாட்டாகவைத்துஊதிற்றும். [நிரைமேய்த்ததும்]-பெண்களையழைக்கைக்கும் பசுமேய்க்கைக்கும் ஒன்றே பரிகரம்; குழலேயூதவே பசுக்கள்வயிறுநிறையும். சக்ரவர்த்தித்திருமகனுக்கு வில்லு கைவந்திருக்குமாபோலேயாயிற்று, க்ருஷ்ணனுக்குக் குழல் கைவந்திருக்கும்படி.

இரண்டாம்பாட்டு.—கேயத்தீங்குழல் இத்யாதி. "கேயத்தோடு கழிந்தபோது எனக்கெவ்வுலகம்நிகர்" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை-தொல்லருள் இத்யாதி.

பாட்டுக்களை வைத்து இனிதாகக் குழலூதினதும் என்று ஸப்தார்த்தம். கேயம் - மேயம். காகமென்றபடி. ஊதுகைக்கு விஷயங்காட்டுகிறார்—தான் நினைத்த இத்யாதி. சுவைப்பாட்டாக - ரஸவத்காநமாக. கிழிற்பதத்தையுங்கூட்டி பதச்சேர்த்திக்குஶாவம் - பெண்களை இத்யாதி. பெண்களை உழைக்கைக்கொழிய, பசுமேய்க்கைக்கும் பரிகரமாகக்கூடுமோ? என்ன - குழலை இத்யாதி. குழலொழிய வ்யாபாரந்தரமில்லையோ? என்ன - சக்ரவர்த்தி இத்யாதி. "நிரைமேய்த்ததும்" என்றத்

acharya.org

[கெண்டையித்யாதி] - கரவதத்தின்அன்றுபிராட்டி "ஹதபாரம்வரிஷஸ்வஜெ" (பர்த்தாரம்பரிஷஸ்வஜே)என்றுஅணைத்தாற்போலேயாயிற்று,பசுமேய்த்துவந்த ஶ்ரமமெல்லாம் போம்படி நப்பின்னைப்பிராட்டி முக்யமான அழகிய கண்ணாலே குளிரநோக்கி அழகியதிருக்குழலில் பரிமளத்தாலே திருமேனியை வாஸிதமாக்கித் தன்தோளோடே யணைத்ததுவும். [கெண்டையொண்கண்] - கெண்டைபோலே அதிமுக்யமாய்அம்ருதத்தைவர்ஷித்தாற்போலே குளிரநோக்குகிற கண்கள். [வாசப்பூங்குழல்] - * வாசஞ்செய்பூங்குழலிற்காட்டிலும் போலிவையுடைத்தான தன்னேற்றமுடைய குழலையுடையவள். [பின்னை தோள்கள் மணந்ததும்] - அவளுடைய தோள்களுடனே கலந்ததுவும். மணத்தல்-கலத்தல். "தோளி" என்கிறபடியே இவளுக்குஅழகு கைவிஞ்சியிருக்குமே. [மற்றும்பல] - மற்றைப்பிராட்டிமாரோடு கலந்தபடி. சக்ரவர்த்தித்திருமகனுக்கு அத்யயநம், ஆசார்யஸேவை அஸ்தரஶஸ்த்ராப்யாஸங்களுண்டாமாபோலே,இவனுக்கு எல்லாமிவையேயிறே. [மாயக்கோலப்பிரான்]-நப்பின்னைப்பிராட்டியோடுகலந்த ஒற்றுமஞ்சளுந்தானுமான அத்யாஶ்சர்யமான ஒப்பனையுடைய வுபகாரகன். [மாயக்கோலப்பிரான்]-நப்பின்னைப்பிராட்டியோடு கலந்தாற்போலே, அல்லாதபிராட்டிமார் "கோங்கைமேல்குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தோருநாள், தங்குமேலென்னுவிதங்கும்" என்றிருக்குமவர்களுடைய திரு முலைத்தடத்தில் குங்குமக் குழம்பும் கோயிற்சாந்துமாய் நின்ற அழகைச் சொல்லவுமாம். [தன்செய்கைநினைந்து மனங்குழைந்து நேயத்தோடுகழிந்தபோது] - அவன்செயல்களை நினைத்தவாறே நெஞ்சு தன்வசமின்றியழியும்படி. "நினைதோறும் - நெஞ்சிடிந்துகும்" என்றிறேயிருப்பது. [நேயத்தோடு கழிந்தபோது] - ஸ்மர்த்தவ்யவிஷயரஸ்யதையாலே ஸ்மரணந்தான் இனிதாய்க் கழிந்த

ப்ர.—[கெண்டைஇத்யாதி]—ஶுணுகாணை,[ஈ0]"கம்ஸவ்ஷாஶுரு ஹதாரம் ஶஹஷிணாம் ஸுவாவஹ। வஹுவுவஹ்ரூஷாவெஷெ ஹீஹதாரம் வரிஷஸ்வஜெ॥ஈ॥"

தையுங் கூட்டிஹாவம் - கரவதத்தின் இத்யாதி. ஶப்தகிர்வாஹம் - கெண்டைபோலே இத்யாதி. கெண்டைபோலே அழகிய கண்களையும், பரிமளத்தையுடைத்தாய் அழகிதான குழலையுமுடைய நப்பின்னைப் பிராட்டியுடைய தோள்களுடனே ஸம்ஶ்லேஷித்ததுமென்று ஶப்தார்த்தம். வாசஞ்செய்கிற குழலென்னாதே, "வாசந்தானுகுழல்" என்கையாலே - பிராட்டி திருக்குழலிற்காட்டிலும் நப்பின்னைப்பிராட்டி திருக்குழலுக்குஎற்ற முண்டென்கிறார் - வாசஞ்செய் இத்யாதி. வாசம் - பரிமளம். பொலிவு - ஸம்ருத்தி. பூவென்று - அழகு. அவயவாந்தரங்களிருக்க, "தோள்கள்" என்று விஶேஷித்ததுக்குஹாவம் - தோளி இத்யாதி. கைவிஞ்சியிருக்கும் - தோளிலே விஞ்சியிருக்குமென்றும், அதிகமாயிருக்குமென்றும் அர்த்தத்வயம். இவனுக்கு வேறுஅத்யயநாதி வ்யாபாரமில்லையோ? இதுவோ க்ருஷி? என்ன - சக்ரவர்த்தி இத்யாதி. "பின்னைதோள்கள் மணந்ததும்" என்றத்தோடேகூட்டி, "மாயக்கோலம்" என்றதுக்குஹாவம் - நப்பின்னை இத்யாதி. "மற்றும்பல" என்றத்தோடேகூட்டி ஹாவாந்தரம் - நப்பின்னைப்பிராட்டியோடு கலந்தாற்போலே இத்யாதி. "நேயம்" என்று - ஸ்நேஹமாய், இனிமையை லக்ஷிக்கிறது. அப்படி நெஞ்சு ஶிதிலமாமோ? என்ன - நினைதோறும் இத்யாதி. அநுபவத்தாலுண்டாகக்கடவ ப்ரீதி, ஸ்மரணத்தாலே கூடுமோ? என்ன - ஸ்மர்த்தவ்யவிஷய இத்யாதி. நேயத்தோடு கழிந்தபோது-ஸ்நேஹத்தோடே போதுகள் போகாநின்றனவென்ற ஶப்தார்த்தம். நித்யாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகளைப்பற்றத் தமக்குஅதிசயம்வது? என்ன-அநுபவவேளை இத்யாதி. எவ்வுலகம் நிகரே - எத்தலோகந்தானொப்பாவது? பரமபதந்தானொப்போவென்று நிஜஶப்தார்த்தம்; ஆனாலும், "உலகம்" என்று லோகத்திலுள்ளாரைச் சொல்லி, எனக்கு எத்த லோகத்திலுள்ளார் தான்

acharya.org

போது. நேயம் - நேசம். [எனக்கேவ்வுலகம்நிகரே]- ஒருதேஶவிஶேஷத்தில்தான் எனக்கு எதிருண்டோ? அநு஭வவேளைபோலே ஸ்ம்ருதிவேளையிலும் இனிமையோடே செல்லக்கடவதானால் எனக்குஎங்கே எதிர்? ஆகாஶவாயர்எனக்குஎதிரோ!வாய்-இடம் பரமாகாஶமென்கிற பரமபதமாகிற இடத்திலுள்ளார்தான் எனக்குஒப்பாரோ!! உலகமென்பது உயர்ந்தோராகையாலே, ஸூரிகளென்றபடி. (உ)

மூன்றும் பாட்டு.

நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்தும், நீள்நெடுங்கைச்
சிகரமாகளிறட்டதும் இவைபோல்வனவும்பிறவும்
புகர்கொள்சோதிப்பிரான்தன் செய்கைநினைந்துபுலம்பிஎன்றும்
நுகரவைகல்வைகப்பெற்றேன் எனக்குஎன்னினிநோவதுவே?

ஆ— (நிகரில்.)-பசுமேய்த்தருளி விளையாடினாற்போலே அநாயாஸேந செய்தருளின அதிபலபராக்ரம மல்ல கிரிவரஸத்ருஶ நிரவயுகவல குவலயாபீட ப்ரப்ருதி ப்ரதிகூலநிரஸந ஸ்வரூப ஸர்வதிவ்ய சேஷ்டிதங்களையும் அநுசந்தித்து, அவ்வநுசந்தாந ப்ரீதியாலே அப்ரக்ருதிங்கதனுக்கொண்டுஅலற்றி அநு஭விக்கப்பெற்ற எனக்குஇனி ஒருநோவுமில்லை யென்கிறார்.

ஒ.—மூன்றும் பாட்டில், க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுபவித்துக்கொண்டு எனக்குக் காலமெல்லாம் போகப்பெற்றேன்; "இன்னது பெற்றிலேன்" என்று நோவ வேண்டுவதில்லை யென்கிறார். [நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்ததும்] - தங்கள்மிடுக்குக்கு லோகத்தில் ஒப்பின்றிக்கே யிருக்கிற மல்லரைச்செற்றது பசுமேய்த்தாற்போலே வருத்தமில்லாத லீலாமாத்ரமே. [புகர்கொள்சோதி] - ப்ரதிகூலநிரஸநத்தாலே ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [நுகர வைகல் வைகப்பெற்றேன்]-அநுபவிக்கைக்கு ஈடாகக்காலம்நெடுகப்பெற்றே னென்றுமாம்.

ப—அநந்தரம், நிரதிஶயஔஜ்ஜ்வல்யவிஶிஷ்டனான க்ருஷ்ணனுடைய நித்யாநுலாவ்யசேஷ்டிதங்களை அநு஭விக்கைக்கு உறுப்பாகக் காலம் நெடுகப்பெற்றேன்; எனக்குஎதுக்கு நோவுபடவேணு மென்கிறார்.

(மிடுக்குக்கு), நிகர் - ஒப்பு, இல் - இல்லாத, மல்லரை - மல்லரை, செற்றதும் - கொன்றதும், (விரோதிகள் தன்னை "எளியன்" என்று நினைத்திருக்கும்படி),

---

ஒப்பு; பரமபதத்திலுள்ளவர்கள் தான் ஒப்பர்களோ? என்றஅர்த்தங்கண்டுகொள்வது. "எவ்வுலகம்" என்றால் - தேசத்தைக் காட்டுமதொழிய, ஸூரிகளைக் காட்டாதேயென்ன;—"ஶஹாஃஸ்ரோஶஶி" என்கிற ந்யாயத்தாலே காட்டுமென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - ஆகாஶ இத்யாதி. ஆகாசத்தைப் பார்த்து வாயைத் திறந்துகொண்டிருக்கிறவர்கள்; தரித்ரரென்றபடி. "ஆகாசவாயர்" என்றதுக்கு வாஸ்தவமான அர்த்தத்தையருளிச் செய்கிறார்-வாய் இத்யாதி வாக்யத்வயத்தாலே. இன்னமொருவழியாலே, உலகம் என்றது ஸூரிகளைக் காட்டுமென்கிறார் - உலகமென்பது இத்யாதி. உயர்ந்தோர் - உத்க்ருஷ்டர். ஆக, உலகமென்று - லோகத்திலுள்ளாரென்னுதல், பெரியோரென்னுதலென்றபடி.

(உ)

acharya.org

நிரை - பசுவின்பின்னே, மேய்த்ததும் - கோல்கொண்டுபோய் மேய்த்ததுவும், (அந்த கோபாலதசையிலே), நீள் - உத்துங்கமாயிருப்பதாய், நெடு - நெடிய, கை - கையையுமுடைத்தாய், சிகரம் - பர்வதசிகரம்போலே ப்ரபலமாய், மா - (ஆகாரத்திற்பிறப்பாலே) ஶ்லாக்யமான, களிறு - யானையை, அட்டதும் - அழித்ததுவும், இவைபோல்வனவும்- இவைபோலே யநுஹாவ்யமுமாய், பிறவும் - மற்றும் பலவாயிருப்பனவுமாய், புகர்கொள் சோதி - அத்யுஜ்ஜ்வலதேஜோரூபனை, பிரான்தன் - க்ருஷ்ணனுடையதான, செய்கை- சேஷ்டிதங்களை, நினைந்து - அநுஸந்தித்து, புலம்பி-வாய்விட்டலற்றி,என்றும் - நாடோறும், நுகர - புஜிக்கும்படியாக, வைகல் - காலம், வைக - மிகவும் நெடுக, பெற்றேன்-; இனி - இனி, எனக்கு - எனக்கு, என் - எதுக்கு, நோவது - நோவவேணும்? அநுஹவ காலமில்லாமல்நோகிறேனோ? அநுஹவம் ஸாஸமல்லாமல்நோகிறேனோ? என்று கருத்து.

இ—மூன்றும்பாட்டில், க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுஹவித்துக்கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு ஒருவிஶ்லேஷமாகிறநோவு இல்லை என்கிறார். [நிகரில் மல்லரைச்செற்றதும்] - மிடுக்குக்கு ஸத்ருஶமின்றிக்கே இருக்கிற மல்லரைச்செற்றதும். க்ஷத்ரிய ஜந்மத்துக்கு அநுரூபமாக விரோயிநிரஸநம் பண்ணினதும். [நிரைமேய்த்ததும்] - மோபஜந்மத்துக்கு அநுரூபமாகப் பசுமேய்த்ததும்.பசுமேய்த்த அநாயாஸத்தோபாதியாயிற்று, மல்லரைஸீலையாக நிரஸித்ததும். [நீள்நெடுங்கை]-வீப்ஸையாலே அறநெடிய கையென்கை: கடக்கப்போனாலும் எட்டிப்பிடிக்க வல்ல கை. அவன் அதுக்குத் தப்பின பின்பும் இன்று இவர் வயிறுபிடிக்கிறார். [சிகரமாகளிறட்டதும்] - பர்வதஶிகரம்போலே உரத்துப்பெருத்திருக்கிற குவலயாபீடத்தை நிரஸித்ததும். [இவைபோல்வனவும் பிறவும்]-இவைபோலே மற்றுமுண்டான கேசிநிரஸநாதிகளும். [புகர்கொள்சோதி]-விரோயி நிரஸநத்தாலே ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [பிரான்] - உபகாரஶீலன். [தன்செய்கைஇத்யாதி] - தன் சேஷ்டிதங்களை அநுஸந்யித்து நாள்தோறும் அடைவுகெடக்கூப்பிட்டு. [நுகரவைகல்வைகப்பெற்றேன்] - அநுஹவத்தோடே காலம் கழியப்பெற்றேன் என்னுதல்; அநுஹவிக்கலாம்படி காலம் நெடுகப்பெற்றேன் என்னுதல். [எனக்கென் இனி நோவதுவே]- ப்ரீதிப்ரேரிதனாய் அநுஹவிக்கிற எனக்கு இப்படி காலம் நித்யமானபின்பு, விஶ்லேஷமாகிற நோவு உண்டோ?

ஈடு—மூன்றும்பாட்டு. க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஹவித்துக்கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு "இன்னது பெற்றிலேன்" என்று நோவவேண்டுவதில்லையென்கிறார்.

[நிகரில் மல்லரைச் செற்றதும்]-மிடுக்குக்கு ஸத்ருஶமின்றிக்கே யிருக்கும் மல்லரைச்செற்றதும்.† ஶுவ்ய ஸேவையாலே ம்ருதுஸ்வஹாவராயிருப்பார்இரண்டுபிள்ளைகளிறே: அஹக்ஷ்யஹக்ஷணங்களாலும் ஶாஸ்த்ராஸ்த்ர ஶிக்ஷைகளாலும் மலைபோலே திண்ணிதான தோளையுடைய மல்லரைப் பொடிபடுத்தினார்கள்; புழுக்குறித்தது எழுத்தானாற்போலே இங்

மூன்றும்பாட்டு—நிகரில் இத்யாதி. "நுகரவைகல்வைகப்பெற்றேன்" இத்யாதியைக் கடாக்ஷித்து அவதாரிகை - க்ருஷ்ணசேஷ்டிதங்களை இத்யாதி.

"நிகரில்" என்கையாலே - இவர்களை ஜயித்தது ஆஶ்சர்ய மென்கிறார். ஶுவ்ய இத்யாதி. முய்யானால் அவர்கள் பொடிபடும்படி யெங்ஙனே? என்ன - புழுக்குறித்தது இத்யாதி. வாய்த்துக்

† கோஸேவையாலேஎன்று பாடமிருக்கலாம்.

acharya.org

நனே வாய்த்துக்கொண்டு நிற்கக்கண்டதித்தனை; இல்லையாகில் சில முக்யருடைய வ்யாபார மாகமாட்டாதிறே. ''நஸமம் யுத்தமித்யாஹுஃ'' (நஸமம் யுத்தமித்யாஹுஃ) என்று கொண்டு ஸர்வரும் அஞ்சும்படியிறே அற்றைச்செயல். ''ஏவிற்றுச்செய்வானேன்றேதிர்ந்து வந்த மல்லரை''-ஸ்வதந்த்ராராய்வந்து மேல்விழிலிறே ''முடியாது'' என்றுகைவாங்கலாவது? கம்ஸனுக்குப் பரதந்த்ராராய் வருகையாலே இங்குத் தோற்றார்களாகில் அவன் அங்கே தோள்களைக் கழிக்குமாயிற்று; ஆனபின்பு, ''கோழைகளாய்க் கோலையுண்பதில் புகழோடேமுடிய வமையும்'' என்று மேலிட்டார்கள். ''சாவத்தகர்த்தசாந்தணிதோள்சதுரன்''-கூனி சாத்தி விட்ட சாந்து குறியழியாமேகாணும் அவர்களோடேவ்யாபரித்தது. மல்லரோடேகூட ஸர்வாவயவங்களும் பொருந்தி வ்யாபரியாநிற்கச்செய்தே, சாத்தின சாந்து குறியழிந்ததில்லைகாணும். கூனி சாத்திவிட்ட அநந்தரத்திலே பெண்கள் கண்ணாலே இலச்சினையிட்டு விடுகையினாலே இவனாலழிக்கவும் போகாதிறே. இவர்கள் கண்ணாலே இலச்சினையிடுகையாவது- அவன்தோளிலே சேலும்கயலுமிடுகையிறே. இவன் மல்லரோடே அழித்தானாகிலும், ''மற்றெங்கேனும் அழித்தான்'' என்றிறே அவர்கள் இருப்பது. இது அழித்துப்போனானாகில், பின்பு பெண்கள் கோஷ்டிக்குஆளாகானே. என்று எதிர்ந்துவருகையாவது - போரக் கடவோமென்று நெஞ்சிலே துணிந்துவருகை. [நிரைமேய்த்ததும்] - முதற்பிறவிக்குஈடாகச் செய்த செயலும், இரண்டாம் பிறவிக்குஈடாகச்செய்த செயலும்: க்ஷத்ரியஜந்மத்துக்குஈடாம்படி மல்லரோடே யுத்தம்பண்ணினான்; கோபஜந்மத்துக்கு ஸத்ருசமாம்படி பசுக்களை மேய்த்தான். பசுமேய்த்தபோதை ஆயாஸமாகாதே, மல்லரோடு போருதபோதுமுள்ளது. [நீள்நெடுங்கைச் சிகரமாகளிறட்டதும்] - மல்லர்க்குத் தப்பிலும் தப்பவொண்ணாதுகிடீர் இதுக்கு. [நீள்நெடுங்கை]-தூரப்போய்த்தப்பவொண்ணாதபடி கையாலே வளைத்துக்கொள்ளவற்றாயிருக்கை. 'நெடுங்கை' என்னாநிற்கச்செய்தே, 'நீள்நெடுங்கை' என்கிறதிறே-இதின்

கொண்டு - வித்தித்துக்கொண்டு. வாய்த்ததென்று சொல்லவேணுமோ? இவர்கள் நிரவித்தார்களென்னவொண்ணாதோ? என்ன - இல்லையாகில் இத்யாதி. ஆகையாலே 'நஸமம் யுத்தம்' என்று கூட்டுவது. பரதந்த்ராராய் வருகையாலும் அதந்நிரஸநம் அவடிநமென்றுவிவக்ஷித்து, அதுக்குப்ரமாணம் - ஏவிற்று இத்யாதி. ஏவினத்தைச் செய்கைக்காக வுத்யோகித்தெதிர்ந்து வந்த மல்லரைக் குற்றுயிராக்கிலிடாதே முடியும்படியாகத் தகர்த்த. சாந்தால் அணியப்பட்ட தோளையுடைய சாதுர்யமுடையவனுடைய மலை இத்யர்த்தஃ பெரியாழ்வார் திருமொழி, நாலாம்பத்து, இரண்டாந்திருமொழி ஆறும்பாட்டு. ''ஏவிற்றுச் செய்வான்'' என்றதுக்கு அர்த்தம்-ஸ்வதந்த்ராராய் இத்யாதி. ''சாவத்தகர்த்த'' என்றவநந்தரம், ''சாந்தணி தோள்சதுரன்'' என்கையாலே - சாந்தழியாமல் பொருதபடியாயிற்று. இவனுடைய ஸாமர்த்த்யமென்று வ்யாக்யாதாவின்ஈடுபோடு - கூனி இத்யாதி. மேலெழுந்தவாரியாக இவர்களோடே யுத்தம் பண்ணுகையாலே சாந்தழியாதிருந்ததென்றாலோ? என்ன - மல்லரோடே இத்யாதி. குறியழியாமைக்கு ஹேதுவேதென்ன கூனிசாத்திவிட்டவநந்தரத்திலே இத்யாதி. இலச்சினை - அடையாளம். இலச்சினையிடுவதாவது எது? என்ன - இவர்கள்கண்ணாலே இத்யாதி. சேலும்கயலுமிடுகையாவது - தத்துல்யங்களான கண்களாலே பார்க்கை. மல்லயுத்தத்திலழிந்தால் இவர்கள்செய்வதேதென்ன - இவன்மல்லரோடே இத்யாதி. இவர்களிப்படியிருந்தால் இவனுக்கு ஹாநியேதென்ன - இதுவழிந்து இத்யாதி. விவரணம் - க்ஷத்ரிய இத்யாதி. பதச்சேர்த்திக்கு தாத்பர்யார்த்தம் - பசுமேய்த்த இத்யாதி. ''மிகவும் பெரிய கையையுடைய ஆனை'' என்றதுக்கு ஹார்த்தலாவம்-மல்லர்க்கு இத்யாதி. அதுக்குஹேது - தூரப்போய் இத்யாதி. ''வளைத்துக்கொள்ளவற்று'' என்னுமதுக்கு ஸப்தம்வது? என்ன-நெடுங்கையென்னாநிற்க இத்யாதி. ''சிகரமாகளிறு'' என்றதுக்கு ஹார்த்தலாவம் - ஒருகை இத்யாதி. ''பர்வ

acharya.org

பெருமை யிருக்கிறபடி! [சிகரமாகளிறட்டதும்]-ஒருகை வேணுமோ? இதுதன்னைக் காண வமையாதோ? "ஆனைமாமலை" என்னக் கடவதிறே. பர்வதஶிவரம்போலே யாயிற்றுப் பெருத்திருக்கிறபடி.[அட்டதும்]-முடித்ததும்.[இவைபோல்வனவும்பிறவும்]-இவை தொடக்கமான கேஶிநிரஸநாதிகளும்.[புகர்கொள்சோதி]-குவலயாபீடநிரஸநத்துக்கு அநந்தரம்வடிவிற்பிறந்த ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [பிரான்] - உபகாரஶீலன். "ஸவ்யுவேஶுத" (ஸக்யஃ பஶ்யத) என்னும்படி யிருக்குமிறே. "வெஷ்டாஶுகணிகாவிதழ்" (ஸ்வேதாம்புகணிகாசிதம்) - ஆனையோடே போருதாலும் இங்ஙனேயோ வேர்ப்பது? முலையாகிற மலையோடு போருதத்தோடு ஆனையாகிறமலையோடு போருதத்தோடு வாசியில்லைகாணும் இவனுக்கு. [தன்செய்கை நினைந்து புலம்பி]-உபகாரஶீலனானவனுடைய சேஷ்டிதங்களை அநுஸந்தித்து, அதுஉள்ளடங்காமை புலம்பி. [என்றும் நுகரவைகல்வைகப்பெற்றேன்] - நாடோறும் புஜித்துக்கொண்டு, வைகலானது வைகப்பெற்றேன்: காலமானது கழியப்பெற்றேன். வைகலென்பது - காலம். வைகுகையாவது - கழிகை. அன்றிக்கே, அநு஭விக்கைக்குப்போரும்படி காலமானது நெடுகப்பெற்றே னென்றுமாம். அப்போது, வைகுகையாவது - நெடுகுகை. [எனக்கென் இனி நோவதுவே]-"காலம் நெடுகுவது குறுகுவதாகாத இடந்தேடி யநு஭விக்கப்பெற்றிலேன்" என்கிற அத்ருப்தியுண்டோ எனக்கென்கிறார். [எனக்கென் இனி நோவதுவே] - அவனுக்கு வரும் நோவிறே, இவர்க்கு நோவாவது ; அது கழியப்பெற்றதிறே. இவர்நோவு போக்கும் அவனுக்கு வரும் நோவிறே. இவர்க்கு நோவாவது: அதுபோகவே இவர்க்கு நோவு போயிற்றதாமிறே. உயிருக்கு வரும் நோவு உடம்புக்கு நோவாமிறே. (௩)

தசிகரம்போலே பெருத்திருக்கும்" என்றதுக்கு ப்ரமாணம் - ஆனை இத்யாதி. ஒளிபெற்ற தேஜஸ்ஸென்றது - மிக்கதேஜஸ்ஸென்றபடி. உபகாரஶீலனென்றது - புகர்கொள்சோதியை உபகரித்தவனென்றபடி. ஆர்க்குஉபகரித்தான்? என்ன; - மதுரையிற் பெண்களுக்கு உபகரித்தானென்று விவக்ஷித்து, அவர்கள் அதிலே ஈடுபட்டு இருந்தமையைச் சொன்ன ப்ரமாணத்தை அருளிச்செய்கிறார் - ஸவ்ய இத்யாதி. "ஸவ்யஃவஶ்ய ஶுகக்ஷணஸ்ய ஶுவஶிதுரணெக்ஷணழ । மஜயஃஶுகாயாஸவெஷ்டாஶுகணிகாவிதழ்" இதிபஞ்சமேஸே.[20-54]."வஶ்ய" என்கையாலே - உபகாரந் தோற்றகிறது. 'இங்ஙனேயோவேர்ப்பது?' என்றது - தங்கள் கலவியாலே வேர்க்கக் கண்டிருக்கையாலே, தங்கள்முலையிலே ஸம்ஸ்லேஷித்தாற்போலேயோ? என்றபடி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - முலையாகிற இத்யாதி. புலம்பி - அக்ரமமாகக்கூப்பிட்டு. "நிகரில்" இத்யாதியைக் கடாக்ஷித்து ஹாவாந்தரம் - அவனுக்குவரும் இத்யாதி. அவனுடைய நோவு இவரதாமோ? என்ன; - த்வேதா பரிஹரிக்கிறார் - இவர்நோவு இத்யாதி வாக்யத்ரயத்தாலே. (௩)

---

† திருவாய். 8, 4, 1.

acharya.org

நான்காம் பாட்டு.

நோவ ஆய்ச்சிஉரலோடார்க்க இரங்கிற்றும், வஞ்சப்பெண்ணைச்
சாவப்பாலுண்டதும் ஊர்சகடமிறச்சாடியதும்
தேவக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்து மனங்குழைந்து
மேவக்காலங்கள்கூடினேன்எனக்குஎன்னினிவேண்டுவதே?

ஆ.—(நோவ ஆய்ச்சி.) - உரலோடே கட்டிவைக்கலாம்படி ஆஸ்ரிதர்க்குப் பரமசுலபனான படியும், தத்விரோதி பூதநா ஶகடநிரஸநம் பண்ணினபடியும், தொடக்கமாகவுள்ள திவ்யசேஷ்டிதங்களை ஸ்நேஹத்தோடே அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி வேண்டுவதுஉண்டோ? என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், யசோதைப்பிராட்டிக்கு அத்யந்தம்பவ்யனாய் அவ்விருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனை, அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி அவாப்தவ்யம் இல்லை என்கிறார். [தேவக்கோலப்பிரான்] - ஊருகிற சகடத்தைத் தப்பாதபடி நிரஸித்திருந்த அப்ராக்ருதமான அழகை உடையான்.

ப.—அநந்தரம், அப்ராக்ருதவிக்ரஹனான க்ருஷ்ணனுடைய பாலசேஷ்டிதங்களை அநுபவிக்கைக்குக் காலங்கூடப்பெற்றேன்; எனக்குஇனி அபேக்ஷிதமுண்டோ? என்கிறார்.

நோவ - நோம்படியாக, ஆய்ச்சி - ஆய்ச்சியானவள், உரலோடு - உரலோடு, ஆர்க்க - இறுகக்கட்ட, இரங்கிற்றும் - அதுக்கு ஈடுபட்டிருந்ததுவும், வஞ்சம் - (தாய் வடிவுகொண்டு) வஞ்சகையாய்வந்த, பெண்ணை - பேய்ச்சியை, சாவ- சாம்படியாக, பால்- முலைப்பால், உண்டதும் - அமுதுசெய்ததுவும், ஊர் - அசுராவேசத்தாலே ஊர்ந்துவருகிற, சகடம் - சகடமானது, இற - முறியும்படி, சாடியதும் - திருவடிகளாலே பாய்ந்ததுவுமாயுள்ள, தேவக்கோலம் - அப்ராக்ருத விக்ரஹயுக்தனான, பிரான்தன் - க்ருஷ்ணனுடைய, செய்கை - சேஷ்டிதங்களை, நினைந்து - அநுசந்தித்து, மனம் - நெஞ்சு, குழைந்து - நெகிழ்ந்து, மேவ -பொருந்தும்படியாக, காலங்கள் - காலங்கள், கூடினேன்- சித்திக்கப்பெற்றேன்; எனக்கு - எனக்கு, என்-எது, இனி-இனி, வேண்டுவது - அபேக்ஷிதமாக உண்டு? நித்யாநுபவமே புருஷார்த்தம் என்று கருத்து.

இ.—நாலாம்பாட்டில், ஆஸ்ரிதவத்ஸலனான இருப்பிலே ப்ரதிகூலரைமாய்த்த க்ருஷ்ணனை அநுபவிக்கப்பெற்ற எனக்கு அவாப்தவ்யம் உண்டோ என்கிறார். [நோவ] - தாயார்க்கு ப்ரேமம்உள்ள அளவும் சீற்றம் உண்டிறே. இவர் தம்திருமேனியிலே கட்டினாற்போலே நோவுபடுகிறார். [ஆய்ச்சியுரலோடார்க்க இரங்கிற்றும்] - தாயார்கட்டின கட்டுக்கு ப்ரதிக்ரியை இல்லாமையாலே நோவுபட்டு ஸீதனாய் இருந்ததும். ஆஸ்ரித கர்மபந்யமும் ப்ரதிகூலர் பந்யித்தபந்யமுமிறே அறுக்கலாவது. [வஞ்சமித்யாதி]- தாய் வடிவு கொண்டுவந்த பூதனை முடியும்படி நச்சுப்பாலுண்டதும், ஶூர்பணகையைப்போலே பின்பிருந்து பூசல்விளைக்கவையாதே முடிக்கப்பெற்றபடி. [ஊர்சகடமித்யாதி] - பரிஹாரமாகவைத்த சகடம் அஸுராவேசத்தாலே வந்து நலியப்புக, திருவடிகளாலே

acharya.org

துகளாம்படி சாடியதும்; முலைவரவுதாழ்த்துத் திருவடிகளை நிமிர்த்தமாத்ரத்திலே சகடாஸுரன் அழிந்தபடியாலே - சாடியது என்கிறார். [தேவக்கோலப்பிரான்] - விரோதியை அழிக்கையால்வந்த அப்ராக்ருதமான அழகை எனக்கு உபகரித்தவன். அவன் சேஷ்டிதங்களை அநுபவித்து நெஞ்சுநெகிழ்ந்து இச்சேஷ்டிதங்களோடே பொருந்தும்படி காலங்களைக்கூடப்பெற்றேன்; இனி, எனக்கு வேண்டுவதுஎன்? இவ்வநுபவத்தோடே காலம் செல்லப்பெற்ற எனக்கு அவாப்தவ்யம் உண்டோ ?

ஈடு:—நான்காம்பாட்டு. ஆஸ்ரிதபவ்யனான இருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனையநுபவிக்கப் பெற்ற எனக்கு அவாப்தவ்யமுண்டோ? என்கிறார்.

[நோவஆய்ச்சி உரலோடார்க்க இரங்கிற்று] - சீயர்இப்பாட்டை இயலருளிச் செய்யப் புக்கால் "நோவ" என்றருளிச்செய்யும் அழகுகாணும். நோவவென்கிறார்காணும் ஆழ்வார், தம்திருமேனியிலே கயிறுஉறுத்தினாற்போலே. [ஆய்ச்சிஉரலோடார்க்கஇரங்கிற்றும்] - ஒருத்வேஷமுண்டாய்க் கட்டுகிறாளல்லளிறே, ஸ்நேஹகார்யமான கோபமாகையாலே ஸ்நேஹமுள்ளவளவும்இடைநிற்குமிறே கோபமும். * தாயெடுத்த சிறுகோலுக்குளைந்தோடியிறே,'விளியாவார்க்கவாப்புண்டு விம்மியழுதான்':வாய்விட்டழமாட்டாததிறே இவரை வருத்துகிறது. †(விளியாவார்க்க-கோபித்துக்கட்ட.) [ஆய்ச்சியுரலோடார்க்க] -"தறியார்ந்தகருங்களிறேபோலநின்று தடங்கண்கள்பனிமல்கு தன்மையானே' - ஒரு மத்தகஜத்தைத் தறியோடே சேர்த்தாற்போலேகாணும் இவன் கட்டுண்டு நின்ற நிலை! ஓர்அபலை கட்டின கட்டுஅவிழ்த்துக்கொண்டுபோகமாட்டாதே, நின்றழகையே ஸ்வஹாவமா யிருந்தபடி. "யசிஶதொஷி" (யதிஶக்நோஷி) என்றருளிறே. [உரலோடார்க்கஇரங்கிற்றும்]-உர

நாலாம்பாட்டு — "நோவ இத்யாதி "நோவவாய்ச்சி" இத்யாதியையும், "வஞ்சப்பெண்ணே" இத்யாதிகளையும், "எனக்கென்னினிவேண்டுவது" என்றத்தையுங் கடாகஷித்தவதாரிகை - ஆஶ்ரித இத்யாதி.

ப்ராஸங்கிகம் - சீயர் இத்யாதி. நோவஎன்று அருளிச்செய்யும் அழகுகாணும் என்றது - நோவவென்று சீயர் ஈடுபட்டு அநுஸந்திக்கும்போது நன்றாயிருக்குமென்று கம்பின்னை அருளிச்செய்வரென்றபடி. சீயர் ஈடுபட்டதுக்கு ஹேதுவும் - நோவவென்கிறார் இத்யாதி. ப்ரியபரையானவள் நோவக் கட்டுவானென்? என்ன - ஒரு த்வேஷம் இத்யாதி. இடைநிற்குமிறே - ஸத்ருஶமாயிருக்குமிறே. எவ்வளவு ஸ்நேஹமுண்டு, கோபமும் அதுக்குஒத்திருக்குமென்றபடி. இத்தால் - கோபாதிஶயத்தாலே நோவக்கட்டினாள் என்னுதல். தாயார் மெள்ளக் கட்டினாலும் பொறுக்க வொண்ணாமையாலே நோவாயிருக்குமென்னுதல்; இந்தவர்த்தத்துக்கு ஸூசகம்-தாயெடுத்த என்கிற ப்ரமாணம். ப்ரியபரையான தாய் பரிபவித்தால் பொறுக்கமாட்டாமல் கிங்கரனும் ப்ரகாரத்துக்குத் திருமொழியில் ப்ரமாணத்ரயம் - தாயெடுத்த, விளியாவார்க்க, தறியார்ந்த இத்யாதி. உளைந்தோடி - பயப்பட்டோடி. விளியாவார்க்கவாப்புண்டு - அழைத்துக்கட்டக்கட்டுண்டு, விம்மியழுதான் - விக்கியழுதான் இத்யர்த்தம். "விம்மி" என்றதுக்கு ஹேதுவும் - வாய்விட்டு இத்யாதி. விம்மியழுதானோ? என்ன - தறியார்ந்த இத்யாதி. தறியோடே சேர்ந்த கறுத்த ஆனைபோலே நின்று தடங்கண்களினின்றும் நீர் பெருகுகையை ஸ்வஹாவமாகவுடையவன் இத்யர்த்தம். "தறியார்ந்த"இத்யாதிக்கு அர்த்தம்-ஒருமத்தகஜத்தைஇத்யாதி. "தன்மையானே" என்றதுக்குஅர்த்தம்-ஓபபலைஇத்யாதி. தாயெடுத்தவித்யாதி:எட்டாம்பத்து மூன்றாந் திருமொழி அஞ்சாம்பாட்டு, "வாயெடுத்த" இத்யாதி. விளியாவார்க்கவித்யாதி:ஆறாம்பத்து ஏழாந் திருமொழி நாலாம்பாட்டு, "ஒளியாவெண்ணெய்" இத்யாதி. தறியார்ந்தவித்யாதி: இரண்டாம்பத்து பத்தாந்திருமொழி ஆறாம்பாட்டு, "உறியார்ந்த" இத்யாதி. அவிழ்த்துக்கொண்டு போகமாட்டாததுக்கு ப்ரமாணம் - யசிஶக்நோஷி இத்யாதி. "யசிஶதொஷிஹுவுகூஷதி வஜுஜுவெஷிதி" இத்யாதி

acharya.org

லோடேகட்ட இரங்கிற்றும்: துர்யோதநாதிகளுடைய பந்தமாகிலிறே அறுக்க விரகு சிந்திப்பது. [இரங்கிற்றும்] - மாநஸபீடையை அநுசந்தித்தபடி. இரக்கம் - ஈடுபாடு. [வஞ்சப்பெண்ணைச் சாவப்பாலுண்டதும்] - கேட்டேன்! பேய்த்தாய்பக்கலிலும் அங்ஙனிருந்தானாகில் என்படக்கடவதுதான்? [சாவப்பாலுண்டதும்] - சூர்ப்பநகியைப்போலே அங்கஹாநியைப் பண்ணிவிட்டுப் பூசலைவிளைப்பியாதே முடித்துவிடப் பெற்றபடி. [பாலுண்டதும்] - யசோதைப்பிராட்டிமுலை யுண்ணும்போதும் தான்உயிர்பெற உண்ணுமாபோலேகாணும் இவள்முலை யுண்கிறபோதும் தான்உயிர்பெற முலையுண்டபடி. * பெருமுலையூடுயிரைவற்றவாங்கியுண்டவாயானிறே. இவன் பிள்ளையாயே முலையுண்டானத்தனை; வஸ்துஸ்வஹாவத்தால் ப்ரதிகூலர் முடிந்ததித்தனையிறே. [ஊர்சகடமிறச்சாடியதும்] - ப்ரேரகர் வேண்டாதபடி தானே வந்து நலிந்தபடி. ஒருமநுஷ்யவடிவுகொண்டு வந்து நலியிலிறே பரிஹரிக்கலாவது. இத்தால் சொல்லிற்றாயிற்று - ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக பாதகத்வத்தில் உறைப்புச் சொன்னபடி. [இறச்சாடியதும்]- "தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாப் பிளந்து" என்று சொல்லக்கடவதிறே. [சாடியதும்] - அநாயாஸேந திருவடிகளை நிமிர்க்கச்செய்தேயும், ஒருமுக்யனுடைய வ்யாபாரமாகையாலே போரப் போலியச் சொல்லுகிறார். "பேர்ந்தோர் சாடிறச் செய்யபாதமொன்றால் செய்த நின்சிறுச்சேவகமும்" என்னக்கடவதிறே. [தேவக்கோலப்பிரான்] - ப்ராக்ருத ஸஜாதீயனாய்நின்றுசெய்யவும் பெற்றதில்லையே. அதிவால்யத்திலே செய்த செயலாகையாலே அப்ராக்ருதமா யிருப்பதோர்

ப்ர.—[நோவஇத்யாதி]—[ஆய்ச்சியுரலோடார்க்க] — வஞ்சமேஸெ [சு] "ஷாஹாவெவொடிரொவஹாவுதுவயாடிலுகுவலெ கூஷிகிஷ்கூடுணாரூஹ வெஷிஷிடுதா॥ கசா॥ யஷிஸ்கொஷிமவுதுஷிதியஞலுவெஷிக । உதுகூயு நிஜம் கூடு ஸாவகார கூடுஂவிநீ॥ கரு॥"

பஞ்சமேஸெ. இரங்குவானென்? அவிழ்த்துக்கொண்டு போகவொண்ணாதோ? என்ன - துர்யோதநாதிகள் இத்யாதி. "வஞ்சப்பெண்ணை" இத்யாதிக்கு ஹார்த்தஹாவம் - கேட்டேன் பேய்த்தாய் இத்யாதி. அங்ஙனிருந்தானாகிலென்றது - தாய்பக்கல்போலே யிருந்தானாகிலென்றபடி. "சாவ" என்றதுக்கு வாஸகை - சூர்ப்பநகியை இத்யாதி. "உண்டதும்" என்றதிலே ரஸோக்தி - யசோதை இத்யாதி. தாய்முலை யுண்ணும்போது தன்னுயிர்பெறவுண்டான், பேய்முலையுண்ணும்போது அவளுயிரைத் தான்பெறவுண்டானென்றபடி. உயிர்பெற வுண்டதுக்கு ப்ரமாணம் - பெருமுலை இத்யாதி. திருமொழி மூன்றாந்திருமொழி முதற்பாட்டு, "முற்றமூத்து" இத்யாதி. பாசுரஸ்ய ஸ்பஷ்டோர்த்தஃ. இவன் முக்யனாய் முலையுண்டால் அவள் முடியக்கூடுமோ? என்ன - இவன்பிள்ளையாயே இத்யாதி. "ஊர்" என்றதுக்குஹாவம் - ப்ரேரகர் இத்யாதி. "சகடம்" என்று - அசேதநமாகச்சொல்லுகையாலே, அபரிஹார்யமான ஆபத்தென்கிறார் - ஒருமநுஷ்யவடிவு இத்யாதி. மநுஷ்யவடி வென்றது - பூதநையைக் கடாக்ஷித்து. "ப்ரேரகர்" இத்யாதிவாக்யத்தால் பலிதம் - இத்தால் இத்யாதி. இத்தாலென்றது - "ஊர்" என்கிறஇத்தாலென்றபடி. முறியச் சாடினத்துக்கு ப்ரமாணம் - தளர்ந்தும் இத்யாதி. சாடியதும் - உதைத்ததும். "சாடியதும்" என்று இத்தைப் பெருக்கச்சொல்லுவானென்? என்ன - அநாயாஸேந இத்யாதி. போரப் பொலியச் சொன்னதுக்கு ப்ரமாணம் - பேர்ந்தோர் இத்யாதி. "சிறச்சேவகம்" என்றதிலே நோக்கு. "தேவக்கோலம்" என்றதுக்கு பாவம் - ப்ராக்ருத இத்யாதி. அதாவது - ப்ராக்ருத ஸஜாதீயனாயிருக்கச்செய்தேயும் வ்யாபாரம்அதிமாநுஷமாயிருக்கிறதென்றபடி. விவரணம் - அதிவால்யத்திலே இத்யாதி. மேவுகை - அநந்ய ப்ரயோஜநனாகை. 'உடைக்குலைப்

acharya.org

ஒப்பனைபோலேயிருக்கிறபடி. † (அப்ராக்ருதமான அழகை எனக்கு உபகரித்தவன். கோலம் - ஒப்பித்த விக்ரஹம்.) [தன்செய்கைநினைந்து மனங்குழைந்துமேவக்காலங்கள் கூடினேன்]-அவனுடைய சேஷ்டிதங்களை யநுஸந்தித்து அகவா யுடைகுலைப்பட்டு அநந்ய ப்ரயோஜநனாய்க் கொண்டு காலம் போக்கப்பெற்றேன். நெஞ்சு நெகிழ்ந்து சேஷ்டிதங்களோடே பொருந்தும்படி காலங்களைக் கூடப்பெற்றேன். [எனக்கென்னினிவேண்டுவதே] - இனி அவாப்தவ்ய மொன்றில்லை யென்கிறார். (ச)

ஐந்தாம் பாட்டு.

வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும் வீங்கிருள்வாய்
பூண்டுஅன்றுஅன்னைபுலம்பப்போய் அங்கோராய்க்குலம்புக்கதும்
காண்டலின்றிவளர்ந்து கஞ்சனைத்துஞ்சவஞ்சஞ்செய்ததும்
ஈண்டுநான் அலற்றப்பெற்றேன் எனக்கென்ன இகலுளதே?

ஆ:—(வேண்டி) - பூபாரநிர்ஹரணார்த்தமாக பூமியிலேவந்து திருவவதாரம் பண்ணி யருளவேணுமென்று தேவர்கள் அர்த்திக்கத் தான் ஆசைப்பட்டுக்கொண்டு ஸ்ரீ வஸுதேவர் திருமாளிகையிலேவந்து பிறந்தருளினபடியையும், "துராத்மாவானகம்ஸன் காணிற்செய்வதென்?" என்று ஸ்ரீவஸுதேவரும் தேவகிப்பிராட்டியும் பயப்பட்டு அலற்ற அவர்களுடைய பயம்போம்படியாக அதிபஹுஸுகதம:பூர்ணமான மத்யராத்ரத்திலே தன்னுடைய சதுர்ப்புஜ திவ்யரூப திரஸ்காரபூர்வகமாகத் திருவாய்ப்பாடியிலே யெழுந்தருளினபடியும், அங்கே கம்ஸப்ரப்ருதி ப்ரதிகூலர் அறியாதபடி வளர்ந்தருளிக் கஞ்சனைத் துஞ்ச வஞ்சஞ்செய்ததும், இவையெல்லாவற்றையும் இங்கேயலற்றப்பெற்றேன்; எனக்கு இனிஒரு துஃவுமுண்டோ? என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருவவதாரம் பண்ணியருளின பின்பு கம்ஸன் அறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடி இன்றுஇருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒருமிடியில்லை யென்கிறார். எதிர்உண்டோ என்றுமாம். [வேண்டித்தேவரிரக்க வந்து பிறந்ததும்] - தேவர்கள் இரக்கத் தானேஅபிநிவிஷ்டனாய்வந்து பிறந்ததும். இருளிலேவந்து பிறந்தான் என்றுமாம். கம்ஸபயத்தாலும், "விஸ்லேஷிக்கிறேன்" என்னும் வ்யஸநத்தாலும் கட்டிக்கொண்டு தாயார் கதற இருளிலேபோனான் என்னவுமாம். [ஈண்டு நானலற்றப்பெற்றேன்] - ஸமகாலத்திலேயிருந்து பயப்படாதே இப்போது நிர்பயனாய் இனிதாக அநுபவிக்கப்பெற்றேன்.

ப.—அநந்தரம், அர்த்திதார்த்தகரனான க்ருஷ்ணனுடைய அவதாரப்ரமு஖ கம்ஸவ்யபர்யந்த சேஷ்டிதங்களை இங்கே அநுபவிக்கப்பெற்ற எனக்குஎன்ன விரோதம் உண்டென்கிறார்.

பட்டு'—குலையென்று - கரையாய், கரையுடையப்பட்டென்றபடி; நெஞ்சுநெகிழ்ந்தென்றபடி. மேவ - அநந்யப்ரயோஜநனாய்ப் பொரும்படியாகவென்றபடி. தேவக்கோலப்பிரான்தன் - அப்ராக்ருதவிக்ரஹயுக்தனாய் உபகாரசீலனான க்ருஷ்ணனுடைய இத்யர்த்தம். (ச)

acharya.org

தேவர் - தேவர்கள், இரக்க-,வேண்டி - தன்னிச்சையாலே, வந்து - (க்ஷீரார்ணவத்தில் நின்றும்) வந்து, பிறந்ததும் - அவதரித்ததுவும், அன்று - அப்போதே, அன்னை - பெற்றதாயாரான தேவகியானவள், பூண்டு - (கம்ஸ பயத்தாலே) எடுத்தணைத்து, புலம்ப - கூப்பிட, வீங்கு - செறிந்த, இருள்வாய் - இருளிடத்திலே, போய்-, அங்கு - கம்ஸவிஷயமானதேசந்தன்னிலே, ஓர் - (அவனுக்கு அஞ்சாமல் மறைத்து வைத்துநோக்கும்படி) அத்விதீயமான, ஆய்க்குலம் - இடைக்குலத்திலே, புக்கதும் - ப்ரவேசித்ததுவும், காண்டல்-அந்தக்கம்ஸனுடையகாட்சி, இன்றி - இல்லாதபடி, வளர்ந்து-, கஞ்சன் - கம்ஸன், துஞ்ச - முடியும்படியாக, வஞ்சம் - வஞ்சனை, செய்ததும் - செய்ததுவும், ஈண்டு - இங்கேயிருந்து, நான் - நான், அலற்ற - வாய்விட்டுச்சொல்ல, பெற்றேன் - பெற்றேன்; எனக்கு - எனக்கு, என்ன - என்ன, இகல் - விரோதம், உளது - உண்டு? உண்டாகில் கம்ஸன்பட்டது படு மென்று கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், அவதரித்து, கம்ஸன் அறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்று இருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்கு எதிர் இல்லையென்கிறார்.

[வேண்டி இத்யாதி] - தேவர்கள் அர்த்திக்க, வேண்டிவந்து தன்னுகப்பாலே பிறந்ததுவும். "விதரமரோவயாரோஸ", "ஸம்ஶுஷெஜஜகாம ஷுராவரவஸு:", வரிதூணாயஸாயஶுநாடி." [வீங்கிருள்வாய்] - வளருகிற இருளிலே. வீங்கிருள்வாய் பிறந்ததும் என்னுதல், வீங்கிருள்வாய் ஆய்க்குலம் புக்கதுவும் என்னுதல். "வீங்கிருளினுண்டுளியாய்" என்று பயஹேதுவானஇருள் அன்றிக்கே, பயநிவ்ருத்திக்கு உடலான இருளிறே. [பூண்டன்றுஅன்னைபுலம்ப] - பிறந்த அன்றே தேவகியார், முன்பே ஆறுபிள்ளைகளை இழக்கையாலும், வாஸுதேவாதஸுருத்தாலும், கம்ஸபயத்தாலும் திருவடிகளைக் கட்டிக்கொண்டு கதற. [போய்] - முலைச்சுவடு அறியாமையாலே இவனுக்குப் போகலாமிறே. [அங்கோராய்க்குலம்புக்கதும்] - அத்தசையிலே அஞ்சினான் புகலிடமாயிருப்பது ஓர் இடைச்சேரி உண்டாவதே! கம்ஸனுக்குக் குடிமக்களாய் இருக்கச்செய்தேயும் "அவனுக்குஅநிஷ்டம்" என்று பாராதே மறைத்துவைத்து அடைக்கலம் நோக்கவல்ல ஊர். [காண்டலின்றி வளர்ந்து] - கம்ஸன் வஞ்சித்து வரக்காட்டின துஷ்ப்ரக்ருதிகள் அறியாதபடி வளர்ந்து. [கஞ்சனைத்துஞ்சவஞ்சம் செய்ததும்] - கம்ஸன் அழைத்து வஞ்சிக்கநினைக்க, அவன் நினைவை அவன்தன்னோடே போக்கினதுவும். ராமாவதாரம்போலே "செவ்வைப் பூசல் அல்லது அறியான்" என்று இராமையிறே பிழைத்தது. [ஈண்டுநான் அலற்றப்பெற்றேன்] - இங்கேஇருந்து அநுபவித்து ப்ரீதியாலே அடைவுகெடப் பேசப்பெற்றேன். ஈண்டு - இங்கு என்றபடி: இப்போது என்னவுமாம்; இக்காலத்திலே:அதாகிறது-தேவகியாரையும் ஸ்ரீவஸுதேவரையும்போலே ஸமகாலத்திலே இருந்து வயிறு எரியாதே, கம்ஸவிஜயபர்யந்தமாக இக்காலத்திலே அநுபவிக்கப்பெற்றேன். [எனக்கென்ன இகலுளதே] - எனக்கு என்ன எதிர்உண்டு என்னுதல், எனக்கு என்ன க்லேஶம் உண்டு என்னுதல். இகல் - யுத்தம்:யுத்தத்தாலே வரும் க்லேஶமாதல், யுத்தத்தில் வரும் எதிர் ஆதல்.

acharya.org

ஈடு:—அஞ்சாம்பாட்டு. அவதரித்து கம்ஸனையறியாதபடிவளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்றுஇருந்தநுஷவிக்கப்பெற்ற எனக்கு ஒரேதிரில்லை யென்கிறார்.

[வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும்] - தேவரிரக்க வேண்டி வந்துபிறந்ததும். "எங்களளவறியாதே ஒருவனுக்கு வரங்கொடுத்து அவனையுயரப்பார்த்தோம்: எங்களுக்குக் குடியிருப்பு அரிதாயிற்று" என்று தேவஜாதி கப்படங்கட்டிக்கொண்டு செல்ல "விதரரோசயாமாஸ" (பிதரம்ரோசயாமாஸ) என்கிறபடியே தான் அர்த்தியாய்வந்துபிறந்தது வும். "ஸுதரோயயா" (ஆத்மமாயயா)என்னும்படியிறே; ஆத்மேச்சயா என்றபடி; "மாயா வயுநம்ஜ்ஞாநம்" (மாயா வயுநம் ஜ்ஞாநம்). இரக்கிறவர்களளவுபார்த்தல், தன்னளவு பார்த்தல் செய்கையன்றிக்கே வந்து பிறந்தபடிகாணும்,இவரைவருத்துகிறது. தான்இரப்பாள னுய்க் காரியஞ்செய்யுமவன், பிறந்தால் போறுக்கமாட்டானிறே. [பிறந்ததும்வீங்கிருள் வாய்] - "யுராதுவிராயாரெ ஜாயரோநெ ஜநாடிநெ" (மத்யாத்ரே கிலாதாரேஜாயமாநேஜநார்த்தநே) என்னும்படியிறே "இவனும் விழுக்காடறியாதே யகப் பட்டுக்கொடுநின்றான், கம்ஸபயமும் ப்ராப்தமாயிராநின்றது. இருளாலேயிறே நாம் பிழைத் தது! இனி இவ்விருளைச் சரணம்புகுமித்தனையிறே" என்று பிள்ளையுறங்காவில்லிதாஸர் பணிப்பராம். * ஊரெல்லாந்துஞ்சியில் கூற்றமான இருள்இவர்க்கு இப்போது ஆதரத்துக்கு விஷயமாயிற்றிறே. வீங்கிருள்வாய் பூண்டன்றன்னை புலம்பப்போய் என்றுமாம்; "மக்களறு வரைக் கல்லிடைமோத விழந்தவள்"என்கிறபடியே பேற்றுப்பேற்றுஇழந்தவளாகையாலே,

---

அஞ்சாம்பாட்டு.—வேண்டி இத்யாதி. "காண்டலின்றிவளர்ந்து" இத்யாத்யுத்தரார்த்தத் தைக் கடாகூலித்தவதாரிகை - அவதரித்து இத்யாதி.

தேவர்களிரக்கும் ப்ரகாரத்தைக் காட்டுகிறார் - எங்களளவு இத்யாதி. கப்படம் - கார்ப் பண்யகுசகபடவிசேஷம், கப்பரையும். "வேண்டி-வந்து" - அர்த்தியாய்வந்தித்யர்த்த:. "வஸுவது விராமாக்ஷ: கூபுவாதாநம் ஹதாவிபுயடி । விதரரோசயாமாஸ கடிஷரயம் நுவடி" இதி பாலகாண்டே. "வேண்டி வந்து" என்றதுக்கு - இச்சித்துவந்தென்றர்த்தாந்தரம் - ஸுதரோயயா இத்யாதி. இதுக்கர்த்தம் - ஆத்மேச்சயா என்றபடி என்று. மாயா ஶப்தம் - இச்சா வாசகமாமோ? என்ன - மாயாவயுநம் இத்யாதி. "தேவர்" என்றதுக்கு பாவமாதல், "வந்து பிறந்ததும்" என்றதுக்கு ஹார்த்தபாவமாதல் - இரக்கிறவர்கள் இத்யாதி. இரக்கிறவர்களளவாவது - "ஈஶ்வரோஹம்"என்றஇருக்கிற துர்மாநாதிதோஷம்: தன்னளவாவது - தன்பெருமை. இருவாளவும் பாராமல்வந்து பிறக்கைக்குஅடிவது?என்ன - தாளிரப்பாளனும் இத்யாதி. "வீங்கிருள்வாய்" - ப்ரவ் ருத்தமான இருளிலே. வளருகிற இருளிலேயோபிறந்தான்? என்ன - யுராது இத்யாதி. "யுராதுவிராயாரெ ஜாயரோநெ ஜநாடிநெ । ஹ்ஜம்ஜ்ஜுஷ: வாஷ வுவஷிஸுவொஜி" இதி பஞ்சமேம்ஸே த்ருதீயே. இருளென்னுதே, "வீங்கிருள்", என்று ஶ்லாகித்ததுக்கு ஸம்வாதம் - இவனும் இத்யாதி. இருளை சரணம்புகுமித்தனையென்றது - இருளை உத்தேஶ்யதாபுத்திபண்ணி வணங்குமத்தனையென்றபடி. *ஊரெல்லாந்துஞ்சியிலே, "வீங்கிருளினுண் டுளியாய்" என்று இருளுக்குஅஞ்சினபடியையும், இப்போது கொண்டாடுகிறபடியையும் அநுஸந்தித்து வ்யாக்யாதா ஈடுபடுகிறார் - ஊரெல்லாம் இத்யாதி. "வீங்கிருள்வாய்" என்றத்தை - கீழ்மேலுங் கூட்டுவது. அன்று - பிறந்தஅன்று. காலைப்பூண்டுகொண்டு புலம்புகைக்கு ஹேதுவது? என்ன - மக்களறுவரை இத்யாதி. பிள்ளைகளறுவரையும் கம்ஸன் கல்லிடைமோத, அவர்களையிழந்த தேவகிப்

acharya.org

இவனையும்இழக்கிறோமோ!''என்று விரஹகாதரதையாலே காலைப்பூண்டுகிடந்து கூப்பிடப் போய். பிள்ளைபக்கல் வாத்ஸல்யத்தாலே இவள் கூப்பிட, இவன் முலைச்சுவடறியாமையாலே போனபடி. வீங்கிருள் - வளர்கிறஇருள். [அங்கோராய்க்குலம்புக்கதும்] - அவ்வவஸ்த்தையிலே இடையிலே வளருகைக்குஓர் அஞ்சிஞன்புகலிட முண்டாவதே! [ஆய்க்குலம்]-"கம்ஸன்வாயகன்'' என்று பயப்படவறியாதவர்கள்.''குடிவாய்உடன்படவிருந்தாஞகில் இருக்கிறான், இல்லையாகில் உழக்கோலாலே தகர்க்கிறோம்'' என்றிருப்பர்கள். [காண்டலின்றிவளர்ந்து]- கம்ஸனும் அவன்வரக்காட்டின வாயு,கவர்க்கமும் காணுதபடி வளரப்பெறுவதே! [கஞ்சனைத்துஞ்ச வஞ்சம் செய்ததும்] - ஸ்ரீநாரதபகவான் அறிவித்த பின்பு ஒருபோதுதாழாதேவந்து, அவன்தான் நினைத்தவஞ்சனையை அவன்தன்னேடே போக்கினதும். கம்ஸன் முடியும்படியாக வஞ்சனைசெய்தது, ராமாவதாரம்போலே ''செவ்வைப்பூசலல்லதறியேன்'' என்றிராமையிறே [ஈண்டுநோனலற்றப்பெற்றேன்] - தேவகியாரைப்போலே ஸம்காலத்திலேயிருந்து பயப்படாதே,இப்போது பயங்கெட்டிருந்து அநு஭விக்கப்பெற்றேன். ஈண்டு - இப்போது. [எனக்கென்ன இகலுளதே] - கம்ஸன்பட்டபின்பு எனக்கு ஶத்ருக்களுண்டோ? இகல் - சத்ரு. † (எல்லாரும் ஶேஷபூதராகையாலே தமக்கு சத்ருவில்லை. அவனும் நாராயணனுகையாலே அவனுக்கு சத்ருவில்லை. இனி யிவர் சத்ருக்கள் பகவத்விமு஖ரிறே.) கம்ஸனைமுடித்தபடியை இன்றுஇருந்து அநு஭விக்கப்பெற்ற எனக்குஇனி ஒரு மிடியில்லை என்கிறாராகவுமாம். (ரு)

ஆறும்பாட்டு.

இகல்கோள்புள்ளைப்பிளந்ததும் இமிலேறுகள்செற்றதுவும்
உயர்கோள்சோலைக்குருந்தொசித்ததும் உட்படமற்றும்பல
அகல்கோள்வையமளந்தமாயன் என்னப்பன்தன்மாயங்களே
பகலிராப்பரவப்பெற்றேன் எனக்கென்னமனப்பரிப்பே?

ஆ.—(இகல்கொள்.) - கம்ஸப்ரேரித ப்ரதிகூல விஹங்கவிசேஷ துர்த்தம வ்ருஷ குந்தரூபாஸுரநிரஸந ப்ரப்ருதி பரமபுருஷ திவ்யசேஷ்டிதங்களை ஸர்வ காலமும் ஏத்தப்பெற்ற நான் அவாப்தஸமஸ்தமநோரதனானேன் என்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூலநிரஸந பரம்பரைகளை அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒரு மனோதுஃவம் இல்லை என்கிறார். [இகல்கொள் புள்ளைப்பிளந்ததும்] - எதிரிட்டபுள்ளைப் பிளந்ததும். இமில்என்று கருத்தைச்சொல்லு

பிராட்டியுடையவென்றபடி. பெரியாழ்வார்திருமொழி. அஞ்சாம்பத்து, மூன்றாந்திருமொழி, ''துக்கச் சுழலை'' இத்யாதி. காலைப்பூண்டு - க்ருஷ்ணனுடையகாலைப்பூண்டு. இவள்கூப்பிடுகிறதுக்கும் அவன் போனதுக்கும் ஹேதுவேதென்ன - பிள்ளைபக்கல் இத்யாதி. "ஓர்'' என்றதுக்கு ஹார்த்தபாவமாதல், ஈடுபாடாதல் - அவ்வவஸ்த்தையிலே இத்யாதி. அஞ்சிஞன்புகலிடம் - பயஸ்த்தன்புகுமிடம். பயப்படவறியாமையின் எல்லையைக்காட்டுகிறார் - குடிவாயுடன் இத்யாதி. குடிவாய்உடன்படவிருந்தாஞகிலென்றது - குடிமக்களோடொத்திருந்தாஞகிலென்றபடி. குடிவாய் - குடிமக்கள். உழக்கோல் - தாற்றுக்கோல். நாரதபகவான்சொன்னது கம்ஸனேடே. மிடி - க்லேஶம். (ஙு)

acharya.org

கிறது. [உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும்] - ஸ்ப்ருஹணீயமாம்படி உயர்ந்து தழைத்துநின்ற குருந்தின்வடிவைக்கொண்ட அஸுரனை முடித்ததும்.

ப.—அநந்தரம், பூர்வாவதாரத்திலே அந்பாலிமாந நிவர்த்தகமான த்ரை விக்ரமத்தைப் பண்ணின க்ருஷ்ணனுடைய விரோதிநிரஸந வ்யாபாரங்களை அஹோ ராத்ர விஹாரமற அநுபவிக்கப்பெற்றேன்; எனக்குஎன்ன மநோதுஃவுமுண்டென்கிறார். இகல் - யுத்தத்திலே, கொள் - ஒருப்பட்டுவந்த, புள்ளை - பகாசுரனை, பிளந்ததும் - வாயைக்கிழித்ததுவும், இமில் - (செருக்கடியான) பிசலையுடைய, ஏறுகள் - ஏறுகளை, செற்றதுவும் - செறுத்துக் கொன்றதுவும், உயர் - உயர்த்தியை, கொள் - உடைத்தாய், சோலை - தழைத்த, குருந்து - குருந்தை, ஒசித்ததும் - முறித்ததுவும், உட்பட - முதலாக, மற்றும் - பின்னும், பல - விரோதிநிரஸநரூபமாய்க்கொண்டு பலவாயுள்ளனவாய், அகல் - விஸ்தாரத்தை, கொள் - உடைய, வையம் - பூமியை, அளந்த - அளந்து மஹாபலியஹிமாநத்தை யழித்துக்கொடுத்த, மாயன் - ஆஶ்சர்யபூதனான த்ரிவிக்ரமனாய், என் - அவ்வவதாரத்தோடுண்டான ஐக்யத்தை யெனக்கு ப்ரகாஶிப்பித்த, அப்பன்தன் - மஹோபகாரகனான க்ருஷ்ணனுடைய, மாயங்கள் - ஆஶ்சர்யசேஷ்டிதங்களை, பகல்இரா- பகலோடிரவோடு வாசியற, பரவ - ஸ்துதிக்க, பெற்றேன் - பெற்றேன்; எனக்கு -, என்ன-, மனப்பரிப்பு - மநோதுஃவம் உண்டு? பகவதநுபவகாலம் பழுதுபோகிலிறே மநோதுஃவமுள்ளதென்று கருத்து.

இ.—ஆறும்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுபவிக்கப்பெற்ற எனக்கு ஒருமநோதுஃவம் இல்லை என்கிறார்.

[இகல்கொள் இத்யாதி] - யுத்தோந்மு஖னான வகாஸுரனைப்பிளந்ததும். பகிவேஷத்தாலே வந்து எதிரிட்டானாயிற்று வகாஸுரன்; அவனை அநாயாஸேந பிளந்தான். [இமிலேறு இத்யாதி] - கண்டார்க்கு ஹாவஹமான ककुத்துக்களையுடைய ரிஷபங்களை நிரஸித்ததும். இமில் - ककुத். [உயர்கொள் இத்யாதி] - ஓங்கித்தழைத்திருந்துள்ள குருந்தை முறித்ததும்; தர்ஶநீயமான ஸ்த்தாவரவேஷத்தைக் கொண்டு வந்த மஹாஸுரனை முடித்ததும். [உட்படமற்றும்பல] - கன்றாயும் விளவாயும் வந்த அஸுரர்முதலாக வேறும்நிரஸித்தவை அநேகங்கள். இந்த திர்யக்ஸ்த்தாவரங்களை நித்ய ஸூரிகள் கைங்கர்யத்துக்காக பரிக்ரஹிப்பர்கள்; இங்கு ப்ராதிகூல்யத்துக்குஉறுப்பாகக் கொண்டவடிவுகளிறே இது. இதுக்கு பாபப்ராசுர்யம் அடி; அதுக்குஇச்சைஅடி. [அகல்கொள்இத்யாதி] - பரப்பைஉடைத்தானபூமிஅடங்கலும் தன்திருவடிகளின்கீழேயிட்டுக் கொண்ட ஆஶ்சர்யத்தை யுடையவன். வரையாதே தீண்டும் ஸ்வபாவ ஸாம்யத்தாலே சொல்லுகிறது. [என்னப்பன்] - இவ்வபதாநம் தமக்குஉதவ வலித்தது என்று இருக்கிறார். [மாயங்களே] - ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிரவு இத்யாதி] - இரவோடு பகலோடு வாசியற அநுபவித்து ப்ரீதியாலே அடைவுகெடப்பேசப்பெற்றேன். [எனக்கென்ன மனப்பரிப்பே] - எனக்குஎன்ன மநோதுஃவமுண்டு. பரிவு என்கிறத்தை சந்தஸ்ஸுக்குச்சேர 'பரிப்பு' என்று சொல்லுகிறது.

acharya.org

ஈடு.—ஆறும்பாட்டு.க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுஸந்தித்து பெற்ற எனக்குஒரு மநோதுஃகமில்லையென்கிறார்.

[இகல்கொள்புள்ளைப்பிளந்ததும்] - (இகல் - யுத்தம்.) கேவலம் புள்மாத்ரமாய்வந்து தோற்றுகை யன்றிக்கே, யுத்தோந்முகமாய்க்கொண்டு எதிரிட்ட புள்ளை நிரஸித்ததும். அசுராவேசத்தோடே வரச்செய்தேயும் 'பாதிக்கவருகிறது' என்று பிறரஞ்சாத வடிவுகொண்டு வந்தபடி. * பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டுவந்தது. [இமிலேறுகள் செற்றதுவும்] - ककुத்தையுடைத்தான வ்ருஷபங்களைச் செற்றதுவும். [உயர்கொள்சோலைக் குருந்தொசித்ததும்] - ஒக்கத்தை யுடைத்தாய்ச் சோலைசெய்துநின்ற குருந்தை முறித்ததும். "முக்யராயிருப்பார்க்குஆகர்ஷகமாயிருக்கும்" என்று தழைத்துநின்றது; "இனியித்தைமுறித்துக் கார்யங்கொள்வோம்" என்று பொடிபடுத்தினன். [உட்படமற்றும்பல] - இப்புடையிலே மற்றுமுண்டான ப்ரதிகூலநிரஸநங்கள் அநேகமிறே. [அகல்கொள்வையமித்யாதி] - பரப்பையுடைத்தான பூமியடங்கலும் அநாயாஸேநவளர்ந்த ஆஶ்சர்யபூதனை உபகாரகனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிராப்பரவப்பெற்றேன்] - நாட்டார் அபிமத விஷயங்களை புஜிக்கைக்கு 'பகல் இரா' என்று கூறிட்ட காலம்இரண்டும் இவ்விஷயத்திலே அநுஸந்திக்கப்பெற்ற எனக்கு, இரவுபகல் புறம்பே விஷயங்களை யநுஸந்திப்பாருடைய மநோதுஃகமுண்டோ? பரிவேன்று - துஃகம். அதிலே ஒரு †ஒற்றெழுத்தேறினாலும் அவ்வர்த்தத்தையே காட்டக்கடவது. (சூ)

ஏழாம் பாட்டு.

மனப்பரிப்போடு அழுக்குமானிடசாதியில்தான்பிறந்து
தனக்குவேண்டுருக்கொண்டு தான்தனசீற்றத்தினைமுடிக்கும்
புனத்துழாய்முடிமாலைமார்பன் என்னப்பன்தன்மாயங்களே
நினைக்கும்நெஞ்சுடையேன் எனக்கினியார்நிகர்நீள்நிலத்தே?

ஆ.—(மனப்பரிப்போடு.) - ப்ரணதஜநஸமீஹித நிர்வர்த்தநவிஷய மநோரதனுக்கொண்டு, அசேஷதோஷாஸ்பத மநுஷ்யஜாதியிலே ஸ்வாஸாதாரண திவ்ய ரூபத்தோடே வந்துபிறந்தருளி, ஸ்வாபிமத த்விபுஜ சதுர்ப்புஜாதிரூபங்களை யாஸ்தாநம்பண்ணிக்கொண்டு விரோயிநிரஸநம்பண்ணி பரிபூர்ண மநோரதனுகையாலே,

---

ஆறும்பாட்டு-இகல் இத்யாதி. "இகல்கொள்" என்று தொடங்கி, "மற்றும்பல" என்னுமளவுங் கடாகஷித்தவதாரிகை-க்ருஷ்ணனுடைய இத்யாதி. "எனக்கென்ன மனப்பரிப்பு" என்றத்தை எனக்கொரு மநோதுஃகமில்லையென்கிறாரென்றது. இகல் - யுத்தம். புள்ளென்னாதே, "இகல்கொள் புள்" என்ற விசேஷித்ததுக்கு ஹாவம்-கேவலம் இத்யாதி. "புள்" என்றதுக்கு ஹாவம்-அசுராவேச இத்யாதி. அஞ்சாத வடிவுகொண்டு வந்ததுக்கு ப்ரமாணம் - பள்ளத்தில்மேயும் இத்யாதி. நீர்த்தாழ்வுகளிலே இரைதேடித் திரிகிற வகமாகிற பக்ஷியின் வடிவைக்கொண்டுஇத்யர்த்த:.பெரியாழ்வார் திருமொழி, இரண்டாம்பத்து, அஞ்சாந்திருமொழி, நாலாம்பாட்டு. சோலை செய்து நிற்கைக்கு ஹேது வேதென்ன - முக்யராய் இத்யாதி. "பகலிரா" என்ற விசேஷித்ததுக்கு ஹாவம்-நாட்டார் இத்யாதி. கூறிடுகையாவது - அபிமதவிஷயங்களுக்குக் கொடுக்கைக்குஉறுப்பாக அர்த்தார்ஜநம்பண்ணுகைக்குப் பகலையும், அவற்றை அநுஸந்திக்கைக்கு ராத்ரியையும் அவச்சேதிக்கை யென்றபடி. (க)

acharya.org

அதிபரிமள துலஸீமாலாலங்க்ருதனுயிருந்த எம்பெருமானுடைய ஆஶ்சர்ய திவ்யசேஷ்டிதங்களையே நினைக்கும் நெஞ்சாகிற மஹாநிதியையுடையனான என்னோடொக்க இந்த லோகத்தில் யுந்யனுண்டோ? என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், ஆஸ்ரிதருடைய நோவு பொறுக்கமாட்டாமை அப்ராக்ருத திவ்யஸம்ஸ்யாநத்தோடேகூட தானேவந்து பிறந்தருளி, ஆஸ்ரிதவிரோயி நிரஸநத்தைப் பண்ணியருளினவனுடைய சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு ஆர் நிகர் நீள்நிலத்து? என்கிறார். [தனக்கு வேண்டுருக்கொண்டு] - தனக்கு அஹிமதமான த்விபுஜசதுர்புஜாதிரூபங்களைக்கொண்டு. [தான் தனசிற்றத்தினை முடிக்கும்]-ஆஸ்ரிதருடையவிரோயிகளைப் போக்கினால் அவர்களுக்கு ஒரு காரியஞ்செய்தானுயன்றிகே தன்னுடைய சிற்றத்தை முடித்தானுயிருக்கும். [புனத்துழாய் முடிமாலை மார்பன்] - ஆஸ்ரிதருடைய விரோயிகளைப்போக்கித் திருமஞ்சனமாடி யருளி ஒப்பித்த அழகிய திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலும் உடையவன்.

ப.—அநந்தரம், அதிஶயித ஸௌந்தர்யாகாரனான க்ருஷ்ணனுடைய ஆஸ்ரித விரோயிநிரஸநார்த்தமான அவதாரவைலக்ஷண்யத்தை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு பூமியில் ஸத்ருஶருண்டோ? என்கிறார்.

(“ஹ்ருஶம்ஹவதிஷு” என்கிறபடியே ஸம்ஸாரிகள் படுகிற துஃவத்தைக்கண்டு பரதுஃவாஸஹிஷ்ணுத்வரூபமான), மனம்பரிப்போடு - நெஞ்சில துஃவத்தோடே, அழுக்கு - ஹேயமான, மானிடசாதியில் - மநுஷ்யஜாதியிலே, தான்-(ஹேயப்ரத்யநீகனான) தான், பிறந்து - தத்ஸஜாதீயனுய்ப் பிறந்தவிடத்திலும், தனக்கு வேண்டு - தன் இச்சாநுரூபமான, உரு - அஹிமதவிக்ரஹங்களை, கொண்டு - பரிக்ரஹித்து, தான் - (ஆஸ்ரிதவாத்ஸல்யத்தையுடைய)தான், (ஆஸ்ரிதவிரோயி நிரஸநத்தாலே), தன-தன், சிற்றத்தினை - சிற்றம், முடிக்கும் - முடிப்பானுயிருப்பானுய், புனம்-தன்னிலத்தில் நின்றுற்போலே செவ்விபெற்ற, துழாய்-திருத்துழாய் மாலையையுடைத்தான, முடி-திருமுடியையும், மாலை- அந்தத்திருமாலையையுடைத்தான, மார்பன் - திருமார்பையுமுடையனுய், என் - அவ்வழகையெனக்கு ப்ரகாசிப்பித்த, அப்பன்தன் - உபகாரகனுனவனுடைய, மாயங்கள் - ஆஶ்சர்யசேஷ்டிதங்களை, நினைக்கும் - நினைக்கும்படி விஷயமான, நெஞ்சு-நெஞ்சை, உடையேன் - அஸாதாரணமாகவுடையேனான, எனக்கு - எனக்கு, இனி-இனி, நீள்நிலத்து-இந்தமஹாப்ருதிவியில், நிகர் - ஒப்பார், ஆர்-ஆர்?

இ.—ஏழாம்பாட்டில், ப்ரதிகூலர் அநுகூலரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து, அவர்களை அழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு ஹுமியில் எதிர்இல்லை என்கிறார். [மனப்பரிப்போடு] - “நமக்கு அநந்யார்ஹஶேஷமாயிருக்கிற இவ்வஸ்து, தேஹஸம்வந்தத்தாலே வஹுமுவமாக நோவுபடுவதே!” என்னும் மநோநுக்கததோடேயாயிற்று திருவவதரித்தது. [அழுக்குமானிடசாதியில்] - ப்ரஹ்மாதிகளுங்கூட அருவருக்கும் மநுஷ்யஜாதியிலே. [தானபிறந்து] - ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருததிவ்யஸம்ஸ்யாநத்தோடே ஶாஶ்வதவாஸம் பண்ணிக்கொண்டு அவதரித்து. “ஶாந்தஷெஷெயொகெஜஜெ”. தன்ஜந்மத்தை அநுஸந்யிக்க, ஸம்ஸாரிகளுடைய ஜந்மஸம்வநயம் போம்படியான தான்பிறந்து. [தனக்கு வேண்டுருக்கொண்டு] - சதுர்஭ுஜனுவது, த்வி஭ுஜனுவது, ஶோபாலனுவது, ஸவர்ஶவ

acharya.org

ரூப்யத்தைக் கொள்வதாகை. இவைதான் ஆஸ்ரிதார்ய்மாகையாலே தனக்கு அபிமதமா யிருக்கும். [வேண்டுரு] - ஐச்சம் என்றுமாம். [தான் தனசிற்றத்தினை முடிக்கும்] - ஆஸ்ரிதவத்ஸலனான தான் ஆஸ்ரிதவிரோயிகளைப்போக்கி,அத்தாலே தன்சினம் தீரத்தானாய் இருக்கும். ப்ரஜையை நலிந்தவர்களைத் தாய் 'தனக்குஶத்ரு' என்று இருக்குமா போலே. [புனத்துழாய் முடிமாலைமார்பன்] - ஆஸ்ரிதவிரோயிகள் போகப்பெற்றவத்தாலே ஒப்பித்திருக்கிறபடி. [தன்மாயங்களை] - அவனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே இடைவிடாமல் அநுஸந்யிக்கும் நெஞ்சுடையேன். "காரணம்வாலசோக்ஷயொ:" என்கிறபொதுமை தவிர்ந்து, அஸாயாரணமான நெஞ்சைப்பெற்றேன். [எனக்கு இனியார் நிகர் நீள்நிலத்தே] - பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையான ஊமியில் எனக்கு எதிர்ஆர் ?

ஈடு.—ஏழாம்பாட்டு. ப்ரதிகூலர் ஆஸ்ரிதரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து அவர்களை யழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூமியில் நிகரில்லை யென்கிறார்.

[மனப்பரிப்போடு அழக்கு மானிடசாதியில்தான் பிறந்து]- நாட்டாரை அழக்குடம்பு கழிக்கும் தான்கிடீர் அழக்கு மானிடசாதியிலே வந்து பிறந்தான். ப்ரஜை கிணற்றிலேவிழுந்தால் எடுக்க வருந் தாய் நெஞ்சுநொந்துவந்து எடுக்குமாபோலே, "இவற்றுக்கு உதவப்பெற்றோம" என்னும் திருவுள்ளத்தில் தளர்த்தியோடே வந்து பிறக்கை. [தான பிறந்து]-ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடே ஶர்ப்பவாஸம் பண்ணிக்கொண்டவதரித்து: பிறக்கைக்குக் கர்மம்பண்ணிவைத்தவருங்கூட அருவருக்கும் ஜந்மத்திலே கிடீர் அகர்மவஶ்யனான தான்பிறந்தது; இதுக்கடி காருண்யமிறே. [தனக்கு வேண்டுருக்கொண்டு]-அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தை யுடையனாய்க்கொண்டு.அப்படி பிறந்தால் ஒருபடிப்பட்டிருக்கப் பெறுமோ!. "ஶிஹ ஜோவாவதாஹ ஜோவா" (த்விபுஜோவா சதுர்ப்புஜோவா) என்னும்படியிறே பட்டபடி. ஈஶ்வரத்வத்தைக் கைகழிய விட்டபின்பிறே இவனுக்கு இங்கு இடங்கொடுத்தது. இவைதான் ஆஸ்ரிதார்த்தமாகையாலே தனக்கவிமதமாயிருக்கும். ஐச்சமென்றுமாம். [தான் தனச்றறத்தினைமுடிக்கும்]-

---

ஏழாம்பாட்டு - மனப்பரிப்பு இத்யாதி. "மனப்பரிப்போடழுக்கு" என்று தொடங்கி, "நினைக்கும் நெஞ்சுடையேன்" இத்யாதகளைக் கடாக்ஷித்து அவதாரிகை - ப்ரதிகூலர் இத்யாதி.

"தான்" என்றதுக்கு ஶாவம் நாட்டாரை இத்யாதி. நாட்டாரை யென்கிறது "ஹேயமான வுடம்பைக் கழிக்கவேணும்" என்று ப்ரார்த்திக்கிற முமுக்ஷுக்களை. "மனப்பரிப்போடு" என்றதுக்கு ஸத்ருஷ்டாந்தமாக ஶாவம் - ப்ரஜை இத்யாதி. இவற்றுக்கென்றது - தனக்கு அநந்யார்ஹஶேஷமாய் வைத்து நோவுபடுகிற இவற்றுக்கென்றபடி. "தான்" என்றதுக்கு - அகர்மவஶ்யனான தான் என்று அர்த்தாந்தரம்-பிறக்கைக்கு இத்யாதி. "தனக்கு வேண்டுருக்கொண்டு" என்றதுக்கு இரண்டர்த்தம். † அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தாநத்தை யுடையனாய்க்கொண்டு என்னுதல்; த்விபுஜனாதல் சதுர்ப்புஜனாதல் வேண்டினபடியாய்க்கொண டென்னுதல்.ஒரு படிப்பட்டிருக்க வில்லையோ? என்ன-த்விபுஜோவா இத்யாதி. சதுர்டபுஜனானவன் த்விபுஜனாகைக்கு அடியேதென்ன - ஸம்ஸாரத்தினுடைய கொடுமை யென்கிறார்-ஈஶ்வரத்வத்தை இத்யாதி. "மனப்பரிப்போடு" இத்யாதிக்கு - "ஸம்ஸாரிகளுடைய துவேஷாஸநத்தால் வந்த யசோதுக்கத்தோடே, ஹேயமான மநுஷ்ய ஜாதியிலே, ஹேயப்ரத்யநீகனான தான் தத்ஸஜாதியனாய்ப் பிறந்து; அவ்விடத்திலும் தன் இச்சாநுரூபமான அஸிமதவிக்ரஹங்களை பரிகரஹித்து" என்று உரையிலே ஸம்தர்ப்பம். கைகழியவிட்ட என்றது - ஶ்லேஷம் ; கைகளைக்கழிய விட்ட என்றும், கைகழியும்படிவிட்ட என்றும். இதுக்கு - "உவஸம்ஹாரஸவபூர்க்கு ரூவ

acharya.org

ஆஸ்ரிதவிரோயி போக்கினுனுயிருக்கையன்றிக்கே தன்சினந் தீர்ந்தானுயிருக்கை; மாதா வானவள், ப்ரஜையை நலிந்தவர்களைத் தான் நலிந்து தன்சினந்தீருமாபோலே. கைகேயீ வசமாகையிலாகு'' (கோபஸ்யவசமேயிவாந்). [புனத்துழாய்முடிமாலைமார்பன்] - ஆஸ்ரிதவிரோயிகளைப் போக்கித் திருமஞ்சனம்பண்ணியொப்பித்து, திருமேனியின் ஸ்பர்சத்தாலே தன்நிலத்திலே நின்றுற்போலே சேவ்விபெற்றிருக்கிற திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலுமுடையனுய், அவ்வோப்பனையாலே என்னையெழுதிக்கொண்டான். [தன்மாயங்களே நினைக்கும்நெஞ்சுடையேன்] - ''காரணம்வாலிசோக்ஷயொ?'' (காரணம்பந்தமோக்ஷயோ?) என்று போதுவாகையன்றிக்கே, அவனுடைய ஆஶ்சர்ய சேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடையேன். [எனக்குஇனியார்நிகர் நீள்நிலத்தே]- பூமி பரப்புடைத்தென்னு, எனக்குஒப்பாருண்டோ? பரமபதத்தையொன்றாக நினைக்கிறிலர்; தம்மைப்போலே கவிபாடியடிமைசெய்வாரில்லாமையாலே, ஸம்ஸாரத்தேயிருந்து கவிபாடியடிமைசெய்யப்பெற்ற எனக்கு, பூமியில்ஓர் எதிருண்டோ? என்கிறார். (எ)

எட்டாம் பாட்டு.

நீணிலத்தோடுவான்வியப்ப நிறைபெரும்போர்கள்செய்து
வாணனுயிரந்தோள்துணித்ததும் உட்படமற்றும்பல
மாணியாய்நிலங்கொண்டமாயன் என்னப்பன்தன்மாயங்களே
காணும்நெஞ்சுடையேன் எனக்கினியென்னகலக்கமுண்டே?

ஆ.—(நீள்நிலத்தொடு.) - வானவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையும், மற்றும் ஸ்ரீராமநுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுமே யநுஸந்திக்கும் நெஞ்சுடையேனுன எனக்கு இனி கலக்கமுண்டோ? என்கிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், வானவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு இனி கலக்கம் உண்டோ? என்கிறார். [காணும் நெஞ்சுடையேன்] - அநுஸந்திக்கும் நெஞ்சுஉடையேன்.

ப.—அநந்தரம், அர்த்தியாயும் அபேக்ஷிதந்தலைக்கட்டிக்கொள்ளுமவனுடைய வாணயுத்தப்ரமுகசேஷ்டிதங்களை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு ஒரு கலக்கமுண்டோ? என்கிறார்.

தெதுத-ஹ-ஜி'' என்றதிலே நோக்கு. ''தனசீற்றத்தினை'' என்றதுக்குவாஸனை - ஆஸ்ரிதவிரோயி இத்யாதி. இதுக்கு திருஷ்டாந்தம்-மாதாவானவள் இத்யாதி. ஆஸ்ரிதவிரோதிகளைத் தன் விரோதிகளாக நினைத்துச் சீறின விடம் உண்டோ? என்ன-கைகேயீ இத்யாதி. ''தெதொரா சொரேஹாதெஜா ராவணெநகூ-தவ்ணி। ஏவ்வுஷாவ்வமசாடி-ஶுமம் கைகேயீ வசமேயிவாநு'' இதியுத்தகாண்டே. நக-காக ''புனத்துழாய்-மாலையை - முடியிலேயும் - மார்பிலேயு முடையவன்'' என்றந்வயம். ''மாயங்களே'' என்றவவதாரார்த்தம்-காரணம் இத்யாதி. தேஹவ்வதேந-ஷ்ரணாகாரணம்வாலிசோக்ஷயொ? இத்யாதி. கீழே ''எனக்கெவ்வுலகம் நிகர்'' என்றாரே; இவ்வே ''நீள்நிலத்து'' என்பானென? என்ன-பரமபதத்தை இத்யாதி அதுகடியேதென்ன-தம்மைப் போலே இத்யாதி. (எ)

acharya.org

நீள்-பெரிய, நிலத்தொடு - பூமியோடே, வான் - ஆகாசமும், வியப்ப - விஸ்மயப்படும்படியாக, நிறை - (வாணனொருவனுமே யெதிராயிருக்கப் படைத்துணைக்கு வந்த தனித்தனியே ப்ரதாநரான ருத்ரஸுப்ரஹ்மண்யாதிகளோடேகூட) பஹுபரிகாபூர்ணமான, பெரும்போர்கள் - மஹாயுத்தங்களை, செய்து - பண்ணி, வாணன் - பாணனுடைய, ஆயிரந்தோள் - (யுத்தகண்டுதிப்ரசுரமான) ஆயிரந்தோள்களையும், துணித்தும்-துணித்ததுவும், உட்பட - முதலாக, மற்றும்—,பல - பலவாயுள்ளவையாய், மாணியாய் - (அர்த்தியான) ப்ரஹ்மசாரியாய், நிலம் - பூமியை, கொண்ட - பரிக்ரஹித்த, மாயன் - க்ருத்ரிமனாய், என்-அந்தக்ருத்ரிமத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்த, அப்பன்தன்-உபகாரகனான க்ருஷ்ணனுடையதான, மாயங்கள் - ஆஶ்சர்யசேஷ்டிதங்களை, காணும்-அபரோக்ஷித்ததுபவிக்கும், நெஞ்சு - நெஞ்சை, உடையேன்-;இனி-,எனக்கு-,என்ன-, கலக்கம்-, உண்டு - உண்டு? அவிதேயசித்தர்க்கு இறே ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயஅந்ய ரக்ஷயத்வாதிகளாலுள்ள கலக்கமுள்ளது.

இ.—எட்டாம்பாட்டில், வாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுஸந்஧்ஶிக்கும் நெஞ்சுடைய எனக்கு ஒருகலக்கமில்லையென்கிறார். [நீணிலத்தொடு வான்வியப்ப] - பரப்பையுடைத்தான பூமியில் உள்ளாரோடே தேவர்களுங்கூட விஸ்மயப்படும்படி பராபிபவஸாமர்த்யத்தையுடைய தேவர்களோடு, எளியரான மநுஷ்யர்களோடு வாசியற ஆஶ்சர்யப்படும்படி இருக்கை. "ரஜ்ஜு நீயஸ்ஸுவிக ஜெஶ" என்று எதிரிகளுங்கூட விஸ்மயப்படும்படி இருப்பது. [நிறை பெரும்போர்கள்செய்து] - வலிதாய்ப் பெரிதான யுத்தத்தைப்பண்ணி. [வாணன் இத்யாதி] - அப்ராப்தவிஷயத்திலே அஞ்ஜலிபண்ணினதுக்கு ப்ராயஶ்சித்தம் பண்ணுவாரைப்போலே வாணனுடைய வாஹுவநத்தை ஹேதித்ததும். உஷை பித்ருஹீனையாகாமைக்காக இறே கொல்லாதொழிந்தது.

[உட்பட மற்றும்பல] - "பாணனைரக்ஷிக்கிறேன்" என்று எறட்டுக்கொண்டு, பசலும்குட்டியும் தானுமாக முதுகிட்டுப்போனபடியும், "கூஷ்ணகூஷ்ணஹாவாஹொ ஜாநெக்வாவ ரூவெஷாதஷ்டி" என்று முதுகிலே அமுபு தைத்தபின்பு ஸர்வேஶ்வரனாக அறிந்தபடியும்; வேறும் அநேகம். [மாணியாய் நிலங்கொண்ட] - ஆஶ்ரித ரக்ஷணத்திலே, அர்஥ியாய்த்தன்னை அழியமாறி ரக்ஷித்தவன். [மாயன்]-தன்னுடைமையைப் பிறரதாக்கி இரந்து, சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொண்டும், தன் அழகாலும் ஶீலத்தாலும் ஶுக்ராதிகள் வார்த்தை செவிப்படாதபடி மஹாபலியை எழுதிக்கொண்டும், இப்படி ஆஶ்சர்யசேஷ்டிதங்களை யுடையவன். [என்னப்பன்] - அவர்கள் தலையிலே திருவடிகளைவைத்த இது தம்பேறாக நினைத்திருக்கிறபடி. இப்படி தனிததனியே அநுபவித்துமுடிக்கவொண்ணாத ஆஶ்சர்யசேஷ்டிதங்களையேஅநுஸந்஧்ஶிக்கும் நெஞ்சையுடையேன். [காணும் நெஞ்சு] - அநுஸந்஧்ஶிக்கும் நெஞ்சு. "நெஞ்சென்னுமுட்கண்" என்னக்கடவதிறே. அங்ஙனன்றியே, "*முடியானேயிற் காணங்களையுடையராகையாலே, மநஸ்ஸு சக்ஷுரிந்த்ரியவ்ருத்தியையும் லஷிக்கவற்றானபடி சொல்லுகிறது" என்று பிள்ளான் பணிக்கும். [எனக்கினிஎன்னகலக்கமுண்டே] - இதர தேவதைகளை "ரக்ஷகர்" என்று இருக்கிற கலக்கமும், ஈஶ்வரனுடைய ரக்ஷணத்தில் அதிஶங்கைபண்ணும் கலக்கமும், "தனக்குத்தானே கடவன்" என்கிற கலக்கமும்இல்லை.

acharya.org

ஈடு.—எட்டாம்பாட்டு. பாணவிஜயப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்குஒரு கலக்கமில்லை என்கிறார்.

[நீள்நிலத்தோடுவான்வியப்ப] - பூமியிலுள்ளாரோடு ஸ்வர்க்கத்திலுள்ளாரோடு வாசியற விஸ்மயப்பட. கண்டதுக்கெல்லாம் ஆச்சர்யப்படும் மநுஷ்யரோடொக்க, ஒன்றுக்கும் விக்ருதராகாதே தந்தாமைப் போரப்பொலியநினைத்திருக்கும் தேவர்களும் விஸ்மயப்படும்படி. கும்பிடுவாரோடு கும்பிடுகோள்ளுவாரோடு வாசியறும்படியாக. "வியப்ப" என்று மேலேகிடக்கையாலே, * மஞ்சாக்ரோசந்திபோலே யிருக்கிறது. [நிறைபெரும்போர்கள் செய்து] - குறைவற்ற மஹாயுத்தத்தைப்பண்ணி. அதாவது - ஈச்வராபிமாநிகளான ருத்ராதிகளும் கேட்டோடும்படியான போரைச்செய்து. † (பஹுபரிகரபூர்ணமான மஹாயுத்தங்களைப்பண்ணி). [வாணனுயிரந்தோள் துணித்ததும்] - வகாதவிஷயங்களை யநுவர்த்தித்த தோள்களைக்கழித்தபடி. "இவன் கரபாதை ஆற்றமாட்டாமல் கண்டார் காலிலேல்லாங் குனிந்துதிரியாநின்றான்" என்றுஅக்கரத்தைக்கழித்துவிட்டான். [வாணனித்யாதி] - "கைகழியப்போய் ருத்ரனை யாச்ரயித்தான், இவன் கரபாதையாற்றாமை" என்று அத்தைப் படைக்கடைத்துவிட்டான். [வாணனித்யாதி] - வாணன் தேவதாந்தரபஜநம்பண்ணுகையிறே அவனுக்கு இங்ஙன்கைபிழைப்பாடுவந்தது" என்று நாட்டார் கைவந்தபடி செய்கைக்காகச் செய்தான். "ஈச்வராய" என்றிறே தேஹஸம்பத்தியைக் கொடுத்தது. ஈச்வரன் கைவந்தபடி செய்யாதவர்களைக் கைமேலே தண்டிக்கை ப்ராப்தமிறே. ஸர்வேச்வரன் தன்னை ஆச்ரயிக்கைக்காக இவனோடே கைசேய்திறே அடியிலேவிட்டது. " அத்தை

எட்டாம்பாட்டு - நீள்நிலத்தோடு இத்யாதி. "வாணனுயிரந்தோள் துணித்ததும்" இத்யாதியைக் கடாகஷித்தவதாரிகை - பாணவிஜய இத்யாதி.

பூமியில் இத்யாதி "ஶுஶ்ரூஷுக்ரோஶதி" என்றாற்போலே- "நீள்நிலம், வான்" என்கிறதென்று கருத்து. அவர்களுக்கு வாசி யேதென்ன - கண்டதுக்கெல்லாம் இத்யாதி வாக்யசேஷம். "நிலம், வான்" என்கிற ஸப்தம் - தேவமனுஷ்யர்களை வஹிக்கும்படி என்? என்ன - வியப்ப இத்யாதி. "நிறை" - பரிகரபூர்ணமான. தலையையறுதே தோள்களைக் கழிப்பானென்? என்ன- வகாத இத்யாதி. வகாத விஷயங்களை - அப்ராப்த விஷயங்களை. "அப்ராப்த விஷயங்களை யநுவர்த்திக்கைக்கடி - யுத்த கண்டூதியால் வந்த செருக்கு" என்று அத்தைக் கழித்துவிட்டானென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச் செய்கிறார்- இவன் கரபாதை இத்யாதி. கரம்-இறையும், கையும். "வகாத விஷயங்களை" இத்யாதி வாக்யத்தை விவரியா நின்றுகொண்டு, கரத்தைக் கழித்தது திவ்யாயுதங்களாலே என்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்- கைகழியப்போய் இத்யாதி. படையென்று - ஆயுதமும்,சேனையும். படைக்கடைத்துவிட்டான் - திருவாழிக்குச் செலவிட்டானென்றும்,சேனைக்குச் செலவிட்டானென்றும். அடைத்துவிடுகை - செலவிடுகை. "அப்ராப்த விஷயத்தை யாஸ்ரயித்த கைகள்" என்று இவற்றை சேதித்தால் நாட்டார் கைவந்தபடி தொழுகைக்கு உறுப்பாயிருக்குமென்று செய்தானென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்-வாணன் இத்யாதி. கைபிழைப்பாடு-கைகள் அவனைவிட்டுப்போகை. கைவந்தபடி - கைக்குத்தகுதியானபடி. கைவந்ததெதுக்காக? என்ன-ஈஸ்வராய இத்யாதி. அப்ராப்த விஷயத்தைத் தொழுத கைகளை ஈச்வரன் சேதிக்கை யபத்யாயமாயிரா தென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - ஈச்வரன் இத்யாதி. கைவந்தபடி - சொன்னபடியென்று சாடுவுக்கர்த்தம். கை மேலே - ப்ரத்யக்ஷமாகவென்றும், ஸத்ய என்றும் சாடு; கையை சேதிக்கவென்று ஸ்வபாவார்த்தம். "ஂரஂஶ்வராய நிவெதிதாழி" என்கிற ஶ்லோகார்த்தத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் ஸர்வேச்வரன் இத்யாதி. கைசெய்தென்றது - கையை இவனோடே கூட்டியென்றும், அலங்கரித்தென்றும். சாஸ்த்ரவஶ்யனன்றிக்கே, யுத்த கண்டூதியாலே வந்த அஹங்காரமுடையவனுகையாலே

acharya.org

மதித்திலன், இவன்அறக்கைவிஞ்சினன்'' என்று தண்டித்துவிட்டான். தேவதாந்தரத்தை யாஶ்ரயித்துக் கையிலே ஫லம்பெற்றுவிட்டான். ஸ்ரீவத்ஸமாஶ்ரயணம் பண்ணுகைக்குக் கைம்முதலில்லாமைவிட்டானன்றே. † (ருத்ரனையாஶ்ரயித்ததோன்றுமேயிறே அவனைக் கைதப்பிற்று.) [உட்படமற்றும்பல] - அவனுக்கும் பெருநிலைநின்றாரையும் முதுகுகாட்டும்படி பண்ணுவித்தபடி: ''கூ்ரஷ்ண கூ்ரஷ்ண மஹாவாஹோ'' (க்ருஷ்ணக்ருஷ்ணமஹாபாஹோ)-என்று பின்பிறே அவன் இவனையுள்ளபடியறிந்தது. [மாணியாய்நிலங்கொண்ட மாயன்] - பெறில் ஜீவிப்பானாய்ப்பெறாவிடில் முடிவானாம்படியாய், இரப்பிலே தழும்பேறின வடிவைக்கொண்டு. இவர் அவ்வவதாரத்தில் கால்வாங்குகிறாரல்லர்; கண்ணழிவற்ற அழகாலும், வரையாதே யெல்லாரையும் தீண்டுகையாலும், ஆஶ்ரிதவிஷயத்தி லோரத்தாலும், செய்யும் ஆனைத்தொழில்களாலும் க்ருஷ்ணாவதாரத்தோடொத்திருக்கையாலே ஸ்ரீவாமநாவதாரத்தை அநுஸந்திக்கிறார். [நிலங்கொண்டமாயனென்னப்பன்] - ''திருவுலகளக்க'' என்றுஓரவ்பாஜக்தைபிட்டு அளந்துகொண்டது தம்மையென்றிருக்கிறார். [அப்பன் தன்மாயங்களே காணும் நெஞ்சுடையேன்] - '' '* முடியானேயிற்கரணங்களையுடைய ஆழ்வாராகையாலே, நெஞ்சுதானேநினைக்கவும்வற்றாய்க் காணவும் வற்றாயிருக்கும்' என்று பிள்ளான்பணிக்கும்'' என்றருளிச்செய்வர். அதவா, ''கட்கண்'' என்றும், ''உட்கண்'' என்றும் சொல்லுகிறபடியே நெஞ்சுதன்னையும் கண்ணாகச்சொல்லக்கடவதிறே; அதாகவுமாம். [எனக்கினியேன்னகலக்கமுண்டே] - ''இவ்விஷயத்தைக் காணப்பெற்றிலோம்''

ப்ர.—[நீள்நிலத்தொடு இத்யாதி]—[உட்படமற்றும்பல]—வஸுதேவஸூ ஸுயஸிம்ஹே, ''ஹிஜைவோஹாவநேதத் கூ்ரஷ்ணஸ்யோஷ்ணிஷ்ட நம் । ஶுஶுக்ஷுவுபாணநாஸாய விஜ்ஞாதஸ்ஹிவாரவிஷா॥ஸ॥ ஸுஉவெத்யாஹமொவிஜ்ஞாஸ்வாஹ வாஹுவுஶாவதிஃ । விஜொகூ்வாணஸ்ஹொஷுணுவெஷாஸ்வ்ஹ்ரவவஷிஷுணு ॥ ச०॥ ராஜ்ஞஃ॥ கூ்ரஷ்ண கூ்ரஷ்ண மஹாவாஹோஜாநேகவாம்வாராஷொதஷ்டி । வரெஸாம்வாரோதாநஶநாதிநிய நம்வாரு॥சக॥

இவன் கையைக் கழித்துவிட்டான் என்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - அத்தை மதித்திலன் இத்யாதி. கைவிஞ்சினன் - கைக்கடங்காதவனானென்றும், கைகளாலே அதிகனானென்றார். அவன் பண்ணின தேவதாந்தரபஜநத்துக்கு கரச்சேதமே ஫லமாய்விட்டதென்னுமத்தைரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - தேவதாந்தரத்தை இத்யாதி. கையிலே ஫லம் பெற்றுவிட்டான் - ஸத்ய ஫லம்பெற்றுவிட்டானென்றும், கரச்சேதமாகிற ஫லம்பெற்றுவிட்டானென்றும். இக் கைகள் பகவத் ஸமாஶ்ரயணார்ஹ மல்லாமைவிட்டானன்று; கர்வத்தாலே விட்டானென்னுமத்தையும் ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்-பகவத்ஸமாஶ்ரயணம் இத்யாதி. கைம்முதலில்லாமை - மூலயுகமில்லாமை என்றும், முதலிலே கையில்லாமலென்றும். விட்டானன்றே - கர்வத்தாலே விட்டானென்றபடி. பெருநிலைநின்றாரையும் - ஸஹாயமாய் நின்ற ருத்ராதிகளையும். ''ஶஷ்ராஷ்ஜ்ஞாநஶிஷ்ஹெஶ்'' என்னும்படியிருக்கிறவன் ஸர்வேஶ்வரனோடு எதிரிடுவானென்? என்ன - கூ்ரஷ்ண கூ்ரஷ்ண இத்யாதி. ''கூ்ரஷ்ண கூ்ரஷ்ண மஹாவாஹோஜாநேகவாம்வாராஷொதஷ்டி । வரெஸாம்வாரோதாநஶநாதிநிய நம்வாரு'' இதி, ருத்ரபேஞ்சமேஶ்லோ த்ரயஸ்த்ரிம்ஶே. ''மாணியாய்'' என்றதுக்கர்த்தம்-பெறில் இத்யாதி. க்ருஷ்ணாவதார ஸக்தரான இவர் வாமநாவதாரத்தே போவானென்? என்ன - இவ்வவதாரத்தில் இத்யாதி. அதுக்கடியேதென்ன - கண்ணழிவற்ற இத்யாதி. நெஞ்சாலே காணக்கூடுமோ? என்ன-முடியானேயில் இத்யாதி. பரிஹாராந்தரம் - கட்கண்என்றும் இத்யாதி.। ''நெஞ்சென்று

acharya.org

என்கிறகலக்கம்எனக்குண்டோ ? அதவா, தேவதாந்தரங்களை "ரக்ஷகர்" என்றிருக்கிற கலக்கமும், ஈஸ்வரனுடைய ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணும் கலக்கமும், "தானே தனக்குக்கடவன்" என்னும் கலக்கமும்இல்லை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

கலக்கஏழ்கடல்ஏழ்மலை உலகேழுங்கழியக்கடாய்
உலக்கத்தேர்கோடுசென்றமாயமும் உட்படமற்றும்பல
வலக்கையாழிஇடக்கைச்சங்கம் இவையுடைமால்வண்ணனை
மலக்குநாவுடையேற்கு மாறுளதோ இம்மண்ணின்மிசையே ?

ஆ.—(கலக்க.) - வைதிகபுத்ராநயநார்த்தமாக எழுந்தருளுகிற படியைக் கண்டு ப்ரீத்யதிசயத்தாலே சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களும் க்ஷுபிதமாம்படி, ஸர்வலோகங்களையுங் கழிய அநாயாஸேந திருத்தேரைத் திருநாட்டிலே செல்லக்கடாவி யருளின ஆஸ்சர்யமுட்பட மற்றுமுள்ள ஸர்வதிவ்யசேஷ்டிதங்களையும், ஆஸ்ரிதவாத்ஸல்யைக ஸ்வபாவனுகையாலே தத்விரோயி நிரஸநார்த்தமாக சங்க சக்ராதி ஸர்வதிவ்யாயுதங்களையும் ஏந்திக்கொண்டிருக்கிற அழகையும், எம்பெருமானையுங்கூட ஈடழிக்கும்படி * செவிக்கினிய செஞ்சொல்லால் ஏத்தப்பெற்ற என்னோடு ஒப்பாருளரோ இந்த லோகத்தில் ? என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸர்வேஸ்வரனை மலங்கப்பண்ணும் நாவீறுடைய எனக்கு, பூமியில் எதிர்உண்டோ ? என்கிறார். [கலக்கவேழ் கடலேழ் மலையுலகேழுங் கழியக்கடாய்] - ஏழுகடலையும் ஏழுமலையையும் ஏழுலோகங்களையும் கழியத்தறையிலே நடத்தினாற்போலே ஓக்கநடத்தி. இவையெல்லாம் கலங்க என்றுமாம். ஆவது - அதிருகை. உலக்க - முடிய. [மால்வண்ணனை]! - கறுத்த திருநிறத்தை உடையவனை.

ப.—அநந்தரம், பரத்வஅஸாதாரணசிஹ்ந யுக்தனான க்ருஷ்ணனுடைய வைதிகபுத்ராநயந ப்ரமு஖மான அதிமாநுஷசேஷ்டிதங்களை ஸ்துதிக்கும் நாவையுடைய எனக்கு இப்பூமியில் எதிராவாரார் ? என்கிறார்.

ஏழ்-ஏழு, கடல் - கடலையும், ஏழ்-ஏழு, மலை-மலையையும், ஏழ்-ஏழு, உலகும் - லோகத்தையும், கலக்க - (ஜலஸ்த்தலவிபாகம் தெரியாதபடி)பொருந்தும்படியாக, கழிய- அண்டகபாலத்துக்கவ்வருகே போம்படியாக, கடாய் - நடத்தி, (காரணமான அவ்யக்த பர்யந்தமாக), தேர் - கார்யைகதேசமான தேரை, கொடு - கொண்டு, உலக்க - முடிய, சென்ற - சென்ற, மாயமும் - ஆஸ்சர்யமும், உட்பட - முதலாக, மற்றும் - மற்றும்,

---

முட்கண்" என்னக்கடவதிறே. "என்ன கலக்கம்" என்றதுக்கு பாவம் - இவ்விஷயத்தை இத்யாதி. பாவாந்தரம்-அதவா இத்யாதி. முன்னிரண்டு கலக்கமும் - வாணனுக்கு. மூன்றும் கலக்கம் - மஹாவலிக்கு. (அ)

acharya.org

பல - (வைதிகபுத்ரர்களுடைய ஸஶரீராநயநாவிளம்பாகமநுபமான) பல சேஷ்டிதங்களையும், (பரத்வசிஹ்நமான), வலக்கை ஆழி இடக்கை சங்கம் இவை - வலக்கையில் திருவாழியும் இடக்கையில் திருச்சங்கமுமாகிற இவ்வஸாதாரணசிஹ்நங்களையும், உடை - உடைய, மால்வண்ணனை - ஶ்யாமளவிக்ரஹயுக்தனை, மலக்கும் - ஹர்ஷப்ரகர்ஷத்தாலே யலமாக்கும்படிபண்ணும், நா - நாவீறு, உடையேற்கு - உடைய எனக்கு, இ-ஜ்ஜந்த, மண்ணின் - பூமியின், மிசை - மேலே, மாறு - எதிர், உளதோ - உண்டோ? ஈஶ்வரனுக்கு மநோஹாரியான வாக்கையுடையார் வேறுபூமியிலில்லையென்று கருத்து.

இ.— ஒன்பதாம்பாட்டில், வைதிகபுத்ராநயநந்தொடக்கமான அபதானங்களையுடைய ஸர்வேஶ்வரனை மலக்கும் நாவீறுடைய என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார். [கலக்க இத்யாதி] - ஏழுகடலையும் ஏழுமலையையும் ஏழுலோகங்களையும் கழிய, தறையிலே நடத்தினாற்போலே நடத்தி நீருக்கும்மலைக்கும் ஆகாசத்துக்கும் வாசிதெரியாதபடி நடத்தி. கலங்கவென்றாய் - எங்கும்ஒக்க அதிரநடத்தினென்றுமாம். [உலக்க இத்யாதி] - தமஸ்ஸுக்கு அவ்வருகே செல்லமுடியத் தேரைக்கொண்டு சென்ற ஆஶ்சர்யமும். உலக்க - முடிய. கார்யரூபமான தேரைக் காரணத்திலே கார்யாகாரம் குலையாமல் நடத்தின ஆஶ்சர்யம். [உட்பட மற்றும்பல] - வைதிகபுத்ரர்களை இத்தேசத்தில்நின்றும் கொடுபோருகையும், போனசெவ்வியிலே கொடுவந்து கொடுக்கையும், ப்ராதஸ்ஸவநத்துக்குப்பின்பு மாத்யந்திநஸவநத்துக்கு முன்னே இது அடங்கச்செய்கையும். [வலக்கையாழி இத்யாதி] - "தக்ஷிணஹஸ்தே சாரோயாதா ஶங்கஶ்சக்ரமதாயுதா:" என்று - ஸர்வாயிகவஸ்துவுக்கு லக்ஷணமாயிற்று திவ்யாயுதங்கள். வலக்கையிலே திருவாழியும் இடக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்யமும் இவற்றையுடையவனுமாய், கறுத்தநிறத்தை உடையவனை. "'மால்வண்ணனை' என்ன அமைந்திருக்க, திவ்யாயுதங்களைச்சொல்லுவானென்?" என்று கஞ்சனூர்வண்டுவரைப் பெருமாள் பட்டரைக்கேட்க, "அவிக்ருதவஸ்துவுக்கு லக்ஷணமிறே திவ்யாயுதங்கள்" என்றார். [மலக்கு நாவுடையேற்கு] - "ஸுவாக்யநாதா:" என்கிற ஸர்வாயிகவஸ்துவை விக்ருதமாக்கும்நாவீறுடைய எனக்கு. சோளேந்த்ரஸிம்ஹனை யுளுக்காக்கப்பண்ணவல்ல நாவைப்படைத்த எனக்கு. [மாறுளதோ] - பூமியில்எதிர்உண்டோ? ஈஶ்வரன் உளுக்காக்கும்படி கவிசொல்லவல்லார் தம்மையொழியச் சிலவர் இல்லாமையாலே, வேறு என்னோடு ஒப்பார்இல்லை என்கிறார்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. வைதிகபுத்ராநயந முதலான அபதாநங்களையுடைய ஸர்வேஶ்வரனை மலக்கும் நாவீறுடைய என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார்.

[கலக்கவேழ்கடலேழ்மலையுலகேழும்கழியக்கடாய்] - ஏழ்கடலேழ்மலையுலகேழும் கலக்க கழியக்கடாய். கலக்க - ஒக்க: அதாவது - தேரைநடத்துகிறபோது நீரோடு மலையோடு தறையோடு வாசியற ஒக்கநடத்தினபடி. அன்றிக்கே, கலக்க - ஏழ்

ஒன்பதாம்பாட்டு.—கலக்கஇத்யாதி. பூர்வார்த்தத்தைக்கடாக்ஷித்துஅவதாரிகை-வைதிக இத்யாதி. "மலக்குநாவுடையேற்கு" இத்யாதியைப்பற்ற - மலக்கும் நாவீறுடைய இத்யாதி.

"ஏழ்கடலேழ்மலையுலகேழையுங் கழிய நடத்துகிறபோது - கலக்க - கடாய்" என்ற ப்ரதமத்ருயோர்த்தங்களுக்கு அந்வயம். ஒக்கநடத்துகையாவது - நீருக்கும்மலைக்கும் ஆகாசத்துக்கும்

acharya.org

கடல் என்று கடலுக்குவிசேஷணமானபோது, க்ஷோஹத்தை யுடைத்தான கடல் என்ற படி. அங்ஙனுமன்றிக்கே, ஏழ்கடலேழ்மலையுலகேழையும் கழியநடத்துகிறபோது அதிர நடத்தியென்றுமாம். [உலக்கத்தேர்கோடுசேன்றமாயமும்] - கார்யமான தேரைக் காரண மான மூலப்ரக்ருதியிலே நடத்துகிறவிடத்தில் அழியாதபடி நடத்தின ஆஶ்சர்யமும். உலக்க- முடிய. [உட்படமற்றும்பல] - வைதிகபுத்ரர்களை இத்தேசத்தினின்றும் கொண்டு போரு கையும், போனசெவ்வியிலே கொடுவந்து கொடுக்கையும், ப்ராதஸ் ஸவநத்துக்குப் பின்பு மாத்யந்திநஸவநத்துக்கு முன்பே இதடங்கச்செய்கையும். [வலக்கை யித்யாதி] - இவ்வி டத்தை பட்டரருளிச்செய்யாநிற்கச்செய்தே கஞ்சனூரில் வண்டுவரைப்பெருமாளிருந்தவர், '''மால்வண்ணனை மலக்கு நாவுடையேன்' என்னவமையாதோ, 'வலக்கையாழியிடக் கைச்சங்கமிவையுடை'என்கிற இதுக்குத்தாத்பர்யமென் ?'' என்ன:— ''சோளேந்த்ரசிங் கனை யுளுக்காக்கப்பண்ணுகிறேன் என்கிறார்காண்!'' என்றருளிச்செய்தார். ஸர்வாயிக வஸ்துவுக்கு லக்ஷணமிறே சங்க சக்ரங்கள். ''ஸவாக்ஶநாதர:'' (அவாக்யநாதர:) என்கிற ஸர்வாயிகவஸ்துவை விக்ருதமாக்கும் நாவீறுடையேனென்கிறார். [மால்வண் ணனை] - கறுத்த நிறத்தையுடைய ஸர்வேஶ்வரனை. [மலக்குநாவுடையேற்கு] - இவ ருக்தியில் கலங்குமாகாதே அவன்தான். இவர் கலங்கிச்சொல்லச் சமைந்தாற்போலே யாகாதே அவனும் கலங்கிக் கேட்கச் சமைந்தபடி. [மாறுளதோ இம்மண்ணின்மிசையே] - பரமபதத்தில் அநுபவம் வாய்ப்புகுநீராகையாலே அத்தை யொன்றுகநினைத்திருக்கிறிலர். † (இனியுண்டாகில் பூமியிலே; அதிலுமில்லையென்கிறார்.) [இம்மண்ணின்மிசை - மாறு ளதோ] - ''ஒப்புண்டு, இல்லை''என்று அதிசங்கைபண்ணுகைக்குத்தான் விஷயமுள்ளது நித்யவிபூதியிலேயன்றோ ? (கூ)

தறைக்கும் வாசிதெரிபாதபடி நடத்துகை. கழிய - அதிக்ரமிக்கும்படி. த்விதியார்த்தத்துக்கு, கலக் கத்தை - க்ஷோபத்தை உடையவென்றபடி. ப்ரஸங்காதைதிறம் - இவ்விடத்தை இத்யாதி. சோ ளேந்த்ரசிங்கனென்ற - பெருமாளுடைய ஆனை. உளுக்காக்க - இருக்கும்படி. அதாவது ஸர்வாஞ் கிற மத்தகஜமானது படிந்துகொடுக்கும்படி பண்ணுகிறேனென்றபடி. ''வலக்கையாழி'' இத்யாதி யாலே - சங்கசக்ர விசிஷ்டனான ஆகாரந் தோற்றுமதொழிய, பெருமை சொல்லிற்றிலையே? என்ன- ஸர்வாயிக இத்யாதி. ''சோளேந்த்ர'' இத்யாதிவாக்யத்தால் ஸலிதம் - அவாக்யநாதர் இத்யாதி. ''மால்'' - கறுப்பு. இவருக்திமாத்ரத்திலே ஸர்வாயிகன் கலங்குமோ? என்ன-இவருக்தியில் இத்யாதி. ஸர்வாயிகன் கலங்குகைக்கு ஹேது - வ்யாமோஹமென்று விவக்ஷித்து, அதுக்கு இவர் தம்மை த்ருஷ் டாந்தமாக்கிக்கொண்டருளிச்செய்கிறார்-இவர் இத்யாதி.உபயவிபூதியிலும்ஒப்பில்லையென்னாதே,''மண் மிசைமாறில்லை'' என்பானென்? என்ன-பாமபதத்தில் இத்யாதி. வாய்ப்புகுநீர்-வாயளவுஜலம். அதா வது - உந்மஸ்தகாநுபவமென்றபடி, பரிஹாராந்தரம் - ஒப்புண்டு இத்யாதி. ஆக, ''மண்ணின்மிசை - மாறுளதோ'' என்றதுக்கு - பரமபதத்திலநுபவம்உந்மஸ்தகமாய், யரித்திருந்தநுபவிக்கப் போகாமை யாலே யத்தைவிட்டு, யரித்திருந்தநுபவிக்கலான இந்தவிபூதியில் எனக்கெதிருண்டோ ? என்கிறா ரென்று முந்தின பாவம். ''இம்மண்ணின் மிசை - மாறுளதோ'' என்கையாலே - ''எதிருண்டு, இல்லை'' என்று சங்கிக்கைக்கு விஷயம் பரமபதத்தில் உண்டானால் உண்டித்தனை யொழிய, இங்கில்லை யென்கிறார் என்று இரண்டாம்பாவம். மலக்குநாவுடையேற்கு - அலமாக்கும்படி பண்ணுகிற நாவீ றுடைய எனக்கு என்ற ஸப்தார்த்தம். (க)

acharya.org

பத்தாம் பாட்டு.

மண்மிசைப்பெரும்பாரம்நீங்க ஓர்பாரதமாபெரும்போர்
பண்ணிமாயங்கள்செய்து சேனையைப்பாழ்பட நூற்றிட்டுப்போய்
விண்மிசைத்தன தாமமேபுக மேவியசோதிதன்தாள்
நண்ணிநான்வணங்கப்பெற்றேன் எனக்கார்பிறர்நாயகரே?

ஆ.—(மண்மிசை.)—பூபாராவதரணூர்த்தமாக சுதர்ஶநேந பாஸ்கராச்சாத நாதிகளைப் பண்ணியருளி மஹாபாரதயுத்தத்தைப் பண்ணுவித்து ஸர்வஸேனையையும் நசிப்பித்து ப்ரதிகூலவிஜய ஜநிதநிரதிஶய தேஜஃபரிவ்ருதனாய்க்கொண்டு ஸ்வகீய திவ்ய பரம வ்யோமத்திலே எழுந்தருளின எம்பெருமானுடைய ஸர்வதிவ்யாவதாரங்களையும் ஸர்வ திவ்யசேஷ்டிதங்களையும் ஸர்வதிவ்யகல்யாணகுணங்களையும் ஸர்வகாலமும் அநுபவிக்கப்பெற்ற என்னில் மேற்பட்டாருண்டோ? என்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், ஸம்ஸாரத்தினுள்ளேவந்து திருவவதாரம் பண்ணியருளி, நிரபாயமான திருநாட்டிலே போய்ப்புக்கபடியை அநுபவிக்கப்பெற்ற எனக்கு வேறு சில நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையேனல்லேன் என்கிறார். [மாயங்கள் செய்து] - ஜயத்ரதவயத்தினன்று திருவாழியாலே ஆதித்யனை மறைக்கை தொடக்கமான மஹா ஆஶ்சர்யங்களையுடையவனை. [நூற்றிட்டு] - மந்த்ரித்து.

ப.—அநந்தரம், பூபாரநிர்ஹரணூர்த்தமாக பாரதசமரத்தைப் பண்ணிப் போய் ஸ்வாஸாயாரணயாமத்தை ப்ரவேசித்த பரஞ்ஜ்யோதிஸ்ஸ்வரூபனான கிருஷ்ணன் திருவடியைக்கிட்டி யநுபவிக்கப்பெற்றேன்; எனக்கு வேறுநியாமகருண்டோ? என்கிறார்.

மண்-பூமியின், மிசை-மேலே, பெரு-(விஶ்வம்பரையானவளுக்கும் பொறுக்க அரிதாம்படி) பெரிதான, பாரம் - பாரம், நீங்க - நீங்கும்படியாக, ஓர்-அத்விதீயமான, பாரதம் - பாரதம், ஆ-ஆகிற, பெரு-பெரிய, போர் - யுத்தத்தை, பண்ணி-உண்டாக்கி, மாயங்கள் - (சங்கல்பம்குலைந்து ஆயுதமெடுக்கை பகலையிரவாக்குகை தொடக்கமான) ஆஶ்சர்யசேஷ்டிதங்களை, செய்து - செய்து, சேனையை - எல்லாச்சேனையும், பாழ்பட - பாழ்படும்படிக்கீடாக, நூற்றிட்டு - சூழ்ந்து முடித்து, போய் - வந்தகார்யம் சமைந்தவாறே யெழுந்தருளி, விண்மிசை - பரமாகாசத்திலே, தன - தனக்கஸாதாரணமான, தாமமே-வாஸஸ்த்தாநத்திலே,புக மேவிய[மேவி-புக்க]சென்றுப்ரவேசித்த,சோதிதன் - ஜ்யோதிஸ்ஸ்வரூபனான கிருஷ்ணனுடைய, தாள் - திருவடிகளை, நண்ணி - கிட்டி, நான்., வணங்க - சேஷவ்ருத்திபண்ண, பெற்றேன் - பெற்றேன்; எனக்கு - (இப்படி கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப்பெற்று * ஸ்வராட்டான) எனக்கு, பிறர்-வேறு, நாயகர் - நியாமகர், ஆர்-ஆர்? நான் * அநந்யாயிபதியன்றோவென்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், ஸம்ஸாரத்திலேவந்துஅவதரித்து நிரபாயமாகப் பரமபதத்திலே புக்கபடியை அநுஸந்யிக்கப்பெற்ற எனக்கு வேறு சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோ நான்? என்கிறார். [மண்மிசைப் பெரும்பாரம்நீங்க]- த்ரிபாத்விபூதியிலே, "யத்ரவ-ருவெ-ுஸாயாஹ்ஸகிடெவா:" என்கிறபடியே கனத்

acharya.org

தார் உண்டாய் இருக்கச்செய்தேயும் பாரமில்லையிறே, அஹங்காரஸ்பர்ஶமுடையார் இல்லாமையாலே. ஆகையிறே - மண்மிசைப் பெரும்பாரம் என்று விசேஷிக்கிறது. [பெரும்பாரம்] - விஶ்வம்பரை பொறுக்கவொண்ணாதிருக்கை. [ஓர் பாரதம்] - மஹாபாரதம்: அதாகிற பெரும்போரை விளைத்து. [மாயங்கள்செய்து] - பகலை இரவாக்கியும், "ஆயுதம் எடேன்" என்று ஆயுதம் எடுத்தும். [சேனையைப்பாழ்பட] - உபய ஸேனையிலும் உள்ள பூபாரம் அடங்க வெறுந்தறையாம்படி. [நூற்றிட்டு] - மந்த்ரித்து. "யஸ்ய ஜ்ஞாநமயீ ஸுமோவ்ரதா" என்னக்கடவதிறே. "ஆயுதம் எடுக்கவொட்டோம்" என்கையாலே, சூழ்பாலே அழித்தான்.

[போய் விண்மிசை] - பொய்யாலனம் இடுவார், பரிபவிப்பாரான தேஶத்தை விட்டுப்போய், பரிவரேயான பரமபதத்திலே. [தனதாமமேபுக மேவியசோதி] - "முகுந்தஸ்ஸுஸ்வாநநிஷ்ட:" என்கிறபடியே தனக்கு அஸாதாரணமான ஸ்தாநத்திலே போய்ப்புக்கான். அவன் திருவடிகளைக்கிட்டி நான் அநுபவிக்கப்பெற்றேன்; எனக்கு வேறு நியந்தாக்கள் உண்டோ? புருஷார்த்த காஷ்டையாக ததீயரை நினைத்திருக்கையாலே, அவர்களைப் பிறர் என்கிறிலர்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அபாயபஹுளமான ஸம்ஸாரத்திலே வந்தவதரித்து, நிரபாயமாகப் பரமபதத்திலேபோய்ப் புக்கபடியை யநு஭விக்கப்பெற்ற எனக்கு வேறே சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோநான் என்கிறார்.

[மண்மிசைப்பெரும்பாரம்நீங்க] - 'விஶ்வம்பரை' என்றும், 'க்ஷமை, பொறை' என்றும் பேரையுடைத்தாய்ப் பரிக்கக்கடவதான பூமியாலும் பொறுக்கவொண்ணாதபடியிறே துர்வர்க்கம்திரண்டபடி. த்ரிபாத்விபூதியில் "யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவா:" (யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவா:) என்கிறபடியே—கனத்தாருண்டாயிருக்கச்செய்தேயும், பாரமில்லையிறே அஹங்காரஸ்பர்ஶமுடையாரில்லாமையாலே. தங்கள்பாரத்தை அவன்தலையிலே வைத்திருக்கும் அவர்களிறே யவர்கள். [ஓர் பாரதமாபெரும்போர்பண்ணி]-அத்விதீயமான மஹாபாரதமாகிற மஹாயுத்தத்தைப்பண்ணி. [மாயங்கள்செய்து] - பகலையிரவாக்குவது, "ஆயுதமேடேன்" என்று ஆயுதமெடுப்பது, எதிரியுடைய மர்மத்தைக்காட்டிக்கொடுப்பதுஆனவை தொடக்கமானவற்றைச் செய்து. [சேனை

ப்ர.—[மண்மிசைஇத்யாதி]—வ்யாக்ஷேபத்தை, "தேஹநாகுஸுமி ஸாநஸ்ஸுஸ்வதெ யத்ரபூர்வெபுஸாயுஜ்ஜ்ஞிதெவா:".

பத்தாம்பாட்டு.—மண்மிசை இத்யாதி. "பேய்விண்மிசைத்தனதாமம்" இத்யாதிகளையும், "நண்ணிநான்" இத்யாதிகளையுங் கடாக்ஷித்தவதாரிகை - அபாயபஹுள இத்யாதி.

பாரமென்னாதே "பெரும்பாரம்" என்றதுக்குபாவம் - விஶ்வம்பரை இத்யாதி. இத்தைப்பற்ற மும்மடங்குத் திரளுண்டாயிருக்கவும் நித்யவிபூதிபொறுத்திருக்கவில்லையோ? அத்தைப்பற்ற இதுக்குபாரமோ? என்ன - த்ரிபாத்விபூதி இத்யாதி. இத்தால் - இங்கு "பாரம்" என்கிறது-ஜநபாரமல்ல, அஹங்காரஸ்பர்ஶமே பாரமென்றபடி. நித்யஸூரிகளுக்கு அஹங்காரஸ்பர்ஶமில்லையோ? என்ன - தங்கள் இத்யாதி. த்ரிபாத்விபூதி இத்யாதி வாக்யத்வயமும் - "மண்மிசை" என்றவிசேஷித்ததுக்குபாவம். "ஓர் - மாபாரதப்பெரும்போர்பண்ணி" என்று அந்வயிப்பது. "மாயங்கள் என்கிற

acharya.org

யைப்பாழ்படநூற்றிட்டு] - சேனை வெறுந்தறையாம்படி மந்த்ரித்து. "ய ஸ்ரீ ஸ்ரீவமொ வ்வாவ" (யஸ்யமந்த்ரீசகோப்தாச) என்னக்கடவதிறே. "ஆயுதமெடுக்கவோட்டோம்" என் கையாலே, சூழ்ச்சியாலே யழித்தான். [போய்விண்மிசைத்தனதாமமேபுகமேவியசோதி தன்தாள்]-ப்ரதிகூலரை நிரஸித்ததுக்கு மேலேயன்றோ இவர்களிருந்த நிலத்திலிராதே பரம பதத்திலேபோய்ப்புகப்பெற்றபடி! என்று உகக்கிறார். போய்யாஸநமிடுவோர், பரிபவிப்பாரான இந்நிலத்தைவிட்டுப்பரிவரேயான பரமபதத்தேறப் போகப்பெறுவதே!*(வந்தகார்யம் சமைந் தவாறே யெழுந்தருளி, பரமாகாசத்திலே தனக்கஸாதாரணமான வாஸஸ்த்தாநத்திலே சென்று ப்ரவேசித்த ஜ்யோதிஸ் ஸ்வரூபனான க்ருஷ்ணனுடைய திருவடிகளை.) "கூ ஹ்வா ஹாராவதரணழி"(க்ருத்வாபாராவதரணம்) இத்யாதி. ப்ருதிவ்யாஃ - பாராவதரணம் - க்ருத்வா - ப்ருதுலோசந: - மோஹயித்வாஜகத்ஸர்வம் - ப்ரதிகூலரை யடங்கலும் உழவு கோலாலேவிழவிட்டு, அங்கூலரையடங்கலும் கண்ணாலேவிழவிட்டுப்போனான். "மத ஸ்வ்வ்ஹ்ரநஶுதழி"(கதஸ்ஸ்வஸ்த்தாநமுத்தமம்)- விண்மிசைத்தனதாமமேபுக. "உத் தழி" - கம்ஸாதிகள்துர்யோதநாதிகளால்வரும்அச்சமின்றியே, தனக்குப்பரிவரானவர்களிருக்கிற நிலத்திலேபோய்ப்புகப்பெற்றபடி. ஒருதீர்த்தத்தினன்று நாயிறுபோது ஆண்டானும் எம்பா ரும் தங்களிலேசந்தித்து, "அஹங்காரமமகாரதூஷிதராயிருப்பார் பத்துக்கோடிபேர்நடுவே, அதி ஸுகுமாரமான திருமேனியைக்கொண்டு பத்துநாளெழுந்தருளி, நிரபாயமாகப்புக்கருளப் பெற்றபடி கண்டதே!" என்று ஒருவரையொருவர் தண்டனிட்டுத் தழுவிக்கொள்ளாநிற்க, சீயர் கண்டேன் என்றருளிச்செய்வர். [நண்ணிநான் வணங்கப்பெற்றேன்]-காலயவநன் ஜராஸந்யன் தொடக்கமானாரைப்போலே எதிரிட்டுக்கிட்டுகையன்றிக்கே, முறையாலேகிட்

ப்ர.— [சேனையைப்பாழ்படநூற்றிட்டு] — ஶஹாஹாரதெ, [ஶூர-சகு] ய்ரராஷ்ட்ரஃ, 'யஸ்ய ஸ்ரீ ஸ்ரீவமொ வ்வாவஸுஹ்ரவெவஜநாஷ்டுநஃ । ஹரிவெஶெ வொகூ நாயுஹ்ஸகிஹுகவ்ரநிஜிடுகழி॥ உ०॥"

பஹுவசநத்துக்குபாவம் - பகலை இத்யாதி. மந்த்ரித்ததுக்குப்ரமாணம்—யஸ்ய ஸ்ரீ ஸ்ரீவ இத்யாதி. "யஸ்ய ஸ்ரீ ஸ்ரீவமொ வ்வாவஸுஹ்ரவெவஜநாஷ்டுநஃ" இத்யாதி மஹாபாரதே ராஜஸூயே த்ருதராஷ்ட்ரஃ மந்த்ரிக்கிறதென், திருவாழியாலே ஸம்ஹரிக்கவொண்ணாதோ? என்ன-ஆயுதமெடுக்க இத்யாதி. சூழ்ச்சி - உபாயமும், விசாரமும், க்ருத்ரிமமும். 'போய்" என்று விசேஷித்ததுக்குபாவம் - ப்ரதிகூலரை இத்யாதி. அங்கே போனதுக்குஉகக்கைக்குஇங்குப் பொல்லாங்கேதென்ன-போய்யாஸ நம் இத்யாதி. பூபாரத்தைப்போக்கி ஸ்வஸ்த்தாநத்திலேபோனதுக்கு ப்ரமாணம் - கூ ஹ்வா இத்யாதி. "கூ ஹ்வாஹாராவதரணம் வ்யபிவ்யாஃ வ்யுஹ்ரவொவநஃ । மொஹயிக்வாஜகத்ஸ்வ்வம் மதஸ்வ்வஸ்ஸ்வாநமுத்தழி" இதி மௌஸல பர்வணி. அந்வயிக்கிறார்-வ்யபிவ்யா இத்யாதி. ஶ்லோகார்த் தம் - ப்ரதிகூலரை இத்யாதி. அதில், ஸ்வஸப்தார்த்தம் - விண்மிசை இத்யாதி. "உத்தமம்" என்ற துக்கர்த்தம் - கம்ஸாதிகள் இத்யாதி. ஸ்வஸ்த்தாநத்திலே போகப்பெற்றது உகப்பாயிருக்குமென்று மதுக்கு ஸம்வாதம் - ஒரு தீர்த்தத்தினன்று இத்யாதி. நாயிறபோது-அஸ்தமிக்கிறபோது, "வணங்கி- நான் நண்ண - பெற்றேன்" என்றந்வயித்துபாவம் - காலயவந இத்யாதி. "எனக்கு - பிரர்-ஆர்- நாயகர்" என்றந்வயமாய் - எனக்கு வேறொருவரார் நியாமகரென்ற ஸப்தார்த்தம். "எனக்கார் பிறர்

acharya.org

டப்பேற்றேன். [எனக்கார்பிறர்நாயகரே] - அவனுடைய அவதாரந் தொடக்கமாக, நடுவுள்ள அபாயங்களைத்தப்பி ஆஸ்ரிதரைவாழ்வித்துத் தனக்கமர்ந்த நிலத்தேபோய்ப் புக்கபடியளவும் அநுபவிக்கப்பெற்ற எனக்குஆர்தான் நியாமகர்? என்கிறார். "பயிலுந்திருவுடையார் யவரேலும்" என்கிறத்தை மறந்தார்போலேயிருந்தது; அவர்களைப் பிறராகநினையாரிறே.(ய)

பதினோராம் பாட்டு.

நாயகன்முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகுந்தன்
வாயகம்புகவைத்துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம்
கேசவனடியிணைமிசைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தூயவாயிரத்துஇப்பத்தால் பத்தராவர்துவளின்றியே.

ஆ.—(நாயகன்.)—கீழ்இரண்டுதிருவாய்மொழியாலும்சொன்ன அர்த்தத்தை நிகமிக்கிறது.

நி஖ிலபுவநநிமாணைத் ஸ்ரணியக்ருத்வ நிர்த்தோஷத்வாதிகளாலே அவகதஸர்வேஶ்வரத்வத்தையுடையனாய், ப்ரணதபோக்யபூதாஸங்க்யேய திவ்யாவதார திவ்ய சேஷ்டிதவிசிஷ்டனான எம்பெருமானைச்சொன்ன ஆயிரத்துள் இத்திருவாய்மொழி வல்லவர்களை, இத்திருவாய்மொழிதானே நிகிலப்ரதிபந்தக நிரஸநபூர்வகமாகப் பரமபுருஷசரணாரவிந்தவிஷயாநந்யப்ரயோஜந நித்யஸித்த நிரவயிக பக்தியுக்தராக்கு மென்கிறார்.

ஒ.—நிகமத்தில், க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இப்பத்தும் கற்றார், ஆழ்வார்தம்மைப்போலே க்ருஷ்ணனுக்கே பக்தராவர் என்கிறார்.

"நாயகன் முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகுந்தன், வாயகம் புகவைத் துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம்கேசவனென்றது - கீழில் திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அநுபாஷிக்கிறது" என்றுஞ்சொல்லுவர். [தூயவாயிரத் திப்பத்தால்] - ஆயிரம் திருவாய்மொழியிலும் க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இத்திருவாய்மொழியால். துவள் - குற்றம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியின் ஸம்பந்தத்தாலே பகவதநந்ய பக்தியுக்தராவரென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

முழுவேழுலகுக்கும் - ஸமஸ்த லோகங்களுக்கும், நாயகன் - நிர்வாஹகன், ஆய் - ஆய், முழுவேழுலகும் - நிர்வாஹ்யமான லோகத்தை, (ப்ரளயங்கொள்ளாதபடி),

---

நாயகர்" என்கிறதெத்தாலே? என்ன - அவனுடைய இத்யாதி. ததீயர் தமக்குநாயகராயிருக்க, இங்ஙனேசொல்லலாமோ? என்ன, த்வேதா பரிஹரிக்கிறார் - பயிலும் இத்யாதி வாக்யத்வயத்தாலே. அதாவது - இவ்வநுபவஜநிதப்ரீத்யதிஶயத்தாலே "யவரேலும்" இத்யாதியைமறந்தாரென்றும்; அவர்களை ஈஶ்வரனோபாதியாக நினைத்திருக்குமொழிய வ்யதிரிக்தராக நினையாராகையாலே, இங்கு, 'பிறர்' என்கிறது ததீய வ்யதிரிக்தரையென்றும் தாத்பர்யவயம். போய் - இங்குநின்றும்போய், விண்மிசை - பரமாகாசத்திலே, தனதாமமே-தனக்கு அஸாதாரணஸ்த்தாநத்திலே, புகமேவிய-சென்றுப்ரவேசித்த, சோதிதன்தாள் - ஜ்யோதிஸ்ஸ்வரூபனான தன்திருவடிகளை இதி ஶப்தார்த்தம். (கo)

acharya.org

தன்-தன், வாயகம் - வாய்க்குள்ளே, புக-புக, வைத்து - வைத்து, உமிழ்ந்து-உமிழ்ந்து, (அவற்றுக்கந்தராத்மாவாய்க்கொண்டு), அவைபாய் - ததாத்மகனுய், அவையல்லனும் - தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனும், ஆம் - ஆன, கேசவன்-கேசிஹந்தாவாயுள்ள க்ருஷ்ணன், அடியிணைமிசை-திருவடிகள் விஷயமாக, குருகூர்ச்சடகோபன்-ஆழ்வார், சொன்ன-அருளிச்செய்த, தூய-நிரவத்யமான, ஆயிரத்து - ஆயிரத்து, இப்பத்தால் - (அவதாரசரித ப்ரகாசகமான) இப்பத்தால், துவளின்றிப்பத்தராவர்-(க்ருஷ்ணன்விஷயத்தில்) அநந்ய ப்ரயோஜந பக்தியுக்தராவர். துவளின்றி - குற்றமின்றி. இது-அறுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இப்பத்தைக்கற்றார், தம்மைப்போலே க்ருஷ்ணபக்தராவர் என்கிறார். [நாயகன் இத்யாதி] - ஸகல சேதநாசேதநங்களுக்கும் நியந்தாவாய், ப்ரளயாபத்திலே வயிற்றிலேவைத்து ரக்ஷித்து, உள்ளிருந்து நெருக்குப்படாமே வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, ஸர்வாவஸ்தையிலும் அவற்றை ப்ரகாரமாக உடையனுய், அவற்றின் பக்கலிலே நிற்கச்செய்தேயும் அசித்கதமான பரிணாமமும் சேதநகதமான துஃவித்வாதிகளும் தன்பக்கல் தட்டாதபடிநிற்கும். இதிறே - கீழில் திருவாய்மொழியில் சொன்னது. அத்தை அநுபாஷிக்கிறது. [கேசவன்] - கேசிஹந்தா! என்கையாலே, இத்திருவாய்மொழியில் க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையிறே சொல்லிற்று. ஆக, இரண்டு திருவாய்மொழியையும் அநுபாஷிக்கிறது என்னுதல்; "கூஷ்ண வனவஹிலொகா நாரோ வ்ருத்தி:" என்கிறபடியே க்ருஷ்ணவிஷயமே சொல்லுகிறது என்னுதல். [குருகூர் இத்பாதி] - ஆப்தரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும். [தூயவாயிரத்திப்பத்தால்] - தூய்மையாவது, க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தில் கலப்பற்றிருக்கை. [துவளின்றியே - பத்தராவர்] - துவள் - குற்றம். அதாவது - பரத்வத்திலே நெஞ்சு செல்லுகை. அத்தைத்தவிர்ந்து, க்ருஷ்ணவதாரத்திலே ப்ரவணராகப்பெறுவர். திருவடி ராமாவதாரத்திலே ப்ரவணனுய் இருக்குமாபோலே.

ஈடு.—நிகமத்தில் - கிருஷ்ண சேஷ்டிதங்களைப் பேசினஇப்பத்துங் கற்றார், தம்மைப்போலே கிருஷ்ணபக்தராவரென்கிறார்.

[நாயகனித்யாதி] - ஸகல சேதநாசேதநங்களுக்கும் நியந்தாவாய், ப்ரளயாபத்தில் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்து, உள்ளிருந்து நெருக்குப்படாமே வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, ஸர்வாவஸ்த்தையிலும் ஸகலபதார்த்தங்களும் "தான்" என்கிற சொல்லிலே அடங்கும்படி அவற்றை ப்ரகாரதயா ஶரீரமாகவுடையனுய், இப்படியிருக்கச்செய்தே தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனுன. [கேசவனடியிணைமிசை] - கேசிஹந்தாவான ஸர்வேஶ்வரன்திருவடிகளிலே. "சீழிற்றிருவாய்மொழியிற் சொன்ன ஸர்வேஶ்வரத்வத்தையும், இத்திருவாய்மொழியிலே - கேசிஹந்தாவான க்ருஷ்ணனுடைய அவதாரத்தையும் அநு

நிகமம் - நாயகன் இத்யாதி. "இப்பத்தால் பத்தராவர்" என்றதத்தைக் கடாகூறித்தவதாரிகை—கிருஷ்ணசேஷ்டிதங்களை இத்யாதி.

"முழுவேழுலகுக்கும் - நாயகன் - ஆய்" இத்யன்வயம். ஒன்று குறையாத ஏழுலகுக்கும் நாயகனுயிற்றாய் - க்ருஷ்ணவதாரத்தைச் சொல்லுகிற இடத்திலே ஸர்வேஶ்வரத்வம் சொல்லுவானென்? என்ன - கீழில் திருவாய்மொழி இத்யாதி. அதாவது-"நாயகன்முழுவேழுலகுக்குமாய்" என்று தொடங்கி, "அவையல்லனுமாய்" என்னுமளவும் - *நல்குரவிற்சொன்ன ஸர்வேஶ்வரத்வத்தையும், "கேசவன்" என்று - *குரவையாய்ச்சியரிற்சொன்ன க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையுமநுவதித்துத் தலைக்

acharya.org

பாஷித்துத் தலைக்கட்டுகிறது'' என்று சொல்லுவர். ''கு்ருஷ்ணவவஹிலொகாநாடு'' (க்ருஷ்ணஏவஹிலோகாநாம்) என்கிறபடியே, க்ருஷ்ணவிஷயமே சொல்லுகிற தென்னுதல். [நூறயவாயிரத்திப்பத்தால் பத்தராவர் துவளின்றியே]-இப்பத்தையும் அப்யஸித்தவர்கள் ஆழ்வாரைப்போலேயாவர். இப்பத்தையுடைத்தாகையாலே தூய்மை யுடைத்தான ஆயிர மென்னுதல்; அன்றிக்கே, ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, க்ருஷ்ண வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகையாலே, தூய்மையையுடைத்தான இப்பத்தென்னுதல். [துவளின்றியே - பத்தராவர்] - துவளாவது குற்றம். அதாவது - அவதாராந்தரங்களிற் போகாதே க்ருஷ்ண வ்ருத்தாந்தத்திலே கால்தாழ்வர். (கக)

கட்டுகிற தென்னுதல்; ''கு்ருஷ்ணவவஹிலொகாநாம் தத்திரவிவாவ்யுஃ'' என்ற - க்ருஷ்ணனையே ஸகல ஜகத்ஸர்க்க ஸ்த்திதி ஸம்ஹாரகர்த்தாவாகச் சொல்லுகையாலே *குரவையாய்ச்சிய ரிற்சொன்ன க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையே யநுபாஷித்துத் தலைக்கட்டுகிறாரென்னுதல் என்றபடி. க்ருஷ்ணவிஷயமே யென்றது - இப்பாட்டெல்லாம் க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையே, சொல்லுகிறதென்னுதல் என்றபடி. குற்றமேதென்ன - அவதாராந்தர இத்யாதி. ''கு்ருஷ்ணவவஹிலொகாநாம் தத்திரவிவாவ்யுஃ। கு்ருஷ்ணஸ்யஹிகு்ருதெஹத்வ தஷிம்விஶ்வாராவாழ்,'' இதிராஜஸூயே பீஷ்ம: ஸஹா-[ங-அ-உங] (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— ''ஆநநுஶீதஸ்ஸிதவாமநாஸஹாயே கு்ருஷ்ணஸ்யவீர்யுஸரிதாநுஹரோடிரேண। உதம்வாராவ்யுஃவெக்ஷிதவாநு ஃநிஷ்ஷுவாஸரோஹிநஃசெதுவடுவதாமெழு॥''

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— ராஸக்ரீடாதிகு்ருதெ விழுவியஃராஜிகாவாடிநெ ஃழுஹுஹெஜெமெழுவீவ்யூராஹுஹாவாஹ ஜஜநநஃ வெஃ கம்ஸஹெதுராதிஹெஜெஃ। ஸ்ரீஃஹுராவெநிழுஹீநெஷ்வஸ்ராஹாஜவந வெடிஃவெஃஸுரிநெதுராகஷெழுதவுவிதம்ஹாரிரிதிகுயாரோஸகாரொரவ தழு॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

குரவைமுதலாம்கண்ணன் கோலச்செயல்கள்
இரவுபகலென்னாமல் என்றும் - பரவுமனம்
பெற்றேனென்றேகளித்துப் பேசும்பராங்குசன்தன்
சொல்தேனில் நெஞ்சே துவள்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், சீயர் திருவடிகளே ஶரணம்.

---

acharya.org

ஐந்தாந்திருவாய்மொழி—துவளில் - ப்ரவேசங்கள்.

ஆ.—(துவளில்.)-இப்படி எம்பெருமான் திருவிண்ணகர்தொடக்கமாகவுள்ள திருநகரிகளிலே எழுந்தருளியிருந்த இருப்பையும், அவனுடைய திவ்யாவதாரங்களையும், திவ்யசேஷ்டிதங்களையும், ஸௌந்தர்யாதி ஸர்வகல்யாணகுணங்களையும் அநுஸந்தித்த ப்ரீதியையும், அவனோடு பாஹ்யஸம்ஶ்லேஷம்பெறுமையாலே வந்தநிரவயிக வ்யஸநத்தையும் அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். ஒருபெண்பிள்ளை "திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானைக்காணவேணும்" என்று ஆசைப்பட்டுப் பெறுமையாலே அத்யந்தம் அவஸந்நையாய், அவனுடைய ஸௌந்தர்யாதி குணங்களையும் திவ்யசிஹ்நங்களையும் திவ்யசேஷ்டிதங்களையும் திருத்தொலைவில்லிமங்கலத்தையும் சொல்லி அலற்றுகிறபடியைக்கண்டு இவளுடைய திருத்தாயாரும் பந்துக்களும் "இவளையிழக்கிறோம்" என்னும் பயத்தாலே "இவளுக்கு அவன்பக்கலுள்ள அஹிநிவேஶத்தை நிவர்த்திப்பிக்கவேணும்" என்று இவளுடையதோழியை அபேக்ஷிக்க, இவளும் அவர்களை நோக்கி,

ஒ.—அஞ்சாந்திருவாய்மொழியில், * குரவையாய்ச்சியரில் க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை அநுபவித்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பரவசராய், செல்லுகிற ப்ரீத்யநுபவம் கலங்கி நோவுபடுகிற ஆழ்வார் * பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர பகவத்குணசேஷ்டிதாதிகளிலே ஈடுபட்டிருக்கிற தம்முடைய ஶைதிலியை அநுஸந்யித்து, இத்தை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். இப்படி * குரவையாய்ச்சியரிலே க்ருஷ்ணகுணசேஷ்டிதாதிகளை அநுஸந்யித்து மிகவும் ப்ரீதராய், ஬ாஹ்யஸம்ஶ்லேஷத்திலே அபேக்ஷைபண்ணி, அதுபெறுமையால் தமக்கு ஓடுகிற ஶைதிலியை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார் என்றுமாம். திருத்தொலைவில்லி மங்கலத்தில் ஸம்பத்திலும், அங்கு நின்று அருளுகிற தேவபிரானுடைய திருவழகிலும் அகப்பட்டு, பண்டுபழகின பழக்கத்தின் மிகுதியாலே மிகவும் ப்ரவணசித்தையாய் இருக்கிற பிராட்டிபடியைக்கண்டு, இவளுக்கு அவன்பக்கல் உண்டான அதிமாத்ரப்ராவண்யத்தைத் தவிர்க்கையிலே உபக்ராந்தைகளான திருத்தாய்மாரைக்குறித்து, இப்பிராட்டியுடைய கருத்தறிவாளொருதோழி, "இவள் திருத்தொலைவில்லிமங்கலங்கண்ட அன்றுதொடங்கி அரவிந்தலோசனனை ஒழியப் புறம்புள்ள தொற்றெல்லா மற்று, அவனே எல்லாமுமாகக்கொண்டு அவன்பக்கலிலே இவளுடைய மநோவாக்காயங்கள் மிகவும் ப்ரவணமாயிற்று; இப்படி விளையும்படியான இவள் ப்ரக்ருதியை அறிந்துவைத்து இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே நீங்களேகொண்டுபுக்கு அங்குத்தைப்படி காட்டிக்கொடுத்து, இனி மீட்கநினைத்தால் முடியுமோ? ஆனபின்பு, இவள்பக்கலில் ஆசையறுங்கோள்" என்கிறாள்.

ப.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழே - இப்படி க்ருஷ்ணசேஷ்டிதங்களிலே அவகாஹித்து அத்யந்தம் ஹ்ருஷ்டரான இவ்வாழ்வாருடைய மாநஸாநுபவம் முதிர்ந்து பாஹ்யஸம்ஶ்லேஷஅஹிநிவேஶத்தைப் பிறப்பிக்க, அஹிநிவேஶாநுரூபாநுபவாலாபத்தாலே அவஸந்நராய், பூர்வாநுபூதமான ஸர்வேஶ்வரனுடைய அஸாதாரண சிஹ்நயோகத்தையும், விலக்ஷணாநுஹாவ்யத்வத்தையும், ரக்ஷணார்த்தப்ரவ்ருத்திகளையும், ஔஜ்ஜ்வல்யயோகத்தையும், ஆஶ்ரணஔஜ்ஜ்வல்யாதிகளையும், ஸுகரஹஸௌந்தர்யத்தையும், உதாரஸ்வபாவத்தையும், ஆதிக்யஸூசகமான அரவிந்தாக்ஷத்வத்தையும்,

acharya.org

விரோயி நிவர்த்தகத்வத்தையும், வ்யாமோஹாதிசயத்தையும் அநுஸந்தித்து, ஏவம்வித ஸ்வஶீலவனுனவன்விஷயத்திலே அத்யந்தப்ரவணரான இவருடையநினைவை, பூர்வாநுபவ ப்ரவர்த்தகரான பரிவர்தாங்களே அவஸாத பரிஹாரார்த்தமாக நிஷேதிக்கத் தேட, இவருடைய ப்ரக்ருதியறிந்த ஸுஹ்ருத்பூதரானவர்கள், "அடியில் ப்ரவர்த்தகரான நீங்களே நிவர்த்தகரானால் இவர்க்கு அஹ்ருத்யகரராவதே ஫லம்" என்றுசொல்லி, அதுக்கடியான இவருடைய ஶுகவத்ப்ராவண்யாதிஶயவிகாரங்களை யறிவித்த ப்ரகாரத்தை, திருத்தொலைவில்லிமங்கலத்திலே தேவபிரானை அநுபவித்து ஈடுபட்டாள்ஒருநாயகியினுடைய ஈடுபாட்டைக்கண்டு, அடியிற் கூடக்கொண்டுபோய்த் திருவடிதொழுவித்த தாய்மார் இவளீடுபாடு சமிக்கைக்காக இவள்நினைவை நிஷேதிக்கத்தேட, இவள் நெஞ்சறிந்த தோழியானவள், "அடியிலே இவளைமூட்டினபோதே ஆசையற்று மூட்டினிகோளன்றோ? இனி இவள்பக்கல் ஸங்கத்தை விடுங்கோள்" என்றுசொல்லி இவளுடைய ப்ராவண்யவிகாரப்ரகாரங்களை யறிவித்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—அஞ்சாந்திருவாய்மொழியில், "கீழே க்ருஷ்ணாநுபவத்தைப் பண்ணினார். அந்தப்ரீதி உள்ளடங்காமையாலே வாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷையிறந்து, அது பெருமையாலே தமக்குப்பிறந்த பாரவஶ்யத்தை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார்" என்று பூர்வர்கள் நிர்வாஹம். பட்டர், "கீழ் நிரவயிகப்ரீதியாய்ச் சென்றது: அதுக்கும் இதுக்கும்சேர்த்தி இங்ஙனாக வொண்ணாது; தண்ணீர்குடியாநிற்க விக்கினால் ரஸாநுபவம்கலங்கி நோவுபடுமாபோலே, செல்லுகிற ப்ரீத்யநுபவங்கலங்கிப்பிறந்த பாரவஶ்யாதிஶயத்தை அருளிச்செய்கிறார்" என்று அருளிச்செய்வர். அதாவது - *பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர பகவத்விஷயத்தில் பூர்ணாநுபவமின்றிக்கே இருக்கையாலே தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிஶயத்தை அருளிச்செய்கிறார்.

இத்திருவாய்மொழிக்குக் கீழ் எல்லாம் - ஸர்வேஶ்வரனைப்பேசினார்; இத்திருவாய்மொழியில் - தம்மைப்பேசுகிறார். "யதொவாஹொநிவதந்தெ" என்கிற விஷயத்தை விளாக்கொலைகொண்டு பேசுகைக்குத் தாமல்லது இல்லாதாப்போலே, இவ்விஷயத்தில் தம் அஹிநிவேஶத்தைப் பேசுகைக்கும் தாம்அல்லது இல்லையாயிற்று. தலைமகளாயும் திருத்தாயாராயும் தோழியாயும் பிறந்த அவஸ்தைகள்அடங்க இவர்தமக்கே பிறந்த ஶாஸ்த்ரவிஶேஷம் என்னும்படியிறே இவர் ப்ராவண்யாதிஶயம். "ப்ராவண்யத்தை விளைக்கிற திருத்தாயாரும் தோழியும் நிஷேயிக்கிறது 'ஸாயநவாஜ்யா' என்றிறே" என்று, இவள்மேல் விழுகிறது ப்ராப்யவாஜ்யாலே. இந்த ப்ராவண்யத்தை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். திருத்தொலைவில்லிமங்கலத்திலே நின்றருளின தேவபிரானுடைய அழகிலும் அவ்வூரில் ஸம்பத்திலும் ப்ரவணசித்தையாய் இருப்பாள் ஒரு பிராட்டியை "அதிப்ராவண்யம் ஆகாது" என்று மீட்கநினைத்த திருத்தாய்மாரை, இவள் கருத்து அறிந்த தோழி, "உங்களுக்கு இவளை மீட்கமுடியாது" என்கிற பாசுரத்தாலே அருளிச்செய்கிறார். ஜநகராஜன் திருமகள் அவதரித்தவளவிலே ஜ்யௌதிஷிகரைக் கேட்க, "ஸார்வபௌமனுக்குப்புகக்கடவள்: கனக்க ஜீவிக்கும்: நடுவே வநவாஸக்லேசமும் அநுபவிக்கக்கடவள்" என்றார்கள்; அதுபோலே "இவளுக்கும் ஓர் அபம்ருத்யு உண்டு; அதாவது:—திருத்தொலைவில்லிமங்கலத்தில் இவளைக் கொண்டுபோகாதொழியில் இவள் ஜீவிக்கும்" என்றார்கள். அவ்வூரில் கொண்டு புகாதபடி அல்லாமையாலே

acharya.org

கொண்டுபுக்கார்கள்; அங்கே அவமாஹித்தபடியைக்கண்டு மீட்கப்புக, "இனி இவளை மீட்கமுடியாது; நீங்களும் இவள்வழியே ஒழுகப்பாருங்கோள்" என்று தோழிவார்த்தை யாய்ச் செல்லுகிறது. இத்தால் - ஶோஷத்வம் ஸத்தாப்ரயுக்தமானவோபாதி, ப்ராவண்ய மும் ஸத்தாப்ரயுக்தம் என்னும் இடத்தை நிர்வஹிக்கிறதாயிற்று.

ஈடு.—இத்திருவாய்மொழிக்குக் கீழும்மேலும் எல்லாம் எம்பெருமானைக் கவிபாடினார்; இத்திருவாய்மொழியில் தம்படி சொல்லுகிறார். ஸிம்ஹாவலோகந்யாயத் தாலே * பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர தமக்குஶ்ரவத்விஷயத்திலுண் டான ப்ராவண்யாதிஶயத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். "இத்திருவாய்மொழி - ஆழ்வார் ப்ரக்ருதிசொல்லுகிறது" என்று நம்முதலிகளெல்லாரும் போர விரும்பி யிருப்பர் கள். ஶகவத்ப்ரஸாதத்தாலே லப்தஜ்ஞராய் "**யதொவாவொ நிவதூஜெ**" (யதோவாசோநிவர்த்தந்தே) என்கிற விஷயத்தை மறுபாடுருவப்பேசின தாமே வேணுமா காதே தம்படி பேசும் போதும்.

ஸ்ரீஜநகராஜன்திருமகள் பிறந்த ஸமயத்திலே ஜ்யோதிர்வித்துக்களையழைத்து, "இவள் ஜீவிக்கும்படிகளேன்?" என்றுகேட்க :'இவள் ஜீவிக்கும்படிகளில் ஒருகுறை யில்லை; ஸார்வபௌமனுயிருப்பானொருவனைக் கைப்பிடிக்கவுங்கடவள்; இங்ஙனே யிருக் கச்செய்தேயும் வநவாஸரஸம் அநு஭விக்கக்கடவள்" என்றார்கள்; அப்படியே இப்பெண் பிள்ளை பிறந்தபோது இவள் திருத்தாயாருள்ளிட்டார் நிதாநஜ்ஞராயிருப்பாரையழைத்து, "இவள் ஜீவிக்கும்படிக ளேங்ஙனே?" என்று கேட்க, "எல்லாம் நன்றாய்த் தலைக்கட்டக் கடவது; ஆனாலும் இவளுக்கோர் அபம்ருத்யுவுண்டு; அதுதப்பினாளாகில் ஸுகமேஜீவிக் கும். அதாவது - திருத்தொலைவில்லிமங்கலத்திற் கொடுபோகாதே ஒழியப்பெறி லிவளைக்

துவளின்மாமணிப்ரவேஶே, ஸங்க்ரஹமாக ஸங்கதி அருளிச்செய்கிறார் - இத்திருவாய் மொழிக்கு இத்யாதிவாக்யத்வயத்தாலே. "ஶிந்தையாலும்" இத்யாதியையும், "முன்னம்கோற்ற" இத் யாதியையும், "பின்னைகொல்" இத்யாதியையுங்கடாக்ஷித்து-தம்படிசொல்லுகிறார் என்றது. தம்படி யேதென்ன - ஸிம்ஹாவலோகந இத்யாதி. பொய்ந்நின்றஞானந்தொடங்கி யென்றது-"பைதொழுத அந்காள்தொடங்கி" என்றதத்தைப்பற்ற. தூரப்போகிறவிம்ஹம், முன்புபோனதத்தையெல்லாம் பார்த் துக்கொண்டு அப்பால் போமாபோலே, கீழிற்றிருவாய்மொழிகளிலுள்ள ப்ராவண்யத்தையிங்கே பேசுகையிறே - ஸிம்ஹாவலோகந்யாயமாவது. "தம்படிசொல்லுகிறார்" என்றதுக்கு ஸம்வாதம் - இத்திருவாய்மொழி இத்யாதி. தம்படிகளைத்தாமேசொன்னால் ஆத்மஸ்லாகையாகாதோ? என்ன - பகவத்ப்ரஸாத இத்யாதி. அதாவது - "வஜுமாஶநோகாரெ" இத்யாதிப்படியே ஆப்தர்வார்த்த மாகச்சொல்லுகையாலே விரோதமில்லையென்றபடி.

"பிரானிருந்தமைகாட்டினீர்" என்று - "திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டு போனால் இவளுக்கு அநர்த்தம்வரும்"என்று அறிந்திருக்கச்செய்தேயும் நீங்கள் காட்டிக்கொடுத்திகோ ளென்கிறாளிறே. தாய்மாரைப்பார்த்துத் தோழியானவள், "அங்கேபோனால் இவளுக்கநர்த்தம்வரும்" என்று தாய்மாரெத்தாலேயறிந்தார்கள்? என்ன; அறிந்தமையை ஸநிதர்ஶநமாக அருளிச்செய்கிறார் - ஸ்ரீஜநகராஜன் இத்யாதி. இவ்விடத்திலே, "ஶுயுவாவிஶஹாவ்ரூஜுவ்ரூஹணாநாம்யாஶ்ரு தடு। வுரூராவிதுஹ்ஹுஹெஹஸ்தூம்வஸ்வும்கிமுவேவெநெ। ஶுஷணிஹ்ஹ்ரூவிஜாகிஹ்ரு ஶ்ரூம்ஹுவாஹம்வவநம்ஹ்ஹுஹெ। வநவாஸகுதொஹ்ரூஹா நிதுஸெவேஹாவவு" இதி அயோத்யாகாண்டோக்த ஸீதாவாக்யமநுஸந்தேயம். இப்படி அறிந்திருக்கச்செய்தே கொண்டுபோவா

acharya.org

கிடைக்கும்'' என்றார்கள். இவள் ஜீவியாதொழியிலும் திருத்தொலைவில்லிமங்கலத்தில் கொடுபோகாதொழியவல்ல குடியன்றே; ''இவளங்கேபுக்கு முடியவமையும்'' என்றிருப்பார் சிலரிறே. பிராட்டி வநவாஸரஸம் அநு஭வியாத அன்றிறே இவள் திருத்தொலைவில்லிமங்கலத்தில் புகாதொழியவல்லளாவது? ஸ்ரீநளர் வார்த்தையைநினைப்பது (†ஸ்ரீவாநரவீரர்கள், '' மலையைக்கொண்டு கடலையணைசெய்கை ஸம்பாவிதமோ'' என்ன:—) ஸ்ரீநளர், ''பெருமாள் காடேற எழுந்தருளுகையும், பிராட்டியை ரக்ஷஸ்அபஹரிக்கையும், பெருமாள் சோகிக்கையும் ஸம்பாவிதமோ? ஏதாகிலும் வருமவை தப்பாதிறே'' என்றார். இது ஸ்ரீராமாயணத்திலுண்டானவிடத்தே கண்டுகோள்வது.) தேஹாத்மாபிமாநிகளாயிருப்பார்க்கு எத்தனையேனும் அறிவு பிறந்தாலும் '' ஷுகுமொஹம்கூ ஶொஹடி '' என்கிற நிலை மாற்றப்போகாதாற்போலே, இவரையும் ஸர்வப்ரகாரத்தாலும் உகந்தருளின நிலங்களிலேநின்றும் த்ருஷ்டத்தில்குறைசொல்லி மீட்கப்போகாது. க்ஷுத்ரவிஷயப்ரவணராயிருப்பார் ''அதர்மம்'' என்றும், ''பழி'' என்றும், ''மேல்நரகம்'' என்றும் சொன்னால் மீளார்களிறே. இங்கு குணதிகவிஷயமாகையாலே ஒருகுறைசொல்லி மீட்கப்போகாதே. ''குறைசொல்லுவோம்'' என்று நினைக்கிலும் குணதிக்யத்தைச்சொல்லு மத்தனையிறே. அதுபின்னை ப்ராவண்யத்துக்கு உடலா மத்தனையிறே. பழியுமுண்டாயிடுகே, மதிப்புக்கேடும்வருக; ஆனாலும் அதுகண்டு மீளமாட்டாத அத்யவஸாயமிறே இவளது. அங்ஙனேயாகிலும், இவர்கள் இவ்விஷயத்தில் நின்றும்

னென்? என்ன - இவள்ஜீவியாதொழியிலும் இத்யாதி. அக்குடியிலுள்ளார்படியேதென்ன - இவளங்கேபுக்கு இத்யாதி. குடிஸ்வ஭ாவமன்றிக்கே, தைவ கல்பிதமாகையாலும் தவிரவொண்ணாதென்று மத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் - பிராட்டி இத்யாதி. '‘கூ ஶிதஶநகி கூ ணீயடி’’ என்றதுக்குஸம்வாதம் - ஸ்ரீநளர் இத்யாதி. ''இதுக்கு - பெரியபிராட்டியர்காலந்தொடங்கி ஸம்ப்ரதாயமில்லை; ஆனாலும் ராமாநுஜம்பிள்ளை அருளிச்செய்வதோரர்த்தமுண்டு'' என்று அருளிச்செய்வர். அதாவது - ஸமுத்ரராஜன் தோன்றினவளவிலே, ''விஶ்வகர்மாவின் மகனான நளன் சேதுபந்தனத்துக்கென்று கல்பிதனாயிருக்கிறான். அவனைக்கொண்டு என் பக்கலிலே சேதுபந்தநம் பண்ணிக்கொள்ளும்'' என்று சொல்லிப்போனவளவிலே, பெருமாள்திருவடிகளிலே நளன்வந்து ஸேவித்து, ''ஸமுத்ரராஜோக்தி ஸத்யமே: நான் சேதுபந்தநம் பண்ணவல்லேன்'' என்றுசொன்ன வார்த்தையை நினைப்பதென்றபடி. அதாவது - ''வநவாஸகூஸ்ஸாஶ்ரெணவ்ரதா ரூயநவ ஷுடா । கூவ்ரவீஆநரஶ்ரெஷ்஠வாகூயாஸாஶஹாவலுः ॥ கூஹம்ஸெதாம் கூரிஷ்யாமிவிஷ்ணும்வாணாலயெ । வித்ஷ்ஸாஶ்ரூயாஶாஷ்ரூதகூஷாஹாஶஹொடியிः'' என்றவார்த்தை. அங்கேகொண்டுபுக்காலும், அவ்விஷயத்துக்கு ஏதேனுமொரு குறைசொல்லி மீட்கவொண்ணாதோ? என்ன - நேஹாத்மா இத்யாதி. அத்யவஸாயமிறே யிவளதென்னுமளவும். அதுக்கடியேதென்ன - க்ஷுத்ரவிஷய இத்யாதி. 'மீளார்களிறே' க்ஷுத்ரவிஷயங்களினின்றும்இதிசேஷம். த்ருஷ்டத்திற்குறையாவது - ஐஶ்வர்யத்திற் குறை. த்ருஷ்டத்திற் குறைசொல்லி மீட்கப்போகாவிட்டாலும், விஷயத்திற்குறைசொல்லி மீட்கவொண்ணாதோ? என்ன - இங்குகுணதிக இத்யாதி. குணதிகவிஷயமாகிலும் ''கடியன்கொடியன்'' என்றாற்போலே சிலகுறைகளைச் சொன்னாலோ? என்ன - குறைசொல்லுவோமென்று இத்யாதி. ''அவனென்றேகிடக்கும்'' என்றதைப்பற்ற - அதுபின்னை இத்யாதி. ப்ராவண்யத்தால் மீட்கப்போகாதமாத்ரமன்றிக்கே, அத்யவஸாயாதிசயத்தாலும் மீட்கப்போகாதென்கிறார் - பழியுமுண்டாயிடுக இத்யாதி. அங்ஙனேயாகிலுமென்றது - குடிதானே அங்கேகொண்டுபோய் மூட்டுகையாலும் தைவவசத்தாலும் இவளுடைய ப்ராவண்யத்தாலும்

acharya.org

இவளை மீட்கப் பார்க்கிறது என்? என்னில்,— "பருவம்நிரம்பாதிருக்கச்செய்தேயும் நம்மால் வல்லாத அதிமாத்ரப்ராவண்யம் இவளுக்கு விளையாநின்றது; அது இவளையிழக்கவரிற்செய்வதென்?" என்னும் அச்சமாயிற்றுஇவர்களுக்கு ஓடுகிறது. இனித்தான் அதிமாத்ரப்ராவண்யம் ஸாதகர்கையிலே கிடக்கக்காண்கையாலே "இவள்ஸாதநபுத்த்யாப்ரவர்த்திக்கிற்செய்வதென் ?" என்னும்பயத்தாலே மீட்கவும்பார்ப்பரே: "இப்ப்ராவண்யம் ஸ்வரூபாதிரேகியாகிலிறே ஸாதநத்தில் அந்வயிப்பது" என்றிறேயிருப்பதிவள். "ஸ்வரூபபேதத்துக்கு இசைந்தால் ஸ்வரூபாநுரூபமான கார்யங்களுக்கு இசையவேண்டாவோ ?" என்றுகாணும் இவள் கருத்து. சேஷிக்கு உபாயபாவம் ஸ்வரூபாநுபந்தியானபின்பு, சேஷபூதனுக்கும் ப்ராவண்யம் ஸ்வரூபாநுபந்தியாகக்கடவதிறே. இனித்தான் கீழில்திருவாய்மொழியோடு இத்திருவாய்மொழி ஸங்கதமானபடியென்? என்னில்:—க்ருஷ்ணகுணநுபவத்தைப் பண்ணுநிற்கச்செய்தே, குடிக்கிறதண்ணீர் விக்கி அதுதானே பாரவஶ்யத்தை விளைப்பிக்குமாபோலே, அவ்வநுபவந்தானே ரஸாந்தரத்தேமுட்டத் தமக்குப்பிறந்த அவஸாதத்தை யங்யாபதேசத்தாலே பேசுகிறார். அதாவது - * போய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர, ஶகவத்விஷயத்தில் பூர்ணாநுபவமின்றிக்கே யிருக்கையாலே, தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிஶயத்தை அருளிச்செய்கிறார். அன்றிக்கே, கீழநுபவித்த அநுபவந்தான் மாநஸாநுபவமாத்ரமாய், பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷையிறந்து, அது பேறுமையால்வந்த கலக்கத்தை யங்யாபதேசத்தாலே பேசுகிறார் என்றுமாம். இப்பெண்பிள்ளை ப்ரக்ருதியறியச்செய்தேயும் தாய்மார்விழுக்காடறியாமையாலே திருத்தொலைவில்லிமங்கலத்திலேகொடுபுக, அவள் "அரவிந்தலோசந" என்பது, "தேவபிரான்" என்பது: நீர்மையைச்சொல்லுவது, மேன்மையைச்சொல்லுவது, ஒப்பனைவாசியறிந்தமைதோற்றச்சொல்லுவதாய் வாய்வெருவ, இவள் நிலைஇருந்தபடியால் "இவளைக் கிடைக்கமாட்டாதாகாதே" என்று தாய்மார் வெறுத்துத் தோழிபாடேவந்து, "இவள்படி யுனக்குத்தெரியாமையில்லை: இவளைமீட்கலாம் விரகு

அத்யவஸாயத்தாலும் இப்படி அபரிஹரணீயமாயிருக்கச்செய்தேயு மென்றபடி. ஸ்வாபதேசத்திலே மீட்கப்பார்க்கிறதுக்கு ஹேத்வந்தரம் - இனித்தான் இத்யாதி. "அதிமாத்ரப்ராவண்யம் ஸ்வரூபவிருத்தமாகிற்செய்வதென் ?" என்கிறபயம் மகளுக்கும் ஒவ்வாதோ ? என்ன - இப்ப்ராவண்யம் இத்யாதி. ஸ்வரூபாதிரேகியென்றது - ததேகரக்ஷயத்வரூப ஸ்வரூபாதிரிக்தமாகிலிறேயென்றபடி. "ஸ்வரூபாதிரேகியன்று" என்றதுக்குக்கருத்தேதென்ன - ஸ்வரூபபேதத்துக்கு இத்யாதி. ஸ்வரூபபேதத்துக்கென்றது - "அவன்சேஷி, நாம்சேஷபூதர்" என்கிறஸ்வரூபபேதத்துக்கென்றபடி. கார்யங்களுக்கென்றது-ப்ராவண்ய தத்கார்யகைங்கர்யங்களுக்கென்றபடி. இவளுக்குஇப்படி கருத்தானாலும், வஸ்துஸத்யாஸாதநத்தி லக்வயியாதோ? என்ன - சேஷிக்கு இத்யாதி. கீழ்-எல்லாத்திருவாய்மொழிகளோடும் ஸங்கதியருளிச்செய்து, கீழிற்றிருவாய்மொழியோடு இத்திருவாய்மொழிக்கு ஸங்கதியேதென்று சங்கித்து, அத்தையிரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - இனித்தான் இத்யாதி. இந்தஸங்கதிதவயமும் அடியிலே யநுஸந்தேயம். முந்தினசங்கதி - பட்டர்நிர்வாஹம்; இரண்டாவது - பூர்வர்கள்நிர்வாஹம். ரஸாந்தரத்தேயென்றது - மோஹத்திலேயென்றபடி. அர்ச்சாவதாரகுணாநுபவத்திலேயென்னுதல். "இவள் அங்கேபுக்கு முடியவமையுமென்றிருப்பாளிலரிறே" என்கிறவாக்யத்தோடேயாதல், "இவளைக்கிடைக்குமென்றார்கள்" என்கிறவாக்யத்தோடேயாதல். 'இப்பெண்பிள்ளை' இத்யாதிவாக்யத்துக்கு ஸங்கதி. ஜ்யோதிர்வித்துக்கள் சொன்னபின்புஇவர்கள் செய்ததென் ? என்ன-இப்பெண்பிள்ளை இத்யாதி. "அரவிந்தலோசந," 'தேவபிரான்" என்றத்தைப்பற்ற - நீர்மை, மேன்மை என்றது. ஒப்பனைவாசியென்றது - "இழைகொள்சோதி" என்றத்தைப்பற்ற. 'வாய்வெருவ' என்றது - "நாடொறும் வாய்வெரீஇ" என்றத்தைப்பற்ற. நீங்களே இவளுக்கு ப்ராவண்யத்தையுண்டாக்கியென்றது - "பிரா

acharya.org

சொல்லவேணும்'' என்ன; தோழி, ''நீங்களே இவளுக்கு ப்ராவண்யத்தையுண்டாக்கி இப்போதாக இவளைமீட்க ஆசைப்படுகிற இத்தால் ப்ரயோஜநமென்? ஏற்கவே பரிஹரிக்கப்பெற்றதில்லை; இனி இவள்பக்கல் நசையறுங்கோள்; இவளை நிஷேதிக்கப்பாராதே நீங்களும் ஸஹகரித்து இவள் உஜ்ஜீவிக்கும்படி பண்ணப்பாருங்கோள்!'' என்கிறாள். தாய்மார்கேட்கத் தோழியிறேசொல்லுகிறாள்: பகவத்விஷயத்துக்கு ''பழையார், புதியார்'' என்றில்லை; தேசிகர்சொல்ல ஆதரமுடையார் கேட்டமித்தனை. ''ஆவயக்ஷேயஸ ஹ்ரவம் ரக்ஷணஸ்ய ஸஹாதநம்'' (ஆசசக்ஷேதஸத்பாவம்லக்ஷ்மணஸ்யமஹாத்மந:) என்று இளையபெருமாள்படியை ஸ்ரீபரதாழ்வானுக்கு ஸ்ரீகுஹப்பெருமாளிறேசொல்லுகிறார். ''ஆவயக்ஷே'' (ஆசசக்ஷே) - வாக்இந்திரியத்துக்கு நிலமல்லாததும் சொல்லலாமாகாதே. ''ஸயத்'' (அத) - ஸ்ரீபரதாழ்வான் ஸ்வஸ்வரூபம் அறிந்தபின்பு. ''ஸ்ஹ்ரவம்'' (ஸத்பாவம்)-''வாரயுராஸ்ரூஹ்ரகிஸுஹ்ரிஹ:'' (பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்த:) என்றும், ''பரவாநஸ்மி'' (பரவாநஸ்மி) என்றும், ஸத்தையோடு வ்யாப்தமான ஸ்வபாவத்தைச் சொன்னான். ''ரக்ஷணஸ்ய ஸஹாதநம்'' (லக்ஷ்மணஸ்யமஹாத்மந:) - கடலைக் கையாலேயிறைக்கத்தொடங்கினான். ''ஹ்ரதாயாவ்ரயேயாய'' (பாதாயாப்ரமேயாய) - ''இன்னாரின்னார்க்குபதேசிக்க'' என்றில்லையாகாதே. ''஗ுஹோகஹநகோசர:'' (குஹோகஹநகோசர:) - காட்டில் மரங்களில் வாசியறியுமவர் இவர்கள் நிலையறியும்படி நிலவரானார். அன்றிக்கே, ராமவிரஹத்தாலே ஒருதூற்றடியிலேகிடந்தவன், தேசிகரைப்பெற்றவாறே தலையெடுத்துப்புறப்பட்டானென்றுமாம். † (''ப்ராப்யத்வரையினுடைய முறுகுதலுக்கடியான அதிமாத்ரப்ராவண்யம், ஆஶ்ரயமழியும்படிவருதல் உபாயத்திலே முதலிதேல் செய்யுமாகில் அவத்யகரமாய்முடியும்'' என்றுபார்த்து, ''இத்தை உபாயாத்யவஸாயாநுகுணமாக அமைத்து நடத்தவேணும்'' என்றுகருதி ஸம்பந்தஜ்ஞானத்தோடேசேர்ந்த உபாயாத்யவஸாயம் பார்த்தவிடத்து முதலிலே ப்ராப்யத்வாஸஹித

ப்ர.—[துவளின்மாமணிப்ரவேஶம்]—வாலகாண்டே [கஅ] ''வாயுராஸ்ரூஹ்ரகிஸுஹ்ரிஹ்ரலக்ஷணைலக்ஷ்மிவயபுந: । ராஜ்ஞ: லொகராஜ்ஞ: ஸ்ரீ ரதாஜ்ஜ்ஞ: ஸ்ரீ நிதுஶ:॥உஎ॥'' ஆரண்யகாண்டே [கரு] ''வரவாநஸ்மிகாகுத்ஸ்த யிவஷ்டுஶதம்ஹ்ரதெ । ஸ்வயம்தாராவிரெஷெஶெ ரியகாஶிகிரோவஷ்॥எ॥''

னிருந்தமைகாட்டினீர்'' என்றத்தைப்பற்ற. ''இனி - உமக்காசையில்லை'' என்றத்தைப்பற்ற - ஏற்கவேபரிஹரிக்கப்பெற்றதில்லை என்றதும், நசையறுங்கோள் என்றதும். மேல்இதிலே ஸ்வரூபாநுரூபமானவர்த்தம் விகசிப்பதாக அதிஷ்டிகை - தாய்மார் இத்யாதி. ஏயோதிகரான தாய்மார்க்கு வாலையானதோழிபக்கலிலே பகவத்விஷயங்கேட்கலாமோ? என்ன - பகவத்விஷயத்துக்கு இத்யாதி. இவ்வர்த்தத்துக்கு அநுஷ்டாநங்காட்டுகிறார் - ஆவயக்ஷ இத்யாதி. ''ஆவயக்ஷேயஸ ஹ்ரவம் ரக்ஷணஸ்ய ஸஹாதநம் । ஹ்ரதாயாவ்ரயேயாயமாஹோகஹநகோசர:'' இத்யயோத்யாகாண்டே. [அசு-க]ஸ்லோகத்துக்கர்த்தம்-வாகிந்த்ரியஇத்யாதி. ''ஸஹாதநம்'' என்கையாலே - நிலமல்லாமைதோற்றுகிறது. ஆங்ஈஷதர்த்தத்திலேயாய் ''சொல்லலாமாகாதேயென்றது' ஈஷத் சொன்னானென்றபடி. ''ஸ்ஹ்ரவம்'' ஸத்தயாவ்யாப்தோ பாவஸ்ஸத்பாவ:. பாவசப்தம்-ஸ்வபாவவாசி. ஸத்தையோடு வ்யாப்தமானஸ்வபாவமாவது-பெருமாள்பக்கல் ப்ரேமமும் பாரதந்த்ர்யமும். ''வாயுராஸ்ரூஹ்ரகி

acharya.org

மாக குணதிகவிஷயத்திலே யவகாஹித்து அத்த்வரைதன்னை இவ்வவஸ்த்தாபந்நை யாக்கினபின்பு, உபாயாத்யவஸாயத்தின்கீழ் இத்தை யமைக்கப்போகாது ; இனித்தான் ப்ராப்தவிஷய ப்ரவணயம் ஸ்வரூபமாகையாலே அவத்யகரமன்று: ஶ்லாக்யமாமித்தனை'' என்று தாம் அநுஸந்தித்தருளினர்.)

முதற்பாட்டு.

துவளில்மாமணிமாடமோங்கு தோலைவில்லிமங்கலந்தோழும்
இவளைநீர் இனி அன்னைமீர்! உமக்காசையில்லைவிடுமினோ
தவளவொண்சங்குசக்கரமென்றும் தாமரைத்தடங்கணென்றும்
குவளையோண்மலர்க்கண்கள்நீர்மல்க நின்றுநின்று குமுறுமே.

ஆ.—நிரவத்ய நிரதிஶய விவிதமணிவர நிகர விராஜித ஸௌதோபேதமான திருத்தொலைவில்லிமங்கலத்தைத் தொழுகையே ஸ்வபாவமாயிருக்கிற இவள், அவனுடைய அதிநிர்மலமாய் அதிரமணீயமாயிருந்த திருச்சங்கு திருவாழியாகிற திவ்யசிஹ்நங்களையும், புண்டரீகலோசநங்களையும் சொல்லி யலற்றி, அத்தாமரைகளின்நிழலிலே வளரக்கடவ குவளைபோலேயிருந்த அழகியகண்கள் நீர்மல்க நின்றுநின்று குமுறுநிற்கும்; இவளை யாசைப்படவேண்டா என்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், திருத்தாய்மாரைக்குறித்து இவளுடைய தோழியானவள், இவள் ப்ரக்ருதி அறிந்துவைத்து இவளுக்குத் திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டின நீங்கள் ஹிதோபதேசம்பண்ணினால் உங்களுக்கு ஒரு ப்ரயோஜநம் இல்லை என்கிறாள்.

[துவளில்மாமணி] - பழிப்பற்று ஶ்லாக்யமான மணி. [தொழுமிவளை] - தொழுகையே ஸ்வபாவமான இவளை. [தவளவொண்சங்கென்று மேலுக்கு]-அதியவளமாய் அழகிதாயிருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யம் என்றும் திருவாழிஎன்றும் தாமரைத்தடாகம் போலேஇருக்கிற திருக்கண்கள் என்றும்சொல்லிப்பின்னையும் இவற்றை "காணவேணும்" என்றுசொல்ல உபக்ரமித்து, மாட்டாதே குவளைபோலே இருக்கிற அழகிய கண்கள் நீர்மல்கும்படியாக தன்னுடைய துஃவத்தை வாய்விட்டுச் சொல்லமாட்டாதே நிரந்தரமாகக் குமுறுநின்றாள்.

ப.—முதற்பாட்டில், அரவிந்தலோசநன் எழுந்தருளியிருக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்தை அநுபவித்து, அவனுடைய அஸாதாரணசிஹ்நங்களிலே யகப்பட்ட இவளை இனி யாசைப்படவேண்டுவதில்லை, விடுங்கோளென்று தாய்மாரைக்குறித்துத் தோழி சொல்லுகிறாள்.

ஸுஸ்ரிஷ்டொஅக்ஷணொஅக்ஷிவுரு நஃ" இத்யாதி. "வரவாநஸ்ரிகாகு தக்வயிவஷ்டுஶ தம்ஸ்ரிதெ" இத்யாதி, ஆரண்யகாண்டே [கஅ-எ].

---

acharya.org

துவள்இல்-நிர்த்தோஷங்களாய், மா - மஹார்க்கங்களான, மணி - மாணிக்கங்களாலே சமைந்த, மாடம் - மாடங்களானவை, ஓங்கு - உயர்ந்திருக்கிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, தொழும் - தொழாநிற்கிற, இவளை-இவளை, நீர்-அடியிலே கொடுபோய்க்காட்டின நீங்கள், இனி-இவள்அதிமாத்ர ப்ரவணையானபின்பு, அன்னைமீர் - "பெற்றவர்களான நமக்கு நியமிக்கலாம்" என்றிருக்கிற, உமக்கு - உங்களுக்கு, ஆசை - நியமநத்திலாசைப்படுகை, இல்லை - இல்லை; விடுமின் - "விதேயை" என்றிருக்கிறத்தை விடுங்கோள்; (அதுக்கடியென்? என்னில்), தவளம் - வெளுத்த நிறத்தையுடைத்தாய், ஒண்-ஊர்ஜிதமான, சங்கு - திருச்சங்கு, சக்கரம் - திருவாழி, என்றும் - என்றும், தாமரை - தாமரைபோலேயாய், தடம் - அத்யந்த விசாலமான, கண் - திருக்கண்கள், என்றும் - என்றும், (அர்த்தோக்தியளவிலே), குவளை - நெய்தலினுடைய, ஒண்-அழகிய, மலர்-பூப்போலேயிருக்கிற, கண்கள் - கண்களானவை, நீர்-நீர், மல்க-விஞ்சும்படி, (தளர்த்தியாலே,) நின்றுநின்று- (ப்ரதிக்ஷணம்ஆத்மயாரணம்பண்ணி) நின்று நின்று, குமிறும் - நெஞ்சில் நினைவை வாய்விட்டுச் சொல்லமாட்டாதவார்த்தியாலே உள்ளே குமிறாநிற்கும். "உகும், இறும்" என்று †பதவ்யாஸமாய், "த்ரவத்ரவ்யமாய், தளர்ந்து விழாநிற்கும்" என்றும் சொல்லுவர். தவளவொண் சங்குசக்கரமென்று- வெளுப்பும் ஒண்மையும், சங்குக்கும், சக்கரத்துக்கும்அடையாகவுமாம். குவளை-நெய்தல்.

இ.—முதற்பாட்டில், இவள் ப்ரக்ருதி அறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டினபின், உங்கள் ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோ? என்கிறாள்.

[துவளில் மாமணிமாடம்] - குற்றமற்று இருக்கையாலே பெருவிலையனான மணியாலேசெய்த மாடம். மணிக்குதோஷாபாவம் - வந்து கழிந்ததன்றிக்கே ப்ராக்பாவமும் அன்றிக்கே, அத்யந்தாபாவமாயிருக்கை. முக்தனுடைய அபஹதபாப்மத்வாதிகள்போலன்றிக்கே, ஈஸ்வரனுடைய அபஹதபாப்மத்வாதிகள்போலே யிருக்கை. திவாராத்ரவிபாகம் பண்ணவொண்ணாதபடி ப்ரகாசமான மாடம். [ஓங்கு]-ஆகாசாவகாசம் அடையும்படியான மாடம். கலந்து பிரிகிறபோது, 'ஊர்எது?' என்ன; - அணிமை சொல்லுகைக்காக, "அவ்வூரில் மாடங்களின் நிழலன்றோ இது?" என்றாளாயிற்று. [தொலைவில்லிமங்கலந் தொழுமிவளை] - வாஸுதேவவிஜயங்களிலே தொழுதவள் அல்லள்; அது தன்னிலும், உள்ளுநிற்கிற அரவிந்தலோசநன் அளவாகிலன்றோ மீட்கலாவது; அவனோடு ஸம்பந்யமுள்ளவிடம் எங்கும்புக்கு அவகாஹித்தவளை மீட்கப் போமோ? விஷயம் பரோக்ஷமாய் "எட்டாதுகாண்" என்று மீட்கவோ? "ப்ரத்யக்ஷ விஷயம், பரிச்சின்னம்" என்று மீட்கவோ? [தொழுமிவளை] - ஜ்ஞாநாநந்தங்களுக்கு முன்னே நிரூபகமிறே பாரதந்த்ர்யம்; தொழுகையே நிரூபகமாயிருக்கிறவள். "ஊஹொ ஹம்வாஹுஹெவஸ்ரு," "ஸ்ரூஜ ஶிம்ஸ்ரு ஹ்வாஹீநழ". ஒன்றை உருகுபதத்திலே பிடித்தால், வலித்தாலும் அப்படியே உருவநிற்குமாயிற்று. [நீர்]- இவளுடைய ப்ராவண்யத்திலே ஸாதநவுஜிபண்ணுகிற நீங்கள். [இனி]-இவளுக்கு இவ்வூரைக்காட்டினபின்பு. [அன்னைமீர்]-ப்ராப்த யௌவனையானாலும், "பெற்றோம்" என்கிற ப்ராப்தியைக்கொண்டு மீட்கப்போமோ? அவ்வருகுபட்டாலும் நியந்ருதையைக்கொண்டு மீட்கவோ? [உமக்காசையில்லை] - வகுத்தவன் கைக்கொண்டால் உமக்குஆசையில்லை. [விடுமினோ]-ஹிதம்

† பதவ்யாஸம் - பதப்பிரிவு.

acharya.org

சொல்லுகிறத்தை விடுங்கோள். அநுகூலிக்கப்பாருங்கோள். பெற்ற எங்களை "விடுங்கோள்" என்கிறது எத்தைக்கொண்டு? என்ன, -[தவளவொண்சங்கு இத்யாதி.]- ஶ்யாமமான திருநிறத்துக்கு பரபாமமான திருநிறத்தையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம். [ஒண்சங்கு]- "உண்பது சொல்லி லுலகளந்தான் வாயமுதம்" என்று-பிராட்டிமாரும் ஆசைப்பட்டுச்சீறுபாறென்னும் செல்வைஉடையவன். [சக்கரம்]-அங்ஙன் ஒருவிஶேஷணமிட்டுச் சொல்லவொண்ணாத திருவாழி. [என்றும்] - "இவற்றைக்காணவேணும்" என்னுதல், "இவற்றோடே வரவேணும்" என்னுதல் சொல்லமாட்டுகிறிலள், வலஹா கியாலே. [தாமரைத் தடங்கணென்றும்] - தாமரையை ஒருவகைக்கு ஒப்பாகச் சொல்லலாய், போக்தாக்கள் அளவன்றிக்கே இரண்டாழ்வார்கள் அளவும் அலையெறிகிற திருக்கண்கள். 'என்றும் என்றும்' என்கையாலே - தூர்வலன் மலையை எடுத்தாற்போலே இருக்கிறபடி. [குவளை இத்யாதி] - குவளையும் ஒப்பாகமாட்டாத அழகிய கண்கள் நீர்மல்கும்படியாக; தாமரைத்தடங்கண் நீர்மல்க ப்ராப்தமாயிருக்க, இவள் கண்ணீர்பாய்வதே! இவள் "ஜீ தஜெ" என்பது கண்ணநீராலே ஆயிற்று. "கியஜ்ம் கவநெ ஹூ ஹ்ரூ" - இவளை மீட்கப் போமோ? [நின்றுநின்று குமிறுமே] - கன்றைக் கிட்டக்கட்டிவைத்தால் ஸுரபிபடுமாபோலே படாநின்றாள். பெருவெள்ளத்தில் சுழிக்குமாபோலே அகவாயில் உள்ளது வெளியிடமாட்டாதே நின்று சுழிக்கிறபடி. "உகும், இறும்" என்றாற்போலே சிலர் சொன்னார்கள்; அவர்கள் இவளுக்கு ஓடுகிற பாவவ்ருத்தி அறியாமையாலே சொல்லுகிறார்கள். இவள் இப்படி அவமாஹித்தபின்பு, மீட்கப்பாராதே பின்செல்லப் பாருங்கோள் என்கிறாள்.

ஈடு.—முதற்பாட்டு. இவள் ப்ரக்ருதியறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டினபின்பு உங்கள் ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோ? என்கிறாள்.

[துவள் இத்யாதி] - "உனக்குஇப்போதுஉதவாதபடி தூரஸ்த்தம்" என்னுதல், "பூதகாலத்தில் அவதாரங்கள்" என்னுதல், உகந்தருளின நிலங்களிலே உள்ளூநிற்கிறவனளவிலே ப்ரவணையாதல் செய்தாளாய் மீட்க நினைக்கிறிகோளோ? அசலிட்டுத் திருத்தொலைவில்லைமங்கலத்தை விரும்புகிற இவளை யெங்ஙனேமீட்கும்படி? சரமாவதியிலே நிற்கிற இவளை ப்ரதமாவதியிலேநிற்பார் மீட்கவோ? துவளேன்பது - குற்றம்: அதின்றிக்கே யிருக்கை. அவ்வூர்ச்சரக்கிலே குற்றமுண்டாகிலன்றோ இவளைமீட்கலா

முதற்பாட்டு—துவளில் இத்யாதி. "உமக்காசையில்லைவிடுமினோ" என்றதிலே நோக்காக அவதாரிகை - இவள்ப்பாக்நுதி இத்யாதி.

"தொலைவில்லிமங்கலம்தொழுமிவளை" என்றவைத்து, "உமக்காசையில்லை" என்ற தோழியுடைய ஹார்த்தபாவம் - உனக்கிப்போது இத்யாதிவாக்யத்வயம். அதாவது - பரத்வத்திலே ப்ரவணையானாலாகில் "உனக்கிப்போதுஉதவாதபடிதூரஸ்த்தம்" என்று மீட்கலாம்; அவதாரத்திலே ப்ரவணையானாலாகில் "பூதகாலத்திலேயுள்ளதொன்று" என்ற மீட்கலாம்; அங்குநிற்கிற எம்பெருமானிடத்திலே ப்ரவணையானாலாகில் "ப்ரத்யக்ஷவிஷயம்பரிச்சிந்நம்" என்றுமீட்கலாம்; இவற்றையெல்லாம் பஹிர்த்தனமாக்கித் திருத்தொலைவில்லிமங்கலத்திலே ப்ரவணையான இவளை மீட்கவிராகுண்டோ? என்றபடி. அசலிட்டு - தேவபிரானையம் புறம்பாக்கி யென்னுதல்; அவனுக்குஅசலாகவிட்டு-தநியமென்றென்னுதல். "தொலைவில்லிமங்கலந்தொழுமிவளை - நீர்" என்றகூட்டி ஹார்த்தபாவம் - சாமாவதி இத்யாதி. "குற்றமில்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - அவ்வூர் இத்யாதி. "இல்" என்று - அத்

acharya.org

வது ? குற்றமுண்டாய்க் கழிந்ததல்ல. ஜீவபரர்களிருவர்க்கும் அபஹதபாப்மத்வாதிக ளுண்டா யிருக்கச்செய்தே ஜீவாத்மாவுக்கு ஹேயமுண்டாய் ஹகவதநுக்ரஹத்தாலே கழியும்:பரமாத்மா ஹேயஸம்ஸர்க்காநர்ஹனுயேயிருக்கும்; அப்படியேயாயிற்று, அவ்வூரில் மாடங்களில் ரத்நங்களும். [மாமணி] - ஒளியேயல்ல, பெருவிலையனுமாயிருக்கும். [ஓங்கு] - அவ்வூரில் மாடங்களின்நிழலிடே திருநகரியளவும் வந்துகாணுமிருப்பது. "இடமணித்து" என்றுபோலேகாணும் நாயகன் பிரிந்தது. மாளிகையின் நிழற்கீழேயிட்டு வைத்துக்காணும் பிரிந்தது. அவன் பிரிந்தபோது தோடங்கி அவ்வூரையும் அவ்வூரில் மாடங்களையும் அவற்றில் மாணிக்கங்களையும் பார்த்து, வைத்தகண் வாங்கமாட்டாதே யிருந்தாள்போலே காணும். [தோலைவில்லிமங்கலம்] - துருப்புக்கூடாக அவ்வூரையன்றோ இவள் உகந்தது. [தோழுமிவளை] - "கறுத்திருக்கும், வெளுத்திருக்கும்" என்னுமாபோலே, தோழுகை நிருபகமாயிருக்கை. "ஸ்ராஜலிம்ஸ்ரஹ்வமாஸீநம்" (ப்ராஞ்ஜலிம்ப்ரஹ்வமாஸீநம்) என்னுமாபோலே; "கணபுரங்கைதொழும்பிள்ளை" என்னுமாபோலே. [இவளை] - இவளை மீட்கப்பார்ப்பதே, இவள்படியை புத்திபண்ணியன்றோ மீட்பது! [தோழுமிவளை]- இவள்படி கைமேலே காணநிற்கச்செய்தே நீங்கள் மீட்கத் தேடுகிறபடி யெங்ஙனே ? [இவளை நீர்] - பழிசொல்லப் பணைக்கிறவள் இவள், பழி பரிஹரிக்கப்பார்க்கிறிகோள் நீங்கள். [இனி] - தோழுகை தேஹயாத்ரையாதற்குமுன்னேயன்றோ மீட்கப்பார்ப்பது. [அன்னைமீர்]-ஹகவத்விஷயத்திலே யவகாஹிக்க என்றொன்றில்லையோ? நியந்த்ரு நியாம்ய

ப்ர.—[தொழுமிவளை]—கயொயுாகாணை [ச] "உதெ்வஸுகொ ாதெ்ஆஸாஸொஹ்ராதாரஸ்வ வீச। ஸ்ராஜலிம்ஸ்ரஹ்வமாஸீநமிவீக்ஷ்ஸ்யஸ்ரிவ। சஉ ஆகுஷ்ணொஸியாஸாயஸ்ம் ஸ்ராயிகுவ்வஸுஸ்ரராழ । ஸிதியம்ஸெஹுராதாநம் கூரியம்ஸ்ரீஸுவஸ்ரிதாசகு॥"

யந்தாபாவத்தைச் சொல்லுகிறதென்கிறார் - குற்றமுண்டாய் இத்யாதி. உச்சத்துக்கு த்ருஷ்டாந்தம். ஜீவபரர்கள் இத்யாதி. "துவளில்" என்கையாலே-ஒளியுண்டென்று விரதம். ஓகதிதின் சரமாவதி - அவ்வூரில் இத்யாதி. இத்தால் பலித்தபாவம் - இடம்அணித்தென்று இத்யாதி. விவரணம் - மாளிகை இத்யாதி. கீழெல்லாவற்றையுங் கடாக்ஷித்து, "தொழும்" என்றவர்த்தமாகத்துக்குபாவம் - அவன் பிரிந்த இத்யாதி. "தொலைவில்லிமங்கலந்தொழுமிவளை - ஆசையிலை" என்றதுக்கு ஹார்த்தபாவம் - துருப்பு இத்யாதி. துருப்புக்கூடு - தூற்றுப்பொலி. அதாவது - இன்னார்இனியாரென்னாதே அவ்வூரிலெல்லாரையும் விரும்பினாள் என்றபடி. "தொழுமிவளை" என்று விசேஷித்ததுக்குபாவம் - கறுத்திருக்கும் இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்த த்வயம் - 'ஸ்ராஜலிம்' இத்யாதி. "உதெ்வஸுகொ ாதெ்ஆஸாஸொஹ்ராதாரஸ்வ வீச । ஸ்ராஜலிம்ஸ்ரஹ்வமாஸீநமிவீக்ஷ்ஸ்யஸ்ரிவ" இத்யயோத்யாகாண்டே. திருமொழி 'கணபுரம்' இத்யாதி. பூர்வமேவார்த்தோ லிகிதம். "தொழுமிவளை—ஆசையிலை" என்றதுக்கு ஹார்த்தபாவம் - இவளை இத்யாதிவாக்யத்ரயத்தாலே. அதில் சாடு - இவள்படி இத்யாதிவாக்யத்வயம். படி - சரீரமும், ப்ரகாரமும். கைமேலே - ப்ரத்யக்ஷமாகவென்று சாடு. "இவளைநீர்" என்றதுக்கு ஹார்த்தபாவம் - பழிசொல்ல இத்யாதிவாக்யத்வயம். 'தொழுமிவளை - இனி" என்றகூட்டிபாவம் - தோழுகைதேஹயாத்ரை இத்யாதி. "தொழுமிவளை - அன்னைமீர்" என்றகூட்டிபாவம் - பகவத்விஷயத்திலே இத்யாதி. அவகாஹிக்கவென்றொன்றில்லையோ ? என்றது - அவகாஹித்தாரை மீட்கப்போகாதென்கிற தொன்றில்லையோ ? என்றபடி. ஆனாலும், பெற்ற

acharya.org

ஹாவமேயோ வேண்டுவது; பெற்றவர்களென்னு, அமுக்யங்களிலே விழியக்கடவதோ? [உமக்காசையில்லை] - ப்ராப்தயௌவனைகளானுர்பக்கல் பெற்றவர்களுக்கு ப்ராப்தி யுண்டோ? புக்கவிடத்தே ப்ரவணையாகாநிற்க, பெற்ற ப்ராப்திகோண்டுமீட்கவோ? [விடு மினோ]-இவ்வளவில் நீங்கள் கைவாங்கவமையும். பெற்றதாய்மார் "விடுமின்" என்னுங் காட்டில்விடார்களிறே; பின்னையும் நிர்ப்பந்திக்க, வேண்டா, இவளுக்கு ஓடுகிற ரஸத் தைக் கண்டுகொடுநிற்கப் பாருங்கோள்: இவளுடைய அநுபவத்துக்குத் தண்ணீர்த் தரும்பாகாதே இத்தைக்கண்டுகொடுநிற்க வமையுமென்கிருள். எங்களை "ஆசைப்பட வேண்டா, விடுங்கோள்" என்றதென்? என்னில்:—இவள் பேச்சிலும் நினைவிலும் நீங்க ளாதல் நானுதலுண்டோ? † (உங்களையாதல் என்னையாதல், சொல்லுதல் நினைத்தல் செய்கிருளோ;) "தூக்ஷாவாதூராம்ஶுஷாராம்ஶு" (த்யக்த்வாபுத்ராம்ஶ்சதாராம்ஶ்ச) என்னும் நிலையன்றே இவளது! [தவளவோண்சங்கு] - ஶ்யாமமான திருமேனிக்குப் பர பாகமான வெண்மையையுடைத்தாய், "உண்பதுசொல்லில் உலகளந்தான்வாயமுதம்" என்கிற அழகையுடைத்தான சங்கு. [சக்கரம்] - அங்ஙனம்ஒரு விசேஷணமிட்டுச் சொல்ல வோண்ணுத அழகையுடைய சக்கரம். [என்றும்] - "இவற்றைக்காணவேணும்" என் னுதல்; "இவற்றேடேவரவேணும்" என்னுதல் சொல்லமாட்டுகிறிலள், பலஹாநியாலே [தாமரைத்தடங்கணேன்றும்]- அந்த ஆழ்வார்க ளளவும் வந்துஅலையெறிகிற திருக்கண்கள் தாமரையை யொருவகைக்கு ஒப்பாகச்சொல்லலாய், ஹோக்தாக்களளவன்றிக்கே யிருக்கிற திருக்கண்கள். [என்றும் என்றும்] - ஒருமலையெடுத்தாற்போலே, சொல்லுக்குச்சொல்லு தளர்ந்து நடுநடுவே விச்சேதித்தாயிற்றுச் சொல்லுவது. திவ்யாயுதங்களையும் கண்ணழ கையுங் காட்டியாகாதே இவளைத்தோற்பித்தது. [குவளையித்யாதி] - இக்கண்களைக்கண் டால் * தாமரைத்தடங்கணன்றே நீர்மல்கவடுப்பது? கண்ணும்கண்ணநீருமாய் இவளிருக் கிற இருக்கை கண்டுகோண்டிருக்கவன்றே உங்களுக்கு அடுப்பது? "சூஹ்லாடிஶீதநெ

ப்ர.—யாஸகாணை [கள்] "ஸொஹம்வராஷிதஷ்ஸ்ந ஶாஸவஶ்வாவ ஶாநிகஃ। தூக்ஷாவாதூராம்ஶு ஶாராம்ஶு ராவவம் ஶரணம்ஹதஃகசா"

எங்கள் வார்த்தை கேட்கவேண்டாவோ? என்ன - பெற்றவர்களென்னு இத்யாதி. என்னு - என்ற மாத்ரத்திலே. "உமக்காசையில்லை" என்றதுக்குபாவம் - ப்ராப்தயௌவனைகள் இத்யாதி. ப்ராப்தி யில்லையோ? என்ன - புக்கவிடத்தே இத்யாதி. மேலுக்கவதாரிகை - பெற்றதாய்மார் இத்யாதி; கண்டுகொடுநிற்க வமையுமென்கிருளென்னுமளவும் விவரணம் - இவளுடைய இத்யாதி. அவதாரி காந்தரம் - எங்களை இத்யாதிவாக்யத்தயம். "தூக்ஷாவாதூராம்ஶுஷாராம்ஶுராவவம்ஶரண ஹ்ஶஃ" இத்யாதி விபீஷணஃ. உண்பதுசொல்லில் இத்யாதி. நாய்ச்சியார்திருமொழி. ஸ்வப்நோர்த்தஃ. "தாமரை" என்றுசொல்லிவைத்து, "தடங்கண்" என்கையாலே - இது ஸ்த்ரீலோபமானமென்கிருர்- தாமரையை இத்யாதி. இது - ஸப்தார்த்தமும். திவ்யாயுதங்களையும் திருக்கண்களையும் வர்ணிக்கிற துக்கு பாவம் - திவ்யாயுதங்களையும் இத்யாதி. "குவளையொண்மலர்" என்கிற விசேஷணத்துக்கு பாவம் - இக்கண்களை இத்யாதி. முந்தினவவதாரிகைக்குச்சேர "கண்கனீர்மல்க" என்றதுக்குபாவம்- கண்ணுங்கண்ணநீரும் இத்யாதி. இவ்வாகாரம் தர்ஶநீயாரிருக்குமோ? என்ன - சூஹ்லாடி இத் யாதி. "சூஹ்லாடிஶீதநெ தூ ஷ்ஃ வாஸகீகூதமாதூவாநு। ஸஷா வராமா ணாவிஷ்டோ ஹ்ஷவ்ஹ்ஸவ்ஹெஹிஹிஃ" இந ஸ்ரீவிஷ்ணுதத்வே. ஸலோகத்துக்குபாவம்-

acharya.org

ஸுரவ்ரஜை'' (ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:) இத்யாதி. ஸதாதர்ஶநத்துக்குஒருதேசந்தேடிப்போக வேண்டாகாணும். குவளைப்பூப்போலே அழகியகண்கள் நீர்மல்க. அவள் தன்னுடைய ஸ்த்ரீத்வத்தைக் காற்கடைக்கொள்ள, நீங்கள் எங்ஙனே மீட்கப்பார்க்கும்படி? கண்ண நீர்பாய்கையாவது - ஸ்த்ரீத்வமழிகையிறே. [நின்றுநின்றுகுமிறுமே] - பேச்சுப்போய்க் கண்ணநீராய், கண்ணநீர்போய்த் தடுமாறுகிற அவஸ்த்தையிலே மீட்கப்போமோ? ராஜ கோஷ்ட்டியிலே "உகும், இறும்" என்று சிலர் பொருள் சொல்ல, விக்ரமசிங்கனேன்பா னொருவன், "அங்ஙனல்ல, கன்றைக்கடக்கக் கட்டிவைத்தால் முலைக்கண் கடுத்துப் பசு அலமந்து படுமாபோலே, உள்ளோடுகிற க்லேஶம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவ ளுக்கு இதுவார்த்தையோ?" என்றான். பெருவெள்ளத்தில் சுழிக்குமாபோலே, அகவாயி லுள்ளது வெளியிடமாட்டாள். உள்ளேநின்று சுழிக்கிறபடி. தோலைவில்லிமங்கலந் தொழுமென்கையாலே - காயிகவ்யாபாரம் சொல்லிற்று; தவளவொண்சங்குசக்கரமென்றும் தாமரைத்தடங்கணென்றும் என்று சொல்லுகையாலே - வாசிகவ்யாபாரம் சொல்லிற்று; குமிறு மென்கையாலே - மாநஸவ்யாபாரம் சொல்லிற்று. (க)

இரண்டாம் பாட்டு.

குமிறுமோசைவிழவொலித் தோலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு
அமுதமென்மொழியாளை நீருமக்குஆசையின்றியகற்றினீர்
திமிர்கொண்டாலொத்துநிற்கும்மற்றிவள் தேவதேவபிரானென்றே
நிமியும்வாயொடுகண்கள்நீர்மல்க நெக்கோசிந்துகரையுமே.

ஆ.—(குமிறும்.) - கம்பீர விவிதமங்களவாத்ய ப்ரமுதித ஜநகோஷத்தை யுடைத்தான மஹோத்ஸவம் செல்லாநிற்கத் திருத்தோலைவில்லிமங்கலத்திலேகொண்டு புக்கிர்கோள்; அன்றுதொடங்கி விரஹவ்யஸநததாலே சித்ரார்ப்பிதையைப்போலே ஒரு சேஷ்டிதஶூந்யமையன்றியேநின்று, அதிமயூர ஸ்வரமாக, தேவதேவபிரானென்றே சொல் லிச்சொல்லிக்கொண்டு அழுதுநெக்கொசிந்து நீராயுருகாநிற்கும்; ஆதலால் அங்கேகொண்டு புக்கு வலிய இழந்திர்கோள்; இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்குமோ? என் கிறாள்.

ஸதாதர்ஶநத்துக்கு இத்யாதி. இரண்டாமவதாரிகைக்குச் சேரபாவம் - அவள்தன்னுடைய இத்யாதி. காற்கடைக்கொண்டபடி யெங்ஙனே? என்ன - கண்ணநீர் இத்யாதி. "நின்று நின்று" என்றதுக்கு பாவம்-பேச்சுப்போய் இத்யாதி. "தடுமாறுகிறவவஸ்த்தை" என்றதுக்கு ஸம்வாதம்-ராஜகோஷட்டி யிலே இத்யாதி. "உகும், இறும்" என்றபக்ஷத்திலே ஸப்தார்த்தம்; உகும் - உக்கிப்போகாநின்றாள், இறும் - மறியாகின்றாள்என்று குமிறுகையாவதேதென்ன - பெருவெள்ளத்தில் இத்யாதி. குமிறும் - உள்ளேநின்றுசுழியாநிற்குமென்றபடி. "நின்றுநின்று" - ப்ரதிக்ஷணம்ஆத்மயாதணம்பண்ணிநின்று. "உகும், இறும்" என்றதுக்கு - "த்ரவத்ரவ்யமாய்த் தளர்ந்துவிழாநிற்கும்" என்று உரையில் ஸப்தார்த் தம். "சிந்தையாலும்" இத்யாதிக்குச்சேர, கரணத்ரயமும் மங்கேப்ரவணமானபடி சொல்லுகிறதென் கிறார் - தோலைவில்லி இத்யாதிவாக்யத்ரயத்தாலே. 'அன்னைமீர், நீர் - தவளவொண்சங்கு'என்று தொடங்கி, குமிறும்; ஆகையாலே - 'தவளில்'என்றுதொடங்கி, விடுமினோ இத்யந்வய:. (க)

acharya.org

ஓ.—இரண்டாம்பாட்டில், இவளைத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே திருநாளிலே கொடுபுகுவார் உண்டோ? என்கிறாள். [குமிறுமென்று தொடங்கி] - எழுத்துச்சொல்லும் பொருளும் தெரியாதே ஒன்றாய்எழுகிற த்வநியை உடைத்தான திருநாளில் ஆரவாரத்தை உடைத்தான திருத்தொலைவில்லிமங்கலத்திலே தான் அறியாதிருக்கிற இவளை, நீங்களே கொடுபுக்கு. [அமுதமென்று தொடங்கி] - இவளுடைய இனியபேச்சுக்கள், கேட்க ஆசையில்லாமையாலே நீங்கள் இவள் அகலும்படி பண்ணினிகோள். [திமிர்கொண்டாலொத்துநிற்கும்] - ஸ்தப்யையானாற்போலே இருக்கும். [மற்றென்று தொடங்கி] - பின்னையும் இவள் திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லவென்று உபக்ரமித்து முடியச்சொல்லமாட்டாதே கண்கள் நீர்மல்கி உள்ளோடுகிற அவஸாதத்தின் மிகுதியாலே ஸிமிலையுமாய் நீராகா நின்றாள். நிமிகை - உதடுநெளிக்கை.

ப.—அநந்தரம், நித்யசூரிகளுக்கு அநுபாவ்யனான தேவபிரானெழுந்தருளியிருக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்திலே மஹோத்ஸவத்திலே கொண்டுபுக்கு இவளை யகலும்படி பண்ணினிகோளென்கிறாள்.

குமிறும் - கம்பீரமான, ஓசை - நானாவிதகோஷத்தையுடைய, விழவொலி - உத்ஸவகோலாஹலத்தையுடைத்தான, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லி மங்கலத்திலே, கொண்டு - கொண்டு, புக்கு - புக்கு, அமுதம் - அம்ருதம்போலே ஸரஸமாய், மென்-ம்ருதுவான, மொழியாளை - பாஷணத்தையுடையஇவளை, நீர் - (இவள்வார்த்தையினிமையறிந்து போந்த) நீங்கள், உமக்கு - உங்களுக்கு, ஆசை-(அதில்)ஆசை, இன்றி- இல்லாமையாலே, அகற்றினீர்-(உங்களோடு)உறவற்றகலும்படி பண்ணினிகோள்; (இவள் உறவறுதியறிந்தபடியென்? என்னில்;) இவள்-இவள், திமிர்கொண்டாலொத்து - திமிர்கொண்டாற்போலேயாய், நிற்கும் - பேசாதேநில்லாநிற்கும்; மற்று - மற்று, (இவள் வார்த்தைசொல்லில்),தேவர் - தேவர்களான நித்யசூரிகளுக்கும், தேவர் - தேவர்களான விஷ்வக்ஸேநாதிகளுக்கும், பிரான் - தன்னை யநுபவிப்பித்துக்கொண்டிருக்கிற மஹோபகாரகன், என்றே - என்கிற அர்த்தோக்திமாத்ரத்திலே, நிமியும் - நெளிந்த, வாயொடு - வாயையுடையளாய், கண்கள் - கண்கள், நீர்-நீர், மல்க-மல்கும்படியாக, நெக்கு - கட்டுக்குலைந்து, ஒசிந்து - தளர்ந்து, கரையும் - நீர்ப்பண்டமாகாநின்றாள். நிமிதல் - நெளிதல்.

இ.—இரண்டாம் பாட்டில், அவ்வூரில் கொண்டுபுக்கதுக்குமேலே, திருநாளிலேகொண்டு புகுவார் உண்டோ? என்கிறாள். [குமிறுமோசை விழவொலி] - ஓத்துச்சொல்லுவார், ஸங்கீர்த்தனம் பண்ணுவார், பாடுவாராய், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டு எழுகிற த்வநியையுடைய திருநாளில் ஆரவாரம். [தொலைவில்லிமங்கலங் கொண்டுபுக்கு] - பரமபதத்திலே கொண்டுபுக்கிர்கோளாகிலும் மீட்கலாயிற்று. [கொண்டுபுக்கு] - இவள் அறியாதிருக்க, நீங்களே கொண்டு புக்கு. [அமுதமென்மொழியாளை] - இவள் பேச்சைக்கேட்டால் போன உயிரும் மீளுமாயிற்று. [மென்மொழி] - அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி, ஶ்ரவணயோக்யமாயிராதே அம்ருதம். [நீருமக்காசையின்றி யகற்றினீர்] - "யோராயோராராவோ" என்று இவள் பேச்சைக்கேட்க ஆசைப்பட்டிருக்குமவன் பெற்றுப்போனான்; நீங்கள் ஆசை

acharya.org

இல்லாமையாலே அகற்றினிகோள். தந்தாமுக்கு அநர்த்தத்தைத் தாம்தாமே விளைத்துக் கொள்ளுவார் உண்டோ? அகற்றுகையாவது - அகலும்படி பண்ணினிகோள் என்கை. அதாவது - இவ்வூரிலே புக்கபின்பு இவர்களோடே வார்த்தை சொல்லத்தவிர்ந்தாளாயிற்று. [திமிர்கொண்டா லொத்து நிற்கும்] - ஸ்தப்யையானாற்போலே நிற்கும். வ்யாபாரக்ஷமையன்றியே இராநின்றாள். "ஸ்ஸ்வொவ்ஸ்ரீ தகரோடெஶஷோகூஸ்ரீ:" என்கிறபடியே பரிபூர்ண ஜ்ஞாநரைப்போலே இராநின்றாள். [மற்றிவள்] - வேறு இவள் வார்த்தைசொல்லப் புக்காளாகில். [தேவர்தேவபிரானென்றே] - இங்கே கண்டாலும், "*அயர்வறுமமரர்களதிபதி இங்கேவந்து ஸுலபனானான்" என்றாயிற்று இவள் வாஸ்ஸிபண்ணுவது. [என்றே நிமியும்] - அந்த சிலவத்தையைச் சொல்லப்புக்குத் தலைக்கட்டமாட்டாதே உதடு நெளிக்கும். உதடுநெளிக்கிற வாயோடே கண்ணநீர்மல்க. [நெக்கு] - ஸிமிலையுமாய். [ஓசிந்து] - பரவசையுமாய். [கரையும்] - நீராகாநின்றாள். [நெக்கொசிந்து கரையுமே] - பெருவெள்ளத்தில் கரையானது நெகிழ்ந்து ஓட்டுவிட்டு ஓசிந்துபொசிந்து அவயவியாகாதபடி கரைந்து போமாபோலே யழிந்துபோகாநின்றாள். இப்படி இவள் கரையாநிற்க, வன்னெஞ்சரான நாம் இதுக்குப்பாசுரமிடுவது, மீட்கத் தேடுவது ஆகாநின்றோமிறே!

ஈடு.—இரண்டாம்பாட்டு. அவ்வூரில் கோடுபுகவேண்டினால், திருநாளிலே கோடுபுகுவாருண்டோ? என்கிறாள்.

[குமிறுமோசைவிழவொலி]- "தெஷாம்வாணாஹவொஷோயமம்ஹீரயோரவ்வநு: | ஸுயொயாம்வரயாஸாஸதுரூநாடாநாநாதி:" (தேஷாம்புண்யாஹகோஷோத கம்பீரமதுரஸ்வந:- அயோத்யாம்பூரயாமாஸஹர்யநாதாநுநாதித:) என்று, ஒத்துச்சொல்லுவார், ஸங்கீர்த்தநம்பண்ணுவார், பாடுவார், இயல்விண்ணப்பஞ் செய்வாராய், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டெழுகிற த்வநியையுடைய திருநாளில்ஆரவாரம். பாவியேன்! இத்த்வநி செவிப்பட்டால் கொண்டேமீள வன்றோ அடுப்பது! "இவ்விடம் பிள்ளைகொல்லி" என்று கூப்பிடுமாபோலேகாணும் த்வநியிருக்கிறது. அவ்வூரும் திருநாளும் அங்குள்ளார்படுகிறதுங் கண்டுவைத்து இவளைக்கொண்டு புகுவாருண்டோ? [கொண்டுபுக்கு] - இவளை அறியாதிருக்க நீங்களேகொண்டுபுக்கு [அமுதமென்மொழியாளை] - இவள்மொழி, கேட்டார்க்கு நித்யத்வத்தைக்கொடுக்குமே இவ்வினியபேச்சைக் கேளாதபடி ஹாக்யஹீநைகளாவதே நீங்கள். அதாவது - அவ்வூரிலே

இரண்டாம்பாட்டு.—குமிறும் இத்யாதி. "குமிறுமோசைவிழவொலி" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - அவ்வூரில் இத்யாதி.

குமிறுமோசையுண்டாகைக்கடியேதென்ன - தெஷாம் இத்யாதி. "தெஷாம்வாணாஹவொஷோயமம்ஹீரயோரவ்வநு: | ஸுயொயாம்வரயாஸாஸதுரூநாடாநாநாதி:" இத்யயோத்யாகாண்டே[சு-அ]. "குமிறும்" என்றதுக்கர்த்தம்-எழுந்தும் இத்யாதி. "கொண்டுபுக்கு" என்றதுக்குபாவம் - பாவியேன் இத்யாதி. "குமிறுமோசை" என்றதுக்குபாவம் - இவ்விடம் இத்யாதி. "கொண்டுபுக்கு" என்னுமளவாக பதப்ரயோகத்துக்கு பலித்தபாவம் - அவ்வூரும் இத்யாதி. அம்ருதத்தினுடைய, நித்யத்வப்ரதத்வம், போக்யத்வமாகிற ஆகாரத்வயத்தையுப்பற்ற பாவத்வயம்-இவள்மொழி இத்யாதிவாக்யத்வயத்தாலே. திருவாய்மொழியைக்கேட்டார்க்கு புகராவ்ருத்தியில்லாத ஸ்த்தாநமுண்டாமென்று - ஸ்வாபதேசம். 'அதாவது அவ்வூரிலே' இத்யாதிவாக்யத்துக்கு

– acharya.org

புக்கபின்பு இவர்களுடன் வார்த்தைசொல்லத்தவிர்ந்தாளாயிற்று. "யாராயாரா ராவா" (மதுராமதுராலாபா) என்னும்படிகாணுமிருப்பது. இதுகேட்க ஆசைப்பட்டிருக்குமவன் பேற்றுப்போனான். [மேன்மொழி] - அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி. ஶ்ரவணயோக்யமாயிராதே அம்ருதம்: வேணுமாகில் ரஸ்யதைக்கு ஒருசொல்லுக்கு நிற்கிறது, மாஹ்வம் இதுக்கேயுண்டுஇத்தனை. [நீருமக்காசையின்றி யகற்றினீர்] - இவள் பேச்சுக்கேட்டுப்போருகிற நீங்களே உங்களுக்குஇவள் வழிபடாதபடி பண்ணினிகோள். [திமிர்கொண்டா லொத்துநிற்கும்]- "ஸ்வப்னோஸி" (ஸ்தப்தோஸி) என்னுமாபோலே, அநுஷ்ணாவ்யவிஷயத்தை யநுஷ்ணவிக்கவும்மாட்டாதே ஸ்திமிதையாய் நில்லாநின்றாள். "ஸ்வப்னோஸ்யுத" (ஸ்தப்தோஸ்யுத) என்கிறபடியே, பரிபூர்ணஜ்ஞாநரைப்போலே யிராநின்றா ளென்றுமாம். [பற்றிவள்] - இவள்இதுக்குமேலேவார்த்தைசொல்லில். [தேவதேவபிரானேன்றே] - இங்கே கண்டாலும் *அயர்வறுமமரர்களதிபதி யிங்கேவந்து ஸுலபனானென்றாயிற்றுஇவள்புத்தி பண்ணுவது. நாயகனுடைய மேன்மைக்குத்தோற்றுவார்த்தைசொல்லுகிற இவளை மீட்கப்போமோ? [என்றேநிமியும்]- "அப்பேரியவள்இப்படி ஸுலபனாய் சீலவானாவதே!" என்று, அந்தசீலவத்தையைச்சொல்லப்புக்குத் தலைக்கட்டமாட்டாதே உதடுநெளிக்கும். உதடு

ப்ர.—[அமுதமென்மொழியாளை]— ஸுந்தரகாண்டே [சூசு] "யாராயாரா ராவாகிரோஹதிஹோதி நீ। ததிஹீநாவராரோஹாஹநுமந்தே கயவ்வஸதெ॥"

ப்ர.—[திமிர்கொண்டாலொத்துநிற்கும்]—ஹாஸ்யோதெ [சூ-க] "ஶ்வேத கெதுஹுராணெயசூஸ। தம்ஹவிதொவாச ஶ்வேதகெதோ வஸவ்வஹுரூபம் நவெஹொஸ்யாஸ்ஸ துவீநொ நநுஷ்வ்வஹவ்வ்ரிவஹவ தீதி॥ ஸஹ ஆஹ வஷுஉவெதுச துவிம்ஶதி வஷுஸ்வவுாநு வெஹாநயீதுதிஹாதிநாகநுவா நரோ நீஸ்வஹயாய। தம்ஹ விதொவாச ஶ்வேதகெதோயஸுஹொஸ்யெஹம் ததிநாகநுவாநரோ நீஸ்வஹ்யாஸ்ஸுதததிரோஶெஶ்ரூகெஸ்யாயெநாஸ்ரு தம்ஸ்ரு தம் ஹவதுதிதம்திக ததிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி."

பாவம் - தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுருகையாலே யங்கே ப்ரவணையாய் இவர்களோடே வார்த்தைசொல்லத்தவிர்ந்தாளாகையாலே, அம்ருதமான இவள்பேச்சைக் கேட்டுக்கொண்டிராதே அங்கே கொடுபுக்கு இவள்பேச்சை யிழந்திகோளிறேயென்கிறாளென்றபடி. வார்த்தை போக்யமாயிருக்குமோ? என்ன - யாராயாரா இத்யாதி. "யாராயாரா ராவாகிரோஹதிஹோதி நீ" இத்யாதி, சுந்தரகாண்டே ராமநி. 'நீருமக்கு ஆசையின்றி' என்கையாலே ப்ரதிகோடித்வேந பாவம் - இது கேட்க இத்யாதி, வ்யாவ்ருத்தி யெத்தாலே? என்ன - ஶ்ரவண இத்யாதி. மொழியாகையாலே ஶ்ரவணயோக்யமாயிருக்கும் இதுஎன்றபடி. "ஸ்வப்னோவஸி" என்கிற லௌகிகபரிபாஷையாலேகீழ்பாவமருளிச்செய்து, ஶ்ருத்யுபஜீவகோர்த்தாந்தரம்-ஸ்வப்னோஸ்யுத இத்யாதி. அன்றிக்கே, "ஸ்வப்னோஸ்யுத" என்கிறஸ்ருதிக்கே இரண்டர்த்தமாய், அதாவது - "யதுநாநுபஶ்யதி" என்கிறபடியே அநுபவத்தால் ஸ்தப்ததையாதல், ஜ்ஞாநபூர்த்தியாலே பரபரப்பற்றிருக்கிற ஸ்தப்ததையாதல். இந்த இரண்டர்த்தத்தையும் அருளிச்செய்கிறார் - ஸ்தப்தோஸி என்னுமாபோலே இத்யாதி வாக்யயத்வயத்தாலே. நம்முடைய புத்த்யதீநமா யிருக்கிறவனை - "தேவதேவபிரான்" என்கிறதென்?

acharya.org

நெளிக்கிற வாயோடே கண்கள்நீர்மல்க. [நெக்கு] - சிதிலையுமாய். [ஒசிந்து] - பரவசையாய். [கரையும்] நீராகாநின்றாள். [நெக்கோசிந்துகரையுமே] - பெருவெள்ளத்தில் கரையானது நெகிழ்ந்து ஒட்டுவிட்டோசிந்து போசிந்து அவயவியாகாதபடி கரைந்துபோமாபோலே, ஓரவயவியாக்கிக்காணவொண்ணாதபடி கரைந்துபோகாநின்றாள். (உ)

மூன்றாம் பாட்டு.

**கரைகொள்பைம்பொழில்தண்பணைத் தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்
உரைகொளின்மொழியாளைநீர் உமக்காசையின்றியகற்றினீர் [கு
திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததும் திசைஞாலந்தாவியளந்ததும்
நிரைகள்மேய்த்ததுமேபிதற்றி நெடுங்கண்நீர்மல்கநிற்குமே.**

ஆ.—(கரைகொள்.) - அதிமநோஹர ஸுமநோஹராலிராமாதிசிதள விடப விராஜித வகுள சம்பகாதி தருநிகர பரிவ்ருத பர்யந்தத்தை யுடைத்தான தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க அன்றுதொடங்கி, அவனைப் பிரிந்த வ்யஸநத்தாலே அப்ரக்ருதிங்மதையாய்க்கொண்டு, அத்யந்த மயூரமான சொற்களாலே, திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியும், இந்தலோகத்தை யளந்தருளினபடியும், பசுமேய்த்தருளினபடியும், முதலாகவுள்ள திவ்யசேஷ்டிதங்களையே யலற்றித் தன்னுடையகிருக்கண்கள் பரப்புமாறும்படி நீர்மல்கி நிற்கும். ஆகலால், அங்கே கொண்டுபுக்கு இவளை வலிய இழந்திகோ ளென்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலத்துக்குக் கொடுபோகிற நீங்கள், திருச்சோலையில் உள்ளிட்டுக்கொடுபோய்க் கெடுத்திகோள்! என்கிறாள். [கரையென்று தொடங்கி] - திருப்பொருநற்கரையை விழுங்கிக் குளிர்ந்த திருச்சோலையையும் ப்ரமஹரமான நீர்நிலத்தையுமுடைய திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு. [உரைகொள் இன்மொழியாளை] - "ஒருத்தி பேச்சே!" என்று நாடெல்லாம் உரைக்கும்படி யிருந்த இன்மொழியாளை. பொருளின்றி உரையே கொள்ளப்படும் மழலை வார்த்தை யுடையாள் என்றுமாம். [திரைகொள்என்று தொடங்கி] - தன்னுடைய ஸங்கீர்யாநத்தாலேகளித்துத் திரைமோதாநின்றுள்ள திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியும் திக்குக்களோடுகூடின ஜகத்தையெல்லாம் அநாயாஸேக வளர்ந்து அளந்துகொண்டருளினபடியும் பசுமேய்த்தருளினபடியு மாகிற ஆஸ்ரிதார்த்தப்ரவ்ருத்திகளையே அடைவுகெடச்சொல்லித் தன்கண்ணிற் பரப்பெல்லாம் நீர்மல்கப் பிதற்றவும்க்ஷமையன்றிக்கே நிற்கும்.

என்ன - இங்கேகண்டாலும் இத்யாதி. "தேவதேவபிரான்" என்றவளுடைய ஹார்த்தபாவம் - நாயகனுடைய இத்யாதி. "நெக்கு, ஒசிந்து, கரையும்" என்ற மூன்றையும் த்ருஷ்டாந்தத்திலே காட்டுகிறார் - பெருவெள்ளத்தில் இத்யாதி. 'திமிர்கொண்டால்' என்றுதொடங்கி, 'ஆசையின்றி யகற்றினீர்' இத்யர்வயம். (உ)

---

acharya.org

ப.—அநந்தரம், ரக்ஷணார்த்தமான ப்ரவ்ருத்திகளையுடைய ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிற சோலையையும் கழனியையுமுடைய தேசத்தைக் காட்டினிகோ ளென்கிறாள்.

கரை - திருப்பொருநற்கரையை, கொள் - விழுங்கும்படியான, பை - பரந்த, பொழில் - பொழிலையும், தண் - குளிர்ந்த, பணை - நீர்நிலத்தையுமுடைய, தொலைவில்லி மங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்திலே, கொண்டு - கொண்டு, புக்கு - புக்கு, உரை கொள் - லோகமெல்லாங் கொண்டாடும்படியான, இன் - இனிய, மொழியாளை - மொழியையுடையவளை, நீர் - (இவள்வார்த்தை வாசியறியும்) நீங்கள், உமக்கு - உங்களுக்கு, ஆசை - அதில்ஆசை, இன்றி - இன்றியே, அகற்றினீர் - தூரஸ்த்தையாம்படி பண்ணினிகோள்; (அதுவென்னென்னில், அர்த்திகள் கூக்குரல் கேட்கும்படி), திரை - ஸ்வஸ்பர்ஶத்தாலே கிளம்பினதிரையை, கொள் - உடைய, பௌவத்து - கடலிலே, சேர்ந்ததும் - (அவன்ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாகக்) கண்வளர்ந்தருளினபடியையும், திசை-திக்குக்களோடுகூடின, ஞாலம் - பூமியை,(அநாயாஸேந), தாவி-கவட்டித்து, அளந்ததும்-அளந்துகொண்டு அநந்யார்ஹமாக்கினபடியையும், நிரைகள் - பசுத்திரள்களை, மேய்த்ததுமே - மேய்த்தபவ்யதையையுமே, பிதற்றி - (ப்ரவசையாய்க்கொண்டு)பிதற்றி, (தன்னுடைய), நெடு-நெடிய, கண் - கண்கள், நீர் - நீர், மல்க - மகும்படி, நிற்கும் - ஸ்தப்யையாகாநிற்கும்.

இ.—மூன்றும்பாட்டில், திருநாளிலேதான் கொண்டு போகிறிகோள்: திருச்சோலை யுள்ளிட்டு இவளைக் கொண்டுபோய்க் கெடுத்திகோள்! என்கிறாள். [கரை கொள் இத்யாதி] - திருப்பொருநற்கரையை விழுங்கிப் பரந்து இருந்துள்ள சோலையையும் நீர்நிலங்களையும் உடைத்தான திருத்தொலைவில்லிமங்கலத்திலே இவளைக் கொண்டு புக்கு. போகிற நீங்கள் திருச்சோலையூடே கொண்டுபோக வேணுமோ? [உரைகொள் இன்மொழியாளை] - கேட்டாரடங்க "இது ஒரு பேச்சே!" என்று கொண்டாடும்படியான இனியமொழியை யுடையவள் என்னுதல்; அர்த்தத்தில் இழியவேண்டாதே, ஶப்தமே அமைந்திருக்கும் என்னுதல். "பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்று, நின்றார் நின்ற துறைகளிலே ஈடுபடும்படி இருக்கை. மாற்றும் உரையும் அற்றபேச்சு என்னுதல். உரை என்று - ஸ்ரீராமாயணமாய், அது குத்துண்ணும்படி இருக்கும் என்னுதல். [உமக்காசையின்றி யகற்றினீர்] - அவ்வூரிலே கொடுபுகுகையும், இவள்பக்கல் நசையறுகையென்றும் பர்யாயமன்றோ. இவளை வேண்டாமையிறே கொடுபுக்கது. [திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும்] - வ்யூஹவிஶேஷங்களையும் இங்கே அநுஸந்திக்கும்படியிறே இவள் அவகாஹித்தது. ஸ்வஸ்பர்ஶத்தாலே திரைக்கிளர்த்தியையுடைத்தாய்க் களித்து வருகிற திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளிற்றும். பரமபதத்தைவிட்டு, ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கைக்காக வந்துகிடக்கிற நீர்மையிலே ஶயிலையாகாநின்றாள்.

[திசைஞாலம் இத்யாதி] - "மஹாபலிபாலே பூமி அபஹ்ருதையாயிற்று" என்று கேட்டவாறே அப்படிக்கையில் பொருந்தாதே, திக்குக்களோடேகூடின பூமியை அநாயாஸேந எல்லை நடந்துகொண்டதும், அது பரதசையென்னும்படி மோபஸஜாதீயனாய்க் கையிலே கோலைக்கொடுத்து "பசு மேய்த்துவா" என்னலாம்படியான நீர்மையையும் அநுஸந்தித்து: இப்படிப்பட்ட ஆஸ்ரிதார்த்தப்ரவ்ருத்திகளை "ஜாஷ்ஹுவுஸ்ஜஷ்ஷ தஃ"

acharya.org

என்கிறபடியே அடைவுகெடச்சொல்லி. [நெடுங்கண்நீர்மல்க] - இக்கண்ணில் பரப்படைய நீர்மல்கும்படி. [நிற்குமே] - பிதற்றவும் க்ஷமையன்றிக்கே ஸ்தப்பையாய் இராநின்றாள்.

ஈடு.—மூன்றும்பாட்டு. திருநாளிலே தான் கொண்டுபோகவேண்டினால், திருச்சோலையுள்ளிட்டுக் கொடுபுகுவா ருண்டோ? என்கிறாள்.

[கரைகொள்பைம்பொழில்] - திருப்பொருநற்கரையைப் போழில் விழுங்கியிருக்கை. கரையைப் போழில்கொண்டாற்போலே, இவளைக் குணங்கொண்டபடி. அத்திருச்சோலையை யுங்களுடைய ஹிதவசநத்தாலே பேர்த்துக்கொடுபோமன்றன்றோ இவள் நிலையை யுங்களால் பேர்க்கலாவது! பரந்த பொழிலையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைய திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு. [உரைகொள்இன் மொழியாளை]- "வாசொ மெயெவசயாரு" (பாட்யேகேயேசமதுரம்)என்னும் ஸ்ரீராமாயணம் குத்துண்ணும்படியான பேச்சென்னுதல்; அர்த்தத்திலிழியவேண்டாதே, "உரையேயமையும்" என்னும்படியான பேச்சென்னுதல். †(பரவ்யூஹவிபவங்களையும்இங்கேயநுபவிக்கும்படியிறே இவள்அவகாஹித்தது) "இதோருரையே! - பேச்சே!" என்று நாட்டார் கொண்டாடும்படியானபேச்சென்னுதல். அப்பேச்சில் வாசியறிந்து அநுஸந்திக்கமாட்டாதே, நீங்களே யாசையின்றி அகற்றினிகோள். [உரைகொள்இன்மொழி]- மாற்றும்உரையும் அற்றபேச்சென்னுதல்; உரை- அடைவுசொல். [உமக்காசையின்றியகற்றினீர்] - அவ்வூரிலே கொடுபுகுகையும், இவள் பக்கல் நசையறுகையென்றும் பர்யாயம். ஆயிட்டு, "இவளைவேண்டா" என்றன்றோ கொடுபுக்கதென்கிறாள். [திரைகொளித்யாதி] - ஸ்வஸங்நிதாநத்தாலே கிளராநின்றவுள்ள திரைகளையுடைத்தான திருப்பாற்கடலிலே ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கும்படியாகக் கண்வளர்ந்தருளினதுவும், இவர்களார்த்திகேட்ட பின்பு இந்த்ராதிகளுக்குக் குடியிருப்புப் பண்ணிக் கொடுக்க அடியிட்டபடியும். [திசைஞாலம்தாவியளந்ததும்] - திக்குக்களோடே கூடின பூமியைஇரப்பாளனாயிரந்து அநாயாஸேந வளர்ந்துஅளந்தபடியும். [திசைஞாலம்தாவியளந்ததும்] - "இந்த்ராதிகளை ரக்ஷிக்கவேணும்" என்றஆசையோடேகாணும் பூமியைஅளந்தது.

மூன்றும்பாட்டு.—கரைகொள் இத்யாதி. "கரைகொள் பைம்பொழிற்றண் பணை" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - திருநாளிலே இத்யாதி.

"கரைகொள்" என்கிறவிடத்திலே, கொள்கை - க்ரஹிக்கையாய், க்ரஹிக்கையைச்சொல்லுகிறது. பதப்ரயோகத்துக்கு ஹார்த்தஸாவும் - கரையை இத்யாதி. பணை - நீர்நிலங்கள். குணங்கொண்டபடியென்றது - "நிரைகள் மேய்த்ததுமேயிதற்றி" என்றத்தைப்பற்ற. "பொழில்" என்றதிலே நோக்காக ஹார்த்தபாவாந்தரம் - அத்திருச்சோலையை இத்யாதி. "உரைகொள்" என்றதுக்கு அஞ்சார்த்தம். முந்தினதுக்கு, உரை - ஸ்ரீமத்ராமாயணம்; இத்தை யருளிச்செய்கிறார் - ஸ்ரீராமாயணம் குத்துண்ணும்படியான என்று. இரண்டாவது - அர்த்தநந்தில் இத்யாதி. அதாவது - உக்தியே நெஞ்சை யபஹரிக்கும்படியான என்றபடி. உரை - உக்தி. மூன்றாவது - இதோருரையே இத்யாதி. அதாவது - லௌகிகஸ்லாகோக்தியை யுடைய என்றபடி. உரை - லௌகிகருடைய ஸ்லாகோக்தி; கொள்கை - உடைத்தாகை. நாலாவது - மாற்றும் இத்யாதி. உரையென்று - மாற்று; கொள்கை - ஜயிக்கை. அஞ்சாமர்த்தம் - உரைஅடைவுசொல் என்று. அதாவது - இப்பாட்டில் "கரை, உரை, திரை, நிரை" என்றாற்போலே சொன்னவை. கொள்கை - உடைத்தாகை. நாங்களகற்றினோமோ? என்ன - அவ்வூரிலே இத்யாதி. ஆயிட்டு - ஆனபின்பு. மேலுக்கவதாரிகை - இவர்களார்த்தி இத்யாதி. ஸப்தார்த்தம் - திக்குக்களோடே இத்யாதி. "திசை" என்றதிலே ரஸோக்தி - இந்த்ராதிகளை

acharya.org

ஆசை - திக்கு. "இவன்திருவடிகளாலே நம்மை ஸ்பர்ஶிக்கவேணும்" என்றாசைப்பட்டுக் காணும் கிடக்கிறது பூமி. படுகை - உடைத்தாகை. பூமியினுடைய ஆசையாவது - திக்குப்பட்டிறேயிருப்பது. அவ்வளவன்றிக்கே, அறிவுகேட்டுக்குத் தலையான பசுக்களோடே சேர்ந்து வர்த்தித்தபடியுமேசொல்லி யடைவுகெடக்கூப்பிட்டு. [நெடுங்கண்நீர்மல்க] - இக்கண்ணில் பரப்படங்கலும் பரப்புமாற ஜலதத்த்வமுண்டாவதே! [நிற்குமே]-பிதற்றவும் க்ஷமையன்றிக்கே, கண்ணநீர்மல்குகை "ஸ்வஸ்த்ததசை" என்னும்படி ஸ்தப்தையாய் நில்லாநின்றாள். (ரு)

நான்காம் பாட்டு.

நிற்கும்நான்மறைவாணர்வாழ் தொலைவில்லிமங்கலங்கண்டபின்
அற்கமோன்றும்அறவுறாள் மலிந்தாள்கண்டீர்இவளன்னைமீர்!
கற்குங்கல்வியெல்லாம்கருங்கடல்வண்ணன்கண்ணபிரானென்றே
ஒற்கமோன்றுமிலள்உகந்துகந்து உள்மகிழ்ந்துகுழையுமே.

ஆ.—(நிற்கும்.) - அபௌருஷேய நிர்த்தோஷாபௌஷ வேதவேதார்த்த ப்ரவர்த்தகரான திவ்யஜநங்கள் வேதவேத்யமான பகவத்ஸ்வரூபரூப குணவிபூதிகளை ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு வாழுகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டபின், ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமான மர்யாதையைக்கடந்து ஒருவர்க்கும் வியேயையன்றியே, சொல்லும்சொல்லெல்லாம் கருங்கடல்வண்ணன் கண்ணபிரானென்றே எப்போதும் சொல்லி, ஒரு ஸ்ராந்தியுமின்றியே அவன் திருநாமங்களைச் சொல்லச்சொல்ல மேல்மேல் வந்த ப்ரீதிப்ரம்பரையாலே அத்யந்தம் அவஸந்நையாகாநின்றாள்; இப்படி அவன் திறத்தில் அபிநிவிஷ்டையான இவளை என்னால் நிவர்த்திப்பிக்கவொண்ணாதென்கிறாள்.

ஓ.—நாலாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலத்தையும், அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸமஷ்டியையும் யாதொருநாள் கண்டாள், அன்றுதொடங்கித் தடை நிற்கை தவிர்ந்தாள் என்கிறாள் [நிற்குமென்று தொடங்கி] - அபௌருஷேயமாய் நித்ய மான வேதங்கள் தாங்களிட்ட வழக்காகையாலே வ்யாஸபதஞ்செலுத்தவல்லராயுள்ள வர்கள் அந்த வேதார்த்தஸுஹுதனை எம்பெருமானைப்பெற்று வாழுகிற திருத்தொலை

இத்யாதி. ஆசையோடேயென்றது - ஶ்லேஷம். இன்னமும் ஒருவழியாலே ரஸோக்தி - இவள் இத்யாதி. திக்குப்பட்டிறே - அடைவுபட்டிறே இத்யர்த்த:. ஸ்வபாவார்த்தம் - திக்கையுடைத்தாகை. "கெடு" என்றதுக்கு பாவம் - இக்கண்ணில் இத்யாதி. திரைகொளென்றுதொடங்கி, அகற்றினீரித்யந்வய:. பௌவம் - கடல். "வாஒ்ரெயெஒயெஒயோ ரூ ஸாரெணெஷிஹிரஷிதி। ஜாகிஹிஸ்வஹிரூ ஸ்கம்தஷீ ஒயஸஷிதி" இதி பாலகாண்டே [ச-அ]. (ரு)

---

acharya.org

வில்லிமங்கலத்தைக் கண்டபின் ஒன்றும் தடைநில்லாள்; அன்னைமீர்! இவள் நம்மைக் கைகடந்தாள்கிடிகோள். [கற்குமென்று தொடங்கி] - சொல்லுஞ் சொல்லெல்லாம் திருநாமங்களேயாய்ச் செல்லாநின்றாள். வருத்தம் ஒன்றும் இன்றிக்கே அத்திருநாமங்கள்வழியே அவன் அழகையும் அவன் குணங்களையும் அநுஸந்தித்து மேன்மேலென ப்ரீதையாய் அந்தஃகரணமும் ப்ரீதமாய் அந்த ப்ரீத்யதிசயத்தாலே அழியாநிற்கும்.

ப.—அநந்தரம், ஈச்வரனே விக்ரஹவிசிஷ்டனான க்ருஷ்ணனுடைய வில க்ஷண புருஷாவாஸமான திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டபின்பு ஒருவர்க் கடங்காதபடி கைவிஞ்சினளென்கிறாள்.

நிற்கும் - நித்யமாய், நால் - நாலுவகைப்பட்ட, மறை - வேதங்களுக்கு, வாணர் - நிர்வாஹகரானவர்கள், வாழ் - (பகவதநுபவத்தாலே) வாழாநிற்கிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, கண்டபின் - கண்டபின்பு, அற-மிகவும், அற்கம் - அடக்கம், ஒன்றும் - ஒன்றும், உறாள் - உறுகிறிலள்; இவள் - இவள், மலிந்தாள் - கைகழியவிஞ்சினாள்; (இவள இப்படியாம்படி), அன்னைமீர்-பெற்றுவளர்த்த நீங்கள், கண்டீர் - கண்டிகோளிறே! கற்கும்-(இவள்) அப்பயலிக்கும், கல்வி-வார்த்தை, எல்லாம்-எல்லாம், கரு-ஸ்யாமளமான, கடல் - கடல்போலேயிருக்கிற, வண்ணன் - வடிவையுடையவனாய், கண்ணன் - ஆஸ்ரிதபவ்யனானக்ருஷ்ணனாகிற, பிரான் - மஹோபகாரகன், என்றே-என்று, (அவனுடைய ரூபவைலக்ஷண்யத்தையும் ஆத்மகுணத்தையும் சொல்லி), ஒன்றும் - ஒருப்ரகாரத்தாலும், ஒற்கம் - ஒடுக்கம், இலள் - இலளாய்க்கொண்டு, உகந்துகந்து - அந்தகுணாநுஸந்தாநத்தாலே மேன்மேலுமுகந்து, (அத்தாலே), உள் - நெஞ்சிலே, மகிழ்ந்து - ஆஹ்லாதம் மிக்கு, குழையும் - அதுஅடியாக சிதிலையாகநிற்கும். அற்கம்-அல்குதலாய், அடங்குதலென்றபடி. ஒற்கம் - ஒல்குதலாய், ஒடுங்குதல் என்றபடி.

இ.—நாலாம்பாட்டில், அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையும் கண்டபின், தடைநிற்கை தவிர்ந்தாள் என்கிறாள். [நிற்கு நான்மறை] - அபௌருஷேயமாய் நித்யமான வேதங்கள். [வாணர்] - வேதங்கள் தாங்களிட்ட வழக்காய்ச் செல்லுகையாலே வ்யாஸபதஞ் செலுத்தவல்லவர்கள். [வாழ்தொலைவில்லிமங்கலம்] - வேதாத்பர்யஹ்ரதனானவனைக்கண்டு நித்யாநுபவம்பண்ணுகிற ஊர். "ஸ்வாத்யாயோவேதாஸ்ரேஷ்ட" என்னுமளவன்றிக்கே, "யோமாஸ்வாத்யாயஸோவேதஸ" என்று ஆதரயோஹராயிருக்குமவர்கள். [கண்டபின்] - அவ்வூரில் ஸ்ரீவைஷ்ணவர்களும் அவனுமான சேர்த்தியைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [அற்கமொன்றும் அறவுறாள்] - அற்கம் - அல்குதல், அடங்குதல், தாயார்சொல் வழிவருமத்தை ஒன்றையும் அறவிட்டாள். [மலிந்தாள் கண்டீரிவள்] - இவளுடைய ஹ்ருதயப்ராவண்யம் எனக்குத் தெரியாதபடி விஞ்சினாள்கிடிகோள். [அன்னைமீர்!] - மீட்கத்தேடுகிற உங்களோடு, இவள் கருத்தறிந்தேனாய்ச் சொன்ன என்னோடு வாசியில்லை தெரியாமைக்கு. நித்யஸூரிகள் யாத்ரை ஸம்ஸாரிகளுக்குத் தெரியிலன்றோ நமக்கு இவள் அளவுதெரிவது? [கற்குங் கல்வி இத்யாதி] - சொல்லும் சொல்லெல்லாம் திருநாமமேயாய், அதுதன்னிலும், வடிவழகுக்கும் ஆஸ்ரிதபாரதந்த்ரியத்துக்கும் வாசகமான திருநாமங்களையே சொல்லாநின்றாள். "க்ருஷ்ணனுகில் ஆஸ்ரிதபரதந்த்ரன்" என்று ப்ரஸித்தமிறே. [பிரான்] - உபகாரஸீலன். [என்றே ஒற்கமொன்றுமிலள்] - திருநாமங்களை இடைவிடாதே

acharya.org

சொல்லாநின்றாள், இளைப்பு ஒன்றுமின்றிக்கே இராநின்றாள். ஒற்கம் - ஒல்குதல், அதாவது - ஒடுங்குதல், இளைப்பு. [உகந்து உகந்து] - திருநாமங்களின் வழியே அவன் அழகையும் குணங்களையும் நினைத்து மேன்மேலென ப்ரீதையாய். [உள்மகிழ்ந்து குழையுமே] - அந்தகரண ப்ரீத்யதிஶயத்தாலே ஆஶ்ரயம் அழியாநிற்கும்.

ஈடு.—நாலாம்பாட்டு. அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களையும் யாதொருநாள் கண்டாள், அன்றுதொடங்கித் தடைநிற்கை தவிர்ந்தாளென்கிறாள்.

[நிற்கும்நான்மறை] - நித்யமான நாலுவேதங்கள். நித்யத்வமாவது-பூர்வபூர்வோச்சாரண க்ரமத்தைப்பற்ற உத்தரோத்தரோச்சார்யமாணத்வம். ஆகையாலே நித்யமான வேதம். அபௌருஷேயமாகையாலே நிர்த்தோஷமாயிருக்குமிறே. [வாணர்] - வ்யாஸ பதஞ் சேலுத்தவல்லராயிருப்பர்கள். [வாழ்] - வேதார்த்தபூதனைக் கண்ணாலேகண்டு வாழாநிற்பர்கள். [வாழ்தொலைவில்லிமங்கலம்] - வேததாத்பர்யபூதனைக்கண்டு நித்யாநுபவம்பண்ணுகிறவூர். "ஸ்வாத்யாயாத்யோக மாஸீத" (ஸ்வாத்யாயாத் யோக மாஸீத) என்னுமளவன்றியே, "யோகாத்ஸ்வாத்யாயமாமநேத்" (யோகாத்ஸ்வாத்யாயமாமநேத்) என்று ஆருடயோகராயிருக்குமவர்கள். [கண்டபின்] - அவ்வூரில் வைஷ்ணவர்களும் அவனுமான சேர்த்தியைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [அற்கமொன்றும் அறவுருள்]- அற்கம் - அல்குதல். அதாவது - அடக்கம். நம் சொல்வழி வந்திருக்கும் இருப்

ப்ர.—[நிற்கும்இத்யாதி]— [நான்மறைவாணர்வாழ்தொலைவில்லிமங்கலம்]— ஸ்ரீவிஷ்ணுராணேஷ்டோ [சு] யெதெ ஶுயம்வ்ருகிவாராஶராஃ:.'ஸ்வாத்யாய ஸம்யோஹ்யாம் ஸத்ருஶுதெ வாரணேஷோதஃ । தசுபூர்வாகாரணம் ப்ரஹாநுதெதிகிவ்ருதொக॥ ஸ்வாத்யாயாத்யோமாஸீதயொமாசுஸ்வாத்யாயாசரேநெசு । ஸ்வாத்யாயயொமஸம்வதாவாரசாதாவுகாஶதெ ॥ உ ॥ தீக்ஷணாயஸ்வாத்யாயஶ்ரூரெயாமஹயாவாரு । நசாம்ஸவக்ஷுஷாஷ்டம்ப்ரஹாலுதஸ்ஶகுதெ॥"

நாலாம்பாட்டு.—நிற்கும் இத்யாதி. "நிற்கும்நான்மறை" என்றுதொடங்கி "அற்கமொன்றும் அறவுருள்" என்னுமளவுங் கடாக்ஷித்தவதாரிகை - அவ்வூரையும் இத்யாதி.

"நிற்கும்" என்கிறவர்த்தமாகத்துக்கர்த்தம் - நித்யமான இத்யாதி. ஶப்தம் த்ரிக்ஷணவஸ்தாயியாயிருக்க, நித்யமாகக்கூடுமோ? என்ன; - ஆநுபூர்வீநித்யத்வமே நித்யத்வமென்கிறார் - நித்யத்வம் இத்யாதி. த்ரிக்ஷணவஸ்தாயித்வமாவது - உத்பந்நமாகையும், அநந்தரக்ஷணத்திலே யிருக்கையும், அநந்தரம் நஷ்டமாகையும். ஆநுபூர்வீ நித்யத்வமாவது - உபாத்யாயன் முன்னே யுச்சரிக்க, பஶ்சாத் ஓதுகிறவர்கள் உச்சரிக்கிறவடைவு தப்பாமல்வருகை. நித்யத்வத்தால் ஸித்தம் - அபௌருஷேயம் இத்யாதி. 'நிர்த்தோஷமாயிருக்கும்'- பௌருஷேயத்வமடியாகவந்த ராகத்வேஷாதிகளின்றிக்கேயிருக்கும் இத்யர்த்தஃ. வாழ்ச்சியைக்காட்டுகிறார் - ஸ்வாத்யாயாஸ் இத்யாதி. "ஸ்வாத்யாயாத்யோமாஸீத யொமாசுஸ்வாத்யாயாசரேநெசு । ஸ்வாத்யாயயொமஸம்வதாவாரசாதாவுகாஶதெ" இதி ஷஷ்டீடேம்ஸோ ஷஷ்டீடேத்யாயே. அஸ்யார்த்தஃ - ஸ்வகீயஸாகாத்யயநாத், யோகம் - தத்ப்ரதிபாத்யபரமாத்மத்யாநம், ஆஸீத - குர்யாத்; யோகஃ-த்யாநம். "யொமஸுஹ்ருதாநொவாயயுாநஸ்ஹ்ருதியுகிஷு" இதி அமரஃ. யோகவைபவாதநுதஸாகாத்தரார்த்தஞ்ச, ஆமநேத் - ஸாக்ஷாத் க்ருத்யமகம்குர்யாதிதி. "கண்டபின் அற்கமொன்றும் அறவுருள்" என்றதுக்குஹார்த்தபாவம்- அவ்வூரில் இத்யாதி. "அற்கத்தை வகதேசமும் மிகவுமடையாள்" என்னுமதுக்குநியாமகம் - நம்சொல்வழி

acharya.org

புத்தவிர்ந்தாள். * (தாயார்சொல்வழிவருமத்தை யொன்றையுமறவிட்டாள்.) [மலிந்தாள்] - நம்மால் ஹிதஞ்சொல்லி மீட்கவொண்ணாதபடி மிக்காள். மீட்கைக்கு யோக்யதையுமில்லாதபடி யானாள். [மலிந்தாள்கண்டீர் இவள்] - இவளுடைய பகவத்ப்ராவண்யம் எனக்குத் தெரியாதபடி விஞ்சினாள்கிடிகோள். [அன்னைமீர்] - மீட்கத்தேடுகிறவுங்களோடு, இவள்கருத்தறிந்தேனாகச் சொல்லுகிற என்னோடு வாசியில்லை தெரியாமைக்கு. நித்யசூரிகள் யாத்ரை ஸம்ஸாரிகளுக்குத் தெரியிலன்றோ நமக்கு இவள்அளவு தெரிவது! [கற்குமித்யாதி]- சொல்லும் சொல்லெல்லாம் திருநாமமேயாய், அதுதன்னிலும் வடிவழகுக்கும் ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்துக்கும் வாசகமான திருநாமங்களையே சொல்லாநின்றாள். "க்ருஷ்ணனுகில் ஆஸ்ரிதபவ்யன்" என்று ப்ரஸித்தமிறே. [பிரான்] - அவ்வடிவழகைத்தாழநின்று என்னை அநுபவிப்பித்த வுபகாரகன். [என்றேயொற்கமொன்றுமிலள்]-திருநாமங்களை இடைவிடாதே சொல்லாநின்றாள் இளைப்பொன்றுமின்றிக்கே யிராநின்றாள். "விரஹதௌர்ப்பல்யத்தாலே திருநாமத்தை முட்டச்சொல்லமாட்டாள்" என்றிராநிற்கச்செய்தே, வருத்தமறச் சொல்லாநின்றாள். திருநாமந்தான் தரிப்பைக்கொடுத்துச் சொல்லுவிக்கும்போலேகாணும்; *பாடியிளைப்பிலமிறே. ஒற்கம் - மிடி: இளைப்பின்றிக்கே யென்னுதல்; அன்றிக்கே, ஒற்கமாகிறது - ஒடுக்கமாய், தாய்மார்முன்பே 'இப்படிசொல்லாநின்றாளே' என்னும் லஜ்ஜையின்றிக்கே யென்னுதல். [உகந்துகந்து] - திருநாமத்வாரா அவன் ஸௌந்தர்ய சீலாதிகளை யநுஸந்தித்து மேன்மேலென ப்ரீதையாகாநின்றாள். [உள்மகிழ்ந்துகுழையுமே] - அந்தகாரணப்ரீத்யதிசயத்தாலே ஆஶ்ரயம் அழியா நிற்கும். (ச)

ஐந்தாம் பாட்டு.

குழையும்வாள்முகத்தேழையைத் தோலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு
இழைகொள்சோதிச்செந்தாமரைக் கண்பிரான்இருந்தமைகாட்டினீர்
மழைபெய்தாலொக்குங்கண்ணநீரினோடு அன்றுதோட்டும்மையாந்து இவள்
நுழையுஞ்சிந்தையள் அன்னைமீர்தோழும் அத்திசையுற்றுநோக்கியே.

ஆ.—(குழையும்.) - நிரவயிகஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸாரஜந்மபூமியான திருமுகத்தையுடையளாய், பண்டு எம்பெருமான்திறத்தில் அதிசபலையாயிருந்த இவ

இத்யாதி. "அற்கமொன்றும் அறவுருள்" என்றதுக்கும் "மலிந்தாள்" என்றதுக்கும் வாசியேதென்ன - மீட்கைக்கு இத்யாதி. பாவார்த்தம் - இவளுடைய இத்யாதி. ஆனாலும் எங்களிற்காட்டில் அந்தரங்கையன்றோநீ? உனக்குத்தெரியாமை யுண்டோ? என்ன; - கீழிற்பதத்தையுங்கடாக்ஷித்து, "அன்னைமீர்" என்கிறதுக்குஹாவம் - மீட்கத்தேடுகிற இத்யாதி. தெரியாமையின்சாமாவதி - நித்யசூரிகள் இத்யாதி. கற்கை - சொல்லுகை. "கண்ணன்" என்றால் - ஆஸ்ரிதபாரதந்த்ர்ய வாசகமாமே? என்ன - க்ருஷ்ணனுகில் இத்யாதி. "என்றேயொற்கமொன்றுமிலள்" என்றதுக்குஹாவம் - திருநாமங்களை இத்யாதி. "என்றே" என்றவவதாரணார்த்தம் - இடைவிடாதே என்று. இளைக்கைக்கு ப்ரஸக்தியேதென்ன - விரஹ இத்யாதி. வருத்தமறச்சொல்லுகைக்கு ஹேதுவேதென்ன - திருநாமந்தான் இத்யாதி. எங்கே கண்டோமென்ன - பாடி இத்யாதி. "மிடி" என்றதின்விவரணம் - இளைப்பின்றிக்கேயென்னுதல் என்று. உசப்புவருகைக்குஹேதுவேதென்ன - திருநாமத்வாரா இத்யாதி. "உகந்துகந்து" என்றத்தை யநுவதிக்கிறது - "உள்மகிழ்ந்து" என்று. என்றேயொற்கமொன்றுமிலள் - சொல்லியேயொருப்ரகாரத்தாலும் ஒடுக்கம் இலளாய்க்கொண்டு. உகந்துகந்து - மேன்மேலுமுகந்து. (ச)

acharya.org

ளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு, தன்னுடைய திவ்யபூஷணங்களினுடைய நிரவயிகதேஜஸ்ஸின்வெள்ளமெல்லாம் தன்னுள்ளேயடங்கும்படி பெருகுகிற நிரவயிகமான ஜ்யோதிஸ்ஸின் வெள்ளத்திலே, பரிபூர்ணமா யலர்ந்ததொரு தாமரைத்தடாகத்தினுடைய குளிர்த்தியையும் அழகையு முடைத்தான திருக்கண்களையுடையனுயிருந்த எம்பெருமான் எழுந்தருளியிருந்த இருப்பைக் காட்டினீர்; அன்று தொடங்கி, மழைபெய்தாலொக்குங் கண்ணநீரோடுமயங்கி, அக்கண்களையே நினைத்து அந்தத் திக்கைநோக்கித் தொழாநிற்கும்; இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்குமோ? வென்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், இவளுடைய ஸ்வரூபத்தை அறிந்துவைத்து, இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு எம்பெருமானுடைய அழகைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள் என்கிறாள்.

[குழையுமென்று தொடங்கி] - தன்னுடைய மார்த்தவத்தாலே நையும் ஸ்வரூபவையாய் நிரதிசயதீப்தியுக்தமான திருமுகத்தை யுடையளாய் அதிசபலையுமாயிருக்கிற இவளை திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு வேறு ஓர் ஆஹாரணம் வேண்டாதே தானே ஆஹாரணமான தேஜஸ்ஸையுடையனுய்ச்சிவந்ததாமரைப்பூப்போலே இருக்கிற திருக்கண்களை யுடையனுய் கண்களைக்காணவே அறிந்து கொள்ளலாம்படியான தண்ணளியையும் உடையனுயிருக்கிறவனுடைய, ஒருவர்க்கும் கோசரமன்றிக்கேயிருக்கிற இருப்பில் அழகையும் நீங்களே காட்டிக்கொடுத்திகோள். [இழைகொள்சோதி] - ஆபரணத்தின்ஒளி தன்னுள்ளே அடங்கின சோதி என்றுமாம். [இருந்தமை] - அவன் படிகளை எல்லாம் என்றுமாம். [மழைபெய்தாலென்று மேலுக்கு] - அன்னைமீர்! வர்ஷயாரைபோலே மிக்கிருந்துள்ள கண்ணநீரோடே அன்றுதொடங்கி மயங்கி அவ்விருப்பிலும் ஸுகுவத்குணங்களிலே உட்புகாநின்ற சிந்தையைஉடையளாய்த்திருத்தொலைவில்லிமங்கலத்தின் திக்கை ஏகாக்ரசித்தையாய்க்கொண்டு நோக்கி அஹிநிவேஶத்தாலே தொழாநிற்கும்.

ப.—அகந்தரம், திருத்தொலைவில்லிமங்கலத்திலேயிருக்கிற அரவிந்தலோசநனுடைய ஒப்பனையழகைக்காட்டினீர்; அன்றுதொடக்கமாக இவள் விக்ருதையாகாநின்றாளென்கிறாள்.

குழையும் - ஸ்வாஸாவிகமான மார்த்தவத்தையுடையளாய், வாள்-ஒளிவிடுகிற, முகத்து - முகத்தையுடையளாய், ஏழையை - (அநுபூதவிஷயத்திலே ஆழங்காற்படும் சாபலத்தையுடைய) இவளை, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்திலே, கொண்டுபுக்கு-, இழைகொள் - திவ்யாபரணங்கீகாரத்தாலுள்ள, சோதி - ஔஜ்ஜ்வல்யத்தையுடையனுய், செம்-சிவந்த, தாமரை - தாமரைபோலும், கண்-கண்ணையு முடையனுய், பிரான் - அவ்வழகை ஆஸ்ரிதர்க்கநுபவிப்பிக்கிறவுபகாரகன், இருந்தமை - இருந்தபடியை, காட்டினீர்—; அன்னைமீர்-! அன்றுதொட்டு - அன்றுதொடங்கி, இவள்-, மழைபெய்தாலொக்கும்-மழைபெய்தற்போலேயிருக்கிற, கண்ணநீரினொடு - கண்ணநீரோடே, மையாந்து - மயங்கி, நுழையும் - அவனழகிலேயுட்புக்க, சிந்தையள் - நெஞ்சையுடையளாய், அ-அவனிருந்த, திசை-திக்கை, உற்று-சென்று, நோக்கி-, தொழும் - அஞ்சலி பண்ணாநிற்கும். மையாத்தல் - மயங்குதல்.

acharya.org

இ.—அஞ்சாம்பாட்டில், இவள் ஸ்வபாவத்தை அறிந்துவைத்து, தேவபிரானுடைய அழகைக்காட்டிக் கெடுத்திகோள் என்கிறாள். [குழையும் வாண்முகத் தேழையை] - ஒரு ஸம்ஶ்லேஷவிஶ்லேஷம் வேண்டாதே, ஸ்வபாவஸிஶமான மார்தவத்தாலே நையும் ஸ்வபாவையாய், "உகந்துகந்துண்மகிழ்ந்து குழையும்" என்கிற பகவதநுபவத்தாலே ஒளியையுடைத்தான முகத்தை யுடையளாய், "கிடையாது" என்றாலும் மீளமாட்டாத சாபலத்தையுடையவளை; பெருக்காற்றிலே கொடுபுகுவாரைப்போலே திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு, அது தனக்குமேலே ஆழங்காலிலே கொடுபுகுவாரைப்போலே அங்கிருந்தஇருப்பைக் காட்டினீர். [இழைகொள்சோதி] - ஆபரணங்களினுடைய ஒளியை யுடைத்தாயிருக்கை என்னுதல்; வேறு ஆபரணம் வேண்டாதே தானே ஆபரணமான தேஜஸ்ஸென்னுதல்; ஆபரணவொளி தன்னுள்ளே அடங்கும்படி இருக்கும் சோதி என்னுதல். [செந்தாமரைக்கண்] - விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றம் இவற்றாலே தாமரையை ஒப்பாகச்சொல்லலாயிருக்கும் திருக்கண். அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமான கண்கள். [பிரான்] - "ஹகூ நாடி" என்கிற வடிவு. [இருந்தமை காட்டினீர்] - கிடையைக்காட்டுதல்; நின்றமையைக் காட்டுதல் அன்றிக்கே, இருந்தபடியைக் காட்டினிகோள். கிடந்தானகில், "கிடந்ததோர் கிடக்கை" என்பர்கள்; நின்றானகில், "நிலையாரநின்றான்" என்பர்கள்; இருந்தானகில், "பிரானிருந்தமைகாட்டினீர்" என்பர்கள்; இருந்தபடியே உத்தேஶ்யமா மித்தனை. [காட்டினீர்] - தானே கண்டு மீளவொட்டாதே, "நோக்கிருந்தபடி கண்டாயே! முறுவலிருந்தபடி கண்டாயே" என்று காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [மழை இத்யாதி] - வர்ஷபாரைபோலே மிக்க கண்ணநீரையுடையளாயிராநின்றாள். காட்டின உங்களைப்போலே குறியழியாதே இருக்கிறாளோ? "ஏழை" என்றவிடத்தை மூதலிக்கிறாள்:—[அன்று தொட்டும்]-நீங்கள்காட்டின அன்று தொடங்கி. [மையாந்து]-மயங்கி. "குழையும்" என்றவிடத்தை மூதலிக்கிறாள்:—[இவள் நுழையும் சிந்தையள்]-அவன் குணங்களிலே உட்புகாநின்ற நெஞ்சையுடையவள். ஸ்வரூபத்தையும் ஆத்ம குணத்தையும்ஒழிய, வடிவழகிலே இடங்கொள்ளாநின்றாள். [அன்னைமீர்!] - இவளை மீட்கப்பார்க்கிறவளவிறே உங்களது. [அத்திசையுற்று நோக்கி - தொழும்] - அவ்வூரின் திக்கை ஏகாக்ரசித்தையாய் நோக்கித் தொழாநின்றாள்.

ஏ.டு.—அஞ்சாம்பாட்டு. இவள் ஸ்வஹாவத்தை யறிந்துவைத்து, தேவபிரானுடையஅழகைக் காட்டிக் கெடுத்திகோ ளென்கிறாள். அன்றியே, அவ்வூரில் வர்த்திப்பார் படியைக் காட்டினால், அவர்கள் ஜீவநத்தையும் இவளுக்குக் காட்டிக்கொடுக்கவேணுமோ? என்கிறா ளென்றுமாம்.

அஞ்சாம்பாட்டு.—குழையும் இத்யாதி. "குழையும் வாண்முகத்தேழையை" என்கிறதிலே நோக்காக அவதாரிகை - இவள்ஸ்வபாவத்தை இத்யாதி. மேலிற்பாட்டில் அர்த்தத்தை யநுவதித்துக் கொண்டு, "இழைகொள்சோதிச் செந்தாமரைக்கண்பிரான்" என்றதிலே நோக்காக அவதாரிகாந்தரம்- அன்றியே இத்யாதி.

acharya.org

[குழையுமித்யாதி] - ஒரு ஸம்ஶ்லேஷம் வேண்டாதே ஸ்வஹாவஸித்தமான மார்த்தவத்தாலே நையும்ஸ்வஹாவையாய், "உகந்துகந்து உள்மகிழ்ந்துகுழையும்" என்கிற ஹகவதநுஹவத்தாலே ஒளியையுடைத்தான முகத்தை யுடையவளாய், "கிடையாது" என்றுலும் மீளமாட்டாத சாபலத்தை யுடையவளை. [தோலைவில்லிமங்கலங்கொண்டு புக்கு]- ஹகவத்பரிக்ரஹமான தேசத்திலே கொடுபுகத் தவிராதபின்பு, ஸ்ரீவைகுண்டத்திலே மேன்மையைக்காட்டவன்றோ அடுப்பது! நீர்மைக்குஎல்லைநிலமானவிடத்தே கொடுபுகுவாருண்டோ? வாள் - ஒளி. [இழைகொள்சோதி] - ஆபரணங்களினுடைய ஒளியை யுடைத்தா யிருக்குமென்னுதல், வேறோராபரணம் வேண்டாதே தானே யாபரணமான தேஜஸ்ஸு என்னுதல்; ஆபரணவொளி தன்னுள்ளேயடங்கும்படியான ஸ்வாலாவிகமான புகரென்னுதல். [செந்தாமரைக்கண்பிரான்] - விகாஸாதிகளுக்குத் தாமரையை ஒப்பாகச் சொல்லலாயிருக்கிற திருக்கண்கள். அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமானதிருக்கண்கள். [பிரான்] - "ஹகாரமாழி" (பத்தாநாம்) என்கிற வடிவு. [இருந்தமைகாட்டினீர்] - நீங்கள் கெடுத்திகோள். இவளறியாத † விஷயங்களும் நீங்களே காட்டிக் கொடுத்துக் கெடுத்திகோள். [இருந்தமை] - இருப்பில் வீறு அங்கே பர்யவஸிதம்போலே. நின்றுனுகில், "நிலையாரநின்றான்" என்பர்கள்; இருந்தானுகில் "இருந்தமைகாட்டினீர்" என்பர்கள்; கிடந்தானுகில் "கிடந்ததோர்கிடக்கை" என்பர்கள்; அவன்ஸ்வபாவத்தைக் காட்டினி கோள்என்றுமாம். [காட்டினீர்] - நோக்கிருந்தபடி காண்டாயே, முறுவலிருந்தபடி கண்டாயே யென்று. இப்போது அதுக்கு வந்ததென்? என்னில்: [மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினோடு]-கண்டவநந்தரம் வர்ஷபாரைபோலே கண்ணநீர் வெள்ளமிடுகிறபடி பாரிகோள்! ஆளவந்தார் மணக்கால்நம்பி பக்கலிலே எம்பெருமானைக் கேட்டவநந்தரம்,

---

விஶ்லேஷதசையில் முகத்திலே யொளியுண்டாகைக்கு ஹேது சொல்லுகிறது - உகந்துகந்து இத்யாதி. "தொலைவில்லிமங்கலங் கொண்டுபுக்கு" என்றதுக்குஹார்த்தஹாவம் - பகவத்பரிகாரம் இத்யாதி. இழைகொள் சோதியான விக்ரஹத்தை யுடையனும், செந்தாமரைபோலேயிருக்கிற திருக்கண்களையுடையதாயிருந்த விக்ரஹத்தை யநுபவிப்பித்த வுபகாரகன் என்று ஸம்தார்த்தம். "இழைகொள்சோதி" என்றதுக்கு மூன்றர்த்தம்: முந்தினது - இழைகளினுடைய சோதியைக் கொண்டிருக்கிற விக்ரஹத்தையுடைய என்று; இப்போது, "இழை - சோதி - கொள்" என்றன்வயம்; கொள்கை - உடைத்தாகை; "இழைகொள்சோதி" என்கையாலே - விக்ரஹம் அர்த்தவிசேஷம். இரண்டாவது - இழையாகையைக்கொண்டிருக்கிற தேஜஸ்ஸை யுடைய விக்ரஹம் என்று. மூன்றுவது - இழையென்று ஆபரணகாந்தியாய், கொள்கை - க்ரஸிக்கையாய், ஆபரணகாந்தியை க்ரஸிக்கிற தேஜஸ்ஸையுடைய விக்ரஹம் என்று; இப்பக்ஷத்தில், இழையென்று - ஆபரணகாந்தியை லக்ஷிக்கிறது. "செம்" என்றதுக்குபாவம் - அகவாயில் இத்யாதி. அவ்வடிவை ஆஶ்ரிதர்க்காக்கிக்கொண்டிருக்கை உபகாரமாவதென்று விவக்ஷித்து - பத்தாநாம் இத்யாதி. "நீங்கள்கெடுத்திகோள்" என்கைக்கு, நாங்களென்செய்தோம்? என்ன - இவளறியாத இத்யாதி. விஷயங்களென்றது - விசேஷங்களென்றதாய், விக்ரஹஸௌந்தர்யம், கண்ணழகுமுதலான ப்ரகாரங்களைச்சொல்லுகிறது. "இருந்தமை" என்றது - இருந்தப்ரகாரம்; இருப்பிலழகையென்றபடி. "இருந்தமை" என்றத்தால் பலிதம் - இருப்பில்வீறு இத்யாதி. "இருந்தமைகாட்டினீர்" என்கிறதென்? மற்றை யவஸ்த்தைகளும் ஹோக்யமாயிராதோ? என்ன - நின்றுனுகில் இத்யாதி. "இருந்தமை" என்றதுக்கர்த்தாந்தரம் - அவன் ஸ்வபாவத்தை இத்யாதி. "இருந்தமை" என்று - இருப்பழகாதல், ஸ்வபாவமாதல். கண்டவநந்தரம் கண்ணநீர் வெள்ளமிடுகிறதுக்கு ஹேதுஸ்வம் - ஆளவந்தார் இத்யாதி. விரகில்லையோவென்றுராம் என்றவநந்தரம், மணக்கால்நம்பி "விரகுண்டு" என்று கோயிலிலே கூட்டிக்கொண்டெழுந்தருளிப் பெரியபெரு

---

† 'விசேஷங்கள்' என்று அடையவளைந்தானரும்பதத்திற்பாடம்.

acharya.org

"உபாயம் இதுக்குமேலில்லை: இவ்விஷயத்தை இப்போதே ஸாக்ஷாத்கரிக்க விரகில்லையோ?" என்றாராம். அப்படி கண்டவநந்தரம் கண்ணநீர் வெள்ளமிடப்புக்கது அத்தனை. "ஏழை" என்ற இடத்தை மூதலிக்கிறாள்:—[அன்றுதோட்டும்] - நீங்கள் காட்டின அன்று தோடங்கி. [மையாந்து]-மயங்கி. "குழையும்" என்கிறவிடத்தை மூதலிக்கிறாள்:—[இவள் நுழையும்சிந்தையள்] - அவன் குணங்களிலே உட்புகாநின்ற நெஞ்சையுடையவள். ஸ்வரூபத்தையும் ஆத்மகுணத்தையும் ஒழிய வடிவழகிலே இடங் கொள்ளா நின்றாள். அங்கே சுழித்து நின்று, "இதோருவடிவழகே! இதோரோப்பனையே! இதோரு கண்ணழகே!" என்று இடங்கொள்ளா நின்றாள். [அன்னைமீர்] - இவளை மீட்கப் பார்க்கிறவளவிறே யுங்களது. [தொழும்] - "ஸகுஸ்ஹ்ருதயாநுநம் ராமமேவாநுபஶ்யதி" (ஏகஸ்த்தஹ்ருதயாநுநம்ராமமேவாநுபஶ்யதி) என்கிறபடியே, அத்திக்கை மறுபாடுருவப்பார்த்துத் தொழாநிற்கும். இவள்தொழிலும் ஒரு திக்குப் பட்டல்லதிராது காணும். (ரு)

ஆறும் பாட்டு.

நோக்கும்பக்கமெல்லாம்கரும்போடுசெந்நெலோங்குசெந்தாமரை
வாய்க்கும்தண்பொருநல்வடகரை வண்தொலைவில்லிமங்கலம்
நோக்குமேல் அத்திசையல்லால் மறநோக்கிலள்வைகல்நாடொறும்
வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணன்நாமமேஇவளன்னைமீர்!

ஆ.—(நோக்கும்) - அம்ருதரஸௌவநிர்ஹ்ரேஷுகாண்ட, கநகஸத்ருஶபரிணதசாலி, ஸமுச்சரித ஸமுத்புல்ல மகரந்தபூர பரிபூர்ணாரவிந்த பரிவ்ருதமான பொருநல் வடகரை வண்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க அன்றுதொடங்கி, கண்களால்அத்திக்கல்லது காணாள்;வாயால் மணிவண்ணன் நாமமல்லது சொல்லாள்;இனி இவளை நிவர்த்திப்பிக்க முடியுமோ? என்கிறாள்.

மாள் திருவடிகளைக்காட்டிக்கொடுக்க, கண்டவநந்தரம் கண்ணும் கண்ணநீருமாயிருந்தார் என்று ப்ரஸித்தமிறே என்று இவ்வளவும் அத்யாஹரிப்பது. எம்பெருமானைக்கேட்டவென்றது - சரமஸ்லோகத்தையென்றபடி. "இருந்தமை" என்றதின் ஸ்வபாவபரமானஅர்த்தத்தைக் கடாகஷித்து பாவம் - அவன்குணங்களிலே இத்யாதி. இருந்தமை - அழகென்றவர்த்தத்தைக்கடாகஷித்து பாவம் - ஸ்வரூபத்தையும் இத்யாதி. இடங்கொள்ளும் ப்ரகாரத்தைக்காட்டுகிறார் - அங்கேகழித்து இத்யாதி. "இருந்தமை" என்கையாலே - வடிவழகு. "இழைகொள்சோதி" என்கையாலே - ஒப்பனை. "செந்தாமரைக் கண்" என்கையாலே - கண்ணழகு. இவளுடைய பாவபந்தத்தையறியாதே 'இவளைமீட்கப்பார்க்கிறவளவிறேயுங்களது' என்றபடி. "அத்திசையுற்றுநோக்கி - தொழும்" என்றந்வயித்தர்த்தம் - வாகுஸ்ஹ இத்யாதி. "நெஷாவஶ்யதி ராகுஷ்வெ்ரநெரோநுவாஷ்வஹஶ்ரோநுவாகுஸ்ஹ்ருதயாநுநம் ராமமேவாநுவஶ்யதி" இதி ஸுந்தரகாண்டே [கசு உரு]. ரஸோக்தி-இவள் இத்யாதி. திக்குப்பட்டல்லது-அடைவுபட்டல்லதென்றும், திக்கையுடைத்தல்லதென்றும் அர்த்தத்வயம். 'அன்னைமீர்! குழையும்' என்றதொடங்கி, 'காட்டினீர்; அன்றுதொட்டும் - இவள் - மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினொடு, மையாந்து - நுழையும் சிந்தையளாய் - அத்திசையுற்றுநோக்கி-தொழும்' இத்யந்வய:. (ரு)

acharya.org

ஓ.—ஆறும்பாட்டில், இக்கலக்கத்திலும் திருத்தொலைவில்லிமங்கலத்தை நோக்கினாளாகில் மற்று ஓர்இடமும் நோக்காள் என்கிறாள். [நோக்கும் பக்கமெல்லாம்] - பார்த்தபார்த்த இடமெல்லாம். [வாய்க்கும்] - ஸம்ருத்தமாகை. [நோக்குமேல்] - நோக்க க்ஷமையாகில். [வைகல் நாடோறும் என்றுமேலுக்கு] - என்றும்ஒக்க நிரந்தரமாக இவள் பரவத்ஸௌந்தர்யாதிகளாலே விஷயீகையாலே வாயில்புறப்படும், சொல்லும் திருநாமமே. [வைகல் நாடொறும்] - தாழ்த்து விடிகிறநாள்தோறும் என்றுமாம். அன்னைமீர் ! என்ற ஸம்லோபநத்துக்குக்கருத்து - ஒருத்திபடிகண்டிகோளே ! என்கிறது.

ப.—அநந்தரம், ஸம்ருத்தமான திருத்தொல்லைவில்லிமங்கலத்தைக் கண்டால் வேறொன்றும் காணமாட்டாதே, எப்போதும் இவள் வாய்விடும் சொல்லெல்லாம் ஸுக்ரஹ ஸௌஸீல்யனானவனுடைய திருநாமங்களேயாய் இராநின்றதென்கிறாள்.

நோக்கும்பக்கமெல்லாம் - பார்த்தபார்த்தவிடமெல்லாம், கரும்பொடு - கரும்போடுகூடின, செந்நெல் - செந்நெலும், ஓங்கு - (அவற்றுக்கு நிழல்செய்யும்படி) ஓங்கின, செந்தாமரை - செந்தாமரையும், வாய்க்கும் - ஸம்ருத்தமாம்படியான, தண் - குளிர்ந்த, பொருநல்வடகரை - திருப்பொருநல்வடகரையிலே, வண் - நகர சம்பத்துக்களால் குறைவற்றிருக்கிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, (தன்னரதியாலேயொன்றும் பார்க்கமாட்டாதவள்), நோக்குமேல் - பார்த்தாளாகில், அ - அந்த, திசை - திக்கு, அல்லால் - ஒழிய, மறுநோக்கிலள் - வேறொன்றும் பார்க்கிறிலள்; (இவள் த்ருஷ்டிவ்யாபாரமேயன்றியே), வைகல் - எல்லாக்காலத்திலும், நாடொறும் - ஒருநாளொழியாமல், இவள்-, வாய் - வாக்கிலே, கொள் - கொள்ளும், வாசகமும் - வாசகசப்தங்களும், அன்னைமீர் - (இவளையிப்படியாக்கின) அன்னைமீர்! மணி - தனக்குமுடிந்தாளலாம்படி ஸுக்ரஹமான நீலரத்நம்போலும், வண்ணன் - வடிவழகை யுடையவனுடைய, நாமமே - ஸௌலப்யஸௌந்தர்யாதி ப்ரகாசகங்களான நாமங்களேயாயிராநின்றன.

இ.—ஆறும்பாட்டில், கலக்கத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்று ஓர்இடமும் நோக்காள் என்கிறாள். [நோக்கும் பக்கமெல்லாம்] - பார்த்த பார்த்த இடமெல்லாம். "பொருநல் - நோக்கும் பக்கமெல்லாம்" என்று பாடுவாருமுண்டு. கரும்புக்கும், அத்தோடேகூட எழுந்த செந்நெலுக்கும், செந்தாமரையானது நிழல் செய்யாநின்றது; "உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடிபோல் உயர்ந்து காட்ட" என்கிறபடியே. [வாய்க்கும்] - ஸம்ருத்தமாம் என்னுதல், இட்டதெல்லாம் ஸுதஸுவமாகப்பணைக்கும் என்னுதல். ஸ்ரமஹரமான திருப்பொருநலின் வடகரையிலே, நகரங்களுக்குண்டான சிறப்புக்களில்ஒன்றுமகுறையாத அந்தவூரை. [நோக்குமேல்] - முதலிலே பார்க்கமாட்டாள் ; பார்த்தாளாகில், அத்திக்கையல்லால் வேறு ஒரு திக்கை நோக்குகிறிலள். [வைகல் நாடொறும்] - கழிகிறநாள்தோறும் என்னுதல், தாழ்த்துவிடிகிற நாள்தோறும் என்னுதல். [வாய்க்கொள் வாசகமும்] - சொல்லும் வார்த்தையும். [மணிவண்ணன் நாமமே] - குணவிஷயமாதல், விபூதிவிஷயமாதல் அன்றிக்கே, அழகுக்கு வாசகமான திருநாமங்களே இவள் சொல்லுகிறது. [அன்னைமீர்] - இவ்விஷயத்திலே இவள் அவஹாஹித்தபடி கண்டிகோளே.

acharya.org

ஈடு.—ஆறும்பாட்டு. தெளர்ப்பல்யத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்றோரிடமும் பாரா ளென்கிறாள்.

[நோக்கும்பக்கமெல்லாம்] - பார்த்தபார்த்தவிடமெல்லாம். "திருப்போருநல் நோக்கும்பக்கமெல்லாம்" என்று பாடுவாருமுண்டு. [கரும்புஇத்யாதி] - கரும்பும், அத்தோடேகூட இசலிவளருகிற செந்நெலும், இரண்டுக்கும் நிழல்செய்கிற செந்தாமரையும். [வாய்க்கும்] - ஸம்ருத்தமாமென்னுதல், இட்டதெல்லாம் சதசாகமாகப்பணைக்குமென்னுதல். † (அதாவது - பஹுவாகவுண்டென்னுதல், ஒன்றுநூறுமென்னுதல்.) [தண்போருநல்இத்யாதி] - ஶ்ரமஹரமான திருப்போருநல் வடகரையிலேயான ஐஶ்வர்யத்தையுடைய தோலைவில்லிமங்கலம். [நோக்குமேல்] - முதலிலேநோக்க சக்தையல்லள்; வருந்திப் பார்த்தாளாகில் அத்திக்கையோழிய முகமெடுத்துப் பார்க்கிறிலள். [வைகல்நாடோறும்] - கழிகிறநாள்தோறும். [வாய்க்கோள்வாசகமும்] - வாயாலே சொல்லுகிறசொலவும். [மணிவண்ணன்நாமமே] - வடிவழகுக்கு வாசகமானவற்றையே சொல்லாநின்றாள். குணவிஷயமாதல் விபூதிவிஷயமாதலன்றிக்கே, வடிவழகுக்குத் தோற்றமை தோற்றச் சொல்லாநின்றாள். இவள்நிலையேது? நம்நிலையேது? உங்களது ஸ்வரூபஜ்ஞாநம், இவளது ரூபஜ்ஞாநம்.

ஏழாம் பாட்டு.

அன்னைமீர்! அணிமாமயில்சிறுமானிவள் நம்மைக்கைவலிந்து
என்னவார்த்தையுங்கேட்குறாள் தோலைவில்லிமங்கலமென்றல்லால்
முன்னம்நோற்றவிதிகோலோ? முகில்வண்ணன்மாயங்கொலோ? அவன்
சின்னமுந்திருநாமமும் இவள்வாயனகள்திருந்தவே.

ஆ.—(அன்னைமீர்.) - நிரதிஶயஸௌந்தர்யமயசிவிநீப்ரக்ரியையாலே, ஸுலஹரிண முக்ய விலோசனையாயிருக்ற இச்சிறுப் பெண்பிள்ளை, நம்முடைய விதி நிஷேதாதிலங்வி நியாய்க்கொண்டு தொலைவில்லிமங்கலமென்னும் சொல்லல்லது மற்றொரு சொல்லும் கேளாள்; வேதங்களும் வேதவிதக்ரேஸரரான ஸநகாதிகளும் ஏத்தினாற்போலே

ஆறும்பாட்டு—நோக்கும் இத்யாதி. "நோக்குமேலத்திசையல்லால் மறுநோக்கிலள்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - தெளர்ப்பல்யத்தாலே இத்யாதி. 'பார்க்கமாட்டாள்' என்னுமளவும் - "நோக்குமேல்" என்கிற யதிஶப்தார்த்தம்.

ஊரை 'பார்த்தபார்த்தவிடமெல்லாம்' என்றபடி. அர்த்தார்த்தம் - திருப்போருநல் இத்யாதி. இப்போது நோக்குகை - ப்ரவஹிக்கை. பொருநல் - தாம்ரபாணி. பாடுவாருமுண்டென்றது - திருப்பொருநலுக்கு விசேஷணமாக்கிச் சொல்லுவாருமுண்டென்றபடி. ஸம்ருத்தமாமென்னுதலென்றது - கரும்புமுதலானவை ஸம்ருத்தமாமென்றபடி. 'இட்டதெல்லாம்' இத்யாதிக்கு ஶப்தநிரபேக்ஷம் - ஒன்றுபத்தாக வாய்க்குமென்று. "வண்மை" - ஐஶ்வர்யம். "நாமமே" என்கிற வகாரார்த்தம் - குணவிஷயமாதல் இத்யாதி. "இவள், அன்னைமீர்" என்றதுக்குபாவம் - இவள்நிலையேது இத்யாதி. விவரணம் - உங்களது இத்யாதி. 'அன்னைமீர்! இவள் நோக்குமேல், நோக்கும்பக்கம்' என்று தொடங்கி, 'தொலைவில்லிமங்கலத்தையுடைய அத்திசையல்லால் மறுநோக்கிலள்; வைகல்நாடொறும் இத்யாரப்ய, மணிவண்ணன் நாமமே' இத்யந்வயம்.

acharya.org

விஸ்தமாய் அத்யுஜ்ஜ்வலமாம்படி அவனுடைய திவ்யசிஹ்நங்களையும் ஸௌந்தர்யாதி ஸகல குணங்களையும் அதிமதுரமான சொற்களாலே சொல்லாநிற்கும். இப்படி இவளுக்குத் தேவபிரான் திருவடிகளில் உண்டான அபிநிவேஸம், ஜந்மாந்தரக்ருத பரம புருஷாநுபவஹேது மஹாபாக்யத்தாலே வந்ததோ! அன்றியே அவனுடைய நிரவயிக ஸௌந்தர்யத்தைக் காண்கையாலே வந்ததோ! என்று விஸ்மிதையாய், இப்படி அபிநிவிஷ்டையான இவள் எனக்குங்கூட வியேயையல்ல ளென்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், எம்பெருமானுடைய சிஹ்நங்களும் திருநாமங்களுமடைய இவள்வாயிலே பட்டபின்பு நிறம்பெற்றன என்கிறாள். [அன்னைமீர் என்று தொடங்கி] - அன்னைமீர் அழகிய மாமையுடைய மயில்போலே இருக்கிற இச்சிறுப் பெண்பிள்ளை நம்மை கைகடந்து அந்தரங்கையாகக்கொண்டிருக்கிற நான் சொல்லிலும் திருத்தொலைவில்லிமங்கலம் என்கையொழிய மற்றொன்றும் கேளாள். 'எனவார்த்தை' என்றது - ஏதேனும் ஒருவார்த்தையாகிலும் கேளாள் என்றுமாம். [முன்னம் நோற்ற விதிகொலோ? முகில்வண்ணன் மாயங்கொலோ?] - பண்டுபண்ணின பாக்யபலமோ! எம்பெருமான் தன் வடிவழகைக்காட்டிப் பண்ணின ஆஸ்சர்யமான செயலோ! [அவன் சின்னமுமென்று தொடங்கி] - அவனுடைய திருவாழி தொடக்கமான சிஹ்நங்களும் குணசேஷ்டிதங்களுக்கு ப்ரதிபாதகமான திருநாமங்களும் நிறம்பெறும்படி இவள் வாயனாயின.

ப.—அநந்தரம், மஹோதாரனான ஸர்வேஸ்வரன் இவளுக்குப்பண்ணின அதிஸயமிருந்தபடி, வேறொரு வார்த்தையுங்கேளாதே அவனுடைய திவ்யசிஹ்நங்களும் திருநாமங்களும் தாம் திருந்தும்படி இவள்வாக்விஷயமாயிற்றென்கிறாள்.

அன்னைமீர் - பெற்றவளர்த்த தாய்மாரே,! அணி - அழகிய, மா - நிறத்தையுடைத்தான, மயில் - மயில்போலே அபிநயபயாய், சிறு - முக்யமான, மான் - மான் போலேயிருக்கிற, இவள் - இச்சிறுப்பெண்பிள்ளை, நம்மை-, கைவலிந்து - கைவிஞ்சி, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலம், என்று-, அல்லால் - ஒழிய, என - ஏதேனுமொரு, வார்த்தையும் - வார்த்தையும், கேட்க-, உரூள் - உறுகிறிலள்; (இது தான்), முன்னம் - முன்பு, நோற்ற - பண்ணின, விதிகொலோ - பாக்யமோ? முகில் - உதாரஸ்வபாவமான முகில்போலே யிருக்கிற, வண்ணன் - வடிவையுடையவன்பண்ணின, மாயங்கொலோ - ஆஸ்சர்யமோ? அவன் - அவனுடைய, சின்னமும் - (அஸாயாரணமான) சிஹ்நங்களும், திருநாமமும் - (ஔதார்யாதிவாசகமான) திருநாமங்களும், திருந்த - திருத்தம்பெறும்படி, இவள்வாயனகள் - இவள்வாயன வாகாநின்றன.

இ.—ஏழாம்பாட்டில், அவன் சின்னங்களும் திருநாமங்களும் இவள்வாயிலே பட்டபின்பு நிறம்பெற்றன என்கிறாள். [அன்னைமீர்] - இவள் பருவமிது, நமக்கு அவ்வருகேபோன ஆஸ்சர்யம் பாரிகோள்; ,'கெகெ ஆய' என்னுமாபோலே. [அணிமா மயில்சிறுமான்] - அழகிய நிறத்தையுடையளாய், முக்யமான மான்போலே அதிவாலையாயிருக்கிறவள். அழகிதாய் ஸ்லாக்யமானமாயிருக்கிற மயில்போலே இருக்கிற சிறுப் பெண் என்றுமாம்.

[இவள்நம்மைக் கைவலிந்து] - முக்யையான இவள் நம்மைக்கைவிஞ்சி. நம்மிற்காட்டிலும் அந்தரங்கையானாள். [எனவார்த்தையும் இத்யாதி] - தொலைவில்லிமங்

acharya.org

கலம் என்கையொழிய, ஏதேனும் ஒருவார்த்தையும் கேட்கிறிலள் என்னுதல், என்னுடைய வார்த்தையும் கேட்கிறிலள் என்னுதல். உங்களை மறைத்ததும் சொல்லுவது எனக்கிறே. அவ்வுரை நான் சொல்லிலும் கேட்கும். [முன்னம்கோற்ற விதிகொலோ]- முன்னேபண்ணின பாக்யபலமோ? "ஜ்ஞாதாரஸஹஸ்ரெஷு," "வஹாமி நாஂஜ்ஞாநாஶ்ரெ". [முகில்வண்ணன் மாயங்கொலோ] - அதுக்கு இத்தனை கனத்த஫லம் உண்டாக மாட்டாது; அழகைக்காட்டிப் பண்ணின ஆஶ்சர்யசேஷ்டிதங்களோ! அதில் ஸம்ஶயம்- இத்தலையாலே ஸாயித்ததுக்கு இத்தனைகனத்த஫லம் உண்டாகமாட்டாதென்று: இதில் ஸம்ஶயம் - இதுக்குமுன்பு ஒரு வ்யக்தியில் இப்படி பிறக்கக்காணாமையாலே. [அவன் சின்னமும்] - "தவளவொண்சங்கு சக்கரம்" என்று - ஆபரணத்தோடே விகல்பிக்கலான ஶங்கூ ஆதிஶிஹ்ஞங்களும். "ஆவிந்தலோசநன், தேவபிரான்" என்று அவனுக்கு வாசகமான திருநாமங்களும். [திருந்தவே - இவள் வாயனகள்] - நிறம் பெறும்படி இவள் வாயனவாயின. அல்லாதார், தாங்கள் திருத்துகைக்காகத் திருநாமங்கள் சொல்லுவர்கள்; திருநாமம் திருத்துகைக்கு இவள் சொல்லவேணும். நாமும் திருநாமங்கள் சொல்லுகிறோம், இவள் வாயிலேபட்டவாறே இங்ஙனே உயிர்பெறவேணுமோ? என்கிறாள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன் சின்னமும் திருநாமமும் இவள்சொல்லப்புக்கவாறே நிறம்பெற்றன என்கிறாள்.

[அன்னைமீர்] - இவள் பருவம் இது; நமக்கவ்வருகேபோன ஆஶ்சர்யத்தைப் பாரிகோள். "மைத்ரெய" (மைத்ரேய) என்னுமாபோலே. † (அன்னைமீரென்கிறாள், சந்தோஷத்தாலே.) [அணிமாமயில்சிறுமான்] - அழகிய நிறத்தையுடைய பெண்பிள்ளை. அழகியதாய் ஶ்லாக்யமான மயில்போலே யிருக்கிறபெண்பிள்ளை என்னுதல். [சிறுமானிவள் நம்மைக்கைவலிந்து] - நாம்கற்பித்த திருநாமங்களையும் ‡சொப்பனச்சொல்லமாட்டாதவள் நமக்குஎட்டாதபடியானாள். [கைவலிந்து] - கைகடந்து. [எனவார்த்தையும் கேட்குறாள்] - தன் நினைவை நான் சொல்லிலும் மீட்கநினைத்துச் சொல்லுகிறேனென்று, என் வார்த்தையும் கேட்கத்தவிர்ந்தாள்; திருத்தோலைவில்லிமங்கலமென்னில் நான்சொன்ன

ஏழாம்பாட்டு.—அன்னைமீர் இத்யாதி. "அவன் சின்னமுந்திருநாமமும் இவள்வாயனகள் திருந்தவே" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - அவன்சின்னமும் இத்யாதி.

"சிறுமானிவள், எனவார்த்தையுங்கேட்குறாள்" என்றகூட்டிபாவம் - இவள்பருவம் இத்யாதி. பாட்டுத்தோறும் "அன்னைமீர்" என்கிறதுக்குபாவம் - மைத்ரெய இத்யாதி. முந்தினவர்த்தத்துக்கு, 'அணி" என்று - அழகாய், *"மாமை"என்று - நிறமாய், "இல்" என்ற - இருப்பிடமாய்: அழகியநிறத்தையுடைய என்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, "அணி"யென்று-அழகாய், "மா"வென்று-ஶ்லாக்யமாய், "மயில்" என்று-மயில்போலேயிருக்கிறவளென்றும், அழகியதாய் ஶ்லாக்யமான மயில் போலேயிருக்கிற அலகபாரத்தையுடையவளென்றபடி. "சிறுமான்" - முக்தமான மான்பேடைபோலேயிருக்கிற பெண்பிள்ளை. "இவள்பருவம்" இத்யாதிவாக்ய விவரணம் - நாம்கற்பித்த இத்யாதி. ‡சொப்பன - நன்றாக. "எனவார்த்தையும்" என்கிறசப்தத்துக்குபாவம் - தன்னினைவை இத்யாதி. "கேட்குறாள்" - கேட்கவுறுகிறிலள். கேட்கை தவிர்ந்தாளென்றபடி. எல்லாமப்படியோ? என்ன - திருத்

---

* இம்முதற்பொருளில் 'மாமையில்'என்பது 'மாயயில்'என்ற ஐகாரத்துக்கு அகரம்பெற்ற வந்ததாகக்கொள்ளவேணும். † சொப்படஎன்ற இருக்கலாம்: "சொப்படத்தோன்றி" சொப்படநான்சட்டிவைத்தேன், சொப்படநீராடவேண்டும் என்ற பெரியாழ்வார்திருமொழியில் வருதல்காண்க

acharya.org

வார்த்தையுங்கேட்கும். எனவார்த்தை - என்னுடைய வார்த்தை. [முன்னம்நோற்ற விதிகொலோ] - ஒக்கப் பிறந்து வளர்ந்தோம், பின்புஇது ஸாயிக்கக்கண்டிலோம். முன்பே பண்ணிவைத்த ஸுக்ருதபலமோ இது! "வியிவி ழுயாநழ" (விதிர் விதாநம்) என்னக் கடவதிறே. இவளாலே யநுஷ்ட்டிதமான தர்மத்துக்கு இத்தனை஫லம் கனக்க வுண்டாக மாட்டாது; இது ஸித்த தர்மபல மாகவேணும்; ஆகையால், [முகில்வண்ணன் மாயங் கொலோ] - பிடாத்தை விழவிட்டு வடிவைக் காட்டினனோ? அதில் ஸம்ஶயம் - இத் தலையாலே ஸாதித்ததோர் அசேதநக்ரியைக்கு இத்தனை கனத்த ஫லமுண்டாகமாட்டா தென்று. இதில் ஸம்ஶயம் - இப்படி இதுக்குமுன்பு ஒருவ்யக்தியில் பலிக்கக் காணு மையாலே. [அவன்சின்னமித்யாதி] - "தவளவோண்சங்குசக்கரம்" என்பதான சிஹ்நங் களும், "அரவிந்தலோசநன், "தேவபிரான்" என்பதான திருநாமங்களும். [இவள்வாய னகள்திருந்தவே] - பண்டே திருந்தியிருக்கிறவை இவள் சொல்லப்புக்கவாறே உயிர்பேற் றிராநின்றன. ('திருந்தவே - இவள்வாயனகள்'- நிறம்பெறும்படி இவள்வாயனவாயின.) பட்டர் "அழகியமணவாளப்பெருமாள்" என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோலேயும், சோமாசியாண்டான் " எம்பெருமானார் " என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோலேயும், அநந்தாழ்வான் "திருவேங்கடமுடையான்" என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோலே யும்: "யெகுயாகீதிதாகுணாஃ" (யேத்வயாகீர்த்திதாகுணாஃ) என்னுமாபோலே.

ப்ர.—[அன்னைமீர்இத்யாதி]—(இவள்வாயனகள்திருந்தவே)—ஶ்ரீ ஸஜ்ஜெ வெ, "வஹ வொடுலுழுஹாஶ்ரெவ யெகுயாகீதிதாகுணாஃ । ஶுநவகுநாஃ ஹம் வுயா வெதுரு ஸுகுஶுயதாம்நஃ॥எ॥"

தொலைவில்லிமங்கலம் இத்யாதி. இப்போது செய்த ஸுக்ருதமானலோ? என்ன - ஒக்கப்பிறந்து இத்யாதி. "விதி" என்றால் - ஸுக்ருதவாசகமாமோ? என்ன - வியிவி ழுயாநழ இத்யாதி. மேலிற் பதத்துக்கு அவதாரிகை - இவளாலே இத்யாதி. ஈஶ்வரனென்னாதே, "முகில்வண்ணன்" என்ற துக்கு ஹாவம்-பிடாத்தை இத்யாதி. பிடாத்தை-*பச்சைவடத்தை. "மாயங்கொலோ" - ஆஶ்சர்யமோ? "முகில்வண்ணன் மாயமே" என்ற நிஶ்சயிக்கவேண்டியிருக்க, உபயத்திலும் ஸம்ஶயிப்பானென்? என்ன - அதில்ஸம்ஶயம் இத்யாதி. வ்யக்தி - வஸ்து. அவன் சின்னமுந் திருநாமமும் எக்கே சொன்னாள்? என்ன - தவளம் இத்யாதி. "இவள்வாயனகள்" என்றது - இவள்வாயிலேயானனவ களாய்க்கொண்டென்றபடி. "திருந்த"-நிறம்பெற்றன. முன்பே திருந்தி யிருக்கவில்லையோ? என்ன - பண்டே இத்யாதி. அநாவது - ப்ராவண்யத்தாலே சொன்னவை நிறம்பெற்றிருக்குமென்றபடி. "ப்ரா வண்யத்தாலே சொன்னவை நிறம்பெற்றிருக்கும்" என்றதுக்கு ஸம்வாதம் - பட்டர் இத்யாதி. இது வால்மீகிபகவான் பக்கலிலுங் காணலாமென்கிறார் - யெகுயா இத்யாதி. கதிதாஃ என்னாதே, "கீர்த்தி தாஃ" என்கையாலே - குணங்கள் நிறம்பெற்றனவென்று தோற்றுகிறது. 'அன்னைமீர்'என்று தொடங்கி, 'கைவலிந்து - தொலைவில்லி மங்கலமென்றல்லால் - எனவார்த்தையுங் கேட்குறுள், அவன் சின்னமுந்திருநாமமும்இவள்வாயனகளாய்க்கொண்டு திருந்த; முன்னம் நோற்றவிதிகொலோ? முகில்வண்ணன் மாயங்கொலோ' இத்யந்வயஃ.

(எ)

---

* பச்சைவடம்—வஸ்த்ரவிஶேஷம்.

acharya.org

எட்டாம் பாட்டு.

திருந்துவேதமும்வேள்வியுந் திருமாமகளிருந்தாம் மலிந்
திருந்துவாழ்பொருநல் வடகரைவண்தொலைவில்லிமங்கலம்
கருந்தடங்கண்ணிகைதொழுத அந்நாள்தொடங்கி இந்நாள்தொறும்
இருந்திருந்துஅரவிந்தலோசந! என்றென்றேநைந்திரங்குமே.

ஆ.—(திருந்து.) - அவிப்லுதஸ்வரவர்ணக்ரம மான ஸர்வவேதங்களாலும் ஸம்ஸ்தூயமாநனும், தத்ஸமாராதநவேஷஅநபிஸம்ஹிதபலாநுஷ்ட்டித நித்யநைமித்திகாதி ஸர்வகர்மங்களாலே ஸமாராத்யனுமாய்க்கொண்டு, லக்ஷ்மீ பூமி நீளா நாயகனான பரமபுருஷன் திருநாட்டிலே எழுந்தருளியிருக்கிற இருப்பிற்காட்டில் ஸம்ருத்தனாய் எழுந்தருளியிருந்து வாழ்கிற பொருநல் வடகரை வண்தொலைவில்லிமங்கலத்திலே, * இழைகொள்சோதிச் செந்தாமரைக்கட்பிரானிருந்தமையை அலர்ந்ததொரு நெய்தல் தடாகம்போலேயிருந்த நிருக்கண்களாலே கண்டு கைதொழுதவந்நாள்தொடங்கி இந்நாள் தொறும், இருந்திருந்து அக்கண்களையே நினைத்து, அரவிந்தலோசந ! அரவிந்தலோசந! என்றென்றே சொல்லி நைந்து தளராநிற்கும் என்கிறாள்.

ஒ.—எட்டாம் பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றளவும் பிராட்டிக்கு உண்டான ஸையில்யத்தைச்சொல்லுகிறாள். [திருந்து என்றுதொடங்கி] - அங்குள்ளார் பரிக்ரஹிக்கையாலே நிறம்பெற்ற வேதமும், வைதிகஸமாராயநங்களும், பெரியபிராட்டியாரும் தானும் ஸம்ருத்தமாயிருந்து வாழ்கிற திருப்பொருநல் வடகரையான திருத்தொலைவில்லிமங்கலத்தை; வேதமும் வைதிக ஸமாராயநங்களும் அத்தால்வந்த ஸம்பத்துமானவை மிக்கிருந்து வாழ்ந்துசெல்லுகிற திருத்தொலைவில்லிமங்கலம் என்றுமாம். [கருந்தடங்கண்ணி கைதொழுதவந்நாள் தொடங்கி யிந்நாள்தொறும்] - கறுத்துப் பெருத்திருக்கிற திருக்கண்களையுடைய இவள் திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றளவும் நெடும்போதோடுகூடி வருந்தி அரவிந்தலோசன என்று இப்படி நிரந்தரமாகச்சொல்லி அவ்வழியாலே அவனுடைய அழகையும் குணங்களையும் நினைத்து ஸிதிலையாய் நோவுபடாநின்றாள்.

ப.—அநந்தரம், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அன்று தொடங்கி யென்றும் அரவிந்தலோசகன் என்கிற திருநாமத்தையேசொல்லி ஸிதிலையாகா நின்றாளென்கிறாள்.

திருந்து-(ஹகவத்ஸ்வரூப ரூப குணவிபூதி ப்ரதிபாதநத்தில்) திருத்தமுடைத்தான, வேதமும் - ,வேள்வியும் - (அந்தவேதப்ரதிபாத்யமாய் பகவதாராதநரூபமான) யாகாதிகர்மங்களும், மா-அதுக்கு அநுரூபஸம்பதலிவர்த்தகையான, திருமகளிரும் - லக்ஷ்மியுமாகிற, தாம்-தாங்கள், மலிந்து - (ஹகவத்ஸம்ஶ்லேஷத்தாலே)அதிவ்ருத்தியையுடையராய், இருந்து - ப்ரதிஷ்ட்டிதராயிருந்து, வாழ் - வாழுகிற, பொருநல்வடகரை - திருப்பொருநல் வடகரையில், வண் தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, கரு-கருகி, தடம் - பெருத்த, கண்ணி - கண்ணையுடையவள், கைதொழுத-,

acharya.org

அந்நாள்தொடங்கி-, இ - இவ்வருகுண்டான, நாள்தொறும்-,இருந்திருந்து - (அரதியாலே யரித்திருக்கமாட்டாதவள் வருந்தி)இருந்திருந்து, அரவிந்தலோசந-அரவிந்தலோசநனே! என்றென்றே-என்றுஸம்போதித்து(த்தன்னுற்றுமையாலே)பலகாலுமழைத்தே,நைந்து-ஶிதிலையாய், இரங்கும் - நெஞ்சழியாநின்றாள். தாம்என்று - ஈஶ்வரன்தன்னைச் சொல்லவுமாம்.

இ.—எட்டாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அந்நாள்தொடங்கி இன்றளவும் உண்டான இவளுடைய ஶைஶில்யத்தைச் சொல்லுகிறாள். [திருந்துவேதமும்] - வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரார் பரிக்ரஹித்தபின்பாயிற்று. "ஸ்வரூபவம்ஜ்ஞாநமாத்ரீ" என்கிற ஶ்ருதிகள், ஜ்ஞாத்ருஸ்வஶ்ருதிகள், ஹெடாஹெடஶ்ருதிகள், ஸகுணஶ்ருதிகள், நிர்குணஶ்ருதிகள் இவையடங்க விஷய விஹாரத்தாலே ஒருங்கவிட்டுக்கொண்டு இருக்குமவர்கள். [வேள்வியும்] - வைதிகஸமாராதநமும். [திருமாமகளிருந் தாம் மலிந்திருந்துவாழ்] - ஆராத்யரான பெரியபிராட்டியாரும் தானும் ஸம்ருத்தமாயிருந்து வாழுகிற ஊரை. வேதமும் வைதிக ஸமாராதநமும் அதின் ஫லமான ஸம்பத்துமானவை மிக்கிருந்துவர்த்திக்கிற ஊரை யென்றுமாம்; தாம்என்றது - கீழ்ச்சொன்னவை தாமென்கை. [கருந்தடங்கண்ணி] - கண்ணழகுக்கு * அஸிதேக்ஷணையோடு ஒக்கும். [தடங்கண்ணி] - அவளில் காட்டில் வ்யாவ்ருத்தி; அவனை அநு஭விக்கையாலே வந்ததிறே அவளுக்கு: அம்மிதுநத்தை அநுபவிக்கும் ஏற்றம் உண்டிறே இக்கண்ணுக்கு. இவள் கருந்தடங்கண்ணி, அவன் அரவிந்தலோசநன். [கைதொழுத இத்யாதி] - திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றைவரையும் என்னுதல்; அன்றுதொடங்கி இக்காலமெல்லாம் என்னுதல். [இருந்திருந்து அரவிந்தலோசனவென்று] - ஒருகால் "அரவிந்தலோசந" என்னும்போது, நெடும்போதுகூடிப் பெருவருத்தத்தோடே சொல்லவேண்டியிருக்கை. [என்றென்றே] - இருக்கமாட்டாதே நிரந்தரமாகச் சொல்லாநின்றாள். அவ்வழியாலே அழகையும் குணங்களையும் நினைத்து நையாநின்றாள். [இரங்குமே] - ஶரீரத்தளவன்றிக்கே நெஞ்சும் ஶிதிலமாகாநின்றது.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவ்வூரைத் தொழுத அன்றுதொடங்கி இன்றளவும் உண்டான இவளுடைய ஶைஶில்யத்தைச் சொல்லுகிறாள்.

[திருந்துவேதமும்] - வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரிலுள்ளார் பரிக்ரஹித்த பின்பாயிற்று. ஸ்வரூபம்ஜ்ஞாநமாத்ரமென்கிற ஶ்ருதிகள், ஜ்ஞாத்ருத்வஶ்ருதிகள், பேதா

எட்டாம்பாட்டு.—திருந்து இத்யாதி. "தொலைவில்லிமங்கலம் - கைதொழுத அந்நாள் தொடங்கி" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - அவ்வூரை இத்யாதி.

கட்டளைப்பட்ட ப்ரகாரத்தைக்காட்டுகிறார் - ஸ்வரூபம் ஜ்ஞாநமாத்ரம் இத்யாதி. ஸ்வரூபம் ஜ்ஞாநமாத்ரமென்கிற ஶ்ருதிகளாவன - "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம," "விஜ்ஞாநம்ப்ரஹ்ம" இத்யாதிகள். ஜ்ஞாத்ருத்வஶ்ருதிகளாவன - "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத்யாதிகள். "ஆகாஶவண்ணா", "நித்யோநித்யாநாம்", 'வதிம்விஶ்வஸ்ய" இத்யாதிகள் - பேதஶ்ருதிகள். "தத்ஸத்யம்", "ஸர்வம்வ்ரஹ்மம்ப்ரஹ்ம" இத்யாதிகள் - அபேதஶ்ருதிகள். "ஸொஶ்நுதே ஸர்வாந்காமாந்", "ஸர்வகந்தஸர்வரஸ:" இத்யாதிகள் - ஸகுணஶ்ருதிகள். "நிஷ்கலம்நிஷ்க்ரியம்

பேத ஶ்ருதிகள், ஸகுணஶ்ருதிகள், நிர்க்குணஶ்ருதிகள் இவையடங்க விஷய விஹாரத்தாலே ஒருங்கவிட்டிருக்குமவர்கள். [வேள்வியும்] - வைதிக ஸமாராதநமும். கற்றகல்வி அநுஷ்டாநசேஷமாயிருக்கிறபடி. [திருமாமகளிருந்தாம்] - ஆராதகருடைய பௌஷ்கல்யம் இருக்கிறபடி. [திருமாமகளிரும்] - ஸம்பத்தும். ('தாம்' - வேதமும், வைதிகக்ரியையும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பதஹிவர்த்தகையான லக்ஷ்மியுமாகிற தாங்கள் லகவத்ஸம்ஶ்லேஷத்தாலே அபிவ்ருத்தியுடையராய் ப்ரதிஷ்ட்டிதராயிருந்து வாழுகிற.) அன்றிக்கே, ஆராத்யரான பிராட்டியும்அவனுமாகவுமாம். தாம் - தான். ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்கள் குறைவற்றுவர்த்திக்கிற தேசம். (ப்ரமாதாக்கள் - அர்த்தாத்சித்தம்.) [மலிந்திருந்து] - பரமபதத்தி லுள்வெதுப்போடேபோலேயாகாதே இருப்பது. [பொருநல்வடகரை] - விரஜைக்குஅக்கரை என்னுமாபோலே. [கருந்தடங்கண்ணி] - கண்ணழகுக்கு * அஸிதேக்ஷணையோடொக்கும். [தடங்கண்ணி] - அவளிற்காட்டில் வ்யாவ்ருத்தி. அவனை அநுபவிக்கையால் வந்ததிறே யவளுக்கு; அவளிற்காட்டில் ஏற்ற முண்டிறே, அம்மிதுநத்தை யநுபவிக்கையாலே இவள் கண்ணுக்கு; தொழும்போதும் வடிவழகியராயிருப்பார் தொழவேணுமாகாதே. [கைதொழுத அந்நாள் தோடங்கி] - திருவடி தொழுத அன்றுதொடங்கி இன்றளவும்வர என்னுதல்: தன் ஸத்தையுண்டான அன்று

யழ்", "நிமஜ்ஜணழ்", "நிராஜநழ்" இத்யாதிகள் - நிர்க்குணஶ்ருதிகள். இவையடங்க விஷய விபாகத்தாலே யொருங்கவிட்டிருக்கையாவது - ஜ்ஞாநமாத்ரம் என்றது - "தஜ்ஜ்ஞாணஸாரஸ்வாதஜ்ஞாதஜ்ஞாவஜெஶழ்" என்கிறபடியே ஜ்ஞாநப்ராகுர்யத்தைப்பற்றவும், ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாஶமென்று தோற்றுகைக்கும், ஜ்ஞாத்ருத்வத்தை நிஷேதிக்கவந்ததன்று' என்றும்; 'பேதாபேதஶ்ருதிகளில், பேதஶ்ருதியே - பரமார்த்தம்; அபேதம்சொல்லுகிறது - சரீராத்மபாவ ஸம்பந்தக் தோற்றுகைக்காகச் சொன்னதித்தனை' என்றும்; 'ஸகுண நிர்க்குணஶ்ருதிகளில் வைத்துக்கொண்டு, ஸகுணஶ்ருதியே - பரமார்த்தம், நிர்க்குணமென்கிறது - ப்ரஹ்மத்துக்கு ப்ராக்ருதஹேயகுணங்களில்லாமையைப் பற்றச் சொன்னவித்தனை; கல்யாணகுணங்களை நிஷேதிக்கவந்ததன்று' என்றும், இப்படி விஷய விபாகத்தாலே நிஶ்சயித்திருக்கை. "திருந்துவேதமும்" என்றத்தோடே, "வேள்வியும்" என்றதுக்கு ஸங்கதி - கற்றகல்வி இத்யாதி. "வேள்வியும்" என்றத்தோடே, "திருமாமகளிரும்" என்றதுக்கு ஸங்கதி - ஆராதகர் இத்யாதி. மந்த்ரங்களைக்கொண்டு வைதிகஸமாராதநம்பண்ணும்போது ஐஶ்வர்யம் குறைவறவுண்டாயிருக்கவேணுமே, அத்தைச்சொல்லுகிறதென்று கருத்து. "திருமாமகளிருந்தாம்" என்றதுக்கு திருமாமகளிரென்று - ஸம்பத்தாய், அத்தையுடையதாங்களும் ப்ராஹ்மணருமென்று ஸப்தார்த்தம். த்விதீயார்த்தத்துக்கு- திருமாமகளிரும், தாம் - தாமும், ஈஶ்வரனுமென்று ஸப்தார்த்தம். "மலிந்திருந்து" என்றதுக்கு பாவம் - ப்ரமாண இத்யாதி. முந்தினவர்த்தத்தில், ப்ரமாணம் - வேதம்; ப்ரமேயம் - வேள்வி: ப்ரமாதாக்கள் - ப்ராஹ்மணர். த்விதீயார்த்தத்துக்கு, ப்ரமேயம் - ஶ்ரியஃபதி; "வேள்வி" என்றபோதே, தத்கர்த்ருத்வேந ப்ரமாதாக்களும் அர்த்தசித்தர். இரண்டாம்அர்த்தத்திலே, "திருமாமகளிருந்தாம்மலிந்திருந்து" என்று இங்கே மலிவுசொன்னதுக்குபாவம் - பாமபதத்தில் இத்யாதி. மலிந்திருந்து - மிக்கிருந்து, வாழ் - வர்த்திக்கிற, தொலைவில்லிமங்கலமென்று ஸப்தார்த்தம். "திருந்துவேதம்" இத்யாதிக்கு - "கட்டளைப்பட்டவேதமும், வேள்வியும் - வைதிகஸமாராதநமும், திருமாமகளிரும் - ஐஶ்வர்யமுமான, தாம் - இவையெல்லாம், மலிந்திருந்து" என்றுமுந்தினவர்த்தத்தில் ஸப்தார்த்தம் சொல்லுவாரு முண்டு. வ்யாவ்ருத்தியை ஸஹேதுகமாகக் காட்டுகிறார் - அவனையநுபவிக்கையால் இத்யாதி. "கருந்தடங்கண்ணி" என்று - அவயவவைலக்ஷண்யத்தைச்சொல்லி, "கைதொழுத" என்றதுக்குபாவம் - தொழும்போதும் இத்யாதி. திருவடிதொழுத அன்றுதொடங்கி என்றது - அவ்வூரில் அவனைத் திருவடிதொழுத அன்றுதொடங்கி என்றபடி. ஸத்தையுண்டான

acharya.org

தோடங்கிஇன்றளவும்வரஎன்னுதல். ''ஸுஸஹெவ'' [அஸந்நேவ], ''அன்றுநான்பிறந்திலேன்,'' இதிறே முன்புத்தை நிலை. அவன்கையிலு மன்றிக்கே, பிறர்கையிலு மன்றிக்கே, தன்கையதாயிருந்தபடி என்தான் தன்ஸத்தை! * தொழுதெழுவிறே. [இருந்திருந்து அரவிந்தலோசந என்றென்றே] - ஒருகால் ''அரவிந்தலோசந'' என்னும்போது, நடுவே பதின்கால் பட்டைப்பொதிசோறு அவிழ்க்கவேணும். [என்றென்றே]-''தெளர்ப்பல்யத்தாலே சொல்ல மாட்டாளோ?'' என்றிருக்கச் செய்தே, சொல்லித் தலைக்கட்டாநின்றாள். அவன் அரவிந்தலோசநன்: இவள் கருந்தடங்கண்ணி. இருவரும்ஒருமுகத்திலே காணும் அகப்பட்டது. [நைந்திரங்குமே]- ஶியிலையாய் அழியாநின்றாள். சரீரத்தளவுமன்றிக்கே, நெஞ்சும் ஶியிலமாகாநின்றது. இரக்கம் - ஈடுபோடு. (அ)

ஒன்பதாம் பாட்டு.

இரங்கிநாள்தோறும்வாய்வெரீஇ இவள்கண்ணநீர்களலமர
மரங்களும்இரங்கும்வகை மணிவண்ணவோ! என்றுகூவுமால்
துரங்கம்வாய்பிளந்தானுறை தொலைவில்லிமங்கலமென்றுதன்
கரங்கள்கூப்பித்தொழும்அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னையே.

ஆ.—(இரங்கி) - இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு அவ்வூர்த்திருநாமத்தை நீங்கள் கற்பிக்கக் கற்றதற்பின், விஶ்லேஷவ்யஸநத்தாலே அத்யந்தமஅவஸந்நையாய், நாள்தோறும் அவன் திருநாமத்தையே வாய்வெருவி, அசேதநமான மரங்களுங்கூட இரங்கும்படி மஹார்த்தியோடே, மணிவண்ணவோ! என்று கூப்பிட்டழைத்து, துரங்கம்வாய்பிளந்தான் தன்ஶ்ரமமெல்லாம் போம்படி எழுந்தருளியிருந்த தொலைவில்லிமங்கலமென்றுசொல்லி, தன்கைகளைக் கூப்பித்தொழா

அன்றுதொடங்கி என்றது - மயர்வறமதிநலம்பெற்ற அன்றுதொடங்கி என்றபடி. இப்போதைக்கு ''தொலைவில்லிமங்கலம் - கைதொழுத அந்நாள்தொடங்கி'', என்றதுசேரும்படி எங்ஙனே? என்னில் இவள் சொற்கற்கை யென்றும், தொலைவில்லிமங்கலந்தொழுகையென்றும், இரண்டில்லையாகையாலே, வால்யமேதொடங்கி இவளுக்குத் திருத்தொலைவில்லிமங்கலத்தில் ப்ராவண்யம் ஸத்தாப்ரயுக்தமென்று கண்டுகொள்வது. ஜ்ஞாநமில்லாதபோது ஸத்தையில்லையோ? என்ன - அஸந்நேவ இத்யாதி. 'அன்றுநான்பிறந்திலேன்' - பகவத்விஷயத்தில் ருசிபிறப்பதற்குமுன்பு நான்பிறந்திலேன். அஜ்ஞனாய் அஸத்ஸமனாய்ப்போந்தேனென்றபடி. திருச்சந்தவிருத்தம் அறுபத்துநாலாம்பாட்டு. "நாகிஞ்சி-ஸுதஶுஷிக்வி" என்கிறபடியே, தொழுகையாகிற கிஞ்சித்காரத்தை விவக்ஷித்தருளிச்செய்கிறார் - அவன்கையிலும் இத்யாதி இத்தால் - தொழுகையாகிற கிஞ்சித்காரத்தாலே ஸத்தாவித்தியென்றபடி. அப்படிதொழுகை - ஸத்தாஹேதுவாயிருக்குமோ? என்ன - தொழுதெழுவிறே என்று. ''இருந்திருந்து'' என்றதுக்குபாவம் - ஒருகால் இத்யாதி. பட்டைப்பொதிசோறு - பாக்குப்பட்டையிற் கட்டின சோறு. ''என்றே'' என்கிற அவயாரணார்த்தம் - தெளர்ப்பல்யத்தாலே இத்யாதி. ஒருமுகத்திலேயென்றது - பரஸ்பரம் கண்ணழகிலேயென்றபடி. நைவுக்கும், இரங்குகைக்கும் பேதமேதென்ன - சரீரத்தளவும் இத்யாதி. (அ)

acharya.org

நிற்கும்; ஆதலால், அவ்வூரிலே கொண்டுபுக்கு அவ்வூர்த் திருநாமத்தைக்கற்பித்துக் கெடுத்திகோள் என்கிறாள்.

ஒ.—ஒன்பதாம் பாட்டில், இப்பெண்பிள்ளையுடைய மனோவாக்காயங்கள் மூன்றும் எம்பெருமான்பக்கலிலே மிகவும் ப்ரவணமாயிற்றின என்கிறாள். [இரங்கி யென்றுதொடங்கி] - இவள் நாள்தோறும் நோவுபட்டு எம்பெருமானுடைய குணங்களை வாய்வெருவி மிகவும் கண்ணநீர்கள்பாய மரங்களும்இரங்கும்படி திருநாமத்தைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள். [துரங்கமென்று தொடங்கி]-கேஶிஹந்தாவான க்ருஷ்ணன்வர்த்திக்கிற தேசம் என்று தன்னுடைய அழகிய கைகளைக் கூப்பித்தொழும் திருத்தொலைவில்லிமங்கலம் என்னக் கற்றபின்பு. அவ்வூர்த் திருநாமம் என்பானென்? என்னில்; பெண்பிள்ளை "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றால் உள்ளஇனிமை, தன்வாயாலே சொன்னவிடத்திற் பிறவாமையாலே.

ப.—அநந்தரம், அவனுடைய ஸௌந்தர்யாதிவாசகமான திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு, விரோதிநிவர்த்தகனானவன் வர்த்திக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்தைச்சொல்லி அஞ்சலிபண்ணாநின்றாளென்கிறாள்.

இவள்-, நாள்தொறும்-, இரங்கி-நெஞ்சழிந்து, வாய்வெரீஇ - (பரவசையாய்க் கொண்டு வாஸனையாலே) வாய்வெருவி, கண்ணநீர்கள்-, அலமர - பாய்ந்தலமாக்கும்படியாக, மரங்களும் - (அசேதநமான) மரங்களும், இரங்கும்வகை - இரங்கும்படி, மணி - நீலரத்நம்போலே தர்ஶநீயமான, வண்ணவோ - வடிவையுடையவனே! என்று, கூவும் - கூப்பிட்டழையாநின்றாள்; (அவ்வளவேயன்றியே), துரங்கம் - குதிரையாய்வந்தகேசியின், வாய்-வாயை, பிளந்தான் - பிளந்தக்ருஷ்ணன், உறை-வர்த்திக்கிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலம், என்று-, அவ்வூர்த்திருநாமம்-, கற்றதற்பின்னை- கற்றபின்பு, (அவ்வூரைநோக்கி), தன்கரங்கள் - தன்கைகளை, கூப்பி-, தொழும் - தொழாநிற்கும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இவள் மனோவாக்காயங்கள், முதலிலேதொடங்கி அவன்பக்கலிலே ப்ரவணமாயிற்றின என்கிறாள்.

[இரங்கி] - மநஸ்ஸு நெகிழ்ந்து. [நாடொறும் வாய்வெரீஇ] - அகவாய் அழிந்தவழிபுக்குப் போக்குவீடு இருக்கிறபடி. [நாடொறும்] - வாஸனையே உபாத்யாயராகச் சொல்லுமதொழிய, உணர்த்தியோடே சொல்வது ஒருநாளும்இல்லை. 'நாடொறும் வாய்வெரீஇ' என்றது - *பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும் வரக் கூப்பிட்ட கூப்பிட்டையிறே. [இவள் கண்ணநீர்களலமர] - கண்கள் வாய்வெருவுகிறபடி. கண்ணாலே போக்குவிடுகிறபடி. [மரங்களுமிரங்கும்வகை] - அசித்கல்பமான ஸ்தாவரங்களும் இரங்கும்படியாயிற்று, இவள் ஆர்த்தத்வநி. "சுவிவ்ருக்ஷாஃவரிஷ்ஷாநாஃ" என்று ராமவிஶ்லேஷத்தில் பட்டது அடங்க இவள்பேச்சிலே படாநின்றன. [மணிவண்ணவோ வென்று கூவுமால்] - வடிவழகுக்கு வாசகமான திருநாமத்தையே சொல்லாநின்றாள். நீலமணிபோலே குளிர்ந்திருக்கிற திருநிறத்தையுடையவனே! என்னாநின்றாள். [துரங்கமென்று தொடங்கி] - கேஶிஹந்தாவான க்ருஷ்ணன், அவதாரத்தில் பிற்பாடருடைய விரோதிகளைப் போக்குகைக்கு நித்யவாஸம்பண்ணுகிற திருத்தொலைவில்லிமங்கலமென்று. [தன்கரங்கள் கூப்பித்தொழும்] - "இவள்தொழுவித்துக் கொள்ளுமவள்"

acharya.org

என்றிருக்கிறாள் தோழி. அத்தலை இத்தலையாவதே! என்கிறாள். இதுதான் என்று தொடங்கி? என்னில், [அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னையே] - வார்த்தைசொல்லக் கற்ற பின்பு. திருநகரியிலுள்ளார் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றாயிற்று வார்த்தைகற்பது; கோயிலில் உள்ளார் "கோயில்" என்றும், "பெருமாள்" என்றும் கற்குமாபோலே. அவ்வூர்த்திருநாமம் என்கிறது - இவள்வாயால் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றமையில் உள்ளஇனிமை, தான்சொன்னால் பிறவாமையாலே.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இவள் மனோவாக்காயங்கள் முதலிலே தொடங்கி அவன் பக்கலிலே ப்ரவணமாயிற்றின என்கிறாள்.

[இரங்கி] - நெஞ்சழிந்து. [வாய்வேரீஇ] - அடியற்ற பேச்சாயிரா நின்றது. "விசிந்த்யவாசாவ்ரவதீ தமேவ" (விசிந்த்யவாசாப்ருவதீதமேவ) என்னுமாபோலே மநஸ்ஸஹகாரமின்றிக்கேயிருக்கை. [நாள்தோறும்]-* மயர்வறமதிநலமருளப் பெற்றவன்றே அறிவுகேடும் குடிபுகுந்ததுகாணும். பக்திரூபாபந்நஜ்ஞாநமிறேபெற்றது. [இவள் கண்ணநீர்களலமர]-கண்கள் வாய்வெருவுகிறபடி. நாடோறும் வாய்வேரீஇ யென்றது, * போய்ந்நின்ற ஞானந்தொடங்கி இவ்வளவும்வரக் கூப்பிட்ட கூப்பீட்டையிறே. [மரங்களுமிரங்கும்வகை]-சேதநாசேதநவிபாகமற அழியும்படி காணும், இவள் வாய்விட்டுக் கூப்பிடும்படி. எம்பாரை "மரங்களுமிரங்கக் கூடுமோ?" என்று கேட்க, "இதுஅருளிச்செய்த அன்று

ப்ர.—[இரங்கிநாடொறும்வாய்வெரீஇ]— ஸுஹ்ருகாணை [நஉ] "ஸ்வொநவாயம் நஹிசேzவிநிஜ்ராஸொகெநஜுஃவெநவவீயிதாயாஃ। ஸுஹம்ஹி செநாஹ்ரியதொஹ்ரிஹீநாதெமெஜுவுணுவுதிசோநெந ॥ கo ॥ ஸாசேதிஸா செகிஸஷெவவுஜ்யாவிவிஜ்ருவாவாவுவுதீதமேவ । தஸ்யாநுஸுவாஜ்ஞ கயாம்கஜயுஷாம்கயெவவஶ்யாதியாஶ்ரணொதி॥ கக॥"

ஒன்பதாம்பாட்டு.—இரங்கி இத்யாதி. "இரங்கி, கூவுமால், கரங்கள்கூப்பித்தொழும், திருநாமங்கற்றதற்பின்னே" என்கிற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - இவள் மநோவாக்காயங்கள் இத்யாதி.

நெஞ்சழிந்தால் வாய்வெருவக்கூடுமோ? என்ன - அடியற்ற இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - விசிந்த்ய இத்யாதி. "ஸாசேதிஸாசேதிஸஷெவவுஜ்யாவிவிஜ்ருவாவாவுவுதீதமேவ । தஸ்யாநுஸுவாஜ்ஞ கயாம் கஜயுஷாம் கயெவவஶ்யாதியாஶ்ரணொதி" இதி ஸுந்தரகாண்டே ஸீதா. "வுவுதீ" என்கிறபதத்தாலே - வாக்காலேயென்னுமது விஸ்தமாயிருக்க, "வாவா" என்று விசேஷிக்கையாலே மநஸ்ஸஹகாரம் இல்லையென்றபடி. விசிந்த்யவர்த்தமாநா, வாசைவப்ருவதீ, நதுவக்துமிச்சயேதி ஸ்லோகதாத்பர்யம். "வாவாவுவுதீ" என்றமாத்ரமே இவ்விடத்திலே வேண்டுவது. "நாடொறும்" என்கிறதுக்குஅவநிபேதென்ன - மயர்வற இத்யாதி. அப்போது அறிவுகேடு குடிபுகுருகைக்கு ஹேதுவேதென்ன - பக்திநுப இத்யாதி. "வாய்வெரீஇ" என்றதோடேகூட்டி "இவள்கண்ணநீர்கள்" இத்யாதிக்குபாவம் - கண்கள் இத்யாதி. "அலமர" என்றது - ஸம்ருத்தமாகவென்றபடி. கீழ், "மயர்வறமதிநலம்" இத்யாதிவாக்யத்தாலே "நாடொறும் இரங்கி" என்று கூட்டியருளிச்செய்து, "நாடொறும் - வாய்வெரீஇ" என்று மேலேகூட்டிபாவம் - நாடோறும்வாய்வேரீஇயென்றது இத்யாதி. ஆக, "நாடொறும்" என்றத்தை-கீழும்மேலுங்கூட்டுவது. மரங்களிரங்கக்கூடுமோ? என்ன - சேதநாசேதந இத்யாதி. "மரங்களும்" என்ற சஸப்தம் - சேதநரை ஸமுச்சயிக்கிறது. இதுக்கு ஸம்வாதம் - எம்பாரை இத்யாதி. மரங்களழி

acharya.org

தொடங்கி எத்தனை லாவண்யத்தி யில்லாதார்வாயிலே புக்கதென்று தெரியாது; இங்ஙனே யிருக்கச் செய்தே, யமரியமாதி க்ரமத்தாலே பதஞ்செய்யப் பார்த்தாலும் சுக்கான் பருக்கை போலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சுகளும் இன்றுஅழிகிறபடிகண்டால்ஸமகாலத்தில்மரங்கள் இரங்கச் சொல்லவேணுமோ ?'' என்றருளிச் செய்தார். ''மரங்கணின்று மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்கோம்புகள்தாழும்'' என்று அவதாரத்தில் திருக்குழலோசை யிற்பட்டதெல்லாம் இவ்வார்த்தநாதத்திலே படுமாயிற்று; **ஸுவிவ்ருக்ஷாவேரிஶ்ராநாஃ**'' (அபிவ்ருக்ஷாபேரிம்லாநாஃ) என்று, ராமவிஶ்லேஷத்தில் பட்டதெல்லாம் இவள் பேச்சில் படாநின்றன. பகவத்குணங்களிலும் குணநிஷ்ட்டர்பாசுர மறிக்கும்போலே [மணிவண்ணவோவென்று கூவுமால்] - இவளையோதான் நீங்கள் மீட்கப்பார்க்கிறது! வடிவழகைச் சொல்லியன்றோ கூப்பிடுகிறது. [துரங்கரித்யாதி] - பண்டு உபகரித்தவன் இப்போது உபகரிக்கைக்கு வந்திருக்கிற தேசம். கேசிவாயை அநாயாஸேந கிழித்தவன் வர்த்திக்கிறஇடம். [தொலைவில்லிமங்கலமென்று தன்கரங்கள் கூப்பித்தொழும்] - (அத்தலையித்தலையாவதே! என்கிறாள்.) தன்னூரின்பேரைச்சொல்ல எல்லாரும் கையெடுக்கும்படி பிறந்தவள் கிடீர் தான்அவனூரைச்சொல்லித் தொழுகிறாள்: இக்கைகண்டார் தொழமத்தனையென்றுபோலே காணும் இவளிருப்பது. தான் தொழுவது ஸ்த்ரீத்வத்துக்குப் போராதிறே. இதுதான் என்று தொடங்கி?என்னில், [அவ்வூர்த் திருநாமம் கற்றதற்பின்னையே] - இவள் சொற்கற்றபின்பு. திருநகரியிலுள்ளார் சொற்கற்பது ''திருத்தொலைவில்லிமங்கலம்'' என்றுபோலே காணும். இவள் பேச்சுக்கற்கையென்றும், திருநாமஞ் சொல்லுகையென்றும் இரண்டில்லை. கோயிலிலுள்ளார் ''கோயில்'' என்றும், ''பெருமாள்'' என்றும் கற்குமாபோலே. தோழி, தன் வாயாலே '' திருத்தொலைவில்லிமங்கலம் '' என்றால் இவள் சொன்ன இனிமை பிறவாமையாலே, அவ்வூரேன்கிறாள்காணும். என்தான்! முன்பு சொன்னாளேயென்னில்; அது அப்படியிராமலிறே அவ்வூரேன்கிறது. (கூ)

யக்கண்ட இடமுண்டோ ? என்ன; இரண்டு உதாஹரணம், மரங்கணின்றும்இத்யாதிவாக்யத்வயத்தாலே. பெரியாழ்வார்திருமொழி. ஸ்பஷ்டோர்த்தஃ. கீழ் - ஸாம்யஞ்சொல்லி, ஆதிக்யம்சொல்லுகிறார் - பகவத்குணங்களிலும் இத்யாதி. ''வ்ருக்ஷாஃவேரிஶ்ராநாஃ'' என்றவிடத்திற்போலே சாரீரமான வாட்டமன்றிக்கே, ''இரங்கும்'' என்று மநஸ்ஸாதில்யம் சொல்லுகையாலே, வாசியுண்டென்ற கருத்து. ''மணிவண்ணவோ'' என்றதுக்கு ஹார்த்தபாவம் - இவளையோஇத்யாதி. விவரணம் - வடிவழகை இத்யாதி. ''கேசிவாயைக்கிழித்தவன் வர்த்திக்கிற தொலைவில்லிமங்கலம்'' என்றதுக்கு பாவம் - பண்டு இத்யாதி. கரங்கள்என்னாதே, ''தன்கரங்கள்'' என்றுவிசேஷித்ததுக்கு பாவத்வயம்- தன்னூரின்பேரை இத்யாதிவாக்யத்வயத்தாலே. அதாவது - தன்னூரின்பேரைச் சொல்ல எல்லாரும் கையெடுக்கும்படி பிறந்தவள்கிடீர் தான் ''தொலைவில்லிமங்கலம்'' என்ற அவனூரைச்சொல்லித் தொழுகிறாள் என்னுதல்; தன் கையழகைக்கண்டுஈடுபட்டு அவன்தொழும்படி யிருக்கக்கடவ இவள் கிடீர் இப்போது அவனைத் தொழுகிறாளென்னுதல். தான் தொழுதால் குற்றமோ? என்ன - தான் தொழுவது இத்யாதி. ''கற்றதற்பின்னையே'' என்றதுக்குஅர்த்தம் - இவள்சொற்கற்றபின்பு என்ற. சொற்கற்றபின்பு என்றர்த்தமானால், ''அவ்வூர்'' என்ற விசேஷிப்பானென் ? என்ன - திருநகரியிலுள்ளார் இத்யாதி. சொற்கற்றே திருநாமங்கற்கவேண்டாவோ ? என்ன - இவள்பேச்சு இத்யாதி. அன்றிக்கே, கீழ்வாக்யத்தால் ஹேதுமாதல். உக்தத்துக்கு த்ருஷ்டாந்தம் - கோயிலில் இத்யாதி. திருத்தொலைவில்லிமங்கலமென்னாதே, ''அவ்வூர்'' என்கிறதென் ? என்ன - தோழி இத்யாதி. 'அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னை 'இரங்கி'யென்ற தொடங்கி, 'கரங்கள்கூப்பித்தொழும்' என்ற அந்வயம். (கூ)

acharya.org

பத்தாம் பாட்டு.

பின்னைகோல்?நிலமாமகள்கோல்? திருமகள்கோல்?பிறந்திட்டாள்
என்னமாயங்கோலோ?இவள்நெடுமாலென்றேநின்றுகூவுமால்
முன்னிவந்தவன்நின்றிருந்துறையுந் தோலைவில்லிமங்கலம்
சென்னியால்வணங்கும் அவ்வூர்த்திருநாமங்கேட்பதுசிந்தையே.

ஆ.— (பின்னைகொல்.) - நீங்கள் இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க அன்றுதொடங்கி, அவனுடைய நிரவயிகமான ஆஸ்ரிதவாத்ஸல்யாதி குணங்களையே சொல்லிக் கூப்பிட்டு, தன்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்குஎற்கத் தான் அவதாரம் பண்ணுவதற்குமுன்னே எம்பெருமான் பலவடிவுகளைக்கொண்டுநின்றிருந்துறைகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைச் சென்னியால்வணங்கி, அவ்வூர்த்திருநாமத்தை என்றோ கேட்பது? என்று சிந்தியாநிற்கும்; இப்படி எம்பெருமான்பக்க லுண்டான அஸிகிவேஶவெள்ளத்திலே அழுந்திக்கிடக்கிற இவள், நப்பின்னைப் பிராட்டியோ? பூமிப் பிராட்டியோ? பெரியபிராட்டியோ? அன்று: இவள்தானென்று சொல்லலாமித்தனை; ஏவம்விதமான ப்ரேமாதிஶயம் கண்டும் அறியோம்; இதென்ன ஆஶ்சர்யம்! என்று விஸ்மிதையாய்க்கொண்டு, இப்படி அஸிநிவிஷ்டையான இவளை என்னாலும் நிவர்த்திப்பிக்க முடியாதென்று சொல்லி முடிக்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், இவள் எம்பெருமான்பக்கலிலே அதிப்ரவணையாயிருக்கிறபடியையும், இவளுக்கு அவனாலல்லது செல்லாதிருக்கிறபடியையும் கண்டு, இவளோடொக்க மற்று ஶங்கிக்கலாவார் ஒருவரும் இல்லாமையாலே, பிராட்டிமாரிலே ஒருத்தியோ? என்று சங்கிக்கிறாள். [பின்னையென்று தொடங்கி] - இவர்களிலே ஒருத்தியோ? என்று சங்கித்து, அவர்களுக்கும் இவள்படியில்லாமையாலே லோகமெல்லாம் வாழ்கைக்கு இவள் ஒருத்தி பிறந்தாள் என்றுமாம். [என்னவென்று தொடங்கி] - இவள் திருநாமத்தைச்சொல்லி நிரந்தரமாகக் கூப்பிடாநின்றாள். இதுஎன்ன ஆஶ்சர்யம்! [முன்னி என்றுதொடங்கி] - "இப்பெண்பிள்ளையைக்கிடைக்கும்" என்று முற்கோலி வந்து பதறிநின்றருளியும் இருந்தருளியும் நிரந்தரமாக வர்த்தித்தருளுகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைத் தலையாலேவணங்கும்: அவ்வூர்த்திருநாமம் கேட்கையிலே இவளுக்கு மனோரதமும்

ப.—அநந்தரம், அவனுடைய அதிஶயித வ்யாமோஹத்தைச் சொல்லிக் கூப்பிடாநின்றுகொண்டு, அவ்வூரைநோக்கி வணங்குவது, அவ்வூரின்பேரைப் பிறர்சொல்லக் கேட்க ஆசைப்படுவதாகாநின்றாள்; இவளுடைய அதிப்ராவண்யமிருந்தபடியால் 'இவள் ஸ்ரீபூமிநீளைகளிலே அந்யதமையோ?' என்று அதிசங்கைபண்ணுகிறாள்.

பின்னைகொல் - நிரதிஶயஸௌந்தர்யபூதையான நப்பின்னைப்பிராட்டியோ? நிலப்பூமிக்கு நிர்வாஹிகையாய், மா - ஶ்லாக்யையான, மகள்கொல் - ஸ்ரீபூமிப்பிராட்டியோ? திருமகள்கொல் - அவனுக்கு நிரதிஶய ஸம்பத்ரூபையானலக்ஷ்மியோ? பிறந்திட்டாள் - இப்படி பிறந்திருக்கிறவள். (இது), என்ன-, மாயங்கொலோ - ஆஶ்சர்யமோ! இவள்-,

acharya.org

நெடுமாலென்றே - அவன் வ்யாமோஹாதிசயத்தைச்சொல்லி, நின்று-, கூவும் - அழைபா நின்றாள்; (அவ்வளவே யன்றிக்கே அந்த வ்யாமோஹமடியாக), அவன்-, முன்னி-முற் பாடனாய், வந்து-, நின்றிருந்து - நிற்பதிருப்பதாய், உறையும் - நித்யவாஸம்பண்ணுகிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, சென்னியால் - தலையாலே, வணங்கும் - வணங்காநிற்கும்; (தான் சொல்லுமதிலும்), அவ்வூர்த்திருநாமம் - அவ்வூர்த் திருநாமத்தை, கேட்பதே-பிறர்சொல்லக்கேட்கையே, சிந்தை - நினைவாயிராநின்றாள்.

இ.—பத்தாம்பாட்டில், அவனாலல்லது செல்லாதபடியான இவளுடைய ப்ரா வண்யாதிசயத்தைக்கண்டு, பிராட்டிமாரிலே ஒருத்தியோ! என்று சங்கிக்கிறாள். [பின்னை கொல்] - "நப்பின்னைப்பிராட்டி பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே, ஸ்ரீபூமிப் பிராட்டி பிறந்திட்டாளோ? எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக்கொடுக்கும் பிராட்டிதானே பிறந்திட்டாளோ?" என்பர்கள் பூர்வர்கள். ஸர்வேஶ்வரனுக்கு ஸம்பத்தாயிருக்கு மவள் பிறந்தாளோ, அதுக்கு விளைநிலமாயிருக்குமவள் பிறந்தாளோ, அவ்விளைநிலமியி னுடைய மலர்வுபமாயிருக்குமவள் பிறந்தாளோ? அங்ஙனன்றியே, அவர்களுக்கும் இவள்படி இல்லாமையாலே அவர்களோடு ஒப்பன்று; லோகமெல்லாம் வாழ்கைக்கு இவள் ஒருத்தி பிறந்தாளோ என்றுமாம். "விஷ்ணுநாஸ்தி ஸௌவீரே" என்றாற் போலே நாய்ச்சிமார்பக்கலிலும் ஒருவகைக்குஒப்புச்சொல்லலாம்படியிருக்கையாலே கதிர்பொறுக்குகிறாள். "உபரிஷ்டாதுஶ்ஶோஷாணாம்ஸாயுஜ்யம்நாம்யஸ்ஸுஷாஹவஸ" என்கிற படியே எல்லார்க்கும் இவரை ஒப்பாகச்சொல்லலாம்; இவர்க்கு ஒப்பாவார் ஒருவரு மில்லை. [என்னமாயங்கொலோ] - இவள் திருநாமத்தைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள், இது என்ன ஆஶ்சர்யமோ? இவ்விபூதியிலே இங்ஙனேயிருப்பாரையும் காணலாமா காதே! அவன் தன்பக்கல் பண்ணின வ்யாமோஹாதிசயத்தைச் சொல்லிக் கூப்பிடா நின்றாள். [முன்னி இத்யாதி] - தன்னுடைய வ்யாமோஹத்துக்கு அவன் க்ருஷிபண் ணினபடி. முற்பாடனாய்வந்து, அவன் நிற்பதிருப்பதாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணு நிற்கும் ஊர். பசியன் சோறுதாழ்த்தால் படுமாபோலே. [சென்னியால் வணங்கும்] - தன்கரங்கள் கூப்பித்தொழுகையும் ப்ரார்த்யமானபடி; இருந்தவிடத்தே இருந்து தலை யைச்சாய்க்கும்படி யானாள். இவள் அகவாய் ஓடுகிறது அவ்வூர்த்திருநாமங்கேட்கை யிலே. "திருநாமத்தைக் கேட்கவல்லேனே" என்றாயிற்று இவள் மனோரதம். "இவள் வாயாலே சொல்லக்கடவ திருநாமத்தை நாம் சொல்லிக் கெடுக்கக்கடவோமல்லோம்" என்று அவ்வூர் என்கிறாள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அவனாலல்லது செல்லாத இவளுடைய ப்ராவண் யாதிசயத்தைக் கண்டு, பிராட்டிமாரிலே யொருத்தியோ? என்று சங்கிக்கிறாள்.

[பின்னைகொல்] - பின்னை பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே, ஸ்ரீபூமிப் பிராட்டி பிறந்திட்டாளோ? அன்றிக்கே, எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக் கொடுக்கும்

பத்தாம்பாட்டு—பின்னைகொல் இத்யாதி. "பின்னைகொல்" இத்யாதியைக் கடாகூத்தவ தாரிகை - அவனாலல்லது இத்யாதி.

"பிறந்திட்டாள்" என்றத்தை - மூன்றுபேரிடத்திலும் அந்வயித்தர்த்தம் - பின்னைபிறந் திட்டாளோ என்று தொடங்கி. இவ்வேற்றங்களையென்றது - இவளுக்குண்டான ஏற்றங்களையென்று

acharya.org

பிராட்டிதானே பிறந்திட்டாளோ? ஸர்வேஶ்வரனுடைய ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்திட்டாளோ? அஸ்ஸம்பத்துவிளையும் பூமியாயிருக்குமவள் பிறந்தாளோ? அவ்விளைபூமியினுடைய ஸலரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ? அங்ஙனன்றிக்கே, [பிறந்திட்டாளோ] - அவர்களுக்கு இவள்படி யில்லாமையாலே அவர்களோப்பன்று; லோகமெல்லாம் வாழ கைக்கு இவளோருத்தி பிறந்தாளோ! என்றுமாம். "விஷ்ணுநாஸத்ருஶோவீரே" (விஷ்ணுநாஸத்ருஶோவீர்யே) என்றாற்போலே, நாய்ச்சிமார் பக்கலிலேயும் ஓரோவகைக்கு ஒப்புச் சொல்லலாயிருக்கையாலே கதிர்போறுக்குகிறாள். 'உபமாநமஶேஷாணாம் லாயஸ்ஸாம்யஸ்ஸதாபவத்' (உபமாநமஶேஷாணாம்ஸாதாநாம்யஸ்ஸதாபவத்) என்கிறபடியே இவரை எல்லார்க்கும் ஒப்பாகச் சொல்லலாய் இவர்க்குஒப்பாவார் ஒருவருமில்லைகாணும். [என்னமாயங்கொலோ] - ஹ்ரவத்விபூதியில் கூடாததில்லையாகாதே! இதென்ன ஆஶ்சர்யந்தான்! [இவள் நெடுமாலென்றே நின்றுகூவும்] - தன்பிச்சைக் காற்கடைக்கொண்டு, அவன்பிச்சைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள். [ஆல்] - ஆஶ்சர்யத்திலே, அசை. [முன்னி இத்யாதி] - தன்னுடைய வ்யாமோஹத்துக்கும் அவன் க்ருஷிபண்ணின படி. முற்பாடனாய்வந்து அவன் நிற்பதிருப்பதாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிறவூர். பசியன், சோறுதாழ்த்தால் படுமோபோலே. [சென்னியால்வணங்கும்] - *தன்கரங்கள் கூப்பித்தொழுகையும் ப்ரார்த்யமானபடி. இருந்தவிடத்தேயிருந்து தலைசாய்க்கும்படியானாள். [அவ்வூர் இத்யாதி] - அவ்வூர்த் திருநாமங்கேட்கச் செவிதாழ்க்கையிலே இவளுக்கு மநோரதம். இவள், அவ்வூரேன்கிறது - பேண்பிள்ளை சொன்னாற்போலே யிராமை. ஆனால்ஒருகால் சொன்னாளே? என்னில், "அது வறைமுறுகலாகையிறே பின்பு தவிர்ந்தது" என்றருளிச்செய்வர். (கo)

படி. கீழ்வாக்யத்தை ஒருவிசேஷந்தோற்ற வ்யுத்க்ரமமாகவிவரிக்கிறார் - ஸ்ரீவேஶ்வரனுடைய இத்யாதி. கீழே - மூன்றுபிராட்டிமாரிடத்திலும் "பிறந்திட்டாள்" என்றத்தை யந்வயித்தருளிச்செய்து, அங்ஙனன்றிக்கே, "பிறந்திட்டாள்" என்றத்தை ப்ரத்யேகபதமாக்கி அர்த்தாந்தரம் - அங்ஙனன்றிக்கே இத்யாதி. முந்தின அர்த்தத்தில், மூவரையும் ஒப்பாகச் சொல்லுவானென்? என்ன - விஷ்ணுநா இத்யாதி. "ஓரோவகைக்கு" என்கிறதென்? ஸ்வதாஸாம்யம் சொன்னாலோ? என்ன - உபமாநம் இத்யாதி. இது - இரண்டாமர்த்தத்துக்கு அநுகுணம். த்விதீயார்த்தத்திலே, தோழியின்ஈடுபோடு - பகவத்விபூதியில் இத்யாதி. அதாவது - அநிவிலக்ஷணையான இவள் இந்த விபூதியிலே திருவவதரிக்கையாலே, பகவத்விபூதியில் இதென்ன ஆஶ்சர்யமென்று கருத்து. மாயம் - ஆஶ்சர்யம், உறையுமென்னாதே, "நின்றிருந்து" என்ற விசேஷிக்கிறதுக்குபாவம் - பசியன் இத்யாதி. இத்தால் - நிற்பதிருப்பதாகிற இரண்டையும் ஏகஸ்தலத்திலே செய்தானென்கையாலே, ஈஶ்வரனுக்கு ஆழ்வாரை யநுபவிக்கையில் உண்டான விடாயெல்லாந் தோற்றுகிறதென்றபடி. ப்ரார்த்யமானபடியென்றது - கையெடுத்துத் தொழுகைக்கும் பலமில்லாதே போயிற்று என்றபடி. செவிதாழ்க்கையிலே இவளுக்கு மநோரதமென்றது - பலஹாநியாலே கேட்கைதானும் ப்ரார்த்யமாய்விட்டதென்றபடி. வறைமுறுகல் - சருகிப்போகை. அஸாரமென்றபடி. இவள் நெடுமாலென்றே நின்றுகூவும்; முன்னி வந்தவன் இத்யாரப்ய, கேட்பதுசிந்தை; பின்னைகொல் என்றுதொடங்கி, பிறந்திட்டாள்; என்னமாயங்கொலோ? என்றந்வயம். "யஶோ தாஸரதாஸுஸுஸுவாஹிமுணா நாரோகரஸுயா। உபமாநமஶேஷாணாம்" இத்யாதிப்ரதமேஶ்லோ, பஞ்சதஶோ. (கo)

---

acharya.org

பதினோராம் பாட்டு.

சிந்தையாலுஞ்சொல்லாலுஞ் செய்கையினாலுந்தேவபிரானையே
தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர்சடகோபன்
முந்தையாயிரத்துள் இவை தோலைவில்லிமங்கலத்தைச்சொன்ன
செந்தமிழ்ப்பத்தும்வல்லார்அடிமைசெய்வார் திருமாலுக்கே.

ஆ.—(சிந்தையாலும்.) - வாங்மநஃ காயவ்ருத்திகளாலே தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த குருகூர்ச்சடகோபன் சொன்ன ஸகலவேதஸாரபூதமான ஆயிரந்திருவாய்மொழியிலும் ஸாரபூதமான இத்திருவாய்மொழியை வல்லார், எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் அபிமத ஸர்வஶேஷவ்ருத்தியும் பண்ணுவாரென்கிறார்.

ஒ.—நி஗மத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தை வ்யக்தமாக்கா நின்றுகொண்டு, இத்தைக்கற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறார். [சிந்தையால் என்று தொடங்கி] - மநோவாக்காயங்களினால் திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானையே எல்லா உறவுமுறையும் என்று பற்றுவதும் செய்து, திருநகரியில் உள்ளார்க்கு ஸர்வவிதமுமான ஆழ்வார் அருளிச்செய்த. [முந்தையாயிரம்] - அர்த்தப்பழமையாலே பழையதான ஆயிரம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸ்ரீயஃபதிக்கு நித்யகைங்கர்யபரராவர்கள் என்று ஫லத்தை அருளிச்செய்கிறார்.

தேவபிரானையே - தேவபிரானையே, (ஹிதபரத்வத்தாலும் ப்ரியபரத்வத்தாலும்), தந்தை - தந்தையும், தாய்-தாயும், என்று - என்று அறுதியிட்டு, (இத்திருவாய்மொழியிற்சொன்ன கணக்கிலே), சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் - கரணத்ரயத்தாலும், அடைந்த - ஆஶ்ரயித்தவராய், வண் - "அன்னையாயத்தனாய்" என்கிற ஸ்ரீமதுரகவிகளைப்போலே தம்மைப்பற்றியிருக்கிற, குருகூரவர் - திருநகரியிலுள்ளார்க்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், முந்தை - பழையதான வேதார்த்தத்துக்கு ப்ரகாஶகமான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு, தொலைவில்லிமங்கலத்தை - திருத்தொலைவில்லி மங்கலத்தைப்பற்ற, சொன்ன- அருளிச்செய்த, செம் - அர்த்த ப்ரகாசநத்தில் ஆர்ஜவத்தையுடைய, தமிழ் - தமிழான, இவைபத்தும் - இப்பத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், திருமாலுக்கு - ஸ்ரீயஃபதியான ஸர்வேஶ்வரனுக்கு, அடிமைசெய்வார் - அடிமைசெய்யுமவர்களாவர். இது- எழுசீராசிரியவிருத்தம்.

இ.—நி஗மத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தைச் சொல்லிக்கொண்டு, இது கற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறார். [சிந்தையாலும் இத்யாதி] - மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட அவன் பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. "இரங்கி" என்றும், "மணிவண்ணவோவென்று கூவுமால்" என்றும், "தன்கரங்கள் கூப்பித்தொழும்" என்றும் - மூன்றாலும் இவர்க்கு உண்டான ப்ராவண்யாதிஶயமிறே இத்திருவாய்மொழியில் சொல்லிற்று. [தேவபிரான்

acharya.org

இத்யாதி] - * அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்துத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே ஸுலபனாய் இருந்தவனையே ஸர்வவிதபந்துவுமென்று, அப்படியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனே தமக்கு ஸர்வவிதபந்துவுமானாற் போலே, அவ்வூரிலுள்ளார் "ஆழ்வாரே எல்லாஉறவுமுறையும்" என்றாயிற்று இருப்பது. "அன்னையாயத்தனாய்" என்னும் ஸ்ரீமதுரகவிகளைப்போலே. [முந்தையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தை அருளிச்செய்கையாலே, ஸர்வேஶ்வரன் இதரஸஜாதீயனானாற்போலே வேதமும் தமிழாய்வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விஶதமாகக்காட்டுமது. இப்பத்தை அப்யஸிக்கவல்லார் ஸ்ரீயःபதிக்கு அடிமைசெய்யப்பெறுவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற்கருத்தை வ்யக்தமாக்காநின்று கொண்டு, இத்தைக் கற்றவர்கள் இதுக்குஅநுரூபமான கைங்கர்யத்தைப்பண்ணப்பெறுவர் என்கிறார்.

[சிந்தையாலும் இத்யாதி] - மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட அவன் பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. "இரங்கி" என்றும், "மணிவண்ணவோ" என்றும், "தன்கரங்கள் கூப்பித்தொழும்" என்றும், மூன்றாலும் - இவர்க்குண்டான ப்ராவண்யாதிஶயமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று. [தேவபிரானித்யாதி] - *அயர்வறுமமரர்களுக்கு அதிபதியாயிருந்துவைத்துத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே ஸுலபனாயிருந்தவனே ஸர்வவிதபந்துவுமென்று அறுதியிட்டபடியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனே யிவர்க்கு ஸர்வவிதபந்துவுமானாற்போலே, அவ்வூரிலுள்ளார் ஆழ்வாரையே எல்லாவுறவுமுறையாகப் பற்றியாயிற்றிருப்பது. "அன்னையாயத்தனாய் எனையாண்டிடும் தன்மையான்" என்றும், "மாதாவிதாயுவதயஸ்தநயாவிஹூதிஸ்ஸர்வம்" (மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்ஸர்வம்) என்றும் சொல்லுகிறபடியே இருப்பர்கள். [முந்தையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தை யருளிச்செய்கையாலே. ஸர்வேஶ்வரன் இதர ஸஜாதீயனாய் அவதரித்தாற்போலே, வேதமும் தமிழாய்வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக்காட்டுவது.இத்தை அப்யஸிக்கவல்லார் ஸ்ரீயःபதிக்கு அடிமை செய்யப்

நிகமம்.—சிந்தையாலும் இத்யாதி. "பத்தும்வல்லாரடிமைசெய்வார் திருமாலுக்கு" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழியில் இத்யாதி. கருத்தையென்றது - கரணத்ரய ப்ராவண்யத்தை. இது "சிந்தையாலும்" இத்யாதியைக்கடாக்ஷித்து.

"சிந்தையாலும்" இத்யாதியாலே கரணகார்யங்களையிட்டு, கரணங்களைலக்ஷிக்கிறது. உக்தத்தையன்றோ நிகமிப்பது. கரணத்ரயப்ராவண்யம் கீழுக்தமோ? என்ன - இரங்கி இத்யாதி. "வண்குருகூர்" என்று - * மஞ்சாக்ஷோரசந்திபோலே, குருகூரிலுள்ளாரைச்சொல்லுகிறது. "அவர்" என்கிற தச்சப்தம் - ப்ரக்ருதபராமர்சியாகையாலே, கீழுக்தமான தந்தைதாயைச்சொல்லுகிறது. வண்மை-அழகு. ஆக, வண்குருகூரிலுள்ளார்க்கு, அவர்சடகோபன் - தந்தைதாயான சடகோபனென்று ஸப்தநிர்வாஹம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் - அவனேயிவர்க்கு இத்யாதி. அப்படியிருப்பர்களோ? என்ன - அன்னையாய் இத்யாதி. மாதாவும்பிதாவும் என்னையடிமைகொள்ளுமாசார்யனுமாகையே ஸ்வபாவமாகவுடையவர் இத்யர்த்தம். தாம் இப்போதருளிச் செய்ததாயிருக்க, "முந்தையாயிரம்" என்கிறதென்? என்ன - பழையதான இத்யாதி. பரிஹாராந்தரம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. "பழையதான

acharya.org

பெறுவர். பெருமாளும் பிராட்டியும் சேவிருக்க இளையபெருமாள் அடிமைசெய்தாற் போலே, விஶிஷ்டவேஷத்திலே அடிமைசெய்யப்பெறுவர். (கக)

வேதார்த்தத்துக்கு ப்ரகாசகமானவாயிரம்" என்றுஉரையில் ஶப்தார்த்தம். ஸத்ருஷ்டாந்தமாக விவரணம் - பெருமாளும் இத்யாதி. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி. — தஸ்யாவி ஶாநஸதயாந ஹவஸ்ய வாஹ்ய ஸம்ஶ்லேஷணைகவிதிஶரீரஃ । ஶுதாந ஶுஜநஶாதநி நிஷ்ஶ்ரேஷ்டம் நிநெயிவஶிதிவணொய ஶெஷஃ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி. — ஶஹாவகுாதஶுதிஶ ஸ ஶுதயாஸிஸ ஶாயிகுஸ ஶுஃ தஉஹொடாஶுஹாவாடிஶ ணஸாவிஜாக்ஷகுஸி ஹ்ஹநெவஃ । ஶெவீஸிஹ்ஸெவ்ஹாவாடிகிஸ ஸுஹதயாஹ்ஸெஷ திஸிஹுஹாவாடி ஸ ஹுஸுஸாந ஶாரிவிபுவடுயதிஹாரிதுவொஹுஹாரிஃ॥ சுச॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

துவளறுசீர்மால்திறத்துத்தொன்னலத்தால்நாளுந்
துவளறுதன்சீலமெல்லாஞ்சொன்னான் - துவளறவே
முன்னமனுபவத்தில்முழ்கிநின்றமாறனதில்
மன்னுமுவப்பால்வந்தமால்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், சீயர்திருவடிகளே ஶரணம்.

---

acharya.org

ஆறாந்திருவாய்மொழி: மாலுக்கு - ப்ரவேசங்கள்.

ஆ.—(மாலுக்கு.)-இப்படி * மரங்களும்இரங்கும்வகை "மணிவண்ணவோ" என்றுகூப்பிட்டும் அவனைக் காணப் பெறாமையாலே மோஹதசாபந்நையாய், ஆத்மாத்மீயங்களை இழந்து அத்யந்தமவஸந்நையான இவளைக்கண்டு திருத்தாயார் இவளிலும் அதிமாத்ரவ்யஸநாபிபூதையாய்க்கொண்டு, எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்களுக்குத் தோற்று இவளிழந்தவற்றைச்சொல்லி அலற்றுகிறாள்.

ஒ.—ஆறாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியில் பிறந்த வ்யஸநம் முறுகடியிடுகையாலே இப்பிராட்டியும் மோஹித்து, அது பொறுக்கமாட்டாமை இவளுடைய தோழியும் மோஹித்ததசையிலும், இவளை ஜீவிப்பிக்கைக்கு விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயாரானவள், இவளுடைய வலயாதிகள் காணக்காண ஶிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லி ஶோகிக்கிறாள்.

ப.—ஆறாந்திருவாய்மொழியில், இப்படிகரணத்ரயத்தாலும் பகவத்விஷயத்திலே ப்ரவணரான இவர், ப்ராவண்யஜநகனான அவனுடைய ஆஶ்ரித வ்யாமோஹப்ரகாஶகமான ஆகாரவிஶேஷங்களையும், அவர்களுக்கு போக்யமான ஆயுதாதிபூர்த்தியையும், ரக்ஷணப்ரகாரத்தையும், ஸர்வப்ரகாரரக்ஷகோபகாரகத்வாதிஶயத்தையும், ப்ரமாணப்ரஸித்த ரக்ஷணப்ரகாரத்தையும், ஆகர்ஷகமான அவயவசோபையையும், அவயவசோபையோடுகூடின ஆபரணசோபையையும், விரோதிநிரஸநஸ்வபாவத்தையும், அபேக்ஷிதஸித்தியால்வந்த அத்யந்தோச்சராயத்தையும், ஶேஷித்வபோக்யத்வாதியுக்தமான ஸர்வாத்மஸ்வரூபத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதஸ்வபாவனான ஸர்வேஶ்வரன்விஷயத்தில் தமக்குப்பிறந்த நிரவதிகப்ரவண்யக்ருதமான பாரவஶ்யாதிஶயத்தாலே, ஆத்மீய பதார்த்தங்களெல்லாம் அவனிட்டவழக்காம்படி அவற்றில் ஸ்வாம்யநிவ்ருத்தி தமக்குப் பிறந்தபடியைக்கண்ட பரிவர் வித்தராய்ச் சொன்னபாசுரத்தை, நாயகன்பிரிவாற்றாத நாயகியினுடைய ஆபரணசோபையோடு ஆஜ்ஞாரூப்யத்தோடு ஆத்மகுணத்தோடு வாசியற அழிந்துவருகிறபடியைக்கண்ட செவிலி இரங்கின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் இவளுக்குப்பிறந்த ஔஸுக்யமுற்றி வ்யஸநம் அதிஶயிக்கையாலே மோஹங்கதையாய், அதுபொறுக்கமாட்டாமையாலே இவளுடையதோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார், இவளுடைய வலயாதிகள் காணக்காண ஶிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக்கூப்பிடுகிறாள். நகரபத்தநாதிகள் வேவப்புக்கால், "அதுவிழுந்தது, உதுவிழுந்தது" என்னுமாபோலே, விரஹாக்நியாலே தன்மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள். கீழில் திருவாய்மொழியில்-அலாபதசையோபாதி, "கிடையாது" என்றாலும் விடமாட்டாதபடி தன்னுடைய மநோவாக்காயங்கள் இவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடி சொல்லிற்று; இதில் - அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது.

acharya.org

ஈடு.—கீழ் இவளுக்குப்பிறந்த உமைமுற்றி வ்யஸநம் அதிசயிக்கையாலே மோஹங்கதையாய்க்கிடக்க, அதுகண்டு ஆற்றாளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார் இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதிலமாகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக்கூப்பிடுகிறாள். ஓரோநகர பத்தநாதிகள் வேவப்புக்கால், "ஒரு மாடம் முறிந்தது, மாளிகை முறிந்தது" என்பாரைப்போலே. (விரஹாக்நியாலே தன் மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள்). கீழிற்றிருவாய்மொழியில் அலாபசுமையாய், "கிடையாது" என்றாலும் விடமாட்டாதபடி தம்முடைய மநோவாக்காயங்கள் அவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடிசொல்லிற்று; இதில், அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது. "நெடுமாலேன்றே நின்றுகூவுமால்" என்று தன் வ்யாமோஹத்தைக் காட்டியாயிற்று இவளையிப்படி விளைத்தது; பெரியவன் தாழநின்றால் போறுக்கலாயிராதிறே. "ராகவேணாஹயெடத்தேஹஸந்த:" (ராகவேணுபயேதத்தே ஸந்ந:) என்று இவன் தறைப்படும்படியிறே அவன் வ்யாமோஹம் இருப்பது.

(த்வராநுகுணமான அநுபவஅலாபத்தாலே ஆற்றாமைமுறுகி, கீழ்ச்சொன்னதசை கலங்கி, ஸம்பந்தஜ்ஞாநமும் தரிப்புக்கு உறுப்பாகையன்றிக்கே தளர்த்திக்கு உறுப்பாய்விட, உபாயாத்யவஸாய மித்தனையும் கலங்காமலிருந்து, ப்ராப்யஅலாபரிபந்தமான பாரவஶ்யத்தாலே, *ஏறாளுமிறையோனில் - தாம் "வேண்டா" என்று உபேக்ஷித்த ஆத்மாத்மீயங்களெல்லாம், தன்னடையே அழிந்து செல்லுகிறபடியை அநுஸந்திக்கிறார்.)

முதற்பாட்டு.

மாலுக்கு வையமளந்தமணாளற்கு
நீலக்கருநிற மேகநியாயற்கு
கோலச்செந்தாமரைக் கண்ணற்குஎன்கோங்கல
ரேலக்குழலி இழந்ததுசங்கே.

ஆ.—எம்பெருமானுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யத்துக்கும், ஆஶ்ரிதார்த்தமான த்ரைலோக்யவிக்ரமணரூப திவ்யசேஷ்டிதத்துக்கும், ஸ்நிக்஧மாயதிகம்பீரமாய் வார்ஷிக

மாலுக்குப்ரவேஶே; கீழ் - தோழிவார்த்தையாயிருக்க, இதில் - தாய்வார்த்தையாகைக்கு ஹேதுவேதென்கிற சங்கையிலே ஸங்கதி-கீழ்இவளுக்கு இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஓரோ நகரம் இத்யாதி. 'சிதிலமாகிறபடியைக்கண்டு' என்றவாக்தரம், 'ஓரோநகரபத்தநாதிகள்' இத்யாதி வாக்யத்தை அநுஸந்திப்பது. நகரம் - ராஜதாநி. பத்தநம் - பேட்டை. "வேவப்புக்கால்" என்றதுக் கறுகுணமாக, விரஹாக்நியாலே தன்மகளிழந்தவற்றைச் சொல்லுகிறாளென்று தார்ஷ்டாந்திகம் கண்டு கொள்வது.கீழிற்றிருவாய்மொழியும் இதுவும் - விஶ்லேஷமாயிருக்க, அதிற்காட்டில் இதுக்குவாசியே தென்ன - கீழிற்றிருவாய்மொழியில் இத்யாதி. இதுக்குஹேதுவேதென்ன - நெடுமால் இத்யாதி. அவன்வ்யாமோஹங்கண்டால் இவளுக்குஇப்படி ஈடுபடவேணுமோ? என்ன - பெரியவன் இத்யாதி. இத்தை ஸத்ருஷ்டாந்தமாகக்காட்டுகிறார் - ராவவெண இத்யாதி. "ராவவெணாஹயெடதெஹஸந்தெராவணாநுஜ: । விஶிஷணோஶஹாவ்ராஜோ ஹ்ருதிம் ஸவேவொக யது". இதியுத்தகாண்டே, [கசு-க].

acharya.org

மான காளமேகத்தினுடைய நிறத்தையும் குளிர்த்தியையும் பெருமையையும் அழகையு முடைத்தான திருமேனிக்கும், மேகத்திலே அழகியதொரு தாமரைத்தடாகம்போலே யிருந்த திருக்கண்களுக்கும்தோற்று, அந்தநிரவயிகஸௌந்தர்யத்தைபுடையனான எம் பெருமானையுங்கூடத் தோற்பிக்கும் திருக்குழலழகையுடையளான என் பெண்பிள்ளை, தன்னுடைய சங்கு இழந்தாளென்கிறார்.

ஒ — முதற்பாட்டில், இவள் திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய குணசேஷ்டிதாதிகளிலே அகப்பட்டு வளையிழந்தாள்என்கிறாள். [மாலென்றுதொடங்கி]- ஆஸ்ரிதவிஷயத்தில் மிகவும்வ்யாமுக்தனாய் அதிமாநுஷசேஷ்டிதங்கள்பண்ணி ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதங்களை முடித்துக் கொடுத்த இச்செயலாலே இவளை அகப்படுத்தி இவளுக்குபோக்தாவானவனுக்கு. [நீலக்கருநிறமென்றுதொடங்கி]- அறநெய்த்துக்கறுத்த நிறத்தையுடைய மேகம்போலே ஸ்ரமஹரமானநிறத்தையும் அதினுடைய ஔதார்யாதிகளையும் உடையனாய் ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதம்முடித்துக் கொடுக்கப்பெற்ற ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே அழகுபெற்ற திருக்கண்களையும் உடையவனுக்கு. விஶேஷணந்தோறும் 'அவனுக்கு' என்கிறது,தனித்தனியே ஈடுபடுத்துகையாலே. [என்னென்று தொடங்கி] - ஏலம்போலே நறுநாற்றத்தைக் கமழானின்ற குழலையுடைய என்மகள்.

ப.—முதற்பாட்டில், வ்யாமோஹகார்யமான வ்யாபாராதிகளையுடையவனுக்கு நிரதிஶயபோக்யமான வேஷத்தையுடைய பெண்பிள்ளை வளையிழந்தாளென்கிறாள்.

மாலுக்கு - ஆஸ்ரித வ்யாமோஹநிரூபிதஸ்வரூபனாய், (அந்தவ்யாமோஹமடியாக), வையம் - பூமியை, அளந்த - (வேறொருவர் அபிமாநியாதபடி) அளந்து அநந்யார்ஹமாக்கி, மணாளற்கு - அவ்வபதாந ப்ரகாசநத்தாலே தனக்கு போக்தாவாய், (அந்த போகவ்யாமோஹமடியாக), நீலம் - ஸ்நிக்தமாய், கரு - கருத்த, நிறம் - நிறத்தையுடைத்தான, மேகநியாயற்கு - மேகத்தோடு ஸமாநந்யாயமான ஆகாரத்தையுடையனாய், (அந்தவ்யாமோஹப்ரகாசகமாய்), கோலம் - உர்ஜிதாகாரமாய், செம் - சிவந்த,தாமரை- தாமரைபோலும், கண்ணற்கு - கண்ணையுடையனானவனுக்கு, என் - என்னுடைய, கொங்கு - தேனையுடைத்தாயுள்ள, அலர்-மலரையுடைத்தாய், ஏலம் - ஏலம்போலே ஸ்ரமஹரகந்தமான, குழலி - குழலையுடையவள், இழந்தது-, சங்கு- சங்குவளை. பதந்தோறும், அவனுக்கவனுக்கென்கிறது - தனித்தனியே அகப்படுத்துந் துறை என்கைக்காக; இப்படி மேலும் காண்பது.

இ.—முதற்பாட்டில், இவள் ஸ்ரீவாமநப்ராதுர்பாவத்தில் குணசேஷ்டிதாதிகளிலே அகப்பட்டு வளையிழந்தாள் என்கிறாள்.

[மாலுக்கு] - "நீ எனக்குவேண்டா" என்று அகன்று முடியப்புகுகிற ஊஶையிலே தன்செல்லாமையைக் காட்டிப் பொருந்தவிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தை உடையவனுக்கு. அவன் தன்பிச்சைக்காட்டியாயிற்று இவளைப் பிச்சேற்றிற்று. [வையமளந்த மணாளற்கு] - உகவாதாரையுங்கூட, தன்னை இரப்பாளனாக்கித் தன்திருவடிகளின்மேலே யிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தாலே அநந்யார்ஹமாக்கித்தனக்குபோக்தாவானவனுக்கு. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்தநிறத்தையுடைய மே஘ஸ்வபாவர்க்கு. ப்ரயோஜநநிரபேக்ஷமாகக் கொடுக்கையும், கொடுக்கப்பெறாதபோது உடம்புவெளுக்கை

acharya.org

யும், வ்யாமோஹமின்றிக்கே ஒழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஔதார்யமும் இருக்கிறபடி. [கோலச்செந்தாமரைக்கண்ணற்கு] - ஈர்ஷணீயமாய் வாத்ஸல்யத்தாலே சிவந்து விகாஸாதிகளை யுடைத்தான திருக்கண்களை யுடையவனுக்கு. "தாமரைத்தடங்கண் விழிகளின் அகவலைப்படுப்பான்" என்று கண்ணாலேயாயிற்று அகப்படுத்திக்கொண்டது. விசேஷணந்தோறும் தனித்தனியே 'அவனுக்கு' என்று, தனித்தனியே அகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள். தன்மகள்மேல் பட்ட காமபாணங்களை எண்ணுகிறாள்காணுந்தாயார்! ஏலம்போல்கமழாநின்றுள்ள நறுநாற்றத்தையுடைய மயிர்முடியை யுடைய என்மகள். கொங்கு - பரிமளம். இவள் மயிர்முடி ஒன்றுக்கும் தோற்றுக் குமிழி நீருண்ணுமவன்கிடீர் இவளை அழித்தான்; பங்களப்படைகொண்டு, தனிவீரஞ் செய்வாரை அழிக்குமாபோலே. [இழந்தது சங்கே] - இவளுக்குத்தோற்று அவன் இழக்குமத்தை இவள் இழந்தாள். சங்கு - வளை.

ஈடு.—முதற்பாட்டு. இவள் ஸ்ரீவாமநப்ராதுர்஭ாவத்தில் குணசேஷ்டிதங்களிலேயகப்பட்டு வளையிழந்தா ளென்கிறாள்.

[மாலுக்கு] - மின்னிடைமடவாரிலே, நீ எனக்கு வேண்டா வென்ன, நீஎனக்கு வேணுமென்று தடுமாறி நின்றநிலையைக் காட்டியாயிற்று இவளை இப்பாடு படுத்திற்று. ஸர்வேஶ்வரனை உத்கர்ஷந்தோற்ற நின்றாளாகில் இப்பாடுபடாள்கிடீர்! (வ்யாமோஹத்தையுடையவனுக்கு). [வையமளந்தமணாளற்கு] - உகவாதாரையுங்கூட விடமாட்டாத வ்யாமோஹம். "அழித்தா யுன்திருவடியால்" என்று இவளையும் தன்காற்கீழேயிட்டுக் கொண்டானிறே. அச்செயலுக்குஎழுதிக்கொடுத்தாள் இவளொருத்தியுமேயிறே; "மூவடி மண்கொண்டளந்த மன்னன்சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்" என்கிறாள்: அவனிரந்து மண்பெற்றான், இவளுகந்து பொன்பெற்றாள். உகப்பாலே பெறுமது உரைபெற்றிருக்குமே. [மணாளன்] - லோக்தா. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்தநிறத்தையுடைய மேகஸ்வலாவற்கு நியாயம்-ஸமம், ஒப்பு. ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கை

முதற்பாட்டு.—மாலுக்கு இத்யாதி. "வையமளந்தமணாளற்கு, இழந்ததுசங்கு" என்கிற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - இவள் ஸ்ரீவாமந இத்யாதி.

"மாலுக்கு" - வ்யாமுக்தனுக்கு. அந்த வ்யாமோஹந்தான்எதென்ன - மின்னிடை இத்யாதி. வ்யதிரேகித்துஹாவம் - ஸர்வேஶ்வரனை இத்யாதி. "வையமளந்த" என்றதுக்கு ஹாவம் - உகவாதாரையும் இத்யாதி வாக்யத்வயம். அதாவது - விமுகரான சேதநரையும் விடமாட்டாதே திருவுலகளந்தருளி யவர்களை ஸேஷமாக்கிக்கொண்டாற்போலே, ப்ரணயகோபத்தாலே விமுகையான இவளையும் "அழித்தாயுன் திருவடியால்" என்று அந்தமறத்தை மாற்றித் தனக்குஸேஷமாக்கிக்கொண்டானென்றபடி. "மணாளற்கு" என்றதுக்குஹாவம் - அதிசேயலுக்த இத்யாதி. மணாளன் - நாயகன். அப்படி எழுதிக்கொடுத்திருப்பளோ? என்ன - மூவடி இத்யாதி. மஹாபலிபக்கலிலே மூவடி மண் இரந்துகொண்டளந்த மன்னனுடைய செயலுக்கே வ்யாமுக்தையாய் விவர்ணையானேன் இத்யர்த்தம். திருமொழி ஒன்பதாம்பத்து நாலாந்திருமொழி இரண்டாம்பாட்டு. "முன்னங்குறளுருவாய்" இத்யாதி. இப்பாசுரத்துக்கு ரஸோக்தியாகபாவம்-அவனிரந்துஇத்யாதி வாக்யத்வயத்தாலே. உரைபெற்றிருக்கையாவது, உரையென்று - மாற்றாய், மாற்றேறி யிருக்குமென்னுதல்; உரையென்று - கொண்டாட்டச்சொல்லாய், லௌகிகருடையகொண்டாட்டத்தை யுடைத்தாயிருக்கும் என்னுதல். "நியாயம்" என்று ஸ்வபாவமாக அருளிச்செய்து, அர்த்தாந்தரம் - நியாயம் ஸமம்ஒப்பு என்ற. ஸ்வபாவமானபோது, மேகம்போன்ற ஔதார்யாதிகளையுடையவற்கென்றும், ஒப்பானபோது, மேகம்போன்றவடிவையுடையவற்கென்றும் அர்த்தங்கண்டுகொள்வது. மேகஸ்வபாவமேதென்ன - ப்ரயோஜந இத்யாதி.

acharya.org

யும், கொடுக்கப்பெறுதபோது உடம்பு வெளுக்கையும். வ்யாமோஹமின்றியே யோழிந் தாலும் விடவொண்ணுத வடிவும் ஔஜ்வார்யமுமிருக்கிறபடி. [நீலக்கருநிறமேகநியாயற்கு]- மஹாவலியைவடிவைக்காட்டிஅபஹரித்தாற்போலேகாணும் இவளையும் வடிவைக்காட்டி அபஹரித்தபடி. இவள் பிச்சேறுகைக்கிட்ட மை யிருக்கிறபடி. *மைப்படிமேனியிறே. [கோலச் செந்தாமரைக்கண்ணற்கு] - ஆர்ஜவீயமாய், வாத்ஸல்யத்தாலே சிவந்து, விகா ஸாதிகளையுடைத்தான திருக்கண்களையுடையவனுக்கு. ''தாமரைத்தடங்கண்விழிகளின் அகலலைப்படுப்பான்''என்று கண்ணுலேயாயிற்று அகப்படுத்திக்கொண்டது. விசேஷணந் தோறும் அவனுக்குஎன்று தனித்தனியே யகப்பட்ட துறைகளைச் சொல்லுகிருள். [மால்இத்யாதி]-தன்மகள்மேல்பட்ட அம்புகளையெண்ணுசிருள்; இதோருகுத்து, இதோரு வெட்டு, இதோரம்பு என்று. [என்கோங்கலரேலக்குழலி] - மதுஸ்யந்தியாநின்றுள்ள பூவையுடைத்தாய், நறுநாற்றத்தையுடைத்தான குழலையுடைய என் பெண்பிள்ளை. கோங் கேன்பது - தேன். அலரேன்பது - பூ. ஏலம் - நறுநாற்றம். இவள் மயிர்முடியொன்றுக்குந் தோற்றுக் குமிழிநீருண்ணுமவன்கிடீர் இவளையழித்தான்! பங்களப்படைகொண்டு, தனி வீரம் செய்வாரை யழிக்குமாபோலே. [இழந்ததுசங்கே] - இவள் மயிர்முடிகண்டு அவ ளிழக்கக்கடவத்தை இவ ளிழந்தாள். சங்கு - வளை. (க)

நெய்த்து - பளபளத்து. ''மாலுக்கு''என்ற பதத்திலேநோக்காக அர்த்தத்வயத்தையுங்கூட்டிபாவம் - வ்யாமோஹமின்றியே இத்யாதி. ''வையமளந்தமணுளற்கு'' என்றதோடே ''நீலக்கருநிறம்'' இத் யாதியைக்கூட்டிபாவம் - மஹாவலியை இத்யாதி. ''நீலக்கருநிறம்''என்ற விசேஷணத்துக்கு பாவம் - இவள்பிச்சேறுகைக்கு இத்யாதி. திருமேனி கறுத்திருக்குமோ? என்ன - மைப்படிமேனி யிறே என்று. அஞ்சநத்தின்வடிவுபோலேயிருக்கிற திருமேனி இத்யர்த்தம். கண்ணைச்சொன்னதுக்கு பாவம் - தாமரை இத்யாதி. ஓரிடத்திலே, ''அவனுக்கு'' என்னவமைத்திருக்க, ப்ரதிபதம் ஷஷ்ட்யந்த மாகச்சொன்னதுக்குபாவம் - விஶேஷணந்தோறும் இத்யாதி. அதாவது - ''மாலுக்கு'' என்று தொடங்கி - வ்யாமோஹகுணத்திலும், சேஷ்டிதத்திலும், விக்ரஹத்திலும், கண்ணழகிலும் தனித் தனியே யகப்பட்ட துறைகளைச்சொல்லுகிருளென்றபடி. ''மாலுக்கு'' என்றுதொடங்கி, ''கோலச் செந்தாமரைக்கண்ணற்கு''என்னுமளவாக இவற்றைச்சரங்களாகரூபிக்கிருர் - தன்மகள்மேல் இத் யாதி. ரீத்யந்தரேணரூபணம் - இதோருகுத்து இத்யாதி. அம்பென்றது - கண்ணை. இரண்டாலும் - குணசேஷ்டிதங்கள் ஈடுபடுத்தும் என்றபடி. நறுநாற்றம் - ஸுகந்தம். ''மாலுக்கு'' என்றுதொடங்கி - குணம், சேஷ்டிதம், வடிவழகு, அவயவஸௌந்தர்யம், என்றுஅநேகத்தைச்சொல்லி; ''ஏலக்குழலி'' என்ற - இவளுக்குஒன்றுசொன்னதுக்குபாவம் - இவள் மயிர்முடி இத்யாதிவாக்யத்வயத்தாலே. பங்களப்படை - கூளப்படையான கூட்டுப்படை. பங்களப்படையென்றது - ''மாலுக்கு'' இத்யாதி யாற்சொன்னகுணுதிகளை. தனிவீரம்செய்வாரென்றது - * கொங்கலரேலக்குழலியை. ''தனிவீரம் செய்வாரைப் பங்களப்படைகொண்டு அழிக்குமாபோலே'' என்றுஅந்வயிப்பது. ''கொங்கலர்'' இத்யாதி விசேஷணங்களுக்குபாவம் - இவள் மயிர்முடிகண்டு இத்யாதி. (க)

---

acharya.org

இரண்டாம் பாட்டு.

சங்குவில்வாள்தண்டு சக்கரக்கையற்கு
செங்கனிவாய்ச் செய்யதாமரைக்கண்ணற்கு
கோங்கலர்தண்ணந்துழாய் முடியானுக்குஎன்
மங்கையிழந்தது மாமைநிறமே.

ஆ.—(சங்கு.) - அளந்தருளுகிறபோது வளர்ந்த ரதாங்க ஶங்க ஶார்ங்காதி திவ்யாயுதங்களை வந்தின வழகுக்கும், ஸ்வசரணநளிந யுகளஸம்ஸ்பர்ஶோஜ்ஜீவிதமான ஸர்வாத்மாக்களையுங்கண்ட ஹர்ஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்துக்கும் திருக்கண்களுக்கும், த்ரைலோக்யவிக்ரமணுபாஸநிதஶ்ரமாபநோதநார்த்தமாக *அயர்வறுமமரர்கள் அதிபரிமளதுலஸீமாலைகளைக்கொண்டு ஒப்பித்தருளின அழகுக்கும்தோற்று, என்மங்கை மாமை நிறமிழந்தா ளென்கிறாள்.

ஒ.—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய ஸ்ரீபஞ்சாயுத யாரணத்தாலேவந்த அழகிலே அகப்பட்டு என்மகள் தன்னுடைய அழகிய நிறத்தை இழந்தாள் என்கிறாள் [சங்கென்று தொடங்கி] - திருப்பவளத்தில் அழகும் திருக்கண்களில் அழகும்போலே தகுதியான ஸ்ரீபஞ்சாயுதங்களைத் திருக்கையிலே யரித்த அழகையுடையவனுக்கு. இவை ஸர்வாயுதங்களுக்கும் உபலக்ஷணம். [கொங்கலர்] - பரிமளம்மிகுகை.

ப—அநந்தரம், ஹேயமான ஆயுதாதிமூர்த்திகளையுடையவனுக்குத் தன் நிறத்தையிழந்தாளென்கிறாள்.

சங்கு வில் வாள் தண்டு சக்கரம் - த்ரைவிக்ரமாபதாநத்தில் உச்சரிதமாய்த் தோன்றின ஸ்ரீபஞ்சாயுதத்தையுடைய, கையற்கு - திருக்கையையுடையனாய், (தாத்காலிகபோக்தாக்களுக்கு அநுபாவ்யமாய்), செம் - சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாய்-திருவதரத்தையும், செய்ய - சிவந்த, தாமரை - தாமரைபோலும், கண்ணற்கு - கண்ணையுமுடையனாய், கொங்குஅலர் - பரிமளவிகாஸியாய், தண் - ஶ்ரமஹரமாய், அம்- தர்ஶநீயமான, துழாய் - திருத்துழாயாலே யலங்கருதமான, முடியானுக்கு-திருமுடியையுடையனானவனுக்கு, என்மங்கை- அவன்ஈடுபடும் பருவத்தையுடைய என்பெண்பிள்ளை, இழந்தது - இழந்தது, மாமைநிறம் - பெண்மைக்குஅஸாதாரணமான மாமைநிறத்தை. கொங்கு - தேனுதல், பரிமளமாதல்.

இ—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதங்களின் அழகிலே அகப்பட்டுத் தன்னுடைய அழகியநிறத்தை இழந்தாள் என்கிறாள்.

[சங்குவில்வாள் இத்யாதி] - ஸ்ரீபஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய நிறங்கொள்ளுகைக்கு எத்தனை ஆஹாரம்வேணும்? ஸ்மிதமும் நோக்கும்போலே ஆயுதச்சேர்த்தியும் தகுதியாய் இருக்கிறபடி. [கொங்கலர்] - பரிமளம் ப்ரவஹிக்கிற குளிர்ந்த திருத்துழாய் வளையத்தை யுடையவனுக்கு. ஆஹாரம்! அவயவங்கள்! ஒப்பனை! எத்தனை செயல்வேணும், இவள் நிறங்கொள்ளு

acharya.org

கைக்கு ? [என்மங்கை] - தன்பருவத்தாலே இவற்றையடங்கத் தோற்பிக்குமவள் கிடீர். மாமை என்றும், நிறம் என்றும் - பர்யாயம் ; இவ்விடத்தில் நிறம்என்றது அழகாய், நிறத்தில் அழகை இழந்தாள்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதாதிகளில் அழகிலேயகப்பட்டுத் தன்னுடைய அழகிய நிறத்தை யிழந்தா ளென்கிறாள்.

[சங்குஇத்யாதி] - ஸ்ரீ பஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய ஓராபரணம் வாங்குகைக்கு எத்தனையாபரணம் பூண்டு காட்டினான் ? கைக்குமேல்ஐந்துங்காட்டிக்காணும் இவளுடையஆபரணம் வாங்கிற்று. ஆபரண கோடியிலும் ஆயுதகோடியிலும்இருபுடைமெய்க்காட்டிறே இவைதாம்! [சேங்கனிவாய்ச் செய்யதாமரைக் கண்ணற்கு] - கையிலே யொன்றையரித்துக்காட்டி ஆகர்ஷிக்கவேண்டியிருந்ததோ? ஸ்மிதமும் நோக்குமமையாதோ நலிகைக்கு? [கோங்கலரித்யாதி] - மயர்ஸ்யந்தியான திருத்துழாய்மாலையை, ஆதிராஜ்யசூசகமான திருவபிஷேகத்திலே யுடைய வலுக்கு. வைத்த வளையத்தைக் காட்டிக்காணும் இவள்நிறத்தை யபகரித்தது. ஆபரண சோபை அவயவசோபை ஒப்பனையழகு, எத்தனை செய்யவேணும் இவள்நிறங் கொள்ளுகைக்கு. [என்மங்கை[- தன்பருவத்தாலே இவற்றையடையத் தோற்பிக்குமவள் கிடீர் நிறமிழந்தாள் ! மாமைநிறம் - அழகியநிறம். மாமை - அழகு. அழகிய நிறத்தை யிழந்தாள். (உ)

மூன்றும் பாட்டு.

நிறங்கரியானுக்கு நீடுலகுண்ட
திறங்கிளர்வாய்ச் சிறக்†கள்வரவர்க்கு
கறங்கியசக்கரக் கையவனுக்குஎன்
பிறங்கிருங்கூந்தல் இழந்ததுபீடே.

ஆ.—(நிறங்கரியானுக்கு.)-ஸர்வலோகங்களையும் அமுதுசெய்தருளின சுவடு காணலாயிருந்த திருப்பவளத்தில் அழகுக்கும், ஸகலஜந மநோநயநஹாரியான அந்தச் சிறிய வடிவு தனக்கும், திருவடிவினுடைய நீலவநம்போலே யிருந்த நிறத்துக்கும்,

இரண்டாம்பாட்டு.—சங்கு இத்யாதி. மேலிற்பாட்டுக்கள்தோறும் ஓரோவவதாரங்கள் சொல்லுகையாலே, ததநுகுணமாக இப்பாட்டையும் - கீழிற்பாட்டில் அவதாரத்தோடேசேர்த்து, "சங்கு வில்வாள்" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - திருவுலகு இத்யாதி.

ஸலிதம் - இவளுடைய இத்யாதி.ஓராபரணமென்றது- * பாமைநிறத்தை. சாடு - கைக்கு மேல் இத்யாதி. கைக்குமேல்ஐந்துங்காட்டியென்றதுக்கு - திருக்கைகளிலிருக்கிற பஞ்சாயுதங்களைக் காட்டியென்று ஸ்வபாவார்த்தம்;குறடுகீறியாடுகிறவளவிலேஅஞ்சக்கு இலக்காயொருபருக்கையிருந்தால், "கைமேலேயஞ்சுபோட்டுவெட்டுகிறேன்" என்றுஓட்டமோடி அப்படியேபோகட்டு அத்தைவாங்குகை யென்ற சாடுவுக்குஅர்த்தம். இவற்றுக்குஆயுதத்வயமொழிய ஆபரணத்வமுண்டோ? என்ன - ஆபரண கோடியிலும் இத்யாதி. இருபுடைமெய்க்காட்டு - உபயகோட்யந்வயம். உபயஸேகையிலும் ஆன்காட்டுகையென்று ஸப்தார்த்தம். அலருகை - ப்ரவஹிக்கை. "சங்கு வில்வாள்" என்றுதொடங்கி மூன்றுக்கும் பேஷகயாக பூர்வகமாகபாவம் - ஆபரணசோபை இத்யாதி. (உ)

* கள்வனவற்கு' என்றுவழங்குவர்.

acharya.org

ப்ரணத பரித்ராண தத்விரோதிநிரஸநங்களிலே எப்போதும் ஸத்வரமான திருவாழியை ஏந்தின திருக்கையினழகுக்குந் தோற்று, நீலரத்நங்களுடைய ஒளிகள் திரண்டாற் போலே விளங்குகிற திருக்குழலையுடையவளான என்பெண்பிள்ளை, தன்பெருமையை யிழந்தாளென்கிறாள்.

ஒ.—மூன்றும்பாட்டில், ஆலிலையிலே கண்வளர்ந்தருளினவனுடைய ஸௌந்தர்யாதிகளிலே அகப்பட்டு, என்பெண்பிள்ளை தன்னுடைய பெருமையை இழந்தாள் என்கிறாள் [நீடுலகுண்டதிறங்கிளர்வாய்ச் சிறுக்கள்வரவர்க்குஎன்றுதொடங்கி] - இம் மஹாலோகத்தையெல்லாம் திருவயிற்றிலே வைத்துக்கொண்டமை தெரியும்படியான திருப்பவளத்தையுமுடையனாய் தான்சிறுத்து ஒருவர்க்கும் பரிச்சேதிக்கவொண்ணாத அத்யாஶ்சர்யசேஷ்டிதங்களை யுடையவனுக்கு. ப்ரதிபக்ஷத்தை மாய்க்கையில் உண்டான த்வரையாலே எப்போதும் சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியைத் திருக்கையிலே உடையனானக்ருஷ்ணனுக்கு. [என் பிறங்கிருங்கூந்தல்] - வளர்ந்து பெருத்து இருந்துள்ள கூந்தலையுடைய என்பெண்பிள்ளை.

ப.—அநந்தரம், வடதளஶாயித்வப்ரமுக ரக்ஷணப்ரகாரத்தை யுடையவனுக்குத் தன் பெருமையை யிழந்தாளென்கிறாள்.

(வடதளத்திலே கண்வளரும்போது), நிறம்கரியானுக்கு - ஶ்யாமளமான வடிவையுடையனாய், நீடுஉலகு - மஹாலோகங்களை, உண்ட - அமுதுசெய்த, திறம் - ப்ரகாரம், கிளர் - தோற்றுகிற, வாய் - திருப்பவளத்தை யுடையனாய்க்கொண்டு, சிறு - சிறுவடிவிலே, கள்வரவர்க்கு - பெரியலோகத்தை மறைத்து வைத்தவனாய், (இப்படி ப்ரளயாபத்தில் ரக்ஷித்தாற்போலே ப்ரளயங்கழிந்து வெளிநாடு கண்டவளவிலும்), கறங்கிய - (ஜகத்விரோதிகளை யழிக்கையிலுண்டான உத்யோகத்தாலே) சுழன்றுவருகிற, சக்கரம் - திருவாழியையுடைய, கையவனுக்கு - கையை யுடையவனுக்கு, என் பிறங்கு இருங்கூந்தல் - வளர்ந்து கதிர்த்த மயிர்முடியை† யுடைய என் பெண்பிள்ளை, இழந்தது-, பீடு - பெருமை. பீடென்று - பெருமையாய், மதிப்பைச் சொல்லுகிறது.

இ.—மூன்றும்பாட்டில், வடதளஶாயிபடிகளிலே அகப்பட்டுத் தன்பெருமையை யிழந்தாள் என்கிறாள்.

[நிறங்கரியானுக்கு] - ஶ்ரமஹரமானவடிவிலேயாயிற்று இவள் தோற்றது. "நீலக்கருநிறமேக நியாயற்கு" என்ன வேண்டாவாயிற்று, நிறத்துக்கு ஒப்பாகமாட்டாமையாலே. [நீடுலகு] - பரப்பையுடைத்தான பூமியைத் திருவயிற்றிலேவைத்த ப்ரகாரத்தைக் கோட்சொல்லாநின்ற திருவதரத்தையுடைய. "வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுளே" என்னக்கடவதிறே. ரக்ஷகத்வ ப்ரகாஶகமான திருவதரம். [சிறுக்கள்வரவர்க்கு] - சிறியவடிவிலே பெரிய லோகங்களைவைத்து, ஒருவர்க்கும் பரிச்சேதிக்கவொண்ணாத சேஷ்டிதத்தை யுடையவனுக்கு. வடிவுக்குச்சேராத சேஷ்டிதம், சேஷ்டிதத்துக்குச் சேராதவடிவு. தன்னுடைய ரக்ஷகத்வத்தையும் அவடிதவடநாஸாமர்த்யத்தையும் காட்டியாயிற்று, இவளை அகப்படுத்திற்று. விரோயிநிரஸந த்வரையாலே சுழன்றுவாராநின்ற திருவாழியைக் கையிலேயுடையவனுக்கு. வடிவழகும் ரக்ஷகத்வமுமன்றியே ரக்ஷணத்தில் உத்யுக்தபரிகரத்தை யுடையவன் என்கை. [என்பிறங்கிருங்கூந்தல்] - சுற்றுடைத்தாயொழுகு நீண்ட மயிர்முடியை யுடையவள். பிறங்கு

† 'ப்ரகாசமாய்ப் பெருமைபொருந்திய கூந்தலையுடைய' என்றுபாடாந்தரம்.

acharya.org

வாரொஹிதே" இத்யோத்யாகாண்டே. "ஸஹாஸியெ" என்றதுக்குபாவம்-தனியிடத்தில் இத்யாதி. அதாவது - காட்டிலே பறிகொடுப்பாளாகில் நான் நிரளிலேபறிகொடுத்தேன் என்றபடி. இவர்கள்பறித்ததேது? என்ன - தனக்குசேஷத்வம் இத்யாதி. இவன்கர்ஹித்த ப்ரகாரத்தை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறார் - ஸந்த்யாவந்தநத்துக்கு இத்யாதி. சிஷ்டகர்ஹை பண்ணுமாபோலேயென்றது - சிஷ்டர்கர்ஹைபண்ணுமாபோலேயென்றபடி. புரோஹிதம்பஶ்யதீதி - புரோஹிதஃ என்றவிவக்ஷித்தபாவம் - இக்குடிக்கு இத்யாதி. "ஸஹாஸியெ" என்றத்தை - கீழே கூட்டியருளிச்செய்து, மேலேயுங்கூட்டிபாவம் - நியமாதிக்ரமம் இத்யாதி. ஹேது - குருத்வ ஹேது. "ராஜ்யாவாஹம்ய ராஸ்யஜூம் வக்ஷாஹிஹாஹுஸி । கயுஷராயாஜ்ஞாதொஹவெஜ்ராஜ்யாவஹாரகஃ" அசேதநமான ராஜ்யத்தைத் தன்னையும் சேஷமாகச் சொல்லுகிறவனுடைய ஹார்த்தபாவம் - சேஷவஸ்துக்களிலே இத்யாதி. அங்ஙனேயாமன்று என்றது - சேஷவஸ்துக்களிலே யொன்றையொன்று நியமிக்குமதானாலென்றபடி. "யஜூம்வக்ஷாஹிஹாஹுஸி" என்றதுக்குபாவம் - லோகத்திலே இத்யாதி. "ஏஹ" என்றதுக்குபாவம் - என்ப்ரக்ருதி இத்யாதி. இஹ - மயி என்றபடி. நீர் நம்மை வெறுக்கிறதென்? உம்முடையதாயார் "உமக்கு" என்ற ராஜ்யத்தைவாங்கிப் பெருமாளைக்காட்டிலே போகவிடாநிற்கஎன்ன - நமஸ்யாமி இத்யாதி. "யதிராஜ்ஞாக்ரூதம்வாவம்நாஹம்கிடவிரோவயெ । ஏஹஸ்ரோவநஷ்டமபூஸ்ஸம்நஸ்ஸ்யாதிக்ரூதாஞ்ஜலிஃ" இப்போது நமஸ்காரத்துக்கு ப்ரஸக்தமேதென்ன - அப்ராப்தம் இத்யாதி. அபவாதப்ராயஶ்சித்தமாவது - "தன்னிடத்தில் பாபமில்லாவிட்டாலும் லோகாபவாதமுண்டானால் ப்ராயஶ்சித்தம்பண்ணவேணும்" என்று சாஸ்த்ரஞ்சொல்லுகையாலே ப்ராயஶ்சித்தம்பண்ணுகிறானென்றபடி. "வ்ரீரோஷாஷாவாயபூஸ்யவாஸிவாஶுவம்வாநியமாதிக்ரமாரஹஸிவொயயெச" இதி ஆபஸ்தம்பதர்மே. "பாவை" என்று - மரப்பாவையாய், அதுபோலே பரதந்த்ரையானவளென்று சொல்லி, அநந்தரம் "போய்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - என் புத்ந்யத்நம் இத்யாதி. த்விதீ

acharya.org

தீநமான வ்யாபாரத்தையுடையவள் கிடீர் என்னையொழியப் புறப்பட்டுப்போனாள். நிரு பாதிகமான ஸ்த்ரீத்வத்தையுடையவளென்றுமாம். [இனி - போய் - லீலோபகரணங்களாற் கொள்ளும் கார்யமும் அவனேயாம்படியான இந்தப்ராவண்யத்துக்குமேலே அங்குப்போய்ப் பேறுவது என்னாகப்போனாளோ? [தண்பழனத்திருக்கோளூர்க்கே] - ஶ்ரமஹரமான நீர் நிலங்களையுடைய திருக்கோளூர்க்கே. [கோவைவாய்துடிப்ப] - கோவைப்பழம்போன்ற சிவப்பையுடைத்தான அதரமானது ஸ்ப்புரிக்க. "பிரியேன்' என்று பிரிந்தாய்; 'வருகிறேன்' என்று வந்திலை; என்னைத்தனியேயிட்டுவைத்தாய்; நான்வருமளவும்இருந்தாய்" என்றாற் போலேயிருக்கச் சில சொல்லநினைக்குமே; அதுதோற்றும்படி உதடுநெளிக்கிறபடி. [கோவை வாய்துடிப்ப மழைக்கண்ணொடு] - நினைத்ததுசொல்லித் தலைக்கட்ட வோட்டாநின்றதோ கண்ணநீர்! உடைதலைப்பட்டுக் கண்ணநீராலே தலைக்கட்டாநின்றாள். "உக்ஷுரயெ ஹி ஸகுரீநம்வாநநெஹுவாவகிஞுவந" (உக்த்வார்யேதிஸகுருத்தீநம்புநர்நோவாசகிஞ் சந) என்னும்படியே. [என்செய்யுங்கொலோ] - சொல்லமாட்டாள். தவிரமாட்டாள், அழா தொழியமாட்டாள்; எங்ஙனே படுகிறாளோ? நம்மையும் பிறரையும்விட்டு அவன்திருநாமங் களை அநுஸந்திக்கிறபோதை அழகுகாணப்பெற்றோம்! அவன்தன்னையே கண்டநுஸந்திக்கிற போதை அழகுகாணப்பெற்றிலோமே. அநுஸந்தாநவேளையிற்போலன்றிறே கண்டால்பிறக் கும் விகாரங்கள்; "காமனுடல்கொண்ட தவத்தாற்குமையுணர்த்த வண்டலம்பும் தார லங்கல் நீண்முடியான் தன்பெயரே கேட்டிருந்தங்காரலங்கலானமையால் - கண்டுவணங் கினார்க்கேன்னுங்கோல்" என்றிறேயிருப்பது. அலாபத்தோடேயிருக்கும் இருப்புக்கண்டேன், லாபத்தோடேயிருக்கும் இருப்புக்காணப்பெற்றிலேன் என்கிறாள்.

யார்த்தத்துக்கு. பாவை யென்ற - ஸ்த்ரீத்வம். "பூவை" இத்யாதியின் முந்தினவர்த்தத்தைக்கடா கூறித்து, "இனி" என்றதுக்குபாவம் - லீலோபகரணங்களால் இத்யாதி. துடிக்கைக்குஹேதுக்கள் - பிரியேனென்று இத்யாதி. ஆனால் அத்தைச்சொல்லாமல் உதடுநெளிக்கிறதென்? என்ன-நினைத்தது இத்யாதி. உடைகுலைப்பட்டென்றது-அவன்எதிரேவந்ததுக்கு ஈடுபட்டென்றபடி. "மழைக்கண்ணொடு' என்றது - ஹர்ஷாஸ்ருவை. சொல்லமாட்டானமைக்கு ப்ரமாணம்-உக்த்வார்ய இத்யாதி. "ஊஃவாஹி தவொஹரதொராஜவுதொஃஹாவலுஃ । உக்ஷுரயெ ஹி ஸகுரீநம்வாநநெஹுவாவகிஞுந" இத்யோர்யாகாண்டே. [கூகூ-கூஅ] நாலாமர்த்தத்தைக்கடாகூறித்துபாவம் - நம் மையும் இத்யாதி. அநுஸந்தாநதசையைப்பற்ற, கண்டபோதைக்கதிசயமேதென்ன - அநுஸந்தாந வேளையில் இத்யாதி. இதுக்கு ஸம்வாதம் - காமனுடல் இத்யாதி: காலாந்திருவந்தாதி எழுபத் தெட்டாம்பாட்டு, "கண்டுவணங்கினார்க்கு". இத்யாதி. இதுக்கர்த்தம் - காமனுடைய சரீரத்தை தக்த மாக்கின, தபஃ-க்ரௌர்யத்தையுடைய ருத்ரனுக்கு மஹிஷியான உமையானவள், "கம்கூவேஉயவெ ஷெவ" இத்யாதி ப்ரஸ்கரூபேண ஸர்வேஶ்வரனை ஸ்மரிப்பிக்க, வண்டுகள் தேன்வெள்ளத்திலே அலையாநிற்கிற பூமாலையையுடைய ஆதிராஜ்ய சூசகமான நீண்டதிருவபிஷேகத்தையுடைய ஸர்வேஶ் வரனுடைய திருநாமத்தைக்கேட்டு அதுக்குள்ளீடான குணங்களை யநுசந்தித்துக்கொண்டிருந்த தசை யிலே சூடின மாலைபோலே துவண்டபடிகண்டால், ஸாக்ஷாத்கரித்து வணங்கினவர்களுக்கு எத்த விக்ருதி பிறக்குமோவென்றபடி. தார் - புஷ்பம். அலங்கல் - மாலை. அங்கு - கேட்டிருந்தசமயத்தில், ஆர்தல் - சூடுதல், ஆய்ந்து - அநுசந்தித்து. அலம்புகை - அலைகை. "நம்மையும் பிறரையும்" இத் யாதி வாக்யவிவரணம் - அலாபத்தோடே இத்யாதி. 'பூவை'என்றதொடங்கி, திருநாமங்களை கூவியெழும்படியாயிருக்கிற 'என்பாவை' - இனித் தண்பழனத்திருக்கோளூர்க்கே போய் - கோவை வாய்துடிப்ப-மழைக்கண்ணொடு-என்செய்யுங்கொலோ' இத்யந்வயஃ.

(ரு)

acharya.org

நான்காம் பாட்டு.

கொல்லையென்பர்கொலோ? குணம்மிக்கனளென்பர்கொலோ?
சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாரும்எல்லே!
செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே
மெல்லிடைநடங்க இளமான்செல்ல மேவினளே.

ஆ.—(கொல்லை.) - ஐஶ்வர்யத்தால் ஸுஸம்ருத்தமாய்க்கொண்டு அவன் கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே, முக்யையானவள் மெல்லிடை நடங்கப் போனாள்; மர்யாதையைக்கடந்தாளென்று லோகத்தார் இவளுக்குக் குற்றமாகச்சொல்வரோ? அன்றியே, திருக்கோளூரிலே ஒருத்திக்குள்ள ஆஸ்திவேஶமிருக்கும்படியென்! என்று மஹாகுணமாகச் சொல்வரோ? அங்ஙனே, குணமாகச்சொல்லுகை ஸம்பவிக்குமோ? பரகதமான குணத்தையும் தோஷமாகவே காண்கிற லோகஸ்பாவமிருந்தபடியென்! என்று இன்னுதாகிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், சிறுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும் அயற்சேரியில் உள்ளாரும் அந்யஸ்த்ரீகளும் இவளுடைய வ்ருத்தாந்தத்தைக்கண்டு குணஹீநைளென்பரோ? இம்மஹாகுணத்தை அறிந்து கொண்டாடுவரோ? என்கிறாள். [கொல்லை] - வரம்புநடந்தாள். [செல்வம் மல்கி என்று மேலுக்கு] - ஸம்பத்தாலே மிக்கு அவன் கண்வளர்ந்த திருக்கோளூர்க்கே அத்யந்தமுக்யையான பெண்பிள்ளை தன்னுடைய ம்ருதுவான இடைதுவளப் போய்ப்புக்காள்.

ப.—அநந்தரம், நிரதிஶயைஶ்வர்யவிஶிஷ்டனானவனுடைய திருக்கோளூர்க்கே போக ஒருப்பட்டுவிட்டாள்; இவளை ஊரார் என்ன சொல்லுவர்களோ? என்கிறாள்.

செல்வம்மல்கி - அதிஶயிதஐஶ்வர்யத்தையுடையவனுய்க்கொண்டு, அவன் - அவன், கிடந்த - கண்வளர்ந்தருளின, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, மெல் - மெல்லிய, இடை - இடையானது, நடங்க - நடங்கும்படி, இள - முக்தமான, மான் - மான்போலேயிருக்கிறஇவள், (தன்வலஹாநியையும் பருவத்தையும் பாராதே), செல்ல - போகையிலே, மேவினள் - நெஞ்சுபொருந்திப்போய்விட்டாள்; சில்லை - சிறுகிடுகையே ஸ்வபாவமான, வாய் - வாயையுடையவர்களாய், பெண்டுகள் - ஆஸந்நைகளானபெண்களும், அயற்சேரி - அயற்சேரியில், உள்ளாரும் - உள்ளாரும், கொல்லை - வரம்பழிந்தாள், என்பர்கொலோ - என்று கர்ஹிப்பர்களோ? குணம்மிக்கனள் - (அதிஶயிதமாய் அநுரூபமான விஷயத்தையறிந்து மேல்விழும்படியான விலக்ஷண) குணதிஶயத்தையுடையவள், என்பர்கொலோ - என்று கொண்டாடுவர்களோ? எல்லே - எல்லே! இதென்னுயிருக்கிறதோ என்று விஷாதசூசகம்.

இ.—நாலாம்பாட்டில், இவளை நாட்டார் குணஹீநை என்பர்களோ, குணயிகையென்று கொண்டாடுவர்களோ? என்கிறாள். [கொல்லை] -வரம்பழிந்த நிலம். அவன் தானே வரவிருக்கக்கடவ மர்யாதையை அழித்துப்போனாள் என்பர்களோ? குணயிக

acharya.org

விஷயத்துக்குப்போரும்படி செய்தாள் என்று கொண்டாடுவர்களோ? கதஸ்ஸுஸுஷ்ஸுஸுஸு

மம்பண்ணினாள் என்பர்களோ: அன்றிக்கே ஸித்தாந்தந்தன்னையே சொல்லுவர்களோ? ஓரளவிலேநின்று நிஷேதித்தவற்றைக்கொண்டு, இது அப்ராப்தம் என்பர்களோ; ருசிஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் இது ப்ராப்தமென்பர்களோ? ஸாதநவிதியளவிலே நின்று தடுமாறுவர்களோ: ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ? உபாயாம்சத்தைப் பற்றிநின்று, இதுகடவதல்ல என்பர்களோ: ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையும் ப்ராப்யஸ்வரூபத்தையும்பார்த்து, இது கடவதேன்பர்களோ? அந்யநிஷேதபூர்வகமான ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால், புறப்பட ப்ராப்தியில்லை; ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம்பண்ணினால்; போய்ப்புக்கல்லது நிற்கவொண்ணாது. விதியைப்பார்த்து கர்ஹிப்பர்களோ: காமவசநத்தைப் பார்த்து நன்றேன்பர்களோ? "நகாமதஸ்ஸ்ரேதவவாலிரவஸி" (நகாமதந்த்ரேதவபுத்திரஸ்தி)-'விரக்தரானநீர்காமபரவசரானஎங்களை என்படுத்துகிறீர்?' என்றாளிறே தாரை, இளைய பெருமாளை. [சில்லைவாய்ப்பெண்டுகள்] - சிலுகுசிலுகு என்னும் ஸ்த்ரீகள். விஷயாதீந

தாந்தந்தன்னையே யென்றது - ஏதத்விவரணவாக்யங்களிலே, 'ருசிஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்தாலும்" என்றுசொல்லப்படுகிற இவளுடைய ப்ராவண்யாநுபாய விஷயவைலக்ஷண்ய ஸேஷத்வஸ்வரூபமாகிற ஹேதுத்ரயத்தாலும் இதுப்ராப்தமென்கிற ஸித்தாந்தந்தன்னையேயென்றபடி. உச்தகோடித்வயவிவரணம் - ஓரளவிலே என்றுதொடங்கி மேலெல்லாம். அதில், அவனிருந்ததேசத்தேநடப்போகையாகிறஇது, வித்யதிக்ரமமும் ஸித்தாந்தமும் மாகிறபடி யெங்ஙனே? என்ன - ஓரளவிலே இத்யாதி. ஓரளவிலேயென்றது - நதேகோபாயத்வ நதேகரக்ஷயத்வாதிகளிலே என்றபடி நிஷேதித்தவற்றைக்கொண்டு என்றது - ஸ்வப்ரவ்ருத்தி ஸ்வரூபவிருத்தமென்று நிஷேதிக்கிற "ஸுயுவாதகுஹீதஸ்ஸு" இத்யாதி ப்ரமாணங்களைக்கொண்டு என்றபடி. ஸித்தாந்தமாகைக்குஇரண்டுஹேது அருளிச்செய்கிறார்-ருசிஸ்வபாவத்தாலும்' இத்யாதி. ருசிஸ்வபாவமாவது - விஷயத்திலுண்டான ஆதராதிசயம். விஷயஸ்வபாவமாவது - குணாதிகவிஷயமாகை. "ஓரளவிலே" இத்யாதிவாக்யவிவரணம் - ஸாதநவிதியளவிலே இத்யாதி. ஸாதநவிதியளவிலேநின்று தடுமாறுவர்களோ? என்றது - ஸாதநவிதியளவிலேநின்று நிஷேதித்தத்தைக்கொண்டு தடுமாறுவர்களோ என்றபடி. ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ? என்றது - சேஷத்வம் சேஷிக்கு அதிஸயகரத்வமாகையாலே, ஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ என்றபடி. "ஸாதநவிதி" இத்யாதிவாக்யத்வயவிவரணம் - உபாயாம்சத்தை இத்யாதி. ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையுமென்றது - சேஷிவிஷயப்ராவண்யமே வடிவான ஸ்வரூபத்தையு மென்றபடி. கீழுக்தமான தெல்லாவற்றாலும் ஸலிதம் அந்யநிஷேத இத்யாதி. ஸ்வயத்நநிஷேதபூர்வகமான பாரதந்த்ர்ய ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தால் என்றபடி. ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம் பண்ணினாலென்றது - த்வராஸ்வரூபோத்தம்பகமான ப்ராப்யவைலக்ஷண்யாநுஸந்தாநம் பண்ணினாலென்றபடி. புநஶ்ச, அந்யாபதேஸமாதியாலே யருளிச்செய்கிறார் - விதியைப்பார்த்து இத்யாதி. "கடலன்னகாமத்தராகிலும்மாதர் - மடலூராரார்" இத்யாதிவிதியைப்பார்த்தென்றபடி. காமவசநமாவது - "காஹாயிடுநீ தாயாயாகிவஹெ தம் ஸாஹிஸாரிகா" என்கிறஇது. காமவசநத்தை - காமசாஸ்த்ரத்தை. காமசாஸ்த்ரத்தைப்பார்த்தால் "நன்று" என்று தோற்றுமோ? என்ன - நகாமதந்த்ர இத்யாதி. "நகாரதேதெஜ தவவாலிரவஸி கூம்வெயாரநூவஸம்வுவஹு: । நஜெஸகாஸுள ஹிநவாயுயஸுரவெகூ தெகாரதிஸுநுஷ்ரு:" இதி லக்ஷ்மணம்ப்ரதி தாரா. (ஈ-ரு-ரு) இஅக்குபாவம்-விரக்தானஇத்யாதி. தந்த்ரம்-ஶாஸ்த்ரம். நீர் காமஶாஸ்த்ரஜ்ஞராகிலன்றோ நான்செய்தது நன்றென்று புத்திபண்ணக் கடவீர் என்று கருத்து. சிலுகுசிலுகென்னும் ஸ்த்ரீகள் - பஹுஜல்பம்பண்ணும் ஸ்த்ரீகளென்றபடி. சில்லைவாய்ப்பெண்டுகள் - சிலுகிடுகையே ஸ்வபாவமான வாயையுடைய ஸ்த்ரீகளித்யர்த்த:. சிலுகிடுகை - சண்டையிடுகை. சிலுகு - சண்டை. அவர்களாரென்ன - விஷயாதீநம் இத்யாதி. அதா

acharya.org

மாய்வருமத்தையும் வசநஸித்தம் என்றிருக்குமவர்கள். உபாயபுத்த்யா வருமவற்றி லிறே விதிக்குவிஷயமுள்ளது; குணப்ரேரிதராய்ப்போமிடத்தில் விதி கோசரியாதே. [அயற்சேரியுள்ளாரும்] - (சிலுகுவாய்ச்சிகளான நம்சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளும்.) இவளிருந்ததுஓர்வாசியுங்கூட இல்லாதவர்கள். [எல்லே] - கீழில் அவர்களை ஸம்போதித்ததாதல், இதோராஶ்சர்யமிருந்தபடி யென்! என்றதாதல். [செல்வ மித்யாதி] - அவன்வரவை அஸத்ஸமமாக்கினாள். முற்பாடனாய்வந்தவனை, தான் நாலடி யிட்டுப் பிற்பாடனும்படி பண்ணினாள். அவன்ஸ்வரூபத்தை யழித்தாள். பரவ்யூஹாதிகளை விட்டு இங்குவந்துகிடக்கிறது இவளுக்கு முற்பாடனாய் உதவுகைக்குஇறே. [செல்வம்மல்கி யவன்கிடந்ததிருக்கோளூர்க்கே] - நிரவதிக ஸம்பத்தானது கரைபுரளும்படியாக அவன் வந்து கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே. ரக்ஷியவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே அந்வயித்தாலிறே நியந்தாவினுடைய ஐஶ்வர்யம் ப்ரகாசிப்பது! [அவன்கிடந்த] - அவன் வரவுபார்த்து இவளிருக்கையன்றிக்கே, இவள்வரவுபார்த்து அவன் அவஸரப்ரதீக்ஷனாய்க் கிடக்கிறபடி. [மெல்லிடைநுடங்க] - அவன் ஸ்வரூபஜ்ஞாநமில்லாவிட்டால், தன்ஸ்வரூப ஜ்ஞாநமோதான் இவளுக்குஉண்டாயிருக்கிறது. இவளுக்கு விழுக்காடறியாமை எங்குமோத் ததுகிடீர்! தன்னிடையை யறிந்தாளாகில் தான் புறப்பட்டுப்போமோ? நடுவே அறியாமல் புகுந்தபிழையிறே. [மெல்லிடைநுடங்க] - ம்ருதுவான இடையானது துவளும்படியாக.

வது - ராகப்ராப்தமாய் வருமவற்றையும் "யதாஸீத" "உவாஸீத" இத்யாதி வசநவிஶேஷாபாஸ நத்திலே அந்வயிக்கும்என்றிருக்குமவர்களென்றபடி. அப்படி நினைத்திருக்கவொண்ணாதோ? என்ன - உபாயபுத்த்யா இத்யாதி. "கொல்லை" என்கிறவர்கள்-சில்லைவாய்ப்பெண்டுகள்; "குணம்மிக்கனள்" என்கிறவாகன் - அயற்சேரியுள்ளாரென்று கொள்ளுமளவில், 'இவளிருக்கதோரூர்வாசியுங்கூட இல் லாதவர்கள் என்றவாக்யதோடு வ்யாஹதமாய்; ஆகையால், இரண்டுநிறத்தாரும் "கொல்லை" என் றும் "குணமிக்கனள்" என்றும் சொல்லுவர்களோவென்றபடி. 'சில்லைவாய்ப்பெண்டுகள்" என் கிறது - அத்யவஸாயநிஷ்ட்டரை. இவர்களுக்கு அசலானத்வாநிஷ்ட்டரை - "அயற்சேரியுள்ளார்" என்கிறது. கீழில்அவர்களையென்றது - கீழிற்பாட்டிற்சொன்ன பூவைதொடக்கமானவற்றையாதல்; தன்கீழில்அவர்களையென்றாய், விதேயரான அண்டையிலிருக்கிறவர்களையாதல்; சில்லைவாய்ப்பெண்டு கள் தொடக்கமானாரையாதல். "திருக்கோளூர்க்கே - செல்லமேவனள்" என்றதாயாருடைய ஹார்த்த பாவம் - அவன்வரவை இதயாதிவாக்ய சதுஷ்டயமும். விவரணம் - முற்பாடனாய் இத்யாதி. இத் தால்பலிதம் - அவன்ஸ்வரூபத்தை இத்யாதி. அவன்தான் இவளுக்கு முற்பாடனாகைக்கோ வந்த தென்ன - பரவ்யூஹாதிகளை இத்யாதி. "செல்வம்" என்று - ஸாபத்தாக அர்த்தம் - நிரவதிக இத் யாதி. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணசம்பத்தாகவார்த்தாந்தரம் - ரக்ஷியவர்க்கத்தினுடைய இத்யாதி. ஏகார்த்தமாகவுமாம்; அபபோது, பரமபதத்திலும சம்பத்துண்டாயிருக்க, இங்கே கரைபுரளுகையாவ தேதென்ன - ரக்ஷ்யவர்க்க இத்யாதி என்ற வாக்யசங்கதி. "அவன்கிடந்த" என்கிற பதத்துக்கு ஹார்த்த பாவம் - அவன்வரவு இத்யாதி. அவன்வரவுபார்த்து இவளிருக்கையன்றிக்கே என்றது - சேஷியினுடையவரவை ஆகாங்க்ஷிப்பட்டு அவனிருந்ததேசத்திலே இவளபோகவிறே ப்ராப்தம்; அப்படி யிருக்கையன்றிக்கே என்றபடி. "அவன்கிடந்த" என்றவநந்தரம், "மெல்லிடைநுடங்க" என்கிறவளு டையஹார்த்தபாவம் - அவன்ஸ்வரூபஜ்ஞாநம் என்றுதொடங்கி.இது - ஸ்வாபதேசம்.அவன் ஸ்வரூப ஜ்ஞாநமாவது - அவனுடையநிருபாதிகரக்ஷகத்வஜ்ஞாநம். தன் ஸ்வரூபஜ்ஞாநமாவது-ஸ்வப்ரவ்ருத்திய ஸஹ பாரதந்த்ர்யஜ்ஞாநம். வங்கும்ஒத்ததென்றது - அவன்ஸ்வரூபத்திற்போலே தன்ஸ்வரூபத்திலும் ஒத்ததென்றபடி. அதெப்படியென்ன - தன்னிடையை இத்யாதி. சாடு - நடுவே இத்யாதி. "மெல் லிடைநுடங்க - செல்லமேவனள், அவன்கிடந்த" என்கிறவளுடையஹார்த்தபாவம் - இவ்விடையை இத்யாதி. 'எதிரேபுறப்பட்டுவரவேண்டாவோ' - செல்வக்கிடப்பாரலேகிடந்தானென்றபடி. இது -

acharya.org

இவ்விடையைக்கொண்டு இவள் நடக்கப்புக்கால் எதிரே புறப்பட்டு வரவேண்டாவோ? [இளமான்] - போகிறவழியில் மிறுக்கும், தன்ப்ரக்ருதியும் அறிந்து மீளவல்ல பருவமல்ல கிடீர்! [செல்லமேவினளே] - போகவொருப்பட்டாள். இவள்கையிலும் இவர்கள்கையிலு மன்றிறே ப்ராப்தி கிடப்பது; அது அவன்கையதிறே; இத்தலையில் துணிவேயிறேயுள்ளது. கீழே - "போனாள்" என்னாநின்றாள், இங்கே - "போக்கிலேயொருப்பட்டாள்" என்னா நின்றாள்; இதுசேரும்படியென் ? என்னில்:- இவள் போகையிலே ஒருப்பட்டபோதே போய்ப்புக்காளன்றோ ? என்கிறாள். [இளமான் செல்லமேவினள் - கொல்லையேன்பர் கோலோ, குணம்மிக்கனளென்பர்கொலோ] - அவள்கைகழிந்து கொடுநின்றாள்: இனியிருந்த நாம் என்கேட்கிறோமோ ? இங்சிருந்தநாள் நம்முடைய ஹிதவசநங்கேட்கிலன்றோ வழியி

"செல்வம்மல்கி" என்றதின் முந்தினஅர்த்தத்திலே பாவமாகயோஜிப்பது. ரக்ஷணசம்பத்தானபக்ஷத்தில், அவன் ரக்ஷணேத்யுக்தனும் முற்பாடனுமிருக்க, தான் நாலடியிட்டு அவன்வரவை யஸத்ஸமமாக்கினனென்ற தன்மகளைவெறுத்து அவனைக்கொண்டாடுகிறாளென்று கண்டுகொள்வது. ஏகார்த்த பக்ஷத்தில், பேதமில்லை; செல்வக்கிடப்பாலே கிடந்தானென்று கீழ்ச்சொன்னபடியேகண்டுகொள்வது. போனாளென்னாதே, "ஒருப்பட்டாள்" என்கிறதென் ? என்ன - இவள்கையிலும் இத்யாதி. அதாவது - சேதநனுடையபாலே இவளிடத்தில் உத்யோகமாத்ரமேவேண்டுவது; ப்ராப்திக்கு உபாயம் அவன்நினைவாகையாலே, இவனுக்கும் பிறர்க்கும் ப்ராப்தியில்லையென்றபடி. ஆனால் இவனுக்குச் செய்யத்தக்கதேதென்ன - இந்தலையில் இத்யாதி. 'கீழேபோனாளென்னாநின்றாள்' இத்யாதி சங்கா பரிஹாரவாக்யங்களுக்கு - பாதிவழிபோனாள் என்கையிலே ,தாத்பர்யம். அதெங்ஙனேயென்னில்:— இத்திருவாய்மொழியின் ப்ரவேசத்திலே, "படுக்கையைப்பார்த்தவிடத்தில் வெறும்படுக்கையாகக்கிடந்தது" என்றிருக்கையாலும்; * பொன்னுலகாளீர் ப்ரவேசத்திலே, "புறச்சோலையிலேகிடந்து தூதுவிடுகிறாள்" என்கையாலும், ஒருப்பட்டாளென்றது-பாதிவழிபோனாளென்றபடி. இவ்வர்த்தத்தை அக்வயித்த தக்குஹார்த்தபாவம் - அவள்கைகழிந்து இத்யாதி. வழியிலுள்ளார்பழிகேட்டு [illegible]னோ? என்ன - ஓங்கிநுந்தநாள் இத்யாதி. ஆனால்எந்தவார்த்தைகேட்குமென்ன - இவள்வழிப்பட்டால் இத்யாதி. நல்வழியிலுள்ளார் - * சில்லைவாய்ப்பெண்டுகள். பெருவழியானார் - அயற்சேரியுள்ளார்: 'செல்வம் மல்கி' என்றதொடங்கி, மேவினள்; 'சில்லைவாயென்று' தொடங்கி, 'அயற்சேரியுள்ளாரும் - கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ, எல்லே' இத்யந்தம். "சில்லைவாய்ப்பெண்டுகள்" இத்யாதிக்கு - அப்பு அரும்பதத்திற்சொன்ன ஸ்வாபதேசம் - "சில்லைவாய்ப்பெண்டுகளென்கிறது - அநுபவஸாயநிஷ்டரை; அயற்சேரியுள்ளாரென்கிறது - அத்யவஸாயநிஷ்டர்க்கு அநுகூலனான த்வாரநிஷ்டரை" என்று. அப்படி, அயற்சேரியுள்ளாரை த்வாரநிஷ்டரென்றசொன்னாளவில், 'இவளிருந்ததோரூர் வாசியுங்கூடஇல்லாதவர்கள்' என்றவாக்யத்தோடும், பாட்டுமுடிவிலே, 'இவள்வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார்வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியானார் வார்த்தைகேளாள்' என்கிறவாக்யத்தோடும் வ்யாஹதமாயிருக்கிறது; இதுக்கு பரிஹாரம் யோஜித்துக்கொள்வது. இங்ஙனன்றிக்கே இருபத்துநாலாயிரத்திலே, "சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாரும்" என்கிற இதுக்கு - நஞ்சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளுமென்று பொருள் அருளிச்செய்து, இதுக்கு ஸ்வாபதேசமாக, "அயற்சேரியுள்ளாரும்" என்கிறவிதுக்கு-வசநபரானவர்களு மென்றருளிச்செய்து, "சில்லைவாய்ப்பெண்டுகள்" என்கிறவிதுக்கு - அவர்களுக்கு உடலன்றியே, இருந்தவூரிலிருக்கும் மானிடரெத்தவங்கள்செய்தார்கொலோ" என்னும் ப்ரேமார்த்தரசித்தருமென்று ஸ்வாபதேசமாக அருளிச்செய்தார். இதிலேயும், பாட்டின்முடிவிலே 'இவள்வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார்வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியானார்வார்த்தைகேளாள்', என்றிருக்கிறது; இவற்றையெல்லாம் அநுஸந்தித்து, 'சிலுகுசிலுகென்னும் ஸ்த்ரீகள்' என்கிறஇத்தை, "இவளுடையகுணத்திலேயீடுபட்டு அலவலைகளைப்போலே கொண்டாடுகிற நஞ்சேரியிலுள்ளாரைச்சொல்லுகிறது" என்றும்; 'விஷயாதீ

acharya.org

வுள்ளார் பழிகேட்பது அவள். இவள் வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார் வார்த்தை கேட்
கும்தோழியப்பெருவழியானார் வார்த்தைதேளாள். (ச)

ஐந்தாம் பாட்டு.

மேவிநைந்துநைந்துவிளையாடலுருள்என்சிறுத்
தேவிபோய்இனித்தன்திருமால்திருக்கோளூரில்
பூவியல்பொழிலுந் தடமும்வன்கோயிலுங்கண்டு
ஆவியுள்குளிர எங்ஙனேயுகக்குங்கொல்இன்றே?

ஆ.—(மேவிநைந்து.)-பிள்ளையாய் விளையாடும் பதமானால் பிள்ளைகளோடே விளையாடுகையில் ஆதரமின்றியே, எம்பெருமானைக் காணவேணும்" என்றாசைப்பட்டுப் பெருமையாலே நைந்துநைந்திருந்த என்சிறுத்தேவி போய் இனித்தன் திருமால் திருக்கோளூரில் பூவியல் பொழிலையும் அதுக்குள்ளே தாமரைத்தடாகங்களையும் அதுக்குள்ளே யவன்கோயிலையுங் கண்டு, தன்னுடைய நிரவதிக ஸந்தாபமெல்லாம் போய் ஆவியுள் குளிர இன்று எங்ஙனே உகக்கிறாளோ? நான் அந்த ஸம்ருத்தியைக்காணப்பெற்றிலேன் என்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருக்கோளூர்க்கு அணித்தான திருச்சோலையையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன் கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ? என்கிறாள்

[மேவி யென்றுதொடங்கி] - அவனுடைய குணசேஷ்டிதாதிகளை அநுஸந்தித்து மிகவும் ஶிதிலையாய் விளையாட்டுகளிலும் மூளாள். ப்ராப்தயௌவனையன்றிக்கே யிருக்கிற பருவத்தில் இப்படி விலக்ஷணையாயிருக்கிற இப்பெண்பிள்ளை இதுக்கு மேலே தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரீயःபதியுடைய திருக்கோளூரிலே போய். [பூவியல் பொழில்] - என்றும் பூத்திருக்கும்பொழில். [ஆவியுள் குளிர] - மிகவும் கமர்பிளந்திருக்கிற ஹ்ருதயம் உள் குளிரும்படி.

ப.—அநந்தரம், ஸ்ரீயःபதியானவனுடைய விலக்ஷண போகஸ்த்தாநத்தைக் கண்டுஎங்ஙனே ப்ரியப்படுகிறாளோ? என்கிறாள்.

மேவி - (அவனுடைய ஸௌந்தர்யஶீலாதிகளை) நெஞ்சாலேகிட்டி, நைந்து நைந்து - க்ஷணந்தோறும் ஶிதிலையாய், விளையாடல் - விளையாடுகையிலும், உருள் - பொருத்தமற்றிருப்பாளாய், என்சிறுத்தேவி - பருவம்நிரம்பாத சிறுமையையுடையளாயிருக்கச்செய்தே வாசியறியும்படியான திவ்ய ஸ்வபாவத்தை யுடையளான என்பெண்பிள்ளை, போய் - இங்குநின்றும்போய், தன்-தனக்கஸாதாரணனான, திருமால்- ஸ்ரீமானுடைய, திருக்கோளூரில் - திருக்கோளூரில், பூ-பூவை, இயல் - இயல்பாகவுடைத்தான, பொழிலும் - பொழில்களையும், தடமும் - (பொழிலுக்குச் செவ்விகொடுக்கும்) தடாகங்களையும், அவன்-(லக்ஷ்மியோடே) அவன்வர்த்திக்கிற, கோயிலும் - போகஸ்த்தாநமான

மாய்வருமத்தையும் வசகலித்தமென்றிருக்குமவர்கள் என்கிறவாக்யத்தை - "அயற்சேரியுள்ளாரும்" என்கிறபதத்துக்கவதாரிகை" என்றும் நிர்வஹிப்பர்கள். (ச)

acharya.org

கோயிலையும், (நினைத்து முன்பு சிதிலையானவள்), இனி-இனி, கண்டு - காணப்பெற்று, ஆவி-ப்ராணாஶ்ரயமான, உள்-நெஞ்சு, குளிர-குளிரும்படியாக, இன்று-(தனக்கு நல்விடிவான) இன்று, எங்ஙனே - எங்ஙனே, உகக்குங்கொல் - உகக்கிறாளோ?

இ.— அஞ்சாம்பாட்டில், திருக்கோளூரில் சோலையையும் பொய்கைகளையும் அவன்கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ? என்கிறாள்.

[மேவி] - அவனுடைய ஸௌந்தர்யசீலாதிகளிலே நெஞ்சை வைத்து. [நைந்து நைந்து] - "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" என்று ஶிதிலையாக நின்றாள். [விளையாடலுறாள்] - பரவத்துக்கு அநுரூபமான வ்யாபாரத்தை விட்டாள். "மாற்பான் மனஞ்சுழிப்ப மங்கைபர்தோள் கைவிட்டு" என்கிற்படியே அத்தலையைப் பற்றியாயிற்று இதில் உள்ளவற்றை விட்டது. [என்சிறுத்தேவி] - த்யாஜ்யோபாதேயவிஹீநம், பரவம் நிரம்பாதவளவிலே கிடீர் உண்டாயிற்று! "வாலாயாஸ ஸுலபாகிலஸுஹ்ருதி" என்கிறபடியே, பரவம் நிரம்பாதிருக்கப் பிராட்டிமாரோடு ஒக்கச்சொல்லலாம்படி இருக்கிறபடி. [இனி-போய்] - இதிற்காட்டில் அங்கு என்ன? எற்றமிகமுண்டாய்ப்போனாள். "ததஸ்ஸுஸுபுஶுஶுஹவெஸ" என்றிருக்கமாட்டிற்றிலள். [தன்திருமால் திருக்கோளூரில்] - தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரியபதி கண்வளர்ந்தருளுகிறவூரிலே:பிராட்டியோபாதி தன்பக்கல் வ்யாமுக்ஞனவன் வர்த்திக்கிறவூரிலே என்றுமாம். [பூவியல் பொழிலும்] - நித்யவஸந்தமான பொழிலும். [தடமும்] - அதுக்குள்ளாகப் பரப்புமாறப்பூத்த தடாகங்களும்; அதுக்குள்ளாக அவன் கோயிலும் கண்டு. இங்கேயிருந்து அநுஸந்ந்தித்து நோவுபட்டவள் காணப்பெறுகிறாளே! [ஆவியுள்குளிர] - கமர்பிளந்த ஹ்ருதயம் மறுநனையும்படி. [எங்ஙனேயுகக்குங்கொல்] - எங்ஙனே ப்ரியப்படுகிறாளோ? இங்கேயிருந்து நினைத்துப்பட்ட க்லேஶத்தைக்கண்ட நான், அந்த அநு஭வப்ரீதி காணப்பெற்றிலேன். [இன்றே] - எனக்கு அவளைப்பிரிந்த ஶோகமேயாய்ச் செல்லுகிறது, அவளுக்கு நல்விடிவாய்ப் ப்ரீதியோடே செல்லுகிறதிறே.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருக்கோளூரில் சோலைகளையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன்கோயிலையுங் கண்டால் எங்ஙனே யுகக்குமோ? என்கிறாள்.

[மேவி] - ஸகவத்குணங்களிலே நெஞ்சைவைத்து. [நைந்துநைந்து] - ஆஶ்ரயங்களை யழிக்கும் பதார்த்தம்போலே குணங்கள் தானழிக்குமே: "நினைதொறும்சொல்லுந்தொறும்" இத்யாதி. இவள்மேவிற்று நிர்க்குணமாயிருப்பதொரு விஷயத்தோடன்றே; *உயர்வறவுயர்நலமுடையவனேடே யன்றோ. [மேவி] - இங்கிருந்தநாளும் எங்களோடு பொருத்தமில்லைகிடீர். [நைந்துநைந்து] - நைந்துமீளமாட்டாள்; யரித்திருக்கமாட்டாள். [விளையாட

அஞ்சாம்பாட்டு.—மேவி இத்யாதி. "திருக்கோளூரில்பூவியல்பொழிலும்" இத்யாதிகளைக் கடாகஷித் தவதாரிகை - திருக்கோளூரில்சோலை இத்யாதி.

மேவினால் நையவேணுமோ? என்ன - ஆஶ்ரயங்களை இத்யாதி. அழிக்கும்பதார்த்தம் - அக்நி. அப்படி குணங்களழிக்குமோ? என்ன - நினைதொறும் இத்யாதி. "மேவி" என்றால் - ஈஶ்வரனோடொழிய, குணங்களோடும் மேவியென்று காட்டுமோ? என்ன - இவள்மேவிற்று இத்யாதி. "மேவி" என்றதின் வ்யதிரேக சித்தமானவர்த்தம் - இங்கிருந்த இத்யாதி. அவனோடு மேவியென்கையாலே - இங்கிருந்தாளும் எங்களோடு பொருத்தமில்லையென்றபடி. வீப்ஸைக்கர்த்தம் -

acharya.org

லுருள்] - பருவத்துக்கு அநுரூபமான வ்யாபாரத்தைவிட்டாள். விளையாடுகையைத்தவிர்ந்து மேலி நைந்தாளன்று கிடீர்; இவ்விஷயத்திலே அவகாஹித்து, புறம்புள்ளவற்றை விட்டாளத்தனை. "மாற்பான்மனஞ்சுழிப்பமங்கையர்தோள்கைவிட்டு"-பகவத்குணங்கள் கொண்டு முழுக, புறம்புள்ளது கைவிட்டாள். நல்லதும்தீயதுமானால், தீயதுபோலன்றிறே நல்லது பண்ணிக்கொள்ளும்படி. "வரரோ தநியொரகொவிரகொவரரோ தநி"(பரமாத்மநி யோரக்தோ விரக்தோzபரமாத்மநி) "மனைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார்தொழுதாரத்தோள்" என்னுமாபோலே. [மேவிநைந்துநைந்து விளையாடலுருள்] - மௌக்த்யம் மாறி விஷயாநுபவமல்லள். "ஶப்தாதிகள்ஹேயம்" என்று ஶாஸ்த்ரத்தாலேயறிந்து அவற்றைவிட்டு, "஭கவத்விஷயம்நன்று" என்று கைவைத்தாளன்று. [என்சிறுத்தேவி] - தன்திருமால் என்று மேலே, பெரியதேவியைச் சொல்லுகையாலே, 'சிறுத்தேவி' என்று விசேஷிக்கிறாள். [என்சிறுத்தேவி] - பருவம் நிரம்பாதிருக்கச்செய்தேயும் பட்டங்கட்டின ப்ரதாநமஹிஷிகளோடொக்கச் சொல்லலாயிருக்கை. "என்பெண்பிள்ளை" என்கிற ப்ரதிபத்தியில்லைகாணும் இவள்தனக்கு. "பிள்ளையைப்பிள்ளையென்றெண்ணப்பெறுவரே" - இவளுக்கு ஹிதஞ்சொன்ன நாக்கைக் கழுவவேணுமென்கிறாள். [இனி - போய்] - வேறே சிலகொண்டு போதுபோக்கவேண்டும் பருவத்திலே, அவற்றை விடும்படியான பாகம்பிறந்த இதுக்குமேலே ஓர்ஏற்றமுண்டாகப்போனாளோ? [இனி] - இங்கேயிருக்கச்செய்தே *நோபஜநம்ஸ்மரந்நிதம் பிறந்ததாகில், இனி அங்குப்

ப்ர.—[மேவிநைந்துநைந்துவிளையாடலுருள்]— வாஹுஷ்ஷ்ருஷ்ஷ்ருதள, "வரரோ தநியொரகொவிரகொzவரரோ தநி। ஸவெஷணாவிநிஷ்ஷுஸ்ஸுஹெக்ஷம்ஹொக்ஷுஹுதி"

[இனி - போய்]—ஹாஹொஹெ, [அ-கஉ] "ஜக்ஷஸ்ரீ யந்ரஶோணஸ்ரீ ஹிவபாயாநெவபாஜ்ஜாகிஹிவபாநொவாஜநம்ஸ்ஸுரஹிடிஂஶரீரழ"

நைந்துமீள இத்யாதி. தாத்பர்யசித்தார்த்தம் - பருவத்துக்கு இத்யாதி. லோகத்தில் நாயகிகளில் வ்யாவ்ருத்தி சொல்லுகைக்காக அதிஷ்டிகை - விளையாடுகையை இத்யாதி. பின்னையெப்படியிருந்தாள்? என்ன - இவ்விஷயத்திலே இத்யாதி. இதுக்குப்ரமாணம் - மாற்பால் இத்யாதி. "மாற்பால்மனஞ்சுழிப்ப" என்றதுக்கர்த்தம் பகவத்குணங்கள் இத்யாதி. மற்றைப்படியானாலோ? என்ன - நல்லதும் இத்யாதி. ப்ரமாணத்தரம் - பரமாத்மநி இத்யாதி. பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதௌ, "ஸவெஷணாவிநிஷ்ஷுஸ்ஸுஹெக்ஷம்ஹொக்ஷுஹுதி" இத்யுத்தரார்த்தம். "அத்தோள் - தொழுதார் - மனைப்பால்பிறந்தார் பிறந்தெய்தும்பேரின்பமெல்லாம்துறந்தார்" இத்யங்வயம். அந்த அழகிய தோளைத்தொழுதவர்கள், மனையிடத்தில் பிறந்தவர்கள் பிறந்து ப்ராபிக்கும் நிரவதிகாநந்தம் எல்லாவற்றையும் பரித்யஜித்தவர்களாவரித்யர்த்த. இரண்டாந்திருவந்தாதி நாற்பத்திரண்டாம்பாட்டு. "நினைப்பன்றிருமாலை" இத்யாதி. லோகத்தில் நாயகிகளில் வ்யாவ்ருத்தி தன்னைச் சொல்லுகிறார் - மௌக்த்யம் மாறி இத்யாதி. ஸ்வாபதேசம் ஶப்தாதிகள் இத்யாதி. இத்தால் - இதர முமுக்ஷுக்களில் வ்யாவ்ருத்த ரென்றபடி. "சிறுத்தேவி" என்றதுக்கு தாத்பர்யார்த்தம் - பருவம் இத்யாதி. தன்வயிற்றில் பிறந்தவளை பெண்ணென்னாதே, "தேவி" என்கிறதென்? என்ன - என்பெண்பிள்ளை இத்யாதி. இப்படி ப்ரதிபத்தி பண்ணினாருண்டோ? என்ன - பிள்ளையை இத்யாதி. (திருமொழி) இதுக்குபாவம் - இவளுக்கு இத்யாதி. "இனி" என்றதுக்கு பாவம் - வேறேசில இத்யாதி. ஏற்றமீசம் - ஏறினவிலை. அதிசயமாகவென்றபடி. இத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரிக்கிறார் - இனி யிங்கே

acharya.org

போய் அநு஭விப்பதுண்டோ? [தன்திருமால்திருக்கோளூரில்] - அவள்பக்கல்இருக்குமா போலேயாகாதே இவள்பக்கலிலும் அவன்இருக்கும்படி. லோகத்தில் ஶேஷஶேஷி஭ாவம் போலன்றிறே ப்ரணயிபக்கல் பரிமாற்றம். "வ திம்விஶ்வஸ்ய" (பதிம் விஶ்வஸ்ய) என்கிறபடியே ப்ரமாணத்தைப்பார்த்துப் பரிமாறவொண்ணாதிறே, அஸிமதவிஷயத்தில். தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரீயஃபதி கண்வளர்ந்தருளுகிற வூரிலே. [பூவியல்பொழிலும்] - தழையும்தண்டும் கொம்பும்கொடியுமாய்த் துராலாயிராதே, வேறும் பூவேயாயிருக்கை. நித்ய வஸந்தமான சோலை. (பூவையியல்வான) [தடமும்] - அப்பொழிலை வளர்ப்பதாய்ப் பரப்புமாறப் பூத்த தடாகமும். [அவன்கோயிலுங்கண்டு] - "மாமணிக்கோயிலேவணங்கி" என்கிறபடியே, அவனிலும் அவன் விரும்பி வர்த்திக்கிற கோயிலையும் கண்களாரக்கண்டு. திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமான திவ்யமங்களவிக்ரஹம்போலே, அவையிரண்டுக்கும் ப்ரகாசகமான கோயில். கோயிலைக் கண்டபோதே உள்ளுண்டான வஸ்துவையும் அறுதியிடலாயிருக்கை. உள்ளில் பொன்னுக்குத்தக்க செப்பாயிருக்குமிறே. [கண்டு] - இங்கேயிருந்து மாநஸாநு஭வமாத்ரமாய் க்லேஶப்பட்டவள் கண்ணாரக்கண்டு. "பிள்ளை திருநறையூரரையரும் பட்டருமாக உள்ளே ப்ரதக்ஷிணம்பண்ணாநிற்க, இட்ட அடி மாறியிடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப்போலே பார்த்து வாழ்ந்துகொண்டு போகிறபடியைப் பின்னேநின்று கண்டநு஭வித்தேன்" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். ஆச்சானும் ஆண்டானுமாகக் கிழக்கே நடக்கிறபோது, திருப்பேருக்குக்கிழக்குப் போகவும் மாட்டாதே, ஏறித் திருவடி தொழவும் மாட்டாதே, திருப்பேர்நகரான்கோயிலைப் பார்த்துக்கொண்டு இருந்தார்களாம். [ஆவியுள்குளிர] - இவ்விடத்தைப் பட்டர் அருளிச் செய்யாநிற்கச் செய்தே மேலெழ அருளிச்செய்தாராய், சீராமப்பிள்ளையிருந்தவர் "சீயா! எம்பார் அருளிச் செய்யும்போது 'ஆவியுள்குளிர' என்று முகந்துகொண்டருளிச்செய்யும்படி கேட்டறிகையில்லையோ?" என்றருளிச் செய்தார். கமர்பிளந்த பரப்படங்கலும் மறுநனையும்படியா

யிருக்க இத்யாதி. அதாவது - ஸம்ஸாரத்தைவிட்டுப் பரமபதத்திலேபோன முக்தனுக்குப்பிறந்த ஜ்ஞாநம் இவளுக்கு இங்கேயிருக்கச்செய்தே பிறந்தால், இனி அங்கேபோய்அநுபவிப்பதொன்றுண்டோ? என்றபடி. "திருமால்" என்றதுக்கு - திருவிணிடத்திற்போலே தன்பக்கலிலும் வ்யாமுக்தனுயிருக்கிறவனென்று அர்த்தம் விவக்ஷித்துபாவம்-அவள்பக்கல் இத்யாதி. அவள்பக்கல் - பெரியபிராட்டியார் பக்கல். ஆஶ்ரிதர் எல்லாரையும்பற்றத் திருவுக்குமாலானபடி எப்படி? என்ன - லோகத்தில் இத்யாதி. ஆகையாலே, பதிம்விஶ்வஸ்ய என்று கூட்டுவது. "பூவியல்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - தழையும் இத்யாதி. "பூவியல்" என்கிற வர்த்தமாகார்த்தம் - நித்யவஸந்தமானசோலை என்று. பூவியல் - புஷ்பிதமாகையே ஸ்வபாவமான. இது - பொழிலுக்கும் தடத்துக்கும்விசேஷணம். பொழிலுக்கக்தரம் தடத்தைச்சொல்லுகையாலே-'அப்பொழிலைவளர்ப்பதாய்' என்கிறார். கோயிலென்னாதே, "அவன்கோயில்" என்று விசேஷித்ததுக்கு பாவமாதல்; அவனைக்கண்டென்னாதே, "கோயிலுங்கண்டு" என்றதுக்கு பாவமாதல் - மாமணிக்கோயிலே இத்யாதி. 'தஞ்சைமாமணிக் கோயிலேவணங்கி'-திருமொழி, (1, 1, 6). "மணிக்கோயில்" என்றதுக்கர்த்தம் - திவ்யாத்ம இத்யாதி. இத்தால் பலிதம் - கோயிலை இத்யாதி. இவ்வர்த்தத்தை லௌகிக த்ருஷ்டாந்தத்திலே ஏறிட்டுக் காட்டுகிறார் - உள்ளில் இத்யாதி. "கண்டு" என்கிற பதத்துக்கு வாஸனை - இங்கே இத்யாதி. அவன் கோயிலைக் கண்ணால்காண்கையே புருஷார்த்தம் என்கைக்கு ஹேதுவாயத்வயம் - பிள்ளைதிருநறையூர் இத்யாதி. கிழக்கே நடக்கிறபோது - திருக்குடந்தைக்கு எழுந்தருளுகிறபோதுஎன்றபடி. ஏறி-போய். சீயாவென்றது - பூஜ்யவாசி. முகந்துகொண்டு - மண்டியறுபவித்துக்கொண்டு. முகந்துகொள்ளுகை - மண்டியறுபவிக்கை. முகந்துகொண்டருளிச்செய்த இத்தால் பலிதம் - கமர்பிளந்த இத்யாதி.

acharya.org

யிருக்கை. [எங்ஙனேயுகக்குங்கோல்] - இவள்பருவம் நிரம்பாதிருக்கச்செய்தே புறம்புள்ள வற்றைவிட்டு அவனை அநுஸந்தித்து சிதிலையாகிறபோது அவ்வழகுகண்டு அநுபவிக்கப்பெற் றேன்; அவனைக்கண்டநுபவிக்கிறபோதைஅழகு நான் கண்டுவாழப்பெற்றிலேன் என்கிறாள். [இன்றே] - எனக்கு சோகத்தாலே சூந்யமாய்க்கிடக்கிற இன்று அவளுக்கநுலவத்தாலே அடிக்கழஞ்சு பேற்றுச் செல்லுகிறதே! ஒருநாளிலே இப்படியாவதே! நாள்வாசி யற்றிருந்த திறே விஷயாதீநமாய் வருகையாலே. (ரு)

ஆறும் பாட்டு.

இன்றுஎனக்குஉதவாதகன்ற இளமான்இனிப்போய்
தென்திசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே
சென்றுதன்திருமால் திருக்கண்ணுஞ் செவ்வாயுங்கண்டு
நின்றுநின்றுநையும் நெடுங்கண்கள்பனிமல்கவே.

ஆ.—(இன்றுஎனக்கு.) - இன்று தன்னைப்பிரிந்து வ்யஸநப்படுகிற எனக் குத் துணையாகாதே என்னைப்பொகட்டுப்போன என் இளமான், இனிப்போய்த் தென் திசைத் திலதமனைய திருக்கோளூர்க்கே சென்று அவன் கோயிலுள்ளேபோய், தனக் குப்பிராட்டியோடுள்ள ஸம்ஸ்லேஷத்தாலே புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவ ளத்தையுங்கண்டு நிரவதிகப்ரீதியாலே விகலிதமான இவளுடைய கண்களையும் ஆனந்தஜ மான கண்ணீரையும் ஆனந்தாகதமான மையில்ய பரம்பரையையும் காணப்பெற்றிலே னென்கிறாள்.

ஒ.— ஆறும்பாட்டில், திருக்கோளூரிலேசென்று எம்பெருமானுடையஸ்நேஹ பஹுளமான விஷிதாதிகளைக்கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே மேன்மேலென மியிலையாகக் கடவளாகாதே யென்கிறாள்.

[இன்றுஎன்று தொடங்கி] - தன்னைப்பிரிந்து நோவுபடுகிற எனக்கு இத் தசைக்கு துணையன்றிக்கேபோன சிறுப்பெண்பிள்ளை எனக்கு உதவாததுக்குமேலே தெற்குத்திக்குக்குத் திலகம்போலேயிருக்கிற திருக்கோளூரிலேபோய்ப்புக்குப் பெரிய பிராட்டியார்பக்கல்போலே தன்பக்கல் ப்ரணயியானவன்.

ப.—அநந்தரம், அவனுடைய திவ்யாவயவசோபையை அநுபவித்து ஹர் ஷத்தாலே மியிலையாமிறேயென்கிறாள்.

எனக்கு - (தன்னைப்பிரிந்துநோவுபடுகிற) எனக்கு, இன்று - இப்போது, உத வாது - உதவாதே, அகன்ற - கைகழியப்போன, இளமான் - சிறுப்பெண்பிள்ளையான வள், போய்-வருந்தி வழிநடந்துபோய், தென்திசை - தெற்குத்திக்குக்கு, திலதம்அனைய-

---

"எங்ஙனேயுகக்குங்கோல்" என்றுஈடுபடுகிற தாயாருடைய ஹார்த்தபாவம் - இவள்பருவம் இத்யாதி. "இன்றே" என்கிற ஸவரத்தங்குபாவம் - எனக்கு இத்யாதிவாக்யத்ரயமும். நாள்வாசி - நாளின் குணம். விஷயாதீநமாய் வருகையாலேயென்றது - தனக்கபிமதையான பெண்ணைப்பிரிகையாலும், அவளுக்கபிமதனான நாயகனை அவள்பெறுகையாலுமென்றபடி. (இ)

acharya.org

திலகம்போலே யலங்காரமான, திருக்கோளூர்க்கே - திருக்கோளூரிலே, சென்று - ப்ரவேசித்து, இனி-இனி (புக்கபின்பு), தன்-(ஸ்வாபிமத ஸம்ஶ்லேஷத்தைத் தனக்கு ப்ரகாசிப்பித்துத்) தன்னையுற்றாரோடு உறவறுத்த, திருமால் - ஸ்ரீமானுடைய, திரு-ஸாதராஹிவீக்ஷணம்பண்ணுகிற, கண்ணும் - கண்களையும், செம்-ஸாநுநயமான ஸ்வாகதாதிவசநத்தாலே உஜ்ஜ்வலரூபமான, வாயும் - அயரத்தையும், கண்டு - கண்டு, (தன்னுடைய), நெடு-நெடிதான, கண்கள் - கண்களானவை, பனிமல்க - ஆநந்தாஶ்ருபூர்ணமாம்படி ஹர்ஷாதிஶயத்தாலே, நின்றுநின்று - ப்ரதிக்ஷணம், நையும் - சிதிலீபாகாநிற்குமிறே.

இ—ஆறும்பாட்டில், அவனுடைய ஸ்நேஹபஹுமாந வீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஶிதிலீபாகக்கடவளாகாதே யென்கிறாள்.

[இன்றுஎனக்கு உதவாதகன்ற] - தன்னைப்பிரிந்து நோவுபடுகிற இத்தசையில் துணையின்றிக்கேயிருக்கிற எனக்கு உதவாதே கைகழிபப்போன. தன்னைப்பிரிந்து நோவுபடுமன்று உதவுகைக்கன்றோ தன்னைப்பெற்றது; இத்தசைக்கு உதவாளாகில், இனி எற்றைக்கு உதவ இருக்கிறாள்? "ஊரேவஸ்ஸாரேவஞொநெஹவஶ்யாமிராவவ" [இளமான்] - "உதவப்பெற்றிலோம்" என்று அநுதபிக்கவும் அறியாத பருவம். [இனிப்போய்] - பெற்றாரை விடும்படி அவ்விஷயத்திலே அவஸாதித்த இதுக்குமேல் என்ன எற்றம் பெறப்போனாள்? பெற்றாரைவிட்டுப் பற்றுமதிறே ப்ராவண்யத்துக்கு எல்லை. [தென்திசை இத்யாதி] - தெற்குத்திக்குக்குத் திலதமான திருக்கோளூரிலேசென்று. வலஹாநியாலேபோய்ப் புகுகையில் உண்டான அருமையைச் சொல்லுகிறது. [தன்திருமால்] - "விதாரா தாஹரோயவ" என்று நிருபாதிகவத்யத்தைக் காட்டியாயிற்று ஸோபாதிகவத்யத்தை அறுத்தது. [திருக்கண்ணும்] - நெடுநாள் பிரிந்துபட்ட விடாய் தீர பஹுமாநந்தோற்ற நோக்கும் கண். [செவ்வாயும்] - ஸாபராதனானேன் என்று தாழ்வுதோற்றச்சொல்லும் அயரமும். [கண்டு] - "நொவஜநம்ஸுரஹிடம்ஶரீரு" என்னும்விஷயத்தையிறே கண்டது. [நின்றுநின்று நையும்] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே காணக்காண ஶிதிலீயாகாநின்றாளிறே. [நெடுங்கண்கள் பனிமல்கவே] - கண்களின் பரப்படங்கலும் ஆநந்தாஶ்ருவாலே பூர்ணமாகிறதிறே.

ஈடு—ஆறும்பாட்டு. அவனுடைய ஸ்நேஹபஹுமாநவீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சிதிலீயாகக்கடவளாகாதே யென்கிறாள். இவள்தான்உகப்பது அங்கேபுக்குத் தரித்துநிற்கவல்லளானாலிறே. "எங்ஙனேயுகக்குங்கொல்" என்றாள் கீழிற் பாட்டில்; இங்ஙனேயுகக்குமென்கிறாள் - இப்பாட்டில்; மகள் காணப்புகுகிறவிஷயத்தை யநுஸந்திப்பது, தன்மகள்படியை யநுஸந்திப்பதாய்த் திருத்தாயார் படுகிறபாடு என்தான்!

ஆறும்பாட்டு— இன்று இத்யாதி. கீழே, "எங்ஙனேயுகக்குங்கொல்" என்றத்தோடேசேர அவதாரிகாத்வயம் அருளிச்செய்கிறார்: முந்தினதுக்கு, 'இவள்தானுகப்பது' இத்யாதிவாக்யாநந்தரம்; 'அவனுடையஸ்நேஹ' இத்யாதிவாக்யம் அநுஸந்தேயம். இரண்டாவது, 'எங்ஙனேயுகக்குங்கொல்' என்றாள் இத்யாதி அவதாரிகாத்வயமும், "தன்திருமால்திருக்கண்ணும்" இத்யாதியைக்கடாக்ஷித்து. பாட்டுக்களில் பூர்வோத்தரார்த்தங்களிலே தாயாரினுடைய ஸ்வபாவங்களையநுஸந்தித்து, வ்யாக்யாதாவின்ஈடுபாடு - மகள்காண இத்யாதி.

acharya.org

[இன்று எனக்கு உதவாதகன்ற] - பிள்ளைபெற்று வளர்க்கிறது ஆபத்துக்கு உதவுமைக்கன்றோ? தன்னைப்பிரிந்த இத்தனிமைக்கும் இத்தசைக்கும் மேற்பட எனக்கோர் ஆபத்துண்டோ? இன்றெனக்கு உதவாதொழிவதே! "சுதொநுகிம்ஷுவேதரம் ஸொஹமிக்ஷ்வாகுநந்தநம்। ஈரோவஸ்ஸாரோவஸ்தாரெநஹவஸ்யாமிராகவம்" (அதோநுகிம்துகதரம்ஸோஹமிக்ஷ்வாகுநந்தநம் இமாமவஸ்த்தாமாபந்நோநேகபஸ்யாமிராகவம்) - நான் நெடுங்காலங்கூடி வருந்தித் தம்மைப்பெற்றது, தம்மைப்பிரிந்து நான் இவ்வவஸ்த்தையைப் ப்ராபித்த இற்றைக்கன்றோ? இன்று தம்மை நான் காணுதொழிவதே என்றுனிறே! [எனக்குதவாது] - சக்ரவர்த்தியில் தனக்குண்டானவாசி: "நின்றுதூங்குகின்றேன்" என்னுமாபோலே; அல்லாத தாய்மாரைப்போலேயோ நான் தனக்கிருப்பது? தன் உகப்பே எனக்கு உகப்பாக இருக்குமவளன்றோ நான். இவளுடைய அபிமதவிஷயத்துக்கு வடகையும்தானேயிறே. "பிரானிருந்தமை காட்டினீர்" என்று, "அன்னையும் அத்

ப்ர.—[இன்றெனக்குதவாதகன்ற]—சுயொயுராசுணெ, [சுகூ] ஈஸாரயூரூஸாவெ: "ஸொஹிதாக்ஷம்ஈஹாவாஹுஸாஈக்ஷணிகுணுஷு । ஸாஈயஷிநவஸ்யாமிஈஷிஷ்யாரியக்ஷயு ॥ உரு ॥ சுதொநுகிம்ஷுவேதரம் ஸொஹமிக்ஷ்வாகுநந்தநம் । ஈரோவஸ்ஸாரோவஸ்தாரெநஹவஸ்யாமிராகவம் ॥ உசு ॥ ஹாஸாரிஸாரிநுஜஹாஹாவெடெஹியஸுஷ்வி । நசாஂஜாநீதஷுவெநதியசாணதெநாயுவக ॥ உஎ ॥

இன்று எனக்கு உதவாதகன்ற - தன்னைப்பிரிந்துநோவுபடுகிற இத்தசையில், துணையின்றிக்கேயிருக்கிற எனக்கு உதவாதே என்கைகழியப்போன என்று ஸப்தார்த்தம். இதுக்குஹார்த்தபாவம் - பிள்ளைபெற்று இத்யாதிவாக்யத்தாலும். உனக்குஆபத்தேதென்ன - தன்னைப்பிரிந்த இத்யாதி. "தன்னைப்பிரிந்த இத்தனிமைக்கும் இத்தசைக்கும் உதவவன்றோ தன்னைப்பெற்றது" என்கை வ்யாவ்ருத்தமன்றோ? என்ன; கலக்கம்அப்படிசொல்லுவிக்குமென்கைக்கு ஸம்வாதம் - அதோநுகிம் இத்யாதி. "சுதொநுகிம்ஷுவேதரம்ஸொஹமிக்ஷ்வாகுநந்தநம் । ஈரோவஸ்ஸாரோவஸ்தாரெநஹவஸ்யாமிராகவம்" இதி தஸரத ப்ரலாபம். இஸ்ஸ்லோகார்த்தம் - நான் இத்யாதி. சக்ரவர்த்தியில் இவளுக்கு வாசியாவது - அவன்பிரிந்தவுடனே முடிந்தான்; இவள்முடியவும்பெறாதே தரிக்கவும்பெறாதேயிருக்கை. இதுக்குத்ருஷ்டாந்தம் - நின்று இத்யாதி. நாய்ச்சியார்திருமொழி, ஒன்பதாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு - "கோங்கலரும்பொழில்" இத்யாதி. 'கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகள்மேல்' - கோங்கலரா நின்றுள்ள சோலையையுடைய திருமாலிருஞ்சோலைமலையில் கொன்றைகளின்மேலே;'தூங்கு†பொன்மாலைகளோடு உடனாய்நின்று தூங்குகின்றேன்'-நாலாநின்றுள்ள ஸ்ப்ருஹணீயமான மாலைகளோடே ஸத்ருஸமாய் நின்று தடுமாறுநின்றேன். கோங்கு - தேனும், பரிமளமும். அலருகை - ப்ரவ்ருத்தியையும், விகஸிக்கையுமென்று சப்தார்த்தம். இதுக்கு தாத்பர்யம் - கொன்றைமாலையாகையாலே அழகர்க்குமாகாது; அதுதான் திருமலையிலுள்ளதாகையாலே சைவரையும் பறிக்கவொட்டார்கள்; ஆக, இரண்டிடத்துக்குமாகாதே கிடந்து நாலுமாபோலே, காலும் தம்மோட்டை ஸம்பந்தமேஹேதுவாக பந்துக்களுக்கும் ஆகாதே தாமும் அங்கீகரிக்கப்பெறாதே நடுவேநின்று தடுமாறுநின்றேனென்ற ஆண்டாளைப்போலே, இவளும் தன்னோடேகூட இருக்கவும் பெறாதே முடியவும்பெறாதே நோவுபடாநின்றேன் என்கிறாளென்றபடி. "எனக்கு" என்றதுக்கு, கீழ், 'சக்ரவர்த்தியில்' வ்யாவ்ருத்தியாக அருளிச்செய்து, இங்கே 'அல்லாத தாய்மாரில்' வ்யாவ்ருத்தியாக அர்த்தாந்தரம் - அல்லாததாய்மாரை இத்யாதி. அவர்களைப்பற்ற விசேஷமேதென்ன - தன்னுகப்பே இத்யாதி. இதுக்குநியாமகமேதென்ன - இவளுடைய இத்யாதி. இதுக்குப்ரமாணம் - பிரானீ இத்யாதி. இப்படி வடகையாயிருக்கச்செய்தே தனக்கு உதவாதேபோவானென்? என்ன;

† 'பூமாலை' என்று பாடாந்தரம்.

acharya.org

தனுமென்று அடியோமுக்கு இரங்கிற்றிலள்'' - பிள்ளைகாள்! போகட நினைப்பார் பழியிட்டுப் போகவேணுமோ? அடியாரை நியாமகரேன்னவேணுமோ? வழிக்குத்துணையாவாரை நிவாரகர் என்று போகவேதே! [அகன்ற] - இப்படி கைகழியப் போவதே! ஒருதேசத்தே நின்றுதான் உதவாதொழியப்பெற்றேனோ? [இளமான்] - ''போகட்டது தாயையிறே'' என்றறிந்து மீளமாட்டாத பருவங்கிடீர்! இவளைநான் வெறுக்கிறதேன்? பருவம் அதுவானால் செய்யலாவதுஉண்டோ? [இனிப்போய்] - உறவுமுறையாரில் தாய்க்கு மேற்பட்டார் இல்லையிறே! இப்படி தாயுங்கூடப் புறம்பாம்படி அவன்பக்கலிலேபிறந்த ஹாவவுந்யத்துக்குமேலே ''அவ்வருகேயொன்றுண்டு'' என்று போனாளோ? வந்தேறியைக் கைவிட்டால், ஸ்வதஸ்ஸித்தமானதுக்குச் செய்யவேண்டுவதொன்றுண்டோ? [தென்திசை இத்யாதி] - ''தேற்குத்திக்கு'' என்றுகொண்டு, ஆர்யர்களிகழ்ந்த ம்லேச்சபூமியிறே: இங்ஙனே யிருக்கச் செய்தே, ஓர் ஆலரணந்தானே எல்லா ஆலரணங்களுக்கும் நிறங்கொடுக்கவற்றுமா போலே, திருக்கோளூருண்டாகையாலே திக்காக ஶ்லாக்யமானபடி. ''தக்ஷிணாதிக்ஸ்தா யெநஸரணாவாணுகஜுணா'' (தக்ஷிணாதிக்க்ருதாயேநஸரண்யாபுண்ய கர்மணா) என்னுமாபோலே. [திருக்கோளூர்க்கேசென்று] - திருத்தாயார்க்கு அரிதாய்த் தோற்றுகிறபடி. அவளுக்கு வழிப்போக்கோடு, ஊரில்புகுதியோடு, அவன் தன்னைக் காணுமத்தோடு வாசியற எல்லாம் உத்தேஶ்யமாயிருக்குமிறே. அர்ச்சிராதிகதியோடு, பரமபதத்தோடு, அங்குப்புக்கால் ஸதாஶ்ரமம்பண்ணுமவனோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே. [தன்திருமால்] - ''ஸர்வேஷாமேவலோகாநாம்பிதாமாதாசமாதவஃ'' (ஸர்வேஷாமேவலோகாநாம்பிதாமாதாசமாதவஃ) - இங்கு விட்ட உறவெல்லாம் அங்கே உண்டாயிருக்கிறபடி. அவனுடைய ப்ராப்யவேஷந்தான் லக்ஷ்மீபதியாயாகாதேயிருப்பது.

''தாய் தப்பனானால் நம்முடைய அபிமதவிஷயத்துக்கு ப்ரதிபந்தகரன்றோ?'' என்னும் அதிசங்கையாலே போனாளென்னுமதுக்கு ஸம்வாதம் - அன்னையும் இத்யாதி. இதுக்குபாவம் - பிள்ளைகாள்! இத்யாதி பிள்ளைகாளென்றது - வார்த்தைப்படி. ''அடியோமுக்கு'' என்றதுக்குபாவம் - அடியாரை இத்யாதி. ஏதத்விவரணம் - வழிக்குத்துணை இத்யாதி. அடியோமான எங்களுக்குத் தாயும்தந்தையும் என்று பேரிட்டு இரங்கிற்றிலள் இதி ஶப்தார்த்தஃ. திருமொழிமூன்றும்பத்து, ஏழாந்திருமொழி, ஏழாம்பாட்டு. ''அகன்ற'' என்கிறபதத்துக்கர்த்தம் - இப்படி இத்யாதி. அதாவது - நாமிருக்கிற ஊரிலேயிராதே தூரதேசத்திலேபோவதே என்றபடி. தூரத்திலேபோனதுக்கு ஸ்லேஷிக்கிறதென்? இருக்கிறஊரிலே உதவாதிருந்தால் கல்லதோ? என்ன; 'அதுநல்லதன்றோ' என்கிறான் - ஒருதேசத்தே இத்யாதி. ஏகதேசஸ்த்தையானால் மீளவருமென்று யிரிந்திருக்கலாம், அது இல்லாதபடி தேசாந்தரஸ்த்தையானாளென்றபடி. மகளென்னாதே, ''இளமான்'' என்றதுக்குபாவம் - போகட்டது இத்யாதி. பலிதம் - இவளைநான் இத்யாதி. ''அகன்ற - இனிப்போய்'' என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - உறவுமுறையார் இத்யாதி. ஹாவவுந்யமுண்டானாலும் அநுபவ கைங்கர்யங்களுக்காகப் போகவேண்டாவோ? என்ன - வந்தேறியை இத்யாதி. வந்தேறியை - ஔபாதிகபந்துக்களான தாய்முதலானோரை. ''திலதமனைய'' என்றதுக்குபாவம் - தேற்குத்திக்குஎன்று இத்யாதி. இதுக்குத்ருஷ்டாந்தம் - தக்ஷிணாதிக் இத்யாதி. போய்எ ன்னாதே, ''சென்று'' என்கிறதுக்குபாவம் - திருத்தாயார்க்கு இத்யாதி. திருத்தாயார்க்கரிதாய்த்தோற்றினால், போகிறபெண்ணுக்கும் அரிதாயிராதோ? என்ன - அவளுக்கு இத்யாதி. வழியேதொடங்கி உத்தேஶ்யமாயிருக்குமென்றபடி. வழியேதொடங்கி உத்தேஶ்யமாகக்கூடுமோ? என்ன - அர்ச்சிராதி இத்யாதி. ''திருமால்'' என்று அவளையும்சொன்னதுக்குபாவம் - இங்குவிட்ட இத்யாதி. கீழே - ''அகன்ற'' என்றபதத்தோடேகூட்டி பாவமருளிச்செய்து, ''கண்டு'' என்கிறபதத்தைக்கடாக்ஷித்து தாத்பர்யார்த்தம் - அவனுடைய இத்யாதி. அவனே

acharya.org

விஶிஷ்டவேஷத்திலல்லது ப்ரதிபத்திபண்ணவறியாள். [திருக்கண்ணும்செவ்வாயுங்கண்டு]- "இவள் முற்படும்படி நாம் பிற்பாடராவதே!" என்று பொறைகொள்ளுகைக்குக் குளிர நோக்குகிறநோக்கும், சிலசொல்லப்புக்குத் தடுமாறுகிற திருப்பவளமும் இருக்கிறபடி. அவனுடைய * கோவைவாய்துடிப்ப மழைக்கண்கள் இருக்கிறபடி. [நின்றுநின்று நையும்[- நாட்செல்லநாட்செல்ல இற்றிற்றுவிழும். கண்டால் முன்புத்தைப்பிரிவை நினைக்கஅறியாள்: எதிர்த்தலை படுகிறது கண்டு ஈடுபடுகிறபடி. "காணுங்காற்காணேன் தவறுயகாணுக்கால், காணேன்தவறல்லவை" என்றிறே இருப்பது. (அதாவது - நாயகனை வுன்னைக்காணும் போது தப்பானது கண்டறியேன். காணாதபோது தப்பல்லாததுகண்டறியேன்.) [நெடுங் கண்கள்பனிமல்கவே] - இக்கண்ணில் பரப்படங்கலும் பாப்புமாறும்படி ஜலதத்த்வம் உண்டாவதே! [நின்றுநின்றுநையும்] - மாறுதே சிதிலையாகாநின்றாள். கிண்ணகத்தில் இளகின கரைபோலே உடைகுலைப்படுகிறபடி. [நெடுங்கண்கள் பனிமல்கவே] - நெஞ் சுக்குமையில்யம்போலேகாணும் கண்ணுக்குக் கண்ணநீர். காணப்புகக்கொண்டு கண்ண நீர் பகை கொண்டாடாநின்றது. ஆநந்தாஶ்ருவோடு ஶோகாஶ்ருவோடு வாசியில்லையிறே: விலக்கும்தெல்லாம் வாபகமாகக்கடவது; "ஶுஷ்கவ்ருக்ஷ" (த்ரஷ்டவ்ய) என்னும் விஷயத்தை நான் அநுஸந்திக்கப்பெற்றிலேன். (சு)

ப்ராப்யனுனுலாகாதோ? "லக்ஷ்மீபதியாய்" என்கிறதிர்ப்பந்தமேதென்ன - விஶிஷ்ட இத்யாதி. திருக் கண்ணும் செவ்வாயுங்கண்டால் பரியிலையாகவேணுமோ? என்ன - இவள் முற்படும்படி இத்யாதி. இத்தால் - இவள்பக்கல் அவனுக்குண்டான வ்யாமோஹாதிஶயந்தோற்றுகிறதென்கிறார்-அவனுடைய இத்யாதி. வீப்ஸைக்கர்த்தம் - நாட்செல்ல இத்யாதி. விட்டுப்போனவனைக்கண்டால் வெறுக்கும தொழிய, ஈடுபடக்கூடுமோ? என்ன - கண்டால் இத்யாதி. "பிரிந்தவனைக்கண்டபோது அவன் தோஷம்தோற்றாது" என்கைக்குக் குறள் - காணுங்கால் இத்யாதி. "காணுங்கால் - தவறுய - காணேன்; காணுக்கால் - தவறல்லவை - காணேன்" என்றந்வயம். இதுக்கர்த்தம்: அவனைக்கண்டால் தோஷமானவை காணேன். காணுவிட்டால் தோஷமல்லாதவை காணேன் என்று. தவறு - குற்றம். "நெடுங்கண்கள்" என்றுவைத்து, "பனிமல்க" என்றதுக்குபாவம் - இக்கண்ணில் இத்யாதி. "ஜல தத்த்வமுண்டாவதே" என்கைக்குஇவளறிந்தபடியென்? என்னில்; இவள்ப்ரக்ருதியையிட்டு ஸித்த வத்கரிக்கிறாள் என்றபடி. வர்த்தமாநார்த்தம் - மாறுதே இத்யாதி. இதுக்குத்ருஷ்டாந்தம் - கண்ணகத்தில் இத்யாதி. "நையும்" என்றத்தையுங்கூட்டிப்பதச்சேர்த்திக்குபாவம் - நெஞ்சுக்கு இத் யாதி. "கண்டு - பனிமல்க" என்றபதச்சேர்த்திக்குபாவம் - காணப்புகக்கொண்டு இத்யாதி. ஆநந் தாஶ்ரு கல்லதன்றோ? அத்தை "பகை" என்னலாமோ? என்ன - ஆநந்தாஶ்ருவோடு இத்யாதி. "கண்டு" என்றுதொடங்கி - இவள்படிகளைச்சொல்லுகிற தாயாருடைய ஹார்த்தபாவம் - த்ரஷ்டவ்ய இத்யாதி. (சு)

---

acharya.org

ஏழாம் பாட்டு.

மல்குநீர்க்கண்ணோடு மையலுற்றமனத்தனளாய்
அல்லும்நன்பகலும்நெடுமால்என்றழைத்து இனிப்போய்
செல்வம்மல்கி அவன்கிடந்ததிருக்கோளூர்க்கே
ஒல்கியோல்கிநடந்து எங்ஙனேபுகுங்கொலோசிந்தே?

ஆ.—(மல்குநீர்.) - எம்பெருமானைக்கண்டு ஸம்ஶ்லேஷிக்கைக்காக க்லுப்தமாக வரும் அந்தகாலமெல்லாம் அவனோடு ஸம்ஶ்லேஷிக்கப் பெறுமையாலே கண்ணநீர் மல்கி, நெடுமால்! நெடுமால்! என்றழைத்து, இனி, இவள் தன்னுடைய விரஹவ்யஸநத்தாலும் ஸௌகுமார்யத்தாலும் அதிமாத்ரம் அவஸந்நையாய் பரிம்லாநையாய்க்கொண்டு, செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே நடந்துபோய்ப் புகும்படியைக் காணப் பெற்றிலேன் என்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், இவள் ப்ரக்ருதி மார்த்தவத்தையும் எம்பெருமானைப் பிரிந்து ஶிதிலையாயிருக்கிறபடியையும் அநுஸந்யித்து, இவள்புக்கால் படும்படியை அநுஸந்திக்கவேண்டுவது அவள் அவ்வளவும்சென்று புகவல்லளாகிலிறே என்கிறாள்.

[மல்கு என்றுதொடங்கி] - ஶுபவத்குண ஸ்மரணத்தாலே நீர்துளும்பாநின்ற கண்ணையும் அநுஸந்யாநம்பண்ணவொண்ணாதபடி அறிவுகெட்ட மநஸ்ஸையும் உடையவளாய், அல்லாதார்க்குப்போலே வ்யர்த்தமே போகிறகாலமல்லாமையாலே, ஶ்லாக்யமான பகலும் இரவும் அதிவ்யாமுக்தனே!என்று கூப்பிட்டு இதுக்குமேலே ஒரு புருஷார்த்தம் தேடிப்போய். [செல்வம் மல்கி என்று மேலுக்கு] - ஐஶ்வர்யம்மிக்கு அவன் கிடந்த திருக்கோளூர்க்கே தன்னுடைய வலஹாகியாலே தளர்ந்து வாடிவாடி எங்ஙனேபோய்ப் புகக்கடவள்?

ப.—அநந்தரம், இவள்காண்கைக்கும் உகக்கைக்கும் அடியான அதிஶயித வ்யாமோஹத்தையுடையவனை வாய்புலற்றிக்கொண்டு வருந்தி நடந்துபோய் எங்ஙனே அவ்வூரிலே புகுவது? என்கிறாள்.

மல்கு - (விரஹத்தாலே)மிக்க, நீர் - நீரையுடைத்தான, கண்ணோடு - கண்களோடே, மையல் - ப்ரமத்தை, உற்ற - அடைந்த, மனத்தனள் ஆய் - நெஞ்சையுடையளாய், (இப்படி பாஹ்யாப்யந்தர காரணங்கள் அவிதேயமாயிருக்க, ப்ராவண்யவாஸநாதிஶயத்தாலே), நன்-(அவனைச் சொல்லுகைக்குறுப்பான) நன்மையையுடைய, அல்லும்- இரவும், பகலும் - பகலும், நெடுமால் - அதிஶயிதவ்யாமோஹத்தை யுடையவனே! என்று - என்று, அழைத்து - கூப்பிட்டு, இனி - அவ்வார்த்திக்குமேலே, ஒல்கி-ஒடுங்கி, ஒல்கி - அசைந்து, நடந்து - நடந்து, ஓசிந்து - தளர்ந்து, போய் - போய், செல்வம் மல்கி - அபிவ்ருத்தைஸ்வர்யனாய்க்கொண்டு, அவன் - அவன், கிடந்த - கண்வளர்ந்தருளின, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, எங்ஙனே - எங்ஙனே, புகுங்கொல் - புகக்கடவளோ? ஓசிவு-தளர்த்தி, ஒல்குதல் - ஒடுக்கமாய், அசைதல்.

acharya.org

இ.—ஏழாம்பாட்டில், இவள் ப்ரக்ருதிமார்த்தவத்தையும், பிரிவால் வந்த சைதில்யத்தையும் அநுஸந்஧ித்து, இவையெல்லாம் அவ்வளவும் செல்லப்போகவல்ல ளாகிலிறே என்கிறாள்.

[மல்குநீர் இத்யாதி] - ஸுகுமார்யகுண ஸம்ருதியாலே நீர்மல்கின கண்களையும், அநுஸந்஧ிக்கவொண்ணாதபடி அறிவுகெட்ட மநஸ்ஸையும் உடையளாய், உள்ளும்புறம்பு மொக்க இருண்டுகிடக்க, எங்ஙனேபோம்படி? கண்ணநீராலே பதார்஥ ஊர்ஜநமில்லை: திக்ப்ரமமுண்டாம்படியாக வாய்இருண்டது. கல்ல இரவும் கல்ல பகலும், மநஸ்ஸஹ காரமுமின்றிக்கேயிருக்க, அதிவ்யாமுக்஥னே! என்று கூப்பிடாநின்றாள். இதுவிலும் அவ்விஷயத்தையே சொல்லிக் கூப்பிடுகையாலே ஶ்லாக்யமான காலம் என்கிறாள். தன் வ்யாமோஹத்தைக் காட்டியிறே இவளை யலவலையாக்கிற்று. [இனிப்போய்]-அஹோ ராத்ரம் அவன் வ்யாமோஹத்தை அநுபவிக்கிற இவ்விடத்தைவிட்டு என்ன ஏற்றம் பெறப்போனாள்? "ययाऽऽवकाशेऽऽस्थाः" என்கிறபடியே இருட்சி கைகொடுக்க விறே போயிற்று. [செல்வம்மல்கி யவன்கிடந்த] - ஐஶ்வர்யம் மிகுந்த அவன்கிடந்த தேசம். "श्रीसौख्यवसुधाऽऽवासः" என்ற கிடையழகு காணவாயிற்று இவள் போயிற்று. "கிடந்ததோர் கிடக்கை" என்னக்கடவதிறே. சாய்ந்தபோதாயிற்று அழகுமிக்கிருப்பது. [ஓல்கி யொல்கி] - ஒடுங்கியொடுங்கி; ஓரடியிடும்போது நடுவே பல கால் இளைப்பாறவேண்டும்படியிருக்கை. [ஓசிந்து] - துவண்டு எங்ஙனே போய்ப் புகக்கடவள்.

ஈடு.— ஏழாம்பாட்டு. இவள் ப்ரக்ருதிமார்த்தவத்தையும் பிரிவில்வந்த சைதில் யத்தையும் அநுஸந்஧ித்து, இவையெல்லாம் அவ்வளவும் செல்லப்போகவல்லளானாலிறே யென்கிறாள். நாம் இலையகலப்படுக்கிறோமத்தனையொழிய, இவள் போய்முடியப் புகா நின்றாளோ?

[மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய்]- "என்றேனும் கட்கண்ணாற் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணேற்காணும்" என்னும்இரண்டுமோழிய

ஏழாம்பாட்டு.—மல்குநீர் இத்யாதி. "ஓல்கியொல்கி நடந்து - ஓசிந்து" என்கையாலே - ப்ரக்ருதிமார்த்தவம். "மல்குநீர்க்கண்ணொடுமையலுற்றமனத்தனளாய்" என்கையாலே - பிரிவில்வந்த சைதில்யம். இவையெல்லாமென்றது - கீழிற்பாட்டிற்சொன்ன அநுபவாதிகள். "எங்ஙனேபுகுங் கொல்" என்றதைப்பற்ற - அவ்வளவும்கெல்ல இத்யாதி. 'போகவல்லளானாலிறே - நாமிலையகலப் படுக்கிறோமத்தனையொழிய இவள் - முடிய - போய் - புகாநின்றாளோ - என்கிறாள்' என்றஅத்வயிப் பது. அன்றிக்கே, கீழ்வாக்யவிவரணமாதல் - நாம்இலையகல இத்யாதி. 'முடிய - போய் - புகாநின் றாளோ' என்றந்வயிப்பது.

"மல்குநீர்க்கண்" என்றும், "மையலுற்றமனம்" என்றும் விசேஷித்ததுக்குஹார்த்தபாவம் - என்றேனும் இத்யாதி. அதாவது - ஒருவற்குப்போம்போது பாஹ்யசக்ஷுஸ்ஸாலேயாதல் ஆந்தர சக்ஷுஸ்ஸாலேயாதல் போகவேணும்; இவையிரண்டும் இவளுக்குப்போகவொண்ணாதபடி பரவசமான பின்பு, இவள்எங்ஙனேபோகப்புகுகிறாள்? என்றுகருத்து. என்றேனும் - ஒருநாளும், கட்கண்ணால் காணாதஅவ்வுருவை - பாஹ்யசக்ஷுஸ்ஸால் காணவொண்ணாத வந்தத்திருமேனியை; நெஞ்சென்னு முட்கண் - நெஞ்சாகிற ஆந்தாத்ருஷ்டியானது ; உணர்ந்து - அவன்படிகளையறிந்து. 'காணுமேல்'- ஸாக்ஷாத்கரிக்குமாகில்இத்யர்த்தம். பெரியதிருவந்தாதி இருபத்தெட்டாம்பாட்டு - "அன்றேநங்கண்"

acharya.org

இவளெங்ஙனேபோனபடி? கண் - மல்குநீர்க்கண்ணுடையற்று; மனம் - மையலுற்றமனமாயிற்று. அகவாயும் இருண்டு புறவாயும் இருண்டிருக்க, இவள்எங்ஙனேபோனபடி? கண்ணநீராலே கண்தோற்றாது; ப்ரேமாந்தையாகையாலே நெஞ்சு இருண்டுதோற்றாது. [மல்குநீர்க் கண்ணுடைமையலுற்றமனத்தனளாய்] - இரண்டுக்கும் இரண்டும் நிரூபகமாயிருக்கிறபடி. [மையலுற்றமனத்தனளாய் நெடுமால் என்றழைத்து] - நெஞ்சொழியவே தான் கூப்பிட்டது. [அல்லும்நன் பகலும்] - ஸகவத்விஷயத்திலே அவகாஹித்துக் கூப்பிடுகிற காலமாகையாலே, நல்லிரவும்நன்பகலும்என்கிறாள். நாட்டார் க்ஷுத்ரவிஷயங்களை ஆசைப்பட்டுக் கூப்பிடாநிற்க, "எல்லாங்கண்ணன்" என்று கூப்பிடுகிறநாளிறே. [நெடுமால்என்றழைத்து]- அவன் தன்பக்கல் பிச்சேறியிருக்கும்படியைச் சொல்லிக்கூப்பிட்டு. [இனிப்போய்]-அவன் தன்பக்கல் பண்ணும் வ்யாமோஹத்தைச் சொல்லிக் கூப்பிடும் இதுக்குமேலே தன் வ்யாமோஹங்காட்டப்போனாளே. கண்ணுந்தோற்றாதே நெஞ்சும் பறியுண்டிருக்கும் இதுக்குமேலே, இனிப்போய், வேறேயொன்றுண்டோ அநுபவிப்பது? [செல்வம்மல்கி அவன் கிடந்ததிருக்கோலூர்க்கே] - எதிரே பாதிவழிவந்து முகத்திலேவிழித்து உடம்பிலே அணைத்துக்கொண்டு போகாதேயொழிந்தது ஐஶ்வர்யச்செருக்கிறே! ஐஶ்வர்யத்தால்வந்த செருக்குஅன்றாகில் இவ்வரவு அவனன்றோவருவான்? வழியேபிடித்து வாழ்ந்துகொண்டுபோகலாயிருக்க, செருக்காலே இழந்தானென்கிறாள். [செல்வம்மல்கியவன்கிடந்த] - "ஸயாவொயி தஶ்ரீரோநு" (ஸயாபோதிதஶ்ஶ்ரீமாந்) என்கிறபடியே, அழகுமிக்குக்கிடந்த என்னவுமாம். [அவன்கிடந்த] - "ஸுவஸுவ:" (ஸுகஸுப்த:) என்ற கிடையழகுகாணவாயிற்று இவள் ஆசைப்பட்டுப்போயிற்று: "கிடந்ததோர்கிடக்கை" என்னக்கடவதிறே. [அவன்கிடந்த] - அவன்வரவு பார்த்து இவள் இருக்கையன்றிக்கே, இவள்வரவு பார்த்து அவன்கிடக்கும்படியாவதே! [ஒல்கியோல்கிநடந்து]-ஓரடியிலே பத்தடியிட வேண்டும்படியாயிருக்கை. [ஒசிந்து] - துவண்டு. [ஒல்கியோல்கிநடந்து - ஒசிந்து - எங்ஙனேபுகுங்கொல்] - ஓடுங்கியொடுங்கிநடந்து, அதுபொறாமல் துவண்டு, எங்ஙனே புகக்கடவளோ? [நடந்தெங்

இத்யாதி. இரண்டும்போகவொண்ணாமைக்கு இலக்கேதென்ன - கண் மல்குநீர் இத்யாதி. விவரணம் - அகவாயும் இத்யாதி உபயமும்இருளுக்கு ஹேதுவேதென்ன - கண்ணநீராலே இத்யாதி. இப்படியிருக்குமது காதாசித்கமோ? என்ன - இரண்டுக்கும் இத்யாதி. மகஸ்ஸு ப்ராந்தியையடைந்தால் அழைக்கக்கூடுமோ? என்ன - நெஞ்சொழிய இத்யாதி. விஶ்லேஷித்துக்கூப்பிடுகிற அஹோராத்ரங்களுக்கு நன்மையேதென்ன - பகவத்விஷயத்திலே இத்யாதி. அப்படி நல்லநாளோ? என்ன - நாட்டார் இத்யாதி. "மல்குநீர்" இத்யாதியோடேகூட்டி, "இனி" என்றதுக்கு பாவாந்தரம் - கண்ணுந்தோற்றாதே இத்யாதி. "அவன் - செல்வம்மல்கி - கிடந்த"என்கிற வெறப்பால்வந்த ஹார்த்தபாவம் - எதிரே இத்யாதி. "செருக்கு" என்றதுக்கு நியாமகமேதென்ன - ஐஶ்வர்யத்தால் இத்யாதி. "எதிரே பாதிவழி" இத்யாதிவாக்யவிவரணம் - வழியேபிடித்து இத்யாதி. 'செல்வம்" என்றதுக்கு, அழகாகஅர்த்தாந்தரம் - ஸயோ இத்யாதி. "வாயஹெ நத கஹெ நவுவஸுகிஶ்ரீ) ரோ நயா! ஸயாவொயி தஶ்ரீரோநுஸுவஸுவ:வாஹுவ:"இதிஹாநுமத்தம் ப்ரதிவிதா. [ஸு-நு அ-உ ச] "செல்வம்" என்றதின் த்விதீயார்த்தத்துக்குச்சேர பாவம்-ஸுகஸுப்த இத்யாதி. அவன்கிடக்கை ஆகர்ஷகமாயிருக்குமோ? என்ன-கிடந்ததோர்கிடக்கை இத்யாதி. "செல்வம்" என்றதின் முந்தினவர்த்தத்துக்குச்சேர பாவம் - அவன்வரவு இத்யாதி. வீப்ஸையாலே பலித்ததாத்பர்யம்- ஓரடியிலே இத்யாதி. "நடந்து எங்ஙனேபுகுங்கொல்" என்கிறவிடத்தில் வ்யதிரேகவித்தமான பாவம் - நடந்திலளாகில் இத்யாதி. நடந்திலளாகில் போய்ப்புகலாம் என்றது - நடவாதபோதெப்படி புகப்போகாதோ, அப்படியே நடந்தாலும் போய்ப்புகுரமாட்டாள் என்றபடி. நடந்தால்போகமாட்

acharya.org

நனேபுகுங்கோல்] - நடந்திலளாகில், போய்ப்புகலாம்என்றிருக்கிருள்காணும். * அன்ன மென்னடைப்பூங்குழலியாகையாலே, இவ்வன்னநடைகொண்டு புகமாட்டாள் என்றிருக் கிருள். (எ)

எட்டாம் பாட்டு.

ஒசிந்தநுண்ணிடைமேல் கையைவைத்துநொந்துநொந்து
கசிந்தநெஞ்சினளாய்க் கண்ணநீர்துளும்பச்செல்லுங்கோல் ?
ஒசிந்தவோண்மலராள்கோமுநன்திருக்கோளூர்க்கே
கசிந்தநெஞ்சினளாய் எம்மைநீத்தஎம்காரிகையே.

ஆ.—(ஒசிந்த.) - வண்டாலே துகைபுண்ட பூமாலைபோலே எ[illegible] னேடுள்ள கலவியாலே ஒசிந்ததிருமேனியையுடைய பிராட்டியோடே திருக்கே[illegible] அவன் கண்வளர்ந்தருளுகிறபடியைக் காணவேணுமென்னும் ஆசையாலே[illegible] பொகட்டுப்போன என் காரிகை, வ்யஸநத்தாலே மெலிந்தநுண்ணிடைமேலே[illegible] ஸாயத்தாலே கையைவைத்து நொந்துநொந்து கண்ணீர்துளும்ப, அவ்வஸிந் துணையாக, அவ்வூரிலேபுக்குமுடியவல்லளேயோ? என்கிருள்.

ஓ.—எட்டாம்பாட்டில், திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப் பொகட் டுப்போன என்பெண்பிள்ளை, அஸ்ஸங்கமே துணையாக அங்கேபோய்ப் புகவல்லளேயோ? என்கிருள்.

[ஒசிந்த என்று தொடங்கி] - நுவண்டு நுண்ணிதாயிருக்கிற இடைமேலே தன்னுடைய ஸ்ராந்தியாலே கையைவைத்து மிகவும் அவஸந்நையாய். [ஒசிந்த ஒண் மலராள் கொமுநன்] - தன்னேட்டை ஸம்ஸ்லேஷத்தாலே நுவண்ட திருமேனியை யுடைய பெரிய பிராட்டியார்க்கு நாயகனுனவன். இத்திருவாய்மொழியில், பலவிடத்தி லும் "என்பெண்பிள்ளை" என்று சொல்லுகைக்குக் காரணம்:—அவள் நசையற்றபின் னும் அவள்மேல் தனக்கு நசையருமை.

ப.—அநந்தரம், நிரதிஶயபோக்யபூதையான லக்ஷ்மிக்கு நித்யாஹமதனுனவ னுடைய ஊரிலே ஸக்தையாய் என்னைவிட்டவள், தத்ஸங்கமே யாகமாக அங்கேசென்று புகவல்லளோ? என்கிருள்.

ஒசிந்த - (ரஸிகப்ரமரோபபுக்தையான புஷ்பாவளிபோலே ஹோஶத்தாலே) நுவண்ட, ஒண் - வைலக்ஷண்யத்தையுடைய, மலராள் - பத்மவாஸிகிக்கு, கொமுநன் - (அஸிமததமனுன) நாயகனுடைய, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, கசிந்தநெஞ் சினளாய் - ஆர்த்ரசித்தையாய், எம்மை - என்னை, நீத்த-விட்ட, எம்காரிகை - அஸி ருபையான என்பெண்பிள்ளை, ஒசிந்த - பண்டேதளர்ந்த, நுண்-மெல்லிய, இடைமேல் -

---

டரனோ? என்ன - அன்னமென்னடை இத்யாதி. அன்னம்போன்ற ம்ருதுவான நடையையுடைய வளாய், தர்ஶநீயமான குழலையுடையவன் என்றபடி. திருமொழி பதினேராம்பத்து இரண்டாந்திரு மொழி அஞ்சாம்பாட்டு - "அன்னேமுனிவதும்" இத்யாதி. (எ)

acharya.org

இடையின்மேலே, (தன் இளைப்பாலே), கையை-கையை, வைத்து-வைத்து, (அதுதானே யடியாக), நொந்துநொந்து - மேன்மேலும் நொந்து, கசிந்தநெஞ்சினளாய் - நெஞ்சிலீரப் பாடே துணையாகவுடையளாய், கண்ணநீர் - கண்ணநீர், துளும்ப - அலையும்படி, செல் லுங்கொல் - சென்றுவிடக்கூடுமோ?

இ.—எட்டாம்பாட்டில், திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப் பொகட் டுப்போனவள், அஸ்ஸங்கமே துணையாக அங்கேபோய்ப் புகவல்லளோ? என்கிறாள்.

[ஒசிந்த நுண்ணிடைமேல்] - தொட்டார்மேலே தோஷமான நொய்ம்மை. அதுக்குமேலே ஸ்தநபாரத்தாலே வந்த துவட்சி. அதின்மேலே, [கையை வைத்து] - ஸ்ராந்தியாலே இடையிலே கையைவைத்தாள்; அது பொறுமையாலே ஸ்ராந்திஹேது வாயிற்று. [நொந்து நொந்து] - மிகவும் அவஸந்நையாய். வலஹாநியைப் பரிஹரிக் கைக்காக விளைவதறியாதே செய்தாள்; அத்தாலே வலஹாநியை விளைத்தாளாய்விட் டது. [கசிந்த நெஞ்சினளாய்]-நெஞ்சில் வலஹாநியிருக்கிறபடி. [கண்ணநீர் துளும்ப]- நெஞ்சை நோவுபடுத்துகிற வகை யிருக்கிறபடி. [செல்லுங்கொல்] - அங்கேபோய்ப் புகவல்லளோ? [ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்] - வண்டாலே ஆத்தஸாரமான புஷ் பம்போலே, நித்யஸம்ஸ்லேஷத்தாலே துவண்டிருக்கிற பிராட்டிக்கு நாயகன். இரு வருடையவும் சேர்த்தியாயிற்று இவளைக் கொண்டுபோயிற்று. அவனுடைய ப்ரண யத்வமிறே இவளையிருக்க வொட்டாதொழிந்தது. திருக்கோளூரிலே ஸங்கத்தைப்பண் ணின நெஞ்சையுடையவளாய். [எம்மை இத்யாதி] - என்னைப் பொகட்டுப்போன என் பெண்பிள்ளை தன்னை ஸந்யஸித்துப்போனபின்பும் தன் சாபலத்தாலே ஒருதலைவிடா தொழிகிறாள். [கசிந்த நெஞ்சினளாய் எம்மைநீத்த எங்காரிகை - கசிந்தநெஞ்சினளாய்- செல்லுங்கொல்] - அங்குத்தை ஸங்கம் என்னோட்டை உறவறுக்குமித்தனையோ! அங்கேகொடுபோகவும்வற்றோ!

ஈடு.—எட்டாம்பாட்டு. திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப்போகட்டுப் போன என்பெண்பிள்ளை, அஸ்ஸங்கமே துணையாகப் போய்ப் புகவல்லளோ? என்கிறாள்.

[ஒசிந்தவித்யாதி] - இவள் நடவாதேயிருந்தாலும், நினைத்தால் வயிறேரிய வேண்டும்படி கிடீர் இடையிருப்பது! [நுண்ணிடைமேல் கையை வைத்து] - நடுவோன் றில்லையென்று அறிகிறிலள். தன் கையை வைக்கவும் பொறுதிறே தன்னிடைதான்; "மின் னையும் வஞ்சியையும் வென்றிலங்குமிடையாள்" என்று, அவன் கூடப்போகச்செய்தேயும் அஞ்சவேண்டும்படியான இடையிறே. ஒசிந்து - துவண்டு. நுண்ணிதாய் நேரிதான இடை. பலசொல்லியேன்? நடுவோன்றில்லை என்கை. அதாவது - "இற்றது, முறிந்ததுஇப்போது,

---

எட்டாம்பாட்டு—ஒசிந்த இத்யாதி. "ஒசிந்தவொண்மலரான்கொழுநன்" இத்யாரப்ய, "எங் காரிகை" என்னுமளவும் வ்யாகரித்து - திருக்கோளூரில் ஸங்கத்தாலே இத்யாதி. "கசிந்தநெஞ்சின ளாய்க் கண்ணநீர்துளும்பச்செல்லுங்கொல்" என்றதைக்வ்யாகரித்து - அஸ்ஸங்கமே துணையாக இத்யாதி.

"துவண்டநுண்ணியவிடை" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - இவள்நடவாதே இத் யாதி. நுண்மையைச் சொல்லுகிறவளுடைய ஹார்த்தபாவம் - நடுவோன்றில்லை இத்யாதி. இத்தால் பலிதம் - தன்கையை இத்யாதி. அதுக்குஹேதுவேதென்ன - மின்னையும் இத்யாதி. மின்னையும்வஞ் சிக்கொம்பையும்தோற்பித்து விளங்காகின்ற இடையையுடையவளென்றபடி. திருமொழி- "அன்னை யும்" இத்யாதி (3,7,7). விசேஷணத்வயோபாதானத்துக்குபாவம் - பலசொல்லி இத்யாதி: ஆனு

acharya.org

பின்னை'' என்று பயப்படவேண்டும்படியாயிருக்கை. [ஒசிந்தநுண்ணிடைமேல் கையை வைத்து] - இப்படி விழுக்காடறியாதார்உண்டோ! நாயகன் கைவைக்கப்போறுக்கும்த் தனை போக்கித் தன்கைவைக்கப்போறுக்குமோ? *தோடுங்காலோசியும்இடையிறே. அடியே பிடித்துக் கரோபத்ரவம் கனத்திறேயிருப்பது. [கையைவைத்து]-மலைவைத்தென்னுமாபோலே. [நோந்துநோந்து]-கைவாங்கமாட்டாள்; நோவாதிருக்கமாட்டாள். ஸஹஜஶத்ருக்களோடே கூடி ஜீவித்துக்கிடக்கலாம்; வந்தேறிகள்கீழ்பிழைக்கவொண்ணுதிறே! [நோந்துநோந்து] - மிகவும்நோந்து: முதலிலே அஹாவத்திலே நிலையான இடையிலே ஸ்தநபாரங்கொண்டு ஆற்றவொண்ணுதிருக்க, வந்தேறியான கைகொண்டு போறுக்கவொண்ணுமோ? [கசிந்த நெஞ்சினளாய்]-இடையினுடைய நொய்ம்மைசொல்ல, நெஞ்சோதான் சாலப்பருத்திருக்கிறது? நெஞ்சில் ஈரமிருக்கிறபடி. [கண்ணநீர்துளும்ப] - இது தனக்கும் ஊற்றிறே அது. [சேல் லுங்கோல்] - இனி ஸர்வதா மீளாளிறே. வழியில் மிறுக்குக்கள் கழித்துப்புகவல்லளோ? [ஒசிந்த இத்யாதி] - பிரிந்தார்துவட்சிசொல்லுகைக்குக் கலந்தாரோ தான் துவளாதேயிருக்கிறார்? வண்டாலே ஆத்தஸாரமாயிருக்கிற பூப்போலேகாணும் நித்யஸம்ஶ்லேஷத்தாலே துவண்டிருக்கும்படி ஒண்மலராள் கோழுநன்உண்டு, அவளுடையவல்லபன்: அவனுடைய திருக்கோளூர்க்கே. [கசிந்தநெஞ்சினளாய்] - ஸஸ்நேஹமான மநஸ்ஸையுடையளாய். பற்றுகைக்கு அவ்வூரேயாகவமையும், விடுகைக்குத்தாயாகவமையும். [ஒண்மலராள்கோழுநன் திருக்கோளூர்க்கே கசிந்தநெஞ்சினளாய்] - அவனுடைய ப்ரணயித்வத்திலே அகப்பட்ட

லொன்றுமில்லையோ? என்ன - அதாவது இத்யாதி. 'இப்போது பின்னை - இற்றது, முறிந்தது' என்று அந்வயிப்பது. ''கையைவைத்து'' என்றதுக்குபாவம் - இப்படி இத்யாதி. விழுக்காடு - மேல் வரும் கார்யம். அப்படி தன கை பொறுதிருக்குமோ? என்ன - (தோடுங்கால் இத்யாதி. தொடுமளவில் முறியுமிடை இத்யர்த்தம். திருவிருத்தம், ''கொடுங்காற்சிலையர்'' என்கிறபாட்டு. இதுக்குசாடு - அடியே பிடித்து இத்யாதி. * பொய்ந்நின்றஞானமே பிடித்தென்றபடி: கரம் - பகுதியும். ''வைத்து'' என்றதுக்குபாவம் - மலையை இத்யாதி. வீப்ஸைக்குபாவம் - கைவாங்க இத்யாதி. மாட்டாமைக்கு நோறதுவேதென்ன - ஸஹஜ இத்யாதி. ஏதத்விவரணம் - முதலிலே இத்யாதி. ஒசிந்த - துவண்ட. நுண்ணிடைமேல் - ஸூக்ஷ்மமான இடையின்மேலே இத்யர்த்தம். கசிந்தநெஞ்சினளாய் - ஆர்த்ரமான நெஞ்சையுடையளாய் இத்யர்த்தம். ''கசிந்த'' என்று - நெஞ்சினுடைய ஆர்த்ரதையைச்சொல்லுகிறவளுடையதாரார்த்தபாவம் - இடையினுடைய இத்யாதி. நொய்ம்மை - ஸௌகுமார்யம். காயபலமில்லையெனைக்கு மநோபலமுண்டாயிருக்கிறதோ? என்றபடி. ''நொந்துநொந்து'' என்றும், ''கசிந்த நெஞ்சினள்'' என்றும் - காயபலமும், மநோபலமுமில்லையென்கிறது. ''கசிந்த'' என்றதுக்கர்த்தம் - நெஞ்சில் ஈரம் இத்யாதி. கிவு - ஈரம். இதுதனக்கும் - கண்ணநீர்தனக்கும். அது - மநஸ்ஸு. மீளுகை ப்ரார்த்யமாயிருக்க, ''செல்லுங்கொல்'' என்கிறதென்? என்ன-இனி ஸர்வதா இத்யாதி. கசிந்தநெஞ்சினளாகையாலே, மீளாள் என்றபடி. ஒசிந்தவொண்மலராள்கொழுநன் - துவண்டிருப்பாளாய் அழகியதாமரைப்பூவை இருப்பிடமாகவுடையளான பெரியபிராட்டியாருக்கு வல்லபனானவனுடைய என்றசப்தார்த்தம். பிராட்டியினுடைய துவட்சிசொல்லுகிறதுக்குபாவம் - பிரிந்தார் இத்யாதி, ''வஷ்ஷாவஸீவாரவஸிகூஹ ஶிரோவஹுக்தா'' என்றத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார் - வண்டாலே இத்யாதி. ''திருக்கோளூர்க்கேகசிந்த நெஞ்சினளாய் நம்மைநீத்த'' என்கிற பதங்களால் பலித்த பாவமாதல், ''திருக்கோளூர்க்கே'' என்கிற அவதாரணத்துக்கு பாவமாதல் - பற்றுகைக்கு இத்யாதி அதாவது - ப்ராவண்யத்துக்கவதி நதியபர்யந்தம்செல்லுகை, விரக்திக்கவதி தாயாரையும் விடுகை என்றபடி. ''ஒண்மலராள்கொழுநன்'' என்றதுக்கு இரண்டுபாவம். ப்ரணயித்வமாக முந்தினது - அவனுடைய இத்யாதி. ஸர்வாதிகத்வமாக இரண்டாம்பாவம் - ஒண்மலராள் இத்யாதி. இவளுக்கு.

acharya.org

வள் இனி மீளப்புகுகிறாளோ? ஒண்மலராள்கோழுநன்என்று அவனுக்கு ஏற்றம் இருக்கிறபடி. * திருமகளார் தனிக்கேள்வனென்னும் பெருமையுடையபிரானார். [எம்மைநீத்தவெங்காரிகையே] - அவளுக்கு இங்குள்ள மமகாரங் கழியக்கழிய, அதுதானே ஹேதுவாகாநின்றது திருத்தாயார்க்குப் பற்றுகைக்கு. ஸகவத்விஷயத்திலே அவகாஹிக்கையும், வ்யதிரிக்தங்களை விடுகைக்கேல்லை இவ்வளவாகையும், இப்படிவிட்டால் பின்பு அவர்கள் தாங்களே உத்தேஶ்யரென்னும் இடமுஞ் சொல்லுகிறது. புறம்புள்ளவற்றை விடப்பண்ணுவித்துக்கொண்ட விஷயத்தில் ஜ்ஞாநலாபமிறே இவளுக்குவேண்டுவது! இவள்ஸம்பந்தமேயிறே திருத்தாயார்க்கு வேண்டுவது! [கசிந்தநெஞ்சினளாய் எம்மைநீத்தவெங்காரிகை - ஒசிந்த ஒண்மலராள் கோழுநன் திருக்கோளூர்க்கே - கசிந்தநெஞ்சினளாய்க் கண்ணநீர்துளும்பச் செல்லுங்கொல்]-இவள் என்னைவிடும்படி பண்ணிக்கொண்ட விஷயத்தில் ப்ராவண்யமானது அவ்வூரில் ப்ரவேசத்தையும் பண்ணிக்கொடுக்கவற்றோ? 'எம்மைநீத்த' என்று நிஶ்சயித்தாள்; 'செல்லுங்கொல்' என்று ஸம்ஶயியாநின்றாள்; ப்ரேமம்இரண்டையும் பண்ணிக்கொடுக்குமிறே: பாரவஶ்யத்தை விளைத்து இடையிலே போகடிலும்போகடும்; அன்றிக்கே, கொண்டுபோய்ப் போகடிலும் போகடுமிறே. (அ)

ஒன்பதாம் பாட்டு.

காரியம்நல்லனகள் அவைகாணில் என்கண்ணனுக்கென்று
ஈரியா யிருப்பாள் இதெல்லாங்கிடக்க இனிப்போய்
சேரிபல்பழிதூஉய்இரைப்பத் திருக்கோளூர்க்கே
நேரிழை நடந்தாள் எம்மையொன்றும்நினைத்திலளே.

ஆ.—(காரியம்.) - அதிமநோஹரமான லோக்யவஸ்துக்களைக்காணில், இவையெல்லாம் என்கண்ணனுக்கென்று செல்லாநிற்கும் இப்பெண்பிள்ளை, தனக்காக நாங்கள் கொண்டுவந்த லோக்யபதார்த்தங்களையும் எங்களையும் ஒரு த்ருணமாக நினையாதே போகட்டு, லோகமெல்லாம் "இவள் தனியேபோனாளே" என்று பழிசொல்லி இரைக்கும்படியாகத் திருக்கோளூரிலே போனாள் என்கிறாள்.

நிர்வாஹகனுகையேற்றமோ? என்ன - திருமகளார் இத்யாதி. நீத்த - விட்ட. அவள் தன்னைவிடாநிற்க, இவள் "என்னுடையவள்" என்னக்கூடுமோ? என்ன - அவளுக்கு இத்யாதி. "கசிந்தநெஞ்சினளாய், எம்மைநீத்த, எங்காரிகை" என்கிற பதத்ரயத்துக்கும் ஸ்வாபதேசம் - பகவத்விஷயத்திலே இத்யாதி. உத்தேஶ்யர் - விடப்பட்டவர்களுக்கு உத்தேஶ்யரென்றபடி. "விடப்பட்டவர்களுக்கு விட்டவர்கள் உத்தேஶ்யர்" என்னுநின்றீர்; அவர்களுக்கு பகவத்ஜ்ஞாநலாபம்வேண்டாவோ? என்ன, அது மகளுக்கே: தாயார்க்கு இவள்ஸம்பந்தமேவேண்டுவதுஎன்கிறார் - புறம்புள்ளவற்றை இத்யாதி வாக்யத்வயத்தாலே. "கசிந்தநெஞ்சினளாய்" என்ற த்விருக்திக்கு ப்ரயோஜநங்காட்டுவதாக அந்வயங்காட்டுகிறார் - கசிந்தநெஞ்சினளாய் இத்யாதி. இந்த அந்வயத்தால் மாத்ருத்யாகத்துக் கொரு கசிவும், திருக்கோளூரில் ப்ரவேசத்துக் கொரு கசிவுமென்ற த்விருக்திக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - இவள்என்னை இத்யாதி. த்யாகத்தை நிஶ்சயித்து, ப்ரவேஶத்தை ஸம்சயிக்கிறதுக்கு பரிஹாரமருளிச்செய்வாராக அநுதந்னை அநுபாஷிக்கிறார் - எம்மைநீத்த இத்யாதி. 'ஸம்சயியாநின்றாள்' - இதுக்கு ஹேதுவேதென்னில் என்று கூட்டுவது. பரிஹாரம் - ப்ரேமம் இத்யாதி. "இரண்டையும்" என்றது எவை? என்ன - பாரவஶ்யத்தை இத்யாதி. (அ)

acharya.org

ஓ.—ஒன்பதாம்பாட்டில், எம்பெருமான் பக்கலிலே அத்யந்தம் ப்ரவணையாயிருக்கிற இவள், சேரியில் உள்ளார் சொல்லும்பழியே வழிக்கு பாத்யமாகக்கொண்டு திருக்கோளூர்க்கேபோனாள் என்கிறாள்.

[காரியமென்று தொடங்கி] - முதலிலே ஒன்றும் அநுஸந்யிக்கமாட்டாள்; அங்ஙனே இருக்கச்செய்தே, விலக்ஷணமான அவ்வவ பதார்த்தங்களை ஒருகால் அநுஸந்யித்தாளாகில் என் க்ருஷ்ணனுக்கு என்று மேலொன்றும் சொல்லமாட்டாதே நீராகாநிற்குமவள் இங்குஅவனை நினைத்திருக்கும்இருப்புகள் எல்லாம் தவிர அதுக்குமேலே ஒரு புருஷார்த்தம் தேடி. [சேரியென்று தொடங்கி] - தங்கள் சேரியிலுள்ளார் பலபழிகளைச் சொல்லி கோஷியாநிற்கத் திருக்கோளூரிலே பெண்பிள்ளை போனாள். திருக்கோளூர்க்குப் போகையாலே - தன் பெண்பிள்ளையேயாகிலும், நடந்தாளென்று ஸுஹ்ருதாமானமாகச் சொல்லுகிறாள். [எம்மையென்று தொடங்கி] - எம்மை தனக்கு ப்ரதிகூலகோடியிலும் நினைத்திலள்.

ப.—அநந்தரம், நல்லது கண்டால் தனக்கு ஸாலபனான க்ருஷ்ணனுக்கு என்றிருக்குமவள், ஊரார்சொல்லும் பழியை மதியாதேபோனாளென்கிறாள்.

நல்லனகள் - நன்றாய், காரியம் - செய்திப்பாட்டையுடைத்தான, அவை - பதார்த்தங்களானவற்றை, காணில் - காணில், என் - எனக்குபவ்யனான, கண்ணனுக்கு - க்ருஷ்ணனுக்கு, என்று - என்று, ஈரியாய் - ஆர்த்ரஸ்வபாவையாய், இருப்பாள் - இருப்பாளாய், நேர் - மெல்லிய, இழை - ஆபரணத்தையுடையளான இவள், இது - ததர்த்தமாகத் தான் ஸங்கல்பித்த இவ்விபூதி, எல்லாம் - எல்லாம், கிடக்க - கிடக்க, இனி - பின்னையும், போய் - விட்டுப்போய், சேரி - சேரியில்உள்ளார், பல் - பலவகையும், பழி - பழி, தூஉய் - தூற்றி, இரைப்ப - கோஷியாநிற்க, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, நடந்தாள் - நடந்துசென்றாள்; எம்மை - என்னையும், ஒன்றும் - ஒருபடியும், நினைத்திலள் - நினைத்திலள். ஊராராகவும் நினைத்திலள்; உடன்பாடையாகவும் நினைத்திலள் என்று கருத்து.

இ.—ஒன்பதாம்பாட்டில், அவன்பக்கல் அத்யந்தம் ப்ரவணையாயிருக்கிற இவள், சேரியிலுள்ளார்பழியே பாத்யமாகத் திருக்கோளூர்க்கே போனாள் என்கிறாள்.

[காரியம் நல்லனகள் அவைகாணில்] - பதார்த்தங்களில் நன்றானவற்றைக் காணில். [என் கண்ணனுக்கென்று] - ஒன்றிலும் கண்வைப்பதில்லை; கண்டாளாகில், எனக்காகத் தன்னை யோக்கிவைத்த க்ருஷ்ணனுக்கென்னும். [ஈரியாயிருப்பாள்] - "க்ருஷ்ணனுக்கு" என்றால் மேலொன்றுஞ் சொல்லமாட்டாதே, அவன் குணங்களை அநுஸந்யித்து நீராயிராநின்றாள். ஈரித்திருக்கும்-ஆர்த்ரஹ்ருதையையாயிருக்கும். [இதெல்லாங்கிடக்க] - விலக்ஷணபதார்த்த ஸ்ரீர்ஸாநத்தில் "அவனுக்கு" என்கை, அவன் குணாநுஸந்யாநத்தாலே விக்ருதையாகை, இவற்றை அளவிறந்தஸம்பத்தாக நினைத்திருக்கிறாள் இவள். கண்டத்தை "ஶேஷி" என்று இராதே, "அவனுக்கு" என்றிருக்கையிறே ஸம்பத்து. [இனிப்போய்] - ஊரவரூத்தியாலே †துஷ்டனுமவனுக்கொன்று செய்யப் புறப்பட்டுப்போனானோ? இத்தலையிலுள்ளதொன்றில்லை, அவனுக்கு வேண்டுவதொன்றில்லை. "சேரியிலுள்ளார்பழிகளைச்சொல்லி, கடல்கிளர்ந்தாற்போலேகோஷிக்க. [பல்பழி] - போகநினைத்தாள்," புறப்பட்டாள்," "தனிவழியே போனாள்," "தாயைப் பொகட்டுப்

† துஷ்டன்-மகிழ்பவன்.

acharya.org

போனாள்,'' ''குலத்தைப் பார்த்திலள்,' ''அவனைப் பார்த்திலள்'' என்றாற்போலே. [நேரிழை இத்யாதி] - திருக்கோளூரிலே போகையாலே போனாள் என்னாதே, நடந்தாள் என்கிறாள்; வயிற்றிற்பிறந்தாரேயாகிலும் ஸமவத்விஷயத்திலே யோரடிவரகின்றால் ஸுஸ்ரவித்து வார்த்தைசொல்ல வேணும்என்கை. [எம்மையொன்றும் நினைத்திலளே] - வழித்துணையாக நினைத்திலள்; அங்கே நின்று எதிர்கொள்ளுவாரிலே ஒருத்தியாக நினைத்திலள்; பழிசொல்லுவார் கோடியாகவும் நினைத்திலள்; ''ஶுரவுஃ கிம்கரிஷ்யதி'' என்றும் நினைத்திலள்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. அவன்பக்கலிலே அத்யந்தப்ரவணையாயிருக்கிற இவள், சேரியிலுள்ளார்சொல்லும்பழியே பாரேயமாகத் திருக்கோளூர்க்கே போனாளென்கிறாள்.

[காரியம்நல்லனகள் அவைகாணில்] - முதலிலே காண்பதில்லை; பதார்த்தங்களில்நல்லதுகாணில், தன்னை எனக்காக ஒக்கிவைத்த க்ருஷ்ணனுக்குஎன்னப்புக்கு அந்த ப்ரஸ்தாவத்திலே நெஞ்சுநெகிழா, பின்புஅதுதானும் மாட்டாதேயிருக்கும். ''ஏஷ்டாஹவும் வாவாஷ்டம்வா'' (த்ருஷ்ட்வாபலம்வாபுஷ்பம்வா) என்று அவன் சொல்லுமவையெல்லாம் இவள்சொல்லுகிறபடி. நல்லதுகண்டால், ''அவனுக்கு'' என்று இருக்குமதுக்குமேலே அவ்வருகேயொன்று தேடிப்போனாளே! இவளுக்காகத் திருக்கோளூரிலே வந்து, தன்னை இவளுக்கோக்கிவைத்தபடி. [இதெல்லாங்கிடக்க]-''ஸவபூதுஹொமாநு வரிதுஜ்ய'' (ஸர்வாந்போகாந்பரித்யஜ்ய) என்னுமாபோலே. ''உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும்வெற்றிலையுமேல்லாங்கண்ணன்'' என்றும், *ஊரும்நாடும்உலகமுந்தன்னைப்போல்அவனுடைய பேருந்தார்களுமே பிதற்றக் கற்புவானிடறியும், * பூவைபைங்கிளிகள் பந்துதூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியேழுந்தும், * காரியம்நல்லனகள் அவைகாணில் என்கண்ணனுக்குஎன்று வரியாயிருக்கும் இதெல்லாங்கிடக்க-இந்தநிரவதிக ஸம்பத்துக்கிடக்க. [இனிப்போய்] - ''தனக்கு'' என்கிற ப்ரதிபத்தி மாத்ரத்திலே உண்டறுக்க மாட்

ஒன்பதாம்பாட்டு - காரியம் இத்யாதி. ''கண்ணனுக்கென்றீரியாயிருப்பாள், சேரிபல்பழி தூஉய் இரைப்ப'' இத்யாதிகளைக்கடாகூறித்தவதாரிகை - அவன்பக்கலிலே இத்யாதி.

க்ரியத இதிகாரியமென்று, கார்யசப்தத்தாலே - பதார்த்தங்களைச்சொல்லுகின்றது. நல்லனகளைவைகாணில் - தன்முனவற்றைக்காணில் என்றபடி. ஒக்கிவைக்கை - ஆக்கிவைக்கை. அவன் சொல்லுமவையெல்லாம் - அவன் தன்னைப்பிரிந்து சொல்லுமவையெல்லா மென்றபடி. ''ஏஷ்டாஹவும்வாவாஷ்டம்வாயஆதுஸுஸ்ரீஜொஹுஷி। வஹுஶொஹாவி யெதெஷுவம்ஶஸம் ஸுரேஹிஹாஷிதெ'' இதி வீதாம்ப்ரதி ஹநுமான். ''இனி'' என்றதைக்கடாகூறித்தபாவம் - நல்லதுகண்டால் இத்யாதி. ''என்கண்ணன்'' என்கைக்கு அவன்செய்தவுபகாரமேதென்ன - இவளுக்காக இத்யாதி. ''இதெல்லாங்கிடக்க'' என்றதுக்குஇரண்டர்த்தம்: முந்தினது,'ஸர்வாந்போகாந்' இத்யாதி. அதாவது - ''ஸவபூதுஹொமாநுவரிதுஜ்ய'' என்னுமாபோலே, லீலோபகரணபோகோபகரணங்கள் முதலான ப்ரக்ருதிப்பாக்குதங்களெல்லாங் கிடக்கவென்றபடி. ''உண்ணுஞ்சோறு'' என்றதொடங்கி, கீழிற்பாட்டுக்களிற்சொன்ன பகவத்ப்ராவண்யமெல்லாங்கிடக்க என்று. இரண்டாமர்த்தம்-'உண்ணுஞ்சோறு' இத்யாதி. முந்தினவர்த்தத்துக்கு, ''எல்லாம்'' என்று - அநுக்தமானவற்றைச்சொல்லுகிறது. ''கிடக்க'' என்றதுக்குபாவம் - இந்நிரவதிக இத்யாதி. ''நல்லது கண்டால் அவனுக்கென்றிருக்கும் அதுக்குமேலே'' என்னுகின்றாய், இம்மாத்ரமேயமையுமோ? அவற்றைக் கொடுக்க வேண்டாவோ? என்ன - ''தனக்கு''என்கிற இத்யாதி. உண்டறுக்கமாட்டாதவனுக்கு-த்ருப்

acharya.org

டாதவனுக்கு ஒன்றுகொடுத்துக் குறைதீரப்போனாளே. "தெ-ஹூயிஷ்டு" (தே-பூயிஷ்ட்டாம்) என்றிறே அவனிருப்பது. அவன்படியை நினைத்தால், இவளுக்கு இங்கேயிருக்க அமையாதோ? [சேரிபல்பழிதூஉயிரைப்ப] - போகடும்வழித்துணைபேற்றவாறே போனாளத்தனை. ஒருவர் இருவரன்றே! இனியோருவர் சொல்லிற்றொருவர் சொல்லார்களிறே. [பல்பழி தூஉயிரைப்ப] - தன்னை அவனுக்குஆக்கிவைத்தாள்; பின்னையதுதானும் மாட்டிற்றிலள்; புறப்பட்டுப்போனாள்; தாயையப்பார்த்திலள்; ஊரார்பழிபார்த்திலள்; இத்தனையும் செய்தால் அவன்தான் எதிரேவரப்பெற்றதில்லை என்று இப்புடைகளிலே ஒருகோடியிறே சொல்லுவது. † "அலரொழிலாருயிர்நிற்கும்" என்று வழிக்கு யோரகமாமிறே. [நேரிழை நடந்தாள்]-கடைப்பணிக்கூட்டங்கண்டு கொண்டு பின்னேபோகவாகாதேதான் இவள்ஆசைப்படுகிறது. [நடந்தாள்] - தன் பெண்பிள்ளையேயாகிலும், "திருக்கோளூரிலேபோக" என்றுநாலடி புறப்பட்ட இவளை இங்ஙனல்லது சொல்லவொண்ணாதிறே. தன்மகளை யெங்ஙனே கனக்க நினைத்திருக்கிறாள்தான்! வயிற்றிற்பிறக்கவுமாம், சிஷ்யர்களாகவுமாம்: ஸகவத்விஷயத்தில் ப்ரத்யாஸந்நர்உத்தேச்யராமத்தனை. ஒருநாள் நம்பிள்ளையை, சீயர், கோஷ்டியிலே வைத்துப் போரக்கொண்டாடியருளி, "தன் சிஷ்யனைத்தான் கொண்டாடாநின்றான்" என்றிராதேகிடிகோள்! 'கணபுரங்கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப்பெறுவரே' என்று பண்டு சொன்னாரும்உண்டுகிடிகோள்" என்றருளிச்செய்தார். அம்முணியாழ்வான், தன் சிஷ்யனைத்தான் தண்டனிடாநிற்குமாம்; "இதுவென்?" என்றுகேட்க, "அல்லாத வைஷ்ணவர்களை வ்ருத்தத்தாலே அறியவேணும்; இவர்கள் நாணிய வைஷ்ணவர்கள் என்றுஆதரிப்பன்" என்றான். [எம்மையோன்றும் நினைத்திலளே] - வழிக்குத் துணையாகத்தான் கோடுபோகாவிட்டால், ஸ்மரிக்கத்தானாகாதோ? [ஒன்றும் நினைத்திலளே]- எதிர்கொள்வாரிலே சிலராகவாதல், வழித்துணையாவாரிலே சிலராகவாதல், ஏதேனும் ஓராகாரத்தாலேதான் நினைக்க

தனுய் "இவனுக்கொன்றும் செய்யப்பெற்றிலோம்" என்று இழவுபட்டிருக்குமவனுக்குஎன்றபடி. "இப்படியவனிருக்கும்" என்னுமதுக்குப்ரமாணம்-தே பூயிஷ்ட்டாம் (யஜுர். காட. ப்ர-க. 4) இத்யாதி; இத்தால்பலிதம் - அவன்படியை இத்யாதி. "கடந்தான்" என்றத்தையுங்கூட்டிபாவம் - போகடும் இத்யாதி. அதாவது - பழிதூவுகை; இவன் "மறப்பேன்" என்றவன்றும் மறக்கவொண்ணாதபடி அவனை ஸ்ஸரிக்கைக்கு ஹேதுவாகையாலே, இது, இவளுக்கு வழித்துணையாய்ப்போகைக்கு ஹேதுவாயிற்று என்று கருத்து. போகடும் - கொடுபோய்விடும். "சேரி" என்றதுக்குபாவம் - ஒருவரிருவர் இத்யாதி. சேரி-ஒருராக என்றபடி. "பல்பழி" என்றதுக்குபாவம் - ஒவியொருவர் இத்யாதி. ஒருவர்சொல்லிற்றொருவர் சொல்லாமையைக் காட்டுகிறார் - தன்னையவனுக்கு இத்யாதி. பழி வழிக்குத்துணையோ? என்ன - அலரொழில் இத்யாதி. அலர் - பழி, எழில் - கிளம்பினால். நேரிழை - ஸ்லாக்யமான ஆபரணத்தையுடையவள் இத்யர்த்த: "நேரிழை" என்ற ஆபரணத்தை வர்ணித்ததுக்குக் கருத்தேதென்ன - கடைப்பணி இத்யாதி. கடைப்பணிக்கூட்டம் - ஆபரணங்களினுடைய நுனிகூடினவிடம். பணி - ஆபரணம். கடை - நுனி. பிடரியில் கொக்குவாய்முதலான பூஷணங்களென்னுதல். தன்மகளை, போனாளென்னாதே "நடந்தான்" என்று கௌரவித்துச்சொல்லுவானென்? என்ன - தன்பெண்பிள்ளை இத்யாதி. தாயாரானவன் தன்மகளைஉத்தேச்யதாபுத்திபண்ணிக் கொண்டாடுகிறபடியை அநுஸந்தித்து வ்யாக்யாதாவின் ஈடுபாடு - தன்மகளை இத்யாதி. எல்லாமானாலும், தன்மகளைத்தான் கொண்டாடலாமோ? என்ன - வயிற்றில் இத்யாதி. சிஷ்யர்களை பகவத்ஸம்பந்தங்கொண்டு உத்தேச்யதாபுத்திபண்ணிக் கொண்டாடுமெதுக்கு ஔதிஷ்ட்யத்வயம் - ஒருநாள் இத்யாதி. "நினைத்திலள்" என்றதுக்குபாவம் - வழிக்குத்துணையாக இத்யாதி. 'ஒன்றும்" என்றதுக்குபாவம் - எதிர்கொள்வாரிலே இத்யாதி. வழித்துணையாவார் - பழிசொல்லுவார். அவள் நினைத்தால் தனக்குப்ரயோஜகம்

† குறள்-1141.

acharya.org

லாகாதோ? "அத்தலையில் நினைவே கார்யகரமாவது" என்றிருக்கிறாள். ஹதவதாஸத்தியுடையாருடைய அபிமாநமே உத்தேஶ்யம். (கூ)

பத்தாம் பாட்டு.

நினைக்கிலேன்தெய்வங்காள்! நெடுங்கணிளமான்இனிப்போய்
அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை
தினைத்தனையும்விடாள் அவன்சேர்திருக்கோளூர்க்கே
மனைக்குவான்பழியும்நினையாள் செல்லவைத்தனளே.

ஆ.—(நினைக்கிலேன்.) - தன் திருக்கண்களின் அழகாலே ஸர்வலோகங்களையும்தோற்பித்து அடிமையாக்கிக்கொண்டிருக்கிறவனுடைய திருக்கண்களைக் கண்டல்லது ஒரு க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டாதிருக்கிற நெடுங்கண் இளமான்; இனி இது குடிப்பழி என்னுமிடமொன்றும் நினையாதே, அவன்சேர் திருக்கோளூர்க்கே போய்ப்புக்காள்; இவளைப்பிரிந்த வ்யஸநாதிஶயம் நினைக்கவும் கூடுகிறதில்லையென்று சொல்லி, பின்னையும் தன்செயலறுதியாலே தெய்வங்காள்! என்று கூப்பிடுகிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், குடிக்கு வரும் பெரும்பழியைப்பாராதே திருக்கோளூரிலேபுக்கு அவனை ஒருகாலும் விடுகிறிலள் என்கிறாள்.

[நினைக்கிலேன்]-புகுந்த வ்ருத்தத்தை நினைக்கவும் க்ஷமையாகிறிலேன். தெய்வங்காள்! என்று தன்னாற்றாமையாலே சொல்லுகிறாள். [நெடுங்கணென்று தொடங்கி]-விஶாலமான திருக்கண்களை யுடைய சிறுப்பெண்பிள்ளை இங்கிருக்கிற இருப்புக்குமேலே ஸர்வேஶ்வரத்வ ஸூசகமான அழகிய திருக்கண்களை யுடையவனை ஒருக்ஷணமும் விடுகிறிலள். [அவன் என்று தொடங்கி] - குடிக்குவருகிற பெரும்பழியையும் பாராதே இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்து அவன் கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே போனாள்.

ப.—அநந்தரம், அகிலஜகத்ஸ்வாமியான அரவிந்தலோசநனை ஏகதேஶமும் விடாளாகக்கொண்டு குடிப்பழியும்பாராதே அவ்வூரிலே புக்குவிட்டா ளென்கிறாள்.

தெய்வங்காள் - தெய்வங்காள்! நினைக்கிலேன்- (இவளுடைய அதிப்ரவ்ருத்தி) நினைக்கமாட்டுகிறிலேன்; நெடு - (அவன்பெருமையை எல்லாம் தன்னகவாயிலேயாக்கும்படி) பெரிய, கண் - கண்ணையுடையளாய், (பருவத்தைப்பார்த்தால்), இளம்-முக்தமான, மான் - மான்போலேயிருக்கிற இவள், இனி - (தன்கண்ணழகு தனக்குண்டாயிருக்கப்) பின்னையும், போய் - போய், அனைத்துலகும் - ஸர்வலோகத்துக்கும், உடைய - ஸ்வாமியானமைக்குத் தகுதியான, அரவிந்தலோசநனை - அரவிந்தலோசநனை, தினைத்தனையும் - சிறிதுபோதும், விடாள் - விடாளாய்க்கொண்டு, அவன் - அவன், சேர் - வர்த்திக்கிற, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, செல்லவைத்தனள் - சடக்கெனச்சென்றாள்;

ஏதென்ன - அத்தலையில் இத்யாதி. இது - ஸ்வாபதேசம். இத்தால் பலிதமாதல், விவரணமாதல் - ஹதவதாஸத்தி இத்யாதி. (கூ)

acharya.org

(தான் செல்லுகை), மனைக்கு-குடிக்கு, வான்-மிக்க, பழி - பழியென்றும், நினையாள் - நினைக்கிறிலள். செல்லவைத்தனள் என்று லோகோக்தியாலே கடுகச்சென்றாள் என்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், குடிக்கு வரும் பெரும்பழியை நினையாதே திருக்கோளூரிலேபுக்கு அவனையொருகாலும் விடுகிறிலள் என்கிறாள். [நினைக்கிலேன்] - புகுந்த வ்ருத்தாந்தத்தை நினைக்கில் ஆழங்காலாயிராநின்றது. [தெய்வங்காள்] - தன்னோடொக்க உறங்காமையாலே தெய்வங்களைக் கூட்டிக்கொள்ளுகிறாள். [நெடுங்கண்] - போக்தாக்கள் அளவல்லாத கண்.

[இளமான்] - "தன்கையிலே ப்ரஹ்மாஸ்த்ரம்" என்று அறியாதபருவம். [இனிப்போய்] - ஸர்ப யாகத்திற்போலே அவன் தான் வந்துவிழும்படியான கண்ணைப்படைத்த இவள், தான் போகை மிகையென்கை. உலயவிபூதியுக்த னென்னுமிடத்தைக் கோட்சொல்லுகிற கண்களையுடையவனை. இவள் நெடுங்கண்இளமான்; அவன் அரவிந்தலோசனன். அவன் கண் ஸர்வேஶ்வரத்வஸூசகம்; அவனையுங்கூட விளாக்குலைகொள்ளும் கண் இவளது. [தினைத்தனையும் விடாள்] - க்ஷணகாலமும் விடாள். இங்கிருந்துபட்ட க்லேசத்தாலே, அங்கு அநுபவிக்கப்புக்கால், "பிரியேன்" என்னவும் நெஞ்சை விட்டுக்கொடாள். அவன் பொருந்திவர்த்திக்கிற திருக்கோளூர்க்கே. [செல்லவைத்தனள்] - புகுகையிலே ஒருப்பட்டாள் என்னுதல், "நவவுநராவ கபுதெ" என்று தான் மீளாதபடி புகுகையாலே நாம் அங்கே செல்லும்படிவைத்தாள் என்னுதல். [மனைக்குவான்பழியும் நினையாள்] - குடிக்குவரும் வலியபழியும் நினைக்கிறிலள். இவள்போய் அவனைப்பெறுகை குடிக்கு நிலைநின்ற பழியென்றிருக்கிறாள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இக்குடிக்குவரும் பெரும்பழியைநினையாதே, திருக்கோளூரிலேபுக்கு அவனையொருகாலும் விடுகிறிலளென்கிறாள்.

[நினைக்கிலேன்] - கடலைக்கரைகாண வொண்ணாதிறே. தன்னைப்போகட்டுப் போனபடி, வழியில் மிறுக்குக்கள், அங்குப்புக்கால் இவள்படும்பாடுகள் அநேகங்களிறே. [தெய்வங்காள்] - இத்தை, "கொல்லை" என்பார் முகம்பார்த்துச் சொல்லவொண்ணாதே, பழிசொல்லாமையையும், சிறையுறவுபோலே தன்னோடொக்க உறங்காமையையும்பார்த்துச் சொல்லுகிறாள். [தெய்வங்காள் - நினைக்கிலேன்] - செயலற்றுக் கைவாங்கிச்சொல்லுகிற வார்த்தையிறே. [நெடுங்கணிளமான்இனிப்போய்] - விழுக்காடறியாமையாலே பறப்பட்டுப்

பத்தாம்பாட்டு - நினைக்கிலேன் இத்யாதி. "மனைக்குவான்பழியும் நினையாள், திருக்கோளூர்க்கே - போய் - அரவிந்தலோசனனைத் தினைத்தனையும்விடாள்" என்கிற பதங்களைக்கடாகித் தவதாரிகை - இக்குடிக்கு இத்யாதி.

நினைக்கவொண்ணாமைக்கடி, இவள்படி அபரிச்சின்னமாகையென்கிறார் - கடலைஇத்யாதி. காணவொண்ணாமைக்கு இவள் வ்யாபாரங்கள் கடல்போலே அபரிச்சின்னமோ? என்ன - தன்னைப் போகட்டு இத்யாதி. அநந்யதேவதையான இவள் "தெய்வங்காள்" என்ற இவற்றைப்பார்த்துச் சொல்லுகிற தென்? என்ன - இத்தை'கொல்லை' இத்யாதி. இவற்றைப்பார்த்துச்சொல்லுகைக்கு ஹேதுவேதென்ன-பழிசொல்லாமையையும் இத்யாதி. கதிகுந்யதையாலே சொல்லுகிறாளென்று பரிஹாராந்தரம் - செயலற்று இத்யாதி. "இளமான்" என்றதுக்குபாவம் - விழுக்காடு இத்யாதி. விழுக்காடு - மேல்வருமது. "அனைத்தலகுமுடைய" என்றதைக்கடாகித்து "நெடுங்கண்" என்றதுக்கு

acharya.org

போனுள் அத்தனைகிடீர்! இக்கண்ணுக்குஇலக்கானவர்கள், ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் சுருண்டுவந்துவிழுமாபோலே தந்தாம் முதன்மையோடேவந்து விழவேணுங்கிடீர்! [இனிப் போய்] - ஆர் செய்யக்கடவத்தை யார்தான்செய்கிறார்? கண்படைப்பாளும்தானுய்ப் புறப் பட்டுப்போவாளுந் தானுவதே! இத்தலை ப்ரவர்த்தியாமைக்கு ஸ்வரூபமேயமையுமாகாதே. [அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை] - இவ்வளவே கிடீர் அவன்கண்ணுக்குத் தோற்றிருப்பது. ஒருபய விபூதிமாத்ரங்கிடீர் அவன்கண்ணுக்காடுபட்டிருப்பது; அவன்தன்னை யும் தோற்பிக்கும்கண்ணிறே இவளது. அவன்அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனன்; இவள் நெடுங்கண்இளமான். அவன், தானும் தன்விபூதியும் இவள்கண்ணிலே ஒருமூலை யிலே அடங்கும்படியாயிருக்கை. கண்ணில்அல்லாத பரப்பும் இவள்பருவமும் குமர்கிடந்து போமத்தனை. [நினைத்தனையும்விடாள்] - நெகிழ்த்தணைக்கவும்போருள். இங்கிருந்துபட்ட க்லேசத்தாலே "நின்னைப்பிரியேன்" என்றுசொல்லவும் நெஞ்சுகோடாள். காரியப்பாட் டாலே பிரியிலும் நெஞ்சொழிந்து கேட்கவேணுமே. [மனைக்குவான்பழியும்நினையாள்] - மனைக்கு வலியபழியும்நினைக்கிறிலள். அஹிமதஸாதநம் அல்லாதவளவேயன்று, விரோதி என்றிருக்கிருள். "இத்தலையாலே செல்லுமதுபழி" என்றே யிருந்தடிபாரீர்! "**சுயவாதக ஹீதஸ்வம்ஸவபுஹாவெநஹாரத**" (அதபாதகபீதஸத்வம்ஸர்வபாவேநபாரத) - அடுத் தடுத்து ராஜஸூயமே பண்ணிப்போந்தவனுக்கு ஒருதடவற்போய்க்காக நரக தர்மநம்

பாவம் - இக்கண்ணுக்கு இத்யாதி. ஸர்ப்பயாகம்பண்ணினவன் - ஜநமேஜயன். "இனி" என் கையாலே - இவளுக்குப்போக ப்ராப்தியில்லை, அவனுக்கே ப்ராப்தியென்றுபாவமருளிச்செய்கிறார் - ஆர்செய்ய இத்யாதி. "ஆர்செய்யக்கடவத்தை" என்கிறதென்? இவளுக்குப்போக ப்ராப்தியில்லையோ? என்ன - கண்படைப்பாளும் இத்யாதி. "இனிப்போய்" என்றதுக்குஸ்வாபதேஶம் - இத்தலை இத் யாதி. ஸ்வரூபமென்றது - ஸ்வரூபஜ்ஞாநமென்றபடி. அதாவது "நெடுங்கண்" என்கையாலே - ஸ்வயத்நநிவர்த்தகஅத்யந்தபாரதந்த்ர்யஜ்ஞாநத்தைச் சொல்லுகிறதென்றபடி. இவள்கண்ணழகிலே ஜகத்விஶிஷ்டனீடுபட்டிருக்குமென்று விவக்ஷித்து, அவன்கண்ணழகை லக்ஷகரிக்கிறார் - இவ்வளவே இத்யாதி. இத்தைவிவரிக்கிறார் - ஈரபய இத்யாதி. இவள்கண்ணுக்கேற்றமேதென்ன - அவன்தன்னை யும் இத்யாதி. அவன்கண்ணில் 'குறைத்தலையும் இவள்கண்ணிலேற்றத்தையும்' பதங்களிலே எறிட்டுக் காட்டுகிறார் - அவன்அனைத்துலகும் இத்யாதி. "நெடுங்கண்" என்றதுக்குவாஸநை - அவன்தானும் இத்யாதி. ஒருமூலையிலே யடக்கினுல், மற்றை யிடமோ? என்ன-கண்ணில்அல்லாத இத்யாதி.'குமர் கிடந்துபோம்' என்றது குமரென்று - குமரியாய், குமரிபோலே யநுபவயோக்யமல்லாதேபோம்என்ற படி. "நினைத்தனையும்" என்றதுக்குபாவத்வயம் - நெகிழ்த்தணைக்கவும் இத்யாதிவாக்யத்வயமும். நினைத்தனையும் - அத்யல்பகாலமும் விடாளென்றபடி. "சிறிதுபோதும்விடாள்" என்று உரையில் ஶப்தார்த்தம். நெஞ்சுகொடுத்தால்தோஷமேது? என்ன - காரியப்பாட்டாலே இத்யாதி. அதாவது - காரியவஶாத் பிரியப்பார்த்தாலும், "பிரிவுஹிதம்" என்று இவள்நெஞ்சிலே படுத்தியே பிரியவேண் டுகையாலே, அநுபவத்தைவிட்டு அத்தைக்கேளா ளென்றபடி. காரியப்பாடு - கார்யவசம். மனைக்கு வலியபழியாவது - குடிக்குவருகிற வலியபழியென்றபடி. "பழியும்" என்ற சஶப்தார்த்தம் - அஹிமத இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - இத்தலையாலே இத்யாதி. ஸ்வயத்நம் ஸ்வரூபவிருத்தம் என்றதுக்குப்ரமாணம் - அயுபாதக இத்யாதி. "சுயுவாதகஹீதஸ்வம்ஸவபுஹாவெநஹாரத | விஶுகோநுஸரோரஶ்ரீநாராயணவரொஹவ" இதி மஹாபாரதே தர்மஸூநும்ப்ரதி தர்ம தேவதா. பாதகமென்றால் - நிஷித்தத்தைச் சொல்லுமதொழிய, உபாயாந்தரத்தைச்சொல்லுமோ? என்ன; இங்கு, பாதகமென்கிறது - ஸ்வயத்நரூபமான உபாயாந்தரங்களையே, நிஷித்தத்தையல்ல என்னுமதுக்கு உபபத்தி அருளிச்செய்கிறார்-அடுத்தடுத்து இத்யாதி.தடவற்போய் - ஆபாஸமானபொய்.

acharya.org

பண்ணுமளவாய் நின்றவனையிறேஇப்படியுபதேசிக்கிறது. ஸத்கர்மத்தோடு அஸத்கர்மத்தோடு வாசியற விரோதியாய், க்ருஷ்ணனே அபாஶ்ரயம் என்னுமிடத்தைத் தோற்றுவிக்கிறது. "விமுக்தாநுஸரோரஹ:" (விமுக்தாந்யஸமாரம்ப:) அசேதநக்கிரியைகளைப்பற்றிக் கொண்டு நாலாதேகொள். "நாராயணபரோபவ" (நாராயணபரோபவ) உனக்கு வகுத்தவன்தன்னையே பற்றப் பார். [செல்லவைத்தனளே] - போகையிலே நெஞ்சைவைத்தாளென்னுதல், நமக்குமெல்லாங்காண அங்கேயானுளென்னுதல். அதாவது-தான்அங்கே செல்லவொருப்பட்டாளென்னுதல்; தான்மீளாதபடி புகுகையாலேநாம்அங்கே செல்லும்படி வைத்தாளென்னுதல். (கo)

பதினோராம் பாட்டு

வைத்தமாநிதியாம்மதுசூதனையேயலற்றி
கோத்தலர்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன
பத்துநூற்றுள் இப்பத்துஅவன்சேர்திருக்கோளூர்க்கே
சித்தம்வைத்துரைப்பார் திகழ்போன்னுலகாள்வாரே.

ஆ—(வைத்தமாநிதி.) - ஆழ்வார், விஶ்லேஷமாகிற ஆபத்துக்குத் தமக்கு வைப்பாகவைத்த மஹாநிதியாயிருந்த எம்பெருமானையே அலற்றிச்சொன்ன இத்திருவாய்மொழியை, திருக்கோளூர்க்கே ப்ரவணமான மநஸ்ஸையுடையராய்க்கொண்டு சொல்லுவாரிட்ட வழக்காம் திருநாடுஎன்கிறார்.

ஒ.—நிமமத்தில், இடபத்தும் வல்லார் இட்டவழக்காய் இருக்கும் திருநாடு என்கிறார். [வைத்த மாநிதியாம் மதுசூதனையேயலற்றி] - ஆயாஸப்படாதே உபயோகம் கொள்ளலாயபடி வைத்த மஹாநிதிபோலே யிருக்கிற ப்ரதிகூல நிரஸநஸ்வபாவனை

ஆனால், புண்யஹீநோயுஎன்னுதே, "வாதகுஹீத:" என்பானென்? என்ன - ஸத்கர்மத்தோடு இத்யாதி. அயுஸப்தம் - ப்ரஸ்நார்த்தத்திலேயாய், பாதகஹீநோயு- பாதகஹீநஸ்சேத் என்றபடி. தானங்கே போகையிலே தன்னெஞ்சைவைத்தாளென்னுதல்-நாமங்கேசெல்லும்படி தன்னெஞ்சைஅங்கேவைத்தாளென்னுதல் என்றபடி. முந்தினவர்த்தத்திலே, நெடுங்கணிளமானினிப்போய் - மனைக்குவான்பழியும் நினையாதாளாய்க்கொண்டு - அனைத்துலகுமுடைய அரவிந்தலோசநனைத் தினைத்தனையும்விடாதேயிருக்கவேணுமென்று, அவன்சேர்திருக்கோளூர்க்கே - தான்செல்லவொருப்பட்டாள்; தெய்வங்காள்! நினைக்கிலேனித்யங்வய:. த்வி தியார்த்தத்திலே, நெடுங்கணிளமானினி - அவன்சேர்திருக்கோளூர்க்கே, மனைக்குவான்பழியும் நினையாதவளாய்க்கொண்டு - போய், மீளுகைக்கு யோக்யதையுங்கூடவில்லாதபடி அனைத்துலகுமுடைய அரவிந்தலோசநனைத் தினைத்தனையும்விடாள்; நாம் அங்கே செல்லும்படி வைத்தாள்; தெய்வங்காள்! நினைக்கிலேனித்யங்வய:. "பழியும்" என்ற சஶப்தத்தாலே - அபிமதஸாதநமல்லாதவனாவே யன்றென்று சொன்னதிருத்தாயாரே, 'தினைத்தனையும்விடாள்" என்ற அபிமதவிரோதியைச்சொல்லும்போது, ஸ்வவிரகவ்யாஹதியன்றோவென்னில்; "முந்தற இவள் பேகிற போது ஸ்வயத்நநிவர்த்தநமாகச் சொன்னாளேயாகிலும், அவன்குணத்தைப்பார்த்து 'அபிமதவிரோதி தப்பாது'என்றிருக்குமவளாகையாலே இங்கனேசொல்லக்குறையில்லை" என்று பரிஹரித்தருளுவர். (கo)

acharya.org

எம்பெருமானையே சொல்லி ஆர்த்தியோடேகூப்பிட்டு. [கொத்தலர் பொழிலென்று மேலுக்கு] - தாம் விரஹதசையை அநுஸந்திக்க க்ஷமரல்லாதபடி பகவத்விஷயத்தில் ஏகாக்ரராகையாலே தமக்குப்பிறந்த தேற்றத்தாலே ஸம்ருத்தமான திருநகரியுடைய ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரம்திருவாய்மொழியிலும் திருக்கோளூரிலே அருளிச் செய்த இத்திருவாய்மொழியை புத்திபூர்வகமாகச் சொல்லவல்லார்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை ஸஹ்ருதயமாகச் சொல்ல வல்லவர்கள், பரமபதத்துக்கு நிர்வாஹகராவரென்று ஹலத்தை அருளிச்செய்கிறார்.

வைத்த - சேமித்துவைத்த, மாநிதியாம்-மஹாநிதிபோலே, (நிரதிசயப்ராப்ய பூதனாய்), மதுசூதனை - போகப்ரதிபந்தகவிரோதிநிரஸநசீலனானவனை, அலற்றி-(அலாப நிபந்தனமான) ஆர்த்தியாலேயலற்றி, கொத்து - பூங்கொத்து, அலர் - அலருகிற, பொழில் - சோலையாலே, சூழ் - சூழப்பட்ட, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, பத்து - (ஒரோ அர்த்தவிசேஷங்களுக்கு வாசகமான) பத்தான, நூற்றுள் - நூற்றிலுள்ளும், இப்பத்து - ப்ராப்யத்வ ராப்ரகாசகமானவிப்பத்தை, அவன் - அவன், சேர் - வர்த்திக்கிற, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, சித்தம் - நெஞ்சை, வைத்து - வைத்து, உரைப்பார் - சொல்லவல்லார், திகழ் - ஔகவதநுபவஜனஜ்ஜ்வல்யத்தையுடைத்தாய், பொன் - ஶ்லாக்யமான, உலகு - பரமபதத்தை, ஆள்வார் - தாங்கள் நினைத்தபடி நிர்வஹிக்கப்பெறுவர்கள். இது - கலித்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தும் வல்லார் இட்ட வழக்கு பரமபதமென்கிறார். [வைத்த இத்யாதி] - "உண்டு" என்ன உயிர்நிற்கக்கடவதாய் அநாயாஸபோக்யமாய் இஷ்டவிநியோகார்ஹமான மஹாநிதிபோலேயாய், விரோயிநிரஸநஸ்வபாவனானவனைச் சொல்லி ஆர்த்தியாலே கூப்பிட்டு. [கொத்தலர்] - நித்யவஸந்தமான திருநகரி. விரஹத்தை அநுஸந்திக்க க்ஷமமல்லாதபடி அவன்பக்கலிலே ஏகாக்ர சித்தராகையாலே பிறந்த தேற்றத்தாலே ஊருக்குப்பிறந்த ஸம்ருத்தி. [பத்துநூற்றுள்இப்பத்து]-கிழிகிழியாகக் கொடுப்பாரைப்போலே. அவன் பொருந்திவர்த்திக்கிற திருக்கோளூர்க்கே நெஞ்சைவைத்துச் சொல்லுமவர்கள். [திகழ்பொன்னுலகாள்வாரே]-"தனிவழியே போனாள்" என்று கரையவேண்டாதபடி, அர்ச்சிராதிகணம் வழிநடத்தப் பரமபதத்திலேபுக்குநித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள்.

ஈடு.—நிகமத்தில் இப்பத்தும்கற்றார் இட்டவழக்கு திருநாடு என்கிறார்.

[வைத்தமாநிதியாம்] - இவள் தனிவழிபோகைக்கும் தாயாரை விடுகைக்கும் ஹேது விருக்கிறபடி. தநம் சஞ்சிதமாயிருக்க, எடுத்தழித்துக்கெடுத்து ஜீவியாதே ஆறியிருப்பாரில்லையே. [வைத்தமாநிதி] - "எய்ப்பினில்வைப்பினைக் காசினைமணியை" என்கிற

நிகமம் - வைத்தமாநிதி இத்யாதி. "இப்பத்து, சித்தம்வைத்துரைப்பார்" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை - நிகமந்தில்இப்பத்தும் இத்யாதி.

இப்போது. "வைத்தமாநிதி" என்ற அவனுடைய போக்யதையைச்சொல்லுகிறதுக்கு பாவம் - இவள்தனிவழி இத்யாதி. நிதியிருந்தால்இப்படி போகவேணுமோ? என்ன - தநம் இத்யாதி. இவனை "நிதி" என்கைக்கு ஹேதுவேதென்ன - எய்ப்பினில் இத்யாதி. இளைத்தவேளையில் நிதியா

acharya.org

படியே தளர்ந்தார் தாவளமாய், எய்ப்பினில்வைப்பாய், "உண்டு" என்ன உயிர்நிற்கும் படியாய், உடையவன்காலிலே எல்லாரும் விழும்படியாய், உடையவனுக்குஅறவிட்டு ஜீவிக்கலாய், "அறவிட்டுஜீவித்தான்" என்றுஏசாதபடியுமாய், அவன்தனக்குப் பெருமதிப் பைக்கொடுப்பதுமாய், உடையவனுக்குஒன்றுக்கும் கரையவேண்டாதபடியாய், எல்லாம் தன்னைக்கொண்டே கொள்ளலாய், எல்லா ரஸங்களும் போகங்களும் தன்னைக்கொண்டே கொள்ளலாய், ஏவமாதிகுணங்களை யுடைத்தாயிருக்கையைப்பற்ற நிதி யென்கிறது. மாநிதி யென்றது - மஹார்க்கமான நிதியென்றபடியாய், அத்தால், தன்னைக்கொண்டே எல்லாங் கொள்ளாநின்றால் தனக்கொரு குறையற்றிருக்கை. அல்லாதநிதி மாண்டுநிற்குமே. [மது சூதனையேயலற்றி] - இந்நிதியைக்காத்தூட்டுவதும் தானேயென்கிறது. உத்தேச்யமானது தானே விரோதியையும்போக்கி யநுபவிப்பிக்கவற்றாயிருக்கை. [கொத்தலர்பொழில்] - "ஸவபுங்கூஶறும்ஶுஹெ" (ஸர்வஞ்சகுஶலம்க்ருஹே) என்னுமாபோலே. ஸ்ரீபரதாழ்வான் பெருமாள்பக்கலிலே நெஞ்சை வைக்கவைக்க, அத்தைக்கண்டு "அவர்வரவணித்து" என்று திருவயோத்யை தளிரும் முறியுமானாற்போலே, விரஹத்தையநுஸந்திக்க

யிருக்குமவனை; காசினை - பொன்போலே ஸ்ப்ருஹணீயனானவனை; மணியை - ரத்நம்போலே ஶ்லாக்யனானவனை இத்யர்த்தம். எய்ப்பு - இளைப்பு. காசு - பொன். திருமொழி, "பேய்முலைத்தலைநஞ்சுண்ட" இத்யாதி. தளர்ந்தார் தாவளமாகையாலே எய்ப்பினில்வைப்பாயென்றபடி. தளர்ந்தார் தாவளமாய் - ஆபந்நர்க்கு ரக்ஷகமாய்: ஆதாரமாய்என்றுமாம். "கூஹிவுஹெதிஹெஹெ" இத்யாதியைப்பற்ற - உண்டென்ன இத்யாதி. அதாவது - "தநமுண்டு" என்றால் போன ப்ராணனும் வருமாபோலே, "ஈஶ்வரனுளன்" என்றால் நஷ்டப்ராயமான ஆத்மஸத்தையும் தரிக்கும்படியாயென்றபடி. "ஸவெபு ஹெஷெஹெவாவெ விரோவஹஹி", "ஹுவஹிஹெதுாஃவுணஹிஹெவதாஃ" இத்யாதியைப் பற்ற - உடையவன்காலிலே இத்யாதி அறவிட்டு ஜீவிக்கலாயென்றது- இவன்ஈஶ்வரனையுபதேசிக்க உபதேசபாத்ரபூதனை சிஷ்யனுபகாரஸ்மிருதியாலே யதாசக்திஸமர்ப்பிக்க, அத்தை ஸ்வீகரித்து ஜீவிக்கலாயென்றபடி. அறவிட்டு ஜீவிக்கையாவது - விற்றஜீவிக்கை. இவ்விடத்திலே - "கூஹெஷெஶிஷு ஷுஸம்வீ தாரஸாத்விகாநாம்வுஸாஹிதஃ। ஶுஷ்வம்விதம்ஸகாம்வயம்ஶுஹெரநு தூஶுஹுதெ" என்றதுஅநுஸந்தேயம். அறவிட்டு ஜீவித்தானென்றஏசாதபடியுமாயென்றது- புத்ராதிகளைவிற்ற ஜீவித்தால் நிந்திப்பர்கள்; நிதியைவிற்றஜீவித்தால் நிந்திப்பாரில்லையே; அப்படியே, தங்களாதரத்தாலே ஶிஷ்டர்கள் சமர்ப்பித்ததை வாங்கிஜீவித்தால் நிந்தியாதபடியாயிருக்குமென்கை. "வுஹுாரஹஹெநுநுணாடு" இத்யாதியைப்பற்ற - அவன்தனக்குப்பெருமதிப்பை இத்யாதி. அதாவது, நிதியுடையவனுக்கொருவர்க்கும்அஞ்சாதபடி அது பெருமதிப்பைக்கொடுக்குமாபோலே, ஸர்வேஶ்வரனையாஶ்ரயித்தவர்களுக்கு யமாதிகளுக்கும் அஞ்சவேண்டாதபடியான பெருமதிப்பைப்பண்ணிக் கொடுக்குமதாயிருக்கு மென்றமடி. "கூதகூதுாஃவுதீகூஹெஞெ" "கிஶஹம்ஹாயுாநா கூரவம்கிஶஹம்வாவகூரவஶிதி" இத்யாதியைப்பற்ற - ஒன்றுக்குங்கரையை இத்யாதி. இந்நிதியையுடையவனுக்கு, "நன்மையைச்செய்தோமில்லை, தீமையைச்செய்துவிட்டோம்" என்றபயப்படவேண்டாதபடி யிருக்குமென்றமடி. "ஸவபுமநுஸவபுாஸஃ" என்றத்தைப்பற்ற - எல்லாம்தன்னை இத்யாதி. எதத்விரணம் - எல்லாரஸங்களும் இத்யாதி. "ஹுகாஶிநிபுயிரவுயஃ" என்றத்தைப் பற்ற- தனக்கொருகுறை யற்றிருக்கை என்றது. 'மஹார்க்கம்' என்றதற்கு - அக்ஷயத்வத்திலேநோக்கு. காத்தூட்டுவதுயென்றது - விரோதிவாராமல் காத்து புஜிப்பிக்குமதுஎன்றபடி. விவரணம் - உத்தேச்யமானது இத்யாதி. இத்தால் - ப்ராப்யமானது தானே ப்ராபகமுமென்றபடி. கொத்தாக விகஸியாநின்ற பொழிலென்ற ஶப்தார்த்தம். தாம்விஶ்லேஷத்தாலே துகியாநிற்க, சோலை இப்படி

acharya.org

க்ஷமரல்லாதபடி அவன்பக்கலிலே ஏகாக்ரசித்தராகையாலே பிறந்த தேற்றத்தாலே திருநகரியும் தளிரும் முறியுமானபடி. இத்தலையிலே யித்தனைத்வரையுண்டானால் அத்தலையில் பலத்துக்குக்கண்ணழிவுண்டோ? "அவிவ்ருக்ஷாஃ" (அபிவ்ருக்ஷாஃ) என்கைதவிர்ந்து, "அகாலபலிநோவ்ருக்ஷா" (அகாலபலிநோவ்ருக்ஷா) என்னும்படியாயிற்று. [பத்து நூற்றுள்இப்பத்து] - கடலில் அம்ருதம்போலே, ஆயிரத்திலும் வைத்துக்கொண்டுஇப்பத்து. [அவன்சேர்இத்யாதி] - அவன்போருந்திவர்த்திக்கிற திருக்கோளூர்க்கே நெஞ்சைவைத்து. [உரைப்பார்] - சொல்லுவார். [திகழ்போன்னுலகாள்வாரே] - ஒருத்திகூப்பிட, ஒருத்தி தனியேபோகையன்றிக்கே, நித்தியாநுபவம்பண்ணலாம் நிலத்திலே புகப்பெறுவர். தனி வழிபோகாதே, அர்ச்சிராதிசணம்சேவிக்க விலக்ஷணமான தேசத்தே போய்ப்புகப்பெறுவர்.

யாகக்கூடுமோ? என்ன; த்ருஷ்டாந்தங்காட்டுகிறார்-ஸர்வஞ்ச இத்யாதி. இவர்க்கு ஆற்றாமையுண்டானால் அவன் வரவணித்தாகவேணுமோ? என்ன - இத்தலையிலே இத்யாதி. அதாவது, * யாதானும்பற்றி நீங்குகிறவனை நகூலித்தால் * எதிர்சூழல்புக்குத் திரிகிறவனுக்குக் கண்ணழிவுண்டோ? என்றபடி. அத்தலையில் பலத்துக்கென்றது - அத்தலையால் வருகிறபலத்துக்கென்றபடி. கண்ணழிவு - விளம்பமும், குறையும். அவன்வரவணித்தானால் கொத்தலர்பொழிலாகிறதுக்கு ப்ரமாணம் - அபிவ்ருக்ஷா இத்யாதி. "திகழ்" என்றதுக்குபாவம் - ஒருத்தி இத்யாதி. விவரணம் - தனிவழி இத்யாதி. ஸர்வஞ்ச குஸலம் க்ருஹேயென்று வருகிறவிடத்துக்கெல்லா மிவ்விடத்தில் பரிஹரித்தாற்போலே பரிஹாரங் கண்டுகொள்வது. "வஹ்ஹிஷ்ஹுஜிஹொஹ்ரதக்ஷாம்ஹ்ரதீக்ஷதெ । வாஹுகெதெவ்ரஹ்ஹ்ரதுஸவபுஹுகுஸலம்ஹ்ரஹெ" இதி ப்ரதிப்ரயாணே ராமம்ப்ரதி பரத்வாஜஃ.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— கூஷெநயாரயிதுவொஷகுஹொ ஹுயொமீவ்ரூவாவகிகுரிதயீரவிமாநிஹாய । ஸ்யாஷவுஸ்வுஹஸுஉதுவஹீயரா நஃவாஸுஹ்ஸிதெஉ்நிரஹுஷியிஹுஷம்ஹஃ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி. — வாரரூயாஹ்வுஹாவாஸ ஸ்ரமஹிஹிகிஃவெஃ ஸ்ரீஸதெஷுயபுஹுஷ்ரூஹ்ஸெஹிகுவாஷாஹிரஹுவ்ரூஹ்ஹித வாரவஸகா ஸவபுஹொகெஸகாஷெஃ । ஏதுகுரூஷொரூஹிஹெதஃஃரரயேநயே வ்ரூஹரஹ்ஸ்ரிகாநாம்வெஷாநாமஸ்ரூஹாஷாவவஃஷஉயயரஹ்ஹ்ரூயஸெஷெஹிநாம் யஃ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

உண்ணுஞ்சோறுதியொருமூன்றும்எம்பெருமான்
கண்ணனென்றேநீர்மல்கிக்கண்ணிணைகள் - பண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பாற்போமாறன்
பொன்னடியே நந்தமக்குப்பொன்.

ஆழ்வார் திருவடிகளே ஸரணம், எம்பெருமானார் திருவடிகளேஸரணம், சீயர்திருவடிகளே ஸரணம்.

---

acharya.org

எட்டாந்திருவாய்மொழி—பொன்னுலகு ப்ரவேஶங்கள்.

ஆ —(பொன்னுலகாளீரோ.) - திருக்கோளூரிலே போய்ப்புக்கு எம்பெருமானோடு ஸம்ஶ்லேஷித்ததெல்லாம் மநோரதமாத்ரமாய், பழையபடியே எம்பெருமானைக் காணப்பெறுமையாலே தத்விரஹ ஸஹமாநராய், அந்யாபதேஶத்தாலே ஒரு பிராட்டியாய் அவனைக்குறித்து தூதப்ரேஷணம்பண்ணுகிறார்; இப்படித் திருக்கோளூரிலே எழுந்தருளின பிராட்டியோடுள்ள சிரகால ஸம்ஶ்லேஷ ஜநிதாநவயிகாநந்த மஹார்ணவாந்தர்நிமக்நனான எம்பெருமான், அந்த ஆனந்தவெள்ளம் தனக்கு அஸாத்யமானவாறே அது ஸாத்மிக்கைக்காக விஶ்லேஷித்து நெடுங்காலமெழுந்தருளாதிருந்தவாறே, தத்விஶ்லேஷத்தாலே அத்யந்தம் அவஸந்நையானபிராட்டி, தன்னுடைய ஆற்றாமையாலே அவனைக்குறித்துச் சிலபக்ஷிகளைத் தூதாகவிடுகிறாளென்றுமாம். "திருக்கோளூரிலே போய்ப்புகவேணும்" என்று புறப்பட்ட இப்பிராட்டி, தன்னுடைய அவஸாதத்தாலே பின்னைப்போக க்ஷமையன்றியே, அங்கே உத்யாநத்திலேயிருந்து எம்பெருமானைக் குறித்து தூதப்ரேஷணம்பண்ணுகிறாளென்றுமாம்.

ஒ.—எட்டாந்திருவாய்மொழியில், வாஹ்யாநுஸந்யாநம்பண்ண கூடியக்ஷமரல்லாதபடி, மோஹம்செல்லுகையாலே அந்தஃகரணம் எம்பெருமான் பக்கலிலே மிகவும் ப்ரவணமாய் அவன்குணங்களை நெடும்போது அநுபவிக்கையாலே, பெருவிடாய் தட்டி நோவுபட்டவர்கள் நீரிலே முழுகித்தரித்தாற்போலே விஶ்லேஷ வ்யஸநத்தால் வந்த வலஹாநி நீங்கி யரித்து, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப்போலே ஜகத்வ்ருத்தாந்தாநுஸந்஧ாநக்ஷமரான ஆழ்வார், பழையபடியே தமக்கு எம்பெருமானோடு உண்டான விரஹத்தை அநுஸந்஧ித்துத் தம்முடைய ஊமையை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். "திருக்கோளூர் ஏறப்போக" என்று தன்னுடைய நகரோபவநத்தளவுஞ்சென்று தன்னுடைய வலஹாநியாலே போகமாட்டாதிருக்கிற இப்பிராட்டி, பின்னையும் அவன் வரக்காணுமையாலே "வாராதொழிகைக்குநிவந்஧நம் தன் ஐஶ்வர்யப்பரப்பாலே: தான் ஆஶ்ரிதரோடு ஏகரஸனாகையால் அறிவிக்க வரும்" என்று பார்த்து, அவனை ப்ராபிக்கைக்குத் தன்ஊமையை அவனுக்கு அறிவிக்கையொழிய மற்றொருபாயம் காணாதே, அங்குள்ள பக்ஷிகளையடைய, பெருமாள் பிராட்டிக்குத் தம்எதிர்கண்ட முதலிகளையடைய ஊதப்ரேஷணம்பண்ணினாற்போலே, எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் நிலங்களில் எங்கேனும்புக்காகிலும் அவனைக்கண்டு என் ஆர்த்தியையறிவித்து என்ஊமைத்தைத் தீர்க்கவேணும் என்கிறாள்.

"திருக்கோளூரில் ஸம்ஶ்லேஷம் சிலகாலம்சென்று தைவயோகத்தாலே விஶ்லேஷம்பிறக்க, தூதுவிட்டுச் செல்லுகிறது" என்றும் சொல்லுவர்.

ப.— எட்டாந்திருவாய்மொழியில், கீழே - ப்ராப்யவிஷயத்தில் அதிக்வரிதரான இவர்க்கு, த்வாநுரூபமான ப்ரவ்ருத்தியில் யோக்யதையில்லாமையாலே வடகமுவத்தாலே ப்ராபிக்கையிலே அபேக்ஷைபிறந்து, வடநாநுரூபமான அவனுடைய ஸ்ருஷ்டருத்வாத்யாகாரத்தையும், அநுபாவ்யமான அஸாதாரணசிஹ்நத்தையும், ஆஶ்ரிதவிரோதிநிவர்த்தநத்தையும், அதிஶயிதபுருஷாநுபாவ்யமான போக்யதாவைலக்ஷண்யத்

acharya.org

தையும் ஔதார்யஸ்வபாவத்தையும், அத்யந்தபவ்யதையையும், அஹிரூபனுய் அகிலாத்ம பூதனுனவனுடைய அநிஷ்டநிவர்த்தகத்வத்தையும், ஸர்வாதிகத்வத்தையும், அந்த பரத்வத்தோடுகூடின ஸௌலப்யாதிஶயத்தையும், உபயப்ரகாசகமான ஸ்ரீயபேதித்வத்தையும் அநுஸந்தித்து, "ஏவம்விதஸ்வபாவனுன ஸர்வேஶ்வரனைவடிப்பித்த மஹோபகாரத்தின் ப்ரீத்யதிஶயத்தாலே ஐஹிகாமுஷ்மிக ஸகலபதார்த்தங்களும் வடகருக்கு ஸமர்ப்பணீயம்" என்கிற அதிஶயிதாசரத்தை, நாயகனுன ஈஶ்வரனைப்பிரிந்து ஆற்ருமையாலே தூதுவிடத்தேடின நாயகி, தூதுபோகிற பக்ஷிகளைக்குறித்து ப்ரத்யுபகார ப்ரசுர்ஶநம் பண்ணின பாசுரத்தாலே அருளிச்செய்கிருர்.

இ—எட்டாந்திருவாய்மொழியில், "கீழில்திருவாய்மொழியிலே திருத்தாயார் எங்ஙனேபுகுங்கொல்? என்று நொந்ததுவே பலித்தது; தன் சாபலத்தாலே புறப்பட்டு முடியப்போகமாட்டாமையாலே தன்னுடைய நகரோபவநத்தளவிலே தளர்ந்து கிடந்து, அவ்வளவிலும் வரக் காணுமையாலே தன் ஆசையை அவனுக்கு அறிவிக்கையொழிய மற்ருருபாயம் காணுமையாலே கண்ணல் கண்ட பக்ஷிகளைத் தூதுவிடுகிருள்" என்று பட்டர் நிர்வஹிப்பர். பிள்ளான், "திருக்கோளூரிலே சென்று ஸம்ஶ்லேஷம் வ்ருத்தமாய் தைவயோகத்தாலே விஶ்லேஷம் பிறக்கத் தூதுவிடுகிருள்" என்று நிர்வஹிக்கும். கீழ் இரண்டு திருவாய்மொழி மோஹமும் உணர்த்தியுமாய், இதில் ஆதப்ரேஷணமாயிருக்கிறது. மயர்வற மதிநலமருளப்பெற்ற இவர்க்கு மோகமாவது-வாஹ்ய விஷயங்களில் அந்தஃகரணம் நிவ்ருத்தமாய் மநஸ்ஸுக்கு அவனே விஷயமாய் அவன் குணங்களையே அநுபவிக்கை: அதாவது-ஶரீரியான அவனே ஜ்ஞாநத்துக்கு விஷயமாய்த் தன்னைமறக்கை. உணர்த்தியாவது - "வூஹாஹொஹீ விஹஸாரு" என்ற ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானைப்போலே தம்மையும் உணர க்ஷமராய், ஜகத்வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திக்க க்ஷமராயிருக்கை.

கீழே, நெடும்போது அவன் குணங்களை அநுஸந்திக்கையாலே யரித்துவாஹ்யாநுஸந்யாநக்ஷமராய் வலஹாநி நீங்கி, தன்னுடைய ஆசையை அந்யாபதேஶத்தாலே அருளிச்செய்கிருர். அஞ்சிறைய மடநாராயில் அபராயஸஹத்வம் பற்ருசாகத் தூதுவிட்டாள். வைகல்பூங்கழியில் 'ஸர்வரக்ஷகனுனவன் திருவண்வண்டூரில் ஜோக்யதையாலே கால்தாழ்த்தானித்தனே; நம் ஆர்த்தியை அறிவிக்க வரும்' என்று அவன் ஸர்வரக்ஷகத்வம் பற்ருசாகத் தூதுவிட்டாள்; இதில், 'தன் ஐஶ்வர்யப் பரப்பாலே மறந்திருந்தானத்தனே; ஆஶ்ரிதரோடு ஏகாஸனுயிருக்கும்' என்று, ஐகாஸ்யம் பற்ருசாகத் தூதுவிடுகிருள். "தக்கோர்மை பற்ருசாகத் தூதுவிடுகிருள்" என்று பிள்ளான் பணிக்கும்.

ஈடு.—கீழில் திருவாய்மொழி இரண்டும் மோஹமும் உணர்த்தியுமாய், இதில், தூதப்ரேஷணமாயிறே யிருக்கிறது; *மயர்வறமதிநலம் அருளப்பெற்ற இவர்க்கு

பொன்னுலகாளீர் ப்ரவேஶே: ஆழ்வாருடைய மோஹப்ரபோதாவஸ்தைகள் காட்டாருடைய மோஹப்ரபோதாவஸ்தைகளிற் காட்டில் வ்யாவ்ருத்தமென்கைக்கு உறப்பாக அதிஷ்டிக்கை - கீழில் திருவாய்மொழி இத்யாதி. ஜ்ஞாநாதிகரான இவர்க்கு ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி ஸஹபடிதமான மோஹங்கூடுமோ? என்ன - மயர்வற இத்யாதி. இவரது ஜாக்ரதாதி ஸஹபடித

acharya.org

"சரணாயாயபுஸம்வதி:" (மரணயார்த்தஸம்பத்தி:) என்னும் மோஹமில்லையே; இனி இவர்க்கு மோஹமாவது - வாஹ்யபதார்த்தாநுஸந்தாநக்ஷமரன்றிக்கே விஷயங்களில்நின்றும் அந்தஃகரணம் நிவ்ருத்தமாய், மநஸ்ஸுக்கு அவனே விஷயமாய், அவன் குணங்களையே அநுபவிக்கை: அதாவது - ஶரீரியானவனே ஜ்ஞாநத்துக்கு விஷயமாய்த் தன்னை மறக்கை. கீழ்-"ஸஹம்ஸ நரரஹவ:" (அஹம்மநுரபவம்) என்றும், "ஸவ:

ப்ர.—[பொன்னுலகாளீர்]—வுவெஶெ. [மயர்வற மதிநல மருளப்பெற்ற இவர்க்கு சரணாயாயபுஸம்வதி: என்னும் மோஹம் இல்லையே]—ஸ்ரீஹாஷெ "ஶெzயபுஸம்வதி: வரிஶெஷாஸ" [ஶா - ஶீ - ஈ - உ - கo] உகிஸுதெஶுஹூராஸுவம்வ்ருக்ஷுக்கு. [ஶுஶெபுஸம்வதி: வரிஶெஷாஸ]ஶுஶுயிகூதுவிகூதெ.'கிதியம்ஶுஹூராஸுஷுவ்யாதிஷு ஸுந்தரோவஸ்யா, உகஸுவஸ்யா நரரஹ?' உகி விஶயெ ஸுஷுவ்யாதீநாஶுந்தரோவஸ்யாயாவெஶுஹூராவுஹிஷ்வவ தெரவஸ்யாதுரகஸுவ நெவுசரணாமாவாஷுந்தரோவஸ்யெகிவ்ரவுஉவ்ருதெ — ஶுஶெயபுஸம்வதிரிதி.

ஶுஶெவுரஷெயாதஸ்யாவஸ்யா, ஸாசரணாயாயபுஸம்வதி:ஸுதி? வரிஶெஷாஸ. நதரவஸ்வவுஜாமரள, ஜூநாநாஹாவாஸ. நிதிதவெரஷுவ்யாஸுகாரவெரஷுவ்யாஷுநஸுஷுவிசரணெ ; நிதிதம்ஹிஶுஹூராயா கலிவாதாதி:. வரிஶெஷ்யாநரணாயாயபுஸம்வதிஶுஹூரா: சரணம்ஹிஸவபுவ்ராணதெஹஸம்வந்தோவரதி:, ஸுஷுக்ஷ்வ்ராணதெஹஸம்வந்தாவஸ்திதிஶுஹூரா"

மான மோஹமன்ற என்றபடி. புருஷனுக்கு ஜாக்ரத் ஸ்வப்ந ஷுஷுப்தி மூர்ச்சா மரணங்களென்ற அஞ்சு அவஸ்த்தையுண்டு; அதில் ஜாக்ரத்தஸையாவது - பாஹ்யேந்தரியங்களும் அந்தஃகரணமும் ஸ்வஸ்வவிஷயங்களை க்ரஹிக்கிற தஸை.ஸ்வப்நாவஸ்த்தையாவது - பாஹ்யேந்த்ரியங்களடங்கிமநஸ்ஸுமாத்ரம் ஸஞ்சரித்து, இந்த சரீரத்தோடொத்த சரீராந்தரங்களையும் பல் காண்கிற விஷயங்களோடு நல்யங்களானவிஷயங்களையும் ஈஸ்வரன் ஸ்ருஷ்டிக்க, அதடியாக அபிஷேக சிரஸ்சேதபர்யந்தம் காண்கை. ஸுஷுப்தியாவது-பாஹ்யேந்த்ரியங்களும்மநஸ்ஸும்அடங்கி உச்ச்வாஸநிஶ்வாஸங்களாலே ப்ராணன்மாத்ரம் ஸஞ்சரித்து, ஜாக்ரத்தஸையிலே ஸ்வஸ்வவிஷயங்களிலே இந்த்ரியங்கள் வ்யாப்ருதங்களாகையால் வந்த இளைப்பெல்லாம் மாறும்படி புரீதத்என்கிற நாடியிலே பரமாத்மாவின் ஸ்வரூபத்திலே சேர்ந்து, அவனாலே ஆப்யாயிதனாகை. மூர்ச்சையாவது - ஸூக்ஷ்மப்ராண தேஹஸம்பந்தாவஸ்த்திதி. மரணமாவது - ஸர்வப்ராணதேஹஸம்பந்தோபரதி. "ஈத்ருஶமான மரணத்துக்குப் பாதியவஸ்த்தையாயிருக்கும்மூர்ச்சை" என்று வேதாந்தத்திலே சொன்னதையுட்கொண்டு "சரணாயாயபுஸம்வதி:" என்கிறார். இவருடைய மோஹலக்ஷணத்தை யருளிச்செய்கிறார்-இனியிவர்க்கு இத்யாதி. மாலுக்குவையத்திலும், உண்ணுஞ்சோற்றிலுமுண்டானமோஹத்தையும் உணர்த்திணையும் ஸத்ருஷ்டாந்தமாகக் காட்டுகிறார் - கீழ்அறம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. கீழ்-மாலுக்குவையத்தில். உணர்த்தியாவது - உண்ணுஞ்சோற்றிலுணர்த்தியாவதென்றபடி. "தஸெகதவ ஶுரு ஔவிவபுரிஷெவ: வ்ரதிவெஷெஈஹம்ஶுநரரஹவம்ஸுஷுரரஹ" இதிப்ருஹதாரண்யகேசதுர்த்தே ப்ராஹ்மணே. "யதூஸவபும்யதஸ்ஸவபும்யஸ்ஸவபும்ஸவபுதஶுயு: । ஸவபுமகவாடிநதெ ஸ்ருஸவாவாஹவேஸ்ரிது: । ஶுதஸவபுஶுஹம்ஸவபும்ஶுயிஸவபும்ஸநாதநெ" இத்யாதி.

acharya.org

மசுவாடநதஸ்ய'' (ஸர்வகத்வாதநந்தஸ்ய) என்றும் சொல்லுகிறநிலைபோலே. உணர்த்தியாவது- ''ப்ரஹ்லாதொஸ்மீதிஸஸ்மார'' (ப்ரஹ்லாதோஸ்மீதிஸஸ்மார) என்கிற ஸ்ரீ ப்ரஹ்லாதனைப்போலே தம்மையுமுணர சுஷமராய் ஜகத்வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திக்க சுஷமராகை. நிர்க்குணமான விஷயத்திலேயன்றே இவர்அவகாஹித்தது; குணாதிகவிஷயத்திலேயிறே. ஶேஷிபக்கலிலே அநுஸந்தாநமானால் ஶேஷபூதனானதன்னையும் காணுமிறே. கீழ், நெடும்போது அவன் குணங்களை அநுஸந்திக்கையாலே யரித்து வலஹாநிநீங்கி வாஹ்யபதார்த்தாநுஸந்தாந சுஷமரானார்; அவ்வளவிலே, இவர்யரித்தவாறே பழைய அலாபமே தலையெடுத்து ஒரு பிராட்டி உசுரையை ப்ராப்தராய் அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

கீழில் திருவாய்மொழியில், திருத்தாயார் ''எங்ஙனே புகுங்கொல்?'' என்றுநொந்ததுவே பலித்து, தன் சாபலத்தாலே புறப்பட்டாள் முடியப்போய்ப்புகமாட்டாமை. தன்னுடைய ஈகரோபவநத்திலே விழுந்து கிடந்து, அவ்வளவிலும் அவன் வரக்காணாமையாலே, கண்ட பக்ஷிகளைத் தூதுவிடுகிறாள். (''செல்ல வைத்தனளே' என்றது-செல்லுகையிலே யோருப்பட்டாளென்றதாய், முட்டப்போகாமல் கிடந்து ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்'' என்று பட்டர்.) தனிவழியே புறப்பட்டுப் போம்படியாய் விழுந்த இவளுக்குத் தூதுபோவாரில்லையே; உண்டானாலும் இவள்தனக்கு முன்னே ஈடுபட்டுக் கிடப்பர்களே; இனித் தன்பரிஸரத்தில்வர்த்திக்கிற பக்ஷிகளுக்கு மேற்படக் கால்நடை தந்துபோக வல்லாரில்

ப்ர.—ஸ்ரீவிஷ்ணுராணெ[க-கசு] ப்ரஹ்லாதவரிதெ. ''யதுஸவ்வம் யதஸ்வ்வம்யஸ்வ்வம்ஸவ்வதுஶுயம்॥அச॥ ஸவ்வஶக்வாடநதுஸ்ய ஸவ்வவாஹவேஸ்ரு தம் ஶிதுஸவ்வ்ருஷேஸவ்வம்ஸவ்வம்யேஸவ்வ்ருஸநாதநெ॥அரு॥ சுஹவேவாவ்ருயொநதுஃவாரு ஶாதாதஸம்ஸ்ரு: । ப்ரஹ்லாஸம்ஜ்ஞோஹவேவாஹ்ரு தயாதெஸவாரு:ஶுவாரு॥அசு॥ [உ0] ஸவ்வம்ஸம்விதுயநிஷ்ணுஶெஷெநாதநொஜிஜ । தநயசுவேவாவ்ருயாஹ்ரு ஶெநேஸாதா நஶவ்ரு ஶுகழு॥க॥ விஸஸாரதஷாதாநம்நாரு திஹ்ரிஜாநதா॥கக॥''

''ஷ்வ்வ்ஷாஸவஜமஷ ஶுயொமமநாஷ்ரு ஸவ்வகுணழு । ப்ரஹ்லாதொஸ்மீதிஸஸ்மாரவ நராதாநரோதநா'' இத்யாதிச ப்ரதமேஶ்லோ. மாலுக்குவையத்திலே விஷயம்நிரவதிகஸௌக்யமாகையாலும் தாமும் நிரவதிகப்ரேமயுக்தராகையாலும் ஏகாக்ரமான அநுபவம்செல்லாநிற்க, உண்ணுஞ்சோற்றில் தம்மையுணர்ந்து அநுஸந்திக்கக்கூடுமோ? என்ன - நிர்க்குணமான இத்யாதிவாக்யத்ரயம். அதாவது-அவனுடைய ஶேஷித்வமும் குணமாகையாலே, அத்தை அநுஸந்தித்தால் ஶேஷித்வப்ரதிஸம்பந்தியேவே ஶேஷபூதரான தம்மையுங் காணலாமென்றபடி. இப்படி, கீழில்திருவாய்மொழிகளுக்கு ஸ்வாபதேஶம் அருளிச்செய்து, இத்திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹ ஸங்கதி - அவ்வளவிலே இத்யாதி. 'அவ்வளவிலே'யென்றது - தம்மையும் ஜகத்வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திக்க சுஷமரான வளவிலே என்றபடி.

விஸ்தரஸங்கதி—கீழில்திருவாய்மொழியில் இத்யாதி. ஒருகார்யத்துக்குப் போவார் தம் ஶக்தியறிந்து புறப்படுமத்தனையொழிய, ஸாஹஸத்தாலே புறப்படக்கடவதோ? என்ன - தன்சாபலத்தாலே இத்யாதி. பக்ஷிகளைத் தூதுவிடுகிறதென்? வேதுசிலரில்லையோ? என்ன - தனிவழியே இத்யாதி. ''மங்கையார் முன்பு'' என்று மேல்சொல்லுகிற தோழிமாரில்லையோ? என்ன -

acharya.org

லையே; இவ்வளவில் நீங்கள் என் ஆசையை அறிவிக்கவேணுமென்று அவற்றின் காலிலே விழுகிறாள். * அஞ்சிறைய மடநாரையில்—என்னை நினைத்தானத்தனை, தன்னை மறந்தானென்றாள்; இத்தலையில் அபராதம் பாராதே, அத்தலையில் அபராத ஸஹத்வம் பற்றாசாக, அபராத ஸஹத்வத்தைப் பார்த்து வருவதென்று ஆள்விட்டாள். வைகல் பூங்கழிவாயில் - இருவரையும் அவ்வூரில் ஹோக்யதை மறக்கப்பண்ணிற்று என்றாள்; விஶேஷஜ்ஞனுகையாலே ஆர்த்தியை அறிவிக்கவருமென்று ஆர்த்தரக்ஷணம் பற்றாசாகத் தூதுவிட்டாள். இத்திருவாய்மொழியில் - வாராமைக்கு அடி பரப்பனுகையென்று பார்த்தாள்; "தன்மன்னு நீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்" என்கிறபடியே அஸாதாரணமானதன்றிறே வடிவு; ஆஶ்ரிதரோடு ஏகரஸனுகையிறே என்று பார்த்து ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள். பலபாட்டுக்களிலும் "இதுவோ தக்கவாறு என்கையாலே, ஆந்ருஶம்ஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்" என்று பிள்ளான் பணிக்கும்படி. "ஹுஜோ நாமாநுஷாநுஹொமாநு ஸவபுகாஸஸ்ரூலிநீ - ஸரேவாடிஶதத்ராஹடி" '(புஞ்ஜா நாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ ஸமாத்வாதஶதத்ராஹம்) என்கிறபடியே பன்னிரண்டாண்டு தண்ணீர்த்துறும்பறக் கலந்து பிரிந்த பிராட்டியைப்போலே, அங்கேபுக்கு நெடுங்காலம் அவனை யநுபவித்துப் பிரிந்து தூதுவிடுகிறாள்' என்று பிள்ளான். "புறப்பட்டவள் முடியப்போகமாட்டாதே நகரோபவநத்திலே கிடந்து தூதுவிடுகிறாள்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. "ஜீவந்தீம்மாம்யதாராமஸ் ஸம்பாவயதிகீர்திமாந்" (ஜீவந்தீம்மாம்யதாராமஸ் ஸம்பாவயதிகீர்த்திமாந்)-பரபரிபவம் பொறாத குடிப்பிறப்புடையவரிறே.

உண்டானுலும் இத்யாதி. இவ்வளவில் - தோழிமாரும் உதவாத டிஸையில். கீழே இருகால் தூதுவிட்டாளே; அதுக்கும்இதுக்கும் வாசியேதென்ன - அஞ்சிறை இத்யாதி. என்னை - ஸாபராதையான என்னை. தன்னை - அபராதஸஹனுன தன்னை. அவன் மறக்கைக்கு ஹேது, நம்முடைய அபராதமென்று கீழே சொல்லி, வருகைக்கு ஹேது அபராதஸஹத்வமென்கிறார் - இத்தலையில் இத்யாதி. வைகல்பூங்கழிவாய் ப்ரவேஶத்திலே "ஆர்த்தரக்ஷணத்திலே யொருப்பட்டு இத்தலையை மறந்தான்" என்றார்; இங்கே 'ஹோக்யதை மறக்கப்பண்ணிற்று' என்கிறார். இதுவுமொரு நிர்வாஹமென்று கண்டுகொள்வது. ஹோக்யதைக்கு ஶப்தம் - "சிறந்தசெல்வம்" என்று. இருவரையுமென்றது - பிரிந்தால் யரித்திருக்கப்போகாத வைலக்ஷண்யத்தையுடையதன்னையும். "நஹஸீதா" என்று பிரிந்தால் யரித்திருக்கவொண்ணுத ஆர்த்தியையுடைய என்னையுமென்றபடி; "நஜீவெயம்க்ஷணவேவி" என்னும் தன்னையு மென்னுதல். மறந்தானுகில் வருகைக்கும் பற்றாசேதென்ன - விஶேஷஜ்ஞன் இத்யாதி. விஶேஷஜ்ஞனுகையாலேயென்றது - ஸ்வவைலக்ஷண்யத்தையும் இவள் ஆர்த்தியையும் அறியுமவனுகையாலே என்றபடி. பரப்பனுகையென்றது - "முன்னுலகங்களெல்லாம்படைத்த" என்றதைப்பற்ற. வருகைக்குப்பற்றாசேதென்ன - தன்மன்னுநீள் இத்யாதி அஸாதாரணமானதன்றிறே - "நதொரு வடிவுஸுகோநாழி" அன்றோ என்றபடி. விவரணம் - ஆஶ்ரிதரோடு இத்யாதி. 'ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்" என்ற பட்டர் நிர்வாஹமென்று கருத்து. நிர்வாஹாந்தரம் - பல இத்யாதி. அங்கேபுக்கு - திருக்கோளூரிலே புக்கு. "தினைத்தனையும்விடாள்" என்றதைப்பற்ற - "நெடுங்காலமவனையநுபவித்து" என்றது. 'கீழிற்றிருவாய்மொழியில்" இத்யாதிவாக்யத்திலே, முடியப்போகமாட்டானென்றருளிச் செய்திருக்க, 'புறப்பட்டவள் முடியப்போக மாட்டாதே' இத்யாதி வாக்யத்திலும் இதுதன்னையே அருளிச்செய்கிறது, பிள்ளான் நிர்வாஹத்திலும் பட்டர்நிர்வாஹமே முக்யமென்ற தோற்றுகைக்காக. ஸம்ஶ்லேஷமுண்டானுல் ஒருதிருவாய்மொழி யருளிச்செய்வர்; அதுகாணுமையாலே, பட்டர் நிர்வாஹமே இத்திருவாய்மொழிக்கு முக்யமென்னுமிடம் ஸம்ப்ரதி

acharya.org

அதிலே தமக்குவந்த அவத்யம் பரிஹரிக்கச்சொல்லவேண்டாவே. கடலையணைசெய்து ராவணுதிகளை நிரஸித்துத் தாம் வரக்கோள்ள, இத்தலை வேறுந்தறையாய்க் கிடவாமே செய்ய நினைத்தாராகில் ஏற்கவே பரிஹரித்துத் தம்புகழைநோக்கிக்கோள்ளச்சொல்லென்று சொன்னாளிறே; அப்படியே இவளும் தன்தசையை அறிவித்து விடுகிறாளாயிருக்கிறது.

முதற் பாட்டு.

பொன்னுலகாளீரோ? புவனிமுழுதாளீரோ?
நன்னலப்புள்ளினங்காள் வினையாட்டியேன்நான் இரந்தேன்
முன்னுலகங்களெல்லாம்படைத்தமுகில்வண்ணன்கண்ணன்
என்னலங்கொண்டபிரான்தனக்கு என்நிலைமையுரைத்தே.

ஆ.—மத்ஸம்ஶ்லேஷைக யாரகபோஷக ஹோக்யனும் மதநிகஸ்வரூபரூப விஹவஜஶ்வர்யனுய்க்கொண்டு என்னோடு ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷிக்கிறான் என்னுடைய ஸர்வஸ்வத்தையும் அபஹரித்துக்கொண்டு என்னைத்தோற்பித்துத் தனக்கடிமையாக்கிக்கொண்ட எம்பெருமான் தன்னைப்பிரிந்து நான் படுகிற வ்யஸநத்தைச்சென்று சொல்லவேணுமென்று புள்ளினங்களைக் குறித்துச்சொல்ல, அவை பின்னையும் போகாதிருந்தவாறே, "அவன் நம்முடைய அபேக்ஷிதஞ்செய்யாதொழியிற் செய்வதென்?" என்று போகாதிருந்தனவாகக்கொண்டு, அவன் பரமகாருணிகனுகையாலும் ஆஶ்ரிதவத்ஸலனுகையாலும் நம் அபேக்ஷிதஞ் செய்தருளும்; ஆதலால், என்னுடைய ஆசையைச் சொல்லவேணுமென்று சொல்லி, அவற்றின் பக்கலுள்ள ப்ரீத்யதிஶயத்தாலே, திருநாட்டையும் லீலோபகரணமான அண்டங்களையுமடங்க இவைசெய்கிற உபகாரத்துக்குக் கைம்மாருகக்கொடுத்து, பின்னையும் நிரூபித்து இவைசெய்கிற மஹோபகாரத்துக்குக் கைம்மாருகப்போராது என்றுபார்த்து, பரமதயாளுக்களான உங்களுடைய நிரவயிக ஔயையாலே, ஊஃவஸாகரநிமக்நையான என்னுடைய ஆஶையைச்சென்று சொல்லவேணுமென்று ப்ரார்த்திக்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், எம்பெருமானுக்கு என்னுடைய ஸ்திதியை அறிவித்து, அவனுடைய பரமபதத்தையும் ஸம்ஸாரவிஹாதியையும் நான்தர ஆளவேணு

பக்கம். பிள்ளான் நிர்வாஹத்திலே, ஆந்ருஶம்ஸ்யம் பற்றாசாகத் தூதுவிட்டாருண்டோ? என்ன - ஜீவந்தீம் இத்யாதி. "ஜீவஜீம்ஶாம்யயாராராஷ்ஸம்ஹாவயதிகீதிபூரோநு। கதயாஹநுஷாநா வ்ரைவாவாயஶிபூவாவுஹி" இதிஸீதா. இதுக்குபாவம் - பரபரிபவம் இத்யாதி. இதுக்கு "கீர்த்திமான்" என்றதிலே நோக்கு. "ஜீவந்தீம்" என்றதுக்குபாவம் - கடலை இத்யாதி. பிள்ளான் நிர்வாஹத்துக்கு, "தினைத்தனையும்விடாள்" என்ற திருத்தாயார் மநோரதமே ஹலித்து, அங்கே புக்கதுபவித்தாள் என்ற கருத்து. "எங்ஙனேபுகுங்கொல்" என்றதைப்பற்ற - பட்டர் நிர்வாஹம், "செல்லவைத்தனன்" என்றதுக்கு - செல்ல ஒருப்பட்டானென்றர்த்தம் விவக்ஷிதம். பட்டர்க்கு ஹ்ருதயம் - முடிகிறபாட்டிலே ஸமஶ்லேஷமுண்டானுல், ஆடியாடியில் முடிவிலே ஸம்ஶ்லேஷந்தோற்றச்சொல்லி, அந்தாமத்தன்பிலே அத்தைவிசதீகரித்தாற்போலே, மேலிற்றிருவாய்மொழியிலே விசதீகரிப்பர்; அதில்லாமையாலே ஸம்ஶ்லேஷமில்லை என்று.

acharya.org

மென்று சில புள்ளினங்களைப் பிராட்டி யிரக்கிறாள். [நன்னலப்புள்ளினங்காள்] - அழகிய நீர்மையையுடைய புள்ளினங்காள். [வினையாட்டியேன்] - கையிலகப்பட்டவனை விட்டு ஊதப்ரேஷணம்பண்ணுகைக்கிடான பாபத்தைப்பண்ணின நான் இரந்தேன்.

[முன்னென்றுதொடங்கி] - ஸ்ருஷ்டிகாலத்தில் தரதமபாவம் பாராதே ஸகல லோகத்தையும் உண்டாக்கின பரமோபகாரனுமாய் அக்குணசேஷ்டிதாதிகளாலே என்னை ஸர்வஸ்வஹரணம்பண்ணி அடிமைகொண்ட க்ருஷ்ணனானவனுக்கு.

ப.—முதற்பாட்டில், தன்னுடைய காரணத்வாதி ஸ்வபாவங்களைக்காட்டி என்னை வசீகரித்துக்கொண்டவனுக்கு என்னுடைய அவஸ்தையைச்சொல்லி, அதுக்குப் பரிசிலாக உபயவிபூதியும் நீங்களிட்டவழக்காம்படி நிர்வஹிக்கவேணுமென்று சிலபுள்ளினங்களைச் சொல்லுகிறாள்.

நன்னலம் - * அர்த்தித்தார்க்குக் காரியஞ்செய்கைக்கடியான விலக்ஷணஸ்நேஹாதியுக்தங்களாய், புள்ளினங்காள் - (ப்ரவ்ருத்திஹேதுவான பக்ஷத்வயாந்வயத்தையுடைய) புள்ளினங்காள்! வினையாட்டியேன் - பிரிந்து தூதுவிடுகைக்கடியான பாபத்தையுடைய, நான் - நான், இரந்தேன் - அவன் விஷயத்திலாஸ்ரிதர்பண்ணும் ப்ரார்த்தனையை உங்கள்பக்கலிலே பண்ணினேன் ; (எதுக்காகஎன்னில்?)—முன் ப்ரதமத்திலே, உலகங்கள் - லோகத்தை, எல்லாம் - எல்லாம், படைத்த - ஸ்ருஷ்டித்து, (ஸ்ருஷ்டமான லோகத்துக்கு ரக்ஷகமாய்), முகில் - காளமேகநிபமான, வண்ணன் - திருமேனியையுடையனாய், கண்ணன் - ஆஸ்ரிதர்க்கு ஸுலபனாய், (அந்தஆகாரங்களாலே), என்-என்னுடைய, நலம் - விலக்ஷணகாரங்களை யடங்க, கொண்ட - ஸ்வாதீன மாக்கிக்கொண்ட, பிரான் தனக்கு - உபகாரகனுக்கு, என் - என்னுடைய, நிலைமை - அவஸ்தையை, உரைத்து - சொல்லி, (அதடியாகச் சேர்ந்திருக்கிற நாங்களிருவரும் பரிசிலாகத்தந்த), பொன் - நித்யஸ்ப்ருஹணீயமான, உலகு - பரமபதத்தையும், - ஆளீரோ? புவனி - பூம்யுபலக்ஷிதமான, முழுது - ஸகல லீலாவிபூதியையும், ஆளீரோ - ஆளுங்கோள்.

பின்பு இவ்விபூதித்வயமும் நீங்களிட்டவழக்கன்றோ என்றுகருத்து. இனங்காளென்றது - ஸங்வபாஹுள்யமும் கார்யோபயுக்தம் என்றிருந்தபடி.

படி என்ற. ஆக "மெய்யமர்" என்கிறதுக்கு காலர்த்தம். "என்காதல்சொல்லி" என்கையாலே, தமக்கு அதில்லை என்று பாவம் - தந்நாமுக்கு இத்யாதி. அவர்க்கில்லையென்னுமதுக்கு நியாமகம் - தமக்குஉண்டாகில் இத்யாதி. பாவாந்தரம் - காட்சிக்குமேலே இத்யாதி. "கண்டு" என்றகாட்சிக்கு மேலே, அவனோடேபேசுகையும் இவற்றுக்கேற்றம்என்றபடி. விரைந்தோடிவருகிறதுக்கு ப்ரயோஜ நம் - பிராட்டியை இத்யாதி. விரைந்தோடிவருவானென்? அவனோடேகூடவந்தாலோ? என்ன - அதுக்குமுன்னே என்ஸத்தை அழியுமென்னுமத்தை தர்ஶிப்பிப்பதாக அதிஷ்ட்டிகை - அறிவித்து இத்யாதி. நீங்கள் அவனோடேகூடவந்தால் என் ஸத்தையழியும்; ஆனபின்பு, என்னை தரிப்பிக்கைக் காக ஶீக்ரமாகவாருங்கோள் என்னுமத்தையுட்கொண்டு அதுக்குத்ருஷ்டாந்தம் - திருவடிபிராட்டியை இத்யாதி. அஹிசந்திகளெல்லாமென்றது - மஹாராஜரோடே "ஒருமாசத்திலேவருகிறோம்" என்றுற் போலே யுண்டானதுகள் என்றபடி. இக்கரையிலே - கடலுக்குஇக்கரையிலே. விரைந்தோடி வாச் சொல்லுகிறதென்? அவனோடேகூடவந்தாலோ? என்கிற சங்கைக்கு த்விதீயபரிஹாரம் - நீங்கள் முற்பட இத்யாதி. த்ருதீயபரிஹாரம் - அவனுடனே இத்யாதி. வாய்புகுநீராய் - உன்மஸ்தகாநுபவ மாய். "முறைகெடாமல்" என்கைக்கு, முறையேதென்ன - உபகாரகரான இத்யாதி. இந்தமூன்றும் பாவத்துக்கு த்வேதாஸ்வாபதேஶம்; அதில்முந்தினது - ஆகையிறே இத்யாதி. அதாவது, குருபரம்பரா பூர்வகமாக ஈஶ்வரனை சேவிக்கவேண்டுகையாலே முன்னேவரச்சொல்லுகிறானென்றபடி. இரண்டாம் ப்ரகாரம் - இனித்தான் இத்யாதி வாக்யத்ரயமும். அதாவது - பகவத்ப்ராப்த்யநந்தரம் அநுவர்த்தநங் கூடாமையாலும், உங்களை நான் அநுவர்த்திக்கும்படி முன்னே வரவேணுமென்கிறானென்றபடி. 'கிளி காள்! கையமர்சக்கரத்து' என்றதொடங்கி, 'கண்டு மெய்யமர்காதல்சொல்லி - விரைந்தோடிவந்து - 'மையமர்வாள்' என்றுதொடங்கி, பாலொடு மேவீரோ இத்யந்வயம் மைபொருந்தி ஒளியையுடைத்தான நெடியகண்ணையுடைய என்று ஸப்தார்த்தம். (உ)

acharya.org

மூன்றும் பாட்டு.

ஓடிவந்தென் குழன்மேல் ஒளிமாமலருதீரோ?
கூடியவண்டினங்காள்! குருநாடுடையைவர்கட்காய்
ஆடியமாநெடுந்தேர்ப்படை நீறெழச்செற்றபிரான்
சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டே.

ஆ.—(ஓடிவந்து.) - ராஜ்யப்ராப்தராய் ஸமாஶ்ரிதருமான பாண்டவர்கள் பக்கலுள்ள வாத்ஸல்யத்தாலே, த்ரைலோக்யவிஜயோபகரணபூதமாய் அத்யுந்நதமாயிருந்த திருத்தேரிலேநின்று அவர்களுக்கு ஸாரத்யம்பண்ணி தத்விரோதிகளை நிரஸித்தருளின ஸமயத்திலே, பரமபக்தியுக்தரான திவ்யஜநங்கள் ஶிஶிரோபசாரமாகச் சாத்தியருளப்பண்ணின திவ்யகந்தமான திருத்துழாய்மதுவைப் பாநம்பண்ணி, அத்தூமதுவாய்களைக் கொண்டோடிவந்து, அம்மதுவையும் அதிசீதளமான திவ்யகந்தத்தையும் என் குழல்மேல் ஒளிமாமலர்களிலே வர்ஷிக்கவேணும்; வர்ஷிக்கவே, அம்மலர்களும் அலர்ந்து புதுக்கணிக்கும்; * என்னிறம் பண்டுபண்டுபோலொக்கும், கெண்டையொண் கணுந்துயிலும் என்று, பரஸ்பர ஸம்ஶ்லேஷகபோகமான வண்டுகளை நோக்கிச் சொல்லுகிறாள்.

ஒ.—மூன்றும்பாட்டில், இனமாயிருக்கிற வண்டுகளைக்குறித்து, எம்பெருமானுக்கு என்உஶையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

[ஒளிமாமலரூதீரோ] - உங்கள் வரவாலே தளிர்த்திருக்கிற என்னுடைய குழலில் ஒளியையுடைத்தாய்ப் பெருத்திருக்கிறபூவில் மது வைப் பாநம்பண்ணிகோளோ. [குருநாடுடைஐவரென்று மேலுக்கு] - குருநாடுடைய யர்மபுத்ராதிகளுக்காக மஹோரமாம்படி ஸஞ்சரியாநின்றுள்ள குதிரைபூண்ட பெரியதேரையே உபகரணமாகக்கொண்டு ஸேநையைப் பொடியாம்படிமுடித்த மஹோபகாரகன் சூடியருளின திருத்துழாயில் மது வைப் பாநம்பண்ணுகையாலே ஶுஶுமாய் தேனையுடைய வாய்களோடேகூட.

ப.—அநந்தரம், என்பக்கலினின்றும் செல்லுகையாலே ஆஶ்ரிதவிரோதி நிவர்த்தகனான க்ருஷ்ணன் ஶிரஸாவஹித்த புதுக்கணிப்போடேவந்து, "அவன்வருகிறான்" என்றலங்கரித்திருக்கிற என்குழலிற்பூவை யூதங்கோளென்று சிலவண்டினங்களைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

கூடிய - பரஸ்பரம்செறிந்த, வண்டினங்காள் - வண்டினங்காள்! குருநாடுடை - குருக்ஷேத்ரநிர்வாஹகரான, ஐவர்கட்குஆய் - பாண்டவர்கள்ஐவர்க்குமாக, ஆடிய-ஊர்ஜிதயேகதியான, மா - குதிரைகளையும், நெடு - ஓங்கின, தேர் - தேர்களையும், படை - ஸேநையையும், நீறுஎழ - தூளிசேஷமாம்படி, செற்ற - அழித்த, பிரான் - மஹோபகாரகனான க்ருஷ்ணன், சூடிய - திருக்குழல்சாத்தின, தண் - ஶ்ரமஹரமான, துளபம் - திருத்துழாயிலேயிருந்து, உண்ட - பாநம்பண்ணின, தூ - தெளிந்த, மது - மதுவையுடைத்தான, வாய்கள் - வாயை, கொண்டு - உடையிர்களாய்க்கொண்டு, ஓடிவந்து - சடக்கெனவந்து, (அவனுக்கு ஸர்வப்ரகாரபோக்யமான) என் - என், குழல்மேல் - குழ

acharya.org

வின் மேலில், ஒளி - செவ்விபையுடைத்தாய், மா - ஸ்லாக்யமான, மலர் - பூவில், ஊதீர் - மதுபாநோத்யோகந்தோன்றும்படி ஊதவேணும்.

இ — மூன்றும்பாட்டில், சிலவண்டுகளைக்குறித்து, அவனுக்கு என் நிலையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

[ஓடிவந்து] - முன்பே அவற்றின்வார்த்தைகேட்கையில் உண்டான த்வரையாலேயாதல், அவற்றைஅநுஸந்திக்கையில் உண்டான த்வரையாலேயாதல், சடக்கெனவரவேணும் என்கிறாள். [என்குழல்மேல்] - அவனோடு ஸோபலாம்யமுண்டாம்படிபண்ணக்கடவேன். அவன் தனக்குத்தூதுபோனவர்களுக்கு ததிமுதன்காத்திருக்கிற காவற்காட்டை அழிக்கக்கொடுத்தானித்தனையிறே; அவன் காவற்காட்டை அழிக்கத்தருகிறேன் உங்களுக்கு என்கிறாள். "ஸுஹாவாரயிஷ்யாமி" என்று திருவடியைப்பற்றி அழிக்கவும்வேண்டாவிறே: இவளுடைய * வாஷவஸவபூவஸுஹு தஸ்ரு இருக்கிறபடி. உங்களுடையவரவாலே தளிர்த்திருக்கிற என்னுடைய குழலில், ஒளியை உடைத்தாய் ஸ்லாக்யமானமலரில் மயூவைப் பாகம்பண்ணீரோ. [ஊதீரோ] - மயூவின்ஸம்ருத்தியாலே, கிண்ணகத்தில்இழிவாரைப்போலே இழியமாட்டாதேநின்று பறக்கிறபடி. உங்கள் கார்யமுமாய் பாரக்ஷணமுமானால் ஆறியிருக்கிறதென் என்கை. [கூடிய வண்டினங்காள்] - மஹாராஜரைப்போலே படைதிரட்டவிராதே, என்னுடைய ரக்ஷணத்திலே ஒருப்பட்டு முன்பே திரண்டிருக்கப்பெற்றதிறே. [குருநாடுடைஐவர்கட்காய்] - நாடுடையவர்கள் ஐவருமேயென்றிருக்கிறாள்: துர்யோயநாதிகள் கிடந்தானை கண்டேறினவித்தனை [ஐவர்கட்காய்] - "நாடுடைமன்னர்" என்கிறபடியே ராஜ்யமுடையவர்கள் அவர்கள். "நாமவர்களுக்குக் கையாளாய் வ்யாபரிக்கிறோம்" என்றாயிற்று அவன் நினைத்திருப்பது; அவன்நினைவிறே இவளுக்குநினைவு. [ஆடியமாடுதேர்] - மனோஹரமாம்படி ஸஞ்சரியாநின்ற குதிரைபூண்ட பெருந்தேரை உபகரணமாகக்கொண்டு: "ஹயகிஸ்ரு ஜெ" என்னக்கடவதிறே. [படைநீறெழச்செற்ற] - ஆயுயமெடாமைக்கு அநுமதிபண்ணுகையாலே, தேர்க்காலாலே ஸேநையைத் துகளாக்கினான். [பிரான்] - அவனுக்கு பரார்யமாக வ்யாபரிக்கைபேஸ்வரூபம், தாழ்த்தது ஔபயிகமென்றிருக்கிறாள். [குடிய தண்டுளபமுண்ட] - ஸாரத்யம்பண்ணும்போது வைத்த வளையத்திலே மயூபாநம்பண்ணின: அவதாரங்களில் ஏதேனுமொன்றாலே வளையம்வைக்கிலும் அவ்வவஸ்யையை ப்ராபித்து அநுகூலிக்கிறது, திருத்துழாயாகக்கடவது. [தூமதுவாய்கள்கொண்டே] - அம்மயூவைப் பாநம்பண்ணுகையாலே, ஸுஸ்மாய்த் தேனையுடைய வாய்களோடேகூட; இனிதானபேச்சையுடைத்தாயிருக்கை என்றுமாம். வாய்-வார்த்தை; "ஆஷாவரீதா" என்றாற்போலே. என்னையும் மயூபாநம்பண்ணுவித்து நீங்களும் மயூபாநம் பண்ணுங்கோள்.

ஈடு.— மூன்றும்பாட்டு. சிலவண்டுகளைக்குறித்து, அவனுக்கு என்நிலையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

மூன்றும்பாட்டு. —ஓடிவந்து இத்யாதி. "வண்டினங்காள்! பிரான்சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டு - ஓடிவந்தென்குழல்மேலொளிமாமலரூதீரோ" என்கிறபதங்களைக் கடாகித் தவதாரிகை - சிலவண்டுகளை இத்யாதி.

acharya.org

[ஓடிவந்து] - கடுக வரவேணும். என்னளவுகண்டுபோகிற உங்களுக்கு, நானுள்ளபோதே வந்துஉதவவேணும். அன்றிக்கே, அவற்றையநுபவிக்கையில் உண்டான த்வரையாலேயாதல், சடக்கெனவரவேணுமென்கிறாள். [என்குழல்மேல்] - பேரளவுடையார்படும் ஈடுபாட்டைக் கண்டு, தன்குழல்வீறு தானறிந்திருக்குமே. "சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டு ஓடிவந்தென்குழல்மேல் ஒளிமாமலரூதிரோ" என்பானேன், கார்யஞ்செய்து சமைந்தால் கைக்கூலி கொடுப்பாரைப்போலே? என்னில்; இவற்றுக்கு இவள்குழலில் விஷயமுண்டாகவேணுமே. இப்போது, மயூமாறிச்சருகாயிறே கிடக்கிறது; இவைமீண்டாலிறே இத்தலையில்செவ்விபிறப்பது. [என்குழல்மேல்] - அவனுக்குத் தூதுபோய்வந்தாரிற்காட்டில் இவளுக்குத் தூதுபோனார்க்குஉண்டானதன்னேற்றம் இருக்கிறபடி. அங்கு மஹாராஜருடைய மயூவநமிறேயழிந்தது; இங்கு அவன் காவற்காட்டை உங்களுக்குத் தருகிறேனென்கிறாள். * அளகாடவியிறே. தலையான பரிசிலிறே இதுதான். ஆயிமுகப்ரப்ருதிகளுடைய விலக்குகையும் இல்லையிறே யிங்கு. சாந்தனான திருவடியிறே "சுஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம்வரிவஸ்திதம்" (அஹமாவாரயிஷ்யாமியுஷ்மாகம்பரிபந்திநம்) என்றான். பிராட்டியைக்கண்டு உவந்தமையறியாதேயிருக்கச்செய்தேயும் மயூவநம் அழிந்தமையைக்கண்டு, மஹாராஜருடைய வால் ருஷ்யமூக பர்வதத்திலே யறைந்ததிறே. "நம்மோடு பண்ணிப்போன ஸமயம் அத்க்ரமித்திருக்கச்செய்தேயும் மயூவநமழிக்கும்போது பிராட்டியைக் கண்டாராகளாகவேணும்றே." "பிராட்டியைக்கண்டஹர்ஷம், நடுவில் மயூவநமன்றுகில் ராஜபுத்ரராகள் முதுகோடேபோம்" என்று பட்டரருளிச்செய்வர். [என்குழல்மேலோளிமாமலரூதிரோ] - என்றும் இவளகுழலில் மயூபாநம் பண்ணப்பெறுவது வண்டுகளேயாகாதே. *தூவியம்புளளுடைத தெய்வ வண்டாதல்இவையாதல். அவனேயோ ஸாம்யாபத்தரவலலான், நானும உங்களுக்கு அவனோட்டை ஸாம்யாபத்தியைத்தருகிறே

"வரைந்தோடிவந்தே" என்கிறவடத்தல் முந்தினவர்த்தத்தை அநுபாஷித்துக்கொண்டு. உங்களுக்குப்பிரிந்திருக்கப்போராதென்று அர்த்தாந்தரம் - என்னளவு இத்யாதி வாக்யத்வயத்தாலே. அவற்றை - அளகங்களை. "வெங்குழல்மேல்" என்று - தன்குழலைத் தானே கொண்டாடலாமோ? என்ன - பேரளவு இத்யாதி. அளவுடையாரென்றது - ஈஸ்வரனை. "தோகைமாயிலார்கள்" என்று கொண்டாடுமென்றபடி. விஷயம் - மயூ. * த்தலையிலென்றது - சடு. "என்குழல்மேலோளிமாமலரூதிரோ" என்றதனால் பலதாரதம் - அவனுக்கு இத்யாதி. அந்த வற்றமேதென்ன - அங்கு இத்யாதி. இது காடோ? என்ன - அளக இத்யாதி. அவனுக்குத்தூதுபோயவந்தாரகுக் கொடுத்த வுபஹாரத்தைப்பற்றி இது ஸ்லாக்யமென்னுமதனை ரஸோக்தியாக அருளிசெய்கிறார் - தலையான இத்யாதி. பரிசில் - உபஹாரம். இன்னமொருவழியாலே யதிற்காட்டில் இதுக்குண்டான வற்றமருளிச்செய்கிறார் - ஆயிமுக இத்யாதி. அதாவது மஹாராஜருடைய காவற்காட்டைப் புஜிக்கிறதுக்கு ப்ரதிபந்தகமுண்டு; இங்கு அதிலலையென்றபடி. அங்குவலக்கினாருண்டோ? என்ன - சாந்தனான இத்யாதி. "சுவபுஜ உபஸ்வாஸ்ய யுஷ்மாகம்வைவதவாஹநாத் । சுஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம் வரிவஸ்திதம்" இதி மயூவநே வாநரார்ப்ரதிஹதாமான் (சுஉ-க). ப்ரா.ஸ. ங்கிகம். 'பிராட்டியை' என்றதொடங்கி, 'பட்டர் அருளிச்செய்வர்' என்னுமளவும். அறியாதிருக்கச் செய்தே, அதைகிறதுக்கு அடி ஏதென்ன - நம்மோடு இ யாதி. ரஸோக்தி - என்றும் இத்யாதி. வண்டுகளேயோ மயூபாகம்பண்ணுவது? என்ன - தூவியம் இத்யாதி. "தலையானபரிசிலிறே" என்றத்தைவிவரிக்கிறார் - அவனேயோ இத்யாதிவாக்யத்ராயத்தாலே: ஸாம்யாபத்தியென்றது - ஸமாநபோகத்வம். அதாவது - அவனுக்குபோக்யமானகுழலை யுங்களுக்கும் அநுபவிப்பிக்கிறேனென்றபடி. "வொராஹுமுதெ" என்கிறஸ்ருதிக்கு - இவ்விடத்திலே, போக்த்ருஸாமாந்யம் விவக்ஷிதம். ஸப்

acharya.org

னேன்கிறாள். "ஸோஶ்நுதே" என்கிறபடியே, உங்களையும் அவனையும் ஒருகலத்திலே யூட்டுகிறேனென்கிறாள். தலையான ஊணிறே. [என்குழல்மேலோளிமாமலரூதிரோ]-உங்கள் வரவாலே தளிர்த்திருக்கிற என்னுடையகுழலில், ஒளியையுடைத்தாய் ஶ்லாக்யமான மலரில் மயூவைப் பாநம்பண்ணீரோ? [ஊதீரோ]-மயூவின் ஸம்ருத்தியாலே,கிண்ணகத்தில் இழிவாரைப்போலே தனித்து இழியமாட்டாதே நின்றுபறக்கிறபடி. உங்கள் கார்யமுமாய் பரரக்ஷணமுமானால் ஆறியிருக்கிறதேன்? என்கை. [கூடியவண்டினங்காள்] - மஹாராஜரைப்போலே படைதிரட்டவேண்டாவிறே யுங்களுக்கு. என்னுடைய ரக்ஷணத்திலே யோருப்பட்டு முன்பே திரண்டிருக்கப்பெற்றதிறே. இளையபெருமாள் கிஷ்கிந்தாத்வாரத்திலே சென்று குணகீர்த்தனம்பண்ணின பின்பிறே படைதிரட்டிற்று! [குருநாடுடைஐவர்கட்காய்] - பிறர்மஹிஷிகள் குழல்பேணுமையைக்கண்டு வருந்துமவன்கிடீர்; "மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்தவர்களையே மன்னராக்கி" என்கிறபடியே. ராஜ்யமுடையார் பாண்டவர்களே; நாம் அவர்களுக்கு ஏவல்தேவை செய்துநிற்கிறோமென்றாயிற்று அவன்நினைத்திருப்பது. [குருநாடுடைஐவர்] - துர்யோதநாதிகள் கிடந்தானை சண்டேறினவோபாதியிறே. "நாடுடைமன்னர்" என்கிறபடியே ராஜ்யம் அவர்களதே. "துர்யோதநாதிகள் ராஜ்யம்பண்ணுகை வல்லடி" என்றிருக்கும் ஹகவதபிப்ராயத்தாலே சொல்லுகிறார்; அவன்நினைவேயிறே இவர்க்கும்நினைவு. [ஆடியமாநெடுந்தேர்] - மநோஹரமாம்படி ஸஞ்சரியாநின்ற குதிரைபூண்ட பெருந்தேரை உபகரணமாகக்கொண்டு. "உஹ

தார்த்தம் - உங்கள் இத்யாதி. "ஊதீரோ" என்றதுக்கு பலிதார்த்தம்- பாநம்பண்ணீரோ என்றது. சாப்தமானவர்த்தம் - மயூவின் இத்யாதி. "ஊதீரோ" என்கிறஸ்வரத்துக்குபாவம் - உங்கள்கார்யமும் இத்யாதி. உங்கள்காரியமென்றது - அங்கேபோய் அறிவிக்கையை. பரரக்ஷணமென்றது-மயூபாநம் பண்ணுகையை. "கூடிய" என்றதுக்குபாவம் - மஹாராஜரை இத்யாதிவாக்யத்வயம். படைதிரட்டுமிடத்தில் பின்னையுமொரு விளம்பமுண்டென்னுமத்தை ரஸோக்தியாலே அருளிச்செய்கிறார் - இளையபெருமாள் இத்யாதி. 'குணகீர்த்தநம்' அவருடையகுணங்களைச்சொல்லிப் புகழுகை என்று ரஸோக்தி; சிறுநாணொலிகொள்ளுகையென்று வாஸ்தவமான வர்த்தம். நாங்கள் அறிவித்தால் வருமோ? என்ன - பிறர்மஹிஷிகள் இத்யாதி. அதாவது - தன்மஹிஷியிடத்தில் சொல்லவேண்டாவிறேயென்றபடி. அப்படிவருந்தினாலோ? என்ன - மைத்துனன்மார் இத்யாதி. மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு அஸ்மதையான த்ரௌபதியைக்குழல்முடிப்பித்து,அந்தப்பாண்டவர்களையே ராஜாக்களாக்கி என்றபடி. பெரியாழ்வார் திருமொழி, நாலாயிரத்து, ஒன்பதாந்திருமொழி, ஆறும் பாட்டு. "நாடுடையவர்" என்றும், "குருநாடுடையவர்" என்றும் பதத்தைப்பிரித்து ப்ரதமம், "நாடுடையவர்" என்றதுக்கர்த்தம் அருளிச்செயவதாகத் திருவுள்ளம்பற்றி, அவர்களோ நாடுடையவர்கள்? க்ருஷ்ணனன்றோ? என்ன; இதுக்கு உத்தரம் - ராஜ்யமுடையார் இத்யாதி. குருநாடுடையவர்கள் துர்யோதநாதிகளன்றோ? என்ன - துர்யோதநாதிகள் இத்யாதி. 'கிடந்தானை' இத்யாதிக்குக் கருத்து - பாகன் அநுமதியின்றியிலே கிடந்த ஆனையிலே தானேறினால் அதினாலே தள்ளுண்ணுமாபோலே, அவர்களும் அமர்யாதமாக ராஜ்யம்பண்ணுகையாலே ப்ரஷ்டராவர்களென்று. அவர்கள் "எங்களது" என்றுநினைத்திருக்க, "கிடந்தானைகண்டேறினவோபாதி" என்கிறது எத்தாலே? என்ன - நாடுடை இத்யாதி. செய்ததலைக்கட்டவல்ல ஈஶ்வரன்படி நினைத்திருந்தாலும், அவர்களாளாகிற்க இவர்க்குஇப்படி யருளிச்செய்யலாமோ? என்ன-அவன்நினைவே இத்யாதி. சஞ்சரிக்கிறவென்னாதே, "ஆடிய" என்றதுக்கு வாஸனை - மநோஹரம் இத்யாதி. "மா" என்ற - குதிரை: நெடுமை - பெருமை. "நெடுந்தேர்" என்றதுக்கு ப்ரமாணம்-மஹதி இத்யாதி. "தத:ஶொவெ ஹமுயெ

யமூ-ஶெஹ ஹிவ்யாநெஸ்ரிகள । ரோயவ: வாணவஶொவ்ரிவ்ரஶொஉளவூடிய

acharya.org

திவ்யரதமெஹ்ஷிதளே" (மஹதிஸ்யந்தநேஸ்த்திதேள) என்னும்படியிருக்கிற தேரைக் கொண்டு. [படைநீறெழச்சேற்றபிரான்] - ஆயுதமேடாமைக்கு அநுமதிபண்ணுகையாலே, தேர்க்காலாலே ஸேநையைத் துகளாக்கினன். [சேற்றபிரான்] - தன்னையழிய மாறியும் பரோபகாரம் பண்ணுகையே ஸ்வஸ்வாவமாகவுடையவன். தாழ்த்தது ஔபாதிகமென்றிருக்கிறான். [சேற்றபிரான்] - அர்ஜுநாதிகளும் ஶஸ்த்ரங்களோபாதியிறே; "ஶயெவெவெதெ நிஹதாஃவூர்வமேவ" (மயைவைதேநிஹதாஃபூர்வமேவ) என்று தானே யருளிச் செய்தானிறே. [சூடியதண்டுளபமுண்ட] - ஸாரத்யம்பண்ணுகிறபோது வைத்த வளையத்திலே மயூபாநம்பண்ணுகிற வண்டுகள். அவதாரங்களில் ஏதேனுமொன்றிலே வளையம் வைக்கிலும், அவ்வவஸ்த்தையை ப்ராபித்தநுகூலிக்கிறது திருத்துழாயாகக்கடவது. [தூமதுவாய்கள்கொண்டே] - அவ்வளையத்தில் மயூவைப்பாநம்பண்ணிசுத்தமாய்இனிதான வாய்களைக்கொண்டு; இனிதானபேச்சையுடைத்தாயிருக்கையென்றுமாம். [தூமதுவாய்கள்கொண்டு -ஓடிவந்தென்குழல்மேலோளிமாமலருதீரோ] - "வாஹிவாத" (வாஹிவாத) - சாக்ஷுஷ மல்லாமையாலே நீ பெற்றபேறு என்? "கூயிமெமாதூஸ்ஸ்பர்ஶஃ" (த்வயிமேகாத்ரஸ்ஸ்பர்ஶஃ) - நம்முடைய காரணங்களுக்குஸ்பர்ஶம்உன்பக்கலிலேயாயிற்றே. நமக்குத் தோட்டாரைத் தொட்டாயிற்றே. "சந்த்ரரேத்ருஷ்டிஸமாகமஃ" (சந்த்ரேத்ருஷ்டிஸமாகமஃ) சீர்ஶநத்தோடோத்ததிறே எனக்கு ஸ்பர்ஶமும். அற்றதுபோருந்தும்படி வார்த்தைசொல்ல

தூஃ" இதி நீதாஸுப்ரதமே(கச). தேரைக்கொண்டு நிரவிக்கிறதென்? திருவாழியில்லையோ? என்ன - ஆயுதம் இத்யாதி. "பிரான்" என்றதுக்கர்த்தம் - தன்னை இத்யாதி. தன்னையழிய மாறுகையாவது - தன்னுடைய ஸ்வாதிகத்வத்தையழித்து ஸாரதியாய் நிற்கை. "செற்றபிரான்" என்ற - இத்தையே நிரூபகமாகச்சொல்லுகையாலே 'ஸ்வபாவமாகவுடையவன்' என்கிறார். இப்போதுவாராதிருக்க, "பிரான்" என்கிறதென்? என்ன - தாழ்த்தது இத்யாதி. இவனேசெற்றான், அர்ஜுநாதிகளன்றோ? என்ன - அர்ஜுநாதிகளும் இத்யாதி. இவனேசெற்றானென்றுமதுக்கும், அவர்கள் ஶஸ்த்ரங்களோபாதி யென்றுமதுக்கும் ப்ரமாணம் - ஶயெவெவெதெ இத்யாதி. "தஸ்யாதிஶ்ரீதியஶொஹ வஜ்ஜுவாஶ்ரூநுஹுஹுஷ்ஷராஜ்யம்ஸ்ப்ருஶதி । ஶயெவெவெதெநிஹதாஃவூர்வமேவ ஸவ்யஸாசிந்ஸ்தாஃ ஸ்ரூயம்வவ்ருஷாவிநு" இதிநீதாஸுவாதஶே[ரூரூ]. "செற்றபிரான் சூடியதண்டுளபமுண்ட" என்கையாலே பலித்தபாவம் - ஸாரத்யம் இத்யாதி. க்ருஷ்ணவதாரத்தில் திருத்துழாயுண்டோ? என்ன - அவதாரங்களில் இத்யாதி. "சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டு" என்றதுக்கு இரண்டர்த்தம்; அதில்முந்தினது - அவ்வளையத்தில் இத்யாதி. திருத்துழாய்மதுவைப் பாநம் பண்ணுகையாலே பரிசுத்தமாய் இனிதானவாய்களைக்கொண்டென்றபடி; இந்த அர்த்தத்துக்கு, "உண்ட" என்றது - உண்கையாலேயென்றபடி. "மது" என்றது - இனிதானவென்றபடி. இரண்டாமர்த்தம் - இனிதானபேச்சை இத்யாதி. அதாவது - திருத்துழாய்மதுவைப் பாநம்பண்ணி பரிசுத்தமாய், இனிதாயிருப்பனவான - அவன்வரவுக்கு சூசகமான - வார்த்தைகளைக்கொண்டென்றபடி; இந்தபக்ஷத்தில், "வாய்கள்" என்ற - வாய்களிலிருக்கிற வார்த்தைகளை லக்ஷிக்கிறது. முந்தினவர்த்தத்துக்கு ஸம்வாதம் - வாஹி இத்யாதி. "வாத" என்றதுக்குபாவம் - சாக்ஷுஷமும் இத்யாதி. சாக்ஷுஷ மல்லாமையாலே நிர்ப்பயமாகவேண்டினவிடங்களிலே போகல மென்றபடி. "கூயிமெமாதூஸ்ஸ்பர்ஶஃ" என்கையாலே, பிராட்டியை ஸாக்ஷாத் அநுபவிக்கப்பெறுமையால் வந்த இழவுதோற்றுகிறதென்கிறார் - நம்முடைய இத்யாதி வாக்யத்வயத்தாலே. "வாத" என்ற - வாயுவை ஸம்போதித்துவைத்து, "சந்த்ரரேத்ருஷ்டிஸமாகமஃ" என்பானென்? என்னில் - சீர்ஶநத்தோடு இத்யாதி. அதாவது - சந்த்ரதர்ஶநம் தாரகமாமோபாதி, உன்னுடைய ஸ்பர்ஶமும் தாரகமென்கைக்காக வென்ற

acharya.org

வல்ல வாயைக்கொண்டு. "உஷ்டாஸீதா" (த்ருஷ்டாஸீதா) என்றாற்போலே, என்னையும் மயூபாநம்பண்ணுவித்து நீங்களும் மதுபாநம்பண்ணுங்கோள். (ந)

நான்காம் பாட்டு.

தூமதுவாய்கள்கொண்டுவந்து என்முல்லைகள்மேல்தும்பிகாள்!
பூமதுவுண்ணச்செல்லில் வினையேனைப்போய்செய்தகன்ற
மாமதுவார்தண்டுழாய்முடி வானவர்கோனைக்கண்டு
யாமிதுவோதக்கவாறு? என்னவேண்டுங்கண்டீர்நுங்கட்கே.

ஆ.—(தூமதுவாய்கள்) - நீங்கள் பூமதுவுண்ணச் செல்லில், ஶாக்யஹீநை யான எனக்கு "ஸம்ஶ்லேஷம்" என்றோர் இந்த்ரஜாலத்தைக்காட்டி, என்னை யகன்று திருநாட்டிலே திருமாமணிமண்டபத்திலே, * அபர்வறுமமரர்கள் திவ்யபரிஷத்திலே, * ஶுணைர்த்தாஸ்யமுபாகதாயிருந்த அவர்களாலே பலங்க்ருதனுயிருந்த அவனைக் கண்டு, அவன் திருக்குழலில் திருத்துழாயின் மயூவெள்ளத்தை உங்கள் தூமதுவாய்கள் கொண்டுபருகிப்பின்னை 'உம்மையொருத்தி இன்று ஆசைப்பட்டுக்கூப்பிடாநிற்க, அவளை நினையாதிருக்குமிதுவோ உம்முடைய க்ருபையாவது?' என்று அவர் ஸந்நிதியிலே சொல்ல வேணுமென்று, தனக்குப் பரமஸுஹ்ருத்துக்களாய்த் தன் முல்லைகளிலே வந்திருந்த தும்பிகளை நோக்கிச்சொல்லுகிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், என்னை நோவுபடுத்திப்போந்து எட்டாநிலத்திலே ஒலக்கமிருந்து வளையம்வைத்து போதுபோக்கி ஓரஞ்செய்கையோ நாம் தக்கோரானபடியென்று, திருநாட்டிலேசென்று எம்பெருமானுக்குச் சொல்லவேணுமென்று சில தும்பிகளைக்குறித்து அருளிச்செய்கிறாள்.

[தூமதுவென்று தொடங்கி] - நான் வளர்க்கிற முல்லைகளிலே வர்த்திக்கிற தும்பிகாள்! உங்களுடைய இனிய பேச்சுக்களோடே அங்கேசென்று, [பூமதுவுண்ணச்செல்லில்]-பூக்களில் மயூபாநம் பண்ணப்போகில், [வினையேனையென்று தொடங்கி]- என்னோடே ஸ்வப்நகல்பமான ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி விஶ்லேஷித்து, அத்தாலே க்ருதக்ருத்யனுய், திருக்குழலில் செவ்வியாலே மிகவும் மயூதாரைகள் பாயாநின்றுள்ள திருத்துழாயாலே அலங்க்ருதமான முடியையுடைய * அபர்வறுமமர்கள் தன்னுடைய

படி. அன்றிக்கே, 'ஸ்பர்ஶத்தோ டொத்ததிறே யெனக்கு தர்ஶநமும்' என்றபாடமாகில் - அவளோட்டை ஸ்பர்ஶம் உன்பக்கலிலே ஸத்வாரகமானுற்போலே. தர்ஶநமும் எனக்கு ஸத்வாரகமாயிற்றென்ற வாயுவை த்ருஷ்டாந்தீகரிக்கிறது. த்விதீயார்த்தத்தில், வாய்க்குத்தூய்மையேதென்ன - அற்றது இத்யாதிவாக்யத்வயத்தாலே: "ஷஷ்஠ாவிஶேஷணமேவதெ" என்ற த்ரௌபதிவார்த்தையாலே மாம்பழமானது கொம்பிலேயொட்டிற்றிறே. இந்த த்விதீயார்த்தத்தில், "தண்டெபமுண்ட" என்றத்தோடு தட்டுப்படுகையாலே, தத்பரிஹாரார்த்தமாக 'வார்த்தைசொல்லவல்லவாயைக்கொண்டு' என்கிறார். 'கூடியவண்டினங்காள் குருநாடுடை' என்றதொடங்கி, 'வாய்கள்கொண்டு - ஓடிவந்தென் குழல்மேலொளிமாமலரூதீரோ' இத்யந்தம். (ஈ)

acharya.org

அழகையும் குணங்களையும் கொண்டாட இருக்குமவனைக்கண்டு, போகத்தில் அபர்யாப்தியாலே வினையேன் என்கிறாள். பொய் - ஸ்நேஹிப்பாரைப்போலேகாட்டி வஞ்சிக்கை.

ப.—அநந்தரம், ஸுரிபோக்யமான வைலக்ஷண்யத்தையுடையவனைக்கண்டு, உம்முடையதகவுடைமையிதுவோ? என்று சொல்லவேணும் என்று சிலதும்பிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

என் - நான்வளர்த்துப்போருகிற, முல்லைகள் - முல்லைகளின், மேல் - மேலே வர்த்திக்கிற, தும்பிகாள் - தும்பிகாள்! தூ-தூய, மது - மதுவை நிரூபகமாகவுடைத்தான, வாய்கள் - வாய்களை, கொண்டு - கொண்டு, வந்து-வந்து, பூ-(அம்முல்லைகளில்) பூவின், மது-மதுவை, உண்ண-உண்ண, செல்லில் - செல்ல நினைத்திகோளாகில், (அவை வாடிக்கிடக்கிற அவஸ்த்தையிற்செல்லாதே), வினையேனை - விஸ்லேஷஹேதுவான பாபத்தையுடையேனான என்னை, பொய் - க்ருத்ரிமஸம்ஸ்லேஷத்தை, செய்து - பண்ணி, அகன்ற - அகன்றவனும், (இப்பிரிவுதானே செந்தலிப்புக்கு உறுப்பென்னலாம்படி), மா-பெருவெள்ளமான, மது-மது, வார் - ஒழுகுகிற, தண்-குளிர்ந்த, துழாய் - திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடி - திருமுடியையுடையனாய்க்கொண்டு, வானவர் - நித்யசூரிகளுக்கு, கோனை-நிர்வாஹகனாயிருக்கிறவனை, கண்டு-கண்டு, நுங்கட்கு-(இவ்வவஸ்த்தையிலே ஸந்நிஹிதங்களான) உங்களுக்கு, (அவனுடைய மேன்மைக்குத் தகுதியாம்படி ஸோபசாரமாக), யாம்-நாம், இதுவோ - இம்மேன்மைகொண்டாடி யிருக்குமதுவோ? தக்கவாறு - தகவுடையோமானபடி? என்னவேண்டுங்கண்டீர் - என்று சொல்லவேணுங்காணுங்கோள்! அப்போதிறே, என்னோபாதி இம்முல்லையும் செந்தலித்து மயூபாகம் பண்ணலாவது என்றுகருத்து.

இ.—நாலாம்பாட்டில், என்னை நோவுபடுத்திப்போய் எட்டாத நிலத்திலே ஒலக்கமிருக்கை தக்கோர்மையோ? என்று திருநாட்டிலேசென்று சொல்லுங்கோள்! என்று சில தும்பிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[என் முல்லைகள்மேல் தும்பிகாள் - தூமதுவாய்கள் கொண்டுவந்து] - நான் வளர்க்கிற முல்லைகளின்மேலே வர்த்திக்கிற தும்பிகாள்! இவள் உருவுகையாலே, பேணி நீர்வார்ப்பாரில்லாமையாலே உருவின முல்லைகளின் மேலே பட்டினிவிடுகிறவையிறே; என்னோடொக்க நோவுபடப் பிறந்த நீங்கள். என் பரிஸரத்தில் முல்லைகள் என்றுமாம். இவள் வர்த்திக்கிற எல்லையடங்கச் சருகாயிறே கிடக்கிறது. ஸுத்தமாய் இனிதான பேச்சுக்களைக்கொண்டு சென்று: வரவு செலவைக் காட்டுகிறது. [பூமதுவுண்ணச் செல்லில்] - மயூவ்ரதங்களாகையாலே பூவுள்ளவிடந்தேடி மயூபாகம் பண்ணப்போகக்கடவிகோளிறே; மயூவுள்ளது அங்கேயாகையாலே, பூக்களில் மயூபாகம் பண்ணப்போகில். [வினையேனைப் பொய்செய்தகன்ற] - "பிரியேன், பிரியிற்றரியேன்" என்ற பொய்யை மெய் என்று ப்ரமிக்கும்படியான பாபத்தைப் பண்ணின என்னை, "ராகோஷி நூஹி மாஷதெ" என்னுமவன் இரண்டுவார்த்தை சொல்லும்படியான பாபத்தைப்பண்ணினேன். [பொய்செய்து] - இந்திரஜாலமென்றும், கனவென்றும், கலவியென்றும் பர்யாயமிறே. [அகன்ற] - தன்பேருகக் கலந்து பொகட்டுக் கைகழியப் போனபடி. [மாமது வார் தண்டுழாய்முடி] - திருக்குழலில் செவ்வியாலே மிகவும் மயூதாரையை

acharya.org

யுடைத்தான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவன். [அகன்ற மாமதுவார் தண்டுழாய்முடி] - இவள் பரிஸரமடங்கச் சருகாய்க்கிடக்கப் பிரிவே நீராக அவன் வைத்த வலையம் மயூ சொரிகிறதிறே. [வானவர்கோனைக் கண்டு] - அவ்வழகை நித்யஸூரிகளை அநுபவிப்பித்துக் கொண்டிருக்கிறவனை. புதியாரை நோவுபடவிட்டு, பழையார்க்கு ஓலக்கங்கொடுத்துக்கொண்டு இராநின்றான்; "ஆயிகிஹ்ஸாவஹே" என்கிறவிது உக்திமாத்ரமாய் விட்டதிறே. [கண்டு] - நீங்கள் முன்பே காணப்பெறுகிறிகோளிறே. [யாமிதுவோதக்கவாறு] - நாம் தக்கோரானபடி இதுவோ? என்னுங்கோள். ஸ்த்ரீவயம் பண்ணிப்போந்து, பிரிவறியாத அந்தரங்கர்க்கு ஓலக்கங் கொடுத்து ஆந்ருஶம்ஸ்யங்கொண்டாடியிருக்கும்அதுவோ தக்கோர்மை! [என்னவேண்டுங்கண்டீர்]- அப்பேரோலக்கத்திலே பெரிய மதிப்பனைக்கண்டுவைத்து,"இப்படி சொல்லவேணுமோ?" என்னாதே இவ்வார்த்தை இத்தனையும் சொல்லவேணும். "வாவாயஉ்ஶவாவ்ஹி". [தூங்கட்கே] - கலந்துவைத்துப் பொகட்டுப்போனவனிற் காட்டில், ஆற்றாமையிலே முகங்காட்டின உங்களுக்கு இத்தனையும் செய்யவேண்டாவோ?

ஈடு.—நாலாம்பாட்டு. என்னைநோவுபடுத்திப்போய் எட்டாநிலத்திலே ஓலக்கமிருக்கை தக்கோர்மையோ? என்று திருநாட்டிலேசென்று சொல்லுங்கோள்! என்றுசில தும்பிகளைக்குறித்துச்சொல்லுகிறாள்.

[தூமதுவாய்கள்கொண்டேந்து] - பரிசுத்தமாய் இனிதானபேச்சை யுடைய வாயைக்கொண்டு சென்று. வந்தென்றது - சென்றேன்றபடி. ஆர்த்தர்க்கு உஜ்ஜீவநஹேது வாய் இனிதுமான பேச்சைக்கொண்டு. [என்முல்லைகள்மேல் தும்பிகாள்] - உடன்கேடராயோக்கப் பட்டினிவிட்டுக்கிடப்பாரைப் போலேயிறே நீங்கள் கிடக்கிறது. இவள்குழலில் பூவோடொக்க, உத்யாநத்திலுள்ள பூக்களும் சருகாயிறேகிடப்பது; "ஆவிவ்ருக்ஷாஃவரி ஶூநாஃ (அபிவ்ருக்ஷாஃபரிம்லாநாஃ) என்னுமாபோலே. [பூமதுவுண்ணச்செல்லில்] - மது வ்ரதங்களாகையாலே பூவுள்ளவிடந்தேடி மதுபாநம்பண்ணப்போகக்கடவிகோ ளிறே. இவள்பரிஸரத்தி லுள்ளவையிறே உருவிக்கிடப்பன; அங்குள்ளவையெல்லாம் செவ்வி பெற்றிருக்குமிறே; * மாமதுவார் தண்டுழாய்முடி வானவர்கோனிறே. அவர்களில் இவ

நாலாம்பாட்டு.—தூமது இத்யாதி. "தும்பிகாள்! வினையேனைப்பொய்செய்தகன்ற - வானவர்கோனைக் கண்டுயாமிதுவோதக்கவாறென்னவேண்டுங்கண்டீர்" என்கிறபதங்களைக் கடாகஷித்தவதாரிகை - என்னை இத்யாதி. தக்கோர்மை - தயை. தும்பியாவது - ப்ருங்கஜாதியில்அவாந்தரம்.

* தூய்மையும் இனிமையும் வாய்களுக்கில்லாமையாலே 'பேச்சையுடைய' என்று அர்த்தாந்தரசித்தம். "பூமதுவுண்ணச்செல்லில்" என்றிருக்கையாலே 'வாயைக்கொண்டுசென்று' என்றது. "இதுவோ தக்கவாறு?" என்றதுக்கநுகுணமாக "வாய்" என்றதுக்கு - பேச்சாக அர்த்தாந்தரமாதல்; "பரிசுத்தமாய்" இத்யாதிவாக்யவிவரணமாதல்; அன்றிக்கே, வார்த்தைக்குத் தூய்மையாவதேதென்னவென்கிற சங்கையிலேயாதல் - ஆர்த்தர்க்கு இத்யாதி. முல்லைகள்மேல் தும்பிகாளென்னாதே, "என் முல்லைகள்மேல் தும்பிகாள்" என்றுவிசேஷிக்கிறதுக்குபாவம் - உடன்கேடராய் இத்யாதி. ஒக்கப் பட்டினிவிடுவானென்? இவள்முல்லையில் மதுவில்லையோ? என்ன - இவள்குழலில் இத்யாதி. உத்யாநத்திலுள்ள பூக்களென்றது - இவள் பரிசாரத்திலுண்டானதோப்பில் பூக்களென்றபடி. இவள் பூ சருகானால் உத்யாநத்திற் பூ சருகாகவேணுமோ? என்ன - அபிவ்ருக்ஷா 'இத்யாதி. மதுவுண்ணச் செல்லவேணுமோ? என்ன - மதுவ்ரதங்கள் இத்யாதி. அவனுக்கும் விரஹதுக்கமுண்டாகையாலே அக்கு மதுவற்றியிராதோ? என்ன - இவள் பரிசாரத்தில் இத்யாதி. "செவ்விபெற்றிருக்கும்" என்

acharya.org

னுக்கு வாசி, கலித்தமுடியும்இட்டமாலையுமே யிறே. இங்குள்ள வண்டுகள்போலே பட்டினிகிடக்க வேண்டாவிறே அங்குள்ளார்க்கு. [மாமதுவார்தண்டுழாய்] - விரஹத்திலும் ஊற்றுமாறுதலிடங்காணும் அவ்விடம். [பூமதுவுண்ணச்செல்லில்] - இவள், தன்குழலிற் பூவும்வாடி மதுவும்வற்றினபின்பு இனி இவ்விபூதியிலுண்டாகமாட்டாதென்றிருக்கிறாள்; இனி விபூதிமான்பக்கலிலே யுண்டாகில் உண்டாமத்தனை யென்றிருக்கிறாள். [வினையேனை] - அவன் என்பக்கற் பேசின பேச்சுக்களையும் வ்யாமோஹத்தையும் ''மெய்'' என்றிருக்கும்படியான பாபத்தைப் பண்ணின என்னை. [வினையேனைப்போய்செய்து] - ''கடுகப்பிரியில்இடிவிழுந்தாற்போலே இவள்முடியும்'' என்றுபார்த்து, ''நின்னைப்பிரியேன், பிரியிலுமாற்றேன்'' என்றாற்போலேயிருக்க, அவன் பிரிவையுணர்த்தினான்; நான் அதுக்குத் தாத்பர்யம் அறியாமைகெட்டேன். அறிந்தேனாகில், போகாதபடி காற்கட்டலாயிற்றுக்கிடீர்! [போய்செய்து] - ஸம்ஶ்லேஷத்தில் அபர்யாப்தியிருக்கிறபடி. சிரகாலம்ஜீவிக்கச் செய்தேயும் ''ஒருஸ்வப்நமாய்ப்போயிற்று'' என்னக்கடவர்களாயிற்று, விஶ்லேஷத்தோடே வ்யாப்தமாகையாலே. கனவென்றும், இந்திரஜாலமென்றும், பொய்யென்றும் - அபர்யாப்தமான ஹோகத்தைச் சொல்லக்கடவது. [போய்செய்தகன்ற] - அகலுகைக்கு இட்டவழியிருக்கிறபடி. ''கலக்க'' என்று பேரையிட்டு, பர்யாப்தமாகக்கலவாதே வஞ்சித்துஅகன்ற. [மாமதுவார்தண்டுழாய்முடி] - இங்குள்ளதும் அங்கேயாகையாலே மயர்வு இரட்டித்திருக்குமிறே. தலையானமதுவுமே அதுதான். ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களில் ஒருபடிப்பட்டிருக்கும் அவனைக்கண்டு. [வானவர்கோனைக்கண்டு] - தந்தாமைப்பேணுவார்க்கு உடம்புகோடுத்

றதுக்குநிமாமகமேதென்ன - மாமதுவார் இத்யாதி: ''தண்டுழாய்முடி'' என்றவிசேஷணத்துக்கு பாவம் - அவர்களில் இத்யாதி. அதாவது - முடியுடையவரானாலும், திருத்துழாயோடேகூடின முடியில்லையென்றபடி. ''மாமதுவார்'' இத்யாதியைக்கடாக்ஷித்து, ''வானவர்கோன்'' என்றதுக்கு பாவம் - இங்குள்ள இத்யாதி. ''மா'' என்றதுக்குபாவமாதல், ''வார்'' என்றதுக்குபாவமாதல் - விரஹத்திலும் இத்யாதி. அவன்பக்கல்செல்லுகிறதென்? இவள்பரிசரத்திலில்லையாகிலும் இவ்விபூதியிலில்லையோ? என்ன - இவள்தன் இத்யாதி. பேசினபேச்சுக்களாவன - ''பேதைநின்னைப்பிரியேன்'' என்கிறபேச்சுக்கள். வ்யாமோஹமாவது - காலைக்கையைப்பிடித்துப் பரிமாறினவ்யாமோஹம். ''பேசினபேச்சு'' இத்யாதிகளையும், அத்தை ''மெய்'' என்றிருக்கும்ப்ரகாரத்தையும் விவரியாநின்று கொண்டு, பிரியநினைக்கிறவன் வெறுமனேபோகவொண்ணாதோ? இப்படிசொல்லிப்பிரியவேணுமோ? என்கிறசங்கையையும் பரிஹரிக்கிறார் - கடுகப் பிரியில் இத்யாதி. அறிந்தாற்செய்வது என்? என்ன - அறிந்தேனாகில் இத்யாதி. ''பொய்செய்து'' என்றதுக்கு - ''நின்னைப்பிரியேன்'' இத்யாதி மித்யா பாஷணங்களைப்பண்ணி யென்று கீழ் அருளிச்செய்து, அபர்யாப்தமானகலவியாக அர்த்தாந்தரம் - ஸம்ஶ்லேஷத்தில் இத்யாதி. ''ஸாஉஷாஸ்ரத ஸூஹழி' இத்யாதிப்படியே சிரகாலம்ஸம்ஶ்லேஷித்துப்பிரிந்தாள்'' என்றது பிள்ளான்நிர்வாஹமாயிருக்க, அபர்யாப்தமான கலவியென்கிறதென்? என்ன - சிரகாலம் இத்யாதி. ''பொய்'' என்று - அபர்யாப்தமானகலவியைச்சொல்லுமோ? என்ன - கனவென்றும் இத்யாதி. ஆனால், கலப்பானென்? என்ன - அகலுகைக்கு இத்யாதி. அதாவது - கலவியாலொழியப்பிரிவுகூடாமையாலே, துக்கப்படுத்துகைக்குஇட்டவழியென்றபடி. விவரணம் - கலக்கவென்று இத்யாதி. ''மாமது'' என்றதுக்குபாவம் - இங்குள்ளதும் இத்யாதி. ரஸோக்தி - தலையான இத்யாதி. இத்தால் பலிதம் - ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களில் இத்யாதி. ''வானவர்கோன்'' என்கிறவனுடையஹார்த்தபாவம் - தந்தாமை இத்யாதி. தந்தாமைப்பேணுகையாவது - அவன் இங்குவந்தால் ஸ்வாநுபவ விச்சேதம் வருமென்றிருக்கை. விவரணம் - த்வயி இத்யாதி. ''யாம்'' என்றதுக்கு

acharya.org

திருக்கும் அவனைக்கண்டு. "கூயிகிஞ்சித்ஸமாபந்நேகிம்கார்யம்ஸீதயாமம) என்றத்தைத்தலைர்ந்து, பழைய உறவுகொண்டாடியிருக்கிறவனைக் கண்டு. [யாம்] - ஸாபராதனுகையாலே தன்குற்றத்தை யநுஸந்தித்து, ஓலக்கமிருக்கிறானுகப் பராக்கடித்து அநபிபவநீயனுயிருக்கும்; முதன்மைகண்டு கூசாதே நின்று நம்மைக்காணு மென்பது. இப்படி சம்போதித்தவாறே முகம்பார்க்கவேண்டிவரும்; அவன் பார்த்த முகம் மாறுவதற்குமுன்னே, இதுவோ தக்கவாறு என்பது. "ஸூநுரஸ்ம்ஸ்யம்வரொயஶுஃ" (ஆந்ருஶம்ஸ்யம்பரோதர்மஃ) என்று சிலர்க்குச்சொல்லிவைத்தீரே. "தெநவஷ்ஶாஸுஶகாநு" (நைவதம்ஶாந்நமஶகாந்), "நஶாம்ஸ்ராவவொலாஜெநவாவிஶ்யாஸெவதெ" (நமாம்ஸம்ராகவோபுங்க்தேநசாபிமதுஸேவதே) என்றவையெல்லாம் வடிவிலே கண்டோமிறே. [இதுவோதக்கவாறு] - ஸ்த்ரீவதம்பண்ணி வளையம்வைத்து ஓலக்கங்கொடுத்திருக்கையோ தக்கோர்மையாவது? [என்னவேண்டேங் கண்டீர்] - இவ்வோலக்கத்தையும் இவன்மேன்மையையுங்கண்டு "இத்தையேங்நனே யழிக்கும்படி?" என்று நீங்கள் ஆந்ருஶம்ஸ்யங் கொண்டாடவொண்ணுது; அவ்வளவில் என்னைப்பார்த்துச்சொல்லுங்கோள். [நுங்கட்கே] - அவனல்லாத உங்களுக்கு இத்தனையும்

ப்ர.—[தூமதுவித்யாதி]—[வானவர்கோனைக்கண்டு]—ய॰ஶகாம்பெ[ச]
"கூயிகிஞ்சித்ஸமாபந்நேகிம்கார்யம் ஸீதயாமம॰ஸ்ரதெந ஶஹாவாஹொஶுணெந
யவீயஸா । ஶுஶ்ரூஷெநவஶுஶ்ரூஷுஶுசிரொணவாவ॰நஃ॥ரு॥"
[இதுவோதக்கவாறு]—ஸ॰ஜுரகாணெ [ந அ]வ்ரதிவ்யாணொஜ்ரு॰கம்
ஹந॰ஶ்ரேஷம்வ்ரதிவாயஸவ்ரதாஞ்ஜுயெநராமம்ஸம்வொயுஸீதா, "ஶ்ரதெகாக
ரொதெ ஶ்ரதஹாஸம்ஸமம் । கஸ்யாஷ்ரொமாஹரதஃக்ஷமெகஶ்ரீவதெ
॥ங॥ ஸக॰ஸ்ர॰ஷ்ரமெஹாதாஹகுவாம்யிநரஷுஹ । ஸூநுஶுஸ்ம்ஸ்யம்வரொ
யஶுஷுதவனவயாஸ்ரு॰தஃ॥ச॰॥

ஹார்த்தபாவம் - ஸாபராதனுகையாலே இத்யாதி. நம்மைக்காணுமென்றது - உம்மைக்காணுமென்றபடி. "தக்கவாறு-இதுவோ" என்கைக்கு. இவர் தயாளுவென்கிறவிடம் எப்படியறிந்தாள்? என்ன - அந்ருஶம்ஸ்யம் இத்யாதி. "ஸக॰ஸ்ர॰ஷ்ரமெஹாதாஹகுவாம்யிநரஷுஹ । ஸூநுஶுஸ்ம்ஸ்யம்வரொயஶுஷுதவனவயாஸ்ரு॰தஃ" இதி ஸுந்தரகாண்டே ஹநூமத்தம்ப்ரதி ஸீதா. சிலர்க்கு - பிராட்டிக்கு. "தக்கவாறு" என்று ஸ்வலாபமாக்கி, "மாமதுவார்தண்டுழாய்முடி" என்றத்தைக்கடாக்ஷித்து, உன் ப்ரணயித்வஸ்வபாவம்இதுவோ? என்கிறாள் - நைவ நம்ஸாந் இத்யாதி. "தெநவஷ்ஶாஸுஶகாஸுகீடாஸுஸ்ரீஷ்வாநு । ரமவொவநயெஷ்ரூதஷ்ட
தெநாஞ்ஜாதநா । நஶாம்ஸ்ராவவொலாஜெநவாவிஶ்யாஸெவதெ । வந்யாம்ஸ்ர
விஹிதம்நிதுஹ்கஶாகிவஹஶ்ரீ" இதி ஸுந்தரகாண்டே ஸீதாம்ப்ரதிமாருதி. [ங-சங]

வடிவிலே கண்டோமிறேயென்றது - * மாமதுவார்தண்டுழாய் முடியனுயிருக்கையைப் பற்ற. ச்ருபாபாமாக்கி, "வினையேனை" இத்யாதியைக்கடாக்ஷித்துபாவாந்தரம்-ஸ்த்ரீவதம் இத்யாதி. கீழே 'ஆந்ருஶம்ஸ்யம்' இத்யாதிவரையும் - இவ்வர்த்தசேஷமாகக் கண்டுகொள்வது. என்னுங்கோளென்னுதே, "என்னவேண்டுங்கண்டீர்" என்றதுக்கு பாவம்-இவ்வோலக்கத்தை இத்யாதி. "நுங்கட்கு" என்றதுக்குபாவம்-அவனல்லாத இத்யாதி. அவனல்லாதஉங்களுக்கு என்றது - நிர்க்குணனுனவனைப்போலன்றிக்கே

acharya.org

செய்யவேணும். இல்லையாகில், இவ்வளவிலேமுகங்காட்டின உங்களுக்கும் அவனுக்கும் வாசியில்லை. [நுங்கட்கே] - என்முல்லைகள்மேல் தும்பிகளன்றோ! உங்கள்ஜீவநம் நீங்களே நோக்கிக் கொள்ளவேணும்: அவன் ஸ்த்ரீவதம்பண்ணி ஸ்வரூபஹாநிபாராதேயோலக்கங் கொடுத்திருந்தான்; நான்பாடோடிக்கிடந்தேன்; இனி உங்கள்ஸ்வரூபஹாநி நீங்களே பரிஹரித்துக்கொள்ளுங்கோள். (ச)

ஐந்தாம் பாட்டு.

நுங்கட்குயானுரைக்கேன்வம்மின் யான்வளர்த்தகிளிகாள்!
வெங்கட்புள்ளூர்ந்துவந்து வினையேனெஞ்சங்கவர்ந்த
செங்கண்கருமுகிலைச் செய்யவாய்ச்செழுங்கற்பகத்தை
எங்குச்சென்றுகிலுங்கண்டு இதுவோதக்கவாறு? என்மினே.

ஆ.—(நுங்கட்கு.) - க்ரூராவலோகந காலநல ஈஷ ப்ரதிகூல ஜாலனான பெரியதிருவடி திருத்தோளிலே ஏறியருளி வந்து என்னோடே ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷிக்கிறபோது, அதிசீதளமாய் ம்ருதஸஞ்சீவநமானதிவ்யகடாக்ஷங்களாலும் அதிமதுரமான பணிமொழிகளினாலும் திருமேனியில் அழகாலும் ஆத்மஶாகரூபமான பரிஷ்வங்கத்தாலும் என்னுடைய மநஃ ப்ரப்ருதி ஸகல கரணங்களையும் அபஹரித்துக் கொண்டுபோனவனைத் திருநாட்டிலே சென்றுகிலுங்கண்டு, உம்முடைய தக்கவாறு இதுவோ? என்று சொல்லவேணுமென்று, தான்வளர்த்த கிளிகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், திருநாடாகவுமாம், மற்றேதேனும்அவனுகந்தருளின தேசங்களாகவுமாம், எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு தம்முடைய தக்கோர்மையிருக்கும்படி இதுவோவென்னுங்கோள்என்று, தன்னுடைய கிளிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[வெங்கட்புள்ளென்று தொடங்கி] - ப்ரதிகூலர்க்கு ஭யங்கரமான த்ருஷ்டியையுடைய பெரிய திருவடியை நடத்திக்கொண்டுவந்து, தன்னை விஶ்லேஷித்தால் ஶரியாதபடியான பாபத்தைப்பண்ணின என்னுடைய நெஞ்சை நிஶ்ஶேஷமாகப் பறித்துக் கொள்வதுஞ்செய்து, அத்தால் பிறந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே சிவந்த திருக்கண்களையுடையனுய் காளமேகம்போலே ஶ்ரமஹரமான திருநிறத்தையும் சிவந்த திருப்பவளத்

தயாளுக்களான உங்களுக்கு என்றபடி. விவரணம் - இல்லையாகில் இத்யாதி. த்விதியதாத்பர்யம் - என்முல்லைகள்மேல் இத்யாதி. ஏதத்விவரணமாதல், மூன்றும்பாவமாதல் - அவன்ஸ்த்ரீவதம் இத்யாதி. அதாவது - முல்லைகள்மேலே வர்த்திக்கிற என் தும்பிகளாகையாலே, என்விஷயமான வுங்கள் பாரதந்த்ர்ய ஹாநி வாராதபடி உங்களுக்கு ஜீவநமான என்னைநோக்குங்கோள் என்றபடி. பாடோடிக் கிடக்கை - ஒருவாக்காகப் படுத்துக்கொண்டிருக்கை. 'என்முல்லைகள்மேல் தும்பிகள்! பூமதுவுண்ணச்செல்லில் - தாமதுவாய்கள்கொண்டுவந்து - வினையேனை'யித்யாரப்ய, 'கண்டு - நுங்கட்கு-யாமிதுவோதக்கவாறென்ன வேண்டுங்கண்டீர்' என்றந்வயம். 'யாமிதுவோதக்கவாறு - நாம் இம்மேன்மைகொண்டாடியிருக்குமதுவோ தக்கோர்மை யுடையோமானபடி. தக்கோர்மை - தகுதி. என்னவேண்டுங்கண்டீர் - என்றுசொல்லவேணுங்காணுங்கோள்' என்றபடி.

(ச)

acharya.org

தையும் உடையனுய் அர்யித்தது கொடுக்கும் மாத்ரமன்றிக்கே, தானே அபேக்ஷிதங்கள் அறிந்துகொடுக்கும் விலக்ஷண கல்பகமுமாயிருந்தவனை. என்னை ஸர்வஸ்வஹரணம் பண்ணி, விஶ்லேஷிக்கிறஉஸுயிலே என்னை அநுநயிக்கைக்காக வடிவழகைக்காட்டிக் கண்ணுலே நோக்கி முறுவல்செய்து தன்னையும் தன்னுடைமையையும் எனக்காகத் தந்தவனுக்குஎன்றுமாம்.

ப.—அநந்தரம், உதார ஸ்வஹாவனுனவனை எங்கேனுமாகிலும் போய்க்கண்டு, இதுவோ தகுதியென்று சொல்லுங்கோள் என்று தான்வளர்த்த சிலகிளிகளைப் பார்த்துச் சொல்லுகிருள்.

(பிரிந்த அவன் பரிகரம்போலே செருக்கடியாதே), யான் - நான், வளர்த்த- (வளர்க்க) வளர்ந்த, கிளிகாள்-! வம்மின்-(அதிபரிசயத்தாலே அநாதரித்திராதே) வாருங்கோள்; யான்-(வளர்த்த உங்களாலே பயன் பெறவிருக்கிற) நான், நுங்கட்கு - (நானுண்டாகில் உண்டாம்படியான) உங்களுக்கு, உரைக்கேன் - (நீங்களே யறிந்துசெய்யும் காரியத்தைச்) சொல்லுகிறேன்; வெம் - ப்ரதிபந்தகங்களை யழலவிழிக்கும், கண் - கண்ணையுடைய, புள் - பெரியதிருவடியை, ஊர்ந்து - (தன்னுடைய த்வரைதோன்றும்படி) நடத்திக்கொண்டு, வந்து - (என்பக்கலிலே) வந்து, வினையேனை - இன்று பிரிந்திருக்கைக்கடியான பாபத்தையுடையேனை என்னை, (நானுமறியாதபடி), நெஞ்சங்கவர்ந்த - சித்தாபஹாரம் பண்ணினவனுய், (அவ்வபஹாரஹேதுவான அந்த), செம்-சிவந்த, கண்- திருக்கண்ணையும், கருமுகிலை - (அதுக்கு பரபாகமாய்ப் * பொன்மலையின்மீமிசைக் கார்முகில் போலே பெரியதிருவடி திருத்தோளிலே பொருந்தவிருக்கிற) காளமேக நிபமான ரூபத்தையுடையனுய், செப்ப - (நினைத்தது முடித்த ப்ரீதியாலே) சிவந்த, வாய்-அயர சோபையையுமுடையனுய், செழுங்கற்பகத்தை - (இவ்வழகைத் தன்பேருக அநுபவிப்பிக்கையாலே) விலக்ஷணகல்பகம்போலே மஹோதாரனுனவனை, எங்காகிலும் - பரவ்யூஹ விலவாதிஸ்த்தலங்களெங்கேனுமாகிலும், சென்று - சென்று, கண்டு-கண்டு, இதுவோ- இவளை சித்தாபஹாரம்பண்ணித் தனிமைப்படுத்தின இதுவோ, தக்கவாறு - தகுதி, என்மின் - என்று சொல்லுங்கோள்!

இ.—அஞ்சாம்பாட்டில், தன்னுடைய கிளிகளைக்குறித்து, எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு இதுவோ உம்முடைய தக்கோர்மையிருக்கும்படி யென்னுங்கோள் என்கிருள்.

[நுங்கட்கு] - "வனகுஂஷுஂவுஂலுஂவுஂஇஂநள" என்றிருக்கும் உங்களுக்கு. [யான்] - என் ஸர்வபாரங்களையும் உங்கள்மேலே வைத்திருக்கிறநான். [உரைக்கேன்]- என்காரியம் நீங்களே உணர்ந்து செய்யக்கடவிகோளாயிருக்க, வார்த்தை சொல்லுகிறது என் ஆற்ருமையாலேயிறே. [வம்மின்]-என்காரியத்துக்கு உபாயசிந்தை பண்ணியிருக்கிற உங்களுக்கு ஒருவிரகுசொல்ல வாருங்கோள். [யான்வளர்த்த கிளிகாள்] - அவன் பரிகரம்போலே செருக்கியிருக்கப்பிறந்திகோளோ நீங்கள்? ரக்ஷகர் தேட்டமான உஸுயிலே ரக்ஷணத்திலே ப்ரவர்த்தியாதே செருக்கடித்திருக்கலாமோ? தன்னைத் தோற்றி ரக்ஷ்யரக்ஷக நியதியற்றதிறே. [வெங்கட்புள்ளூர்ந்து வந்து] - ப்ரதிகூலர்க்கு பயங்கரமான த்ருஷ்டியையுடைய பெரிய திருவடியை நடத்திக்கொண்டுவந்து, வழியில் உண்டான ப்ரதிஷேத்யகங்களைப் போக்கவல்லனென்னுதல், ஏண்பாராதே பிரித்துக் கொண்டுபோனவனென்னுதல். "கத ஹுரு ஹுரு ஹுரு ஹுரு". [வினையேனை] - பிரிந்

acharya.org

தால் தரிப்பரிதான பாபத்தைப்பண்ணினவென்னை. [நெஞ்சங்கவர்ந்த] - நெஞ்சை நிஸ்ஸேஷமாக அபஹரித்த; நாட்டார்க்கு மநோவிகாஸஹேதுவான விஷயம் என்னெஞ்சை யழிக்கும்படியாவதே! [செங்கட்கருமுகிலை] - கண்ணாலே குளிரநோக்கி, மேருவைக் கிளிய வொரு காளமேகம் பணிந்தாற்போலே தன் வடிவைக்காட்டியாயிற்று நெஞ்சை அபஹரித்தது. [செய்யவாய்ச் செழுங்கற்பகத்தை] - அவ்வளவன்றியே, முறுவல்செய்து தன்னையும் தன்னுடைமையையும் எனக்காக்கியாயிற்று நெஞ்சை அபஹரித்தது. அன்றியே நெஞ்சை அபஹரித்தஹர்ஷத்தாலே திருக்கண்ணும் விகஸிதமாய், காளமேகம்போலே வடிவுங்குளிர்ந்து, அதுக்கு பரமாகுமாய்ச் சிவந்த திருப்பவளத்தையும் உடையனாய், தானே அபேக்ஷித்துத் தன்னைக்கொடுக்கும் விலக்ஷண கல்பகமாயிருந்தவனை. [எங்குச்சென்றாகிலுங் கண்டு] - கீழ், "வானவர்கோனைக் கண்டு" என்கையாலே, ஒலக்கத்திலன்றிக்கே ஏகாந்தஸ்தலத்திலே சென்றாகிலும் வார்த்தை சொல்லுங்கோள். அங்ஙனன்றியிலே, "ஈநெநெவஹிவெமெநமஷ்ஷாஷஸ்ரா லயழ" என்கிறபடியே, "பரமபதத்திலே கண்டிலோம்" என்று மீளாதே வ்யூஹவிபவாதிகள் எங்குற்றேதடியாகிலும் கண்டு சொல்லுங்கோள். [இதுவோ தக்கவாறென்மினே] - ஸ்வாநுபவமுண்டாகிலும் பாசுரமிதுவே. நீர்மைகொண்டாடி யிருப்பார்க்கு இதல்லது மர்மமில்லை; இத்தைச் சொல்லுங்கோள்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தன்னுடைய கிளிகளைக்குறித்து எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு, இதுவோ உம்முடையதக்கோர்மையிருக்கும்படி! என்னுங்கோளென்கிறாள்.

[நுங்கட்குயானுரைக்கேன்] - தனக்குமுன்னே ஆற்றாமையோடேயிறே அவையிருக்கிறது; ஆருக்குச் சொல்லும் வார்த்தையை யாருக்குச் சொல்லுகிறது? ஆற்றாமை சொல்லுவியாதது இல்லையிறே. [நுங்கட்குயானுரைக்கேன்] - உங்களுக்குச் சொல்லுமதல்ல; நான் சொல்லுமதல்ல. வ்யஸநத்துக்கு அபிமாநிகளிருக்க, வேறே சிலர் வார்த்தை சொல்லுமாபோலே. [வம்மின்] - "இவளை ஜீவிப்பித்தோமாம் விரகேதோ?" என்று சிந்திக்கிற உங்களுக்குஒருவிரகுசொல்ல வாருங்கோள். [யான்வளர்த்தகிளிகாள்] - என்வயிற்றிலே பிறந்த உங்களுக்கு அவன் பரிகரம் போலே சேருக்கடித்திருக்கக் காலமுண்டோ?

அஞ்சாம்பாட்டு.—நுங்கட்கு இத்யாதி. "எங்குச்சென்றாகிலுங்கண்டு" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - தன்னுடைய இத்யாதி.

"நுங்கட்கு" என்கிறஸ்வரத்துக்குபாவம் - ஆருக்குச்சொல்லும் இத்யாதி. அதாவது - என்னாற்றாமையைக்கண்டு என்கார்யத்திலே ஒருப்படாதிருப்பார்க்குச் சொல்லுமத்தை, அதிலே யொருப்பட்டிருக்கிற உங்களுக்குச்சொல்லவேணுமோ? என்றபடி. அப்படிசொல்லுகைக்கு இவற்றுக்காற்றாமையுண்டோ? என்ன - தனக்குமுன்னே இத்யாதி. முன்னேயிருக்கிற இந்தவாக்யம் - ஆருக்குச்சொல்லும் இத்யாதி வாக்யாந்தரம் அநுஸந்தேயம். ஆனால்சொல்லுவானென்? என்ன - ஆற்றமை இத்யாதி. "ஆருக்குச்சொல்லும்வார்த்தை" என்கிறதத்தை யநுவதித்துக் கொண்டு, "யானுரைக்கேன்" என்கிறஸ்வரத்துக்குபாவம் - உங்களுக்கு இத்யாதி. விவரணம் - வ்யஸநத்துக்கு இத்யாதி. வேறேசிலரென்றது - வேறேசிலர்க்கு என்றபடி. கிளிகள் வ்யஸநாபிமாநிகளாகையாலே வார்த்தைசொல்லவேண்டாதே தானே கார்யம்செய்யுமாகில், "வம்மின்" என்றழைப்பானென்? என்ன - இவளோ இத்யாதி. "யான்வளர்த்த" என்கிறதுக்குபாவம் - என்வயிற்றிலே இத்யாதிவாக்யத்வயம். அவன்பரிகரம்போலே என்றது - "வெங்கட்புள்" என்றத்தைக்கடாக்ஷித்து. 'உங்களுக்குச்

acharya.org

செருக்கடித்திருக்கப்பிறந்திகோளோ! [நுங்கட்கு] - "வனகுஷுஃவம்ஹுவஞ்ஜளை" (ஏகம்துகேம்ஸுகஞ்சநௌ) என்றிருக்கிற உங்களுக்கு. [யான்] - உங்கள்மேலே என் ஸர்வஹரங்களையும் வைத்திருக்கிற நான். [உரைக்கேன்] - நீங்களறியாததுண்டாய்ச் சொல்லுகிறேனல்லேன்; ஆற்றுமையாலே சொல்லுகிறேன். [வம்மின்] - முன் கை முக்காதமாய் இருக்கிறபடி. [யான்வளர்த்த] - *நெய்யமரின்னடிசில் நிச்சல்பாலோடும்ஊட்டி வளர்த்த. [கிளிகாள்] - "வளர்த்ததனுல்பயன்பெற்றேன்" என்கிறபடியே, அவன்திரு நாமங்களை நீங்கள் சொல்லக் கேட்டிருக்கவும் அமையுமிறே; அதுதானே "கண்ணன்நாமமே குழறிக்கொன்றீர்" என்கிறபடியே, ஆற்றுமைக்கு உடலாகையிறே யுங்களை அவன்பக்கல் போகவிடத் தேடுகிறது. [வேங்கட்புள் இத்யாதி] - வெவ்வியதான கண்ணையுடைத்தான புள்ளை நடத்திக்கொண்டுவந்து, வருகிறபோதே வழியில் ப்ரதிபந்தகங்களைப் போக்குகையிலே சினத்த கண்ணையுடையவன் என்னுதல்: அன்றியே, பிரித்துக்கோண்டு போகிறபோது கண்பாராதே பிரித்துக்கொண்டுபோன கொடுமையைச் சொல்லுதல்: "அக்ரூரஃ க்ரூரஹ்ருதயஃ" (அக்ரூரஃ க்ரூரஹ்ருதயஃ) என்னுமாபோலே. [வேங்கட்புள்ளூர்ந்துவந்து] - பட்டங்கட்டின ஆனையிலேயேறி அஹிமதவிஷயத்தைக் கிட்டும் ராஜபுத்ரனைப்போலே. "அருளாழிப்புட்கடவீ ரவர்வீதியோருநாள்" என்றிறே அடியில் தூதுவிட்டது, அப்படியே வந்தபடி. [வினையேனை] - அவனைப்போலே இரண்டுநெஞ்சு படைக்கப்பெறாத பாபத்தைப்பண்ணினேன்; ஸம்ஶ்லேஷத்தில்அழிகைக்கும், விஶ்லேஷத்தில் யரிக்கைக்கும் இரண்டு நெஞ்சுண்டாகப் பெற்றிலேன் [நெஞ்சங்கவர்ந்த] - நாட்டார்க்கு மநோவிகாஸ ஹேதுவான விஷயம் என்னெஞ்சை யழிக்கும்படியாவதே! ஸாரக்ராஹியாய்க் கோதையிட்டு வைத்துப்போனான்; பூக்கொண்டு புட்டில் போகடுவாரைப்போலே. அறமணத்திறே இவர் நெஞ்சிருப்பது; "பூசும்சாந்தென்னெஞ்சம்" என்னும்படி. [செங்கட்கருமுகிலை] - கண்ணாலே குளிரநோக்கி, வடிவைமுற்றாட்டாக்கி நின்றநிலை. அங்ஙனன்றிக்கே, இத்தலை

சொல்லுமதல்ல, நான்சொல்லுமதல்ல" என்றதுக்குஹேதுவருளிச்செய்வதாக மீளவும் பதோபாதாக பூர்வகமாக ஸப்தார்த்தம் - ஏகம்துகேம் இத்யாதி. "உங்களுக்குச்சொல்லுமதல்ல" என்றதுக்குஹேது வருளிச்செய்து, "நான்சொல்லுமதல்ல" என்றதுக்குஹேதுவருளிச்செய்கிறார் - உங்கள்மேலே இத்யாதி. "ஆற்றுமைசொல்லுவியாததில்லையிறே" என்றதை - "உரைக்கேன்" என்கிறபதத்திலே ஏறிட்டருளிச்செய்கிறார் - நீங்கள் இத்யாதி. கிளி கைமேலேயன்றோ இருப்பது; ஆயிருக்க, "வம்மின்" என்கிறதென்? என்ன - முன்கை இத்யாதி. "யான்வளர்த்தகிளிகாள்" என்ற சம்போதிக்கிறவளுடையஹார்த்தபாவம் - வளர்த்ததனுல் இத்யாதி. இது "முளைக்கதிரை" என்கிறபாட்டிலே. பயன் - ப்ரயோஜநம். கேட்டிருக்கவமைந்தால்போகவிடுகிறதென்? என்ன - அதுதானே இத்யாதி. அதுதானே - திருநாமந்தானே. கண்ணினுடையவெம்மைக்கு அடியை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - வருகிறபோது இத்யாதிவாக்யத்வயத்தாலே. இதுக்கு உதாஹரணம் - கக்ரூரஃ இத்யாதி. "கக்ரூரஃ க்ரூரஹ்ருதயஸ்ஸீவம்வ்ரோயதெஹயாநு । வனவாதபுரஹ்ரயொவிதாகூரவாகஹ்ரு நிஜாயதெ" இதி பஞ்சமேஸ்ஸேஅஷ்டாதஸே [ரு0]. "புள்ளூர்ந்துவந்து-நெஞ்சங்கவர்ந்த" என்ற கூட்டிபாவம் - பட்டங்கட்டின இத்யாதி. புள்ளூர்ந்துவரவேணுமோ? என்ன - அருளாழி இத்யாதி. "வினையேன்" என்றதுக்குஹார்த்தபாவம் - அவனைப்போலே இத்யாதி. விவரணம் - ஸம்ஶ்லேஷத்தில் இத்யாதி. சரீரத்தைவிட்டுநெஞ்சைக்கவருவானென்? என்ன - ஸாரக்ராஹி இத்யாதி. புட்டில் - பெட்டி. நெஞ்சு பூவானபடி யென்? என்ன - அறமணந்து இத்யாதி. இதுக்குப்ரமாணம் - பூசுஞ்சாந்து இத்யாதி. "செங்கட்கருமுகிலை" என்றதுக்கு - பூர்வபாவியாகவும் பரபாவியாகவும் அர்த்தத்வயம் - கண்ணாலே இத்யாதிவாக்யத்வயத்தாலே. முந்தினவர்த்தத்

acharya.org

யோடேவந்து கலந்தபின்பு, அத்தலைக்குவந்த பௌஷ்கல்பத்தைச் சொல்லவுமாம். அன்றிக்கே, பிரிவை ப்ரஸங்கித்துக் கண்ணுலே குளிரநோக்கி, அவன் விளைநீரடைத்துக்கொண்டு நின்ற படியாகவுமாம். [செய்யவாய்] - சாடுசேதங்கள் சொல்லப்புக்கு ஸ்மிதம்பண்ணுகிற வாய். [செழுங்கற்பகத்தை] - விலக்ஷணமான கல்பகத்தை: வைலக்ஷண்யமாவது தானே யபேக்ஷித்துத் தன்னைக்கொடுக்கை. கல்பகம் தன்னைக் கொடுக்கமாட்டாதே அபேக்ஷிக்க வும்மாட்டாதே; இவன்தன்னைக்கொடுக்க வல்லவனிறே. தான் கடக்கவிருந்தாலும் தன் விபூதித்வயத்தையும் நான் நினைத்தார்க்குக் கொடுக்கும்படி எனக்குத் தந்தவனை. [எங்குச் சென்றுகிலுங்கண்டு] - (''வானவர்கோனை'' என்றதிறே) ''ஆள் வாராநின்றது'' என்று கேட்டு ஓலக்கத்தைக் கிளப்பாக் கடக்கப்போய்த் திரைவளைத்துக் கொண்டிருப்பர். அன்றிக்கே, புகைபுக்கவிடமெங்கும் புகுங்கோள்; பரவ்யூஹவிபூவார்ச்சாவதாரங்கள்; '' யமாத்மாநவேத '' (யமாத்மாநவேத) என்றுளித்திருக்கும் இடமெங்கும்புக்கு. '' கநெநெநவஹிவெமெநமஶிஷ்யாஶிஸுராலயம்'' (அநேநைவஹிவேகேந கமிஷ்யாமிஸுராலயம்) என்கிறபடியே. ''பரமபதத்தில் கண்டிலோம்'' என்று மீளவோண்ணுதே. [இதுவோதக்கவாறென்மினே] - ஸ்த்தாநபேதம் உண்டானுலும் பாசுரமிதுவே. பிறர்நெஞ்சையும் அபஹரித்துத் தன்னெஞ்சையுங் கோண்டு கடக்கவிருக்கையோ தக்

ப்ர—[எங்குச்சென்றுகிலுங்கண்டு]—ஸுஹார்ணவாயணே, ''வாநராநுவாநரஸ்ரேஷ்஠ஸுஹ்ருதுவநநிவ்ரீக ।
யமாராவவநிஶுஶ்ரூஷுஸ்ஸுஸ்வஸநவிக்ரம: ॥சுகூ॥ மஹெக ஹ்ருஶிஷ்யாஶிஷ்டாம்ராவணவாஶிதாழி । நஹிஹ்ருக்ஷ்யாஶியதிகாம்ஷ்டாயாம்ஜநகாதஜாழி ॥ கநெநெநவஹிவெமெநமஶிஷ்யாஶிஸுராலயழ்॥சாஂ॥''

தில், ''கருமுகில்'' என்று - ஔதார்யம். மூன்றும்மாவம் - அன்றிக்கேபிரிவை இத்யாதி. வாயில் சிவப்புத்தோற்றுவது ஸ்மிதத்தாலே யென்னுமத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் - சாடு சதங்கள் இத்யாதி. வைலக்ஷண்யமாவது - வ்யாவ்ருத்தியென்றுவிவக்ஷிதம். இது கல்பகத்துக் கில்லையோ? என்ன - கல்பகம் இத்யாதி. ''செழுங்கற்பகம்'' என்றதுக்கு - ஸம்ஶ்லேஷதஶையில் தானேயர்த்தியாய்த் தன்னைக்கொடுக்குமென்று அருளிச்செய்து, விஶ்லேஷதஶையில் விபூதித்வயத் தையும் நான்நினைத்தார்க்குக்கொடுக்கும்படி எனக்குத்தந்தவனென்று, தாத்பர்யார்த்தம் - நான்கடக்க இத்யாதி. ''எங்குச்சென்றுகிலும்'' என்றதுக்கு முந்தினவர்த்தம் - பரமபதத்தில் ஓலக்கத்திலிராதே அந்தஃபுரத்திலே யிருந்தாலும் அக்கேசென்றுகிலும் என்று விவக்ஷித்து, ஓலக்கமாயிராதே ஏகாந்தமாக அவனிருக்கைக்குஹேதுவருளிச்செய்கிறார்-ஆள்வாராநின்றது இத்யாதி. இது-கீழிற்பாட்டில்''வானவர்கோனைக்கண்டு''என்றதுக்குச்சேரும் அர்த்தார்த்தம்-அன்றிக்கே புகைபுக்கவிடம் இத்யாதி. புகை புக்கவிடம்-ஈஶ்வரஸந்தமுள்ளவிடம். விவரணம்-பரவ்யூஹஇத்யாதி. கீழே, ''வானவர்கோனைக்கண்டு'' என்றவைத்து, இங்கே ''எங்குச்சென்றுகிலும்'' என்றதுக்கு ஹாவம் - கநெநெநவஹி இத்யாதி. ''நஹிஹ்ருக்ஷ்யாஶியதிகாம்ஷ்டாயாம்ஜநகாதஜாழி । கநெநெநவஹிவெமெநமஶிஷ்யாஶிஸுராலயழ்''இதி ஸுந்தரகாண்டே ப்ரதமே. அதாவது - ''பரமபதத்திலேகண்டிலோம்'' என்று மீளாதே, கநெநெநவஹிவெமெநமஶிஷ்யாஶிஸுராலயழ்என்றதிருவடி, பிராட்டியைலங்கை யிலேகண்டிலனுகில் இந்த வேகத்தோடே ஸ்வர்க்கத்தே போகிறேனென்றுற்போலே, நீங்களும் அவனி ருக்கிற ஸ்த்தலங்களெங்கும் போக்கோளென்றபடி. ஸ்த்தாநபேதத்தோபாதி வார்த்தையும் பேதித்திருக் குமோ? என்ன - ஸ்த்தாநபேத இத்யாதி அதாவது - க்ருபாஸ்வபாவம் ஓரிடத்திலும் பேதியா தென்றபடி. ''நெஞ்சங்கவர்ந்த'' என்றதற்கடாகவிக்ஷித்து, ''இது'' என்றதுக்கர்த்தம் - பிறர்நெஞ்

acharya.org

கோர்மையாவது? அவனுக்கு ஆந்ருஶம்ஸ்யமில்லை யென்கையாவது - ஶர்மியை யில்லை யென்கை யிறே. ஶர்ம்யநுப்ரவிஷ்டையான க்ருபையும் எங்கள்பக்கல் காணுமையாலே தமக்கு அதுவுமில்லையென்று சொல்லுங்கோள். நீர்மைகொண்டாடியிருப்பார்க்கு இதல்லது மர்மமில்லை; இத்தையே சொல்லுங்கோள். (ரு)

ஆறும் பாட்டு.

என்மின்னுநூல்மார்வன் என்கரும்பேருமான்என்கண்ணன்
தன்மன்னுநீள்கழல்மேல் தண்துழாய் நமக்கன்றிநல்கான்
கன்மின்களென்றுஉம்மையான் கற்பியாவைத்தமாற்றஞ்சொல்லி
சென்மின்கள்தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே!

ஆ — (என்மின்னுநூல்மார்வன்.) - இதுவோ தக்கவாறென்று சொல்ல வேணுமென்று தான் வளர்த்த பூவைகளை யபேக்ஷிக்க, பின்னையும் அவை போகாதிருந்தவாறே, "நம் அபேக்ஷிதம் அவன்செய்தருளாவிடிற் செய்வதென்?" என்று போகாதிருந்தனவாகக்கொண்டு, ஸ்வகிய அலங்க்ரியை திவ்யபூஷண பூஷிதமான திவ்யரூபத்தையும் தன்னையும் எனக்கே போக்யமாகப் பரிகல்பித்துக்கொண்டிருக்கிற என்கண்ணன், தன் மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்; ஆதலால் ஈண்டச்செல்லுங்கோளென்கிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், ஆஶ்ரிதரோடு ஏகாஸனுகையாலே நம்அபேக்ஷிதங்கள் செய்வானொருவன்; அவன்பாடே சென்று, இதுவோ தக்கவாறுஎன்று அவனுக்குஅறிவியுங்கோளென்று சில பூவைகளைக் குறித்துச்சொல்லுகிறாள்.

[என்மின்னுநூலென்று தொடங்கி] - தன்னுடைய திருமார்வில் விளங்குகிற திருயஜ்ஞோபவீதத்தையும் தன்திருநிறத்தையுங் காட்டி என்னை அடிமைகொண்டு எனக்கு ஸ்நேஹியான க்ருஷ்ணனுய் ஆஶ்ரிதர்இருந்தவிடத்தளவும் செல்லுமதான தன் திருவடிகளில் மன்னின திருத்துழாயில் செவ்வி நமக்கல்லது வேறொருவர்க்கும் கொடான். [கன்மின்களென்று மேலுக்கு] - என்கருமம் நானே தலைக்கட்டவேண்டி, இதுக்கு உங்களைத் தூதாகவிடவேண்டும்படியான பாபத்தைப் பண்ணின நான் வளர்த்த சிறுபூவைகாள்! இதுவோ தக்கவாறென்று உங்களைக் கற்பித்துவைத்த பாசுரங்களைச் சொல்லிச் செல்லுங்கோள்.

ப.—அநந்தரம், ஸர்வப்ரகாரலவ்யனான க்ருஷ்ணன்திருவடிகளில் திருத்துழாய் நமக்கன்றித் தாரான்; நான்உங்களைக் கற்பித்துவைத்த வார்த்தைகளைச் சொல்லுங்கோளென்று தான் வளர்த்த சிலபூவைகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

சையும் இத்யாதி. பலகாலும் "இதுவோ தக்கவாறு" என்றதுக்கு பாவத்தை யிரண்டுவகையாகஅருளிச்செய்கிறார் - அவனுக்காந்ருஶம்ஸ்யம் இத்யாதியாலும், நீர்மைகொண்டாடி இத்யாதியாலும். விவரணம் - ஶர்ம்யநுப்ரவிஷ்டையான இத்யாதி. தக்கோர்மை - தயை. இதுவோ தக்கவாறென்மினே - நெஞ்சையபஹரித்துக் கடக்கவிருக்கையோ தகவுடையபடியென்று சொல்லுங்கோளென்று ஸப்தார்த்தம். தக்கவாறு - தகவுடையபடி; தயையுடையபடி. க்ரமேணுக்வயஃ. (ரு)

acharya.org

தீ-(நான் உங்கள் காரியம் செய்கையன்றியே உங்களைக்கொண்டு காரியங்கொள்ள வேண்டும்படி) க்ரூரமான, வினையேன் - (பாபத்தையுடையேனான) நான், வளர்த்த - வளர்த்த, சிறு-முக்யமான, பூவைகளே - பூவைகாள்! என் மின்னுநூல்மார்வன் - திருமேனிக்கு பரபாகமாம்படி மின்போலே விளங்குகிற திருயज्ञோபவீதத்தையுடைய திருமார்பை என்னை யநுலவிப்பித்தவனும், என் கரும் பெருமான் - (இவ்வவயவசோபா மாத்ரமன்றியே ஸமுதாயமான) ஸ்யாமளவிக்ரஹத்தை எனக்கநுபவிப்பித்து என்னை யடிமைகொண்ட ஸ்வாமியானவனும், என் - எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் நியமிக்கலாம் படி லவ்யனான, கண்ணன் - க்ருஷ்ணனானவன், தன் - தன்னுடையதாய், நீள்-ஆஶ்ரித நிருந்தவிடத்தளவும் செல்லும், கழல் - திருவடிகளின், மேல்-மேலே, மன்னு-மன்னின, தண்-ஸ்ரமஹரமான, துழாய் - திருத்துழாயை, நமக்கு - நமக்கு, அன்றி - அன்றி, நல்கான் - உகந்து (வேறொருவர்க்குக்) கொடான், கன்மின்கள் - கற்கும்படியிருங்கோள்! என்று - என்று, உம்மை - (முக்யமாய்ச் செருக்கடித்திருக்கிற) உங்களை, (நிர்ப்பந்தித்து), யான் - (உங்களைக்கொண்டு காரியங்கொள்ளவிருக்கிற) நான், கற்பியாவைத்த - ("என் மின்னுநூல்மார்வன்" என்று தொடங்கி "நல்கான்" என்றஇடமீறாகக்) கற்பித்துவைத்த, மாற்றம் - வார்த்தையை, சொல்லி - சொல்லி, சென்மின்கள் - செல்லுங்கோள்!

இ.—ஆரும்பாட்டில், ஆஶ்ரிதரோடு ஏகாஸனகையாலே நமக்கு அபேக்ஷிதங்கள் செய்யும் அவன்பாடேசென்று, இதுவோ தக்கவாறு என்னுங்கோளென்று சில பூவைகளைக் குறித்துச்சொல்லுகிறாள்.

[என்மின்னுநூல்மார்வன்] - மேவத்திலே மின்னினாற்போலே சாத்தின திருயज्ञோபவீதத்தைக் காட்டி, என்னை அகங்கார்ஹையாக்கினவன். [என் கரும் பெருமான்]- அதுக்கு பரபாகமான வடிவை எனக்காக்கி என்னை அடிமைகொண் டவன். [என் கண்ணன்] - இங்ஙன் பிரித்துச்சொல்லவேண்டாதபடி தன்னை எனக்குக் கையாளாக்கினவன். [தன்மன்னுநீள் கழல்மேல் தண்துழாய் நமக்கன்றி நல்கான்] - அவனுடைய ஐகரஸ்யம் சொல்லுகிறாள். ஆஶ்ரிதர் இருந்தவிடத்தளவும் செல்லும் திருவடிகள் என்னுதல்: அளவிறந்த போக்யதையையுடைய திருவடிக ளென்னுதல். திருவடிகளிலே பொருந்தி ஸ்ரமஹரமான திருத்துழாயில் செவ்வி நமக் கல்லதுகொடான். இனியதுகண்டால் "ஸ்வார்யம்" என்றிராதே "ஹகாநாடி" என்றிருக்குமவன். அதாகிறது-ஆஶ்ரிதரோடு ஏகாஸனயிருக்கை. [கன்மின்களென்று]- நீங்கள் அபேக்ஷியாதிருக்க, நான் சொல்லுங்கோள் என்று, [உம்மை யான்] - ரக்ஷ்ய யங்களான உங்களை, ரக்ஷகையான நான், [கற்பியாவைத்த மாற்றம்] - கற்பித்துவைத்த மாற்றம். "தண்துழாய் நமக்கன்றி நல்கான்" என்கிற மாற்றத்தை யென்னுதல்: "இதுவோ தக்கவாறு" என்று கற்பித்த மாற்றத்தை என்னுதல். [சொல்லிச்சென் மின்கள்] - அவனுக்கு மறுமாற்றத்துக்கு அவகாசமில்லாதபடி "கிட்டினால்" என் றிராதே வழியே பிடித்துச் சொல்லிக்கொண்டு செல்லுங்கோள். [தீவினையேன் வளர்த்த சிறுபூவைகளே] - என்காரியம் நானே தலைக்கட்டவேண்டி, இதுக்கு உங்களைத்தூதாக விடவேண்டும்படி பாபத்தைப் பண்ணினேன். நானும் அவனுங்கூட உங்களுக்கு ஆலி மதம் தேடித்தருகையொழிய, என் அஹிமதத்துக்கு உங்களைப் போகவிடும்படியான பாபத்தைப் பண்ணினேன் என்றுமாம்.

acharya.org

ஈடு.— ஆறும்பாட்டு. ஆஶ்ரிதரோடு ஏகரஸனாகையால் நம் அபேக்ஷிதங்கள் செய்யுமவன்பாடே சென்று, இதுவோ தக்கவாறென்னுங்சோலோன்று சிலபூவைகளைக் குறித்துச்சொல்லுகிறாள்.

[என்மின்னுநூல்மார்வனித்யாதி] - தன்திருமேனியிலே சாத்தச்செய்தே என்னெஞ்சிலே இட்டாற்போலே ப்ரகாசிக்கிற திருயஜ்ஞோபவீதத்தைக்காட்டி என்னை யநந்யார்ஹையாக்கினவன். என் சரக்கானவன் கடக்கவிருக்குங்காட்டில் என்சரக்கைப் பிறர்க்காக்குமோ? [என்மின்னுநூல்மார்வன்] - திருயஜ்ஞோபவீதத்திலழகை ஸ்மரிப்பித்து என்னெஞ்சில் இருளையறுத்தவன். தன்திருமார்வில் சாத்தினநூலைக்காட்டி என்னை நூலிலே வரப்பண்ணினான். [என்கரும்பெருமான்] - மேகத்திலேமின்னினாற்போலே அந்தத் திருயஜ்ஞோபவீதத்துக்குப் பரஹாரமானவடிவை எனக்காக்கி என்னையடிமைகொண்டவன். [என்கண்ணன்] - இப்படிகளாலே என்னைச்சேர்த்துத் தன்னை எனக்காக்கினவன். என், என், என் என்று பதங்கள்தோறும் சொல்லுகையாலே - ஒப்பனையழகிலும், வடிவழகிலும், ஸௌலப்யத்திலும் தனித்தனியே ஈடுபட்டபடி. [தன்மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்]-எல்லாஞ்செய்தாலும், "ஶரணாகதி" (பக்தாநாம்) என்றிருக்கிறத்தைப் பிறர்க்குஆக்கான். இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டிறேஇது. ஆஶ்ரித பரதந்த்ரனாகையாலே, "ஆஶ்ரிதர்க்கு ஸ்வம்மான பின்பு அறிவிக்கவரும்" என்று ஐகரஸ்யம்பற்றாசாகத் தூதுவிடுகிறதிறே. [தன்-நீள்கழல்மேல்-மன்னு - தண்டுழாய் நமக்கன்றிநல்கான்] - ஹோக்யதையளவிறந்த திருவடிகளிலே பொருந்தி ஶ்ரமஹரமான திருத்துழாயை ஸர்வதா பிறர்க்கு ஆக்கான். "மயிஜீவிதமாயத்தம்ராக வஸ்யமஹாத்மந:" - தம்மையும் தம்முடைமையையும் எனக்காக்கினவர். இதுதான் தன் ஸ்வபாவங்கொண்டு சோல்லுகிறாளல்லள்; அவர் ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே சோல்லு

ஆறும்பாட்டு.—என் இத்யாதி. "தண்டுழாய்நமக்கன்றிநல்கான்" என்றதைப்பற்ற- ஆஶ்ரிதரோடு இத்யாதி. "கற்பியாவைத்த" என்றதைப்பற்ற - இதுவோதக்கவாறு என்றது.

"என்" என்றதை மின்னுநூலோடேகூட்டிபாவம் - தன்திருமேனியிலே இத்யாதி. "என்" என்றதை "மார்வன்" என்றதோடேகூட்டிபாவாந்தரம் - என்சரக்கானவன் இத்யாதி. என்சரக்கையென்றது - தண்டுழாயை. "மின்னு" என்றதுக்கு பாவம் - திருயஜ்ஞோபவீதத்தில் இத்யாதி மூன்றும்பாவமாதல். கரு - தன்திருமார்வில் இத்யாதி. நூலிலேவரப்பண்ணினான்-சாஸ்த்ரவஸ்யனாக்கினான். நூல் - சாஸ்த்ரம். கீழ்ப்பதத்தையுங்கூட்டி, "என்கரும்பெருமான்" என்றதுக்கு பாவம் - மேகத்திலே இத்யாதி. இப்படிகளாலே யென்றது - ஒப்பனையழகு, வடிவழகுளாகிறபடிகளாலேயென்றபடி. "என், என், என்," என்கிறபதாவ்ருத்திக்குபாவம்- என்னேன்னேன்னேன்று இத்யாதி. உபேக்ஷித்திருக்கிறவனை - "நமக்கன்றிநல்கான்"என்பானென்? என்ன - எல்லாம்செய்தாலும் இத்யாதி. ப்ராஸங்கிகம் - இத்திருவாய்மொழிக்கு இத்யாதி. "பக்தாநாம்" இத்யாதிவாக்ய விவரணம் - ஆஶ்ரித இத்யாதி. "நமக்கன்றிநல்கான்" என்கிறவ்யதிரேகோக்தியாலே - நமக்கே தருமென்றவிதம். திருத்துழாயைச்சொன்னது, விக்ரஹாதிகளுக்கும் உபலக்ஷணம். "ஆஶ்ரிதபரதந்த்ரம்" என்றதுக்குஸம்வாதம் மயிஜீவிதம் இத்யாதி. "மயிஜீவிதமாயத்தம்ராக வஸ்யமஹாத்மந:। ஶ்ரீராமேணாஸ்மிஹோவாஹோ தஸ்யராஜகுலஸ்யச" இதி ஸுந்தரகாண்டே ஹநூமந்தம் ப்ரதி வதா(37 57:)ஸ்லோகத்துக்கெல்லாம்பாவம்-தம்மையும் இத்யாதி. "மஹாத்மந:" என்றதுக்கர்த்தம் இதுதான் இத்யாதி. தன்ஸ்வபாவமாவது - ஸௌந்தர்யாதிஸ்வபாவங்கள். அவன்ஸ்வபாவமாவது- க்ருபா ப்ரணயித்வங்கள். ஆஶ்ரிதர்க்குக்ருபையாலே ஸவ்யஞ்ஜனமென்கைக்குஸம்வாதம்-கிம்புந: இத்யாதி.

acharya.org

கிறாள்; "கிம்வா நமுபியொஜநம்" (கிம்புநர்மத்விதோஜநம்) - என்றவிடத்துக்குச் சொல்லுவதொரு வார்த்தையுண்டிறே. அருளாளப்பெருமாளெம்பெருமானுருடைய அந்திம தசையிலே, "திருவுள்ளத்திலோடுகிறதேன்?" என்ன, "ஒருபக்ஷி பெருமாளுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தினபடியேன் என்றுகிடந்தேன் என்றார்" என்று. இதுக்குக்கருத்தாகப் பிள்ளையருளிச்செய்யும்வார்த்தை - "நாம் பண்ணின சரணாகதியாகையாலே மலத்தோடு அவ்யபிசாரியாகமாட்டாது; இனி ஶரண்யன்நீர்மையிலேற்றத்தாலே நமக்கொருகுறையில்லை யென்கிறது" என்று. (பெருமாளைப்புண்படுத்துகையாவது - ஸ்ரீவிபீஷணாழ்வானை ஶரணாகத்யநந்தரத்திலே கைக்கொள்ளாமல், "வஜ்ரதாடி" [வத்ய.தாம்] என்று அல்பம் தாமஸம் பிறக்கையாலே, "கபோதத்தோபாதி நாம் ரக்ஷிக்கப்பெற்றிலோம்" என்றிருக்கை.) [நமக்கன்றிநல்கான்] - தனித்து, இனியது ஆஸ்ரிதரையொழிய புஜிக்கமாட்டான். [கன்மின்களென்றும்மை யான் கற்பியாவைத்த] - நெஞ்சொழிந்தபோது, தனக்கு யோகமான வற்றைக் கற்பித்துவைக்கும். நம்முதலிகள் ஓரோஸந்தாநங்களாக "சிறியார், பெரியார்" என்னாதே த்வயத்தை யப்யஸிப்பித்துவைக்குமாபோலே. ரக்ஷ்யங்களான வுங்களை, ரக்ஷகையான நான், கற்பியாவைத்த - அப்யஸிப்பித்துவைத்த. [மாற்றம்] - அதாகிறது "நமக்கன்றிநல்கான்" என்று எல்லாவவஸ்த்தையிலும் உங்களுக்கு நான் சொல்லிவைக்கும்அதாதல்; "இதுவோதக்கவாறென்று சொல்லுங்கோள்" என்றதாதல். [சொல்லிச்சென்மின்கள்] - வழிக்கு பாஷேயங் காணுமது, அங்கேபோனால் சொல்லப்பார்த்திராதே கிடி

ப்ர.—யாஜகாணை [கஅ] கூயவூடாநவூகூரணை, "ஞுகூயகெ ஹி கூவொகெநஶ்ரூணாமதஃ। சுஹிதஶ்யயாநூயாயம்வெஶ்ரூசாம்வெ நிபூஜ்ஜி தஃ॥ உசஃ॥ ஸஹி தம் வூதிஜஹ்ராஹமாரூயாஹ்ஹதபூரூசாமதஃ। கூவொ தொவாநரூஷ்ஷ கிம்வா நமுபியொஜநஃ॥ உரு॥

"ஸஹி தம்வூதிஜஹ்ராஹமாரூயாஹ்ஹதபூரூசாமதஃ। கூவொதொவாநரூஷ்ஷ கிம்வா நமுபியொஜநஃ" இதி யுத்தகாண்டே அபயப்ரதாநப்ரகரணே. புண்படுத்தினபடியென்றது - ஒருநாயக்கு தன்னையழியமாறி இப்படி ரக்ஷித்தால், நாம் "ப்ராணாந்பரித்யஜ்ய" என்னும தொழிய, சேதநனுனவாசிக்கேற்றமாக ஒன்று செய்யப்பெற்றிலோமென்று புண்படுத்தினபடி யென்றபடி. 'நாம்பண்ணின' இதயாதிக்குக்கருத்து - ஶரணாகதாநுகூல்யாதிகளாலன்றிக்கே சரண்யமான கபோதகுணதிசயத்தாலே பலசித்தியானாற்போலே, நமமுடைய ஆநுகூல்யஸங்கல்பாதிகளாலன்றிக்கே சரணயகுணதிசயத்தாலே பலிக்குமென்று. அவ்யபிசாரியாகமாட்டாது - பலத்தோடே கூட்டுவிக்கமாட்டாதென்றபடி. நல்குதல்- கொடுத்தல் என்றர்த்தமாக்கி, பிறர்க்காக்கான் என்றாகிழ்; இங்கே நல்குதல், ஸ்நேஹித்தலாக அர்த்தாந்தரம் - நனித்துஇனியது இத்யாதி. இப்பக்ஷத்தில் ஶப்தார்த்தம் - நம்மையொழியவிரும்பானென்று. அன்றிக்கே, ஐகாரஸ்யமாவதேதென்ன-நனித்துஇனியது இத்யாதி என்னுதல். இவளுக்குக் கற்பிக்க அவஸரமுண்டோ? என்ன - நெஞ்சொழிந்த இத்யாதி. நெஞ்சொழிந்தபோது - நெஞ்சஸ்வஸ்த்தமானபோதென்றபடி. இதுக்குத்ருஷ்டாந்தம் - நம்முதலிகள் இத்யாதி. ஸந்தாநங்களாகவென்றது - புத்ரபௌத்ராதிகளெல்லார்க்கு மென்றபடி. "மாற்றம்" என்றது - ஐகாரஸ்யமாதல் க்ருபையாதல். "சொல்லிச்சென்மின்கள்" என்றதுக்குபாவம் - வழிக்கு இத்யாதி. பாவார்த்தம் - அங்கேபோனால் இத்யாதி. அதாவது - அவன் வைலக்ஷண்யத்தைக்கண்டால் வாயெழாதேபோகிலும்போம்; ஆகையாலே ப்ரஹ்மதமாகச்சொல்லிக்கொண்டுபோங்கோளென்றபடி. அவனிடக்கிடக்கோளென்றது - நீங்கள் அங்கேபோகிறது, நான்சொன்ன வார்த்தையைச்சொல்லு

acharya.org

கோள். (அவனுக்கு மறுமாற்றத்துக்குஅவகாசமில்லாதபடி) போகிறபோதே சொல்லிக்கொடு போங்கோள். [தீவினையேன்] - அவைகிடக்கிடுங்கோள்; என்னுடையபாபமிருந்தபடி பாருங்கோள், புத்ரவிக்ரயரோபாதியானேன். அவனும் நானும் கூடவிருந்துஉங்களைக் கொண்டாடுகையன்றிக்கே, உங்களைக்கொண்டு கார்யங்கொள்ளும்படியான பாபத்தைப் பண்ணினேன். வயிற்றிற்பிறந்தாரை யிடுவித்து அஹிமதனையழைத்துக்கொள்ளுகையோபாதி புன்மையில்லையே. (௬)

ஏழாம் பாட்டு.

பூவைகள்போனிறத்தன் புண்டரீகங்கள்போலுங்கண்ணன்
யாவையும்யாவருமாய் நின்றமாயனென்னுழிப்பிரான்
மாவைவல்வாய்பிளந்த மதுசூதற்கென்மாற்றஞ்சொல்லி
பாவைகள்!தீர்க்கிற்றிரே வினையாட்டியேன்பாசறவே.

ஆ — (பூவைகள்.) - நான்வளர்த்த சிறுபூவைகளினுடைய நிறம்போலே யிருந்த திருநிறத்தையும், புண்டரீகங்கள் போன்றிருந்த கண்களையும், அக்கண்களாலே ஸுசிதமான சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களினுடைய நியமநரூபாஶ்சர்யத்தையும், என்னைத்தோற்பித்து அடிமையாக்கின திருவாழியையேந்தின அழகையும், திருக்கைத் தழும்பாலே ஸுசிதமான மதுகைடபாதி ப்ரதிகூல நிரஸந திவ்யசேஷ்டிதங்களையும் அடையாளமாகவுடையனுயிருந்த எம்பெருமானுக்கு என் மாற்றஞ்சொல்லி என்னிழவை நீங்களேதீர்க்கத் தீருமத்தனை; என்னுலொரு செயலில்லையென்று, தன்னுடைய நிரவதிக வ்யஸநத்தாலே கலங்கித் தன்பாவைகளை ப்ரார்த்திக்கிருள்.

ஒ.—ஏழாம்பாட்டில், "சேதநங்களை ஈஶதப்ரேஷணம் பண்ணினவிடத்தில் கார்யகரமாகாதே, எம்பெருமான் தைவிட்டாற்போலே கைவிடுகைக்கு ஹேது சேத நங்களாகையோ?" என்று பார்த்து, அசேதநமான பாவைகளை, என்னுஹ்வேத்தைக் கெடுக்கவல்லிகோளே என்று ப்ரார்யிக்கிருள். [பூவைகளென்று தொடங்கி] - நிரதி ஶயலோக்யனுய் ஸர்வாந்தராத்மாவாய்நின்றுவைத்து தடுத்தொடுவெஷொரஸம்ஸ்ப்ருஷ்ட னுகையாகிற ஆஶ்சர்யத்தையுடையனுய் கையுந்திருவாழியுமான அழகாலே என்னைத் தோற்பித்து அடிமைகொள்வதுஞ் செய்து, ஆஹ்ரிதவிரோயிகளைப்போக்கும் ஸ்வஹாவ னுனவனுக்கு. [வினையாட்டியேன்] - உங்களைக்கொண்டு கார்யம் தலைக்கட்டவேண்டும் படியான பாபத்தைப் பண்ணினேன். முதலிலே உங்களைப் பற்றுமைக்கடியான பாபத் தைப்பண்ணினேன் என்றுமாம். பாசறவென்பது - வைஶ்யஈக்களோடு பற்றுதல் என்று மாம்.

மது, அவன்வருமது, இதெல்லாம் கிடக்கிடுங்கோளென்றபடி. "தீவினையேன்" என்றதுக்கர்த்தார் தரம் - அவனும் இத்யாதி. "புத்ரவிக்ரயரோபாதி" இத்யாதி வாக்யவிவரணம் - வயிற்றில் இத்யாதி! ஏகார்த்தமாதல். தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே, என்மின்னுநாலென்று தொடங்கி, சென்மின் கள் இத்யந்வயம். (௯)

acharya.org

ப.—அநந்தரம், அமிருபனுய் அகிலாத்மபூதனுய் ஆஸ்ரிதவிரோதி நிவர்த்தக னுனவனுக்கு என் வார்த்தையைச் சொல்லி என் வைவர்ண்யத்தைத் தீர்க்கவல்லி கோளோ? என்று தன்னுர்த்தயதிமயத்தாலே "அசேதநங்கள்" என்று பாராதே சில பாவைகளைக்குறித்துச் சொல்லுகிருள்.

பூவைகள்போல்- பூவைப்பூக்கள்போலே (ஹர்ஷநீயமான), நிறத்தன்-நிறத்தை யுடையவனுய், (அதுக்குபரபாகமாம்படி), புண்டரீகங்கள்போலும் - புண்டரீகங்கள் போலேயிருக்கிற, கண்ணன் - கண்களையுடையனுய், (இவ்வஸாதாரணவிக்ரஹத்தளவன் றியே), யாவையும் - ஸகலாசேதநங்களையும், யாவரும் - ஸகலசேதநரையும், ஆய்-சரீர மாகக்கொண்டு தத்ததாகாரேண அவஸ்த்திதனுய், நின்ற- தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்ட னும்படி, மாயன் - (ஆஶ்சர்யசக்தியுக்தனுகையாலே கலந்திருக்கச்செய்தே) கழலநிற்க வல்லனுய், என் ஆழிப்பிரான் - கையுந்திருவாழியுமான வடிவழகை யடியிலே எனக்கநுப விப்பித்த மஹோபகாரகனுய், மாவை - (அநுபவிக்கிற கோபிமார்க்கு ப்ரதிபந்தகமான) கேசியை, வல் - ப்ரபலமான, வாய் - வாயை, பிளந்த - கிழித்தவனுய், மதுசூதற்கு - (விரோதிநிரஸநம் ஸ்வபாவஸித்தமான) மதுசூதநனுனவனுக்கு, என்மாற்றம் - கிளி களுக்கும் பூவைகளுக்கும் சொன்ன என்வார்த்தையை, சொல்லி - சொல்லி, பாவைகள்- (பக்ஷிகள்போலே பறந்துபோகாதே என் ஆர்த்திகண்டு பொறுதேயிருக்கிற) பாவை காள்! வினையாட்டியேன் - உங்களைக்கொண்டு காரியங்கொள்ளவேண்டும் பாபத்தை யுடைய என், பாசறவு - நிறத்தில் பசுமையழிவை, தீர்க்கிற்றிரே-தீர்க்கவல்லிகோளோ?

இ.—ஏழாம்பாட்டில், "பரமசேதநன் பொகட்டுப்போனுன் சைதந்யலேஶ முடைய பக்ஷிகள் பறந்துபோயினவும் அந்யபரமாயினவும் ஆயிற்றின; இதுக்கு ஹேது- சேதநங்களாகையோ?" என்று பார்த்து, அசேதநமானபாவையை யிரக்கிருள். [பூவை கள் இத்யாதி]- பூவைப்பூப்போலே யிருக்கிற நிறத்தையுடையவன். வடிவில் ஹோக்யதை யிருக்கிறபடி. பிரிந்தாருடம்பிலே வைவர்ண்யம் குடிபுகுரும்படியான வடிவு. அக வாயில் தண்ணளியெல்லாம் தோற்றும்படியான கண்ணழகையுடையவன்: பிரிந்தாரைப் பாவைகளின் காலிலே விழவிடுங் கண்ணிறே. [யாவையும் யாவருமாய்நின்ற] - சேதநா சேதநங்களுக்கு ஆத்மாவாய் நின்றவன். "தஷ்ட ஸ்வரூபவிஶேஷவத்தயா ஸ்வாமவஶ". ஸம்ஶ லேஷதசையில் ஏகவஸ்து என்னலாம்படி கலக்கவல்லவன். [மாயன்] - ஏகவஸ்து என்னலாம்படி கலக்கச்செய்தே தஷ்டதொஷஸ்பர்ஶமில்லாத ஆஶ்சர்ய ஶக்தன்: கலந்து பிரிந்தவநந்தரம் "இத்தலையில் ஸ்பர்ஶகந்தமுமில்லை" என்று தோற்றும்படியிருக்குமவன். [என்னுழிப்பிரான்] - கையுந்திருவாழியுமான சேர்த்தி யைக்காட்டி என்னைத்தோற்பித்த வுபகாரகன். * அழுக்குப்பதித்தவுடம்பிற் காட்டில் பரஞ்சுடருடம்புக்குண்டான வாசி சொல்லுகிறது. [மாவை பித்யாதி] - தன்னையநு ஶவிக்கைக்கு விரோதியைப் போக்குவானும் தானே யென்கிறது; கேஶிவாயிலே அகப்பட்டார்தாம் போலே. [மதுசூதற்கு] - விரோதிநிரஸநம் கதாசித்கமன்று, ஸ்வபாவஸித்தமென்கை. விரோதிநிரஸநம் க்ருஷ்ணவதாரந்தொடங்கியன்று, முதலே தொடங்கி வருகிறதென்கை. [என்மாற்றஞ்சொல்லி] - "தண்டுமாய்நமக்கன்றி நல்கான்" என்று ஆஸ்ரிதரோடு ஏகரஸனென்கிற பாசுரத்தைச் சொல்லி. பாவை காள்! வினையாட்டியேன் பாசறவு தீர்க்கவல்லிகோளே? நம்உரையைக்கண்டு வைத்து

acharya.org

பக்ஷிகள் பறந்துபோயிற்று? நம்மெஸையைக்கண்டு "என்னுப் விழுகிறதோ?" என்று ஸ்தப்ஸையாயிருந்தன பாவைகள் என்றிருந்தாள். [வினையாட்டியேன்] - இருவருங் கூடவிருந்து கொண்டாடக்கடவ உங்களைத் தூதுபோகவிடும்படியான பாபத்தைப் பண்ணினேன். [பாசறவு] - பசுமையறுகை, வைவர்ண்யமும் குடிபுகுருகை. பந்துக்களோட்டைப் பற்றறுதியைச் சொல்லவுமாம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. "பரமசேதநன் போகட்டுப்போனுன்; சைதந்யலேசமுள்ளபக்ஷிகள், பறந்துபோவனவும் அந்யபரமாவனவு மாயிற்று; இதுக்குஹேது-சேதநங்களாகையோ?" என்றுபார்த்து, அசேதநமான பாவையையிரக்கிருள். அசேதநமுங்கூட எழுந்திருந்து கார்யஞ்செய்யவேண்டும்படி காணும் இவள் அவஸ்த்தை.

[பூவைகள்போல்நிறத்தன்] - ஆண்பெண்ணும்படியான நிறம்படைத்தவன். "வுஂஸாஷ்ரஷிவிக்ரவஹாரிணீ" (பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்) என்னும்படியே, பேற்றுக்குப் பாவையின்காலிலே விழும்படியான வடிவுபடைத்தவன். பூவைப்பூப்போன்றலடிவை யுடையவன். [புண்டரீகங்கள்போலுங்கண்ணன்] - ஒருபூ ஒருபூப்பூத்தாற்போலேகாணும் வடிவும் கண்ணுமிருக்கிறபடி; காயாம்பூ தாமரைபூத்தாற்போலே யிராநின்றது. சேதநாசேதநவிலாமறக் காற்கீழே விழும்படியான கண்படைத்தவன். [யாவையும்யாவருமாய்நின்றமாயன்] - சிலரோடு கலக்கும்போது அவர்கள் தாங்களாய்க் கலக்குமவன். சேதநாசேதநங்களுக்கு ஆத்மாவாய்நின்றவன். "ததநுப்ரவிஶ்யஸச்சத்யச்சாபவத்" (ததநுப்ரவிஶ்யஸச்சத்யச்சாபவத்): ஸம்ஶ்லேஷதஶையில் "ஏகவஸ்து" என்னலாம்படி கலக்கவல்லவன். [மாயன்] - அவர்களாய்க் கலவாநிற்கச் செய்தே, தனக்கு அங்கோரு தோற்றற்றுப்போருமவன்; ஸர்வாந்தர்யாமியாயிருக்கச்செய்தே, "ஸுநரஸுநெஶாஸுலிவாகுஶீதி" (அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி) என்று, இவற்றின் தோஷம் தன்பக்கல் தட்டாதபடியிருக்கை. ஜகதாகாரனுய்க்கொண்டு இவர்களோடு பிரித்து ப்ரதிபத்திபண்ணவோண்ணுதபடி நிற்கச்செய்தே, அசித்தினுடையபரிணுமமாதல்,

---

ஏழாம்பாட்டு.—பூவைகள் இத்யாதி. கீழெல்லாம் - சைதந்யமுள்ள பக்ஷிகளையிரந்தவன், இப்போது அசேதநத்தை யிரக்கிறதென்? என்ன - பரமசேதநன் இத்யாதி. அசேதநத்தை யிரந்தால் அதுகார்யம்செய்யமாட்டுமோ? என்ன, த்வேதா பரிஹரிக்கிறார் - அசேதநமுங்கூட இத்யாதியாலும், அப்ரதிஷேதமாத்ரத்தைக்கொண்டு இத்யாதி முடிவில் வாக்யத்தாலும்.

இப்போதுவடிவழகைச்சொல்லுகிறதுக்குபாவம் - ஆண்பெண்ணும்படியான இத்யாதி. அப்படிவடிவு ஆணைப்பெண்ணுக்குமோ? என்ன - பும்ஸாம் இத்யாதி. பாவாந்தரம் - பேற்றுக்கு இத்யாதி. ஶப்தார்த்தம் - பூவைப்பூ இத்யாதி. வடிவுக்கும் கண்ணுக்கும் புஷ்பத்தை ஸாம்யஞ்சொல்லுகையாலே ரஸோக்தி - ஒருபூ இத்யாதி. விவரணம் - காயாம்பூ இத்யாதி. இக்கண்ணழகைச் சொல்லுகிறதுக்குபாவம் - சேதநாசேதநவிபாகம் இத்யாதி. அதாவது - "ஸவபுஷ்ஸுஜெநாஹரஃ" என்கிறபடியே, சேதநாசேதநவிபாகமற எல்லாம் தன்காற்கீழே விழும்படியான கண்படைத்தவனென்னுதல்; ஸத்த்வஶப்தம் - அசேதநங்களுக்கும் உபலக்ஷணம். அன்றிக்கே, சேதநாசேதநவிபாகமற எல்லார் காற்கீழிலும் நான் விழும்படியான கண்படைத்தவனென்னுதல். "ஆய்நின்ற" என்றதுக்குபாவம் - சிலரோடு இத்யாதி. சப்தார்த்தம் - சேதநாசேதநங்களுக்கு இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - கஜஶ இத்யாதி. இப்போது "யாவையும்யாவருமாய்" என்றதுக்குபாவம் - ஸம்ஶ்லேஷ இத்யாதி. "மாயன்" என்றதுக்கர்த்தம் - ஸர்வாந்தர்யாமி இத்யாதி. விவரணம் - ஜகதாகாரனுய் இத்யாதி. பதப்ரயோகத்துக்கு ப்ரயோஜநம் - என்னேடே இத்யாதி. "ஆழிப்பிரான்" என்றதுக்

acharya.org

சித்தினுடைய சுகித்வ துஃகித்வங்களாதல் தட்டாதபடிநிற்கை. என்னோடே பரிமாறுமா போலேகிடீர் எல்லாரோடும் கலந்துநின்றே ஒட்டற்று இருக்கும்படி என்கைக்காக 'யாவையும்யாவருமாய் நின்றமாயன்' என்கிறாள்; இல்லையாகில் இப்போது இது தேட்டமன்றே இப்ரகாணத்துக்கு. * அழக்குப்பதித்தவுடம்பிற்காட்டில் பரஞ்சுடருடம்புக்கு உண்டான வாசிசொல்லுகிறது [என்னழிப்பிரான்] - தன்னுடைய அஸாதாரணமான விக்ரஹத்தை எனக்காக்கினவன். யாவையும் யாவருமாய் நின்றமாயனென்று - ஜகதாகாரதையைச் சொல்லிவைத்து, "என்னழிப்பிரான்" என்கிறாரிறே: அஸாதாரணமான வடிவுக்குத் தாம் ஈடுபட்டபடி. "நீராய்நிலனாய்" என்று வைத்து, "கூராராழிவெண்சங்கேந்திக்கோடியேன் பால் வாராய்" என்றாரிறே. "அவனுக்குப்புறம்பாயிருப்பதொன்றில்லை என்றநுஸந்திக்கைக் காக - ஜகச்சரீரன் என்னுங்காட்டில், அத்தோபாதியிது உத்தேஶ்யமாமோ? "பரஞ்சுட ருடம்பாய்" என்றும், "அழக்குப்பதித்தவுடம்பாய்" என்றும் ஒன்றை ஹேயப்ரத்யநீக மாகவும், ஒன்றை ஹேயமிஶ்ரமாகவும் சொல்லிற்றிறே. [மாவையித்யாதி] - இவ்வடி வழகை புஜிப்பிக்கைக்கு விரோதிநிரஸநம்பண்ணுகை இவனுக்குக் காதாசித்க மன்று கிடீர். [மதுசூதற்கு] - புழக்குறித்தது எழத்தாமாபோலன்றிக்கே விரோதிநிரஸநம் நித்யமா யிருக்கை. [என்மாற்றஞ்சொல்லி] - கன்மின்களென்றஉங்களுக்குச்சொன்னத்தைச்சொல்லி. [பாவைகள்தீர்க்கிற்றிரே] - பரமசேதநன் போகட்டுப்போனான், சைதந்யலவமுடைய இவைபோகிறனவில்லை; இனி, நீங்கள் என் ஊஹத்தைப்போக்கவல்லிகோளோ? அப்ரதி ஷேதமாத்ரத்தைக்கொண்டு இவற்றைக்காரியங்கொள்ளப் பார்க்கிறாள். [வினையாட்டி யேன்] - உங்களைக் கொண்டாடுகைதவிர்ந்து, கார்யங்கொள்ளும்படியான துஃகத்தை ப்ராப்தையானேன்; "மாஶுசஃ" (மாஶுசஃ) என்றுசொன்னவன் விளைத்தசோகத்தை, அசேதநங்களைக்கொண்டு தீர்க்கவிருக்கிற மஹாபாபியானேன். பாசறவு - ஊஹம்.

கவதாரிகை - அழக்குப்பதித்த இத்யாதி. "என்" என்றதுக்குபாவம் - தன்னுடைய இத்யாதி. "எனக்காக்கினவன்" என்கைக்கு இவள் அதிலே ப்ரவணையாயிருக்குமோ? என்ன - யாவையும் இத் யாதி. ஜகதாகாரதையைப்பற்றவும், அஸாதாரணவிக்ரஹம் அநுபாவ்யமென்கைக்கு ப்ரமாணம் - நீராய் இத்யாதி. அஸாதாரணவிக்ரஹத்தோபாதி ஜகதாகாரதை யுத்தேஶ்யமல்லவோ? என்ன - அவனுக்கு இத்யாதி. இது - ஜகதாகாரதை. "இதுஉத்தேஶ்யம், அது உத்தேஶ்யம்" என்கிறதுக்கு நியாமக மேதென்ன - பரஞ்சுடர் இத்யாதி. விரோதிநிரஸகதநத்துக்குபாவம் - இவ்வடிவழகை இத்யாதி. விரோதிநிரஸநத்வயஞ்சொன்னத்தைப்பற்ற - காதாசித்கமன்று என்றது. "மதுசூதன்" என்று நிரூபித்ததுக்குபாவம் - புழக்குறித்தது இத்யாதி. ஈஶ்வரனிருக்க, பகுதிகளிருக்க, எங்களைச்சொல்லு வானென்? என்ன - பரமசேதநன் இத்யாதிவாக்யத்ரயத்தாலே. அசேதநத்தையிரந்தால் அவை கார்யம் செய்யமாட்டுமோ? என்ன - அப்ரதிஷேதம் இத்யாதி. அர்த்தாந்தரம் - மாஶுசஃஇத்யாதி. "பாவை கள்" என்றது - பாவைகளென்ற ஸம்போதநம். தீர்க்கிற்றிரே - தீர்க்கவல்லிகோளோவென்றபடி. வினையாட்டியேன் பாசறவை - பூவைகள்போலென்றுதொடங்கி, தீர்க்கிற்றிரேயென்றந்வயம். (எ)

---

acharya.org

எட்டாம் பாட்டு.

பாசறவெய்தியின்னே வினையேன்எனையூழிநைவேன்?
ஆசறுதூவிவெள்ளைக்குருகே! †அருள்செய்தொருநாள்
மாசறுநீலச்சுடர்முடி வானவர்கோனைக்கண்டு
ஏசறும்நும்மையல்லால் மறுநோக்கிலள் பேர்த்துமற்றே.

ஆ.—(பாசறவெய்தி) - நீங்களும் சொல்லவேணுமென்று சில குருகுகளை யபேக்ஷிக்க, அவைபோகாதிருந்தவாறே, "பிரிந்த வுத்தரக்ஷணத்திலே தூதப்ரேஷணம் பண்ணுமித்தனையோ? அவன் விளம்பித்தாலல்லவோ தூதப்ரேஷணம்பண்ணுவது!" என்று போகாதிருந்தனவாகக்கொண்டு, அவனையிழந்து இப்படியே வ்யஸநப்படுகிறது எத்தனையாயிரம் ப்ரஹ்மகல்ப முண்டு; ஆதலால், பாதுகாஸஹஸ்ரிஷ்ணுதைக ஸ்வபாவரான நீங்கள் விமல நீலஜ்யோதிர்மய குந்தளஶோபாலங்க்ருதனுப் பரமஸுரிபரிசரித சரணயுகளனுயிருந்த எம்பெருமானுக்கு,அநாத்ருதபரோக்தோபாலம்பையாம்படிஉன்பக்கலிலே அநிநிவிஷ்டையானள்; நீ, உபேக்ஷிக்கிலும் உன்னுடைய கடாக்ஷமல்லது வேறொரு துணையுண்டென்றிராள் என்று சொல்லவேணு மென்று குருகுகளை இரக்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், முன்னேநின்ற குருகைக் குறித்து, * அயர்வறுமமரர்களைப்போலே உம்மாலல்லது செல்லாதாளொருத்தி உம்மைப்பெறாதே நோவுபடாநின்றாள் என்று சொல்லென்று அருளிச்செய்கிறாள்.

[பாசறவென்றுதொடங்கி] - பயலைமையை ப்ராபித்து இப்படியே முடியாத பாபத்தைப்பண்ணின நான் எத்தனைகாலம் ஊழ்ப்படக்கடவேன்? பழிப்பற்ற சிறகையுடையையாய் என்னைப்போலே பயலைமையோடிராதே, அழகியவெளுத்த நிறத்தையுடையகுருகே! வெள்ளைக்குருகாவது - ஹ்ருதயகைர்மல்யத்தையுடையகுருகென்றுமாம். [அருள்செய்தொருநாள்] - என்பக்கலிலே ஒருநாள் க்ருபைபண்ணி, [மாசறுநீலமென்றுதொடங்கி] - பழிப்பற்ற நீலச்சுடரையுடைய மயிர்முடியையுடையனுயிருந்துள்ள * அயர்வறுமமரர்களதிபதியைக்கண்டு பிறர் ஏசும்ஶைகடந்து தம்மாலல்லது வேறொருவரால் செல்லாத ப்ரக்ருதியானள் என்றுசொல்லு.

ப.—அநந்தரம், ஸுரிஸேவ்யனான ஸர்வாதிகனைக்குறித்து, உம்மையொழிய வேறொரு பதார்த்தத்தில் கண்வைக்கிறிலளென்று சொல்லி யொருநாள் க்ருபை பண்ணியருளவேணுமென்று ஒரு குருகை அபேக்ஷிக்கிறாள்.

ஆசு - மமகத்தில் குறை, அறு - அற்ற, தூவி - சிறகை யுடையையாய், வெள்ளை - அகவாயில் சுத்திக்கும் ப்ரகாசகமாம்படி வெளுத்தநிறத்தையுமுடையையான, குருகே - குருகே! வினையேன் - விரஹத்துக்கு முடிவுகாணாத பாபத்தை யுடைய நான், பாசறவு எய்தி - நிறமழிந்து, இன்னே - இப்படியே, எனையூழி - அநேககல்பங்கள், நைவேன் - சிதிலைபாகாநிற்பன்; (ஆனபின்பு), மாசு - அழுக்கு, அறு - அற்ற, நீலச்சுடர் - நீலச்சுடரையுடைத்தான, முடி - மயிர்முடியையுடையனுய், வானவர் - நித்யசூரிகளுக்கு, கோனை - நிர்வாஹகனான ஸர்வாதிகனை, கண்டு - கண்டு, ஏசு - பழிப்பு,

'அருள்செய்யொருநாள்'என்பது உரையின் பாடம்.

acharya.org

அறும்-அற்ற, நும்மை - உம்மை, அல்லால் - ஒழிய, பேர்த்து - பின்னை, மற்று-வேறு, மறுநோக்கிலள் - மறித்துப் பார்ப்பதொன்று இல்லையானாள்; என்று சொல்லி - என்று சொல்லி, ஒருநாள் - ஒருநாள், அருள்செய் - எனக்கு உபகரிக்கவேணும். "அருள் செய்து" என்று பாடமானபோது, என்றுசொல் என்று வாக்யஶேஷமாகக்கடவது. எசறு மென்று - ஏச்சுக்கு விஷயமான அவஸ்த்தையைக் கடந்தாளென்றுமாம். ஆசு - குற்றம்.

இ.—எட்டாம்பாட்டில், முன்னேநின்ற குருகைக்குறித்து, நித்யஸூரிகளைப் போலே உம்மாலல்லது செல்லாத இவள் உம்மைப்பிரிந்து நோவுபடாநின்றாள் என்று சொல்லென்கிறாள்.

[பாசறவெய்தி] - வைவர்ண்யத்தை ப்ராபித்தென்னுதல், வைஷ்ணவர்கள்பக்கல் பற்றற்று என்னுதல். பாசறவு - பாசமறுகை. [இன்னே] - தன்னுடைக்குப்பாசுரமில்லாமையாலே தன்வடிவைக் காட்டுகிறாள். [வினையேன் இத்யாதி] - பிரிவுக்கு முடிவு காணவொண்ணாத பாபத்தைப்பண்ணின நான். [எனையூழிகைவேன்] - எத்தனைகாலம் ஜீவப்படக்கடவேன்? முன்புபிரிந்தார், பத்துமாஸமாதல் பதினாலாண்டாதலிறே பிரிந்தது. ஸம்ஶ்லேஷம்விஶ்லேஷத்தோடே வ்யாப்தமானவோபாதி, விஶ்லேஷமும் ஸம்ஶ்லேஷாந்தமாகாதபடியான பாபத்தைப் பண்ணினேன். [ஆசறுதூவி] - பழிப்பற்ற சிறகு. [வெள்ளைக்குருகே] - வடிவும்மாஸ்ஸும் நிர்மலமாகை. பராங்முகம் பொறுக்கமாட்டாதொழிகை - மநஸ்ஸுக்கு நைர்மல்யம்; "புறம்போலுள்ளங்கரியான்" என்கிறவனுக்கு எதிர்த்தட்டாயிருக்கை. [ஒருநாள் அருள்செய்து] - ஒருநாள்க்ருபைபண்ணி. இவ்விஷயத்தில் வடகர்க்கு எல்லாம் செய்தாலும் ப்ரத்யுபகாரமாகாமையாலே, "க்ருபையாலேசெய்தார்கள்" என்றிருக்கவேணுமென்கை. [மாசறுஇத்யாதி] - பழிப்பற்ற நீலச் சுடரையுடைய மயிர்முடியையுடையனாய், அத்தை நித்யஸூரிகளையநுபவிப்பித்துக் கொண்டிருக்கிறவனைக் கண்டு. ஒருநீர்ச்சாவி கிடக்கக் கடலிலே வர்ஷிக்குமாபோலே. [ஏசறும்] - க்லேசப்படாநின்றாள் என்னுதல்; பிறர்ஏசும்எல்லை கடந்தாள் என்னுதல். "நும்மையல்லால் மறுநோக்கிலள்பேர்த்துமற்று" என்று கீழிற்பாட்டோடே சேர்க்கடவது. [நும்மையல்லால் - பேர்த்துமற்று - மறுநோக்கிலள்] - உம்மையொழியவேறு குளிரப்பார்ப்பாரில்லை: "ஸவீஹிஸுவுஸாவு" என்று குணகீர்த்தநம்பண்ணி ஜீவிக்குமெல்லையுங் கழிந்தது.

ஈடு.—எட்டாம்பாட்டு.முன்பே நின்ற குருகைக்குறித்து,நித்யசூரிகளைப்போலே உம்மாலல்லது செல்லாதே, உம்மைப்பிரிந்து நோவுபடாநின்றாளென்று சொல் என்கிறாள்.

[பாசறஇத்யாதி] - "இன்னம் சிலகாலங்கழித்தால் அறிவிக்கிறோம்" என்னுமளவாயிருந்ததோ என்னுடைமை? [பாசறவெய்தி] - பாசென்று பசுமையாய், அத்தால் நினைக்கிறது நீர்மையாய், அதுஅறுகையாவது - வைவர்ண்யத்தோடே வ்யாப்தமாகை.

எட்டரம்பாட்டு - பாசறவெய்தி இத்யாதி. "வானவர்கோனே" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை - முன்பே இத்யாதி. நித்யசூரிகளைப்போலேயென்றது, செல்லாமைமாத்ரத்துக்கு த்ருஷ்டாந்தம்.

"எனையூழிகைவேன்" என்னுமளவுக்குபாவம் - இன்னம்சிலகாலம் இத்யாதி. வைவர்ண்யத்தை யடைந்திருக்கையாலே, "மெள்ளச்செய்கிறோம்" என்றுஅறியிருக்கப்போகாதென்றபடி. 'என்

acharya.org

[இன்னே] - 'எப்படி வைவர்ண்யத்தை யடைந்தது?' என்னில்,— என்னைக்கண்ட உங்களுக்குச் சொல்லவேண்டாவிறே. விஷயம் ஸாவதியாகிலிறே இது அளவுபட்டிருப்பது? இதுக்கு ஒருபாசுரமிட்டுச் சொல்லப்போகாது; உடம்பைக்காட்டுமத்தனை. பாசுரமிட்டுச்சொல்லப் போகாமை, படியெடுத்துக்காட்டுகிறாள். [வினையேன்] - விஶ்லேஷமும் ஸம்ஶ்லேஷத்தோபாதியாகப் பெற்றிலேன்: அது காதாசித்கமாய், இது நித்யமாயிருக்கிறபடி. [வினையேன்] - கலக்கப் பெறாவிட்டால் மீண்டு கைவாங்க வொண்ணாதபடியான பாபத்தைப் பண்ணினேன். [எனையூழிநைவேன்] - ஶைதில்யத்தோடே யெத்தனை கல்பம் சென்றது? முன்புபிரிந்தார் பதினாலாண்டாதல், பத்துமாஸமாதல். [ஆசறுதூவி வெள்ளைக்குருகே]-பழிப்பற்ற சிறகை யுடைத்தாய், பரதுஃகாஸஹிஷ்ணுதைக்குஉறுப்பான மநோநைர்மல்யத்தை யுடைத்தாயிருக்கிறபடி. [வெள்ளைக்குருகே] - அவன் பிரிகைக்குப் புறம்போலுள்ளும் கரியானாஞ்போலேயிறே நீங்களும் கூட்டுகைக்கு உள்ளும்புறம்பும் நிர்மலமாயிருக்கிறபடி. [அருள்செய்தோருநாள்] - ஒருபோது க்ருபைபண்ணி. இவ்வளவில் முகங்காட்டுகையாகிறஇதுக்குமேற்பட அருளில்லையிறே; வேறும் உங்கள் க்ருபையாலே செய்திகோளத்தனையிறே [மாசறுவித்யாதி] - பழிப்பற்று நெய்த்திருந்துள்ள மயிர்முடியை யுடையனாய், அம்மயிர்முடியை நித்யசூரிகள்பேண இருக்கிறவனைக் கண்டு. ஒருநீர்ச்சாவி கிடக்கக் கடலிலே வர்ஷிக்கிறவனைக் கண்டு. [ஏசறவும்] - க்லேஶப்படாநின்றா ளென்னுதல், நாட்டார்ஏசும்நிலை கடந்தாளென்னுதல். ஏசறுங்கோள் - வடிவைக் காட்டுங்கோளென்றுமாம். அதாகிறது-என்னுடைய வைவர்ண்யத்தை நீங்கள் உங்களுடம்பிலேயணிந்து காட்டுங்கோளென்றபடி. [நும்மையல்லால் மறுநோக்கிலள்] - உம்மையொழிய வேறு குளிர்ந்த விழி யில்லை. வ்ருத்தகீர்த்தநத்துக்கும் உம்மையொழிய வேறொருவனாயுடைய

னைக்கண்ட' இத்யாதிக்கு பாவம்- நானிருக்கிற ப்ரகாரத்தைக் கண்டறியுமித்தனை என்று. "இன்னே" என்றதுக்கு - வடிவைக்காட்டுகிறதாகக் கீழருளிச்செய்து, அர்த்தாந்தரம் - விஷயம் இத்யாதி படியெடுத்துக் காட்டுகிறாள் என்னுமளவும். அதாவது - பாசுரமிட்டுச் சொல்லப்போகா தென்றபடி. 'படியெடுத்துக்காட்டுகிறாள்' என்றது, மனோக்தி. தேஹத்தைக் காட்டுகிறாளென்று ஸ்வபாவார்த்தம்; ஆபரணஜாலமென்று த்வநி. "வினையேன்" என்றதுக்கு அர்த்தத்வயம்; முர்தினது - விஶ்லேஷமும் இத்யாதி. அதாவது, ஸம்ஶ்லேஷம்விஶ்லேஷாந்தமானவோபாதி, விஶ்லேஷமும் ஸம்ஶ்லேஷாந்தமாகாதபடியான பாபத்தைப்பண்ணினே னென்றபடி. விவரணம் - அதுகாதாசித்கம் இத்யாதி. நித்யமாயிருக்கிறபடி யென்றது - நித்யமாயிருக்கும்படியான பாபத்தைப் பண்ணினேனென்றபடி. அர்த்தாந்தரம் - கலக்க இத்யாதி. ஶப்தார்த்தம் - ஶைதில்ய இத்யாதி. அநேககல்பம் ஶிதிலையாகாநின்றேனென்று ஶப்தார்த்தம். "ஆசறதூவி, வெள்ளை" என்கிற பதத்வயத்தாலும் - பாஹ்யாந்தர சுத்தியைச்சொல்லுகிறது. ஸத்ருஷ்டாந்தமாக விவரணம் - அவன்பிரிகைக்கு இத்யாதி. ஶப்தார்த்தம் - ஒருபோது இத்யாதி. க்ருபைபண்ணுவது தயாளுக்களாகிலன்றோ? அவற்றின் தயாளுத்வ நியாமகமேதென்ன - இவ்வளவில் இத்யாதி. வெறும் உங்கள் க்ருபையாலேயன்றோ முகங்காட்டினது; ஆகையாலே, மேலுள்ளதும் க்ருபையாலே செய்யவேணுமென்று கருத்து. "வானவர்கோனே" என்றதுக்கு வெறப்பிலே பாவம் - ஒருநீர்ச்சாவி இத்யாதி. "ஏசறும்" - துக்கப்படாநின்றாளென்று முழுச்சொல்லு. ஏசறங்கோளென்றால் - துக்கப்படுங்கோளென்று காட்டுமதொழிய, வடிவைக்காட்டுங்கோளென்று சொல்லுமோ? என்ன - அநாகிறது இத்யாதி. அதாவது - விரஹவைவர்ண்யத்துக்கு எல்லை வெளுப்பாகையாலே, உங்களுடம்பில் வெளுப்பைக்காட்டி, இப்படியிருக்கிறாளென்று சொல்லுங்கோளென்றபடி. * வெள்ளைக்குருகிறே. அணிந்து - ஏறிட்டு. நும்மையல்லால் மறுநோக்கிலள் - உம்முடைய கடாக்ஷமொழிய வேறொருவர்நோக்கை யுடையவளல்ல ளென்று ஶப்தார்த்தம்.

acharya.org

ளல்லள்; ''ஸஶீஹிஷ்ஸுவரோஷ்வ'' (ஸகீபிஸ்ஸுகமாஸ்வ) என்னும் நிலையுங் குலைந்தது. [நும்மையல்லால்] - ''வாராநின்றேம்'' என்று ஸ்ரீபரதாழ்வானைப்போலே ஆள் வரவிடத்தரியாது. [நும்மையல்லால்] - ஸ்வரூபகுணங்களை யநுஸந்தித்துயரிக்கும்அளவல்லள். [மறுநோக்கிலள்] - உம்மையொழிய வந்துக்கள் நோக்கும் நிலை கழிந்தது. இப்பாட்டுக்கு க்ரியை - கீழிற்பாட்டிலேயாதல், மேலிற்பாட்டிலேயாதல். தமிழர் ''வினையேச்சமாய்க் கிடக்கிறது'' என்று சொல்லுவார்கள் அதாவது, 'மறுநோக்கிலள்பேர்த்துமற்று' என்று சொல்லுங்கோள் என்கிற இத்தனையுமிட்டுச் சொல்லவேண்டுகை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

பேர்த்துமற்றோர்களைகண் வினையாட்டியேன் நான்ஒன்றிலேன்
நீர்த்திரைமேலுலவி இரைதேரும்புதாவினங்காள்!
கார்த்திரள்மாமுகில்போல் கண்ணன்விண்ணவர்கோனைக்கண்டு
வார்த்தைகள்கொண்டருளியுரையீர் வைகல்வந்திருந்தே.

ஆ.—(பேர்த்து) - ஸஸ்யங்களுலராநிற்க மேகங்கள் கடலிலே வர்ஷிக்குமாபோலே, தன்னுடைய கடாக்ஷமொழிய வேறொருகதி யின்றியே நான் தளராநிற்கத் தன்னுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிவிஷய ஸர்வகால ஸாக்ஷாத்காரஜநித நிரவதிகாநந்த மஹார்ணவ அந்தர்நிமக்நரான * அயர்வறுமமரர்களுக்கே தன்னை யநுபவிக்கக் கொடுக்குமித்தனையோ? என்று எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்து, பின்னை அவனருளிச்செய்தருளின வார்த்தைகளைக்கேட்டு, ''ஏ ஹ்யாஸுவெஶிதம்'' என்னும் பாக்ரியையாலேயிருந்து என் பக்கலிலே க்ருபையைப்பண்ணி எனக்கெப்போதும் அவற்றைச்சொல்லி என்னை யரிப்பிக்கவேணு மென்று சிலபுதாவினங்களை நோக்கிச் சொல்லுகிறாள்.

இதுக்கு நாலுவிதமாக பாவம்: முந்தினது - வீருத்தகீர்த்தநந்துக்கும் இத்யாதி. தோழிமாரில்லையோ? என்ன - ஸகீபீர் இத்யாதி: ''ஸஶீஹிஷ்ஸுவரோஷ்வ'' என்கிறதுக்கு ஆகார கண்டுகொள்வது. இரண்டாம்பாவம் - வாரா நின்றேம் இத்யாதி. மூன்றும்பாவம்-ஸ்வரூபகுணங்களை இத்யாதி. நாலாவது - உம்மையொழிய இத்யாதி. ஆக,''ஸஶீஹிஷ்ஸுவரோஷ்வ'' என்னும் நிலை குலைந்ததென்றும், ஆள்வரவிடத் தரியாளென்றும், ஸ்வரூபகுணாநுஸந்தாநத்தால் யரியாளென்றும், பந்துக்களோடே கூடி காலக்ஷேபம்பண்ணி யரியாளென்றும் நாலுபாவம். இந்த நாலர்த்தத்துக்கும், ''நும்மையல்லால்'' என்றதுக்கு - உம்மை ப்ரத்யக்ஷமாக அநுபவித்தாலொழிய என்றுபொருள். கீழ் - குளகமாக அருளிச்செய்து, க்ரியை அத்யாஹாரியமென்று பரிஹாராந்தரம் - தமிழர் இத்யாதி. வினையெச்சம் - க்ரியாசங்கோசம். அதாவது - க்ரியை யத்யாஹாரியமென்றபடி. சொல்லுங்கோளென்றது - க்ரியை. 'பாசறவெய்தி' என்று தொடங்கி, கண்டு ஏசறுங்கோள்'; 'பேர்த்துமற்று' - அதுக்குமேலே, 'நும்மையல்லால் மறுநோக்கிலள்' என்று சொல்லி 'வினையாட்டியேன் பாசறவு தீர்க்கிற்றிலீர்' என்ற கீழிற்பாட்டோடே க்ரியை. மறுநோக்கிலளென்று சொல்லுங்கோளென்றுதல். 'புறம்போலுள்ளுங்கரியானை' என்றது நாய்ச்சியார்திருமொழி, ''பொருத்தமுடையநம்பியை'' இத்யாதி. புறவாய்போலே யகவாயும் கறுத்திருக்குமவனை இத்யர்த்தம். (அ)

acharya.org

ஓ.—ஒன்பதாம்பாட்டில், நீங்கள்சென்றால் அவன் வந்திலனேயாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டு வந்து நாள்தோறும் அத்தையே யிருந்து சொல்லி உஜ்ஜீவிப்பிக்கவேணு மென்று சில புதாவினங்களை இரக்கிறாள்.

[பேர்த்தென்று தொடங்கி] - அத்யந்தம் குணவானான எம்பெருமானாலே இகழப்பட்ட மஹா பாபியான நான் உங்களையொழிய வேறு சிலநிர்வாஹகரை உடையேனல்லேன். தறையிலே ஸஞ்சரிக்குமாபோலே நீர்த்திரைமேலே ஸஞ்சரித்து இரை தேட வல்லிகோளான புதாவினங்காள்! புதா - பெருநாரை. [கார்த்திரடென்று தொடங்கி] - கறுப்பெல்லாம் திரண்டாற்போலே யிருப்பதொரு மஹாமேகம்போலே யிருக்கிற நிறத்தையுடையனாய் அத்யந்த சீலவானாய் அழகும் குணங்களும் * அயர்வறு மமரர்களே ஹுஜிக்கக்கொடுத்து அவர்களைப் பிரியமாட்டாமையாலே எனக்கெட்டாதிருக்கிறவனைக்கண்டு. [அருளி] - என்பக்கலிலே அநுக்ரஹத்தைப்பண்ணி.

ப.—அநந்தரம், அந்தபரத்வத்தோடே ஆஸ்ரிதஸுலபனான க்ருஷ்ணனைக் கண்டு வார்த்தை கேட்டுவந்து சொல்லவேணு மென்று சில பெருநாரைகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

நீர்-நீரின், திரை - திரை, (மேலிடாதபடி யவற்றையமுக்கி), மேல் - மேலே, உலவி - உலாவி, இரை - (உங்களுக்கு போக்யமான) ஆமிஷத்தை, தேரும் - ஆராயும், புதாவினங்காள் - பெருநாரையினங்காள்! வினையாட்டியேன் - (உதவப்ராப்தனானவன் உதவாதபடியான)பாபத்தையுடையேனான, நான் - நான், பேர்த்து - (உங்களையொழிய, மற்று - வேறு, ஓர் - அத்விதீயமாயிருப்பதொரு, களைகண் - ரக்ஷகவஸ்து, ஒன்று - ஒன்று, இலேன் - உடையேனல்லேன்; (ஆனபின்பு), கார் - கார்காலத்தில், திரள் - திரண்ட, மாமுகில்போல் - மஹா மேகங்கள்போலே(அஹிரூபனாய்), கண்ணன்-அவதார முகத்தாலே ஆஸ்ரிதர்க்குஅத்யந்தஸுலப்யனாய்,விண்ணவர்-(அவ்வழகைப்)பரமபதவாசிகளுக்கநுபவிப்பிக்கும், கோனை - ஸர்வாதிகனை, கண்டு - கண்டு, வார்த்தைகள் - (அவனருளிச்செய்யும்) வார்த்தைகளை, கொண்டு - கொண்டு, அருளி - (என்பக்கலிலே) க்ருபை பண்ணி, வந்திருந்து - வந்திருந்து, வைகல் - (இதுதானே போதுபோக்காம்படி) நெடும் போது, உரையீர் - சொல்லவேணும். 'போதா' என்பாருமுளர்.

இ.—ஒன்பதாம் பாட்டில், சில புதாவினங்களைக்குறித்து, நீங்கள சென்றால் அவன் வந்திலனாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டுவந்து நித்யமாக உஜ்ஜீவிப்பிக்கவேணு மென்கிறாள்.

[பேர்த்து இத்யாதி] - உங்களையொழிய வேறொரு நிர்வாஹகரை உடையேனல்லேன். வடகர்பக்கலிலும் அநந்யமதித்வமே ஆவிஷ்கரிக்கக்கடவது. [வினையாட்டியேன் நான்] - ரக்ஷகனாய் குணயிகனானவன் உபேக்ஷிக்கும்படி பாபத்தைப்பண்ணின நான். ஸாக்ஷாத் ரக்ஷகன் பொகட்டுப்போக, உங்கள்காலிலே விழும்படி பாபத்தைப் பண்ணினேன். [நீர்த்திரைமேலுலவி] - தறையிலே ஸஞ்சரிக்குமாபோலே நீர்த்திரை மேலே ஸஞ்சரிக்கவற்றாயிருக்கை. "நடுவே சடலுண்டு" என்றுஇருப்பக்கவேண்டாவிறே உங்களுக்கு; ஆவரண ஜலம், விரஜை, இவை கண்டு இருப்பக்க வேண்டாவிறே. [இரைதேரும்] - *உபவாஸக்ருஶரை ஜீவிப்பித்தன்றோ நீங்கள் ஜீவிப்பது? [புதா]-

acharya.org

பெருநாரை. [கார்த்திரள் மாமுகில்போல் கண்ணன்] - கறுப்பெல்லாந் திரண்டாற் போலேயிருக்கிற மஹா மேகம்போன்ற வடிவை யுடையவன். கார்காலத்தில் திரண்ட மஹாமேவ மென்றுமாம். [மாமுகில்] - மாருதே கொடுக்கவல்ல முகில். [கண்ணன்] - தன்னைப்பிறர்க்காக்கி வைக்குமவன். மத்ஸ்யத்துக்குத் தண்ணீர் வார்ப்பாரைப்போலே இவ்வழகையும் குணத்தையும் நித்யஸூரிகளை யநு஭விப்பித்திருக்கிறவனை. [கண்டு வார்த்தைகள்கொண்டு] - காணப்பெற்று, சொல்லும் வார்த்தைகள் கேட்கக்கடவி கோளிறே. 'ஶாஶ்வதீ:'' என்று ஸுலத்ஸ்தோடே வ்யாப்தமான வார்த்தைகளைக் கொண்டு. [அருளி] - என்பக்கலிலே க்ருபைபண்ணி. [வந்திருந்து - வைகல் உரையீர்] - அங்குத்தை வார்த்தைகளைக்கேட்டு வந்திருந்து, நாள்தோறும் எனக்குச்சொல்லி உஜ்ஜீவிப்பிக்கவேணும்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. சிலபுதாவினங்களைக் குறித்து, நீங்கள் சென்றால் அவன் வந்திலனாகிலும் அங்குத்தைவார்த்தையைக் கொண்டுவந்து என்னை நித்யமாக உஜ்ஜீவிப்பிக்கவேணு மென்கிறாள்.

[பேர்த்துமற்றோர்களைகண்வினையாட்டியேன் நானொன்றிலேன்] - தன்பரிகரங்களிலே யொன்றைக்கொண்டு போதுபோக்குகிறாள் என்னுமளவுங் குலைந்தது. வேறுமையை முன்னிடுமெத்தனையேறே ததீயர்பக்கலிலும். உங்களையொழிய வேறொருரக்ஷகரை யுடையேனல்லேன். [மற்றோர்களைகண்] - பிராட்டிக்கு லங்கைக்குள்ளே ஒருத்ரிஜடையாகிலு முண்டாயிற்று; காட்டிலே ஸ்ட்டுப்போந்த தனிமையிலே ஒருவால்மீகிபகவானாகிலு முண்டாயிற்று; பர்த்தாபோகட்டால் ஒருபிதாவாகிலுமுண்டாகவேணுமிறே. [வினையாட்டியேன்] - நாயகன்தானே ரக்ஷகனுமாயிருக்குமிறே; அப்படிப்பட்டவன் கைவிட்டுப்போம்படியான பாபத்தைப் பண்ணினேன். [நீர்த்திரைமேலுலவி] - ஆவாரணஜலம், விரஜை இவையெல்லாம் கடந்தேறவற்றா யிருக்கை. [உலவி] - நிலத்திலே சஞ்சரிக்கிறாப்போலே நீரிலே ஸஞ்சரிக்கிறபடி. [இரைதேரும்] - இவற்றின் நடையோடோக்க இதுவுமோரு

ஒன்பதாம்பாட்டு.—பேர்த்து இத்யாதி. ''வார்த்தைகள்கொண்டருளியுரையீர்'' இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலபுதாவினம் இத்யாதி. புதாவென்று - நாரையில் அவாந்தரபேதம்.

''பேர்த்துமற்று'' என்றது - மீளவுமென்றபடி. ''நானொன்றிலேன்'' என்னுமளவும் அநுவாதமாய், அவனையொழிய ரக்ஷகமில்லையென்கிறார் - தன்பரிகாங்களிலே இத்யாதி. அதாவது - '.ஸவீஹிஸ்ஸுவரோஸ்ஸ'' என்னும்நிலை குலைந்ததென்றபடி. அன்றிக்கே, உங்களையொழிய ரக்ஷகரில்லையென்று விவக்ஷித்து, பகவத்விஷயத்திலேயன்றோ ஆகிஞ்சந்யாகங்யகதித்வ புரஸ்காரம், ஆசார்யவிஷயத்திலும்வேணுமோ? என்ன - வேறுமையை இத்யாதி. வாக்யத்வயமும் ஆசார்ய விஷயமாதல். ஸப்தார்த்தம் - உங்களை இத்யாதி. மற்றகளைகணிலேன் என்றதே, ''ஓர்'' என்றதுக்குபாவம் - பிராட்டிக்கு இத்யாதிவாக்யத்ரயத்தாலே. பிதாவாகிலுமுண்டாகவேணுமிறேயென்றது - நள்ளிட்ட தமயந்திக்கு பிதாவுண்டானமையைப்பற்ற. பிறரால்கலிவுபடுகிற இடங்களிலே நாயகன் ரக்ஷிக்கிறவாகாரமுமுண்டு; அத்தையருளிச்செய்கிறார் - நாயகன்தானே இத்யாதி. நாயகன்தானே ரக்ஷகனென்றது - ''ஸ்ரீயஃபதிஃ'' இத்யாதியைப்பற்ற. பரமபதத்திலே தூதுவிடுகிறாளாகையாலே அருளிச்செய்கிறார் - ஆவாரணஜலம் இத்யாதி. இவற்றின் நடையோபாதி இவையிரைதேடுகிறதும் தன்கார்யத்துக்குஉடல் என்றவிவக்ஷித்தருளிச்செய்கிறார்-இவற்றின்நடை இத்யாதி.

acharya.org

பௌஷ்கல்யமிறே இவளுக்கு. நான் உபவாஸக்ருஶையா யிருக்க, உங்களுக்கு மிடற்றுக் குக்கீழிழியாதிறே; என்னையும் உங்களைப்போலே யாக்கினாலன்றோ ஜீவித்ததாவது? [புதா]- பெருநாரை. [கார்த்திரள்மாமுகில்போல்கண்ணன்] - எல்லாவிடாயும் ஆறுங்கிடீர் அவ் வடிவைக்காணப்பெறில்! இவள்கண்ணுக்குக் கறுப்பாயிருக்கிறதிறே. கறுப்பெல்லாம் திரண்டாற்போலே யிருக்கிற மஹாமேகம்போன்ற வடிவையுடையவன்; கார்காலத்தில் திரண்ட மஹாமேகமென்றுமாம். [மாமுகில்] - மாறாதே கொடுக்கவல்ல முகில். [கண் ணன்] - அவ்வடிவுபோலும் அல்லகிடீர் அகவாயில் தண்ணளி யிருக்கும்படி! விண்ண வர்கோனைக்கண்டு] - விடாய்த்தாரிருக்க, மீனுக்குத் தண்ணீர் வார்த்திருக்கிறவனை. பிரி கைக்கு ஸம்பாவனையில்லாதார்க்குத் தன்னைக்கொடுத்துக்கொடு நிற்கிறவனைக் கண்டு [வார்த்தைகள் கொண்டு] - வந்திலனாகிலும், சில வார்த்தைகள் சொல்லக்கடவனிறே. காட்சிக்குமேலே வார்த்தையுங்கேட்க இறே நீங்கள் புகுகிறது. "பாவிநீயென்றேன்று சொல்லாய்" என்னுமவரிறே. இப்போதுஇவர்க்கு "மாட்டேன்" என்னும் வார்த்தையும் அமையும். வார்த்தைகேட்கைக்கும் முடியப்போய்த் திரியவோ? என்னில்: [வார்த்தைகள் கொண்டருளி - வந்திருந்து - வைகலும் - உரையீர்] - ஒருகால்போய் அவன் வார்த்தை யைக்கேட்டு என்பக்கலிலே க்ருபையைப் பண்ணிவந்திருந்து, அத்தை எனக்கு எப்போ துஞ் சொல்லி என்னை உஜ்ஜீவிப்பியுங்கோள்! அன்றிக்கே, விண்ணவர்கோனை கண்ண னைக்கண்டு, வார்த்தைகள்கொண்டு - "ரஸவ:" (மாஸ:) என்று ஹலத்தோடே வ்யாப்தமான வார்த்தைகளைக்கொண்டு, என்பக்கலிலே க்ருபையைப்பண்ணிவந்திருந்து வைகலுமுரையீர் என்றுமாம். (கூ)

பௌஷ்கல்யம் - குறைவறுதி. இரைதேடுகிறது தன்கார்யத்துக்குஉடலான படியைக்காட்டுகிறாள் - நான் உபவாஸ இத்யாதி. நாங்களிப்போது இரைதேடவில்லையோ? என்ன - என்னையும் இத்யாதி. இப்போது வடிவைச்சொல்லுகிறதுக்குபாவம் - எல்லாவிடாயும் இத்யாதி. வடிவில்கறுப்புச்சொல்லுகிறதிலே ரஸோக்தி - இவள்கண்ணுக்கு இத்யாதி. கறுப்பாலே - குளிர்த்தியைச்சொல்லி, குளிர்த்திருக்கிற தென்று ஸ்வபாவார்த்தம்; சாடுவுக்கு, அஸஹ்யமாயிருக்கிறதென்றபடி. ஸப்தார்த்தம் - கறுப்பெல் லாம் இத்யாதி. மேகத்துக்கு மஹத்தையேதென்ன - மாறாதே இத்யாதி. "மாமுகில்போல்" என் றது - வடிவாதல், ஔதார்யமாதல். இப்பகுத்தில், "மா" என்று - ஸ்லாக்யதை. "கார்த்திரள்" இத் யாதியாலே - வடிவைச்சொன்னவாக்தரம், "கண்ணன்" என்கிறதுக்குபாவம் - அவ்வடிவு இத்யாதி. "விண்ணவர்கோன்" என்றதுக்குவெறுப்பாகபாவம் - டாய்த்தார் இத்யாதி. விவரணம் பிரிகைக்கு இத்யாதி. ஸம்பாவனை - யோக்யதை. அவனைக்கொண்டென்னாதே "வார்த்தைகள்கொண்டு" என்கிற தக்குபாவம் - வந்திலனாகிலும் இத்யாதி. "கண்டு - வார்த்தைகள்" என்றகூட்டிபாவம் - காட்சிக்கு இத்யாதி. வருகிறேனென்றவார்த்தை யென்னாதே, வெறுமனே, "வார்த்தைகள்" என்கிறதென்? என்ன - பாவி நீ இத்யாதி. பலிதம் - இப்போது இத்யாதி. "வார்த்தைமாத்ரம்-தாரதமாயிருக்கும்" என்கைக்கு - "கிரோஹஸீதாஹநாஶேஷு தத்ரதஃகயாடிரே । வனதெநவலாஜீவி ஷ்யலெஷஜெநாதாஸொயயா" என்றத்தை ப்ரமாணமாகக் கண்டுகொள்வது. ஏதேக - ஸீதாவசநேகேத்யர்த்தஃ. முடியப்போய்த்திரியவோவென்றது - இதுவே யாத்ரையாய்த்திரியவோ என்றபடி. "வார்த்தைகள்" என்றது - "வாரான், வரும்" என்கிற வார்த்தைகளாதல், ஹலவ்யாப்த மான வார்த்தைகளாதல். இப்போது இவர்க்குமாட்டேனென்னும் வார்த்தையுமென்றது - அவனைப் பிரிந்தமுடியும் தசையில், "அவர்பக்கலுள்ளதொன்று" என்று தன்னத்தை தரிசிக்கக் "மாட் டேன்" என்னும்வார்த்தையு மமையு மென்றபடி. 'பேர்த்துமற்றோர்' தொடங்கி, 'வார்த்தைகள்கொண் டருளி - வந்திருந்து வைகலும் உரையீர்' இத்யந்வயஃ. (க)

acharya.org

பத்தாம் பாட்டு.

வந்திருந்துஉம்முடையமணிச்சேவலும்நீருமெல்லாம்
அந்தாமோன்றமின்றி அலர்மேலசையுமன்னங்காள்!
என்திருமார்வற்கு என்னை இன்னவாறிவள்காண்மினென்று
மந்திரத்தோன்றுணர்த்தியுரையீர் மறுமாற்றங்களே.

ஆ.—(வந்திருந்து) - திருவோலக்கத்திலே எழுந்தருளியிருந்தஸமயத்தில் திருவுள்ளம் அந்யபரமாயிருக்கிறபோது சொல்லாதே, அவ்வோலக்கங்கிளம்பி திவ்யாந்தபுரத்திலே எழுந்தருளினால் அங்கே பிராட்டியுடைய திவ்யஸந்நிதியிலே திருவுள்ளத்திலே படும்படி என் திறம் விண்ணப்பஞ்செய்து, அவனருளிச்செய்தருளின மறுமாற்றங்கொண்டு என்னருகேவந்திருந்து சொல்லவேணுமென்று, அநவரத ஸம்ஶ்லேஷைகஹோ ருமான அன்னங்களைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், தன்பாடேவந்து ஸுஸ்திதமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கிற ஹம்ஸமிதுனங்களைக்குறித்து, பிராட்டியும் தானுங்கூட ரஹஸ்யமாக அநந்யபரனாய் எழுந்தருளியிருந்தவிடத்திலே என் உஸுரை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் எனக்கு வந்து சொல்லவேணுமென்று அருளிச்செய்கிறாள்.

[வந்திருந்தென்று தொடங்கி] - உம்முடைய ஶ்லாக்யமான சேவலும் நீரும் ஸபரிகரமாகவந்து ஓர் இடர்இன்றிக்கே அவர்மேலே ஸம்ஹோருங்களாலே அசைந்து வருகிற அன்னங்காள்! [என்திருவென்று தொடங்கி] - என் ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே உடையவனானவனுக்கு இப்படி இவள் துர்ஹதையானாள் என்று.

ப.—அநந்தரம், பரத்வஸௌலப்ய ப்ரகாஶகமான ஸ்ரீயபேதித்வத்தையுடையவனுக்கு, ஏகாந்தத்திலே, இவள்படி இதுகாணும் என்றொரு வார்த்தைசொல்லி, அவன்சொன்ன மறுமாற்றங்களெல்லாம் எனக்குச் சொல்லவேணுமென்று அன்னங்களை யர்த்திக்கிறாள்.

வந்து - (அபேக்ஷாநிரபேக்ஷமாக) வந்து, இருந்து - (அந்யபரதையின்றியே ஆபிமுக்யம்பண்ணி) இருந்து, உம்முடைய - உங்கள் கண்ணுக்கினிய, மணி - ஶ்லாக்யமான, சேவலும் - சேவல்களும், நீரும் - நீரும், எல்லாம் - மற்றுமுண்டான பந்துவர்க்கங்களுமெல்லாங்கூட, (ஸம்ஶ்லேஷரஸத்துக்கு), ஒன்றும் - ஒரு, அந்தரம் - இடைபூறு, இன்றி - இன்றியே, அலர்மேல் - புஷ்பங்களின்மேலே, அசையும் - உலாவுகிற, அன்னங்காள் - அன்னங்காள்! எம் - என்போல்வாரான பெண்பிறந்தார்க்கு ஸ்வாமிநியான, திரு-லக்ஷ்மியை, மார்வற்கு - திருமார்பிலேயுடையவனுக்கு, என்னை - என்னை, இவள் - இவள், இன்னவாறு - இப்படி இவ்வண்ணம், ஆனாள் - ஆனாள், காண்மின் - காணும், என்று - என்று, மந்திரத்து - அவனும் (அவளுமான) ஏகாந்தஸ்த்தலத்திலே, ஒன்று - ஒருவார்த்தை, உணர்த்தி - அறிவித்து, மறுமாற்றங்கள் - (அவன் அருளிச்செய்த) மறுமாற்றங்களை, உரையீர் - சொல்லுங்கோள்,

acharya.org

இ.—பத்தாம்பாட்டில், சில ஹம்ஸமிதுனங்களைக்குறித்து, பிராட்டியும்தானுமான ஏகாந்தத்திலே என்ஆஸையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் வந்துசொல்ல வேணுமென்கிறாள்.

[வந்து] - அழைபாதிருக்க நீங்களேவந்து, மஹாராஜரிருந்தவிடத்தே வந்து உபகரித்தவரைப்போலே யிருந்ததி உங்கள் நீர்மை! [இருந்து] - என் ஆர்த்திக் கெல்லாம் உடன்கேடாயிருந்து. [உம்முடைய மணிச்சேவலும் நீரும்] - ஶ்லாக்யமாய் லவ்யமான சேவலும், அப்படி இருக்கிற நீரும். பிரிந்து, தானும் உடம்புவெளுத்துப் பேடையையும் உடம்புவெளுக்கப்பண்ணும் சேவலைப்போலன்றிக்கே இருக்கை. [எல்லாம்] - "ஸவாஸுவளஸுஷணு" என்கிறபடியே ஸபரிகரமாக. [அந்தரமொன்றுமின்றி] - ஸம்ஶோகத்துக்கு வர்யகமான பிரிவுமின்றிக்கே, பூவின்மேல், கலவியால்வந்த ப்ரீதியோடே ஸஞ்சரிக்கிற அன்னங்காள்! மிதுனமானால் பூவிலும் ஸஞ்சரிக்கலாமாகாதே. [என் திருமார்வற்கு] - என் ஸ்வாமிநிபான பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே உடைபவற்கு: அவளருகேயிருக்க, அடியில்லாதாரைப்போலே நோவுபடுகிறபடி கண்டிகோளே. [என்னை] - அச்சேர்த்தியிலே அடிமைசெய்ய ஆசைப்பட்டு இழந்திருக்கிறவென்னை. [இன்னவாறிவள் காண்மினென்று] - இப்படி துர்மதையானாள் இவளென்று, "இவளுடைய வைவர்ண்யத்தைத் தங்களுடம்பிலே ஆவிஷ்கரித்துக் காட்டவல்லபோலே காணுமிவை" என்று சீயர் அருளிச்செய்வர். [மந்திரத்து] - உங்கள் வார்த்தை விலைசெல்லும்படி அவளும்அவனுமான ரஹஸ்யத்திலே: ப்ரேமாந்யராய் "வயுகாழி" என்கிறவர்கள் ஸந்நியியொழியச் சொல்லுங்கோள்; பராக்குக்கு ஸம்பாவனையுள்ள ஓலக்கத்திலே சொல்லாதே கொள்ளுங்கோள். [ஒன்றுணர்த்தி]- மத்யமபதத்திற் சொன்னபடியே அநந்யார்ஹதையை விண்ணப்பஞ்செய்து. [உரையீர் மறுமாற்றங்களே] - பூர்வபாகத்தைப்பார்த்து அவன் சொன்னவார்த்தைகளையும், நம் ஆஸையையும் ஸம்பந்யத்தையும் பற்ற அவள் சொல்லும் வார்த்தைகளையும் வந்து சொல்லுங்கோள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. சில ஹம்ஸமிதுனங்களைக்குறித்து, பிராட்டியுந்தானுமான ஏகாந்தத்திலே என்தஶையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம்வந்துசொல்லவேணுமென்கிறாள்.

[வந்திருந்து] - இதென்ன ஆபத்ஸகத்வந்தான்! உங்களுடைய ஸௌஹார்த்தம் இருந்தபடியென்தான்! இளையபெருமாளைஇடுவித்துவேதுப்பியழைப்பிக்கவேண்டாதிருக்கை. [வந்திருந்து] - மஹாராஜருடைய இடரைப் பெருமாள் வினவிக்கொண்டுசென்று தீர்த்தாற்போலே என்னார்த்திக்கெல்லாம் உடன்கேடாயிருந்து. [உம்முடைய மணிச்சேவலும்

பத்தாம்பாட்டு. —வந்திருந்து இத்யாதி. "மந்திரத்தொன்றுணர்த்தியுரையீர்" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை- சிலவறம்ஸ இத்யாதி.

"வந்திருந்து" என்கிறவளுடைய ஹார்த்தபாவம்- இதென்ன இத்யாதி. விவரணம் - உங்களுடைய இத்யாதி. இத்தால் - இவள் அழைபாதிருக்க ஆபத்திலேவந்து உதவுகையும், அதுக்கடியான ஸௌஹார்த்தமும் சொல்லுகிறதென்றபடி. இத்தால் வ்யாவ்ருத்தி - இளையபெருமாளை இத்யாதி வேதுப்பி - பயப்படுத்தி. தாங்களேவந்ததுக்கு த்ருஷ்டாந்தம் - மஹாராஜர் இத்யாதி.

acharya.org

நீருமேல்லாம்] - பரமபதத்தில் ஸ்த்ரீபுமான்களாயிருந்தாலும் அடிமைக்கு உறுப்பாயிருக்கு மாபோலே, இவற்றினுடைய இந்தபேதமும் தனக்குக் கார்யத்துக்குஉடல் என்றிருக்கிறாள். [மணிச்சேவல்] - இதுவும் ஒரு சேவலேதான்! தன்னுடையமணிச்சேவல், கடக்கவிருந்து இவளை உடம்புவெளுப்பித்துத் தான் குறியழியாதேயிறே இருக்கிறது. [எல்லாம்] "ஸவா ஸுவள ஸுஹ்ருதணு:" (ஸபுத்ரபௌத்ரஸ்ஸகண:) என்னுமாபோலே; பார்யாபுத்ராதிக ளோடேகூடப் பிறர்காரியஞ்செய்யஒருப்பட்டிருப்பாரைப்போலே. [அந்தரமொன்றுமின்றி]- என்னைப்போலே பிரிவோடேவ்யாப்தமான கலவியன்றிக்கே யிருக்கப் பெறுவதே ஸம்ஸ் லேஷவர்த்தகமான விஸ்லேஷமுமின்றிக்கே. [அலர்மேலசையு மன்னங்காள்]-மிதுநமாயிரு ப்பார்க்குப் பூவிலும் கால் வைக்கலாமாகாதே. பூவிலே கால்பொருந்தும்படியான சேருக் கன்றோ உங்களது? துறைவற்றாரிருக்கும்படி யிதுவாகாதே. [என்திருமார்வற்கு]-எனக்குஅங்கு ஓரடியில்லாமை நான் மிறுக்குப்படுகிறேனோ? "ஸீதாலமகூஷம்காகுத்ஸ்த:" (ஸீதாலமகூஷம்காகுத்ஸ்த:) என்று, சொன்னவார்த்தை விலைபோமவள் ஸந்நிதியிலே சொல்லுங்கோள்; நான் பற்றின வடைவே பற்றுங்கோளென்கிறாள். [என்னையின்னவாறிவள் காண்மினென்று]-பேச்சுக்குநிலமன்றுபோலே. [என்னை] - அச்சேர்த்தியிலே யடிமைசெய்ய ஆசைப்பட்ட என்னை. இப்படி துர்க்கதையானாள் இவளென்று "இவள் வைவர்ண்யத் தைத் தம்முடம்பிலே காட்டவும் வற்றாகாதே இவை" என்று சீயர் அருளிச்செய்வர். அன்றிக்கே, உம்முடைய தேவாரமோ! இவள் அந்தபுரபரிகர மன்றோ வென்னுங்கோள்.

நீரென்னுதே, "சேவலும்" என்றதுக்குபாவம் - பரமபதத்தில் இத்யாதி. "மணிச்சேவல்" என்று வர்ணித்ததுக்குபாவம் - இதுவும் இத்யாதி. இதுவு 'மொருசேவலேதானென்று இத்தை ஸ்லாகிக் கிறதென்? தனக்கு மணிச்சேவலில்லையோ? என்ன - தன்னுடைய இத்யாதி. மணிச்சேவல் - அழ கியசேவல். "மணிச்சேவலும்நீரும்" என்று - ஸ்த்ரீபுமான்களைச்சொல்லுகையாலே, "எல்லாம்" என்கிறபதம் - புத்ரபௌத்ராதிபரமென்னுமத்தை ஸப்ரமாணமாக அருளிச்செய்கிறார் - ஸபுத்ர இத் யாதி. விவரணம் - பார்யாபுத்ராதிகள் இத்யாதி. "அந்தரம் - இன்றி" என்றதுக்குபாவம் - என் னைப்போலே இத்யாதி. அந்தரம் - விச்சேதம். "ஒன்றுமின்றி" என்றதுக்குபாவம் - ஸம்ஸ்லேஷ இத்யாதி. "உம்முடையமணிச்சேவல்" இத்யாதியையுங்கூட்டி. "அலர்மேல்" என்றதுக்குபாவம் - மிதுநமாய் இத்யாதி. "அசையும்" என்றதுக்குபாவம் - பூவிலே இத்யாதி. "அசையும்" - உலாவு கிற. "மிதுநமாய்" இத்யாதிவாக்யவிவரணம் - துறைவற்றார் இத்யாதி. "என்கிறு" என்றதுக்கு பாவம் - எனக்கங்கோரடி இத்யாதி. மிறுக்கு - க்லேஶம். "என்றிநமார்வற்கு - உணர்த்தி" என்ற துக்குபாவம்-ஸீதாலமகூஷம் இத்யாதி. "ஸவாஸுஹ்ருதணுகூஸுராரைணுகூஸுணஸம்யகாஜ்ஞ: । ஸீதாலமகூஷம்காகுத்ஸ்தீஷ்வஸ்ரவ்ரவீத்" இத்யாரண்யகாண்டே. [கரு-கூ] "என்" என் றத்தைத் திருவோடேகூட்டி பாவார்த்தம் - நான்பற்றின இத்யாதி அதாவது - மலர்மகள்விரும்பு நமரும்பெறலடிகள்" என்றும், "நந்திருவுடையடிகள்" என்றும் நான் பற்றின வடைவே யென் னுதல்; "உம்முடையமணிச்சேவல்" என்று - நீங்கள் புருஷகாரமாகச் சேவலை நான்பற்றின அடைவே, நீங்களும் பிராட்டிபுருஷகாரமாக அவனைப்பற்றுங்கோளென்னுதல். இன்னவாறு இவள் காண்மின் - என்னைக்குறித்து நீங்கள் சொல்லுமிடத்தில், இவளுடையப்ரகாரம் இப்படி கிடீரென்று ஸப்தார்த்தம். 'இன்னவாறு" என்கிறதென்? பேசலாகாதோ? என்ன - பேச் சுக்கு இத்யாதி. கேண்மினென்னுதே, "காண்மின்" என்றபதஸாமர்த்யத்தைப்பற்ற அர்த் தாந்தரம் - இவள்வைவர்ண்யத்தை இத்யாதி. அன்னம்,வெளுத்திருக்கையாலே, இப்படி வெளுத் தப்ரகாரத்தை யுடையவளென்றபடி. பெரிய பிராட்டியார் பரிகரத்வமாகிற ப்ரகாரத்தையுடை யவளென்று மூன்றுமர்த்தம் - அன்றிக்கே உம்முடைய இத்யாதி. உம்முடைய தேவாரமோவென் றது - அர்ச்சக பாரதந்த்ரமான க்ருஹார்ச்சைபோலே உமக்குபாரதந்த்ரமோவென்றபடி. தேவாரமென்

acharya.org

அர்ச்சை - அர்ச்சகபராதீனமிறே. [மந்திரத்தோன்றுணர்த்தி] - ஓலக்கத்திற் சொல்லாதே கொள்ளுங்கோள்; "வயுதாடி" (வத்யதாம்) என்பார்இருக்கவுங்கூடும். அவள்சொல்லே ஜீவிக்குமிடத்தேசொல்லுங்கோள். [உரையீர்மறுமாற்றங்களே] - அவன்க்ரமப்ராப்திதோற்ற வார்த்தை சொல்லவும், அதுதான்ஒண்ணுதென்று "நகுஷ்ஹாவாரயுகி" (நகுஷ சிங்நாபராத்யதி) என்று த்வரிப்பித்துக்கொண்டு வருவார் முன்னே சொல்லுங்கோள். [மந் திரம்] - ப்ரணவம்: [ஒன்று] - அதில்மத்யம பதம்: அதிற்சொல்லுகிறபடியே அநந்யார் ஹதையை விண்ணப்பஞ்செய்து. [உரையீர்மறுமாற்றங்களே] - பூர்வாபராதத்தைப்பார்த்து அவன்சொல்லும் வார்த்தைகளையும், ஸம்பந்தத்தையும் நம் தஶையையும் பற்ற அவள் சொல்லும் வார்த்தைகளையும் கேட்டுவேந்து சொல்லுங்கோளென்கிறாள். (கo)

பதினோராம் பாட்டு.

மாற்றங்களாய்ந்துகொண்டு மதுசூதபிரானடிமேல்
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தோற்றங்களாயிரத்துள் இவையுமொருபத்துமவல்லார்
ஊற்றின்கண் நுண்மணல்போல் உருகாநிற்பர்நீராயே.

ஆ.—(மாற்றங்கள்) - பொலிந்துநின்றபிரான் திருவடிகளிலே, நாற்றங் கொள் பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன், அஸங்கல்பபூர்வகமாக, தத்விஷயநிரதி ஶயாநுராக ப்ரேரிதனாய்க்கொண்டு அதிமதுரமாய் ம்ருதுவாயிருந்த சொற்களாலே சொன்ன ஆயிரத்துள் இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குச் சென்ற வ்யஸநத்தையது ஸந்தித்தார், ஆத்மயாரணக்ஷமரன்றியே ஊற்றின்கண் நுண்மணல்போல் நீராயுருகாநிற்ப ரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இப்பத்தில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்யித்தார் ஊற்றின்கண் நுண்மணல்போலுருகாநிற்பர்நீராய் என்கிறார். [மாற்றமென்றுதொடங்கி]- "ஆதப்ரேஷணம் பண்ணுகையாலே எம்பெருமான் வரவு நிஶ்சிதம்" என்று தளிர்த்த திருநகரியையுடைய ஆழ்வார் ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனான எம்பெருமானுடைய திரு வடிகளிலே நல்லசொற்களைத் தெரிந்துகொண்டு அருளிச்செய்த. [தோற்றங்களாயிரத்

கிறது - க்ருஹார்ச்சையை. இவ்விடத்திலே விண்ணப்பஞ்செய்வார்:—கைவாளையில் தீர்த்தவெம்பெரு மான் கதையைநினைப்பது. மந்திரத்து - ஏகாந்தத்திலே. "மந்திரத்து" என்றதுக்குபாவம் - ஓலக்கந் தில் இத்யாதி. "மந்திரம்" என்றதுக்கு - கீழ், ஓலக்கமன்றிக்கே ஏகாந்தவாசகமாகவருளிச்செய்து, போகதஶையாக அர்த்தாந்தரம் - அவள்சொல்லே இத்யாதி. அதாவது - கேவலம் ஏகாந்தமானால், "கவ்ருஹம்ஜீவிதம்ஜஹ்யாம்க்ஷாம்வாஸீதெஸலுகூஷணாம்" என்று மறுக்கவுங்கூடும்; போக தஶையானால், இவளர்த்தியாதிருக்க "கவதுயாஹொவெடெஹி" என்றதானே அர்த்திக்கு மென்றபடி. 'உரையீர் மறுமாற்றங்களே' என்று பதோபாதாநம்பண்ணி, "உணர்த்தி" என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் - அவன்க்ரமப்ராப்தி இத்யாதி. மூன்றுமர்த்தம் - மந்திரம் ப்ரணவம் இத்யாதி. மத்யமபதம் - உகாரம். "மறுமாற்றங்கள்" என்கிறபஹுவசநத்துக்கர்த்தம் - பூர்வாபரா த்தத்தை இத்யாதி. மறுமாற்றம் - ப்ரத்யுத்தரம். க்ரமேணாந்வயம். (கo)

acharya.org

தென்று மேலுக்கு] - நியியினுடைய தோற்றம்போலேயிருக்கிற தோற்றத்தையுடைய ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் இதினர்த்தத்தில் ப்ரேமபாரவஸ்யத்தாலே த்ரவஸ்வபாவராகாநிற்பர்களென்று பலத்தை யருளிச் செய்கிறார்.

மாற்றங்கள் - விலக்ஷணமானஶப்தங்களை, ஆய்ந்துகொண்டு - ஆராய்ந்துகொண்டு, மதுசூதன் - ஜ்ஞாநஹேதுவான வேதங்களையபஹரித்த மதுவைநிரஸித்த, பிரான் - உபகாரகனுடைய, அடிமேல் - திருவடிகள் விஷயமாக, நாற்றங்கொள் - பரிமளோத்தரமான, பூ - பூவையுடைத்தான, பொழில் - பொழில்கள், சூழ் - சூழ்ந்த, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகராய், சடகோபன் - பாஹ்யகுத்ருஷ்டி நிரஸநசீலரான ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், தோற்றங்கள் - பகவதாவிர்ப்பாவம் போலே வேதாவிர்ப்பாவரூபமான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளும், ஒரு - அத்விதீயமான, இவை - இவை, பத்தும் - பத்தையும், வல்லார் - பாவவ்ருத்தியோடே அப்யஸிக்கவல்லவர்கள், ஊற்றின்கண் - ஊற்றினிடத்து, நுண்-நுண்ணிய, மணல்போல்-மணல் (நீர்வசத்திலேயொழுகுமா)போலே, நீராய் உருகாநிற்பர் - (பாவவ்ருத்தி பரவசராய்க்கொண்டு) ஆர்த்ரீபவியாநிற்பர்கள். இது கலித்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தில ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்ஸ்யித்தார் ஸியிலராவரென்கிறார். [மாற்றங்களாய்ந்துகொண்டு]-நல்லசொற்களைத் தெரிந்துகொண்டு. இத்தசையிலும் வாசகஶப்தங்கள் விலக்ஷணமாயிருக்கிறபடி; "ஶொகஃஶொகவோ மதஃ" என்கிறபடியே, விரோயிகளைப் போக்கித் தன்னையுபகரிக்குமவனையாயிற்றுக் கவி பாடிற்று. [நாற்றங்கொள் இத்யாதி] - ஈஶதப்ரேஷணத்தாலே "வரவுதப்பாது" என்று ஊர் ஸஞ்ஜாதபரிமளமானபடி. [தோற்றங்களாயிரம்] - நியியினுடைய தோற்றம்போலே யிருக்கை. [தோற்றங்களாயிரம] -ஆவிர்ஹவித்தவாயிரம். [ஊற்றின்கண இத்யாதி] - ஊற்றுவாயில் சிறுமணல் போலே நீராய் ஸியிலராவர். நம் ஈஶையைவாய்விட்டு நாட்டையழித்தோமாகாதேயென்கிறார். இத்தை ஹலமாகச் சொல்லிற்று, ஹமவத்ப்ரவணரைக் கண்டு ஈடுபடுகை நாட்டார்க்கு ப்ராப்யமென்கைக்காக.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் ஸியிலராவ ரென்கிறார்.

[மாற்றங்களாய்ந்துகொண்டு] - சுரமேறுவாரைப்போலே, ஹக்திபரவசராயிருப்பார்க்கு அடைவுபடப் பாசுரமிட்டுச் சொல்லப்போகாதிறே; இவ்வளவிலும் சொற்கள் நேர்பட்டபடி: நல்ல சொற்களைத் தெரிந்துகொண்டு. [மதுசூதபிரானடிமேல்]-விரோதிநிரஸநமே

நிகமம். மாற்றங்கள் இத்யாதி "உருகாநிற்பர் நீராய்" என்றத்தைப்பற்றஅவதாரிகை.

"மாற்றங்களாய்ந்துகொண்டு -" நல்லசொற்களையாராய்ந்துகொண்டென்று ஶப்தார்த்தம். இத்திருவாய்மொழியில் இவருடைய பக்திபாரவஸ்யத்தை யநுஸந்தித்துசங்கிக்கிறார் - சுரமேறுவாரை இத்யாதி. சுரம் - மலை. 'சொல்லப்போகாதிறே' என்றவநந்தரம், ஆயிருக்க "மாற்றங்களாய்ந்து" என்பானென் னென்ன என்று சங்கையைப்பூரிப்பது. பரிஹாரம் - இவ்வளவிலும் இத்யாதி. 'நேர்பட்டபடி' அவன்நினைவுமாறுமையாலே யென்றுகூட்டுவது. "மதுசூதன்" என்றநிருபக

acharya.org

ஸ்வபாவமாகயுடையவன்திருவடிகளிலே. [நாற்றங்கொளித்யாதி]-"ரஹஸ்யஸ்த்தலத்திலே ஆள் விடுகையினாலே வரவுதப்பாது" என்று இவர் தரித்தவாறே, சோலைகளும் நித்ய வஸந்தமானபடி. பரிமளோத்தரமான பூவையுடைத்தான பொழில்கள் சூழ்ந்த திருநகரி. [தோற்றங்களாயிரம்] - "ऽऽऽ

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—ஔசுஸ்ஷ்ஷுக்ஷஸ்கூ்ரா
யாயஸ்ஹமதயா ஜிஷ்ணுஸ்ஸாரஸ்யயொமாத ஸ்ரஹ்ஹெவெஸ்ஹாவாஷ்ரஸ்யாயத யா
ஸ்வாஸ்ரிகெவக்ஷவாதாக்ஷ । கூாஷ்ஷுவாஸ்ரீ ராஜ்ஷுயொமாஷவதரணஷஸ்வாஸ்ஷ்ஷ வாரு
ஷ்ஷுதஸ்ஸ ஸ்வீயாயதஸ்ஸஹ்ஹுதிஷயஷ்ஷுகயாரோஸ்ஸஷெவம்ஸ்ஸாரிஷ்ஷ॥''

திருவாய்மொழி நூற்றந்தாதி.

பொன்னுலகுபூமியெல்லாம்புள்ளினங்கட்கேவழங்கி
யென்னிடரைமாலுக்கியம்புமென - மன்னுதிரு
நாடுமுதற்றூதுநல்கிவிடுமாறனையே
நீடுலகீர்!போய்வணங்கும்நீர்.

ஆழ்வார் திருவடிகளேஸரணம், எம்பெருமானார் திருவடிகளே ஸரணம், சீயர்திருவடிகளேஸரணம்.

ஒன்பதாந்திருவாய்மொழி—நீராய் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(நீராய்.) - இப்படி தூதப்ரேஷணம் பண்ணியும் எம்பெருமான் வரக் காணாமையாலே, அவனைத் தம்முடைய பெரியவார்த்தியோடேகூடத் திருநாட்டிலே கேட்கும்படி கூப்பிட்டு அழைக்கிறார்.

ஓ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், இப்படி ஈதப்ரேஷணம் பண்ணின விடத்திலும் வாராதே, "ஊற்றின்கணுண்மணல்போ லுருகாநிற்பர்" என்னும் படியாலே ஸ்யாவரஜங்கமாத்மகமான ஜகத்தெல்லாம் தம்முடைய ஆர்த்தஶப்தத்தாலே உருகாநிற்கையாலே, தம்முடைய தசையை அறிவிக்கவல்லாரில்லை யென்று கோலி இவர் பெருங்கூப்பிடாகக் கூப்பிடப்புக, தன்னுடைய ஜகஜ்ஜாகாரதையைக்காட்டி யருளி "இனி என்செய்யக் கூப்பிடுகிறீர்?" என்று எம்பெருமான் அருளிச்செய்ப, வைஶ்வரூப்யங்கண்ட அர்ஜுநன் "சதுர்புஜமாய் ப்ரஸந்நமான வடிவைக்காணவேணும்" என்று அர்த்தித்தாற்போலே, "ஜகஜ்ஜாகாரதையைக் காட்டினவற்றால் போராது, என்னுடைய விடாய்க்கீடாக ஶஷ்வகூ்ராதிஹுவிதமான உன்னுடைய அப்ராக்ருதமான திருவுடம்போடே தோற்றிடருளவேணும்என்று பெரிய வார்த்தியோடே ஸ்ரீவைகுண்ட நாயகனுக்குக் கேட்கும்படி கூப்பிடுகிறார். என்னுடைய ஆர்த்தத்வநியாலே உன்னுடைய ஹயவிஹுதியும் விஸீர்ணமாகப் புகாநின்றது; எனக்காக வந்திலையேயாகிலும், உன்னுடைய விபூதி நிலைநிற்கும்படிவந்து தோற்றியருள வேணுமென்று மிகவும் ஆர்த்தமான மஹாத்வநியோடே கூப்பிடுகிறார் என்றுமாம்.

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், இப்படி வடகமுகத்தாலே ஸம்ஶ்லேஷிக்கப்பாரித்த இவருடைய ஆர்த்யதிஶயத்தைக்கண்டு ஈஶ்வரன் தன்னுடைய ஸர்வாத்மஹாவத்தாலே ஸமாதாநம்பண்ணப்பார்க்க, அது இவர்க்கு த்ருஷ்டிவிஷயமல்லாமையாலே, "அஸாதாரணமான விக்ரஹத்தோடே காணவேணும்" என்றுவிஶ்வரூபங்கண்ட அர்ஜுநனைப்போலே யாசைப்பட்டு அதுக்குஹேதுவான அநுஹாவ்யசிஹ்நயோகத்தை

acharya.org

யும், அழகைக்காட்டி அநந்யார்ஹமாக்கும் அதிஶயிதசக்தியையும், அகிலப்ரகாரரக்ஷணத்தையும், அதிப்ரபலவிரோதிநிவ்ருத்தியையும், பரத்வாத்யவஸ்த்தா பஞ்சகயோமத்தையும், அஶேஷஜநஸம்ஶ்லேஷத்தையும், அகிலவஸ்து வ்யாபகத்வத்தையும், விலக்ஷணவிக்ரஹயோமத்தையும், விரோதிநியமநயோக்யதையையும், அதிஶயித வைலக்ஷண்யத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விஶிஷ்டனான நீ உன்வடிவை என்னுடைய கண்ணுக்கு இலக்காம்படி காட்டியருளவேணும் என்று அநிநிவேஶாதிசயத்தாலே அத்யந்தம் ஆர்த்தராய்க் கூப்பிடுகிறார். இந்த ப்ராப்யவிஷயத்தில் அநிநிவேஶக்ருதையானவார்த்தியிறே ஆஶ்ரயணோந்முகனான அதிகாரிக்கு விஶேஷணம்.

இ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், கீழ் தூதுவிடுகிறவற்றுக்கு அங்குப் போனால் சொல்லும் வார்த்தையாக இவள் சொன்ன பாசுரத்தால்வந்த ஆர்த்தநாதத்தாலே ஸ்யாவரஜங்மமாத்மகமான ஜகத்தெல்லாம் உருகாநிற்கையாலே தம்முடைய ஶோகத்தை அறிவிக்கைக்கு க்ஷமரில்லை யென்றுபார்த்துத் தம்முடைய ஆர்த்தத்வநியாலே அழைத்துக்கொள்வாராக நினைக்க, தன்னுடைய ஜகதாகாரதையைக் காட்டியருளி "நீர் என்செய்யக் கூப்பிடுகிறீர்?" என்று அருளிச்செய்ய, ஜகச்சரீரியாயிருக்கிற இந்த ஜ்ஞாநலாஹத்தால் போராது; உன்னுடைய அஸாதாரண விக்ரஹத்தை எனக்குக் காட்டியருளவேணும் என்று வைஶ்வரூப்யத்தைக்கண்ட அர்ஜுநன் "சதுர்புஜமாய் ப்ரஸந்நமான வடிவைக் காணவேணும்" என்று அர்த்தித்தாற்போலே, விடாயெல்லாங்கெட, ஶுஶ்ரூஷாஹ்லாதிதமான அப்ராக்ருதமான வடிவோடே தோற்றியருளவேணுமென்று பெரிய ஆர்த்தியோடே பரமபதத்திலிருப்பும் நிலைகுலைந்துவந்து முகங்காட்ட வேண்டும்படி கூப்பிடுகிறார். என்னுடைய ஆர்த்தத்வநியாலே உன்னுடைய உபயவிலக்ஷணியும் அழியப்புகாநின்றது; என்னுடைய ரக்ஷணத்துக்காக வந்திலைபாகிலும் உன்னுடைய விபூதிரக்ஷணத்துக்காகவாகிலும் வரவேணுமென்று கூப்பிடுகிறார் என்றமாம்.

ஈடு.—"எங்குச்சென்றாகிலுங்கண்டு" என்றும், "வானவர்கோனைக்கண்டு" என்றும் தூதுபோகச்சொன்னார்; அவைபோகமாட்டாதபடி தம்முடைய ஆர்த்தத்வநியாலே யழித்தார்; "மரங்களுமிரங்கும்" என்று அசேதநங்களிரங்காநின்றால், சிறிது சைதந்யமுடைய பக்ஷிகள் அழியக்கேட்கவேண்டாவிறே; "ஊற்றின்கண்நுண்மணல்போலுருகாநிற்பர் நீராய்" என்றது - தூதரையொழியவன்றிறே. தம் பரிஸரத்தில் கால்நடைதந்து போவாரில்லையே. "அசேதநங்களுங்கூட அழிகிறவிடத்தில், பரமசேதநனைவனுக்குச் சொல்லவேணுமோ?" என்றுபார்த்து, தம் மிடற்றோசையையிட டழைத்துக்கொள்ளப் பார்க்கிறார். தமக்குஆர்த்தத்வநி கிடக்க, வேறொருவர்போகவேண்டும்படியாயிருந்ததோ?

நீராய்நிலனாய்ப்ரவேஶே: வ்ருத்தாநுவாத பூர்வகமாக ஸங்கதி - எங்குச்சென்றாகிலும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. திர்யக்குக்கள் ஈடுபடக்கூடுமோ? என்ன - மரங்களும் இத்யாதி. "பக்ஷிகளழியும்" என்கைக்குஸூசகமேதென்ன - ஊற்றின்கண் இத்யாதி. ஆகையாலே, 'தம்பரிசரத்தில்' என்றகூட்டுவது. ஆனால் இவர்செய்கிறதேதென்ன - அசேதநங்களும் இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - தமக்கார்த்தத்வநி இத்யாதி. இவருடைய ஆர்த்தத்வநியின் உறைப்பை யருளிச்செய்கிறார் - கலங்கா இத்யாதி. கால்குலைந்து - இருப்புக்குலைந்து. கால்நடைதந்து போவாரில்லாமையாலே கூப்பிடுகிறாரென்றார் - கீழ்; கால்நடைதந்துபோவாருண்டானாலும் கூப்பீடே அமோகஸாதநமென்கிறார் - இனித்தான் இத்யாதி. * பக்ஷநோக்கறியாதேயிருக்கிறவன்

acharya.org

* கலங்காப்பெருநகரமான ஸ்ரீவைகுண்டத்திலும் தரிக்கவொண்ணாதபடி, கால்குலைந்து வரும்படி பெருமிடறு செய்துகூப்பிடுகிறார். இனித்தான் தூதுபோவார்க்கு, காலாலேயாதல் சிறகாலேயாதல்போகவேண்டுகையாலே தடையுண்டு; இவர்மிடற்றோசைக்குத் தடையில்லையிறே! இவர்படுகிறவ்யஸநத்துக்கு ஹேதுசொல்லப்போகாது, பிராட்டி சிறையிருந்ததுக்கு ஹேதுசொல்லப்போகாதாப்போலே. அவளிருப்பு பராநுக்ரஹத்தாலேயானாற்போலே இவருடைய வ்யஸநமும் பராநுக்ரஹத்துக்கு உடலாயிருக்கிறபடி. அவள்சிறையிருந்தபடியை ஸ்ரீவால்மீகிமஹாமுனிவரானெழுதிவைத்து இன்றுநாடெல்லாம் வாழ்கிறாப்போலே, அன்று இவர்தாம்வ்யஸநப்பட்டாரேயாகிலும் இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் லோகத்துக்குத் தண்ணீர்ப்பந்தலாயிற்றது. திருக்குழலோசையாலே திருவாய்ப்பாடியிற்பெண்களெல்லாம் பட்டத்தைத் தம்மிடற்றோசையாலே அவன்படும்படி பண்ணுகிறார்.

"வாரீர்! நீர்நம்மை யிருந்தவிடத்தில் இருக்கவொட்டாதே இங்ஙன்படுத்துகிறதென்? நாம்உம்மைவிட்டுத் தூரப்போனோமோ? ஏதேனுமொன்றைப்பற்றினாலும் அது நம்மைப்பற்றிற்றென்று சொல்லலாம்படியிருக்கிற ஜகதாகாரதையைக்காட்டினோமே" என்று அவன் திருவுள்ளமாக; அதில் குறையென்? நீ ஜகச்சரீரனாய்நிற்கிற இந்தஜ்ஞாநமெனக்கில்லையோ? இந்தஜ்ஞாநந்தானேயிறே "அஸாதாரணாகாரத்தையும்காணவேணும்" என்னப்பண்ணுகிறது; எனக்குப்ராப்யமானது கிடக்க, அல்லாதவற்றைக் காட்டினால்அப்ரயோஜநமென்கிறார். அத்தையும் உன் ஐஶ்வர்யத்துக்குப்புறம்பல்லாமையாலே வேணுமாகில் ப்ரதிபத்திபண்ணுகிறேன்; அத்தால் வந்தது, உன்னதானவற்றை "என்னது" என்றிருக்கிற ப்ரமம்நிவ்ருத்தமாகிறது. அர்ஜுநனும் ஸ்ரீவிஶ்வரூபங் கண்டவநந்தரத்திலே "தெவெந வாரூவெணவதுஹுஜெந" (தேநைவரூபேணசதுர்ப்புஜேந)என்று அஸாதாரணமான வடிவை யெனக்குக் காட்டவேணும் என்றானிறே. என்னார்த்தத்வநி கேட்டிரங்கி வந்திலையாகிலும், உன்னுடைய விபூதியழியாமல் நோக்கவேணுமாகில், வா வென்கிறார் என்றுமாம். இவருடைய ஆர்த்தநாதந்தான் அவனுக்கு உபயவிபூதியிலும் குடியிருப்பரிதாய்க்காணும் இருக்கிறது.

இவரையிப்படிக் கூப்பிடவிடுகைக்கு ஹேதுவேதென்ன - இவர்படுகிற இத்யாதிவாக்யத்வயம். கர்மம் ஹேதுவென்றாலோ? என்னில் - அவளிருப்பு இத்யாதி. அதாவது - பிராட்டிஆஶ்ரிதார்த்தமாக லங்கையிலேயிருந்தாற்போலே, "இவரும் ஆஶ்ரிதார்த்தமாக துஃபப்பட்டாரேயாகிலும் சிலநாள் இவ்விபூதியிலேயிருந்தால் காடாகத்திருந்தும்" என்றிட்டுவைத்தானாகையாலே "கர்மம்" என்னவொண்ணாதென்றபடி. விவரணம் - அவள்சிறையிருந்த இத்யாதி. ஸிம்ஹாவலோகநந்யாயேந, மிடற்றோசையாலே ஈடுபடக்கூடுமோ? என்ன ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் - திருக்குழலோசை இத்யாதி. இவ்வாக்யத்துக்கு - 'இவர்மிடற்றோசைக்குத்தடையில்லையிறே' என்றவாக்யத்தோடே ஸங்கதி; நடுவு -ப்ராஸங்கிகம். ஆனால், முதற்பாட்டிலே - ஜகதாகாரதையைச் சொல்லுவானென்? என்ன- வாரீர் இத்யாதி. ஜகதாகாரதையைக் காட்டினோமேயென்றது, கீழே, "யாவையும்யாவருமாய்" என்றதைப்பற்ற. ஆகையாலே, 'எனக்குப்ராப்யமானது' என்றுகூட்டுவது. ஆனால், ஜகதாகாரதையும் உத்தேஶ்யமன்றோ? என்ன - அந்தையும் இத்யாதி. இந்தஜ்ஞாநந்தானே "அஸாதாரணாகாரதையையுங் காணவேணும்" என்னப்பண்ணுகிறதென்றதுக்கு த்ருஷ்டாந்தம் - அர்ஜுநனும் இத்யாதி. கீழே - "கொடியேன்பால்வாராய்" என்னுமளவும்கடாக்ஷித்துஸங்கதியருளிச்செய்து, "மண்ணும் விண்ணும்மகிழ" என்றத்தைக்கடாக்ஷித்து ஸங்ஶயத்தரம் - என்னார்த்தநிவ்ருத்தி இத்யாதி. அவன்வாராவிட்டாலழியுமோ? என்ன - இவருடைய இத்யாதி. "கிரீடிநம்மதிநம்வகு ஹஸ்ஸதிஹாதிகூவாம் ஊஷுஹாதெவெந! தெவெநவாரூவெணவதுஹுஜெந ஸஹஸ்ரவாஹொஹவவிஶ்வமூர்தெ" இதி தோன்வேமாரேரு.

acharya.org

முதற்பாட்டு.

நீராய்நிலனாய்த் தீயாய்க்காலாய்நெடுவானாய்
சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாய்அயனானாய்!
கூராராழிவெண்சங்கேந்திக் கோடியேன்பால்
வாராய்! ஒருநாள்மண்ணும்விண்ணும்மகிழவே.

நியதி. காலநியதியாவது - க்ருதாதிநியதி. அங்கநியதியாவது - ஸ்காநாத்யங்கநியதி. கீழே - காலப்ரயோகம் சரணம்புக்காரே, அதுக்கும் இதுக்கும் வாசியேதென்ன - கீழேயும் இத்யாதி. வாய்விடுகை - சாப்தமாகச்சொல்லுகை. உதாஹரணத்துக்குருஷ்டாந்தம் - கீழில் ப்ரபத்திகள் இத்யாதி. மேலுள்ள த்வயவிவரணம் - திருமந்த்ரத்திலும் இத்யாதி. வாசக ஶப்தம் - அகாரம். வாசகமானவென்றது - அர்த்தஸமர்ப்பகத்தாலே ஜ்ஞாபகமான என்றபடி. 'வாசகமானசப்தங்கள்' என்ற பன்மை - உகாரமகாரபதங்களைக் கடாக்ஷித்து. ப்ரபத்திதான் மோக்ஷப்ரதமோ? என்ன; மோக்ஷமாத்ரமன்றிக்கே ஸர்வ஫லஸாதகம் என்னுமதுக்கு ப்ரமாணம் - தாவதார்திஃ இத்யாதி. "தாவதார்திஸ்ததா யாவாஞ்சா தாவந்மோஹஸ்ததாஸுகம்। யாவதயா கிஶரணம்கோஸ்தொஷாவநாஶநம்" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே பகவத்தம்ப்ரதிப்ரஶ்நமாதயஃ. "ஸுகாதுராஜிஜ்ஞாஸுஃ" இத்யாத்யுக்தாதிகாரி சதுஷ்டய விஷயம் - இஸ்ஸம்ஸாரம். 'அவ்வளவே' என்றது - அவனை ஆஶ்ரயிக்குமளவே யென்றபடி. 'இழந்ததுபெறவேணும்' இத்யாதியாலே - ஆர்த்தனைச்சொல்லுகிறது. அதாவது - ப்ரஷ்டஸ்வர்ய காமனைச்சொல்லுகிறதென்றபடி. 'வாஞ்சா' என்ற ஐஶ்வர்யகாமனுடைய வாஞ்சையைச்

acharya.org

ஸுகம்), "ஏஷஹ்யேவாநந்தயாதி" (ஏஷஹ்யேவாநந்தயாதி)-என்கிறதுக்கு விரோதமாய்வரும் ஸுகங்களும் அவ்வளவே. "யாவதையாதிஶரணம் த்வாமஶேஷாகநாஶநம்" (யாவந்நயாதிஶரணம் த்வாமஶேஷாகநாஶநம்)-ஐஶ்வர்யம் ஆத்மப்ராப்தி பகவத்ப்ராப்திவிரோதி இவையெல்லா முன்னைக் கிட்டமளவேயிறே நிற்பதென்கிறது. இப்படியே தம்முடைய ஸகலவிரோதிகளும் போய்த் தம்முடைய ஸகலாபேக்ஷிதங்களும் கிடைக்கைக்கு ஒரு குறையில்லையென்று, ஸதா ஸந்நிஹிதனான திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார். இனித் தான், சரணாகதி ஸலப்ரதையாமிடத்தில் ஶரண்யன் பக்கலிலே பண்ணவும்வேணும்; தான் அதிகாரியாகவும் வேணும். வ்யதிரிக்த விஷயங்களிலே பண்ணுமிடத்தில் அதுதானே ஹேதுவாகக் காணுகின்றோமிறே. இங்ஙனேயிருக்கச்செய்தேயும் அவ்வோவிடங்களிலேயும் ஸலிக்கிற இது, இவ்விஷயத்தில் ஸலியாநின்றதென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தம். இனித் தான் அதிகாரியாமிடத்தில், மெய்யே அநந்யகதியாகவும் வேணும்; ஶரணம்புகா, ஸலித்ததில்லையென்னு, "ஸுஸமர்த்தம்விஜாநாதி" (அஸமர்த்தம்விஜாநாதி) என்பாராகாது. "மயர்வறமதிநலமருளினன்" என்னு, அநந்தரத்திலே மடலெடுத்துக்கொண்டு பறப்பவோர்வேணும். பண்ணின ப்ரபத்திக்கு

சொல்லுகையாலே, அர்த்தார்த்தியைச்சொல்லுகிறது. அப்ராப்தவிஷயத்திலென்றது, அபூர்வ ஐஶ்வர்யத்தி லென்றபடி. மோஹமென்றது - ஆத்மப்ராப்திகாமனுக்கும் ஆத்மாநுபவவிரோதியான தேஹாத்மாபிமாநரூபமான அஜ்ஞாநம். ஸர்வேஶ்வரன் திருவடிகளை ஆஶ்ரயித்தால் அதுபோகையாலே, ஆஶ்ரயிக்குமளவே யவனுக்கு அந்தஅஜ்ஞாநமுள்ளது என்றபடி. இத்தால் - ஜிஜ்ஞாஸுவைச் சொல்லுகிறது. "ஸுகம்" என்றது - பகவத்ப்ராப்திகாமனுக்கு ஆத்மாநுபவைஶ்வர்யாநுபவ ஸுகங்கள் விரோதியாகையாலே. ஸர்வேஶ்வரனை யாஶ்ரயித்தால் அதுபோகையாலே, ஆஶ்ரயிக்குமளவே அந்தஸுக முள்ளதென்றபடி. இத்தால் - ஜ்ஞாநியைச்சொல்லுகிறது. விரோதமாய்வரும் ஸுகங்களுமென்றது - ஜ்ஞாநிக்கு பகவதநுபவகாமவிரோதிகளான ஐஶ்வர்யாத்மாநுபவ ஸுகங்களுமென்றபடி. கீழெல்லாவற்றையும் அநுவதித்துக்கொண்டு "கஶேஷாவநாஶநம்" என்றதுக்கர்த்தம்- ஐஶ்வர்யம் இத்யாதி. "ஸுதிஃ, வாஞ்ச" என்கிற இரண்டிலும் அதிகாரிபேதமுண்டாகிலும், பலக்யத்தாலே ஏகமாக்கி 'ஐஶ்வர்யம்' என்கிறார். 'விரோதி' என்ற பதத்தை - ஐஶ்வர்ய விரோதி ஆத்மப்ராப்தி விரோதி பகவத்ப்ராப்தி விரோதி என்றெல்லாவற்றிலும் அந்வயிப்பது. இத்திருவாய்மொழியிலே, 'உலகமுண்டபெருவாயா" இத்யாதிகளாலே - ஶரண்யஸ்வரூபத்தையும், "குலதொலடியேன்" இத்யாதிகளாலே - அதிகாரிஸ்வரூபத்தையும் சொல்லி ஶரணம்புகுகிறது; ஶரணாகதியினுடைய கார்யகாரத்வத்துக்கு இரண்டும் அபேக்ஷிதமாகையாலே என்கிறார் - இனித்தான் இத்யாதி. ஶரண்ய னென்றது - குணாதிகனென்றபடி. குணஹீநவிஷயத்திலேபண்ணினால், ஸலஹாநிமாத்ரமன்றிக்கே அநர்த்தஹேதுவுமாமென்கிறார் - வ்யதிரிக்த இத்யாதி. ஹேதுத்வம் - "வாஸுதாநாம்ஶிவஸ்தாணாஶ்ஶயம்ஷாதஸுஹ்ருஸி" என்று ஶரணம்புக்க சக்ரவர்த்தி விஷயமாகப் பராசராமன்பக்கலிலே கண்டுகொள்வது. பகவத்வ்யதிரிக்தரான சிபி கபோதம் முதலானோர்பக்கலிலே பலப்ரதையாகவுங் காணுகின்றோமேயென்ன - இங்ஙனே இத்யாதி. அவ்வோவிடங்களிலேயும் என்றது-சிபிகபோதாதிவிஷயங்களிலேயு மென்றபடி. "தான் அதிகாரியாகவும்வேணும்" என்றதை யுபபாதிப்பதாக உபக்ரமிக்கிறார் - இனித்தான் அதிகாரியாமிடத்தில் இத்யாதி. அநந்யகதி யல்லாதார்க்கு ஸலவ்யாப்தமாகாதென்னுமத்தை ப்ரமாணமுகத்தாலே தர்ஶிப்பிக்கிறார் - காணம்புகா இத்யாதி. பின்னை யார் அதிகாரிகளாகவேணும்? என்ன, ஆழ்வார் போல்வார் ஆகவேணுமென்கிறார் - மயர்வற இத்யாதி. அதாவது - "அருளினன்" என்று - க்ருபையையே உபாயமாக அத்யவஸித்து, உடனே ஸலியாவிட்டாலும் ஸ்வப்ரவ்ருத்தியிலே அந்வயிக்கையன்றிக்கே, "மடலெடுத்

acharya.org

ஹலந் தாழ்த்ததென்ன வேறேபோக்கடியுடையார்க்குக் காரியமாகாதிறே. ''ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:) என்று அவன் தாழ்த்ததுவே ஹேதுவாக, ஜலதத்த்வத்தை யழித்துப் போகட்டு மற்றைநாலையுங்கொண்டு கார்யங் கொள்ளுகிறேன் என்றாரிறே. [க்ஷமயாஹி ஸமாயுக்தம்] (க்ஷமயாஹிஸமாயுக்தம்) - '' 'ஒரு பெண்பெண்டாட்டி எனக்கு என்றத்தை ஸ்வீகரிக்கை யாவதென்?' என்று ராஜ்யத்தைப் போகட்டுப் போறுத்துப் போந்தார்; இங்கே வருணனை வழிவேண்டி அவன் முகங்காட்டிற்றிலன் என்னு, சீறிக் காலைக் கையைக் கட்டாநின்றார்; இது இருந்தபடி யென்?'' என்றாற்போலே யிருந்தார்கள் முதலிகள். (க்ஷமைக்குவிஷயமுண்டு, ஈத்ருஶஜநத்தில் க்ஷமை யொண்ணாதென்கிறார்.) ''இவன் வந்திலன்'' என்று நாம் சீறவொண்ணாதபடி, வாலி புறப்படுகிறபோது தாரைவந்து காற்

ப்ர—சுஸமாஶ்ரயணமெனுமிதெநிமித்தமுணெஷ ஸுஹாமுணா:। ஸுத்ரஶாஸிநம்யுஷ்டுஷ்டுவிவரியாவகு॥கடு॥ஸவுதெ ஸுஷ்டுஷ்ணுவமொகுஸுகுரெதெநழி। நஸாஸ்தாரஶுதெ கீதிநுஸுஸ்தாரஶுதெயஶ:॥ கசு॥ ஸ்ரவுமுக்ஷணமொகெஹ்ரிநு ஜயொவாரணசிஶுஸுநி। கஷ்ஷிணநிஹிநுஶெஶுகரெஶுகுரமுயழு॥கஎ॥ நிரமுலதொயம்ஸளதிதெ ஸுவுவிஶ்வஶ்ரஸவுது:। ஶஹாஹொமாநிஶுதாநாம்கரிணாஸுகுரமாநிஹ॥கஅ॥ ஹொமிநாம் வஶ்ரநாமாநாம் யாஹிஸுநிஸுக்ஷண। ஸஶுஶுமுகிகாஜாலம் ஸஸீநகுரமுஶுரெ:॥ கசு॥ சுஷ்ரயுமுஜெநஶஹதாஸமுஶ்ரம் வாரிஶொஷயெ। க்ஷயாஹிஸமாயுக்தம் சாயம்குரமுயஶ:॥ உo॥ சுஸமுயுமிஜாநாதி யிகசாஸீஷ்ரஶொஜெநெ। நஶுயுயதி வாஸ்தாஶெஸாமரொரமுவசாதநு:॥ உக॥ வாவசாநயஸளதிதெ ஶுரமாஶுரமுஶ்ரவிஷொவசாநு। ஸாமரமொஷயிஷ்யாதிவஷ்ரமாஶுவவஷ்சாரு:॥உஉ॥''

ஒறேன்'' என்ற அச்சமுறத்தி அவனுலே கார்யங்கொள்ளுவாராகவேணு மென்றபடி மடலெடுக்கை ஸ்வரூபவிருத்த மானுலும், அவனைக்கொண்டே தம்முடைய கார்யத்தைத் தலைக்கட்டிக் கொள்ளுகையாலே அரங்கநிர்வத்துக்கு பல்லமில்லை என்ற திருவுள்ளப்பற்றி 'மடலெடுத்துக்கொண்டு புறப்படுவார் வேணும்'என்கிறார். ''சுஸமுயுமிஜாநாதி'' என்பார் அதிகாரிகளானுல் வரும்ஹாநியே தென்ன - பண்ணின இத்யாதி. வேறே போக்கடி யுடையார் ஆர்என்ன, இன்னார் என்கிறார் - ஸாமரம்இத்யாதி.''க்ஷயாஹிஸமாயுக்தம்சாயம்குரமுயஶ:। சுஸமுயுமிஜாநாதியிகு க்ஷாசீஷ்ரஶொஜெநெ ॥ வாவசாநயஸளதிதெ ஶுரமாஶுரமுஶ்ரவிஷொவசாநு। ஸாமரமொஷயிஷ்யாதி வஷ்ரமாஶுவவஷ்சாரு:॥'' இதி யுத்தகாண்டே ''யிகு க்ஷாசீ'' என்றதிலே நோக்காக அவதாரிகை - ஒருபெண்பெண்டாட்டி இத்யாதி. இவ்வாக்யத்துக்கு தாத்பர்யம் - பரிபவித்தது இருவர்க்கும் ஒத்திருக்கச்செய்தே அவளிடத்திலே க்ஷமைபண்ணினதென்? இங்கு ''க்ஷமைபண்ணவேண்டோம்'' என்கிறதென்? அங்கு க்ஷமைபண்ணினுல் இங்கும் க்ஷமைபண்ண வேண்டாவோ? என்று. காலைக் கையைக் கட்டுகையாவது-விற்காலைப் பிடிக்கையும், விரற்சரட்டைக் கட்டுகையு மென்றபடி. கால் - விற்கால். கை - விரற்சரடு. கையென்ற - விரற்சரட்டைச்சொல்லுமோ? என்ன; ''கையுடைகோதைகைக்கட்டியாகும்'' என்று நிகண்டு. அதாவது - கையென்றும், கோதையென்றும், கைக்கட்டிக்குப்பேர் என்றபடி. கைக்கட்டி - விரற்சரடு. சாடுவுக்கு, ஸ்புடம்: 'இருந்தார்கள் முதலிகள்' என்றவகந்தரம், முதலிகளுடைய சங்கைக்கு பரிஹாரம் அத்யாஹார்யம். அதாவது - கைகேயி ஸமுத்ராத்தைப்போலே அஸமர்த்தனுகநினைக்கவில்லை; அபலையாகையாலே, ராஜ்யத்தை யாசைப்பட்டான் இத்தனை; ஆகையாலே க்ஷமைபண்ணிவிட்டுவந்தோம்;

acharya.org

கட்டினவோபாதி, க்ஷமை வந்து நம்மைக் காற்கட்டாநின்றதென்றார்:—''சோழ'' (மாம்)- ''ஸுவ்ருத்தகுணவிதாநாம் ஸ்வபாவஜ்ஞோநம்ருஷ்டம்'' (ஸுப்தமத்தகுபிதாநாம் ஸ்வபாவ ஜ்ஞாநம் த்ருஷ்டம்) என்று, கோபம் விளைந்த வநந்தரம் ஜந்மத்தை யுணர்ந்தார். ''பிறர்கை பார்த்திருக்கும் குடிப்பிறப்பன்று'' என்றிருக்கிறதல்லை; நம்மை ''ஐயர்மகன்'' என்று அறிகிறதில்லை. † (''ஸுப்தைதுராதி'' (ஸுப்தேத்யாதி) - தந்தாம் ஸ்வபாவத்தை மறைத்து வர்த்தித்தவர்கள், ஸ்வப்நாதிதசையிலே ஸ்வஸ்வபாவாநுகுணம் பாஷிப்பர்களிறே; அப்படி யிவரும் க்ஷத்ரியத்வத்தை யுணர்ந்தார்.) ''சுயழ'' (அயம்)- மஹோததி யென்கிற பெருமையை நினைத்திராநிறது; தன்னைச் சிறுங்கித்திருக்கிற நம்மை அறிகிறதில்லை. ''உகுராலயஃ'' (மகராலயஃ)-ஒரு அயோத்யாதிபதி கோசலாதிபதிகளோடோக்கக் காணும் தன்னை நினைத்திருக்கிறது; தன்னை மீன்படுகுட்டமாக அறிகிறதில்லை. ''சுஸமர்த்தம்விஜாநாதி'' (அஸமர்த்தம்விஜாநாதி)-சேவ்வைகெடப் பரிமாறினாரையும் ஒக்கவிட்டுக்காரியங் கொள்ளவல்லோமென்று அறிகிறதில்லை. இவ்வளவில் செய்யவடுப்பதென்? என்னில் - ''யிகக்ஷதாழ'' (திக்ஷ்ணம்) இப்போது க்ஷமையையேண்டோம். விநியோகமுள்ள விடத்தே யன்றோ கார்யங்கொள்வது? கோபத்தோபாதி, கார்யகாலத்தேயழைத்துக் காரியங்கொள்ளப் பார்த்தோம். அதுவேன்? இக்ஷ்வாகுவம்ஶ்யரா யிருப்பார்க்கு க்ஷமை கொண்டு கார்யங்கொள்ளவேண்டாவோ? என்னில், ''ஶரணம்ருஷ்யஜொஜநே'' (ஈத்ருஶோ ஜநே)-அத்தால் பெற்றதென்? அது இங்கு ஜீவிக்கிறதில்லை. இதுக்கு இங்குள்ளாருடைய ஸம்பந்தமே ஹலியாநின்றதே. ஒன்பதுபாட்டாலும் ஶரண்யன்படி சொல்லி, பத்தாம் பாட்டிலே ஶரணம்புகுகிறார்.

இவன் நம்மை அஸமர்த்தனாகவிசாரிக்கையாலேஇவனிடத்திலே க்ஷமைவேண்டோம் என்கிறாரென்று, ஆஞ்ஜ, முதலிலே தேவரீர் வலியைக்காட்டாதே, ''தஸ்யராஜ்ஞஸ்ஸுவ்ருத்தகுணாஸ்ஸ ணைஃஹீதஶ்ரீ நியாஃஸ்ருஷ்டஸ்ய நிஶாஸிஹ்ரதிகுணாஃ'' என்ற மூன்றுநாள் கண்வளர்ந்தருளிச் சரணம்புகுவாரெனன்? என்கிற முதலிகளுடைய அபிப்ராயத்தை ஏற்றுதெரிந்துக் கொண்டு பரிஹரிக்கிறார் - இவன்வந்நிலன் இத்யாதி. இதுக்கு - ப்ரதம பதத்திலே நோக்கு. ''க்ஷுயாஸாயாகுவாஸ - சுஸமர்த்தம்விஜாநாதி'' என்று - ஹேதுகர்ப்ப விஶேஷணம். ''சுழ'' என்ற உறத்திச்சொன்னதுக்கு ஹாவம் - ஸுவ்ருத்த இத்யாதி ஜந்மத்தையுணர்ந்தவருடைய ஹார்த்தஹாவம் - பிறர்கைபார்த்திருக்கும் இத்யாதி. 'பிறர்கைபார்த்திருக்கும்' இத்யாதிக்கு ஸம்வாதத்வேந ''ஸ்வவீர்யமாஹாத்ம்யேநாஃஸ்வஸ்ரூபிதஃ'' என்றதைக் கண்டுகொள்வது. விவரணம் - நம்மைஐயர் இத்யாதி. ஐயர்மகனென்று - சம்பராந்தரன் மகனென்று. ஐயரென்றதுக்கு ''ஶதுராவிநஃ'' என்றதிலே நோக்கு. ''சுயழ'' என்று - பரிச்சேதித்துக்காட்டுகிறாரென்று ஹாவமருளிச்செய்கிறார் - மஹோததி இத்யாதி. ''உகுராலயஃ'' என்றதுக்கு ஹாவம் - தன்னைமீன்படு இத்யாதி. 'செவ்வைகெடப்பரிமாறினாரையும்' - அநீதியிலேநடந்தவர்களையு மென்றபடி. 'ஒக்கவிட்டு' - ''உசிநநீயஸ்ஸுவைகிரோஉவழ'' என்கிறபடியே ப்ரஹாரத்தாலே ஶிக்ஷித்தநுகூலராக்கி யென்றபடி. பின்னை எப்போதுவேணும்? என்ன - விநியோகம் இத்யாதி. விவரணம் - கோபத்தோபாதி இத்யாதி. இங்குள்ளாருடைய என்றது - ஸமுத்ரஸ்த்த ராவணாதிராக்ஷஸருடைய என்னுதல்; ஸமுத்ரஸ்த்த துஷ்டஜந்துக்களுடைய என்னுதல். பத்தாம்பாட்டிலே யன்றோ? ஶரணம்புகுகிறது; நடுவொன்பதுபாட்டுக்கும் ப்ரயோஜநமென்? என்ன - ஒன்பதுபாட்டாலும் இத்யாதி. அதாவது - ஶரண்யன் பக்கலிலே ஶரணம்புகுரவேண்டுகையாலே, ஒன்பதுபாட்டாலும் - ஶரண்யன்படிசொல்லி, பத்தாம்பாட்டிலே - ஶரணம்புகுகிறாரென்றபடி.

---

† குண்டலிதம் க்வாசிதகம்.

acharya.org

முதற்பாட்டு.

உலகமுண்டபெருவாயா உலப்பில்கீர்த்தியம்மானே !
நிலவுஞ்சுடர்சூழொளிமூர்த்தி நெடியாய் அடியேனுருயிரே !
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே !
குலதொலடியேனுனபாதங் கூடுமாறுகூறுயே.

ஆ.— காருண்ய வாத்ஸல்யாதி அநவயிகாதிமய அஸங்க்யேய கல்யாணகுணனுகையாலும், ஸ்வதேஜஸா நிகில ஜகத்தையும் உத்ஹாஸிப்பியாநின்ற திவ்யரூபத்தையுடையனுய் எனக்கு யாரகனுகையாலும, பரமவ்யோமநிலயனுன நீ கரணபத விதூரவர்த்தியாகையன்றியே கரணவிஷயமாகைக்காக, ஸகலலோக திலகஹூதமான திருமலையிலேபுகுந்து நின்றருளுகையாலும், நான உனக்குக்குடியடியேனுகையாலும் உன்திருவடிகளிலே என்னைச் சேர்த்தருளவேணு மென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், நீ போக்கி வேறொருமதியின்றிக்கே இருக்கிறஎன்னை, நீயே உன்திருவடிகளிலே சேரும்படி பண்ணியருளவேணும் என்கிறார்.

[உலகமென்று தொடங்கி] - ரக்ஷயத்தின் அளவன்றிக்கேயிருக்கும் பெரும் பாரிப்பை யுடையையாய் அமர்பாதமாயிருந்துள்ள ரக்ஷகத்வாதி குணப்ரயோயாலே லோகத்தையடைய அடிமைகொள்வதுஞ்செய்து, நித்யமாய் விலக்ஷணதேஜோரூபமான திருவடிவை யுடையையுமாய், அபரிச்சேத்யமான ஸௌந்தர்யாதிகளை யுடையையுமாயிருந்துவைத்து லோகத்துக்கெல்லாம் திலகமான திருமலையிலே நின்றருளி என்னை யடிமை கொள்வதுஞ்செய்து எனக்கு யாரகனுனவனே ! [குலதொலடியேன்] - குலப்ரயுக்தமாகப் பழையதாக அடிமையாயிருக்கிற நான்.

ப —முதற்பாட்டில், அகில ஜகத்ரக்ஷகமான ஸ்வஹாவவிசேஷங்களை யுடையையாய்க்கொண்டு திருமலையிலே ஸந்நிஹிதனுன உன்னை ஸ்வதஸ்ஸித்தபோஷத்வ ஸ்வரூபனுன நான் கிட்டும்ப்ரகாரம் அருளிச்செய்யவேணு மென்கிறார்.

(ப்ரளயாபத்திலே), உலகம்- லோகத்தை, உண்ட - அமுதுசெய்கிறவிடத்தில், பெரு - (ரக்ஷயத்தளவன்றியே) பெரும்பாரிப்பையுடைத்தான, வாயா - ரக்ஷணேபகரணமான திருப்பவளத்தையுடையனுய், (ரக்ஷணேபயுக்தமாய்), உலப்பு - முடிவு, இல்-இன்றியேயிருக்கும், கீர்த்தி - (ஜ்ஞாநஶக்த்யாதி ஸமஸ்த கல்யாணகுண) ப்ரயோயையும், அம்மானே - நிருபாதிகபோஷிதவ ஸ்வரூபத்தையு முடையனுய், (இந்த ரக்ஷணத்துக்கு அஸாதாரணமான பரிகரமாய்), நிலவும் சுடர் சூழ்- ஸ்வாஹாவிக ஸௌந்தர்யலாவண்யாத்யகிலகுண ஔஜ்ஜ்வல்ய பூர்ணமாய், ஒளி - அப்ராக்ருததேஜோமயமான, மூர்த்தி - திவ்யவிக்ரஹத்தை யுடையனுய், நெடியாய் - (கீழ்ச்சொன்ன ஸ்வரூபரூபகுணசேஷ்டிதங்களுக்குப்) பரிச்சேதமில்லாத பெருமையையுடையனுய், (இப்படி பஞ்சப்ரகார விசிஷ்டனுய்கொண்டு), அடியேன் - (த்வதீயனுன) எனக்கு, ஆர்உயிரே - பரிபூர்ணப்ராணபூதனுய், (இப்படி முகந்தோற்றுமல் நின்று ரக்ஷிக்கும் அவனன்றியே), உலகுக்கு - ஸர்வலோகத்துக்கும், திலதம் - ஊர்த்வபுண்ட்ரரூபேண ஶிரஸாவாஹ்யமான திலகம், ஆய்- ஆய்க்கொண்டு, நின்ற - (ஸுஸ்திரமாய்) நின்ற, திருவேங்கடத்து - திருமலையிலே,

acharya.org

எம்-எனக்கு, பெருமானே - உன்னுடைய ஸௌஶீல்யத்தை ப்ரகாசிப்பித்து நின்றவனே! குலம் - குலக்ரமாகதமாம்படி, தொல்- பழைய, அடியேன் - (அடியேனான) நான், உன- (ஸௌஶீல்யாய் ரக்ஷகனாய் ஜோக்யபூதனான)உன், பாதம்-திருவடிகளை, கூடும் - ப்ராபிக்கும், ஆறு - ப்ரகாரம், கூறாய் - அருளிச்செய்யவேணும்! ப்ரளயாபத்திலேயோ ரக்ஷிக்கலாவது! விரஹாபத்தில் ரக்ஷிக்கலாகாதோ? லோகமாக வீடுபடிலோ ரக்ஷிக்கலாவது!- அது ஒருவனுக்கு உண்டானால் ரக்ஷிக்கலாகாதோ? ஆர்த்தியை யறியாதாரையோ ரக்ஷிக்கலாவது! ஆர்த்தியறிந்து கூப்பிட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? அர்த்தித்வ மில்லாதாரையோ ரக்ஷிக்கலாவது! ஆசைப்பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? வயிற்றிலே வைத்தோ ரக்ஷிக்கலாவது! வடிவுகாட்டி ரக்ஷிக்கலாகாதோ? நீ அஹிநிவேஶித்தாரையோ ரக்ஷிக்கலாவது! உன்னை அஹிநிவேஶித்தாரை ரக்ஷிக்கலாகாதோ? வாயாலேயோ ரக்ஷிக்கலாவது! வார்த்தையாலே ரக்ஷிக்கலாகாதோ? அபர்யந்தகுணங்களை யழியமாறியோ ரக்ஷிக்கலாவது! அவற்றை யநு஭விப்பித்து ரக்ஷிக்கலாகாதோ? உறவறியாத லோகத்தையோ ரக்ஷிக்கலாவது! உறவறிந்த விஷயத்தை ரக்ஷிக்கலாகாதோ? வடிவில் வாசியறியாதாரையோ ரக்ஷிக்கலாவது! வாசியறிந்தாரை ரக்ஷிக்கலாகாதோ? பெருமை யுணராதாரையோ ரக்ஷிக்கலாவது! பெருமை யுணர்ந்தாரை ரக்ஷிக்கலாகாதோ? வ்யதிரேகத்தில் யரிப்பாரையோ ரக்ஷிக்கலாவது! வ்யதிரேகத்தில் யரியாதாரை ரக்ஷிக்கலாகாதோ? ஸௌலப்யஜ்ஞாந மில்லாதாரையோ ரக்ஷிக்கலாவது! "ஸுலபன்" என்றறிந்தாரை ரக்ஷிக்கலாகாதோ? அந்யஶேஷபூதரையே ரக்ஷிக்கலாவது! அநந்யார்ஹ ஶேஷபூதரை ரக்ஷிக்கலாகாதோ? அந்யகதிகளையோ ரக்ஷிக்கலாவது! அநந்யகதிகளை ரக்ஷிக்கலாகாதோ? ப்ரயோஜநாந்தரபரரையோ ரக்ஷிக்கலாவது! அநந்யப்ரயோஜநரை ரக்ஷிக்கலாகாதோ? பிரியநினைப்பாரையோ ரக்ஷிக்கலாவது! கூடநினைப்பாரை ரக்ஷிக்கலாகாதோ? மஹாவ்யாபாரம்பண்ணியோ ரக்ஷிக்கலாவது! "கோஶுஉ?" என்று ரக்ஷிக்கலாகாதோ? என்று கருத்து.

இ.—முதற்பாட்டில், அநந்யகதியான நான் உன்னைவந்து கிட்டுவதொரு விரகு பார்க்கவேணுமென்கிறார்.

[உலகமுண்ட பெருவாயா] - ரக்ஷயத்தினளவன்றிக்கே யிருக்கும் பெரிய பாரிப்பையுடையவனே! உன்னுடைய பாரிப்புக்கும் என்னுடைய ஆர்த்திக்கும் என்ன சேர்த்தியுண்டு? நீ யறிந்த ஸம்வந்யமும் ஆபத்துமே முதலாக ரக்ஷிக்குமவனே! ஒரு லோகத்துக்காக ஆபத்துவரிலோ நோக்கலாவது! லோகத்துக்காக உண்டான ஆபத்து ஒருவனுக்கு உண்டானால் நோக்கலாகாதோ? ப்ரளயார்ணவத்திலேயோ நோக்குவது! ஸம்ஸாரார்ணவத்திலே அகப்பட்டாரை நோக்கலாகாதோ? அபேக்ஷியாதார்க்கோ உதவலாவது! அபேக்ஷித்தார்க்கு உதவலாகாதோ? ஶரீரவியோகத்துக்குவரும் ஆபத்தோ நோக்கலாவது! ஸத்தை அழியும் ஆபத்தில் நோக்கலாகாதோ? ஜலப்ரளயத்துக்கோ உதவலாவது! விரஹப்ரளயத்துக்கு உதவலாகாதோ? பிறரால்வரும் ஆபத்தோ நோக்கலாவது! உன்னால்வரும் ஆபத்து நோக்கலாகாதோ? [உலப்பில் கீர்த்தியம்மானே]- ஒன்றைச் சொன்னேனத்தனையல்லது, ஸஹஜமுவமாக நீ ரக்ஷித்துப் படைத்த குணப்ரயோஜநாலே ஸர்வலோகத்துக்கும் ஸ்வாமியானவனே! இதுக்குமுன்பு, ஆர்ஜித்த புகழையுடைய ஒருவ்யக்தியில் உதவாமையாலே யிழக்கக்கிடாய் புகுகிறாய். † * பொழி

† திருநெடுந்தாண்டகம்—கரு.

acharya.org

லேழுங் காவல்பூண்ட புகழையிறே யிழக்கப்புகுகிறது. ஸ்வரூபமொழிய குணத்துக் காயிற்று இவர் தோற்றது. [நிலவும் இத்யாதி] - கடலிலே தள்ளினாலும் விடவொண்ணாதவடிவழகு குணஹீநனானாலும் விடவொண்ணாத வடிவழகு. நித்யமாய் நிஷ்க்ருஷ்டஸத்த்வமாய் நிரவயிகதேஜோரூபமான விக்ரஹத்தையுடையவனே! [சுடர்சூழொளி மூர்த்தி] - உள்ளுமண்ணீடாய்ப் புறம்பு ஒளியூட்டி யிருக்கையன்றிக்கே, உள்வாயோடு புறவாயோடு வாசியற ஒளியேயா யிருக்கிறபடி. [நெடியாய்] - அபரிச்சேத்யமான ஸௌந்தர்யாதிகளையுடையவனே! "யதோவாசோநிவர்தந்தே" என்கிற ஆத்ம குணங்களுக்கு எல்லைகாணிலும், ரூபகுணங்களுக்கு எல்லை யின்றிக்கே யிருக்கிறபடி. [அடியேனுருயிரே] - ஸ்வரூபத்தைப்பார்த்து வ்யதிரேகத்தில் தேறியிருக்கவொண்ணாதபடி பண்ணினவனே! ஆத்மாவையொழிய கேவலஶரீரத்தை யரிப்பிக்கப்போமோ? [திலதம் இத்யாதி] - லோகத்துக்குத் திலதமான திருமலையிலே நின்றருளின உன் ஸௌஶீல்யத்தை எனக்குஅறிவித்து, உன்னாலல்லது செல்லாதபடியும் பண்ணினவனே! ஸந்நியியில்லாமல்தா னிழக்கிறேனோ? [குலதொலடியேன்] - குலமாகப் பழைய அடிமையாயிருக்கிற நான். இத்தால் - தம்முடைய யோக்யதை சொல்லுகிறாரல்லர்; அநந்யஶேஷத்வம் சொல்லுகிறார். அநந்யார்ஹமான குடியிலுள்ளாரைப் புறம்பு கைக்கொள்ளுவா ரில்லையென்கை. [உன பாதங் கூடுமாறு] - உன் திருவடிகளைக் கிட்டி யடிமை செய்யும்படி; இவருடைய ஸாயுஜ்யமிருக்கிறபடி. [கூறுமே] - நம்மைப்பெறுவானென்றிரங்கி ‡ "ஶரணமஹம்" என்று அருளவேணும். உனக்கு ஓர்உக்தி: எனக்கு ஸ்வரூபலாபம்.

ஈடு.—முதற்பாட்டு உன்னையொழிய வேறுகதி யின்றிக்கேயிருக்கிற என்னை உன் திருவடிகளிலே சேரும்படிபண்ணி யருளவேணுமென்கிறார்.

[உலகமுண்ட பெருவாயா] - தேவர்திருவடிகளைக் கிட்டாதவன்று எனக்குஉண்டான தளர்த்தி பத்து ப்ரளயாபத்தோபாதி போராதோ? ரக்ஷியத்தினளவன்றிக்கே யிருக்கும் பாரிப்பையுடையவனே! உன்பாரிப்புக்கும் என்னார்த்திக்கும் என்னசேர்த்தியுண்டு? நீயறிந்த ஸம்பந்தமும் ஆபத்துமே கைம்முதலாக ரக்ஷிக்குமவனன்றோ! ஒரு விபூதிக்காக ஆபத்து வரிலோ நோக்கலாவது! விபூதிக்காகவுண்டான ஆபத்து எனக்குஒருவனுக்குமுண்டானால் நோக்கலாகாதோ? ப்ரளயார்ணவத்திலே யழுந்துவாரையோ நோக்கலாவது! ஸம்ஸாரார்ணவத்தில்அழுந்துவாரை நோக்கலாகாதோ? அபேக்ஷியாதாரையோ நோக்கலாவது! அபேக்ஷித்

முதற்பாட்டு.—உலகமுண்ட இத்யாதி. "குலதொலடியேன்" இத்யாதியைக்கடாக்ஷித்தவாரிகை - உன்னையொழிய இத்யாதி.

ஜகத்துக்கு ப்ரளயாபத்துண்டாகையாலே ரக்ஷித்தோம்; உமக்கு ஆபத்தில்லையே? என்ன - தேவர்திருவடிகளை இத்யாதி. "பெரு" என்றதுக்குஆவம் - ரக்ஷியத்தின் இத்யாதி. பெருமை - பாரிப்பின் அதிஶயத்தைச்சொல்லுகிறது. இப்பாரிப்பையிட்டு அவனை ஸம்போதிக்கிறவருடைய ஹார்த்தமாவம் - உன்பாரிப்புக்கும் இத்யாதி. ரக்ஷிக்கும்போது ஒருகைம்முதல் வேண்டாவோ? என்ன - நீயறிந்த இத்யாதி. "உலகம்" என்றதைக் கடாக்ஷித்து, வைஹாஸநாமநுக்ரஹோந்யாய்யஃ அன்றோ? என்ன - ஒருவிபூதிக்காக இத்யாதி. ஏகப்ரளயந்தானாலும், அத்தைப்பற்ற எனக்கு வாசியுண்டென்கிறார், 'ப்ரளயார்ணவத்திலே' இத்யாதிவாக்யத்வயத்தாலே. "உலகம்" என்ற அசேதநஸமாதிக்குஆவம் - அபேக்ஷியாதாரையோ இத்யாதி. ரக்ஷணத்தை இதிசேஷஃ ப்ரளயார்ணவத்

‡ ஶரணாகதி—கஅ—66.

acharya.org

தார்க்குஉதவலாகாதோ? ஶரீரத்துக்குவரும் ஆபத்தோ நோக்கலாவது! ஆத்மாவுக்குவரும் ஆபத்துநோக்கலாகாதோ? ஜலப்ரளயத்திலேஅகப்படிலோ நோக்கலாவது! விரஹப்ரளயத்துக்கு உதவலாகாதோ? பிறரால்வரும் ஆபத்தோநோக்கலாவது! உன்னால்வருமாபத்து நோக்கலாகாதோ? "ஶரணம்புகாதாரைரக்ஷிக்கவேணும்" என்கிற நியதியுண்டோ! ஶரணம்புக்காரை ரக்ஷிக்கலாகாதோ? ரக்ஷித்துச்சமைந்து பின்னையும் "ஒன்றும்செய்யப்பெற்றிலோம்" என்றிருக்கக்கடவ உனக்கு என்னுடைய ரக்ஷணத்திலேயங்வயியாதே கைவாங்கியிருக்கைபோருமோ? ப்ரளயாபத்தைரக்ஷித்துப்பின்பும் "நாம் இவற்றுக்குச்செய்தது ஒன்றுண்டோ?" என்று உடன்கிடந்தாரை மடிதடவி, பின்னை "என்செய்தோமானோம்" என்றுதபிப்பாரைப்போலே இழவுபட்டிருப்பானொரு வன்றோ நீ! [பெருவாயா] - ரக்ஷியத்தினளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பு இருக்கிறபடி. அவற்றின்பக்கலுண்டான ரக்ஷணத்தில் பாரிப்போபாதியும்போரும் தம்பக்கல் உபேக்ஷையென்றிருக்கிறார். [பெருவாயா]-த்ரௌபதி "ஶரணம்" என்ற உக்தியித்தனையும் திருவுள்ளத்தே கிடந்து, ஸதஸ்ஸில் அவன் பரிஹவித்த பரிஹவத்தையம் பரிஹரித்து, துர்யோதநாதிகளையும் நிரஸித்து, தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து, இவள் குழலையும் முடிப்பித்துப் பின்பும் "ஶணம்வ்ரவ்ரஜிவஶெ" (ருணம்ப்ரவ்ருத்தநிவரே) என்று குறைவாளனாய், பரமபதத்துக்கு எழுந்தருளுகிறபோதும் "நாதிஸ்வஸ்தநா?" (நாதிஸ்வஸ்த்தமநா?) என்று திருவுள்ளத்தில் புண்ணேடேயிறே யெழுந்தருளிற்று. [உலப்பில்கீர்த்தியம்மானே] - இவனுக்கு ரக்ஷகத்வம் வந்தேறியாய்ப்போய், பழையதுகொண்டு வளைப்பிடுகிறேனல்லேன்; இப்படி லோகத்தை ரக்ஷித்து ஆர்ஜித்தபுகழுக்கு முடிவில்லையென்கிறது * பொழிலேழும் காவல் பூண்ட புக

நில் அழுந்துவார்க்கு வந்த ஆபத்து எது? ஸம்ஸாரார்ணவத்தில் அழுந்துவார்க்குவந்த ஆபத்து எது? என்ன, அருளிச்செய்கிறார் - ஶரீரத்துக்கு இத்யாதி. ஏகப்ரளய மானாலும், இன்னம் ஒருவழியாலே அதுக்கும் இதுக்கும் வாசியுண்டென்கிறார் - ஜலப்ரளயத்திலே இத்யாதி. இத்தால்வாசியேதென்ன? அருளிச்செய்கிறார் - பிறரால் இத்யாதி. "அபேக்ஷியாதாரையோ" இத்யாதிவாக்யவிவரணம் - ஶரணம் இத்யாதி. ஶரணாகதியாவது - *ப்ரார்த்தநாமதிமிறே "ரக்ஷபத்தினளவன்றிக்கே" இத்யாதிவாக்யவிவரணம் - ரக்ஷித்துச்சமைந்து இத்யாதி. ரக்ஷித்துச்சமைந்து பின்னையும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்றிருந்தப்ரகாரம் எதென்ன - ப்ரளயாபத்தை இத்யாதி. மடிதடவி - மடியிலுண்டானதாரவ்யத்தைபபஹரித்து. "ரக்ஷித்துச்சமைந்து" இத்யாதியால் சொன்னஅர்த்தம் - "பெருவாயா"என்றத்தைக் கடாக்ஷித்தென்னுமிடந்தோன்ற, மீளவும் பதோபாதாநம்பண்ணி அதுக்கு அர்த்தம் - ரக்ஷியத்தினளவல்லாத இத்யாதி. இத்தால்ஹவிதம் - அவற்றின்பக்கல் இத்யாதி. ரக்ஷித்தபின்பும் "ஒன்றும்செய்யப்பெற்றிலோம்" என்றிருக்குமென்றத்தை ஒருவிஶேஷநிஷ்டமாக்கிக்காட்டுகிறார் - த்ரௌபதி இத்யாதி. இதுக்காக மீளவும் பதோபாதாநம் - 'பெருவாயா' என்ற. "மொவிஜெதியஷாகு ஜுத்வுஷாரோஷ ஶரவாஸிநடி । ஶணம்வ்ரவ்ரஜிவஶெஹ்ரடியா ஊாவஸவபூதி" இதி மஹாபாரதே. "நாதிஸ்வஸ்தநா?" என்கிறதுக்கு - ப்ரமாணத்திரட்டி லாகரங்கண்டுகொள்வது. ப்ரளயாபத்ஸகத்வ கதாகத்தரம் "உலப்பில்கீர்த்தியம்மானே" என்கிற வாக்யத்துக்குஹார்த்தஹாவம்-இவனுக்குரக்ஷகத்வம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. இப்படிலோகத்தை ரக்ஷித்தென்றது - காதாசித்கமாகவன்றிக்கே ஸர்வதாரக்ஷித்து என்றபடி. ரக்ஷணத்தால்வந்த புகழுக்கு ப்ரயாணம் - பொழிலேழும் இத்யாதி. திருநெடுந்தாண்டகத்தில் "பொன்னுலகு", 'பொழிலேழும் காவல்பூண்டபுகழானுய்' - ஸப்தலோகங்களையும் ரக்ஷிக்கையிலே பூண்டு அத்தால்வந்த புகழையுடையவனேயென்றபடி. ஶப்தார்த்தம் - இப்படிகளால் இத்யாதி. இப்படிகளாலென்றது - கீழ்ச்சொன்ன

acharya.org

ழிறே. இப்படிகளால் வந்த குணவத்தா ப்ரயோஜனையுடைய ஸர்வேஶ்வரனே! "தஸ்ய நாமமஹத்யஶः" (தஸ்யநாமமஹத்யஶः) என்றும், "யஶஸஶ்சைகபாஜநம்" (யஶஸஶ்சைகபாஜநம்) என்றும் உபதேஶகம்யமன்றிக்கே, "விதிதः" (விதிதः) என்று ஶாஸ்த்ரகோஷ்டியிலும் இப்படி ப்ரஸித்தமாயன்றோ உன் புகழிருப்பது! வாயுகத்தின் ஸந்நிதியிலே வாத்யமும் ஜீவிக்கும்படியன்றோ உன்னுடைய ஆஜ்ஞையிருப்பது! அவன் நினைத்தவன்று பாயகந்தானே பாத்யத்துக்குப் பாலாட்டிவளராநிற்குமிறே. [உலப்பில் கீர்த்தியம்மானே] - "மஹாநாராகரோமஹாந்" (குணநாமாகரோமஹாந்) என்றும், "தயாகுணாஹ்யநந்தஸ்ய" (ததாகுணஹ்யநந்தஸ்ய) என்றும், "வஷாயுதைர்யஸ்ய குணநஶக்யாः" (வர்ஷாயுதைர்யஸ்ய குணநஶக்யாः) என்றும், "பஹவோ ந்ருபகல்யாண குணபுத்ரஸ்ய ஸந்திதே" (பஹவோந்ருபகல்யாணகுணபுத்ரஸ்ய ஸந்திதே) என்றும் சொல்லுகிற குணங்களுக்கு முடிவின்றிக்கேயிருக்கை. இவற்றை எல்லைகாண நினைத்தால் கரைகண்டமேளவோண்ணாது; மதிக்ஷயத்

ப்ர.—கிஷ்கிந்தாகாண்டே [கரு] வாலிநம்வ்ருதிதாரா, "நிவாஸவ்ருக்ஷஸ்தாயுஷாரோவஹாநாம்வராமதிः। ஸுதுராநாம்ஸ்ரயஶ்சைவ யஶஸஶ்சைகபாஜநம்॥ ஜ்ஞாநவிஜ்ஞாநஸம்பந்நோ நிஷ்ணாதः விதः। யாதுநாநிவ ஶைலேந்த்ர மஹாநாராகரோமஹாந்॥ உ ½॥

ஸுஹாராதேகுணபுவபுணி [அம்] குணபுः, "வஷாயுதைர்யஸ்ய மஹாநஶக்யாவக்தும்ஸமேதைரபிஸவபுஷொகெः। ஸுஹாதநஶஷுகராஸி வாணெவிபுஷ்ணாஜிபுஷ்ணாவபுஸுஷெவாதஜஸ்ய॥ ருசு ½॥

கயொயுராகாண்டே [உ] "தெதஸுபுஸுஹாதாநம் வளரா ஜாநவ ஶெஸஹ। பஹவோ ந்ருபகல்யாணமஹாணாः புத்ரஸ்ய ஸந்திதே॥ உசு॥"

ஆபத்ஸஹத்வாதிகளை. குணவத்தாப்ரயோஜநக்கு ப்ரமாணங்கள் - தஸ்யநாம இத்யாதி †"நகஶ்சைகஶுஶநகஸ்ய நாஸுஹஸ்ய" "நிவாஸவ்ருக்ஷஸ்தாயுஷாரோவஹாநாம்வராமதிः। ஸுதுராநாம்ஸ்ரயஶ்சைவயஶஸஶ்சைகபாஜநம்" இதி வாலிநம்ப்ரதி தாரா. "விதிதஸ்ஸஹியஸுஜ்ஞாணாமதவதலுः। தெநஶெத்ரஸ்வதுதெயஜீவிதுஶிஹ்ஸி" இதிஸுந்தரகாண்டே ராவணம்ப்ரதிஸீதா [21-20]. ரகுநாதவத்தின்சரமாவதி- வாயுகத்தின் இத்யாதி. வாதகமென்றது - பெரியதிருவடியை வாத்யமென்றது - ஸுமுகனை. இப்படிகூடுமோ? என்ன - அவன் நினைத்த இத்யாதி. இவ்விடத்திலே- ‡"ஸுரிதுஸ்ஸுவிஷம்வயுழ்" இத்யாத்யநுஸந்தேயம். "கீர்த்தி" என்றதுக்கு குணவத்தாப்ரயோஜகக் கீழருளிச்செய்து, "கீதுதஜகிதிः" என்று குணபரமாகஅர்த்தாந்தரம் - குணநாம் இத்யாதி. "யாதுநாநிவஶைலேந்த்ர மஹாணாராகரோமஹாந்" இதி தாரா. "யயாராதாநிஜலயொரஸ்வ்யாநிவ ஸுக। தயாமஹாணாஹ்யநந்தஸ்ய ஸுஸ்வ்யாஸுஹாதநः" இதி மாத்ஸ்யேபுராணே. 'வஷாயுதைர்யஸ்ய மஹாணாநஶக்யாः வக்தும்ஸமேதைரபி ஸவபுஷொகெः" இதி கர்ணபர்வணிகர்ணः [80, 56]. "பஹவோ ந்ருபகல்யாணமஹாணாः" இத்யயோத்யாகாண்டே. அப்படிமுடிவின்றிக்கே யிருக்குமோ? என்ன - இவற்றை இத்யாதி. "உஷ்ணக்ஷயாஹிவ தபுஷெ

† தைத்திரீயே, 2.

acharya.org

தாலே மீளுமத்தனை. (ஸ்வரூபமொழிய குணத்துக்காயிற்றுத் தோற்றது.) [நிலவும் சுடர் சூழொளிமூர்த்தி] - ரக்ஷகனன்றிக்கே வாதுகளுனுலும் விடவொண்ணுத வடிவழகிருக்கிறபடி. [நிலவும்] - ஒருகர்மமடியாகவந்து, அது வற்ற வற்றுகிறதன்றே. [சுடர்சூழொளி மூர்த்தி] - உள்ளு மண்பற்ருய்ப் புறம்புஒளியூட்டியிருக்கையன்றிக்கே, "தெஜஸாம் ராசிமூர்ஜிதம்" (தேஜஸாம்ராசிமூர்ஜிதம்) என்கிறபடியே, தேஜஃபதார்த்தங்களைத் திரட்டிப்பிடித்தாற்போலே யிருக்கை. "உயர்வினையேதருமோண்சுடர்க்கற்றை" என்னக் கடவதிறே. ரஜஸ்தமஸ்ஸுக்களா லளாவனன்றிக்கே சுத்தஸத்த்வமயமாய் நிரவதிக தேஜோரூபமாய், நெய் திணுங்கினுற்போலே உள்ளும்புறம்பும் ஒக்க ஒளியேயாயிருக்கை. திருமேனிதன்னை "வஜ்ரசக்திமயம்" (பஞ்சஶக்திமயம்) என்றும் சொல்லாநின்றார்கள்; "ஷாட்குண்யவிக்ரஹம்" (ஷாட்குண்யவிக்ரஹம்) என்றும் சொல்லா நின்றார்கள்; ஆராய்ந்து பார்த்தால், அர்த்தஸ்த்திதிதான் பஞ்சசக்திமய மென்றே யிருக்கும்; ஷாட்குண்ய விக்ரஹமென்கிறது - திருமேனிதான் குணங்களுக்குத் திரோதாயக மன்றிக்கே ப்ரகாஶகமா யிருக்கையாலே. "ரூபவாநுஸுபகஶ்ரீமாந் கந்தர்ப்ப இவமூர்த்திமாந்" (ரூபவாந் ஸுபகஶ்ரீமாந் கந்தர்ப்ப இவமூர்த்திமாந்) என்றும், "தாஸாமாவிரபூத்" (தாஸாமாவிரபூத்) என்றும் சொல்லுகிறபடியேயிறே யிருப்பது. [நெடியாய்] - கீழ்ச்சொன்ன குணங்களுக்கு எல்லையுண்டானுலும், ஸௌந்தர்ய லாவண்யாதிகளுக்கு எல்லைகாண

ஸ்ரீமாமவதே. [கம்-ரூ.] "தாஸாமாவிரஹூத்ஸு ளரிஷ்ஸுயமாநமிவாம் வாஜிः । வீதாஶ்வாரயரஸ்ஸுமீஷாக்ஷாந்நயமிநயமிாஉ॥"

நாஞ்சரிக்ஷக்ஷிதிக்ஷயாக । மதிக்ஷயாஹிவதபுஞ்சைநமொவிஷ்ணுக்ஷயாக" என்றத்தைக் கடாக்ஷித்து 'மதிக்ஷயத்தாலே மீளுமத்தனை' என்றது. கீழிரண்டெதுகளாலும் - ரக்ஷகத்வமிறே சொல்லிற்று; இதுதான் இல்லையேயாகிலும் அவ்வடிவழகு விடப்போகாதென்று மேலிற்பதத்துக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் - ரக்ஷகனன்றிக்கே இத்யாதி. 'நிலவும்'என்ற வர்த்தமாநார்த்தம் - ஒருகர்மம் இத்யாதி. நிலவுகை - நித்யமாகவர்த்திக்கை. "சுடர், ஒளி"என்றமீமிசைச்சுக்கு அர்த்தம்- உள்ளுமண் இத்யாதி. "தம்ஜ்ஞாஷாதெதஷாஷெவாஶுஷுகு மஷாயாரு । சுவாவபு ரூவவஸம்ஸுாநம்தெஜஸாம்ராசிமூர்ஜிதம்"இதிப்ரதமேம்ஸேநவமே [67]- உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் - உயர்வினையே தரும் இத்யாதி. "உள்ளுமண்பற்று" இத்யாதி வாக்யவிவரணம் - ரஜஸ்தமஸ்ஸுக்களால் இத்யாதி. அளாவனன்றிக்கே - மிஶ்ரமன்றிக்கே. இது சுத்தஸத்த்வமயமாயிருக்கிறது பஞ்சோபநிஷந்மயமாகையாலே யென்று விவக்ஷித்து, "ஷாட்குண்யவிக்ரஹம்" என்று சொல்லா நிற்க, "வஜ்ரோவநிஷந்மயம்" என்று சொல்லுகிறபடி யெங்ஙனே? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கிறார் - திருமேனிதன்னை இத்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே. பஞ்சஶக்தியாவது - அப்ராக்ருதங்களான பூதபஞ்சகங்கள். கீழே "சுடர், ஒளி" என்றதுக்கு - மீமிசையாக அருளிச்செய்து, ஸௌந்தர்யலாவண்யங்களென்றர்த்தாந்தரம் - ரூபவாந் இத்யாதி. "ஸதுவாரீயாரூ வாஹெவொவாவஷுகியபுயாரூவவாநுஸுபகஶ்ரீமாந்கந்தவபுஉவமிகிபுமாநு" இதி ஸுந்தரகாண்டே ஹநூமாந்[34-30]. சுடர்-அவயவஸௌந்தர்யம். ஒளி-பேரழகு. "தாஸாமாவிரஹூத்ஸு ளரிஷ்" இத்யாதி ஸ்ரீபாகவதே. "ஒளிமூர்த்தி" என்றவநந்தரம், "நெடியாய்" என்கையாலே - ஸௌந்தர்யாதிகளுக்கு எல்லைகாணவொண்ணுதவனென்று விவக்ஷித்து, "உலப்பில்கீர்த்தியம்மான்" என்றத்தோடே இதுக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் - கீழ்ச்சொன்ன இத்யாதி. கீழ்ச்

acharya.org

வொண்ணுதபடியா யிருக்கை. †''ஹோநு'' (மஹாந்) என்கிறபடியே, தோட்ட தோட்ட துறைதோறும்தரைகாணவொண்ணுதிருக்கிறபடி. [அடியேனுருயிரே]-வடிவழகையும்குணங்களையுங்காட்டி, என்னை வ்யதிரேகத்தில் ஜீவியாதபடி பண்ணினவனே! ''திருவேங்கடத்தெம்பெருமானே''-என்றத்தோடோக்கஇத்தைக்கூட்டக்கடவது. [திலதமுலகுக்காய்நின்ற]-சில ஸ்த்ரீகளுக்குப் பூர்ணமானஆபரணம்போலேயாயிற்று பூமிக்குத் திருமலை. [திருவேங்கடத்தெம்பெருமானே - அடியேனுருயிரே] - திருமலையிலே நின்று என்னுடைய ஶேஷத்வ முறையை யறிவித்து, உன்னுலல்லது செல்லாதபடி பண்ணினவனே! இவ்வளவும் வர, அவன் ஸ்வரூபம் சொன்னுர்; மேல், தம் ஸ்வரூபஞ் சொல்லுகிருர்: [குலதொலடியேன்]-குலமாகப் பழையதான அடியேன். இத்தால், தமக்கு ஓர் ஆதிக்யஞ் சொல்லுகிருரல்லர்; தம்முடைய அநந்யகதித்வஞ் சொல்லுகிருர். ஒருவற்கேயாயிருப்பாரை வேறு சிலர் நோக்குவா ரில்லையிறே. [உனபாதம் கூடுமோறு கூருயே]- ஸ்வரூபம்இதுவான பின்பு, ஸ்வரூபாநுரூபமான பேற்றைப் பெறும்படி பண்ணியருளாய். [அடியேனுனபாதம் கூடுமோறு] - ஶேஷபூதனுனவன் உன்னைக்கூட என்னுமது ''உனபாதங்கூட'' என்றிறே. [உனபாதம் கூடுமாறு] - இவருடைய ஸாயுஜ்யமிருக்கிறபடி. [கூருயே] - ஒருசொல் உனக்கு: எனக்கு ஸ்வரூபலாபங் கிடாய். அவன் ஒருவார்த்தை யருளிச்செய்ய, தளப்பம் தீருமிறே இவர்க்கு. ''ராஶுஹு''(மாஶுசு:) என்னவேணும். (க)

இரண்டாம் பாட்டு.

கூருய்நீருய்நிலனுகிக் கோடுவல்லசுரர்குலமெல்லாம்
சீருளரியுந்திருநேமிவலவா! தேய்வக்கோமானே!
சேருர்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே!
ஆருவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணம்அருளாயே.

ஆ.—(கூருய்.) - ப்ரதிவந்஧கங்களான பாபங்கள் போலுலன்றே என்னேடு ஸம்ஶ்லேஷிக்கப் பெறலாவதென்னில், ஸமாஶ்ரிதரான தேவர்களுக்கு விரோதி

சொன்னவென்றது - ''உலப்பில்கீர்த்தி'' என்கிறவிடத்திற்சொன்ன என்றபடி. ஆனுல் ஆத்மகுணங்கள் பரிச்சிந்நங்களாயிற்றே? என்ன - மஹாந் இத்யாதி. ''குணுகாம்'' என்று - குணங்களையடையச் சொல்லி, ''மஹாந்'' என்கையாலே - 'தொட்டதொட்டதுறைதோறும்' என்கிருர். ''உலப்பில்கீர்த்தி, ஒளிமூர்த்தி'' என்ற பதங்களைக்கடாக்ஷித்து இப்பதத்துக்கு ஹாவம் - வடிவழகையும் இத்யாதி. ''அடியேனுருயிரே'' என்றத்தை மேலிற்பதத்தோடேகூட்டி யர்த்தாந்தரம் - திருவேங்கடத்தெம்பெருமானே இத்யாதி செல்லாதபடிபண்ணினவனே என்னுமளவால். ''ஆருயிரே'' என்றத்தை - கீழேகூட்டுதல், மேலேகூட்டுதல். இப்பதத்திலே - அநந்யகதித்வந்தோற்றமோ? என்ன, ஒருவற்கே இத்யாதி. அடியேன் என்றத்தையுங்கூட்டி யருளிச்செய்கிருர்-ஸ்வரூபம்இது இத்யாதி. உன்னைக் கூடுமாறென்னுதே, ''உனபாதங்கூடுமாறு'' என்பானென்? என்ன - ஶேஷபூதன் இத்யாதி. பெறுமாறென்னுதே, ''கூடுமாறு'' என்றதுக்குஹாவம் - இவருடைய இத்யாதி. ஸாயுஜ்யம்-மோக்ஷம். வார்த்தாமாத்ரம்போருமோ? என்ன - அவன்ஒருவார்த்தை இத்யாதி. தளப்பம்-தளும்புதலும், அலைச்சலும். அந்தவார்த்தையேதென்ன - ராஶுஹு: இத்யாதி. அதாவது - ''ராஶுஹு'' என்றுல், ''ஸ்ரீதொஸ்ரிமதஸஹெ ஹு:'' என்றிருக்கலாமென்றபடி. (௪)

---

† ஸ்ரீராமா-கிஷ்கி. 15, 21.

acharya.org

களான அசுரவர்க்கங்களைத் திருவாழியைக்கொண்டு நிரஸித்தாற்போலே என்பக்கலுள்ள ப்ரதிவந்யகத்தையும் நிரஸித்து, ஸ்வப்ரஜைபாலே திருமலையெல்லாம் விளங்கும்படி அத்யுஜ்ஜ்வலமாய் அதிசீதளமாய் ஸுஸ்ருஷ்டநாளமாய் உத்புல்லமாயிருந்த அருணாரவிந்தப்ருந்தங்களாலே யலங்க்ருதமான திருமலையிலே நின்றருளின உன்திருவடிகளை, உபர்யுபரிவர்யமாக ஸுகவத்விஷயாதுராக மஹார்ணவாந்தர்நிமக்நனான அடியேன் சேரும்படி க்ருபைபண்ணியருளாய்! என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிவந்ருகங்கள் உண்டென்னில்; அவற்றையும் நீயேபோக்கி என்னை உன்திருவடிகளிலே சேர்த்தருளவேணுமென்கிறார்.

[கூறாயென்று தொடங்கி] - அயர்வறுமமரர்களதிபதியா யிருந்துவைத்து ஆஸ்ரிதர்க்காகத் திருவவதாரம் பண்ணியருளி க்ருஷ்ணாய் வலியராயிருந்துள்ள அஸுரர்களுடைய குலங்கள் எல்லாவற்றையும் சிந்நமாய் ஶுஔரியாய் நிஶ்ஶேஷமாம்படி சீறி இரைபெறாதே ஜ்வலியாநின்றுள்ள திருவாழியை வலவருகே யரித்தருளி அவ்வவதாரத்தில் உதவப்பெறாதார்க்கும் ஆஶ்ரயிக்கலாம்படி அருக்கசமான சுடைகளிலே அக்நிஜ்வலிக்கிறாப்போலே தாமரை மலர்ந்து விடவொண்ணாதபடி நிரதிஶயபோக்யமான திருமலையிலேவந்து நின்றருளினவனே![ஆறுவன்பில்என்றுதொடங்கி]-ஏதேனும்பெற்றாலும் பர்யாப்திபிறவாதபடியான ஸ்நேஹத்தையுடையனானான் உன்திருவடிகளைப்பெறும்படி.

ப.—அநந்தரம், அஶேஷவிரோதி நிவர்த்தகமான ஆயுதஔஜ்ஜ்வல்யத்தையுடைய நீ, அத்யந்தாஹிநிவிஷ்டனான நான் உன்திருவடிகளைச் சேரும்படி க்ருபைபண்ண வேணுமென்கிறார்.

கொடு - க்ரூரராய், வல் - ப்ரபலரான, அசுரர் - அசுரர்களுடைய, குலம் - திரள், எல்லாம் - எல்லாம், கூறாய் - நாநாவாக சிந்நமாய், நீறாய் - தூளியாய், நிலன் ஆகி - தரைப்பட்டிருக்கச்செய்தே, (பின்னையும்), சீறு-சீறி, எரியும் - ஜ்வலியாநிற்கிற, திரு-விபூதியையுடைய, நேமி - திருவாழியை, வலவா - அடக்கியாளவல்ல ஸர்வஶக்தியாய், (இப்படி ஆஸ்ரிதவிரோதிநிரஸநத்தாலே), தெய்வம் - நித்யஸூரிகளுக்கு, நாதனே - நிர்வாஹகனுக்கொண்டு, சேறு - (தாமரையினுடைய பங்கஜத்வத்துக்கு நிமித்தமான)சேற்றாலே, ஆர்-பூர்ணமான, சுடை - அருக்கபத்திலே, தாமரை - சிவந்த தாமரையானது, செம் - சிவந்த, தீ - தீப்போலேயிருக்கிற நிறத்தை யுடைத்தாய்க்கொண்டு, மலரும் - மலரும்படியாயிருக்கிற, திருவேங்கடத்தானே - திருமலையிலே வர்த்திக்கிறவனே! ஆறு-ஒருகாலும்அளவுபடாத, அன்பு - ப்ரேமத்தை, இல்-உடையேனாய், அடியேன்- ஶேஷபூதனான நான், (ஸ்வரூபாநுரூபமான), உன் - உன், அடி - திருவடிகளை, சேர்வண்ணம் - சேரும்படி, அருளாய் - க்ருபைபண்ணியருளவேணும். நேமி வலவனென்று - வலத்திலேயுடையவனென்னவுமாம். ஆகவென்று - எச்சந்திருத்திச் சொல்லவுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிவர்யசங்களுண்டேயென்ன, உன்கையிலே திருவாழியிருக்க இவ்வார்த்தை சொல்லலாமோ? என்கிறார்.

[கூறாய்நீறாய்நிலனாகி] - ஸிந்நமாய் ஶுஔரியாய் வெறுந்தறையாம்படி நிஶ்ஶேஷமாக்கி. ஆகியென்றது - ஆக்கியென்னுதல், ஆம்படியென்னுதல். [கொடுவல்லசுரர்] - க்ருஷ்ணாய் அத்தைத்தலைக்கட்டிக்கொடுக்கும் வலியையுடையரான ஔஷ்ப்ர

acharya.org

க்ருதிகள். [குலமெல்லாம்] - ஜாதியாக நிஃஶேஷமாக முடித்து. [சிறுவெரியுந்திரு நேமிவலவா] - அவ்வளவில் பர்யவஸியாதே, இரைபெறாத பாம்புபோலே சிறி ஜ்வலியா நிற்கிற திருவாழியை வலவருகேயுடையவனே! [தெய்வக்கோமானே] - கையுந்திரு வாழியுமான சேர்த்தியழகைக்காட்டி நித்யவிஹூதியை நிர்வஹிக்குமவனே! "அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்புநிலனுமிருளார்வினைகெடச்செங்கோனடாவுதிர்." விரோயி களை நிரஸித்து நோக்கும்இவ்விஹூதியை: கையுந்திருவாழியுமாயிருக்கிற சேர்த்தியழ கைக்காட்டி அநு஭விப்பிக்கும்அவ்விஹூதியை.உனக்குஅமைந்தாரில்லாமையோ நீஇதெல் லாம் செய்தது? நாம் இப்போது அஸந்நிஹிதரன்றோவென்னில்; திருமலையிலேவந்து ஸுலபனுங்கின்றிலையோ? [சேறூர் இத்யாதி] - அறுக்கயமான சுனைகளிலே அக்நி ஜ்வலிக்கிறாப்போலே தாமரை பரப்புமாறப்பூக்கையாலே நிரதிஶயபோக்யமான திரு மலையிலே நித்யவாஸம்பண்ணுகிறவனே! [ஆறுவன்பிலடியேன்]- சுனைகளறுக்கயமாகிறாப் போலேயாயிற்று இவர்க்கு அன்புமாறாதே இருக்கிறபடி. க்ரமப்ராப்திபற்றாதபடியான ப்ரேமமிறே. [உன்னடிசேர்வண்ணமருளாயே] - உன்திருவடிகளிலே சேர்ந்து அடிமை செய்யும்படி என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும். நீ வந்து திருமலையிலே அவ ஸரப்ரதீக்ஷனாயிருக்க "உன்னைப்பெறவேணும்" என்னும் ருசி எனக்குஉண்டாயிருக்க, நான் கூப்பிடுகை மிகையன்றோ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. 'கூடக்கடவீர்: அதுக்குஒருகுறையில்லை; ஆனா லும், ப்ரதிவந்ய்யகங்கள் கனத்திராநின்றதே' என்ன, 'உன்கையில் திருவாழியிருக்க, நீ இங் ஙனே சொல்லலாமோ?' என்கிறார்.

[கூறாய்இத்யாதி] - நீ * கைகழலாநேமியானாயிருக்கிறதுக்கும் என்ப்ரதிபந்ய கம் கிடக்கைக்கும் என்ன சேர்த்தியுண்டு? அப்ரதிஹதமான ஶக்தியையுடைத்தான திவ்யாயுதங்களானவை இவனுடைய ஸகலபாபங்களையும் போக்கி உத்தரிப்பிக்கக் கட வதாயிருக்கும்: அவனாலே வருமவையும் பரிஹரிக்கவற்றாயிருக்கும். "ரக்ஷந்திஸகலாபத்ப்ய:" (ரக்ஷந்திஸகலாபத்ப்ய:) இறே: ஸகலஶப்தத்துக்குள்ளே இவனுமுண்டே. இனித்தான், பாபங்கள் "ஸம்ஸாரரோஷாநராதமாந் | க்ஷிபாமி" (ஸம்ஸாரரோஷாநராதமாந் | க்ஷிபாமி)என்கிறபடியே இவன்பக்கல் தோஷங்கொண்ட அவன் நிக்ரஹத் தாலே வருமவையிறே; அங்ஙனேவருமவையும் பரிஹரிக்கக்கடவதாயிருக்கும் இவை. அது

---

*இரண்டாம்பாட்டு.—கூறாய் இத்யாதி. "திருநேமிவலவா" என்றத்தைக் கடாக்ஷித்தவ தாரிகை - கூடக்கடவீர் இத்யாதி.

"கூறாய் நீறாய்" என்று தொடங்கி, "திருநேமிவலவா" என்னுமளவுக்கும்ஶபவம் - நீகை கழலா இத்யாதி. நேமி - திருவாழி. திவ்யாயுதங்கள் விரோதியைப்போக்கி ரக்ஷிக்குமோ? என்ன, "ஹந்யுராஹதாநி" என்கிற ஶ்லோகத்தை யுட்கொண்டு அருளிச்செய்கிறார் - அப்ரதிஹதமான இத்யாதி. பிறரால்வரும் ஆபத்தையேயன்றிக்கே, அவனால்வரும் ஆபத்தையும் போக்குமென்கிறார் - அவனாலே இத்யாதி. "அவனாலேவருமவற்றையும்" என்றதுக்கு ஶப்தமேதென்ன - ரக்ஷந்தீத்யாதி. "ஹந்யுராஹதாநிகுஷ்ணுயுகராதிநாயயாநிகடி | ரக்ஷந்திஸகலாவத்ப்ய யெந விஷ்ணுராவாஸி:" இதி ஸ்ரீ விஷ்ணுதர்மே ஸப்ததிதமேத்யாயே. ஸர்வபூத ஸுஹ்ருத்தான வன் ஆபத்தைப் பண்ணலாமோ? என்ன - இனித்தான் பாபங்கள் இத்யாதி. இனித்தானென்றது- வார்த்தைப்பாடு. அவனால்வரும்ஆபத்தையும் இவை பரிஹரிக்கைக்கு அடியேதென்ன-அதுக்குஅடி இத்

acharya.org

க்கு அடி, அவன் அடியில் பண்ணின அநுக்ரஹத்தையே நினைத்திருக்கையாலே. இனித்தான், "இவற்றின் தோஷங்கண்டு நாம் ஔபாதிகமாகச் சீறினபோதும் நீங்கள் கைவிடாதே, நாம் அடியிற்பண்ணின ஸ்வாஹாவிகமான நம்முடைய ப்ரஸாதத்தைப்பார்த்து நீங்கள் ரக்ஷியுங்கோள்" என்று அவன்பக்கலிலே பேற்றுடையராயிருப்பர்களிறே. * அருளார் திருச்சக்கரமிறே. பண்டே அவனைக் கைகண்டிருக்குமிறே. அவன் அருள்மறுத்தபோதும் இங்குத்தை அருள் மாறாதேயிறே யிருப்பது. ஆகையாலே, அவன்ப்ரஸாதம் பெற்றவர்கள் திருவாழியில் கூர்மையையிறே தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது. [கூறும்நீறும் நிலனாகி] - திருச்சரம்போலே "ஹிஸ்ஸம்ஹிஹ்ஹ" (சிங்கம்பிங்கம்)என்கிற பரும்பணிக்கு விட்டுக்கொடாத திருவாழி. திருச்சரத்துக்கு ஒருகுணஸ்பர்ஶமுண்டென்கிறார், இத்தைப் பற்ற. முற்பட, இருதுண்டமாக்கிப் பின்னைநீறுக்கிப் பின்னை அதுகாணவொண்ணாதபடி வெறுந்தறையாக்கும். [ஆகி] - ஆக்கியென்னுதல், ஆம்படியென்னுதல். [கொடுவேல்லசுரர்] - சீறுகைக்குஹேதுஇருக்கிறபடி.க்ரூரமான செயல்களைச் செய்யக்கடவராய், ஒருவரால் வேல்லவொண்ணாதபடி வலியையுடையரான அசுரர். [குலமெல்லாம்] - ஒருவன் செய்த தப்பே ஜாதியாக முடிக்கவேண்டும்படி யிருக்கையாலே, ஒருவரையும் தப்பாமல் கோலிமுடித்தபடி. அநுகூலரோடு ப்ரதிகூலரோடுவாசியற இவன் வளைவிலகப்படாதாரில்லை. "வளைவாய்த் திருச்சக்கரத் தேங்கள்வானவனார்" என்று - அவன் வளைவிலே யகப்பட்டுப் பின்பிறே மேல்போயிற்று. கூறும்நீறும் நிலனாகைக்குப்பண்ணின வ்யா

யாதி. பண்ணின அநுக்ரஹமென்றது - "ஹிஷிவிஶேஷிதாநு" இத்யாதிப்படியே அடியிலே சேதநரிடத்தில் பண்ணின ஸ்வாஹாவிக க்ருபையென்றபடி. பரிஹாராந்தரம் - இனித்தான் இவற்றின் இத்யாதி. அதாவது - அடியிலே சொல்லிவைக்குமே, அத்தைக்கொண்டு ரக்ஷிப்பர்களென்றபடி. "நாம் சீறினபோதும் நீங்கள் கைவிடாதே ரக்ஷியுங்கோள்" என்றதுக்குப்ரமாணம் - "ஹுகீ: வாரரூஷகாரகைநிஷ்டுஷ்டாவாரஶவிஷ்டுஹி: । ஶாவிஷ்டிதம்ஹெ ஹ்ஹாந்யுயாஷுஷணம்ஹுவெஶ" என்றது. இதில் பிராட்டிக்கு புருஷகாரத்வஞ் சொன்னது - நித்யசூரிகளுக்கும் உபலக்ஷணம். மமாபிச மதமென்கையாலே - அவன் முன்னே சொல்லிவைத்தது விதித்தம். அவன் சீறினபோதும் ரக்ஷிக்கும்படி இவற்றுக்கு க்ருபை விஞ்சியிருக்குமோ? என்ன - அருளார் இத்யாதி. அருளால் பூர்ணமான திருவாழி இதயர்த்தம். திருவிருத்தம். அவன் இவர்கள்பக்கல் பண்ணின அநுக்ரஹத்தை இவையறிந்தபடியென்? என்ன, சாடு-பண்டே இத்யாதி. "அருளார்" என்றதுக்குஹாவம்- அவன்அருள் இத்யாதி. ஹவிதம் - ஆகையாலே இத்யாதி. "கூறும், நீறும்" என்கிற பதத்வயத்தாலே - திருச்சரங்களைப்பற்ற இவற்றுக்கு வ்யாவ்ருத்தியுண்டென்கிறார் - திருச்சரம்போலே இத்யாதி. திருச்சரத்துக்குப் பரும்பணி வருகைக்குஅடியேதென்ன, ரஸோக்தி - திருச்சரத்துக்கு இத்யாதி. குணமென்று - நாணுக்கும், க்ருபாகுணத்துக்கும் பேர். திருவாழியைப்பற்ற க்ருபாகுணமுண்டாகையாலே ஸ்ரீசார்ங்கம் "ஹிஸ்ஸம்ஹிஹ்ஹ" இத்யாதிப்படியே பர்யாயேண ஹிம்சித்ததென்றபடி. பரும்பணிக்கு விட்டுக்கொடாத ப்ரகாரத்தை விசதீகரிக்கிறார் - முற்பட இத்யாதி. இவர்கள் வலத்தையும் க்ரௌர்யத்தையும் அருளிச்செய்கைக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - சீறுகைக்கு இத்யாதி. குலமெல்லாம் நிரசிக்கைக்கு ஹேதுஅருளிச்செய்கிறார் - ஒருவன்செய்த இத்யாதி. "திரு" என்று அழகைச் சொல்லுகையாலே அநுகூலரும், "கேமி" என்கையாலே ப்ரதிகூலரும் அகப்படுவர்களென்கிறார் - அநுகூலரோடு இத்யாதி. அநுகூலர் திருவாழிக்குஅகப்படுவர்களோ? என்ன - வளைவாய் இத்யாதி. வளைந்தவாயுடைத்தான திருவாழியையுடைய எங்கள் ஸ்ரீவைகுண்டநாதருடைய இதயர்த்தம். திருவிருத்தம் எழுபதாம்பாட்டு. 'மேல்போயிற்று', "வானவனார்முடிமேல்" என்று - மேலேபோய் ஈடுபட்டதென்றபடி. "சீறு" என்றது - சிறியென்றபடி. "எரியும்" என்கிறவர்த்தமா

acharya.org

பாரமேதென்னில்,—[சீறுவேரியும்] - இவை முடிந்துபோகச்செய்தேயும் கோண்ட குதை மாறாதே, இரைபெறாப்பாம்புபோலே ஜ்வலியாநிற்கும். [திருநேமிவலவா] - நீ வலவருகே திருவாழியைத் ஶரித்திருக்க, நான் க்லேஶத்தை ஶரித்திருப்பதே! [தெய்வக்கோமானே]- இப்படி ஆஶ்ரிதர்க்காகவந்து படுகிறவன் ஆளில்லாதவனல்லகிடீர்! * அயர்வறுமமரர்களதி பதிகிடீர். அங்குக் கையுந்திருவாழியுமான அழகையநு஭விப்பாரேயிறே யுள்ளது; இருதுண்ட மாகவிடுகைக்கு ஆளுள்ளது இங்கேயிறே. இரண்டுவிபூதியையும் ஆளுவது திருவாழி யாலே காணும்! ''அகல்விசும்பும்நிலனுமிருளார்வினைகெடச் செங்கோல்நடாவுதிர்'' என் கிறபடியே; அழகாலே அங்குள்ளாரையாளும்: கூர்மையாலே யிங்குள்ளாரையாளும். அங்குக் கூர்மை குமரிருக்கும்: இங்குஅழகு குமரிருக்கும். அங்குள்ளார்க்குக் கைமேலே ஜீவநமாயிருக்கும்: இங்குள்ளார்க்கு விரோதியைப்போக்கிப் பின்னையாயிற்று ஜீவநமிடுவது. அங்குள்ளார் அவன்கையே பார்த்திருக்கையாலே, இவர்களுக்குஅதில்லையே. என்? நாம்இப் போது அஸங்கிஹிதரன்றோ என்னில்; [சேறுர்சுனையித்யாதி] - சேறுகளார்ந்திருந்துள்ள சுனைகளிலே தாமரைகளானவை செந்தீப்போலே மலராநிற்கும். எண்ணெயாலே எரியும் விளக்கொழிய, நீராலே எரியும் விளக்குக்கண்டு அநு஭விக்கக்காணும் இவர்ஆசைப்படு கிறது. நீரிலே நெருப்பெழுந்தாற்போலேயிறே யிருக்கிறது! [ஆறுஅன்பிலடியேன்] -இவர்க்கு நிரூபகம் இருக்கிறபடி. சுனைகளில் நீர் வற்றிலாயிற்று இவருடைய அன்புவற்றுவது. †மயர் வறமதிநலமருள அதுஅடியாக வந்த அன்பிறே. ஊற்றுடைத்தே. க்ரமப்ராப்திபற்றாத

ஞர்த்தம் - இவைமுடிந்து இத்யாதி. குதை - உத்யோகம். ''நீ கைகழலாநேமியானாய்'' இத்யாதியால் அடியிற்சொன்னவர்த்தம், ''திருநேமிவலவா'' என்றபதத்தைநோக்கிச் சொன்னோமென்னுமிடத் தோற்ற அருளிச்செய்கிறார் - நீவலவருகே இத்யாதி. இப்போது ''தெய்வக்கோமான்'' என்றதுக்கு ப்ரயோஜநம் - இப்படி இத்யாதி. திருநேமிவலவனான ஆகாரத்தை நித்யஸூரிகளை யநு஭விப்பிக்கு மவனே என்றர்த்தாந்தரம் விவக்ஷித்து, ஆனால் அங்கு விரோதியில்லையோ? என்ன - அங்குக்கையும் இத்யாதி. ஹலிதம் - இரண்டுவிபூதியையும் இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - அகல்விசும்பும் இத் யாதி. 'அநுளார்திருக்கக்காந்தால்' இத்யாதி. க்ருபையால்பரிபூர்ணனாநிருவாழியாலே. 'அகல்விசும் பும்நிலனும்' - பரந்தஆகாசமும் பூமியும். 'இருளார்வினைகெடச்செங்கோல்நடாவுதிர்' - மேஹாந்தகார ஸஹசரிதமான விபரீதவ்ருத்தங்கள்போம்படி ஸங்கல்பரூபமான ஆஜ்ஞையை நடத்தாநிற்புதிர் இத் யர்த்தம். ஆளுப்பிரகாரத்தைக்காட்டுகிறார் - அழகாலே இத்யாதி. விவரணம் - அங்குக்கூர்மை இத் யாதி. ரஸோக்தி - அங்குள்ளார்க்கு இத்யாதி. இவ்விரண்டுக்கும் ஹேதுவேதென்ன - அங்குள்ளார் அவன் இத்யாதி. 'அவன்கை பார்த்திருக்கையாலே' என்றது-அவன்கையுந்திருவாழியுமான அழகைப் பார்த்திருக்கையாலே என்றபடி; தம்முடைய யத்நத்தைவிட்டு அவன்கை பார்த்திருக்கையாலே என் றும். ''சேறுர்சுனைத்தாமரை செந்தீமலரும்'' என்கிறவருடையபாவம் - எண்ணெயால் இத்யாதி. ''சுனைகளிலே தாமரை செந்தீமலரும்'' என்றதிலே ரஸோக்தி - நீரிலே இத்யாதி. அன்றிக்கே, நீராலேயெரியும் விளக்குமுண்டோ? என்ன - நீரிலேநெருப்பு இத்யாதி. ஆறுவன்பிலடியேன் - ஆறாதவன்பிலேயானவடியேன். அன்புடையவடியேனென்றபடி. இப்படி விசேஷிக்கிறதுக்குபாவம்- இவர்க்கு இத்யாதி. ''சேறுர்சுனைத்தாமரை'' என்றஅநந்தரம் ''ஆறுவன்பில்'' என்றபதச்சேர்த்திக்கு பாவம் - சுனைகளில் இத்யாதி. அன்பு வற்றாமைக்கு ஹேதுவேதென்ன-மயர்வற இத்யாதி. ''சுனை'' என்கிறபதத்தோடே சேர்த்தியாகச்சொல்லுகைக்கு, சுனைவற்றாதோ? என்ன - ஊற்றுடைத்தே என்கிறார். ''ஆறுவன்பு'' என்றதுக்கு - நித்யமானவன்பு என்று கீழ் அருளிச்செய்து, ''மெய்யமர் காதல்'' என்கிறபடியே அவனை யநுபவித்தாலொழிய ஆறாதவன்பு என்றுஅர்த்தாந்தரம்-க்ரமப்ராப்தி

---

† 'மயர்வற மதிநலமருளினன் என்ற அருளடியாக' என்று பாடாந்தரம்.

acharya.org

படியான ப்ரேமமிறே. [உன்னடிசேர்வண்ணமருளாயே] - உன்திருவடிகளிலே சேர்ந்து அடிமைசெய்யும்படி என்பக்கலிலே க்ருபைபண்ணி யருளவேணும். நீ திருமலையிலே நிற்கிற நிலைக்கு ப்ரயோஜநம்பெறப் பாராய்! என்அன்புக்கு இரையிடப் பாராய்!! (உ)

மூன்றாம் பாட்டு.

வண்ணமருள்கோளணிமேகவண்ணா! மாயவம்மானே!
எண்ணம்புகுந்துதித்திக்கும்அமுதே! இமையோரதிபதியே!
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே!
அண்ணலே! உன்னடிசேர †அடியேற்காவாவென்னாயே.

ஆ.—(வண்ணமருள்கொள்.) - நிர்ஹேதுகமாகச்செய்யக் கடவதோ? என்னில்; உன்னோடு ஸம்ஸ்லேஷிக்கைக்கு * அயர்வறுமமரர்கள் உளராயிருக்கச்செய்தே கேவலக்ருபையாலே நிரதிசய ரமணீய நீலமேக ஸத்ருசஆஸ்சர்யபூததிவ்யரூபவிசிஷ்டனாய்க்கொண்டு என்னெஞ்சுநிறையப் புகுந்து எனக்கு இனியையானாற் போலே, இன்னம் உன்க்ருபையாலே, ஸுப்ரஸந்ந ரமணீய ஸலிலஸரித்தரங்க பரம்பராநீதமான விமலருசி விஷயமணிகநகமௌக்திக நிகரங்களாலே விராஜமாநமான திருமலையிலே நின்றருளின உன்திருவடிகளிலே, பிரானே! என்னைச் சேர்த்தருளவேணுமென்கிறார்.

ஓ.—மூன்றாம்பாட்டில், நீர் ஒருபத்தம்பண்ணுதிருக்க, நீர் சொல்லிற்றெல்லாம் செய்யமுடியுமோ? என்னில்; உனக்குவிலக்ஷணமான ஹோக்தாக்களுண்டாயிருக்க முன்னம்என்னை விஷயீகரித்தாற்போலே, கேவலக்ருபையாலே மேலும் என் அபேக்ஷிதம் செய்யவேணும் என்கிறார்.

[வண்ணமென்று தொடங்கி] - நிறம்கண்டார் பிச்சேறும்படியான அழகிதான மேகவம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையையாய் அத்யாஸ்சர்ய குணசேஷ்டிதங்களையுமுடையையாய் * அயர்வறுமமரர்களதிபதியாய் வைத்து தெளிந்து நிரதிசய ஹோக்யமான திருவருவிகள் மாணிக்கமும் பொன்னும் முத்துமாகக்கலந்து பார்ஶ்வங்களிலே எறட்டாநின்றுள்ள திருமலையிலே நின்றருளி என்னை அடிமைகொண்டருளுவதும் செய்து என்னுடைய ஹ்ருதயத்திலேபுகுந்து தித்திக்கிற நிரதிசயஹோக்யனே! [உன்னடிசேரவென்று தொடங்கி] - உன்னுடைய திருவடிகளைப் பெறும்படி அடியேனுக்கு க்ருபைபண்ணியருளவேணும்.

ப.—அநந்தரம், உன்னுடைய ரூபத்தாலும் குணத்தாலும் இனிமையாலும் ஸுரிகளுக்கு உத்துங்காநுஹாவ்யனாயிருக்கிற நீ, அபேக்ஷாநிரபேக்ஷமாகத்திருமலையிலே ஆஶ்ரயணீயனாய் வந்தவோபாதி அடியோங்களுக்குஇரங்கி அருளவேணுமென்கிறார்.

இத்யாதி. "திருவேங்கடத்தானே" என்றத்தோடேகூட்டிஹாவம் - நீ திருமலையிலே இத்யாதி. "ஆருஅன்பில்" என்றத்தோடேகூட்டிஹாவம் - என்அன்புக்கு இத்யாதி. 'கொடுவல்லசுரர்குலமெல்லாம் - கூறாய் நீறாய் நிலனும்படி சீறியெரியாநின்றுள்ள திருநேமி' என்று தொடங்கி, 'அருளாய்' என்றந்வயம். (உ)

---

† 'அடியோர்க்கு' என்றும் பாடம்.

acharya.org

வண்ணம் - நிறத்தில், மருள் - பிச்சு, கொள் - ஏறும்படியான, அணி - அழகை யுடைத்தாயுள்ள, மேகம் - மேகம்போன்ற, வண்ணா - வடிவையுடையனாய், மாயம் - ஆஶ்சர்யாவஹமான குணங்களால், அம்மானே - ஸர்வாதிகனாய், (புஜிக்கவொட்டாதபடி), எண்ணம் - நெஞ்சுக்குள்ளே, புகுந்து - புகுந்து, தித்திக்கும் - ரஸிக்கும், அமுதே - அம்ருதமாய், (இந்த விக்ரஹகுண ஸாரஸ்யங்களை), இமையோர் - நித்யஸூரிகளுக்கு அநு஭விப்பிக்கும், அதிபதியே - மேன்மையையுடையனாய், தெள் - தெளிந்து, நல் - ஊர்ஜீயமான, அருவி - அருவிகள், மணி - மணியையும், பொன் - பொன்னையும், முத்து - முத்தையும், அலைக்கும் - அலைக்கும், திருவேங்கடத்தானே - திருமலையிலே ஸந்நிஹிதனாய், அண்ணலே - அஸாதாரண ஶேஷித்வத்தை ப்ரகாசிப்பித்துக்கொண்டு நிற்கிறவனே! உன் - உன்னுடைய, அடி - ப்ராப்தமான திருவடிகளை, சேர - சேரும் படி, அடியோர்க்கு - ஶேஷபூதரான எங்களுக்கு, ஆ ஆ - ஐயோ! ஐயோ! என்னாய் - என்றுஇரங்கியருளவேணும்; வண்ணமருளென்று - உதாரஸ்வபாவமென்றுமாம்.

இ.—மூன்றும்பாட்டில், நீர் ஒருயத்நம்பண்ணாதிருக்க இது கிட்டுமோ? என்ன, உனக்கு விலக்ஷணரான ஶோக்தாக்களுண்டாயிருக்கத் திருமலையிலேவந்து உன்னுடைய ரஸ்யதையையும் ஶரண்யதையையும் அறிவித்தது நான் என்ன யத்நம் பண்ணி? அப்படியே மேலும் செய்யவேணுமென்கிறார்.

[வண்ணமருள் கொ ளணி மேகவண்ணா]-நிறமானது கண்டார்நெஞ்சை யறிவு கெடுக்கும்படியான அழகிய மேகம்போலேயிருக்கிற திருநிறத்தை யுடையவனே! வண்ணமுண்டு - படி, ஸ்வபாவம்; அது அருள்கொண்டிருக்கும்; கொள்வார் அளவன் றிக்கே கொடுக்கும் ஸ்வபாவனாயிருக்கையென்றுமாம். [மாயவம்மானே] - ஆஶ்சர்ய மான குணசேஷ்டிதங்களையுடைய ஸர்வேஶ்வரனே! [எண்ணமித்யாதி] - உண்டால் ரஸிக்கையன்றிக்கே நினைக்க ரஸிக்கும் அம்ருதமானவனே! [இமையோரதிபதியே] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவனே! தன் ஶோக்யதையை அநு஭விப்பாரில்லாமை வந்தானோ? [தெண்ணல் இத்யாதி] - நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணாநிற்கவிறே என்னை விஷயீகரிக்கத் திருமலையிலேவந்தது? தெளிந்து நன்றானவருவி மணியை யும் பொன்னையும் முத்தையும் கொழித்துக்கொண்டுவந்து எறட்டாநின்றுள்ள திரு மலையை வாஸஸ்தாநமாக வுடையவனே! [அண்ணலே] - திருமலையிலேவந்து உன் ஶேஷித்வத்தை யறிவித்தவனே! [உன்னடிசேர] - உன்திருவடிகளை நான் கிட்டும் படி. [அடியோர்க்கு] - அடியோமுக்கு; முறையறிந்த எங்களுக்கு. [ஆவாவென் னாயே] - ஐயோ! ஐயோ! என்று க்ருபைபண்ணி யருளவேணும். வடிவுஅது, குண சேஷ்டிதங்கள்அவை, ரஸ்யதை அது, மேன்மை அது ஸௌலப்யம்அது: இப்படிப்பட்ட உன்னோடு உண்டான முறையை அறிவித்தால் ஆறியிருக்கலாமோ?

ஈடு.—மூன்றும்பாட்டு. "அருளாய்" என்றீர்; இங்ஙனே நினைத்தபோதாக அருளப்போமோ? என்ன: வ்யதிரிக்தவிஷயங்களில் போகாதபடியான ஜ்ஞாநலாபத்தைப் பண்ணித்தந்த உனக்கு, ப்ராப்திபண்ணித்தருகை பெரியபணியோ? என்கிறார். என்னால் வந்த குறையறுத்த உனக்கு, உன்னால் வரும் குறையறுக்கை பெரியபணியோ?

மூன்றும்பாட்டு.—வண்ணம் இத்யாதி. "எண்ணம்புகுந்துதித்திக்கும் அமுது" என்றத் தைப்பற்ற அருளிச்செய்கிறார் - வ்யதிரிக்த இத்யாதி. ஜ்ஞாநலாபத்தைப் பண்ணித்தந்தவென்றது - "அண்ணலே" என்றத்தைப்பற்ற. விவரணம் - என்னால் இத்யாதி.

acharya.org

[வண்ணம் இத்யாதி] - வண்ணமானது - ப்ரகாரமானது, அருள்கொண்டிருப்பதாய், ஔர்ஸுநீயமான மேகம்போன்ற வடிவையுடையவனே! அன்றிக்கே, வண்ணமானது - வடிவானது, கண்டார்நெஞ்சை இருளப்பண்ணக்கடவதாயிருக்கை என்றுமாம்; * மைப்படிமேனியிறே. அங்ஙனுமன்றிக்கே மேகத்தினுடைய அகவாய் கல்லென்னும்படியாயிற்றுத் திருமேனியிலுண்டான ப்ரஸாதாதிசயம் இருக்கிறபடி. [மாயவம்மானே] - வேறும் வடிவழகே யன்றிக்கே, ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களால் பேரியனானவனே! [எண்ணம்புகுந்துதித்திக்கும்முதே] - விலக்ஷண ஜந்மத்தே பிறந்து ஒருஸாதநாநுஷ்டாநம்பண்ணி அத்தாலே பெற்று புஜிக்கும்போது இனிதாகையன்றிக்கே, இன்னார்க்கு என்றன்றிக்கே மநோரதமாத்ரத்திலேதானே வந்துபுகுந்து ஹோக்யமாகை. * உள்ளுந்தோறுந்தித்திக்கும் அமுதிறே! [இமையோரதிபதியே] - மயூவ்ரதம்போலே இவ்வம்ருதமே ஜீவநமாக இருக்குமவர்கள். [தெண்ணலருவியித்யாதி] - தேளிந்து நன்றான அருவிகளானவை, விலக்ஷணமான மாணிக்கங்களையும் பொன்களையும் முத்துக்களையும் கொழித்து எறட்டுகிற திருமலையிலே நின்றருளுகிற ஸர்வேஶ்வரனே! [அண்ணலே] - திருமலையிலே வந்துநின்று எனக்கு உன் ஸௌஶீல்யத்தை உதறிப்படுத்தவனே! 'இமையோர் அதிபதியாயிருந்துவைத்து வண்ணமருள்கோ ளணிமேகவண்ணனாய் மாயவம்மானாய்த் தெண்ணலருவி மணிபொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தானாய் அண்ணலாய்க்கொண்டு - எண்ணம்புகுந்து தித்திக்குமமுதே' என்கிறார். [உன்னடிசேரவடியேற்காவாவேன்னாயே] - கிட்டி நின்று முறையை யறிவித்த நீ, ப்ராப்தியையும் பண்ணித் தாராய்! உன்திருவடிகளை

முந்தினவர்த்தம்: "வண்ணம்" என்ற - ஸ்வஹாவமாய், கொள்கை - உடைத்தாகையாய், க்ருபையோடேகூடின, ஸ்வஹாவத்தையுடைத்தாய் ஔர்ஸுநீயமான மேகம்போன்ற வடிவையுடையவனே என்று. "அருள்கொள் - வண்ணம்" என்ற - மேகத்துக்கு விசேஷணமாதல், க்ருபையோடேகூடின ஸ்வஹாவத்தையுடையனாயென்ற அவனுக்குவிஶேஷணமாதல். த்விதீயார்த்தத்துக்கு, "வண்ணம்" என்ற - வடிவாய், வடிவாலே, மருளை - ப்ராந்தியை, விளைக்கக்கடவதாய், ஔர்ஸுநீயமான மேவம்போன்ற வடிவையுடையவனே! என்றபடி. "மருள்கொள்-வண்ணம்" என்ற அந்வயிப்பது. இப்போதும், மேவத்துக்குவிஶேஷணமாதல்; எம்பெருமானுக்கு விஶேஷணமாதல். மருட்சியைக்கொள்ளுகையாவது - கொள்ளுர்படி பண்ணுகை. இதுக்குப்ரமாணம் - மைப்படி இத்யாதி. கண்டார்நெஞ்சிலே மையல்படியும்படியான மேனி என்றபடி. அன்றிக்கே, கறுப்புமாத்ரத்துக்கு ப்ரமாணமாதல். த்ருதீயார்த்தத்துக்கு, க்ருபாஸ்வஹாவத்தையுடைத்தாய் ஔர்ஸுநீயமான மேவம் போன்றவடிவையுடையவனென்றபடி. இப்போது, "அருள்கொள் - வண்ணம்" என்றது - திருமேனிக்கு விஶேஷணம். "அருள்கொள் - வண்ணம்" என்ற - திருமேனியின் ப்ரஸாதாதிசயஞ் சொல்லுகையாலே, மேவத்தினகவாய் கல்லென்னும்படி இருக்குமென்றது விளுர். "எண்ணம்" என்ற - மநோரதமாத்ரத்திலே என்றபடி. "எண்ணம்புகுந்து தித்திக்குமமுது" என்கையாலே - தேவர்கள் அம்ருதத்தில் வ்யாவ்ருத்தியருளிச்செய்கிறார் - விலக்ஷண இத்யாதி. இன்னாருடைய எண்ணத்திலேயென்ற விஶேஷியாதே ஸாமாந்யேக சொல்லுகையாலே அருளிச்செய்கிறார் - இன்னார்க்கு என்றன்றிக்கே இத்யாதி. அப்படி மநோரதமாத்ரத்திலே ஹோக்யமாயிருக்குமோ? என்ன - உள்ளுந்தோறும் இத்யாதி கிணைக்குந்தோறும் இத்யர்த்த. "தித்திக்குமமுதே" என்றவாக்யம் "இமையோரதிபதி" என்றதற்கு ஹாவம் - மயூவ்ரதம்போலே இத்யாதி. "கல்" என்கிறதை - மாணிக்யாதிகளோடுங்கூட்டி 'விலக்ஷணமான மாணிக்கங்களையும்' என்கிறார். "திருவேங்கடத்தானே - அண்ணலே" என்றதுக்கு தாத்பர்யார்த்தம் - திருமலையிலே இத்யாதி. உதறிப்படுத்தவனென்றது - நிஸ்ஸம்ஶயமாக்கினவன் என்றபடி; ஸ்திரீகரித்தவனென்றபடி. அவதாரிகையிலே அருளிச்செய்ததுக்குச்சேர அந்வயங்காட்டுகிறார் - இமையோரதிபதியாய் இத்யாதி. "அண்ணலே, உன்னடிசேர"

acharya.org

ப்ராபிக்கும்படி, அநந்யகதியான எனக்கு ஐயோ! ஐயோ! என்று உயையைப்பண்ணாய்! உன்னடி யன்றோ? ப்ராபகமுமாய் ப்ராப்யமுமாய் ஸேவ்யமுமான திருவடிகளைச் சேரும்படி க்ருபைபண்ணியருளாய்! (சூ)

நான்காம் பாட்டு.

ஆவா! என்னுதுலகத்தையலைக்கும் அசுரர்வாளுள்மேல்
தீவாய்வாளிமழைபோழிந்தசிலையா! திருமாமகள்கேள்வா!
தேவா! சுரர்கள் முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே!
பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறுபுணராயே.

ஆ.—(ஆவாஎன்னுது.) - நிர்க்ருணரான அஸுரராலே உபத்ருதமான லோகத்தினுடைய வ்யஸநம் பொறுக்கமாட்டாமை, அவ்வஸுரருடல் ஸராக்நியாலே உக்யமாம்படி அவர்கள்ப்ராணன்கள்மேலே ஸரவர்ஷத்தை வர்ஷித்து லோகத்தை நிருபத்ரவமாக்கினாற்போலே, நித்யஸித்தபுருஷர்களுக்கும் ஸ்ப்ருஹணீயமான திருமலையிலே பிராட்டியோடே கூடநின்றருளின உன்னுடைய நிரவதிகஸௌந்தர்யமான திருவடிகளைச் சேருகைக்கு எனக்கென்னவே அபூர்வமாயிருப்பதொருபாயத்தைப் பரிகல்பித்து, அவ்வுபாயத்தாலே என்னைச்சேர்த்தருளி, அடியேனுடைய ஸம்ஸாரதுஃகத்தையும் போக்கியருளவேணு மென்று ப்ரார்த்திக்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், பண்டு பரிக்லுப்தமான அவற்றில் ஒருபாயமும் என்பக்கலில்லை; எனக்கென்ன ஒருபாயம் கண்டு தந்தருளவேணுமென்கிறார். வரையாதே எல்லாருடைய ப்ரதிபந்தகங்களையும் போக்கி ரக்ஷிக்கும் ஸ்வாமியானநீ, என்னை உன்திருவடிகளிலே சேரும்படி பார்த்தருளவேணுமென்கிறார் என்றுமாம்.

[ஆவா வென்றுதொடங்கி] - ஐயோ ஐயோ என்று உயைபண்ணாதே லோகத்தை நலியும் அஸுரருடைய ஆயுஸ்ஸிலே நெருப்பை உமிழ்கிறஸரவர்ஷத்தை வர்ஷிக்கும் ஸ்ரீஸார்ங்கத்தையுடையவனே! [திருமாமகள்கேள்வா] - விரோயிநிரஸநம் பண்ணிற்று, பிராட்டிக்கு இனிதாகைக்கு என்றுகருத்து. [தேவா] - அஸுரநிரஸநம் பண்ணுகையாலே வந்த வீரஸ்ரீயாலே விளங்காநின்றுள்ளவனே! [சுரரென்று தொடங்கி] - தங்களபிமதங்கள் கிடைக்குமிடமென்று தேவர்களும் ரிஷிகணங்களும் விரும்பும் திருமலையிலே நின்றநளினவனே! நிரதிஶயஸௌந்தர்யமான உன் திருவடிகளை சுவட்டை யறிந்துவைத்தும் அநுபவிக்கப்பெறாதபடிக்குஈடான பாபத்தைப் பண்ணின நானும் பெறும்படி பண்ணியருளவேணும்.

ப.—அநந்தரம், ஜகத்துக்கு விரோதிகளானாரை யழியச்செய்யும் ஸ்ரீமத்தையையுடைய நீ, உன் நிரதிஶயஸௌந்தர்யமான திருவடிகளை நான் கிட்டும்படி பண்ணியருளவேணு மென்கிறார்.

உலகத்தை - லோகத்தை, ஆஆ - ஐயோ! ஐயோ!, என்னுது - என்றிரங்காதே, அலைக்கும் - நலிந்தலைக்குமவர்களான, அசுரர் - ஆசுரப்ரக்ருதிகளுடைய,

---

என்றதுக்குஹாவம் - கிட்டிநின்று இத்யாதி. ஸப்தார்த்தம் - உன்திருவடிகளை இத்யாதி. 'உன்னடி யன்றோ' என்றதின் விவரணம் - ப்ராபகமுமாய் இத்யாதி. ப்ராப்யமுமாயென்றது - ப்ராப்தமுமா யென்றபடி.

(சூ)

acharya.org

வாணுள்மேல் - ப்ராணன்விஷயமாக, தீவாய் - அக்நிமுகமான, வாளி - அம்புகளை, மழை - மழைபோலே, பொழிந்த - சொரிகிற, சிலையா - ஸ்ரீசார்ங்கத்தையுடையையாய், திருமாமகள் - அந்தவிரோதிநிரஸநத்தாலே ஹ்ருஷ்டையாய் வீரபத்நியாயுள்ள லக்ஷ்மிக்கு, கேள்வா - அநுரூபநாயகனுய், தேவா - அத்தாலே உஜ்ஜ்வலரூபனுய், (இந்த விரோதிநிரஸநம்பற்ருசாக), சுரர்கள் - தேவர்களும், முனி - ருஷிகளும், கணங்கள் - திரள்திரளாக, விரும்பும் - ஆதரிக்கும்படியான, திருவேங்கடத்தானே - திருமலையிலே வர்த்திக்கிறவனே! பூ - (அவர்களிட்ட) பூவாலே, ஆர் - நிறைந்த, கழல்கள் - திருவடிகளை, (அநுஜீவயோக்யனுய்வைத்து) அரு - இழக்கும்படி துஸ்தரமான, வினையேன் - பாபத்தையுடையேனுன நான், பொருந்தும் - கிட்டும், ஆறு - ப்ரகாரம், புணராய்-கற்பித்தருளவேணும்.புணர்த்தல்-கிட்டுவித்தலாய், சேர்த்துக்கொண்டருளவேணுமென்றுமாம்.

